JL
142521.
N89.



தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600008.

1-1-1990
ரூ.1



இந்த இதழில்...

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து முதல்வர் கலைஞர் பேச்சு வார்த்தை ... 2

தமிழ் இசைக்குப் பெருமை சேர்ப்போம் ... 3
-முதல்வர் கலைஞர்

ஏழை எளியோர் படித்துப் பயன் பெறும் திட்டம் ... 7

அமைதிப் புரட்சியின் அழியாச் சின்னம் ... 9

மாயூரம் வேதநாயகனா[illegible] ... [illegible]

அண்ணாமலைப் பல்[illegible] வைர விழா ... 17

திருவூர்த் திருக்கோவில் ... 33

தெருக்கூத்துக் கலை ... 35

இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி ... 41

[illegible] ... 47
[illegible]
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

தமிழரசு

[illegible] 1050 [illegible] - [illegible] 17

மலர்: 20 [illegible] இதழ்: 13

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து முதல்வர் கலைஞர் பேச்சு வார்த்தை

இலங்கையிலிருந்து சென்னை வந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15.12.89, 16.12.89 ஆகிய இரண்டு நாட்களி லும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

திரு. ஆண்டன் பாலசிங்கம் தலைமையில் வந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் சென்னையில் நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன், மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 16.12.89 அன்று செய்தி யாளர்களிடம் பேசும்போது "இந்தப் பேச்சுவார்த்தை இருதரப்பினருக்கும் திருப்திகரமாக அமைந்தது. இந்தப் பேச்சு வார்த்தையில் உருவான கருத் துத் தொகுப்பை புதுடில்லி செல்லும் போது பிரதமரிடம் எடுத்துக் கூறு வேன்" என்று குறிப்பிட்டார்.

அதன்பின், 19.12.89 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் - மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களைப் புதுடில்லியில் சந்தித்தார். அதற்கு மறுநாளும் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அதுபற்றிப் புதுடில்லிச் செய்தி யாளர்களிடம் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"நேற்றும் இன்றும் பிரதமரை நானும் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறனும் சந்தித்துப் பேசினோம்.

"சென்னையில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தை பற்றிய விவரக் குறிப்புகளை அளித்ததோடு, அது குறித்து விரிவாக அவரிடம் பேசி னேன். இப்போது உருவாகியுள்ள சூழ்நிலையில் தமிழ் ஈழத்தில் நிலை யான அமைதி நிலவ வேண்டும் என்பதும், அகதிகள் பிரச்சினையால் இந்தியாவுக்கு மீண்டும் ஒரு சங்கடம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதும் எங்கள் பேச்சின் பிரதான அம்சமாக அமைந்திருந்தது.

"எங்கள் பேச்சு வார்த்தையின் தொடர்ச்சியாக இந்திய அரசு மிகவும் அக்கறையுடனும், விருப்புணர்வுடனும் ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் உதவ செய்ய முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

தமிழ் இசைக்குப் பெருமை சேர்ப்போம்

ர், சென்னை-600

முதல்வர் கலைஞர்

இன்று நடைபெறுகின்ற இந்த இனிய விழாவைத் தொடங்கி வைக் கின்ற வாய்ப்புப்பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் இசைச் சங்கத்தினுடைய 26வது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட வாய்ப்பினைப் பெற்ற எனக்கு இடையில் பல ஆண்டுகளுக் குப் பிறகு - சுமார் இருபதாண்டுகளுக் குப் பிறகு - இன்றைய தினம் இந்த ஆண்டு விழாவிலே கலந்து கொள் கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

தமிழ் இசைக்கு ஒரு விழா எடுக்க வேண்டும் - தமிழ் இசை விரிவாக பரவிட வேண்டும் - தமிழ் இசையை தமிழர்கள் போற்ற வேண்டும் - பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை அண்ணாமலை அரசர் அவர்கள் கொண்டிருந்த காரணத்தால் அவர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற அளவிற்கு அவருடைய பணி சிறக்க அந்தக் காலத்திலேயே இசைவாணர்கள், மூதறிஞர் இராஜாஜி போன்றவர்கள், பேராசிரியர் கல்கி போன்றவர்கள் தந்த ஒத்துழைப்பும், சமுதாயத் துறை யிலே - அரசியல் துறையிலே ஈடு பட்டிருந்த முறையே தந்தை பெரி யாரும், பேரறிஞர் அண்ணாவும் மற்ற வர்களும் உறுதுணையாக நின்றநிலை யும் தமிழகத்திலே தமிழ் இசை இயக்கம் வளருவதற்கு, பெரிதும் உதவி புரிந்தன என்பதை வரலாற்றை உணர்ந்தவர்கள் மறந்திட இயலாது.

அத்தகைய ஒரு வரலாற்றை நாம் எண்ணிப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் தமிழ் இசையை வளர்ப் பதற்கு ஒரு இயக்கம் தேவைப்பட்டது என்பது இன்னும் நூறாண்டுகளுக்குப் பிறகு தமிழன் விழித்துக் கொண்டிருப் பானேயானால் அல்லது விழித்துக் கொண்டிருக்கின்ற தமிழனாக அவன் இருப்பானேயானால் தமிழ்நாட்டில் தமிழ் இசையை வளர்க்க ஒரு இயக்கம் இருந்ததா? என்று எண்ணி, கேலிப் புன்னகை புரிந்தாலும் புரியக்கூடும். ஆனால் நம்முடைய கடமையை நாம் நிறைவேற்றத் தவறக் கூடாது, நம் முடைய காலத்திலே - என்று எண்ணிய காரணத்தினாலேதான் அண்ணாமலை அரசர் அவர்களும், அவரைத் தொடர்ந்து பல தமிழ்ச் சான் றோர்களும், ஆன்றோர்களும் தமிழ் இசைவாணர்களும் இந்த இயக்கத்தை வலுப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்தியன் வங்கியின் 'இந்த் பாங்க் வணிக வங்கிச் சேவை' நிறுவனத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் துவக்கி வைத்தார். (27.12.89)

தமிழ் இசை இயக்கம் தோன்றிய போது அதற்கு எத்துணை எதிர்ப்பு இருந்தது என்பதை இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற பேரறிவாளர்கள் அனைவரும் அறிவீர்கள். ஏனென்றால் தமிழ் - அதற்கு ஒரு இசை-என்று சொன்னாலே அது மிக மலிவான ஒன்றாகக்கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. தமிழை விடுத்து வேறு மொழியிலே பேசினால்தான் - பாடினால்தான் - செயல்பட்டால்தான் பெருமை என்ற ஒரு நிலை இருந்த காரணத்தால், தமிழ் மொழியிலே பாடுவது என்பது ஒரு மலிவான ஒன்று என்று அன்று கருதப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் பல இசை நிகழ்ச்சிகளில் இறுதியாகப் பாடப்படுகின்ற தமிழ்ப்பாடல்கள் சில்லறை அல்லது உருப்படிஎன அழைக்கப் பட்டன, சலவைத்தொழிலாளியிடத்திலே ஆடைகளை எண்ணியெண்ணிப் போடும்போது எத்தனை உருப்படி என்று அவர் எண்ணிக் கொள்வதைப் போல, அல்லது நாம் எண்ணிக் கொள்வதைப் போல, அந்த உருப்படிகளிலே ஒன்றாகத்தான் தமிழ் இசைப் பாடல்கள் ஒரு காலத்திலே இருந்தன.

இப்படியே உருப்படி என்று தமிழ் இசைப் பாடல்களுக்குப்பெயர் இருந்தால் உருப்படுமா நாடு? உருப்படுமா மொழி? என்று எழுந்த வினாவின் அடிப்படையிலேதான் இந்த உணர்வே ஏற்பட்டு, தமிழ் இசைக்கு இன்றைக்கு ஆக்கமும் ஊக்கமும் உருவாகியிருக்கின்றன.

நான் ஒரு கருத்தைச் சொன்னால் யாரும் தவறாகக் கருதிக் கொள்ள மாட்டீர்கள். இனிமேல் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற இசை விழாக்களில் இசைவாணர்கள் கலந்து கொள்ள வேண்டும். இசை மழை பொழிய வேண்டும் என்று மாத்திரம் தான் இருக்க வேண்டுமேயல்லாமல், தமிழ் இசை தேவை என்பதற்காக ஒரு விரிவுரை, ஒரு விளக்க உரை இன்னமும் தேவைப்படுமேயானால், அதற்கு உண்மையான பொருள் தமிழன் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கின்றான் என்பதுதான்! எனவே அத்தகைய ஒரு நிலை ஏற்படாமல் இனியாவது இசையைப் பற்றிய நுணுக்கங்களை, இசையை எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும், எவ்வாறு பயில வேண்டும், இசைக்குத்தர வேண்டிய மதிப்பு என்ன? மரியாதை என்ன? இன்னமும் என்னென்ன வகையிலே தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக வளர்ந்து வருகின்ற இந்த இசைக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பது போன்ற கருத்தரங்குகள் அமைய வேண்டும், நடைபெற வேண்டுமேயல்லாமல், ஏன் தமிழ் இசையை அனைவரும் போற்ற வேண்டுமென்பதற்கு உரிய காரண, காரிய விளக்கங்களை அளித்துக் கொண்டிருப்பது தேவையற்ற ஒன்றாக எதிர் காலத்திலாவது மாறினால்தான் நம்முடைய காலத்திலே நாம் தமிழை உயரத்தில் உட்கார வைத்தோம் என்ற பெருமைக்கு உரியவர்களாக ஆவோம்

உலகத்திலே உள்ள மொழிகளிலே மூத்த மொழி தமிழ் மொழி. இன்னும் சொல்லப் போனால் நாம் நம்முடைய தாய் மொழியை மொழி என்று அழைக்கிறோம். மொழி என்று அழைப்பதிலேயே பெயர்ச் சொல்லும் இருக்கின்றது. வினைச் சொல்லும் இருக்கின்றது.

மொழி - பாஷை என்கின்ற அந்த வடமொழிச் சொல்லுக்கு தமிழில் "மொழி", "லாங்குவேஜ்" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் நாம் மொழி என்கிறோம். ஆனால் மொழி என்பதிலேயே வினைச் சொல்லும் அடங்கியிருக்கின்றது. ஒருவனைப் பார்த்து "நீ மொழிந்ததை மீண்டும் மொழி" என்று சொன்னால் அங்கே வினைச்சொல். ஆனால் அப்படி ஆங்கிலத்திலே உச்சரிக்க முடியுமா என்றால் முடியாது. அவன் மொழிகிறான் என்று சொல்லலாம். He languages என்று சொல்ல முடியாது. அவன் பாஷிக்கிறான் என்று கூற முடியாது. தமிழிலேதான் மொழி என்ற அந்தச் சொல்லைப் பெயர்ச் சொல்லாகவும் பயன்படுத்தலாம், வினைச் சொல்லாகவும் பயன்படுத்தலாம். அத்தகைய உயர்வைப் பெற்ற மொழி நம்முடைய மொழி - தமிழ் மொழி.

தமிழ் என்பதிலேயே முன்னோர்கள் இதற்குப்பெயரிட்ட அந்தக் காலத்திலேயே எவ்வளவு அழகாக இனங்களை ஒன்று சேர்த்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடைய முடியும். தமிழ் - த, மி, ழ், தமிழில் மூன்று இனங்கள் உண்டு. வல்லினம், மெல்லினம், இடையினம். க,ச,ட,த, ப,ற - வல்லினம், அதிலே உள்ள "த" தமிழின் முதல் எழுத்தாக, வல்லின எழுத்தாக ஒலிக்கின்றது. ங,ஞ,ண,ந, ம,ன - மெல்லினம். அதிலே உள்ள "ம" என்ற எழுத்து, "மி" ஆகி, அந்த மெல்லினம் தமிழ் என்பதிலே இரண்டாவது எழுத்தாக ஒலிக்கின்றது. ய,ர,ல,வ,ழ,ள - இடையினம். அதிலே உள்ள "ழ" என்ற எழுத்து "ழ்" ஆகி, அந்த இடையினம் தமிழ் என்பதிலே மூன்றாவது எழுத்தாக அமைந்து, வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று இனங்களும் சேர்ந்த மொழியாக "தமிழ்" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இப்படி மூன்று இனத்தையும் சேர்த்து ஒரு மொழிக்கு உரிய பெயராக உருவாக்கியுள்ள இந்தப் பெருமை வேறு மொழிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. "நீ என்ன, எல்லா மொழிகளும் கற்றவனா?" என்று நீங்கள் என்னைக் கேட்கக் கூடும். பாரதியாரே கூட "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார். எனவே நான் பாரதியாரைத் துணைக்கு அழைத்து -

மத்திய அமைச்சரவையில் புதிய இணை அமைச்சர்

மத்திய அமைச்சரவையில் அறிவியல் அறிஞர் டாக்டர் எம்.ஜி.கே. மேனன் அவர்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறை இணை அமைச்சராக 18-12-89 அன்று பொறுப்பு ஏற்றார். இவருடன் சேர்த்து மத்திய இணை அமைச்சர்கள் எண்ணிக்கை மூன்றாகிறது.

பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் கவனித்து வரும் கடல் அபிவிருத்தி, மின் அணு, அணு சக்தி, வானவியல் ஆகிய துறைகளில் திரு. எம்.ஜி.கே. மேனன் அவர்கள் பிரதமருக்குத் துணையாக இருப்பார்.

நான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணேன் என்று சொல்ல வேண்டிய அளவிற்கு மொழிக்குரிய இலக்கண அடிப்படையிலே உள்ள இந்த இனங்களைக் கூட இணைப்பதிலே ஒரு பெரும் திறமைகாட்டி மொழிப் பெயரை அன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள் எனக் கூறுகிறேன்.

அந்த மொழியில் இசை இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வந்தவர்கள் தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் மாத்திரமல்ல. ஒவ்வொரு மாநிலத்திலும் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள ஒவ்வொரு மாநிலத்தவர்களும் அவரவர்களுடைய தாய்மொழியிலே இசை இருக்க வேண்டுமென்று விரும்புவது தவறல்ல. அதனால்தான் வங்கத்துச் சிங்கக் கவிஞர் தாகூர் அழகாகச் சொன்னார். தன்னுடைய தாய்மொழியிலே இசைக்காமல், வேறு ஒரு மொழியின் இசையை அனுபவிப்பது எப்படி இருக்கிறது என்றால் - மனைவியிடத்தில் வக்கீல் வைத்துப் பேசுவதைப் போல இருக்கின்றது என்று சொன்னார். நான் இதற்காக வேறு மொழிப் பாடல்களே கூடாது என்று வெறுப்பவனும் அல்ல! மறுப்பவனும் அல்ல. எல்லா மொழிகளிலும் பாடக் கூடிய ஆற்றல் பெற்ற இசைப் பேரரசி எம்.எஸ். அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். என்ன பாடுகிறார்கள் என்பதை அந்தச் சொல் சுத்தம் என்பார்களே - அந்தச் சொல் சுத்தத்தோடு பாடக் கூடியவர்கள் எம்.எஸ். அவர்கள், அவர்களைப் போன்ற சிலர்தான் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்றார்கள்.

தமிழிலே பாட வேண்டும் என்று நாம் விரும்புவதற்குக் காரணம் - என்ன பாடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். நான் வேறொரு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இசைக்கு மொழி இல்லை. ஆனால் மொழிக்கு இசை தேவை. தமிழுக்குத் தமிழிசை தேவை! இதுதான் நம்முடைய உள்ளத்திலே பதிய வேண்டிய அழுத்தமான கருத்து. அந்த இசையை பன்னெடுங்காலத்திற்கு முன்பு, சங்க' காலத்திலேயே கூட புலவர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். சங்க காலத்திற்குப்பிற்பட்டபல்வேறு காலங்களில், சங்கத்தின் தலைவர் வரவேற்புரை ஆற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்களே - பிற்காலத்திலே வந்த பாடல்களும் கூட - தேவாரம் ஆனாலும், திருவாசகம் ஆனாலும், இராமலிங்க அடிகளாருடைய பாடல்கள் ஆனாலும், திருப்புகழ் ஆனாலும், அவைகள் எல்லாம் அருமையான தமிழ்க் கருவூலங்களாக, தமிழ்ச் சோலைகளாக, தமிழ் இலக்கியப் பெட்டகங்களாக அதே நேரத்தில் இசையோடு கலந்த அமுதங்களாக நமக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. எனவே அவைகளைப் பரப்ப வேண்டிய பெரும் கடமை நமக்கு உண்டு என்பதை இந்த நல்லதொரு விழாவிலே நான் நினைவுபடுத்த வேண்டியவனாக இருக்கின்றேன்.

இசை என்கின்ற இந்தப் பெயரே கூட தமிழன் எவ்வளவு அழகாக இதற்குச் சூட்டியிருக்கிறான் என்பதை எண்ணியெண்ணி நாம் மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம். ஈதல் இசைபட வாழ்தல் என்று வள்ளுவர் குறிப்பிடும்போது இசையைப் புகழ் என்கின்ற பொருளிலே குறிப்பிடுகின்றார்.

இதற்கு இசை என்ற பெயரைச் சூட்டியவர்கள் ஒரு கச்சேரியில் - ஒரு இசை நிகழ்ச்சியில் பாடலோடு பக்கவாத்தியக்காரர்கள் இசைந்து போனால்தான் - ஒரு பக்கவாத்தியக்காரரோடு இன்னொரு பக்கவாத்தியக்காரர் இசைந்து போனால்தான் - ஏன் சுருதி கூட்டுபவர் உட்பட அனைவரும் ஒருவரோடு ஒருவர் இசைந்து போனால்தான் அது இசை நிகழ்ச்சி. எனவே எல்லோரும் இசைந்து நடத்துகின்ற நிகழ்ச்சி இசை நிகழ்ச்சி. எனவேதான் அது இசை என்று சொல்லப்பட்டு

கின்றது என்று சொன்னால் அது முற்றிலும் பொருத்தமான ஒன்றாகும்.

அப்படிப்பட்ட அந்த இசை தமிழில் தனிப் பெருமையோடு விளங்க வேண்டும் என்பதற்காக அந்தக் காலந்தொட்டு பாடுபட்டவர்கள் இங்கே பலர் வீற்றிருக்கின்றார்கள். அதில் முக்கியமாக என்னுடைய அன்பிற்குரிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தமிழுக்காக, தமிழின் மேன்மைக்காக, குறிப்பாக, தமிழ் இசை மூலமாக நல்ல பல கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்ட அந்தக் கடந்த கால நிகழ்ச்சிகளை எல்லாம் நான் எண்ணிப் பார்த்து அத்தகைய பெரியவர்களுக்கு சான்றோர்களுக்கெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த இனிய விழாவிலே 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டம் பெறவிருப்பவர் நம்முடைய பேரன்பிற்குரிய குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள். அவருக்கு இசைப் பேரறிஞர் பட்டத்தை நான் வழங்குவேன் என்று அழைப்பிதழிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்பே பல்வேறு விருதுகளை அவர்களுக்கு வழங்கியிருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு இசைப் பேரறிஞர் விருதையும் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக வழங்கவிருக்கிறேன். அதற்காக நான் பெருமை கொள்கிறேன்.

சங்கத் தலைவர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல அவருடைய வாத்தியக் கருவி இருக்கிறதே - அதை எல்லோரும் குறிப்பாகச்சொல்லும்போது "வாசிப்பார்கள்" என்றுதான் சொல்வார்கள். பிடில் வாசிப்பார் என்றுதான் கூறுவார்கள். ஆனால் நம்முடைய குன்னக்குடி வைத்தியநாதனைப் பொறுத்தவரையில் அவர் வாசிப்பதில்லை. பிடிலைப் பேச வைக்கின்ற ஒரு அற்புதத்தை, செய்து காட்டிக் கொண்டிருப்பவர். அதிலே பல்வேறு யுக்திகளை எல்லாம் கையாண்டு புகழ் பெற்றவர். கோகுல் சொன்னார் - கவிஞர் கண்ணதாசனுக்கு ஏற்பட்ட இரத்தக் கொதிப்பு கூட இவருடைய இசையின் காரணமாக அடங்கிற்று என்று சொன்னார். அதையெல்லாம் நான் நம்பத் தயாராக இல்லை. ஒரு வேளை கோகுல் அவர்கள் இப்போது அப்படி தன்னை மாற்றிக் கொண்டிருக்கலாம். இளமைக் காலத்திலே அவர் அப்படி இருந்தவரல்ல. பிடில் வாசித்து இரத்தக் கொதிப்பை அடக்கி விடலாம் என்றால், பிறகு மருத்துவமனைகளே தேவையில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் கூட தேவையில்லை. ஆனால் நான் அந்த உணர்வுகளைக் குறைத்து மதிப்பிடவில்லை. இரத்தக் கொதிப்பு - இது போன்ற இனிமையான இசையைக் கேட்கின்ற நேரத்தில் இன்பம் பொங்குகின்ற அத்தகைய ஒரு அரிய சுவையைச் செவிகளிலே கேட்டு, சிந்தை மகிழ்கின்ற நேரத்தில் ஒரு ஆறுதலின் காரணமாக இரத்தக் கொதிப்பு அடங்கக்கூடும். இரத்தக் கொதிப்பு என்பது உணர்வுகளின் காரணமாக ஏற்படக் கூடியது. அதிலும் என்னுடைய பழைய நண்பர் கண்ணதாசன் அவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும், உணர்ச்சி வயப்படக் கூடியவர், அதன் காரணமாக அந்த இசையின் மூலமாக அவர் அதிலே தணிந்திருக்கக் கூடும். பிடிலின் மூலமாக மழையை குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் வரவழைத்தார் என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்பட்டது உண்டு. நான் அப்போது அதைக் கேலியாகச் சொல்லவில்லை. மழை வந்ததோ அல்லவோ? குன்னக்குடி அவர்களின் வயலின் மூலமாக இசை மழை பொழிந்தது என்பதை நான் ஒத்துக் கொள்ளக் கூடியவன். அத்தகைய இசை மழைபொழியக் கூடிய குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியிலே இசைப் பேரறிஞர் பட்டம் தருவதிலே நான் பெருமகிழ்ச்சி அடைந்து, அவரை வாழ்த்தி, பாராட்டி மகிழ்கிறேன்.

—21.12.89 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ் இசைச்சங்கத்தின் 47-வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.

அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசு

அரசு அலுவலர்களுக்குக் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் பொங்கல் பரிசாக ரூ. 400 வழங்கப்படும்.

தற்போது, தினக்கூலி அடிப்படையில் இருக்கக் கூடிய அலுவலர்களுக்குக் கடந்த ஆண்டு பொங்கல் பரிசாக ரூ. 250 தான் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்றும், ஆண்டொன்றுக்கு 240 நாட்கள் பணியாற்றி இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை இருந்தது. இப்போது அந்த நிபந்தனை மாற்றப்படுகிறது. கடந்த ஆண்டில் குறைந்தபட்சம் அவர்கள் 240 நாட்கள் பணியாற்றியிருந்தாலே இந்த பொங்கல் பரிசுத்தொகை வழங்கப்படும்.

இதன் மூலம் சுமார் 11½ இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு ரூ. 44 கோடி செலவாகும்.

இந்த அரசு ஏற்கெனவே அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறது. எனவே, இதில் அவர்கள் மனநிறைவு பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

-முதல்வர் கலைஞர்

(28-12-89 செய்தியாளர் கூட்ட அறிவிப்பிலிருந்து)

ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசக் கல்வித் திட்டம்:

"ஏழை எளியோர் படித்துப் பயன்பெறும் திட்டம்"

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் படிப்புதவித் திட்டம் மூலம் மாணவியர் பலரும் பயன்பெற்று வருகிறார்கள். ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பட்டப் படிப்பில் ஊக்கம் உள்ளவர்களாக மாற இத்திட்டம் எப்படியெல்லாம் பயனளிக்கிறது என்பதைப் பயன் பெறுவோரிடமே கேட்டறிய முற்பட்டோம்.

அம் முயற்சி தொடர்பான சந்திப்பில், நமக்குக் கிடைத்த செய்திகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை:

செல்வி மகாலட்சுமி

காஞ்சிபுரம், பச்சையப்பன் மகளிர் கல்லூரியில், முதலாம் ஆண்டு-பொருளாதாரம் படிக்கும் செல்வி மகாலட்சுமியை இத்திட்டம் பற்றிக் கேட்டபோது கூறினார்-

"எங்கள் குடும்பம் பெரிசு. பெற்றோர் தவிர சகோதர சகோதரிகளாகிய நாங்கள் 5 ஆண்களும், 2 பெண்களுமாக 7 பேர்கள். அப்பாவிற்கு நிரந்தர வேலை கிடையாது. நான்தான் கடைசிப் பெண். 3 அண்ணன்மார்களுக்குத் திருமணமாகி அவர்கள் தனிக்குடித்தனம் போய் விட்டார்கள். நான் முற்பட்ட - பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவள். சாதி, மதம் - முற்பட்ட பிற்பட்ட வகுப்பு என்றெல்லாம் பார்க்காமல், பொருளாதார அடிப்படையை வைத்து தமிழக அரசின் கல்லூரிக் கல்விக் கட்டணச் சலுகை மூலம் ஆண்டுக்கு ரூ.330 கட்ட வேண்டிய பெரிய சுமை என் தந்தைக்கு நீங்கியது. என் குடும்பச் சூழ்நிலையில் - ஒரு வேளை இந்தத் திட்டம் வராம இருந்திருந்தா நான் தொடர்ந்து படித்திருப்பேனா என்பது சந்தேகம்தான்! ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்திற்கும், அதன் மூலம் என் போன்ற ஏழை எளிய பெண்களெல்லாம் படித்துப் பயன்பெற உதவிடும் தமிழக அரசிற்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன் நான்" என்றார் செல்வி மகாலட்சுமி.

பயன் அடைந்தோர் பகர்வன

வணிகவியல் பட்டப் படிப்பு மாணவியான செல்வி காமாட்சியைச் சந்தித்து இதுபற்றிக் கேட்ட போது சொன்னார்:

"என் தந்தை காலமாகி விட்டார் - நெசவு வேலையே எங்கள் குடும்பத் தொழில் - அம்மாதான் சிரமப்பட்டு குடும்பத்தைக்காப்பாத்திட்டு வராங்க - மேலும் மேலும் படிக்கணும்னு எனக்கு மிகவும் ஆர்வம் இருக்கிறது. ஆனால் படிக்கப் பணமில்லையே, எப்படி படிப்போம் என்று கல்லூரியில் சேரும் போது நான் வருத்தப்பட்டேன். ஆனா 376 ரூபாய் கட்டணச் சலுகை மூலம், ஓரளவிற்கு எங்கக் குடும்பச் சுமை நீங்கியது - பணம் இல்லைன்னா படிப்பும் இல்லை என்ற நிலைமை மாறிவிட்டது. இத் திட்டம் என் போன்ற ஏழைக் குடும்பத்துப் பெண்கள் படிப்புக்குக் கை கொடுக்கும் திட்டமாக உள்ளது."

செல்வி காமாட்சி

செல்வி அகிலா கூறுகிறார்:

"என் அப்பாவுக்கு நானும் என் அண்ணனும் ஆகிய இரண்டு பேர் தான் - இருவரும் கல்லூரியில் படிக்கிறோம். அப்பாவிற்கு மூன்று சக்கரச் சைக்கிள் மூலம் எண்ணெய்

செல்வி அகிலா

விற்கிற வேலை - அவருக்கும் வயதாகிவிட்டது. வருகிற வருமானத்தில் நாங்கள் இரண்டு பேரும் படிக்க முடியவில்லை - இருந்தாலும் இந்தத் திட்டம் மூலம், 376 ரூபாய் கட்டணச் சலுகை இருப்பதால்தான், நான் தொடர்ந்து கல்லூரியில் படிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இத்திட்டத்திற்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்''

ஜவுளிக்கடை குமாஸ்தாவாகப் பணியாற்றும் திரு. அருககீர்த்தியின் மகள் செல்வி சத்திய பிரபா சொன்னார்:

''அண்ணனும் நானும் படிப்பவர்கள் - ஜெயின் சமூகம் என்பதால் முற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அரசு சலுகை எதுவும் கிடைக்காது என்றும் சிலர்

செல்வி சத்திய பிரபா

சொன்னார்கள். ஆனால், குடும்ப வருமான அடிப்படையில் கல்விக் கட்டணச் சலுகை கிடைத்தது. அதனால் ஓரளவிற்கு என் அப்பாவிற்கு நிம்மதி ஏற்பட்டது. தொடர்ந்து படித்து, ஒரு பட்டதாரியாக ஆக முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கும் உள்ளது.''

செல்வி காமக்கோட்டி வணிகவியல் முதலாமாண்டு படிக்கும் மாணவி. அவர் இத்திட்டம் பற்றிக் கூறுகையில், ''தொடர்ந்து சரிவர மழை பெய்யவில்லை; வறட்சி; அதனால் அப்பாவும் சரியா விவசாயம் செய்ய முடியலை. வீட்டிற்கும் வருமானம் போதாத நிலை.

★ அறிவு வளர்ச்சி வேண்டும்; கல்வி வேண்டும்; ஆராய்ச்சி வேண்டும்; கண்ணியமான தொழில் வேண்டும்; சமத்துவம் வேண்டும்; ஒற்றுமை வேண்டும்; தன் முயற்சி வேண்டும்; உண்மை உணர்வு வேண்டும்; ஒருவரையொருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும்; சோம்பேறிகள் இருக்கக் கூடாது; அடிமைகள் இருக்கக் கூடாது; தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக்கூடாதவர்கள் முதலியவர்கள் இருக்கக்கூடாது. இன்னும் இதுபோன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

பண வசதி இல்லையே - என்னைக் கல்லூரியில் படிக்க வைப்பார்களா? என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால் இப்ப தமிழ்நாடு அரசு மூலம் கிடைக்கிற கல்விக் கட்டணச் சலுகையால் ஆண்டுக்கு 376 ரூபாய் சலுகை கிடைக்கிறது. என் அப்பாவிற்குத் தெம்பா இருக்கு. நானும் நல்லா படிக்கலாமேன். எப்படியும் நான் பட்டதாரியா ஆகிவிடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.''

இத்திட்டம் மாணவர்களுக்கு எப்படிப் பயனளிக்கிறது என்று காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. மும்தாஜ் பாலகிருஷ்ணன் அவர்களிடம் கேட்ட போது-

''முற்பட்ட - பிற்பட்ட - தாழ்ந்த வகுப்பு என்ற சாதி மதப் பாகுபாடு இல்லாமல், பொருளாதார அடிப்படையில், கல்விச் சலுகை பெற ஏழை மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய நல்ல திட்டமாகும் இது. படிப்பு எல்லோருக்கும் பயன்படக் கூடியது. ஏழ்மை என்பதால் கல்வி தடைப்படக்கூடாது என்று இந்த நல்ல திட்டத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

''ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தின் மூலம், எங்கள் கல்லூரியில் 26 மாணவிகள் ரூ.9,308 அளவிற்கு ஓராண்டிற்குக் கல்விக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இதற்கான இழப்புத் தொகையினைக் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திலிருந்து நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

1989-90-ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது தமிழக அரசு என்று இயக்குநரக அறிக்கை மூலம் தெரிய வருகிறது. உண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள இத்திட்டம் - தொடர்ந்து படிப்போமா, அல்லது இடையில் நிறுத்தி விடுவோமா, என்ற ஐயமில்லாமல் ஏழை மாணவிகள் உற்சாகத்துடன் படிக்க வகை செய்யக்கூடிய நல்ல திட்டமாகும்'' என்றார் மகிழ்ச்சியுடன்.

—எம். கண்மணி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
செங்கை - அண்ணா மாவட்டம்

அமைதிப் புரட்சியின் அழியாச் சின்னம்

பேராசிரியர், ந. இராமநாதன்
முதல்வர்,
பெரியார் சிந்தனை அஞ்சல்வழிக் கல்லூரி.

அமைதியையும் புரட்சியையும் நாம் தொடர்மொழியாகச் சேர்த்துப் பேசலாம், அல்லது எழுதலாம். ஆனால் நடைமுறை வாழ்வில் இரண்டும் இயைதல் என்பது இல்லை. அமைதியுள்ள இடத்தில் புரட்சி இருக்காது. புரட்சியுள்ள இடத்தில் அமைதியும் இருக்காது. வியப்பிலும் வியப்பாக இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்துக்கொண்டு தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த - மாபெரும் கருத்துப் புரட்சியை நடத்திய சிந்தனையாளரை இந்தமிழுலகம் கண்டது. அவர்தான் தந்தை பெரியார்!

சிந்தனைகளில் புரட்சி-எழுத்துகளில் புரட்சி-மேடைகளில் முழங்குவதில் புரட்சி. ஆனால் செயல்களில், நடைமுறைகளில் நடுக்கடலன்ன அமைதி. நடுக்கடலன்ன சிந்தனைகளில் ஆழம். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றபடி எப்போதும், எவ்விடத்தும், எத்தகைய சிக்கலிலும் உயர்வையே உள்ளும் உள்ளம். கள்ளம் கபடமற்ற வெள்ளை மனம். ஆனால் எவராலும் ஏமாற்ற முடியாத தெளிந்த மதி. எவரையும் ஏமாற்ற விரும்பாத மனத் தூய்மை. விண் மீதில் அண்ணாந்த குன்றம் போல எங்கும் யாவரும் அறிந்து கொள்ளும் தோற்றம். எத்தகைய மனிதராலும் அசைக்க முடியாத மலையின் அழுத்தம் போன்று, தாம் கொண்ட கொள்கையில் அழுத்தம். நீர் மேல் எழுத்து போல இல்லாமல் நின்ற சொல்லராய், அடங்கி ஒடுங்கி முடங்கி முக்காடிட்டுக் கொண்டு மூலையில் கிடக்காமல் காட்டில் உலாவரும் அரிமா போல, மக்கள் வாழும் இடமெல்லாம் சென்று சென்று கொள்கை முழக்கமிட்ட அரிமாத் திறம். இந்த இயல்புகளின் வடிவமாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார்.

படித்ததையும் கேட்டதையும் அப்படியே திருப்பிச் சொல்லியும், அப்படியே திருப்பி எழுதியும் வருவதே புலமை அல்லது அறிவு என்றும் எண்ணியும் பேசியும் வந்த உலக நடைமுறையை மாற்றிப் படித்ததையும் கேட்டதையும் சிந்தித்துப் பார்த்துப் பின்னர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணற்ற மக்களைச் சிந்திக்கத் தூண்டியவர் பெரியார். இவ்வாறு தாம் சிந்தித்ததால் பல உண்மைகள் தமக்குத் தெரிய வந்தன. தம்மைப் போலவே மற்றவர்களும் சிந்தித்தால் அவர்கட்கும் உண்மைகள் புரியும்" என்று மனமார நம்பித்தான் அவர் தம் வாழ்நாளெல்லாம் பேசினார்; எழுதினார்.

''சிந்திக்காமல் கண்ணை மூடிக் கொண்டு அப்படியே நம்பிவிடாதே. அப்படி நம்புவது மந்தை மனப்பான்மை. ஆட்டு மந்தைதான் அப்படிச் செய்யும். செம்மறி ஆடுகள் கூட்டமாகப் போகும்போது ஏதோ ஒன்றைக் கண்டு ஒரு ஆடு தாண்டிச் செல்லுமானால் அவ்வளவு ஆடுகளும் அப்படியே தாண்டித் தாண்டித் தான் செல்லும். அங்கே என்ன இருக்கின்றது? ஏன் தாண்ட வேண்டும் என்று எண்ணிப் பார்க்காது, எல்லாம் தாண்டியே செல்லும். இந்த மனப்பான்மை மனிதருக்கு ஆகாது. யாராக இருந்தாலும் எவர் சொல்லியதாக இருந்தாலும் அவைகளை நடுவு நிலையில் இருந்து சிந்தித்துப் பார்க்க மக்களைத் தூண்டியவர் பெரியார்.

''நான் ஒரு சுதந்திர மனிதன். எனக்குச் சுதந்திர நினைப்புண்டு. சுதந்திரமான அறிவுண்டு. சுதந்திரமான ஆராய்ச்சியுண்டு. சுதந்திரமான அனுபவம் உண்டு. இவைகளைக் கொண்டு என்னுள்ளத்தில் பட்டதைச் சொல்லுகின்றேன். நீயும் உன்னுடைய சுதந்திரமான நினைப்பு அறிவு ஆராய்ச்சி அனுபவம் இவைகளைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்றுக் கொள்ள முடியுமானால் ஏற்றுக் கொள். ஏற்றுக் கொள்ள முடியவில்லையானால் தள்ளி விடு, என்ற நிபந்தனையின் மீதுதான் நான் எதையும் சொல்லுகின்றேன். நான் சொல்லுகின்ற எதையும் நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.''

இவ்வாறு பேசியும் எழுதியும்தான் அமைதிப் புரட்சியைத்தென்னகத்தில் தமிழகத்தில விளைவித்தார் பெரியார்.

தொலைபேசி: 3277

புதுவகை இனிப்பு, காரங்களுக்கும்
உயர்தர காபி, சாப்பாடு, டிபன் வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

"ஸ்ரீசக்தி பாலா"

சைவ உணவகம்

(புது பஸ் ஸ்டாண்டு அருகில்)

திண்டுக்கல்

குறிப்பு: திருமணங்கள், டீ பார்ட்டி முதலியவைகளுக்கு ஆர்டர்கள் சிறந்த முறையில், குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.

தொலைபேசி: 6625

சிறந்த சிற்றுண்டி
சுவையான சாப்பாட்டிற்கு
சிறந்த இடம்

"ஹோட்டல் சங்கீத்"

புது பஸ் ஸ்டாண்டு ரோடு

திண்டுக்கல்

குறிப்பு: திருமணம், டீ பார்ட்டி மற்றும் டின்னர் ஆர்டர்கள் குறித்த நேரத்தில் நல்ல முறையில் சப்ளை செய்யப்படும்.

மாயூரம் வேதநாயகனார்

-டாக்டர் மா. சேசையா

முதல் தமிழ் நாவலை எழுதிய விற்பன்னர் - நீதிபதி மாயூரம் வேதநாயகனார் அவர்களின் நூறாவது நினைவு ஆண்டையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

மாயூரம் வேதநாயகனார் 11-10-1826-இல் திருச்சியை அடுத்த குளத்தூரில் நல்ல செல்வக் குடும்பத்தில் பிறந்தார். பால பருவத்திலேயே பாக்கள் இயற்றும் திறம் பெற்றிருந்தார். அதோடு தியாகுப் பிள்ளை என்ற அரசு மொழி பெயர்ப்பு அதிகாரியிடம் ஆங்கிலமும் கற்றுப் பெரும் புலமை பெற்றார்.

முதன்முதலாக 1876-ஆம் ஆண்டு தனது 50-ஆவது வயதில் அவர் எழுதிய முதல் புதினத்திற்குப் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்று பெயரிட்டு அதற்கு அவர் அருமையான ஆங்கிலத்தில் அற்புதமான முன்னுரை வழங்கியுள்ளார். அதில் அவர், இந்த முதல் தமிழ் நாவலை ஏன் எழுதினார் என்பதற்குரிய காரணத்தைச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

இதுபோல, அவர் எழுதிய மற்ற நூல்களுக்கும் ஆங்கிலத்தில் முன்னுரைகள் எழுதியுள்ளார். ஏனென்றால், அவர் ஆங்கிலேயர் ஆட்சி இருந்த காலத்தில் முதல் தமிழ் நீதிபதியாக அரசுப் பணி புரிந்தார். எனவே, ஆங்கிலேய அதிகாரிகளும் தாம் எழுதிய பல நூல்களை - அவற்றின் சாரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்தார்.

வேதநாயகனார் ஆங்கில அரசாங்கத்தில் நீதிபதியாக இருந்ததால் ஆங்கிலப் புலமை பெற்றார். ஆனால், ஆங்கில நாகரிகத்தை அவர் ஒருபோதும் பின்பற்றியதில்லை. ஆங்கிலத்தில் அவர் சிறந்த புலமை பெற்றிருந்தாலும் தமிழில் நினைத்தவுடன் கவிதை பாடும் வல்லமை பெற்றிருந்தார்.

தன்னுடைய முப்பத்தோராவது (1857) வயதிலேயே முதல் தமிழ் நீதிபதியாகத் தரங்கம்பாடியில் நியமிக்கப்பட்டார். அப்போது பகலெல்லாம் வழக்குகளை விசாரித்து நேர்மை குன்றாது தீர்ப்பு வழங்கிக் களைத்துப்போன அவர், இரவில் சோர்வையும், அலுப்பையும் பொருட்படுத்தாது, நீதிநூல் என்ற ஒப்பற்ற கவிதை நூலை எழுதி வெளியிட்டார்.

அவர் எழுதிய அந்த நீதிநூலைப் பற்றி வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் "அறம் பற்றி நீ எழுதியது ஒன்றுதான் நூல்; மற்றதெல்லாம் கிழிந்த துணியில் இருந்து வெளிக்கிளம்பும் வெளிறிய நூலுக்ுச் சமம்- கிழிபடத்தின் வெண்ணூல்' என்று சாற்றுக்கவி பாடினார். இதைப்போல வள்ளலார் செய்த உள்ளத்தை உருக்கும் 'அருட்பா' என்ற அந்த அற்புதமான கவிதை நூலுக்கு அரசு அலுவலர் நீதிபதி வேதநாயகர் அற்புதமான சாற்றுக் கவிதை தந்து போற்றினார். வள்ளலாரும், 'சமரச சன்மார்க்கம்' என்ற கொள்கையை உடையவர். நீதிபதி வேதநாயகரும் அதே கொள்கையை உடையவர். எனவேதான் 'சர்வ சமய சமரச கீர்த்தனை' என்ற இசை நூலைத் தமிழில் பாடினார். மற்றவர்களெல்லாம் தெலுங்கில் கீர்த்தனைகள் பாடிக் கொண்டிருந்த போது நம்முடைய வேதநாயகனார் தமிழில் இசை பாடி இசைத் தமிழை வளர்த்தார்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் அவர் சிறந்து விளங்கினார். அவர் தம் வாழ்க்கையை அரசு ஆவணக் காப்பாளராகத் (Recordkeeper) தொடங்கினார். அதன்பின் திருச்சியிலுள்ள நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அரசுப் பணியாற்றினார். அப்போது ஆங்கில நீதிபதிகள் அளித்த ஆங்கிலத் தீர்ப்புகளைத் தமிழ்ப்படுத்தினார். பின் அதனைத் தொகுத்து 'சித்தாந்த சங்கிரகம்' (சங்கிரகம்-தொகுப்பு) என்ற தலைப்பில் புத்தகமாக 1862-இல் வெளியிட்டார். ஆங்கில மொழியிலுள்ள பல சட்ட நுணுக்கச் சொற்களுக்குத் தகுந்த தமிழ்ப் பதங்களைத் தன் புலமை நலத்தால் கண்டறிந்து அற்புதமாக மொழிபெயர்த்து மொழிபெயர்ப்புத் துறையினருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார்.

இந்த 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலின் ஒரே ஒரு பிரதி இன்று ஆவடியில் வாழும் அவருடைய கொள்ளுப் பேரன் வே.ஞா.ச. இருதயநாதன் என்பவரிடம் இருக்கிறது. இந்நூலை வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும். மற்றொரு கொள்ளுப் பேரன் வே.ஞா.ஆ. ஜான் ஜோசப், பி.ஏ., நமது தலைமைச் செயலகத்திலேயே இணைச் செயலராக இருந்து அண்மையில்தான் ஓய்வு பெற்றார்.

வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற கொள்கை நிலவி வந்தது. தமிழர்களின் சங்க காலத்தில் பானை செய்த குயப்பெண் கவிதை செய்திருக்கிறாள். அவள் பெயர் 'வெண்ணிக் குயத்தியார்'. குற இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் கவிதை பாடியிருக்கிறாள். அவள் பெயர் 'குறமகள் இளவெயினி'. தினைப் புனத்தைக் காவல் காத்த ஒரு பெண் கவிதை பாடியிருக்கிறாள். அவள் பெயர் 'காவற் பெண்டு'. மதுரையில் ஓலைக்கடை

பால் வளம் பெருக்குவோம்

அ. நாகராஜன், இ.ஆ.ப.,
ஆணையர்,
பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை
மேம்பாட்டுத் துறை,
சென்னை.

தமிழகத்தின் பால் வளத்துறை 1958-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதற்கு முன் பால் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் பிற சங்கங்களோடு பதிவாளர் நிர்வாகத்திற்குட்பட்ட தாகச் செயல்பட்டு வந்தன. பின்னர் இத்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியைப் பெருக்கிட விழைந்த தமிழ்நாடு அரசு, மாநிலத்திலுள்ள அனைத்துப் பால் கூட்டுறவுச் சங்கங்களையும், பால் வளத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் 1-8-65 முதல் கொண்டு வந்தது.

அரசின் கட்டுப்பாட்டிலிருந்த பால் சேகரித்தல், சேகரித்த பாலை சென்னை நகரில் விநியோகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 1972-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல், தமிழ்நாடு பால்வள நிறவனம் துவக்கப்பட்டது. பிறகு தேசிய பால் வளர்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையினால் 1-2-81 முதல் இது தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குத் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நியாயமான விலையினைப் பெற்றுத் தரவும், நுகர்வோர்களுக்குத் தரமான பாலினை நியாயமான விலையில் அளிக்கவும், பால் உற்பத்தி மற்றும் பால் பதனத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் பால் பெருக்குத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.

30-6-89-இல் அனைத்துப் பால் கூட்டுறவுச் சங்கங்களில் 18,38,963 உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு முறையில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

(1) அடித்தளமான கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்; (2) மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்; (3) மாநில அளவில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்.

இவை தவிர பால் நுகர்வோர் சங்கங்கள் மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டு, பால் விநியோகப் பணியைச் செய்து வருகின்றன.

6,534 பால் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

பால் பெருக்குத் திட்டம்- I

1972-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் துவங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ரூ. 15.48 கோடி செலவிடப்பட்டது. இதன் விளைவாக நாள் ஒன்றுக்கு 3.02 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் பெருக்குத் திட்டம்- II

பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் தொடர்ச்சியாக, பால் பெருக்கத் திட்டம் II, 1982 ஏப்ரல் முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செங்கை-அண்ணா, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோவை, நீலகிரி, மதுரை, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ரூ. 26.26 கோடி செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் இறுதியில் தினசரி 10.15 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டது.

பால் பெருக்குத் திட்டம் III

இரண்டாம் பால் பெருக்குத் திட்டத் தொடர்ச்சியாக மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் ஏப்ரல்'85 முதல் துவக்கப்பட்டது. இத்திட்டம் ரூ.68.19 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தேசிய பால் வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூடுதல் பால் பண்ணைகள் அமைப்பதுடன், திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் கூடுதலாகச் சேர்க்கப் பட்டன.

நாள் ஒன்றுக்குச் சராசரி 15,34,471 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, நாள் 1-க்கு 2,78,395 லிட்டர் உள்ளூர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பால் வள நிறுவனம் மூலம் சென்னை நகரில் தினசரி 6.14 இலட்சம் லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவ வசதி:

இன்றைய நாளில் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவர் கிராமங்களுக்கு நேரில் சென்று,

சங்க உறுப்பினர்களின் மாடுகளைப் பார்க்கிறார். கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, விவசாயிகளின் வீட்டு வாசற்படிக்கே மருத்துவ வசதி வருகிறது. இது தவிர, அவசரக் கால்நடை மருத்துவ உதவியும், சங்க உறுப்பினர்களுக்கு நாள் முழுக்க கிடைக்க வாய்ப்புள்ளது.

கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக் காளைகளின் விந்துகளிலிருந்து நல்ல கால்நடைகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 47 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையிலும், மீதமுள்ள 16 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இதர மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் தினசரி 2,18,510 லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. இச்சங்கங்களின் மூலம் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

இதுவரை, தமிழ்நாட்டில் 10 மகளிர் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. செயல்பட்டு வரும் 90 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 12,331 பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இச்சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் ஆதிதிராவிட மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சங்கங்கள் மூலம் அங்கத்தினர்கள் நிதி உதவி பெற்று, வாழ்க்கையில் முன்னேறி வறுமைக் கோட்டினைக் கடப்பார்கள் என்பது திண்ணம். மகளிருக்கு எனத் தனியே மேலும் சில கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 10 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 500 மகளிருக்குத் தலா 2 கறவை மாடுகள் வழங்க ரூ. 25.72 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இதில் ரூ. 13.10 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. 8 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்க ஆதிதிராவிட மகளிர் உறுப்பினர்களுக்குக் கறவை மாட்டு மானியம் ரூ. 4.99 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

பால் கறவை மாடுகள் வாங்க அரிசன நலத் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் 4686 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ரூ. 41.99 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1989-90-இல் 10,000 நபர்களுக்கு ரூ. 50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

1988-89-இல் தாட்கோ திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்க 27,484 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ரூ. 280.64 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1989-90-இல் 29,561 நபர்களுக்கு ரூ. 315.42 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது.

கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு அரசு உதவிகள்

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று ஒவ்வொரு மாதமும் கூட்டுறவு நூற்பாலையில் இருந்து 1,000 பேல் நூலும், தென்னிந்திய நூற்பாலை அதிபர் சங்கம் மூலம் 1000 பேல் நூலும் மொத்தம் 2 ஆயிரம் பேல் குறைந்த விலையில் கொடுக்க அரசு முடிவு செய்து உள்ளது.

கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளருக்கு 2 ஆயிரத்து 500 வீடுகள் இந்த ஆண்டு கட்டப்படும். இந்த வீடு ரூ. 15 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு அதில் ரூ. 5 ஆயிரம் அரசு மானியமாக வழங்கும். மீதி 10 ஆயிரத்தை நீண்ட காலக் கடனாகத் திருப்பித் தர வேண்டும்.

வைத்திருந்த ஒரு பெண் கவிதை பாடினார். இவர் பெயர் 'மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்' என்பது. இப்படியிருந்த தமிழகம் பிற்காலத்தில் பெண்களைக் கல்வி கற்கவிடாமற் செய்தது. இதனைக் கண்டித்து, ஒரு குடும்பம் சிறப்பாக விளங்கவேண்டுமென்றால், அதன் தாய் படித்தவளாக இருந்தால்தான் பிள்ளைகள் படிப்பாளிகளாக இருக்க ஏதுவாகும் என்ற கருத்தை வலியுறுத்தி, 'பெண் கல்வி', 'பெண் மானம்' என்ற இரண்டு நூல்களை உரைநடையில் எழுதினார். அதோடு பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி கவிதையில் ''பெண் மதி மாலை'' என்ற அழகிய நூலை எழுதினார். 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பெண் கல்வியின் சிறப்பை மட்டுமல்லாது பெண் குலத்தின் பெருமையை உயர்த்தி எழுதிய பெருமை அரசு அலுவலர் நீதிபதி வேதநாயகரையே சாரும்.

அவர் நீதிபதியாக இருந்தபோது எவ்வளவு நேர்மையுள்ள நீதிபதியாக இருந்தார் என்பதற்கு ஒரு நிகழ்ச்சி சான்றாக அமையும். ஒரு வழக்கு, மிகுந்த சிக்கலான வழக்காக இருந்தது. வேதநாயகனார் அதற்கு எப்படித் தீர்ப்பு கூறுவது என்று சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் வழக்கின் வாதி, அவர் வீட்டிற்கு வந்து 100 ரூபாய் தந்து, வழக்கில் தனக்குச் சார்பாகத் தீர்ப்புச் சொல்லுமாறு கூறிவிட்டுச் சென்றான். வேதநாயகனாரும் 100 ரூபாயை மிகுந்த மகிழ்ச்சியோடு வாங்கி வைத்துக்கொண்டு அவனை அனுப்பி வைத்தார். மறுநாள் நீதிமன்றம் கூடியது. அப்போது நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்திருந்த வேதநாயகனார் குழுமியிருந்தோரைப் பார்த்து, ''அன்பர்களே, இந்த வழக்கு மிகவும் சிக்கலானது. இதில் இதற்கு எப்படித் தீர்ப்பு சொல்வது என்று தவித்துக்கொண்டிருந்தேன். ஆனால் நேற்று மாலை இந்த வழக்கின் வாதி என்னிடம் வந்து 100 ரூபாய் தந்து எனக்குத் தீர்ப்பு கூறுகின்ற வேலையை எளிதாக்கிவிட்டார். இந்த வழக்கில் வாதிதான் குற்றவாளி. பிரதிவாதியாகிய மற்றவருக்கு இந்த நூறு ரூபாயை அன்பளிப்பாக அளிக்கிறேன்'' என்று நம்முடைய நீதிபதி வேதநாயகனார் கூறிய தீர்ப்புரை கண்டு மக்கள் அவர் மீது எல்லையில்லாத மதிப்பும் மரியாதையும் கொண்டனர்.

கலைஞர் கருத்துமணிகள்

★ *மலர் என்று சொன்னால் நாம் எவ்வாறு மல்லிகை, ரோஜா என நல்ல மலர்களைக் குறிப்பிடுகிறோமோ, அப்படியே நூல்கள் என்றால், நல்ல நூல்களையே எண்ணிட வேண்டும்.*

★ *ஒவ்வொருவரும் நூல் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது படிக்க வேண்டிய நூல்களைப் படித்திட வேண்டும்.*

இப்படி வாழ்ந்த வேதநாயகனார் குடும்ப வாழ்க்கை மிகுந்த துன்பம் பயப்பதாக இருந்தது. அவர் ஐந்து முறை திருமணம் செய்ய வேண்டியதாயிற்று. காரணம், முதலில் திருமணம் செய்த மனைவி மாண்டு போனார். அதன் பின் மறுமணம். அவரும் சில காலத்தில் இறந்தார். இப்படி ஒருவர் பின் ஒருவராக இறக்க, அவர், ஐந்து முறை திருமணம் செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில், பலமுறை அழுது அரற்றி, அவற்றையெல்லாம் பாக்களாகப் பாடி வைத்துள்ளார் என்றாலும், குடும்பத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு அரசுப் பணியை அற்புதமாக அமைதியாகச் செய்து வந்தார். அத்துடன், தமிழ்த் தொண்டும் செய்து வந்தார். தமிழறிஞர்களைப் போற்றினார்.

தருமபுரம் ஆதீனம் ஒரு சிக்கலான வழக்கில் தவித்தது. அப்போது அதன் ஆஸ்தானக் கவிஞராக இருந்தார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் (இவர் தான் டாக்டர் உ.வே.சா.வின் ஆசிரியர்.). அவர் வேதநாயகனாரிடம் வந்தார். வந்து உதவி கோரினார். 'அகரக் கம்பர்' என்று பெயர் பெற்ற மாபெரும் தமிழறிஞரான மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தம் இல்லம் நாடி வந்திருக்கிறார் என்பதைக் கேட்டவுடனே, தானே எழுந்து சென்று அவரை வரவேற்று, அன்புமொழி கூறி, அவருடைய சிக்கலைத் தீர்த்து அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர். வேதநாயகரைக் கதைத் தலைவனாகக் கொண்டு 'குளத்தூர் வேதநாயகன் ஐந்திணைக் கோவை' (438 பாக்கள் கொண்டது) என்ற ஒரு கவிதை நூலை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடி, வேதநாயகரைக் காவிய நாயகனாக ஆக்கினார். வேதநாயகர் இளம் வயதிலேயே ஒரு மாபெரும் கவிஞரால் பாடப்படும் அளவுக்குப் பேரும் புகழும் பெற்றார் என்றால் அதைவிடச் சிறப்பு வேதநாயகருக்கு வேறு என்ன வேண்டும்?

இறுதியில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மரணப் படுக்கையில் இருந்தபோது வேதநாயகனார் அவர் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தலையைத் தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கண்ணீர் சிந்தினார். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் உயிர் (1-2-1876 அன்று) அவருடைய ஆருயிர் நண்பர் வேதநாயகனாரின் மடியிலேயே பிரிந்தது. அவரது ஆதரவற்ற மகனுக்கு அரசுப் பணியும் வாங்கிக் கொடுத்து ஆதரித்தார் நம் நாயகர்.

இதுபோல, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்ரமணிய தேசிகர் அவர்களும் நீதிபதி வேதநாயகரின் நெருங்கிய நண்பராவார். இருவரும் அடிக்கடி ஒன்றாக அமர்ந்து உரையாடி மகிழ்வார்கள். ஒரு முறை வேதநாயகனார் திருவாவடுதுறை சென்று சுப்பிரமணிய தேசிகரிடம் பேசி மகிழ்ந்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடன் இவ்வாறு ஒரு சீட்டுக்கவி எழுதினார். ''ஊர் வந்து சேர்ந்தேன், என் உளம் வந்து சேரக் காணேன்; யார் வந்து சொல்லியும் கேளேன்; அதனை இங்கு அனுப்புவாயே?'' என்று பாடி அனுப்பினார். இன்னும் இரட்சண்ய யாத்திரிகம் எழுதிய ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப் பிள்ளையையும் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து அவரது காவியத்தை அரங்கேற்றும்படி செய்தார். அத்தனை அளவுக்கு அவர் அரசுப் பணியாற்றிக் கொண்டும் தமிழகத்திலுள்ள எல்லாப் பெருமக்களிடமும் நட்பு கொண்டு அவரவருக்குத் தேவையான உதவிகளையும் செய்து வந்தார்.

இப்படிப்பட்ட நீதிபதி வேதநாயகர்தமிழில் ஆங்கிலத்தில் **உள்ளது** போல் புதினம் இல்லையே என்ற குறையை அறிந்து அதனைப் போக்க முன் வந்தார். எனவே 1876-ஆம் ஆண்டு 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற முதல் தமிழ்ப் புதினத்தை எழுதினார். முதல் புதினமே புதுமையான வகையில் எழுதப்பட்டு இருப்பது ஒரு தனிச்சிறப்பு ஆகும். கதைத் தலைவனான பிரதாப முதலியாரே கதையைச் சொல்லுவது போல அவர் அதை எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, வெறும் பொழுது போக்கு இலக்கியமாக மட்டும் அதைப் படைக்காமல் அங்கங்கே அறவுரைகள், அறிவுரைகள் முதலியன வருமாறு எழுதினார். அதோடு படிப்பவர்கள் சுவைத்துப் படிக்க வேண்டும் என்பதற்காக ஏராளமான நகைச்சுவைத் துணுக்குகளை அங்கங்கே தங்கத் தட்டில் வைரக் கற்களைப் பதித்தது போல் பதித்து முதல் புதினத்தை முத்தான புதினமாக எழுதியுள்ளார்.

பிரதாப முதலி சிறு பையனாக இருந்தபோது மற்றொரு பையன் அவனைப் பார்த்து ஒரு சவால் விடுவான், ''நான் கண்ணை மூடிக் கொண்டு செய்யும் வித்தையை, நீ கண்ணைத் திறந்துகொண்டு செய்ய முடியுமா?'' என்று கேட்பான். உடனே பிரதாப முதலி, ''ப்பூ, இதென்ன பிரமாதம், எங்கே செய் பார்க்கலாம்'' என்பான். உடனே மற்ற நண்பன் மண் தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு தன் கண்களை மூடிக்கொண்டு மண்ணை அள்ளிப் போடுவான். பின்னர் பிரதாப முதலியைப் பார்த்து, ''எங்கே இதனை இப்போது நீ கண்ணைத் திறந்துகொண்டு செய் பார்க்கலாம்?'' என்பான். பிரதாப முதலி பேந்தப் பேந்த விழிப்பான். இப்படி எத்தனையோ நகைச்சுவைத் துணுக்குகள், சொந்த சிந்தனையில் துள்ளி வந்த சிரிப்பு வெடிகள், ஏராளம் ஏராளம்.

நம் முதல் நாவலாசிரியர் தன் நாவலில் வரும் பாத்திரப் படைப்பில், மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்று சித்திரிக்காமல், மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற கொள்கைப்படி படைத்துள்ளார். ஆம்! அவர் யதார்த்த நாவல் எழுதவில்லை. மாறாக இலட்சிய நாவல் எழுதினார். எனவேதான், "In writing this story, I have not followed the example of those novelists who depict human nature as it is, not as it ought to be, and who thus exhibit bad specimens of humanity which are often mistaken by the young and inexperienced for objects of imitation" என்று தன் ஆங்கில முன்னுரையில் அழகாக இலட்சிய நோக்குடன் கூறுகிறார். எனவே தான் நம் பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், ''பொழுதுபோக்குடன் பயனும் தந்து சுவையும் தந்த புத்தகங்களிலேயே பிரதாப முதலியார் சரித்திரத்தைக் குறிப்பிடுவேன். என் உள்ளத்தைக் கவர்ந்த ஏடுகளில் அது ஒன்று'' என்று அற்புதமாகக் கூறியுள்ளார்.

இன்றைய தமிழகத்தில் புதினம் இல்லையென்றால் பத்திரிகையே இல்லை. தொடர் நாவல், வார நாவல், மாத நாவல், குறு நாவல், சிறு நாவல், சரித்திர நாவல், மர்ம நாவல், துப்பறியும் நாவல், சமூக நாவல், நகைச்சுவை நாவல் என்று எப்படி எப்படியோ பெயரிட்டு நாவல்களை எழுதி 'நாடு முழுவதும் நாவலுக்கு அடிமை' என்ற ஒரு சூழ்நிலை இன்று உருவாகியுள்ளதென்றால் அதற்கு வித்திட்ட பெருமை வேதநாயகனாரையே சாரும்.

நீதிபதி வேதநாயகனார் பிரதாப முதலியார் சரித்திரத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. எட்டாண்டு கழித்து 1887-இல் 'சுகுண சுந்தரி' என்ற மற்றோர் புதினத்தையும் எழுதினார். இறுதியில் 21-7-1889-ஆம் நாளில் தம் 63-ஆம் வயதில் உயிர் நீத்தார். எனவே இந்த ஆண்டு அவர் மறைந்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதைக் குறிக்கின்ற ஆண்டு.

அவரது கல்லறை இன்றும் மயிலாடுதுறையில் (மாயூரம்) உள்ளது. அரசு அலுவலராக இருந்துகொண்டு தீர்ப்புகளை மொழிபெயர்த்து, அறநூல் செய்து, முதல் புதினம் எழுதி, தமிழில் முதலில் இசை பாடி, பெண் கல்வி பேசி, ஓய்வு பெற்றபின் கூட மாயூரத்தில் நகரமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழுக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் அயராது உழைத்த அந்த நல்லவர் விற்பன்னர் வேதநாயகனாருடைய நூற்றாண்டு நினைவு ஆண்டாகிய இந்த ஆண்டில் நம்முடைய அஞ்சலியை அவருக்குச் செலுத்திக் கொள்வோமாக!

குடும்ப நலத்திட்டத்தில் சாதனை

இந்தியாவில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரையில் மொத்தம் 13.46 இலட்சம் அறுவைச் சிகிச்சைகளும், 18.85 இலட்சம் கருத்தடை வளையம் பொருத்துவதும் நடைபெற்றுள்ளன. கருத்தடைச் சாதனம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 96.49 இலட்சமாகவும், கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 15.98 இலட்சமாகவும் பதிவாகியுள்ளது.

கருவுற்ற 71.01 இலட்சம் தாய்மார்களுக்குத் தட்டம்மைத் தடுப்பூசியும், 75.99 இலட்சம் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டு உள்ளன.

சமூக விற்பனைத் திட்டத்தின் கீழ் நாடெங்கிலும் நிரோத் விற்பனை 99.14 மில்லியனை எட்டியுள்ளது. கருத்தடை மாத்திரைகள் விற்பனை 19.52 இலட்சம்.

உயர்தர

அசைவ உணவு வகைகளுக்கு

திண்டி மாநகரிலே

சிறப்பான சேவை

புரிந்து வரும்

எங்களது நிறுவனம்

கோவை புகழ்

"ஹோட்டல் ஸ்ரீசம்பூர்ணா"

21, சத்திரம் தெரு,

(டாக்ஸி ஸ்டாண்ட் சமீபம்)

திண்டுக்கல்-1

தொலைபேசி எண்: 3164

செயல்பட்டு வருகின்றது

என்பதனை மகிழ்வுடன்

தெரியப்படுத்துகின்றோம்.

பார்ட்டி ஆர்டர்கள் உடனுக்குடன்,

சூடாக சுவையாக ஏற்றுக் கொள்கின்றோம்.

வாருங்கள் சுவைத்து மகிழ்ந்திடுவீர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வைரவிழா!

அண்ணாமலைப் பல்கலைக் கழக வைர விழா 14-12-'89 அன்று காலை 11.00 மணிக்குப் பல்கலைக் கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை வகித்தார். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வைர விழா மலரை வெளியிட, மேதகு குடியரசுத் தலைவர் அதனைப் பெற்றுக் கொண்டார். இணை வேந்தர் திரு. எம்.ஏ.எம். இராமசாமி வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சேதுநாராயணன் அறிக்கை வாசித்தார்.

மேதகு குடியரசுத் தலைவர்

மேதகு குடியரசுத் தலைவர் தமது உரையில், 'பல்கலைக்கழக வைர விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் நான் இங்கு படித்த காரணத்தால், இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

"மீனாட்சி கல்லூரியை மாற்றிப் பல்கலைக் கழகமாகத் தந்தவர் அண்ணாமலைச் செட்டியார். அவர் உயர்கல்வியைக் கோவிலாக மதித்துச் செயல்பட்டார். தமிழ் இலக்கியம், இசை ஆகியவற்றுக்குத் தனித் துறையைத் தோற்றுவித்துத் தமிழ் வளர்த்தார். இவரது வழியில் நின்று டாக்டர் முத்தையா செட்டியாரும், அதற்குப் பிறகு இப்போதைய இணை வேந்தராக இருக்கும் திரு. எம்.ஏ.எம். ராமசாமியும், பல்கலைக் கழகத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள்.

"இந்தியாவில் 5 ஆயிரம் கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் கல்வியின் தரம் பாராட்டும்படியாக இல்லை. கல்வித் தரத்தை மேம்படுத்தினால் தான், சமுதாயம் முன்னேறும்.

"பல்கலைக் கழகப் பட்டம். வேலை வாங்க ஒரு பாஸ்போர்ட் என்று நம் மக்கள் நினைக்கிறார்கள். படித்துப், பட்டம் பெறும் எல்லோருக்கும் அரசு வேலை கொடுப்பது என்பது முடியாத காரியமாகும். எனவே, மாணவர்கள் படிக்கும் போதே, அவர்களாகவே சுயவேலை செய்யக் கூடிய திறமை, நம்பிக்கை ஆகியவற்றை நாம் வளர்க்க வேண்டும்.

"இப்போது உள்ள கல்வி முறை பாராட்டும் வகையில் இல்லை. சமுதாயப் பணிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பயன் அடையும் வகையில் கல்வி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

"சுதந்திரம் அடைந்த பிறகு, தொழில் துறையில் நம்நாடு மற்ற நாடுகள் பொறாமை அடையும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவரும் இந்திய ஒருமைப்பாட்டையும் கலாச்சாரத்தையும் கடைபிடிப்பார்களென நம்புகிறேன்" என்றார்.

பிறகு அவர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக வீரர் திரு. ஆனந்த நடராசனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

மேதகு ஆளுநர்

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், அரசர் முத்தையா செட்டியாரின் வாழ்க்கை

வரலாற்று நூலை வெளியிட்டு, கம்ப்யூட்டர் மையத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தையும் திறந்து வைத்து உரையாற்றினார்.

விழாவில் அவர் பேசியதாவது:-

''தற்போது இளைஞர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு, விரக்தி நிலவி வருகிறது. இது ஜனநாயகத்தின் சமூக அபாயம். இதைப் போக்கத் தகுந்த நடவடிக்கை மிகமிக அவசியமாகும். நாட்டில் 40 சதவீத ஆரம்பப் பள்ளிகளில் உரிய கட்டடங்கள் இல்லை. பல பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இருப்பதில்லை.

''நாட்டிலுள்ள பல முக்கிய பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை ஒரே ஆசிரியர் பாடம் கற்பிக்கும் சூழ்நிலை உள்ளது. வடஇந்தியாவில் சில பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க வருவதில்லை. அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஆரம்பக் கல்வி நிலையங்களில் உரிய வசதி இல்லை. ஆரம்பக் கல்வி நிறுவனம் மிக மிக முக்கியமானது. எனவே, அதற்கான கல்வி அளிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

''பெண்களுக்கு உரிய கல்வி அளிப்பதில் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலிவடைந்தோர் ஆகியோருக்குக் கல்வி அளிப்பதில் கவனம் செலுத்துவது நமது கடமையாகும்.

''நாட்டிலுள்ள பல கல்லூரிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. இரண்டாம் தரத் தன்மையுள்ள கல்லூரிகளிலிருந்து மூன்றாம் தர மாணவர்கள் வெளியேறுகின்றனர். அவர்கள் வேலைவாய்ப்பு கிடைக்காமல் திண்டாடுகின்றனர்.

''ஆரம்பத்தில் வலுவான அடித்தளம் அமைத்துக்கல்வி கற்றுத் தருவதன் மூலம் உயர்நிலைக் கல்வியைச் சிறக்கச் செய்ய முடியும்.''

மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றிப் பேசுகையில், ''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நல்ல குடும்பத்தைப் பல்கலைக் கழகத்தோடு ஒப்பிட்டு, 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்று கூறினார். அப்படிப்பட்ட ஒரு நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கி இருக்கின்றது என்றால், அதற்குப் பெயர்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய சிறப்புகளை அடையாளப்பூர்வமாக உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், இப் பல்கலைக்கழகத்தில் முதல்தர மாணவராக விளங்கியவர் இன்றைக்கு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக அமைந்திருக்கிற காட்சியைக் காணுகிறீர்கள். இந்தப் பல்கலைக்கழகத்திலே வரலாற்றுத் துறையிலே விரிவுரையாளராகப் பணியாற்றியவர் இன்றைய தமிழக ஆளுநராக இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற காட்சியைக் காணுகின்றீர்கள். இந்தப் பல்கலைக் கழகத்திலேயிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அழைப்பை ஏற்று ''பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது. சிறுத்தையே வெளியே வா'' என்பதற்கேற்ப மாணவனாக வெளியில் வந்த பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கல்வி அமைச்சராக வீற்றிருக்கின்ற காட்சியைக் காணுகின்றீர்கள். எனக்கு இந்தப் பல்கலைக் கழகத்தோடு என்ன தொடர்பு என்றால், அவர்களோடெல்லாம் எனக்குத் தொடர்பு. எனவே, இந்தப் பல்கலைக் கழகத்தோடு எனக்கும் தொடர்பு இருப்பதாக நான் எண்ணிக் கொள்கிறேன்.''

''நம்முடைய எம். ஏ. எம். அவர்கள் உரையாற்றும்போது, இந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவன் ஆனந்த நடராசன் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்றிருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

''இந்தப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் அந்த மாணவனுக்குப் பரிசு தருவதாகவும், தனிப்பட்ட முறையில் அவர் 25 ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்க இருப்பதாகவும் சொல்லிவிட்டு, 'நீங்களும் ஏதாவது...' என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

''இந்தப் பல்கலைக் கழகத்திற்கு இது மணி விழா ஆண்டு. எனவே பல்கலைக் கழகமும் அவர் தனிப்பட்ட முறையிலும் தருகிற இரண்டையும் சேர்த்து 50 ஆயிரம் ரூபாயோடு, முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயையும் சேர்த்து மொத்தம் 60 ஆயிரம் ரூபாயாக இந்தப் பல்கலைக் கழகத்தின் அறுபதாம் ஆண்டு விழாவில் ஆனந்த நடராசனுக்குப் பரிசாக வழங்கப்படும்.

''நம்முடைய குடியரசுத் தலைவரைப்போன்ற குணக்குன்றுகளாக, நம்முடைய ஆளுநரைப் போன்ற ஆற்றல் மிக்கவர்களாக, நம்முடைய அன்பழகனார் போன்ற அறிவு செறிந்தவர்களாக மாணவர்கள் வருங்காலத்தில் வெளிவர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பல்கலைக் கழக வேந்தரும் தமிழக ஆளுநருமான டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும் மாண்புமிகு மலேசியா அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்களுக்கும், டென்னிஸ் வீரர் திரு. விஜய் அமிர்தராஜ், இசைக் கலைஞர் திரு. ஜேசுதாஸ், தவத்திரு குன்றக்குடி அடிகளார், இந்திய நிலக்கரி நிறுவனத் தலைவர் திரு. எம்.பி. நாராயணன், இராணுவ அமைச்சக விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் அருணாசலம், முன்னாள் இந்திய அட்டார்னி ஜெனரல் திரு. பராசரன், எலும்பு மருத்துவ இயல் மேதை டாக்டர் எம். நடராசன், தொழிலதிபர் திரு. மருதப்பிள்ளை, சார்ட்டர்டு அக்கௌண்டண்ட் திரு. கிருஷ்ணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சேது நாராயணன் ஆகியோருக்கும் சிறப்பு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய குறளோவியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை 15-12-'89 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார். குறளோவியம் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் செல்லப்பாவுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

பொருளியல் துறைக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் ''சித்த மருத்துவ முறைகள் குறித்து ஆராய்ச்சிப் பணிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

தொலை தூரக் கல்வி விடுதிக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள், ''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் இளங்கலைப் பட்ட வகுப்பினைத் தொடங்கி நடத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மலேசியாஅமைச்சர் திரு. டத்தோ சாமிவேல் அவர்கள், ராணி சீதை ஆச்சி குடியிருப்பு வளாகத்தைத் திறந்து வைத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக அறிவித்தார்.

ஆசிய ஓட்டப் பந்தயத்தில் பல்கலைக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர் திரு. ஆனந்த நடராசனுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்து, முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்குவதாக அறிவித்தார்.

இசைப் பேரறிஞர் மதுரை சோமு மறைவு

தமிழ் இசை உலகில் தனிப் பெரும் இடத்தைப் பெற்றிருந்த இசைப் பேரறிஞர் மதுரை சோமு 9-12-'89 அன்று தனது 70-வது வயதில் மறைவெய்தினார்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் சீட்ரான இவர், கர்நாடக இசைத் துறையில் ஒளி வீசித் திகழ்ந்தார்.

தமிழக அரசின் கலைமாமணி விருது, மைய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்றவர் இவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியின் முதல்வராகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக கௌரவப் பேராசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அவரது மறைவுச் செய்தி கேட்ட முதல்வர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தி அனுப்பினார்.

மாபெரும் இசை மேதைக்குத் 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

குஞ்சுகளின் எச்சத்திலிருந்து உற்பத்தியாகும் அம்மோனியா வாய்வு வெளியேற வழியில்லாமல் போய் பலவழிகளில் குஞ்சுகளைப் பாதிக்கின்றது. அதனால் காற்றோட்டத்திற்காக மேலே சற்று இடைவெளி விட்டுத் திரைகளை அமைப்பது நல்லது.

வளரும் கோழிப் பராமரிப்பு

பல பண்ணையாளர்கள் வளரும் கோழிகளை எண்டக்குத் தகுந்தாற் போல் தரம் பிரித்து வளர்க்காமல் மொத்தமாக விட்டு விடுகின்றனர். இதனால் கோழிகள் ஒரே சீராக வளராமல் பெரிதும் சிறிதுமாக வளர்கின்றன. இதன் காரணமாகச் சிறிய கோழிகள் தாமதமாக முட்டையிடும் நிலையோ அல்லது முட்டையிடும் பருவத்தையோ அடையாமல் பண்ணையை விட்டு நீக்க வேண்டிய நிலையோ வரக்கூடும். இதைத் தவிர்ப்பதற்கு 8-வது வாரத்தில் ஆர்.டி.வி.கே. தடுப்பு ஊசி போடும் போதும், 16-ஆம் வாரம் இரண்டாவது முறை அலகு வெட்டும் போதும், குஞ்சுகளைத் தரம் பிரித்து வளர்க்க வேண்டும். வளரும் கோழிகளுக்குச் செயற்கை ஒளி தரக்கூடாது. சில பண்ணையாளர்கள் இவ்விஷயத்தில் தவறு செய்யும் போது கோழிகள் முட்டையிடும் பருவத்தில் அண்டித் தள்ளுதல், கொத்திக் கொள்ளுதல் போன்ற பிரச்சினைகளால் அதிகமாகப் பாதிக்கப்படும்.

முட்டையிடும் கோழிப் பராமரிப்பு:

இடவசதி ஒவ்வொரு கோழிக்கும் 2 சதுர அடி அவசியம். இந்த இடவசதியைப் பல பண்ணைகளில் 1.75 சதுர அடியாகக் குறைத்து விடுகின்றனர். இவ்வாறு செய்வது கூடாது. பல பண்ணைகளில் முட்டைப் பானைகளை வைப்பதில்லை. 5 கோழிகளுக்கு ஒரு முட்டைப் பானை விகிதம் வைப்பது மிகவும் அவசியமாகும்.

அடுத்ததாக தீவனம் அளித்தல் பற்றிப் பார்க்கும்பொழுது, பெரும்பாலான பண்ணைகளில் தீவனத் தட்டுகளில் தீவனம் இருப்பதில்லை. தட்டுகளில் தீவனம் எப்பொழுதும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தீவனம் குறைத்து வழங்கப்படுவது நிறையப் பண்ணைகளில் காணப்படுகின்ற குறைபாடாகும். முட்டையிடும் கோழிகளுக்குத் தீவனம் குறைத்து வழங்கப்படக் கூடாது. பண்ணையாளர்கள் பலர் கோழிகள் அதிகமாகத் தீவனம் உட்கொள்கின்றன என்று கூறுகிறார்கள். இதைத் தடுக்க, இரவில் விளக்குகளை அணைக்கும் முன்னால் தீவனத் தட்டில் தீவனம் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். தீவனத்தை அப்படியே இரவில் விட்டுவைப்பதால், எலிகள் தொல்லை பெருகித் தீவனம் விரயமாக வாய்ப்புகள் உண்டாகும்.

நல்ல தரமான தீவனப் பொருட்களை அதிகம் பண்ணைகளில் பயன்படுத்துவது இல்லை. நார்ச்சத்து மிக்க அரிசித் தவிடு, உமி கலந்த தவிடு, ஈரப்பதமுள்ள மற்றும் பூஞ்சைக் காளான் தாக்கிய மக்காச் சோளம், உப்பு அதிகமாக உள்ள கிருமி கலந்த மற்றும் புரதத்தரம் குறைந்த மீன்தூள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். தவிட்டில் நார்ச்சத்து குறைவாகவும், மக்காச் சோளத்தில் ஈரப்பதம் குறைவாகவும், பூஞ்சைக் காளான் தாக்குதல் இல்லாமலும், மீன்தூளில் உப்பு குறைவாகவும், புரதச் சத்து அதிகமாகவும், கிருமிக் கலப்பு இல்லாமலும் இருக்கிற தீவனப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும். தாதுப் பொருட்கள் தரமானதாக இல்லாமல் இருந்தால் வளரும் கோழிகளில் வளர்ச்சி குன்றியும், முட்டையிடும் கோழிகளில் தோல் முட்டைகள் அதிகமாக இடும் நிலையும் ஏற்படுகின்றன. அதனால் நல்ல தரமுள்ள தாதுப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும்.

சொந்தமாகத் தீவனக் கலவை தயாரிக்கும்போது, ஒருமுறை வைட்டமின் AB_2D_3K கலவையாகவும், மறுமுறை தாது உப்பு மற்றும் வைட்டமின் கலந்த (சப்லிவெட் 'எம்' போன்ற) கலவையாகவும் தயாரிக்கிறார்கள். இதனால் தீவனச் செலவு கூடுகிறது. தரமான தாது உப்புகளைப் பயன்படுத்தினால் கோழிகளுக்கு அத்தியாவசியமான வைட்டமின்கள் AB_2D_3 போன்றவற்றை மட்டும் கலந்தால் போதுமானது. இதன் மூலம் தீவனச் செலவைக் குறைக்கலாம்.

சில பண்ணையாளர்கள் குஞ்சுகளுக்கும், வளரும் கோழிகளுக்கும் ஒரே தீவனம் வழங்குகிறார்கள். பருவத்திற்கேற்ற தீவனம் தரப்பட வேண்டும். வளரும் கோழிகளுக்குப் புரதச்சத்து குறைவான தீவனம் தருவது நல்லது. இதனால்' தீவனச் செலவு குறையும். குடிதண்ணீர் பற்றிப் பார்க்கும்போது, குடி தண்ணீர்த் தட்டுகளில் தண்ணீர் இல்லாமல் இருப்பதைச் சில பண்ணைகளில் காண்கிறோம்.

காலையில் டானிக் மருந்துகள் கலந்த தண்ணீர் தந்தவுடன் உடனடியாகத் தட்டுகளில் சாதாரணக் குடிநீரை நிரப்பிவிட வேண்டும். தன்

'பல்லடம், திருப்பூர் வட்டங்கள்'

கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர் பல்லடம் பகுதிகள் இணைந்து பல்லடம் வட்டம் பெரிய அளவில் இருந்து வந்தது. இந்த வட்ட அலுவலகங்கள் திருப்பூரில் இயங்கி வந்தன. பல்லடம் பகுதி மக்கள் அரசாங்க தொடர் பணிகளுக்குத் திருப்பூர் சென்றுவர வேண்டி இருந்தது.

எனவே, பல்லடம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்கள் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு பல்லடம் வட்டத்தைப் பல்லடம், திருப்பூர் ஆகிய இரண்டு வட்டங்களாகப் பிரித்துள்ளது. பல்லடம் வட்டத்தில் பல்லடம், சூலூர், சுல்தான் பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அடங்கும். திருப்பூர் வட்டத்தில் திருப்பூர் நகராட்சி, திருப்பூர், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அடங்கும்.

15-12-1989 அன்று பல்லடம் பச்சாபாளையத்தில் உள்ள புதிய வட்ட அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் கலந்து கொண்டு பல்லடம் வட்டத்தைத் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்.

ணீர் குறைவானால் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து முடிவில் சுத்தமாக முட்டையிடுவது நின்று போகும் நிலையும் ஏற்படலாம். எனவே எப்பொழுதும் கோழிகளுக்குத் தேவையான தண்ணீர், கிருமிகள் அற்ற நல்ல தண்ணீராக இருத்தல் அவசியம்.

பாசி படிந்த தண்ணீர்த் தொட்டியில் உள்ள தண்ணீரைப் பல பண்ணைகளில் உபயோகிக்கிறார்கள். இதைத் தடுக்கத் தண்ணீர் சேமிக்கும் தொட்டியை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒன்றில் தண்ணீரைச் சேமித்தும், மற்றொன்றைப் பிளீச்சிங் பவுடரால் கழுவிச் சுத்தமாகச் சுண்ணாம்பு பூசி உலரவைக்கவும் வேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றிச் செய்வதன் மூலம் நல்ல சுத்தமான தண்ணீரைக் கோழிகளுக்கு அளிக்கலாம்.

பிளீச்சிங் பவுடரை 1,000 லிட்டர் தண்ணீருக்குச் சுமார் 7 கிராம் விகிதம் பயன்படுத்த வேண்டும். தண்ணீர்த் தொட்டியை மூடி வைப்பதின் மூலம் தண்ணீர் அசுத்தப்படாமலும் பாசி வளர்வதற்குத் தேவையான சூரிய ஒளியையும் கட்டுப்படுத்தலாம்; தண்ணீர் கொட்டுவதைத் தவிர்ப்பதற்காகப் பல பண்ணையாளர்கள் தட்டுகளை உயரத்தில் அமைக்கிறார்கள். இதனால் கோழிகளுக்குத் தண்ணீர் சரியான அளவு கிடைக்காமல் போகிறது. தண்ணீர்த் தட்டுகளைச் சரியான உயரத்தில் சரியான எண்ணிக்கையில் அமைத்தல் அவசியம்.

நோய்த்தடுப்பு மற்றும் அலகு வெட்டுதல்

முதலாவதாக மருந்துகளைக் கண்டபடி ஒழுங்குமுறையற்ற முறையில் தருவதைத் தவிர்க்க வேண்டும். மருந்துகளைச் சரியான முறையில் தருதல் அவசியம். ஒரு சிலர், அருகில் உள்ள பண்ணையாளர் உபயோகிக்கிறார்கள் என்று தாங்களும் தேவையின்றிச் சில மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். இதைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். மருந்துகளை நிபுணர்களின் அறிவுரைப்படி தரவேண்டும். பூச்சி நீக்குதலைச் சரியான கால இடைவெளியில் காலம் தவறாமல் மேற்கொள்ளுதல் மிகவும் அவசியம். மற்றும் நோய்ச்சிகிச்சைக்காகத் தரப்படும் மருந்து கலந்த தண்ணீரைச் சிலர் ஒரு நேரம் மட்டும் தந்து மற்ற நேரங்களில் வெறும் தண்ணீர் தருகிறார்கள். இது முற்றிலும் தவறானது. நோய்ச் சிகிச்சைக் காலம் முடியும் வரை மருந்து கலந்த தண்ணீர் மட்டுமே தரப்பட வேண்டும்.

பல பண்ணைகளில் அட்டவணைப்படி, தடுப்பூசி போடுவதில்லை. தடுப்பூசி சரியான காலத்தில் தவறாமல் போடப்பட வேண்டும். ஒவ்வொரு பண்ணையாளரும் அந்த அந்தப் பகுதிக்கான தடுப்பூசி அட்டவணைகளை வைத்திருத்தல் வேண்டும். மேலும் தடுப்பூசி மருந்து குளிர் உறைநிலை தொடரில் (Cold chain) சரியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதா, அதனுடைய பயன்படுத்தும் காலம் முடிந்து விட்டதா? போன்ற விஷயங்களை, தடுப்பூசிகள் போடும் முன்பு பார்க்க வேண்டியது அவசியம். பின்னர் தடுப்பூசி மருந்துகள் கோழிகளின் எண்ணிக்கைக்கேற்றபடி போதுமான அளவு இருக்கிறதா என்பதை மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

இரண்டாம் முறை, அலகு வெட்டுவதைப் பல பண்ணையாளர்கள் முட்டையிடும் பருவம் வரை செய்வதில்லை. முட்டையிடும் பருவத்தில் அலகு வெட்டுவதால் கோழிகள் சரியான தீவனம் உட்கொள்ளாமல் முட்டையிடுவது தாமதமாகிறது. இதைத் தடுக்க 16-வது வாரத்தில் பண்ணையாளர்கள் கண்டிப்பாக அலகு வெட்டுவது அவசியமாகும்.

பதிவேடு பராமரிப்பு

பெரும்பாலான பண்ணையாளர்கள் பண்ணை பற்றிய பதிவேடுகளைச் சரியான முறையில் பராமரிப்பதில்லை. முட்டை எண்ணிக்கையை நிறையப் பேர் இத்தனை அட்டைகள் என்றும், தீவன அளவை பலர் இத்தனை மூட்டை என்றும் குறிப்பிடுகிறார்கள். இதைப் போல் இல்லாமல் ஒவ்வொரு பண்ணையாளரும் முட்டைகளின் எண்ணிக்கை, தீவன அளவு, கோழிகளின் எண்ணிக்கை, வரவு, செலவு போன்றவற்றைப் பதிவேட்டில் தவறாமல் பதித்தல் வேண்டும். பண்ணையில் நடக்கும் எல்லாச் செயல்களும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா அல்லது எங்கு குறைபாடுகள் உள்ளன என்று ஆய்ந்து அறிந்து, அவற்றைத் தக்க சமயத்தில் களைய, பண்ணைப் பதிவேடுகள் உற்ற துணையாக இருக்கும்.

மேற்கூறிய குறைபாடுகளை நீக்கி, மேலே குறிப்பிட்ட நிவாரணங்களைக் கடைப்பிடித்து வந்தால், கோழிப் பண்ணையின் இலாபத்தைப் பன்மடங்கு பெருக்கலாம்.

TNPSC விளம்பர எண்: 67

தமிழ்நாடு கூட்டுறவுப் பணியில், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 22.1.1990 அன்று மாலை 5.30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (பகிரங்கப்போட்டி-1).

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 2,200 - 75 - 2,800 - 100 - 4,000.

வயது : 1.7.1989 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

தகுதி : The degree of M.A. (Co-operation) or M.Com. with Co-operation as a subject or must have passed the final examination conducted by the Institute of Chartered Accountants.

கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் பதவியைத் தற்காலிகமாக வகிக்கும் நபர்கள் தங்களுக்குப் போதிய வயது மற்றும் கல்வித் தகுதி இல்லையெனினும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவர்கள் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால் சம்பந் தப்பட்ட விதிகளில் இருந்து அரசினால் விலக்கு அளிக்கப்படுவார்கள்.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப் பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற் குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற் காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியி லிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாள ருக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) உடன், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மேற்கூறிய வற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2743/MS/89/ad-burea/3032

கோழிப் பண்ணைகளில் காணப்படும் குறைகளும் நிவாரணங்களும்

டாக்டர் பெ. ரெங்கா ரெட்டி,
இணைப் பேராசிரியர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம்,
நாமக்கல்.

கோழிப் பண்ணைகளில் பரவலாகக் காணப்படும் சில குறைபாடுகள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை, நாம் அடையாளம் கண்டு அவ்வப்போது களைவதனால், பண்ணையாளர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்.

பண்ணையில் குறைபாடுகள் எனப் பார்க்கும்போது, கோழி வீடுகள் அமைப்பதில் தொடங்கி, உபகரணங்கள் உபயோகிப்பதிலும் குஞ்சுகளை வளர்க்கும்போதும், முட்டைக் கோழிகளைப் பராமரிக்கும் போதும் கையாளப்படும் முறைகள், தீவனம் அளிக்கும் முறைகள், அவற்றின் தரக்கட்டுப்பாடு, குடிநீரின் தரம் மற்றும் தேவையான அளவு அவ்வப்போது தரும் மருந்துகள், தேவையான தடுப்பூசிகள் ஆகியவற்றுடன் பண்ணைப் பதிவேடுகளைக் கவனமாக எழுதுதல் வரையில் நாம் கவனித்துக் களைய வேண்டிய குறைகள் அதிகம் காணப்படுகின்றன.

முதலில் வீட்டமைப்பைப் பற்றிப் பார்க்கும்போது, பல பண்ணைகளில் மண் தரையை அப்படியே வைத்துப் பண்ணையை அமைக்கின்றனர். இதனால் நோய்க் கிருமிகள் எளிதாகப் பரவுவதுடன் எலி, பெருச்சாளிகளின் தொல்லைகளும் அதிகமாகின்றன. மேலும் கோழிகள் கழித்த பிறகு சுத்தம் செய்வதும் கடினமாகிறது.

எனவே, பண்ணைகளில் தரையைச் சிமெண்ட் அல்லது சதுரக்கல் கொண்டு அமைப்பது நல்லது. இவ்வாறு செய்வதன் மூலம் எலித் தொல்லைகளைத் தவிர்க்கலாம். மேலும் தரையைச் சுத்தம் செய்தலும் எளிதாகிறது. உபகரணங்களை எடுத்துக் கொண்டால் விலை குறைவு என்ற காரணத்தினால் பண்ணையாளர்கள் பலர் மண்ணாலான தீவனச் சட்டிகளை உபயோகிக்கின்றனர்.

மண் சட்டிகளால் தீவனங்கள் விரயமாவதுடன், சட்டிகள் அடிக்கடி உடையவும் வாய்ப்பு உண்டு. இதனால் கோழிகளுக்குச் சரியான அளவு தீவனம் கிடைக்காமல் போய் முட்டை உற்பத்தியும் குறைகிறது. இக்குறையைத் தவிர்க்க, துருப்பிடிக்காத இரும்புத் தகட்டினாலான அதாவது (C.I. Sheet) நீளத் தீவனத் தட்டுகள் அல்லது வட்டத் தீவனத் தட்டுகளைப் பயன்படுத்தலாம். மேலும் தீவனத் தட்டுகள், தண்ணீர்த் தட்டுகளின் எண்ணிக்கையைக் கவனிக்கும்போது, பல பண்ணைகளில் தேவைக்குக் குறைவாக இருப்பதைக் காணமுடிகிறது. 8 அடி நீளத் தட்டுகள் 40 கோழிகளுக்கு ஒன்று என்ற விகிதத்திலும், 18 அங்குல வட்ட வடிவமுள்ள தட்டுகள் 20 கோழிகளுக்கு ஒன்று என்ற விகிதத்திலும் பயன்படுத்தப் படவேண்டும். மேலும் கிரில்லுடன் கூடிய பிளாஸ்டிக் தொட்டிகள் 50 கோழிகளுக்கு 1 வீதம் அளிக்க வேண்டும்.

குஞ்சு பராமரிப்பு முறைகள்:

நிறையப் பண்ணைகளில் ஆயிரக் கணக்கான குஞ்சுகளை மொத்தமாக வைத்து வெப்பமூட்டிப் பராமரிக்கிறார்கள். குஞ்சுகளைச் சிறுசிறு குழுக்களாகப் பிரித்து வெப்பமூட்டிப் பராமரித்தல் நல்லது. ஒவ்வொரு குழுவிலும் 200 முதல் 250 குஞ்சுகள் வரை இருக்கலாம்.

செயற்கை முறையில் வெப்பமூட்டும்போது சாதாரண பல்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நவீன அகச்சிவப்புக் கதிர் பல்புகள் (Infra Red Bulb) மூலம் வெப்பமளித்தல் மிகச் சிறந்தது. பல பண்ணைகளில் வெப்பம் குஞ்சுகளுக்கு அளவுக்கு அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ அளிக்கப்படுகிறது. இவ்வாறில்லாமல் சரியான அளவில் வெப்பம் தரப்படுவது அவசியம்.

காற்றுத் தடுப்புக்காகத் திரைகளைக் கட்டும்போது, பல பண்ணைகளில் முழுவதுமாக மூடிவிடுகிறார்கள். இதனால் பண்ணைக்குள்



அனைத்து மாநிலக் கைவினைப் பொருட்களின் கண்காட்சியை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தொடங்கி வைத்து, கண்காட்சியினைப் பார்வையிட்டார். (22-12-'89)

ஒதுரில் நடைபெற்ற மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். (20-12-'89)

தொல்லை தரும் தெள்ளுப்பூச்சி

படம் - 1

படம் - 2

படம் - 3

பூனைத் தெள்ளுப் பூச்சி என்றால் என்ன?

'டினாசெப்பாலிடிஸ் பெலிஸ்' எனும் இந்தப் பூனைத் தெள்ளுப் பூச்சி உலகெங்கிலும் காணப்படுகிறது. இது மனிதனையும் மிருகங்களையும் தாக்கி இரத்தம் உறிஞ்சும் தெள்ளுப்பூச்சிகளில் மிக முக்கியமானது.

பூனைத் தெள்ளுப்பூச்சி என்றாலும், இது சர்வசாதாரணமாக மனிதனையும், மாடு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, குதிரை, நாய், முயல், கீரி, எலி இனம் மற்றும் காட்டு மிருகங்களான மான், நரி, ஓநாய், கழுதைப்புலி, கரடி, சிறுத்தை, புலி போன்ற மிருகங்களையும் எளிதில் தாக்கி இரத்தத்தை உறிஞ்சும் தன்மை வாய்ந்தது. கோழிகளையும், பறவைகளையும் கூட இது தாக்கும்.

தெள்ளுப்பூச்சி இறக்கையற்ற பூச்சியினத்தைச் சேர்ந்ததால், இது வெட்டுக்கிளி போல் குதித்து ஓடும். உடல் பக்கவாட்டில் ஒடுக்கப்பட்டு தலையில் சீப்பு போன்ற முட்களுடன் காணப்படும் (படம் 1). பருமனில், இது நெருப்புக்குச்சியின் தலையள்வு இருக்கும். பெண் இனத்தைக் காட்டிலும் ஆண் இனம் சிறியதாக இருக்கும். கொசு போன்று அல்லாமல், ஆணும், பெண்ணும் இரத்தத்தை உறிஞ்சி, பல மாதங்கள் உயிர் வாழும். ஒரு முறை இரத்தத்தை உறிஞ்சிய தெள்ளுப்பூச்சி தவறாமல் பல முறை இரத்தம் உறிஞ்சினால்தான் பல மாதங்கள்

படமும் செய்தியும்

தந்தை பெரியார் நினைவு நாளையொட்டி சென்னை பெரியார் திடலில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (24-12-'89)

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (24-12-'89)

தமிழ்நாடு மாநிலச் சுற்றுப்புறச் சூழல் நலக் குழுவின் 18-ஆவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது (26-12-'89)

தமிழ்நாடு மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் 50-வது கூட்டம் மாநிலத் தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. (26-12-'89)

உயிர் வாழ முடியும். இல்லையேல் அவற்றிற்கு ஆயுள் குறைவு. ஆனால் கூட்டுப்புழுவிலிருந்து வெளிவந்த தெள்ளுப்பூச்சி பல வாரங்கள் வரை பட்டினியுடன் மிருகங்கள் விட்டுச் சென்ற இடங்களிலும் மனித சஞ்சாரமற்ற வீடுகளிலும் காணப்படும்.

பெண் தெள்ளுப்பூச்சி ஒரே சமயத்தில் 20 முட்டைகளையும், தனது வாழ்க்கையில் 400 முதல் 500 முட்டைகளையும் மிருகங்களின் குடில்களிலும், படுக்கை விரிப்புகளிலும், நாய், பூனை போன்றவற்றின் உரோமங்களிலும் இடுகிறது. இப்படியிடப்பட்ட முட்டைகள் உரோமத்திலிருந்து உருண்டு, தரையிலோ, விரிக்கப்பட்ட கோணி, தரை விரிப்புகளிலோ அல்லது மிருகங்களின் தொழுவங்களிலோ விழுகின்றன. முட்டைகள் சர்க்கரைத் தூள் போன்று காணப்படும். இரண்டு நாட்களில் முதல் இடைநிலைப்புழுக்கள் வெளி வருகின்றன. இவை, தரை அல்லது விரிப்புகளில் காணப்படும் கழிவுப் பொருட்களையும், உறைந்த இரத்தத் துளிகளையும் ஆகாரமாக உட்கொண்டு பத்து நாட்களில் மூன்று இடைநிலைப் புழுப்பருவங்களையும் பூர்த்தி செய்து, கூட்டுப்புழுவாக மாறி, கூட்டுப்புழு நிலையில் 15 நாட்கள் கழித்து, 25 முதல் 28 நாட்களில் தெள்ளுப்பூச்சிகளாக மாறுகின்றன. கருவுற்ற சூழ்நிலையில் இருக்கும் மிருகங்களிலும், ஈன்ற கன்றுகளிலும் இரத்தத்தின் ஹார்மோன் நிலை அதிகம் இருப்பதால், இத்தெள்ளுப்பூச்சிகள் அவற்றில் அதிகமாகக் காணப்படும். காரணம், இவை இரத்தத்தில் காணப்படும் ஹார்மோன்களைத் தங்களது இனவிருத்திக்கு உபயோகித்துக் கொள்கின்றன.

படம் - 4

பெண் தெள்ளுப்பூச்சி தன் தேவைக்கு அதிகமாக இரத்தத்தை உறிஞ்சி ஆசனவாய் வழியாக (படம் 2) வெளியே தள்ளுவதால், இரத்தம் சிறு சிறு துளிகளாகக்கீழே விழுந்து, உறைந்து விடுகிறது. உறைந்த இரத்தத்துளி இவற்றின் இடைநிலைப் புழுக்களுக்கு சிறந்த ஆகாரமாகவும், இனவிருத்தி செய்வதற்கு ஏற்றதாகவும் அமைகிறது.

தெள்ளுப்பூச்சிகள் திரும்பத் திரும்ப (படம் 3) பலமுறை கடித்துத் துன்புறுத்துகின்றன. கடிக்கப்பட்ட இடங்களில் தோல் தடித்து, கொப்புளங்கள் உண்டாகி (படம் 4) பல நாட்கள் நீடிக்கின்றன. இரத்தம் சிறு சிறு துளிகளாக வெளியேறுவதால், இரத்தசோகையும் ஏற்படுகிறது. கடிக்கப்பட்ட இடத்தில் அதிக நமச்சல் ஏற்படுவதால், மிருகங்கள் அவ்விடத்தைக் கடித்து, உரோமத்தைப் பிய்த்து விடுவதால், தோல் திட்டுத் திட்டாக உரோமமின்றிக் காணப்படும். நாய், பூனை போன்ற மிருகங்களில் காணப்படும் ஒரு வகை நாடாப் புழு பரவுவதற்கு இவ்வகைத் தெள்ளுப் பூச்சிகள் காரணமாய் இருக்கின்றன. சிறுவர் தெள்ளுப்பூச்சிகள் காணப்படும் நாய், பூனைக் குட்டிகளுடன் விளையாடும்பொழுது, தற்செயலாக இவ்வகைத் தெள்ளுப்பூச்சிகளை உட்கொண்டால், நாடாப் பூச்சிகள் சிறுவர் குடலில் முதுநிலை அடைய வாய்ப்பு உள்ளது. ஒரு தெள்ளுப்பூச்சியின் உடலில் உண்டாகும் நாடாப்பூச்சியின் இடைநிலைப் பருவத்தைப் படத்தில் (படம் 5) காணலாம்.

வீடுகளில் காணப்படும் மிருகங்களின் படுக்கை விரிப்புகளான கோணி, கம்பளங்கள், மிதியடி போன்றவற்றை வெய்யிலில் காயப் போடுவதால் தெள்ளுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். மிருகங்கள், அவற்றின் தொழுவங்கள் போன்ற குடியிருப்புகளில் 0.25 முதல் 0.5 சதம் வரை மலேத்தியான் சுமுத்தியான் போன்ற பூச்சி கொல்லிகளைத் தெளிப்பதாலும் அவற்றைக் கட்டுப்படுத்தலாம். பூனைகளின் தோல் மிருதுவானதால், மேற்கூறிய பூச்சி கொல்லிகளை அவற்றின் மீது பயன்படுத்துதல் கூடாது. மேலும் விவரங்களுக்குக் கால்நடை மருத்துவரை அணுகலாம்.

என்.ஏ. ஜோசப்,
ஒட்டுண்ணியியல் துறை
தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம்.

படம் - 5

நூல் நயம்

சர்க்கரை மணி (பாகம்-1)

ஆசிரியர்: ஏ. சுந்தரம் எம்.டி.
உதவிப் பேராசிரியர்
நீரிழிவுநோய் மருத்துவத் துறை
சென்னை மருத்துவக் கல்லூரி
சென்னை-3.
வெளியீடு: சர்க்கரை நோய்க் கல்வி வெளியீடு
பக்கம்: 212 (விலை குறிக்கப்படவில்லை)

சர்க்கரை நோய் எனப்படும் நீரிழிவுநோய் குறித்த எல்லாத் தகவலும் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. நோய் உள்ளவர்கள் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுவதற்குரிய வழிவகைகள் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு உள்ளன.

சிறுநீர்ப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை ஆகியவை விளக்கப் பட்டுள்ளன. சர்க்கரை நோயாளிகள் பயன்படுத்தும் இன்சுலின் ஊசி குறித்தும், அதனை டாக்டர்களின் உதவியின்றி நோயாளிகள் தாமே போட்டுக் கொள்ளும் முறை குறித்தும் நூலாசிரியர் விவரித்துள்ளார். இந்த வகையில் இந்நூல் செய்முறை (practical) நூலாகவே விளங்குகிறது.

சர்க்கரை நோயாளிகளின் உணவு, அவர்கள் செய்ய வேண்டிய உடற் பயிற்சிகள் ஆகியவை சின்னஞ்சிறு குழந்தைக்கும் புரியும் வண்ணம் தெளிவாக்கப்பட்டுள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கெனத் தனியாக உணவு சமைக்கப்பட வேண்டியதில்லை என்பதை நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு முத்திரை குத்தப்படுவதால் நோயாளிகள் மனம் வருத்தமுறுவர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நூல் முழுதும் கேள்வி-பதில் பகுதியாக இருப்பதால் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. நடை எளிமையாக இருப்பது ஒரு சிறப்பம்சம் ஆகும். ஏராளமான வரை படங்கள்-வண்ணப் படங்கள் நூலை அணி செய்கின்றன.

-தமிழ்ப்பித்தன்.

'பாவாணர்'

ஆசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்
வெளியீடு: பாவாணர் பதிப்பகம்,
மே/பா. திருக்குறள் மன்றம்,
தாமோதர முதலியார் சாலை
பெங்களூர்-560008.

விலை: ரூ.30 பக்கம்: 348

மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் இது. பாவாணர் பல்வேறு காலங்களில் பிறர்க்கு எழுதிய கடிதங்களிலிருந்தும் அவர்தம் நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்ட செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவை படிப்போர்க்கு வெறுந் தொகுப்பாக மட்டும் தோன்றாமல் சுவையான விருந்தாகவும் அமைந்துள்ளன.

பாவாணர் வாழ்நாள் முழுதும் வறுமையிலே வாழ்ந்தாலும், இறுதி மூச்சு வரை தனித்தமிழ்க் கொள்கையிலிருந்து சிறிதும் வழுவாமல், தம் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்தார் என்பதைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

பாவாணர் கல்வியில் புலமை பெற்றவர் மட்டுமல்லர், பிறர்க்கு இரங்கும் தன்மையுடையவர், என்பதும், செய்நன்றி மறவாதவர் என்பதும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளன.

பாவாணரின் இயல்புகள் மட்டுமன்றி அவரது அங்க அமைப்புகளும் ஆசிரியரால் வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும்போது, பாவாணரை நேரிற் காண்பது போலவே தோன்றுகிறது.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய பாவாணர் கருத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. 'பல்சுவைப் பாகு', 'நெருங்கலும் நிகழ்தலும்' ஆகிய தலைப்புகளில் வெளியிடப் பெற்றிருக்கும் பல செய்திகள் குறிப்பிடத் தக்கவை. இன்னும் எத்துணை எத்துணையோ செய்திகளைச் சுவைபட ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது. பாவாணரின் தோற்றம் முதல் மறைவு வரை ஒவ்வொரு காலத்திலும் நிகழ்ந்த செய்திகளை நன்கு ஆய்ந்து எழுதியுள்ளார் ஆசிரியர். இது ஓர் அரும்பெரும் முயற்சியாகும்.

-தே. மணி

100 விஞ்ஞான வினாக்களுக்கு விடைகள்

ஆசிரியர் : ராஜப்பா குருசாமி,
வெளியீடு: தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ-19, டர்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு,
நந்தனம்,
சென்னை-600 035.

விலை:ரூ.36 பக்கம்:379

அன்றாட வாழ்க்கையில், அறிவியலின் தேவை இன்று மிக இன்றியமையாததாகிவிட்டது; அதன் அற்புத ஆற்றல்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துவதுமட்டுமல்ல, ஆக்கப்பணிகளுக்கும் பெருமளவு பயன்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் விளங்க வைப்பதே இந்த நூல்.

பூமியின் வயது என்ன? என்பதிலிருந்து, வைட்டமின்கள் என்றால் என்ன? என்பது வரை நூறு விஞ்ஞான வினாக்களுக்குத் தக்க விடையளிக்கிறது இந்நூல்.

பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும்கூட இந்நூலைப் படித்து, அறிவியல் பற்றிய சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்திய விடுதலை இயக்க வரலாறு

ஆசிரியர் : ஆர். வேங்கடராமன்
வெளியீடு: வண்ணச்சுடர் பதிப்பகம்,
2, இ, பிளாக்,
மூன்றாவது மாடி,
ஜெமினி பார்சன்
அபார்ட்மெண்ட்ஸ்,
சென்னை-600 006.

விலை:ரூ.25 பக்கம்:230

இந்திய விடுதலை தியாகத்தால் விளைந்த வரலாறாகும். அண்ணல் காந்தியடிகள் தலைமையில் இந்தத் தேசமே வீறுகொண்டெழுந்தது - வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த அந்த வீர வரலாற்றை விவரிக்கிறது இந்நூல்.

இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் என்பதிலிருந்து தொடங்கி, முதல் இந்தியச் சுதந்திரப் போர், இந்திய தேசிய காங்கிரஸ், உப்பு சத்தியாக்கிரகம், இந்திய தேசிய இராணுவ அமைப்பு முதலான வரலாறுகள் இந்நூலில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்திய விடுதலை வரலாற்றை ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக இளைய தலைமுறை இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியது கடமையாகும்.

—பி.வி. கிரி

நாடகச் சோலை

ஆசிரியர் : மா. அய்யாசாமி,
வெளியீடு: மங்கை இல்லம்,
75-என்.ஜி.ஓ., காலனி
திருவள்ளூர்-602 001,
செங்கை மாவட்டம்.

பக்கம்:140 விலை ரூ.12

இந்திய விடுதலைப் போராட்டத்தினை மையமாகக் கொண்டும், சில சமூகப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்ட ஒன்பது நாடகங்களின் தொகுப்பு நூல் இது.

பள்ளி மாணவர்களுக்கென்றே எழுதப்பட்டவை என்பதால் மட்டுமல்ல; நூலாசிரியர் பள்ளி

ஆசிரியர் என்பதனாலும் அத்தனை நாடகங்களும் எளிய, இனிய நடைத் தமிழில் எழுதப்பட்டுள்ளன.

வானொலி - தொலைக்காட்சி ஆகியவற்றில் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த நாடகங்களை இளஞ் சிறார்கள் படித்தும் பயன்பெறும் நோக்கத்தோடு இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர் உலகம் இதனைப் படித்துப் பயன் பெறலாம்.

எண்ணக் கோலங்கள்:

ஆசிரியர் : கடலூர் பாலன்,
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிமிடெட்,
41-பி. சிட்கோ எஸ்டேட்
சென்னை-98.

பக்கம்:84 விலை ரூ.8

இது ஒரு கவிதை நூல். பல்வேறு தலைப்புகளின்கீழ் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு. அத்தனையும் மரபுக் கவிதைகளும் அல்ல; புதுக்கவிதைகளும் அல்ல. இசைக்கத் தக்கதாக எழுதப்பட்டுள்ள சந்தப் பாடல்கள்.

பாடுபடும் ஏழை மக்களின் உள்ளக்குமுறல் உணர்ச்சிமிக்க சொற்களால் புனையப்பட்டுள்ள முற்போக்கு இலக்கிய நூல் இது.

'மின்னிச் சிவக்குது வானம்
சொல்லத் தடுக்குது நாணம்'

-என்பது போன்ற இயற்கை பற்றிய பாடல்களும் உண்டு. பாடும் கலை வல்லார் படித்து மகிழலாம்.

-இல. இராசேந்திரன்

★ விஞ்ஞானம் - அறிவு - தன்மான உணர்ச்சி இவையின்றேல், பட்டம் பல பெற்றாலும், பணம் பல கோடி சேர்த்தாலும் பயன் இல்லை.

★ அமைதி உங்களைத் தாமதமாக-ஆனால் நிச்சயமாக வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும்.

மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப் பூண்டு வைத்தியம்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்,
வெளியீடு: தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ., பெரியார் பாதை
(மேற்கு)
சூளைமேடு
சென்னை-600094.

விலை:8.00 பக்கம்:80.

மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றின் வகைகள், இவைபற்றிய சரித்திரகால நிகழ்ச்சிகள், இவற்றின் சக்திகள், மருத்துவ குணங்கள் ஆகியவை மிக விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

என்னென்ன நோய்களுக்கு இவற்றைப் பயன்படுத்தி என்னென்ன சிகிச்சைகள் செய்யலாம் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் இவற்றிற்கு இத்தனை மகத்துவமா? என்று வியக்க வைக்கிறது இந்நூல்.

-என். குமாரசாமி

வரப் பெற்றோம்

கீழ்க்காணும் நான்கு நூல்கள் **காந்திய இலக்கியச் சங்கம்,** தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, (மதுரை-625 020) வெளியீடுகள்.

1. கீதைக் கதைகள்:

ஆசிரியர்: வீ. செல்வராஜ்,

விலை:ரூ.2 பக்கம்:44

2. எதை எவ்வளவு உண்பது?

ஆசிரியர்:
டாக்டர் எச்.வி. மென்கெல்.

விலை:50 காசு பக்கம்:10

3. நீங்கள் அமிலத் தன்மை உடையவர்களா?

ஆசிரியர்:
டாக்டர் எச்.வி. மென்கெல்.

விலை:50 காசு பக்கம்:8

4. உண்ணா நோன்பு:

ஆசிரியர்: சா. நாகலிங்கம்

விலை:ரூ.2 பக்கம்:1(

பயன் அடைந்தோர் பகர்வன

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

அற்புதமான திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 11-8-89-இல் மானாமதுரைக்குச் சென்றிருந்தபோது பத்தரைக்கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப் பட்டன. அதன் மூலம் பலன் பெற்ற நூற்றுக்கணக்கான மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சாரப் போற்றினர்; நாவார வாழ்த்தினர்.

அதிலும் குறிப்பாக - மகளிர் நலத்திட்டங்களால் பயன்பெற்ற தாய்மார்கள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நலம் பெற்றிருக்கிறார்கள்;மனம் மகிழ்ந் திருக்கின்றார்கள்.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் இன்று ஏராளமான தாய்மார்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர், மானாமதுரையைச் சேர்ந்தவரான திருமதி பி. நாகரெத்தினம். அற்புதமான அத்திட்டம் பற்றி அவர் கூறியது இது:

"ஏழை எளிய குடும்பத்துப் பெண்மணிகளுக்கு நிதியுதவும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் மிகவும்அற்புதமான திட்டமாகும். மானாமதுரை பட்டரைத் தெருவில், 3-பி எண்ணுள்ள வீட்டில் வசித்து வருபவள் நான். எனக்கு முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தது. இரண்டாம் முறை கருத்தரித்திருந்த நான் அந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தேன். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவரான என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். ஆகையால் அந்த நிதி, பிரசவ - காலத்தில் எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது.

இரண்டு குழந்தையோடு நான் குடும்பக்கட்டுப்பாடும் செய்து கொண்டுவிட்டேன். என்போன்ற ஏழைக் குடும்பத்துப் பெண்களுக்கு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் மூலம், பேருதவி புரிந்து வரும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்!''

-துரை. தாமரைச் செல்வம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

TNPSC Advt No 68

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்காக 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வு.

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்கான அடுத்த நுழைவுத் தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கிறது. இத்தேர்வு நடத்தப்பெறும் இடங்களில் சென்னையும் ஒன்றாகும். இத்தேர்வு எழுத்து மூலத்தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்து மூலத்தேர்வு, ஆங்கிலம், கணக்கு, பொது அறிவு ஆகிய மூன்று தாள்கள் கொண்டது. கணக்குத்தாள் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்பட வேண்டும். பொது அறிவுத்தாள் இந்தியிலோ, வட்டார மொழிகளில் (Regional languages) எவையேனும் ஒன்றிலோ விடையளிக்கப்படலாம். நேர்முகத்தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை ஆகியவற்றை ஆராய்வதாக இருக்கும்.

விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ் நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 1.7.1990 அன்று 12 வயது நிரம்பியவராகவும் 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் ஏற்புப் பெற்ற பள்ளியில் (Recognised School) மேற்குறிப்பிட்ட இராணுவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது ஏழாம் வகுப்பு தேறியவராக இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு 8.1.1990 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

மேற்கொண்டு முழு விவரங்கள், மாதிரி வினாத்தாட்கள், விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றை தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

DIPR/2744/MS/89/MAA

திருவூர்த் திருக்கோயில்

சி. வசந்தி
அகழ்வாய்வாளர்
சென்னை.



சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் திருவள்ளூர் செல்லும் வழியில் கூவம் ஆற்றின் தென்கரையில் திருவூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் பாழடைந்த, ஆனால் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன்கோயில் உள்ளது. இந்த கோயிலின் கட்டட அமைப்பு பிற்காலப் பாண்டியரின் (கி.பி.13-ஆம் நூற்றாண்டு) கலைப்பணியினை ஒத்துள்ளது. இங்கு காணப்படும் கல்வெட்டுகளின் மூலமும் இக்கூற்று மெய்ப்பிக்கப்படுகின்றது.

இக்கோயிலில் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. இவை முறையே முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன், தெலுங்கு சோழ மன்னன் விஜய கண்ட கோபாலன் மற்றும் விஜய நகர அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

சோழ மன்னர்கள் வலிமை குன்றிய நேரத்தில் தெற்கே பாண்டியர்கள் தம் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-1284) தமிழகத்தின் வட எல்லையான வேங்கடம் வரை சென்று தம் பேரரசை விரிவுபடுத்தினான். அப்போது பல கோயில்களை எழுப்பிச் சென்றுள்ளான். இத்தகைய கோயில்களில் ஒன்றுதான் திருவூரில் உள்ள சிவன் கோயிலாகும். கி.பி. 1261-ஆம் ஆண்டு, முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டில் திருவூர்க் கோயில் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. இதனைச் செய்வித்தவன் ஒழுகரை எனப்படும் குலோத்துங்க நல்லூரைச் சேர்ந்த திருவண்ணாமலை உடையான். இதே மன்னனின் 18-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1268) ஒழுகரை வணிகன் பெரிய ஆண்டவன் இக்கோயிலுக்குத் தேவதானமாக நிலமளித்த செய்தியும் அறியப்படுகிறது.

தெலுங்கு அரசன், விஜயகண்ட கோபாலனின் 18-ஆம் ஆட்சியாண்டில், இக்கோயில் கணக்குளை நேர் செய்தபோது, அயத்தூர் என்ற பழைய தேவதான கிராமம் கணக்கில் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைச் சீர் செய்தபோது கிடைத்த வருவாயைக் கொண்டு சித்திரை மாதத்தில் விழா எடுக்கப்பட்டது. இறைவன் ரிஷ்யசிங்கீஸ்வரர் எனவும், இவ்வூர் பெருமுளையூர் (தற்போது பெருமாள்பட்டு எனப்படுகிறது) என்னும் உலகளந்த சோழச் சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பகுதியாக ஈக்காடு கோட்டத்தில் இருந்ததும் அறியப்படுகிறது.

கோயில் நுழைவாயிலில் உள்ள விஜயநகர அரசர் சளுவ மன்னன் திம்மைய தேவர் கி.பி. 1502-இல் தமக்கு முன்னர் ஆண்ட திப்பைய தேவரின் நினைவாக அளித்த கொடை பற்றியும், கி.பி. 1519-ஆம் ஆண்டு கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டில், இம்மன்னனின் பிரதானியும், திருவூர் மக்களும் சேர்ந்து அளித்த 6 பொன், திருவூரின் அருகில் உள்ள வரதராஜன்பட்டு, மகாமண்டல புருஷன்பட்டு ஆகிய கிராமங்களிலிருந்து, பெறப்பட்ட நீர் கூலி என்ற தகவல்களையும் இவ்வூர்க் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. கிருஷ்ணதேவராயரின் காலத்தில், இவவூர்க் கோயிலின் பரிவாரத்தார் குடியிருக்க, கிராம மக்களிடமிருந்து நிலம் பெறப்பட்டது. விஜயநகர அரவீடு அரசர் வெங்கடாத்திரியின் காலத்தில், கரியமாணிக்கப் பெருமானுக்கு அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றியும் அறிய முடிகிறது.

கருவறை முகமுனை கி.பி.14-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட செய்தியும், அட்டகபிள்ளையார் என வழங்கப்பட்ட பிள்ளையாருக்கு அளிக்கப்பட்ட நிவந்தம், எல்லை அம்மன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட ஸ்ரீநகர தோட்டம் போன்ற பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகள் இவ்வூர் பற்றி நாம் அறியச் செய்பவை.

இக்கோயிலின் அமைப்பை நோக்கும்போது கருவறை கிழக்கு நோக்கி உள்ளது. கோபுர நுழைவாயில் பழுதடைந்துள்ளது. கோபுரத்தை அடுத்து மகா மண்டபமும் முன்மண்டபமும் உள்ளன. மகா மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இம்மண்டபங்களில் துர்க்கை, பைரவர், தலையில்லா) விஷ்ணு போன்ற உதிரிச் சிற்பங்களும் உள்ளன.

இவ்வூரில் கூவம் ஆற்றின் கரையில் மேற்குப் புறமுள்ள ஒரு சிறிய பிள்ளையார் கோயில் ; கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டகப் பிள்ளையாராக இருத்தல் வேண்டும். கல்வெட்டு குறிப்பிடும் எல்லையம்மன் தற்போது ஒகரம்மன் என வழங்கப்பட்டு இவ்வூரின் எல்லையில் தென் மேற்கில் உள்ளது.

தெருமுனையில் இருவர் ஒரு வெள்ளைத் துணியைப் பிடித்திருப்பர். பக்க மேளக்காரர் பக்கத்தில் அமர்ந்து பாடுவர். இருவர் இரு பந்தங்களைத் தூக்கிப் பிடித்திருப்பர். நடிகன் உள்ளே இருந்து பாடிக்கொண்டே திரையைத்தள்ளிக் கொண்டு வந்து பாட்டைத் தொடர்ந்து ஆடத் தொடங்குவான். கட்டியங்காரன் திரையால் முகத்தை மறைப்பதும் மூடுவதுமாகச் . சிறிது நேரம் நாடகம் பார்ப்பவருடன் கண்ணாமூச்சி விளையாடிய பின்னரே திரையை ஒதுக்கிவிட்டு வருவான்.

பாடலின் ஒரு வரியை நடிகன் பாடியதும் பக்கப் பாடகர் அதையே திருப்பிப் பாடுவர். நடிகன் ஆடுவான். இவ்வாறு கூத்து நடந்தேறும். புராண இதிகாசக் கதைகளையே நடிப்பதனால் அவை மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அரிதாரம், செந்தூரம், கரி ஆகியவற்றைக் கொண்டு ஒப்பனை செய்வர். அத்திப்பால் கொண்டு மீசை, தாடியை ஒட்டுவர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் நடைபெறும் தெருக்கூத்துகளை வடக்கத்தி நாடகம், தெற்கத்தி நாடகம் என இருவகையில் பிரிக்கலாம். இவை கூத்துகள் நடைபெறும் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளாகும். மாவட்டத்தின் தென்பகுதிகளில் நடைபெறும் தெற்கத்தி நாடகங்களில் இராமாயணம் தொடர்பான நாடகங்களும், அரிச்சந்திரா, கோவலன் கதை போன்ற நாடகங்களும் பெரும்பாலும் நடத்தப் பெறுகின்றன. வளமான பகுதிகளில் இக்கூத்து நடைபெறும். மாவட்டத்தின் வடபகுதிகளில் நடைபெறும் வடக்கத்தி நாடகங்கள் பெரும்பாலும் பாரதக் கதை களைக் கொண்டு அமையும். மிகச் சிறுபான்மையில் வேறு சில புராணக் கதைகளும் கூத்தாக நடத்தப் பெறும். இந்த நாடகங்களைக் கட்டை கட்டி ஆடுதல், கட்டாமல் ஆடுதல் என இரண்டாகப் பிரிப்பர். கட்டை என்று கூறுவது மரக் கட்டையிலான சில அணிகளையே ஆகும். புஜக் கட்டை, மார்பதக்கம், காதுக்கட்டை, கிரீடம் அவற்றில் முக்கியமானவை. இவை கனமில்லாத கலியாண முருங்கை என்னும் ஒரு வகை மரத்தால் செய்யப் பெறுகிறது என்பதை,

'கண்ணால முருங்கைக் கட்டை
கண்ணாடி பளபளக்க...'

என்னும் கூத்துப் பாடலால் அறியலாம்.

இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் (பட்டிகோலா) வடமோடி, தென்மோடிஎன்று இரு வகையான கூத்துகள் நாட்டுப்புற மக்களால் நடத்தப் பெறுகின்றன. தென்மோடி தமிழ் அமைப்பும் வடமோடி தெலுங்கு அமைப்பும் கொண்ட கூத்துகளை நடத்துவன. முன்னதில் காதல், மணம் ஆகிய காட்சிகளும், அடுத்ததில் வீரம், வெற்றி ஆகிய உணர்ச்சிகளும் நிறைந்து காணப் பெறும். ஒன்று அகப்பொருளும் மற்றது புறப் பொருளும் கொண்டிருப்பதைக் கண்டு உணரலாம். தமயந்தி விலாசம், கண்டி நாடகம், இராம நாடகம், ஆரவல்லி சூரவல்லி நாடகம், அலங்காரரூபன் நாடகம் ஆகியவை நடத்தப் பெறும்.

விலாசம் நடப்பதற்குரிய மேடை, வட்ட அமைப்பில் ஒரு முழம் உயரத்தில் அமைக்கப் பெறும். மக்கள் நாலுபக்கம் அமர்ந்து பார்ப்பர். கூட்ட நடனம் இதில் இருக்கும். நாடகம் என்னும் பெயரில் நடத்தப் பெறுவதற்கான அரங்கம் சதுரமாக இருக்கும். பரதநாட்டியமும் இடம் பெறும். ஒரு வெள்ளைத் துணி திரையாகத் தொங்கவிடப் பெறும். இதனை 'நாட்டுக்கூத்து' என்றும் கூறுவர்.

தெருக்கூத்தில் சண்டை, கொலைக் காட்சிகள் குறைவு. அவை வருவதாயின், பாடல்கள் மூலம் மறைத்துக் காட்டிவிடுவர். மக்கள் பாடலைக் கேட்டுப் புரிந்து கொள்வர். சாலரா அல்லது தாளம், மிருதங்கம் ஆகியவற்றைத் தட்டிப் பக்கப் பாட்டுப் பாடுவர்.

வரவரத் தெருகூத்தின் மதிப்பு குறைந்து கொண்டு வருகிறது. மேடைகள் அமைத்து, வசதிகளைப் பெருக்கி, ஆடை அணிகளைத் தகுதிக்குத் தக்கவாறு அணிந்து, வேடப் புனைவுகளைப் பொருத்தமாகக் கொண்டு, ஆடலை நடிப்பாக மாற்றிப் பாடலைக் குறைத்து, உரையாடலை உரைநடையாக அமைத்து, நாடகங்களை நடத்தத் தொடங்கினர். மக்களின் மனம் அவ்வாறு அமைந்த நாடகங்களை நாடியது.

கல்வியறிவற்ற சிலர், தெருக்கூத்தை ஊருக்கு ஊர் சென்று நடத்தி, அதன் மூலம் கிடைத்த பொருளைக் கொண்டு வாழ்ந்தனர். பாமர மக்களே அதைப் பார்த்துக் களித்தனர். கற்றவர்கள் அதை வெறுத்து ஒதுக்கினர். கீழ்த்தரமான உரையாடல் மூலம் மக்களை மகிழ்விக்கக் கூத்தாடுவோர் முயன்றனர். அவை வசந்தருது வருணனை, தோட்டச் சிருங்காரம், விரகதாபம், மன்மதக் கேலி முதலிய காமச்சுவை மலிந்த பழைய காட்சிகளாகவே இருந்தன. அவற்றை மக்கள் வரவர ஒதுக்கவே முயன்றனர். கீழோரிடையில் தெருக்கூத்து, உருக்குலைந்து காணப்பட்டது.

முன்னர் ஆண்டாண்டுதோறும் விழாக் காலங்களில் மிகச் சிறப்யாகத் தெருக்கூத்து, ஊர்தோறும் நடந்தது என்பது உண்மை. குமரி மாவட்டத்தில்அகத்தீசுவரம் ஊர் முத்தாரம்மன் விழாவில், பங்குனி, சித்திரை மாதங்களில், மிக நல்ல முறையில் தெருக்கூத்து நாடகங்கள் நடந்தனவாக அறிகிறோம். அம்மன் வீதி வலம் வரும் நேரங்களில், தெரு மூலைகளில் நகரும்மேடைகளிட்டு அதில் நடிகர்கள் கலைச் சிறப்புடன் மாாக்கண்டேயன், அரிச்சந்திரன், சிறுத்தொண்டன், பிரகலாதன், நல்லதங்காள் போன்ற நாடகங்களை நடத்தி இருக்கின்றனர். அன்று தெருக்கூத்தாக நடத்தப் பெற்ற நாடகங்கள் இன்று ஆலயத்தின் முன் அமைக்கப் பெற்றுள்ள மேடையில் நடத்தப்பெறுகின்றன. அன்றைய கூத்துகள் இசைநாடக உருவில் ஏடுகளாக இன்னும் அங்கு இருக்கின்றன. அதுபோன்று, பல ஊர்களில் தெருக்கூத்து நடத்தப்பெற்றுள்ள செய்தியை அறியலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நவதானியங்களைக் கொண்டு, முளை கட்டுதல் என்னும் சடங்கை நடத்தி, அய்யனாருக்குக் குதிரை எடுப்பு, காளை கட்டு முதலியவற்றை நடத்துவர். முதலில் மந்தையம்மன் கோயிலிலிருந்து. அய்யனுக்குக் குதிரை எடுத்துக் கொண்டாடுவர். மறுநாள் கூத்து தொடங்கும். பொதுவாக அம்மன் கோயில்களிலேயே கூத்துகள் மிக அதிகமாக நடத்தப் பெற்றிருக்கின்றன.

பில்லைமங்கலத்தில் மந்தையம்மனுக்கும், அழகாபுரியில் பொன்னழகியம்மனுக்கும், சிறுகூடல்பட்டியில் மலையரசிக்கும், கீரணிப் பட்டியில் முத்துமாரியம்மனுக்கும், கண்டவராயன் பட்டியில் காளியம்மனுக்கும் கண்ணனூர், நார்த்தாமலை ஆகிய ஊர்களில் மாரியம்மனுக்கும், விழாக் காலங்களில் தெருக்கூத்துகளை நடத்திக் கொண்டாடி, மகிழ்ந்துள்ளனர். பெரும்பாலும், சித்திரை, வைகாசி மாதங்களில், இத்தகைய கூத்துகள் நடத்தப் பெற்றிருக்கின்றன. அறுவடை இல்லாத காலமாகப் பார்த்துக் கூத்துகளை நடத்தி இருக்கின்றனர். பெரும்பாலும், விவசாயத்தைத் தொழிலாக உடைய நாட்டுப்புற மக்கள், அவ்வேலை இல்லாத மாதங்களில்தான் கூத்துகளை நடத்துவது வழக்கம்.

கூத்துகளைக் கோயில்களில் நடத்துவதில் மக்களுக்குச் சிறந்த இறைப் பற்றுணர்வும், சில நம்பிக்கைகளும் இருந்தனவாகத் தோன்றுகிறது. முக்கியமாக மாரியம்மன் அருளால் மழை பொழிந்து, நாடு செழிக்கக் கூத்தாடுதல் வேண்டும் என்று நம்பினர். விராட பருவத்தை நடித்தால் உடனே மழை பெய்யும் என்று, இன்றும் மக்கள் நம்புகின்றனர்.

குமரி மாவட்டத்தில் மழை இல்லாத காலத்தில் விராட பருவத்தைக் கூட்டாக இருந்து படிக்கும் பழக்கம், சமீப காலம் வரை இருந்தது. கூத்து நடக்கும்போது மக்கள் கூட்டமாக இருப்பதும் அங்குப் பேரொலி எழுவதும் மழையைத் தருவிக்கும் ஆற்றலாக விளங்குகிறதோ என்று கருதுவதற்கும் இடம் உள்ளது. அறிவியல் முறையில் சிந்தித்தால், சில உண்மைகள் விளங்கலாம்.

குழந்தைப்பேறு வாய்க்காதவர்கள், அம்மனுக்குக் கூத்து நடத்தி வேண்டிக்கொண்டதாகவும் தெரிகிறது. பெரும்பாலும் இத்தகைய வேண்டுதலுக்குச் 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் நடத்தி இருக்கின்றனர். ஊரின் நலம், மழை ஆகியவற்றை நாடிக்'கோவலன் நாடகம், வள்ளி திருமணம், பவளக் கொடி, அல்லி அர்ச்சுனன், வில் வளைத்து மாலையிடல், விராட பருவ நாடகம்' ஆகியவற்றை நடத்தியுள்ளனர். திருமணம் நடக்க வேண்டுதல் செய்யும்போது 'சீதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம்'போன்ற நாடகங்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு மிகவும் நம்பிக்கையுடன் பக்தியோடு வேண்டுதலாக நடத்தப்பெற்ற நாடகக் கூத்துகள் காலக் கழிவால் மதிப்பிழந்து விட்டன.

உன்னால் எதைச் செய்யமுடியாது என்று மற்றவர்கள் சொல்லுகிறார்களோ, அதைச் செய்து காட்டுவதுதான் வாழ்க்கையில் பெரிய இன்பம்.

—வால்டர் பேக்ஹாட்

உங்கள் கவனத்துக்கு

நார்கள் உள்ள உணவுப் பொருளை சேர்த்துக் கொள்வதன் மூலம் சர்க்கரை நோயும், சிறு குடல் புற்று நோயும் நீங்கும்

கரோட்டின், வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பழங்கள் காய் கறிகள் சாப்பிடுகிறவர்கள் நுரையீரல் புற்று நோய் வராமல் பாதுகாக்கப்படுகின்றனர் என சிகாக்கோ மருத்துவக்குழு கூறுகின்றது. 2000 பேரிடம் 19 ஆண்டுகள் நடத்திய சோதனையின் மூலம் இவ்வுண்மை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காரட், தக்காளி, பசலைக் கீரை போன்றவற்றிலும் மற்றுமுள்ள சிகப்பு, மஞ்சள், பச்சைக் காய்கறிகளிலும் பழங்களிலும் இச்சத்துப் பொருள் அடங்கியுள்ளது.

அண்ணாவின் அறிவு மொழிகள்

கடல் நீரிலே சுன்னல் சுவையைக் காண முடியாது. காட்டுக் கூச்சலிலே கல்யாணி ராக ஆலாபனத்தைக் கேட்க முடியாது.

■

நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்று உரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி.

■

மௌனமாக இருப்பவனை ஊமை என்று கருதுவதும், சண்டையில் ஒருவன் சேராததாலேயே அவனுக்குச் சக்தி இல்லை என்று எண்ணுவதும் முட்டாள்தனமாகும்.

■

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன.

■ ■ ■

WITH BEST COMPLIMENTS FROM:

S.R.P. TOOLS LIMITED

Regd. Office: Main Door No. 108 Thambu Chettee Street
III Floor, Madras 600 001

MANUFACTURING RANGE

MADRAS PLANT ★ **RANIPET PLANT**

MADRAS PLANT	RANIPET PLANT
Milling cutters of all types	★ Gear Hobs
Reamers of all types	★ Gear shaper cutters
Core drills, Counter sinks	★ Gear Shaving cutters
Counter Bores, Taps,	★ Broaches
Chasers, Carbide Tipped	★ Milling cutters (Relief Ground)
Tools, Special Tools to drawings etc.	★

Write with details of your requirement for competitive offer to our Sales Office at:

II Floor, 10 Gopalapuram, 6th Street, Madras 600 086
Phone: 477123/476026 Telex: 041-7125 SRP IN
Grams: DIEHEADS

ஒரு இனிய செய்தி

அரசு நிகழ்ச்சிகள்,
திருமண விழாக்கள் மற்றும்
பொது நிகழ்ச்சிகள் அனைத்துக்கும்
உடனே நேரில் வந்து நல்ல முறையில்,
சிறந்த தொழில் நுட்ப வல்லுநர் மூலம்
பலதரப்பட்ட விதத்தில் வீடியோ கேமரா
படங்கள் எடுத்துத் தரப்படும்.
இவர் அமெரிக்காவில்
முழு பயிற்சி பெற்றவர்.
உடனே அணுக வேண்டிய முகவரி.

A. JOSEPH I.F.P.P.
MEMBER,
FREELANCE
PHOTOGRAPHER,
CAMARAMAN
36, ARNI ROAD,
VELLORE-2
Phone: 24828

தந்தி: "டிக்ஸ்"

தொலைபேசி எண்: 4709

திண்டுக்கல் பாலித்தின் தொழிலாளர்கள்
தொழிற் கூட்டுறவுச்சங்கம் லிட்.,
ஐ-3, தொழிற்பேட்டை,
திண்டுக்கல்-6

புதுப்பொலிவுடன் வெளிவரும் "தமிழரசு" சிறப்புடன் அமைந்துள்ளமை கண்டு பெருமையடைகின்றோம்.

தரமான பாலித்தின் பைகள் வாங்க மற்றும் அச்சு வேலைகள் செய்ய
சிறந்த கூட்டுறவு நிறுவனம் "டிக்ஸ்"

தங்கள் தேவைக்கு அணுகவும்

மா. இராமசுவாமி,
உதவி இயக்குநர்/தனி அலுவலர்

(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை
அவர்களின் நேரடிப்பார்வையில் இயங்கும் கூட்டுறவு நிறுவனம்)

தெருக் கூத்துக் கலை

-டாக்டர் ஏ.என். பெருமாள்,
துறைத் தலைவர்,
நாடகக் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

மேடை அலங்காரங்கள் இன்றித் தெருக்களில் ஆடலும் பாடலுமாக நடத்தப் பெறும் நாடகங்களைத் 'தெருக்கூத்து' என்று கூறுவர். இசைப் பாடல் நிறைந்த இசை நாடகங்களை நாட்டுப்புறத்தில் பெரும்பாலான மக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்தாகவே கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். வேடம் புனைந்த நடிகர் நாட்டுப்புறத்தில்தெருக்களில் மாத்திரமின்றி வயல் வெளிகளிலும் கூத்துகளை நடத்துவர்.

உழைப்பின் கடுமையும் செல்வத்தில் குறைவும் கொண்ட நாட்டுப்புற மக்களுக்கு அரங்க அமைப்புக் காட்சித் திரைகளும், ஒளிச் சிறப்பும், பொருத்தமான ஆடைப் புனைவும் கொண்ட நாடகங்களைப் பார்க்கவும் நடத்தவும் வசதி இருப்பதில்லை. ஆகையினால், எளிய நிலையில் நடத்தப்பெறும் கூத்துகளைக் கண்டே நிறைவுற்றனர். தெருக்கூத்தாக நடிக்கத் தக்கவாறு காட்சி மாற்றங்களைப் பற்றிக் கவலைப் படாத இசை நாடகங்கள் பல எழுதப்பெற்றன. அவை இரவில் தொடங்கப் பெற்று விடிய விடிய நடத்தப் பெறும்.

வேடப்புனைவு பொருத்தமாக இருக்கும் என்று கூறவியலாது. அரசன் என்றால் எல்லா நாடகங்களிலும் ஒரே மாதிரியான ஆடை அணிகளாகத்தான் இருக்கும். அவ்வாறே அரசி, அமைச்சன், சேவகன், தோழன், தோழி ஆகிய பாத்திரங்கள் தனித்தனி வேடப் புனைவுடன் வருவர். தாங்கள் இன்னார் என்று தெரிவிக்கும் முறையில் அவர்கள் வரும்போதே தங்கள் பெயர், பதவி, நாடு, நகரம் அனைத்தையும் குறிப்பிட்டுக்கொண்டே பாடுவர். மக்கள் புரிந்து கொள்வர்.

காட்சிகள் மாறும்போது, தங்கள் செயல்களைக் குறிப்பிட்டுப் பாடுவர். இனி என்ன செய்வர் என்பதை முன்பே அறியும் நிலையில் பாடல்கள் அமைக்கப்பெறும். கதையைவிடவும் அவர்களின் பாடலும் ஆடலும் மக்களால் பெரிதும் விரும்பப்பெறும். அவர்களின் ஆடலைப் பொருத்தமான நடிப்பு என்று கூறவியலாது.

தெருக்கூத்தை ஆந்திராவில் நடத்தப் பெற்ற வீதி நாடகங்களுடன் ஓரளவில் ஒப்பிடலாம். அவை அதைவிடவும் கூடுதல் கலை நுட்பத்துடன் நடத்தப்பெற்றதாக அறியவியல்கிறது. தெருக்கூத்தில் பாடல் திறன் மிகுந்தும், நடிப்புத் திறன் குன்றியும் இருந்ததாகக் கூறுவர். தொடக்கத்திலிருந்தே இறுதி வரை ஒரு பாத்திரம் ஒரே ஆடை அணிகளுடன் தோன்றும். ஆகையினால், முதலில் தன்னை அறிமுகப்படுத்துவது போன்று பின் வருகைகளில் பாடுவதில்லை.

மாணவர் பக்கம்

அறிவுச்சுடர்

1. சந்தனம் அதிகம் விளையும் மாநிலம் எது?
2. உலகிலேயே அதிக இரும்பு உற்பத்தி செய்யும் நாடு எது?
3. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்?
4. நமது தேசியக் கொடியில் மத்தியிலுள்ள சக்கரத்தில் மொத்தம் எத்தனை ஆரக் கால்கள் உள்ளன?
5. கடலின் ஆழத்தைக் கணக்கிடும் அளவு முறையின் பெயர் என்ன?
6. அஷ்ட பரிமளம் எவை?
7. 25-வது ஆண்டு விழாவினை வெள்ளி விழா என்றும், 50-வது ஆண்டு விழாவினைப் பொன் விழா என்றும் சொல்கிறார்கள். 12-வது ஆண்டு விழாவினை எப்படிச் சொல்கிறார்கள்?
8. அண்ணல் காந்தியடிகளை "மகாத்மா" என்று அழைத்தவர் யார்?
9. நான்கு உபவேதங்கள் எவை?
10. புகைப்படங்களை எடுக்கப் பயன்படும் கலர் பிலிம்களைக் கண்டறிந்தவர் யார்?

(விடைகள் அடுத்த பக்கம் பார்க்க)

பட்டமும் பாராட்டும்

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம். ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை, ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப் பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழா தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கி, பார்மகிழத்தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம். தன் தோகைகளை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயா அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கின்றாள்? இல்லை-மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், திருவிளக்கு-பொற்குவியல்-புள்ளிக் கலாபமயில்-கார்மேகம்-நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள், இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக்கொடுப்பதுவே பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு. நாட்டின் பொதுவுடமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர்.

—பேரறிஞர் அண்ணா

(மதுரைப்பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் 7.9.1967-இல் ஆற்றிய உரையிலிருந்து)

நம்பிக்கை வெற்றி தரும்



- எழிற்பித்தன்

அறிவுக்கண்ணைத் திறப்பதற்கே கல்வி
அறவழியில் நடப்பதற்கே செல்வம்
நெறியறிய வேண்டுமிந்த உள்ளம்
நெறிமறந்தால் வாழ்க்கை ஒரு பள்ளம்!

[illegible] சோலை
பொலிவடையும் வாழ்வியலே தேவை
விதிகளுண்டு கட்டுப்பட வேண்டும்
விலகிச்சென்றால் குட்டுப்பட வேண்டும்!

உறுப்புகளால் மாந்தராவ(து) இல்லை
உறவுகொண்டு வாழ்வதுதான் எல்லை
பொறுப்புகளை நாம்ஏற்க வேண்டும்
பொதுமைநலம் பேணிடவே வேண்டும்!

தெருக்களென்று ஊருக்காக உண்டு
திசைகளென்று நாட்டுக்காக உண்டு
இருப்பதெல்லாம் நம்பிக்கை ஒன்று
எழுந்துவிட்டால் வெற்றியென்று நம்பு!

விளையும் பயிர்

தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் கோ. வெங்கடாசலபதி.

இவர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு மாவட்ட அளவில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். பள்ளியின் வாலிபால் அணியின் தலைவராகவும் உள்ள இம்மாணவர், கூடைப்பந்து, சதுரங்கம், குண்டெறிதல், ஓட்டப் பந்தயம் முதலிய பல விளையாட்டுப் போட்டிகளில் முதல் பரிசுகளைப் பெற்றுள்ளார். சிறப்பாக வாலிபால் விளையாட்டுப் போட்டியில் மாவட்ட அளவில் முதல் இடத்தைப் பெற்று — முதற் பரிசான சுழற் கோப்பையை இவர் பெற்றுள்ளார்.

கல்வி மாவட்ட அளவில் நடைபெற்ற தமிழ்க் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசும், ஓவியம் தீட்டும் போட்டியில் பரிசும் பெற்றுள்ள இவர், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றிலும் பங்கு கொண்டு வருகிறார்.

அறிவுச்சுடர்



விடைகள்:

1. கர்நாடகம்
2. ஐக்கிய அமெரிக்கா
3. அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்சாண்டர் கிரகாம்பெல்
4. 24 ஆரக்கால்கள்
5. ஃபேத்தம் (Fathem)
6. 1. சந்தனம் 2. புனுகு 3. கோரோசனை 4. கஸ்தூரி 5. ஜவ்வாது 6. அகில் 7. பச்சைக் கற்பூரம் 8. குங்குமப்பூ
7. பட்டு (Silky Anniversary)
8. மகாகவி ரவீந்திரநாத் தாகூர்
9. அ) ஆயுர் வேதம், ஆ) தனுர் வேதம், இ) காந்தர்வ வேதம், ஈ) அர்த்த சாஸ்திரம்
10. அமெரிக்காவைச் சேர்ந்த ஈஸ்ட்மென் (1883)

மா. தா. ஸ்ரீதர்
பத்தாம் வகுப்பு 'சி' பிரிவு,
இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி (தெற்கு)
சென்னை-600 017.

பலவீனன் பாதையிலே தடைக்கல்லாய் இருந்தது, பலமுடையார் பாதையிலே படிக்கல்லாய் இருக்கும்.

—கார்லைல்

தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை காலால் நடப்பதற்கு மாறாகத் தலையால் நடப்பது போன்றதாகும்.

—எமர்சன்

மாஸ்கோவில் தேசிய அரசினர் திரைப்படக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அது 1919-இல் நிறுவப்பட்ட கல்லூரியாகும்.

திரைப்படத் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் கலைஞர்களை அது பயிற்றுவிக்கிறது. அதில் ஐந்து துறைகள் உள்ளன. இயக்குநர் துறையானது கதைப் படங்கள், கல்விப் படங்கள், டாக்குமெண்டரிப் படங்கள், வீடியோ படங்கள் ஆகியவற்றை இயக்குவதற்குப் பயிற்சி அளிக்கிறது; ஒளிப்பதிவாளர் துறை, திரைக்கதை மற்றும் திரைப்பட விமர்சனத் துறை, தயாரிப்பாளர் துறை, கலைப்பிரிவு ஆகியவை மற்ற துறைகளாகும்.

அந்தக் கல்லூரியில் விசேடப் படப்பிடிப்பு நிலையம் ஒன்றும் இருக்கிறது. மாணவர்கள் தயாரிக்கும் படங்கள் அந்தப் படப்பிடிப்பு நிலையத்தில் எடுக்கப்படுகின்றன. தங்கள் பயிற்சிக் காலத்தின்போது மாணவர்கள் சொந்தமாகத் திரைக்கதை அமைக்கவும், படமெடுக்கவும், நடிக்கவும் செய்கிறார்கள்.

1944 முதல் அந்தக் கல்லூரி அயல் நாட்டு மாணவர்களுக்கும் திரைப்படத் துறையில் பயிற்சி அளித்து வருகிறது. ஆண்டுதோறும் 200 அயல் நாட்டு மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் உலகில் 75-க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றி வருகிறார்கள்.

புதிய செயற்கை வைரத் தொழிற்பூங்கா

திருச்சி மாவட்டம் இருங்கலூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் 40,000 பேர் வாழ்வை ஒளியேற்றி மிளிர வைக்கக்கூடிய செயற்கை வைரத் தொழிற் பூங்கா ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதன் அடிப்படை வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

பம்பாய் மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படக் கூடிய வைர வெட்டுத் தொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு அரசும் இணைந்து, திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே இருங்கலூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கோடி ரூபாய் செலவில் செயற்கை வைரத்தொழிற் பூங்காவை அமைக்கின்றன.

ஏற்கெனவே இதுபோன்ற செயற்கை வைரத் தொழிற் பூங்காக்கள் (Synthetic Stone Park) இந்தியாவில் சூரத், ஜெய்ப்பூர், ஹால்ட்வாணி ஆகிய வட இந்திய நகரங்களில் செயல்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் செயற்கை வைரக் கற்களுக்கு அமெரிக்காவில் ஏகப்பட்ட கிராக்கியுள்ளது. தென்னிந்தியாவில்- அதுவும் தமிழ்நாட்டில்தான், முதன் முறையாக இந்தத் தொழிற்சாலை துவக்கப்படுகிறது.

இதுநாள்வரை பழைமையான முறையைக் கையாண்டு, செயற்கை வைரத் தொழில் நடத்தி,நாள் ஒன்றுக்கு ரூ. 15 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தைப் பெற்று வந்த சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள், இனி நாள் ஒன்றுக்கு ரூ. 60-லிருந்து 70 வரை பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கு அளிக்கப்படும் பயிற்சிபெற்றவர்களால் இயந்திரங்கள் மூலம் வெட்டப்பட்டு ஒரே அளவு தரம் மற்றும் சீரமைப்புடன் தயாரிக்கப்படும் கற்களுக்கு மேலை நாடுகளில் பெரும் அளவு வரவேற்புள்ளது. இதன் மூலம் அந்நியச் செலாவணி நிரம்பக் கிட்டும் வாய்ப்புள்ளது.

முதற் கட்டமாக, இத்தொழிற்சாலையை அமைக்க 10 ஏக்கர் நிலம் இருங்கலூரில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சுற்றியுள்ள 35,000 தொழிற் கலைஞர்களும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து சுமார் 15,000 தொழிற் குடும்பங்களும் பயிற்சியும், பயனும் இதன் மூலம்பெறவிருக்கிறார்கள்.

எஸ். சுதாகர்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியம்
வடசென்னை அனல்மின் திட்டம்
ஒப்பந்த நீட்டிப்பு அறிக்கை

பணியின் பெயர்: வடசென்னை அனல் மின் திட்டம் - முதல் கட்டப்பணி - அனல் இயந்திரங்களில் வெப்பத்தைத் தணிக்க கடல் நீர் சுற்றி வருமாறு அமைக்கும் கட்டடப் பணிகள் (Circulating Water System Civil Works)

ஒப்பந்த வரையறை எண்: SECT.I/NMTPP/9

மேற்குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்தங்களைப்பெறுவதற்கும் திறப்பதற்குமான நாள் 27.12.89-இல் இருந்து நீட்டிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்ட நாள், நேரத்தில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் : 1990 ஜனவரி 10-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை
2. தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் : 1990, ஜனவரி 10-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை

முந்திய ஒப்பந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மற்ற விதிகளிலும், நிபந்தனைகளிலும் எவ்வித மாறுதலும் இல்லை.

DIPR/2687/MS/89/MCS

தலைமைப்பொறியாளர்
பொதுவியல்/வடிவமைப்பு



இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி

சென்னைத் தீவுத்திடலில், அறிஞர் அண்ணா கலை அரங்கில், 16-வது இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியை, 22-12-89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

திரு. எம். அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், "இந்தக் கண்காட்சி, சமுதாயம் எந்த வகையில் முன்னேற்றம் கண்டு உள்ளது, வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை எழுத்து மூலமாக அல்ல, காட்சி மூலமாக எடுத்துக் காட்டுகிறது" என்றார்.

மாண்புமிகு அறநிலையம்மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில்,

"இங்கே பேசிய திரு. லத்தீப் எம்.எல்.ஏ. அவர்கள் இந்தப் பொருட்காட்சியை நூறு நாட்கள் நடத்த வேண்டும் என எடுத்துச் சொன்னார். நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்ப்பதெல்லாம், தமிழ்நாட்டின் தலைநகரமாக உள்ள சென்னையில் இப்படிப்பட்ட பொருட்காட்சி இரண்டு மாதம் மூன்று மாதம் மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் நடப்பதற்கான வகையில் அமைக்க வேண்டும் என்பதுதான்.

நிரந்தரப் பொருட்காட்சி

வெளிநாடுகளில் முக்கியமான நகரங்களில் ஒவ்வொரு இடங்களிலும் பொருட்காட்சி இருப்பதைப் பார்க்க முடியும். அப்படிப்பட்ட வகையில் சென்னையில் ஆண்டு முழுவதும் பொருட்காட்சி நடக்கும் அளவுக்கு, இந்த இடத்தில், நிரந்தரமாக - பொழுதுபோக்கு இடமாக முதல்வர் கலைஞர் அவர்களே மிகுந்த மகிழ்ச்சி கொள்ளும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புகிறேன்."

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"நான் மேற்கொண்ட ஐரோப்பிய நாட்டுப் பயணத்திற்குப் பிறகு அதிலே எழுந்த எண்ணத்தின் விளைவாக, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு தமிழகத்தில் அமைக்கப்பட்டு, அதனுடைய தலைவராக அருமை நண்பர் மறைந்த தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் பணியாற்றுகின்ற பொறுப்பினை ஏற்று, அவருடைய

''இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி''
— எனப் பெயர்மாற்றம்:

16-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை 22.12.89 அன்று துவக்கி வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்பொழுது, 'அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி' என்பதில், அகில இந்தியா என்றால் உலக இந்தியா என்ற பொருள் வருகின்ற காரணத்தால் அது பொருத்தமாக இல்லை. அனைத்திந்தியா என்றால் ஏழெட்டு இந்தியா உலகத்தில் இருப்பதுபோல ஆகும் என்பதால் இதனை 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைப்பதே சரியாக இருக்குமென்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, விழா இறுதியில தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர், திரு. பி.பி. ரெங்கசாமி பேசும்பொழுது, 'முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைக் கிணங்க இனிமேல் இது 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைக்கப்படும்' என்று அறிவித்தார்.

அவர்களைச் சந்தித்து, வெளிநாடுகளிலே சுற்றுலாத் துறையின் மூலமாக ஈட்டுகின்ற வருமானத்தைப் போல இந்திய நாட்டிலும் ஏன் இந்த முயற்சியை மேற் கொள்ளக்கூடாது என்று விவாதித்தேன். வெளிநாடுகளிலே வழங்கப்படுகின்ற அஞ்சல் உறைகள் போன்றவைகளில் அழகாகஅச்சேற்றப்பட்டிருக்கின்ற அந்தந்த வட்டாரத்தினுடைய சுற்றுலாத் தோற்றங்கள், காட்சிகள் இவைகளையெல்லாம் கூட அவர்களிடம் நான் எடுத்துக் காட்டினேன். எனக்கு முன்பு பல முறை அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலுங்கூட, அவர்களுடைய கவனத்திற்கு அவைகள் எல்லாம் கொண்டு வரப்படாத காரணத்தால், நான் அதை எடுத்துச் சொன்ன நேரத்திலே மிகுந்த ஆர்வத்தோடு அதனைக் கேட்டார்கள்.

''நான் அவர்களிடம் குறிப்பிட்டேன். எந்த ஒரு விமான நிலையத்திலும் ஏன் விமானப் பயணத்திலுங்கூட, வெளிநாட்டிலிருந்து நம்முடைய சொந்த ஊருக்கு, நண்பர்களுக்கு, உறவினர்களுக்குக்கூடிதம் எழுத விரும்பினால் அங்கே விமானத்திலோ, விமான நிலையத்திலோ தாம் பெறுகின்ற அஞ்சல் அட்டைகள், அஞ்சல் உறைகள் அனைத்தும் அந்தந்த நாட்டினுடைய சுற்றுலா வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலே-அங்கே சென்றால் எந்தெந்தக் காட்சிகளைக் காணலாம், எத்தகைய இயற்கை விசித்திரங்கள், விநோதங்கள் அங்கே இருக்கின்றன, தொன்மை வாய்ந்த வரலாற்றுப் புதையல்கள் எவை எவை என்பதையெல்லாம் எடுத்துக்காட்டும் வகையிலேதான் அவைகள் அங்கே அமைந்திருக்கின்றன. எனவே, அது போன்ற முயற்சியிலே இந்திய நாடும் ஈடுபட வேண்டுமென்று அம்மையாரிடம் அன்றைக்கே சொன்னேன்.

''அவர்களிடம் சொன்னதோடு அமையாமல், தமிழகத்திற்கு வந்தவுடன் தமிழக அரசின் சார்பில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தையும் உருவாக்கி அதன் தொடர்ச்சியாக இந்தப் பொருட்காட்சியையும் நடத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டு அதிலே தொடர்ந்து நாம் வெற்றியினைப் பெற்று வருகின்றோம்.

இராமாயணமும், சிலப்பதிகாரமும்

''நம்முடைய இதிகாசங்கள், இலக்கியங்கள் இவைகளைப் பார்த்தால்கூட-நான் பல முறை குறிப்பிட்டிருக்கின்றேன்-அவைகள் எல்லாம் சுற்றுலா நோக்கத்தோடுதான் எழுதப்பட்டிருக்கின்றன. இதிகாசம் எனப்படும் ராமாயணத்தை எடுத்துக் கொண்டால், ராமாயணக் கதையை எழுத முற்பட்ட வால்மீகியோ அல்லது அதனைத் தமிழிலே தமிழாக்கம் செய்த, தமிழ்ப் பண்பாட்டிற்குச் சிறிதும் ஊனம் ஏற்படாமல் தர வேண்டும்-என்கின்ற விருப்பத்தோடு தந்த கம்பனோ சுற்றுலாவையும் அடிப்படையாக வைத்துத்தான் ராமாயணத்தை மக்களுக்குத் தந்திருக்கின்றார்கள். ராமாயணக் கதை அயோத்தியிலிருந்து புறப்பட்டு, தண்டகாருண்யம் வரை வந்து, இலங்கை வரையிலே செல்கிறதென்றால், அந்த நெடுந்தொலைவிற்கும் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை நமக்கு அறிமுகப்படுத்தும் வகையிலேதான் ராமாயணம் அமைந்திருக்கிறது. வடக்கேயிருந்து தெற்கே வந்த ஒரு மன்னனின் மகனின் கதையை எடுத்துக் காட்டுவது ராமாயணம் என்றால், அதற்குப் பிறகு எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள்-சரி நீ வடக்கே இருந்து வந்தாயா? நான் தெற்கேயிருந்து வடக்கே வருகிறேன்-என்று அவர் காவிரிப்பூம்பட்டினத்திலேயிருந்து புறப்பட்டு-வடபுலத்திலே இமயம் வரையிலே சேரன் செங்குட்டுவனை அழைத்துச் சென்று இமயத்திலே கல்லெடுத்து, கனகவிஜயன் தலையிலே கல்லேற்றி, அதனைக் கண்ணகிக்குச் சிலை வடிக்கும் வகையிலே சேரநாடு வரையிலே கொண்டு வந்தான் என்று சிலப்பதிகாரத்தையும் ஒரு சுற்றுலா வரலாறாக-சுற்றுலாக் கதையாகத்தான் இளங்கோவடிகள் நமக்குத் தந்திருக்கிறார். அதனுடைய சிறப்பு சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு-வட நாட்டிலே உள்ள மன்னர்கள்- அந்த மன்னர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகள்-அவர்களுடைய வீரம், வெற்றி-அந்த வெற்றிகளை எல்லாம் [illegible] யின் ணடையச்செய்கின்ற அளவிற்குச் சேரன் செங்குட்டுவன் நடத்திய போர்-இவைகள் அனைத்தும்

அதிலே இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால், இதிகாசம் என்ற அளவிலே ராமாயணம் ஒரு சுற்றுலா நூலாகவும்," இலக்கியம் என்கின்ற வகையிலே சிலப்பதிகாரம் ஒரு சுற்றுலா நூலாகவும் நமக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே இந்தச் சுற்றுலா எண்ணம் இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பிப நம்முடைய நாட்டு மக்களுடைய உள்ளத்திலே ஊறிப் போன ஒன்றாகும். அதனால்தான் அந்தக் காலத்திலே காசிக்குச் சென்று வந்தாலும் கிராம மக்கள் காசிக்குச் சென்று வந்தவர்களின் காலைத் தொட்டுக் கும்பிடுவார்கள். அது காசிக்குச் சென்று வந்த கால் என்பதற்காக! காசிக்குச் செல்வது அவ்வளவு புண்ணியமான காரியம் என்று அன்றைக்கு எண்ணப்பட்டது. இவைகள் எல்லாம் சுற்றுலா நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியங்கள். ஆனால் இன்றைக்குக் காசிக்குச் செல்லாமலே நம்முடைய சில வீடுகளிலே நடைபெறுகின்ற திருமணங்களில் மாப்பிள்ளை காசி யாத்திரை போகிறார் என்று சொல்லி-ஒரு தெருவைச் சுற்றச் சொல்லி-அவர் காசிக்குப் போய் விட்டு வந்ததாக நாம் அந்த ஐதீகத்தை மாத்திரம் பின்பற்றுகிறோம்.

''இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற விஞ்ஞான யுகத்தில் சுற்றுலா என்பது உலகத்தினுடைய தொலைவைக் குறைக்கக் கூடிய அளவிற்கு ஆகிவிட்ட ஒன்றாகும். ஐம்பது, அறுபதாண்டுகளுக்கு முன்பு இரண்டாயிரம் மைல்களைக் கடப்பது என்றால் பத்து நாளோ, பதினைந்து நாளோ ஆகும். ஏன் சென்னை ராஜ்யத்தின் பிரதமராக (முதல் அமைச்சராக) ஓமந்தூரார் காலத்திலே வாங்கப்பட்ட 'அனுமான்' என்ற விமானம் அன்றைய தினம் சென்னையிலேயிருந்து ஆறு மணிக்குப் புறப்பட்டால், பல இடங்களிலே தங்கி, தங்கி, மறுநாள் காலையில்தான் டெல்லி போய்ச் சேருமென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இப்போது சென்னையிலிருந்து ஆறு மணிக்குப் புறப்பட்டால் எட்டரை மணிக்கு-இரண்டரை மணி நேரத்தில் டெல்லிக்குப் போய்ச் சேரக்கூடிய அளவிற்குத் தொலைவுகள்-உலகத்திலே உள்ள நாடுகளுக்குள்ளே இருக்கின்ற தொலைவுகள் – சுருக்கப்பட்டிருக்கின்ற காலக்கட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்தச் சுற்றுலாவின் மூலமாகப் பெரும் பயனை நம்முடைய நாடு அடைய வேண்டும்.

''பல நாடுகளிலே உள்ள நகரங்களே நாம் இங்கே உருவாகிக் கொண்டிருக்கின்ற பொருட்காட்சியைப் போலவே அமைந்திருக்கின்றன. அந்த நகரங்களே நாம் அமைக்கின்ற பொருட்காட்சிகளைப் போல அமைந்திருக்கும்போது, நாம் அவற்றுக்கு ஒப்பாக நம்முடைய பொருட்காட்சியை அமைக்க முடியுமா என்ற வினா தோன்றுவது இயல்பேயாகும். இருந்தாலும்கூட ஏழைகள் மிக அதிகமாக வாழ்கின்ற இந்த நாட்டில் ஏழைகளுக்கு மிக மலிவான பொழுதுபோக்காகவும், அந்தப் பொழுதுபோக்கை அவர்கள் பயன்படுத்துகின்ற நேரத்திலே அவர்கள் உள்ளத்திலே பதியத்தக்க நல்ல கருத்துக்களை ஊன்றுகின்ற ஒரு நற்பணியாகவும் இந்தப் பொருட்காட்சியும் இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முயற்சியும் அமைகிறது என்பதை நான் இங்கே எடுத்துக்கூறி, இந்தப் பொருட்காட்சி எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்கிட, பொதுமக்களுடைய ஒத்துழைப்பும், கலைஞர் பெருமக்களுடைய ஒத்துழைப்பும், எல்லாத் தரப்பினருடைய ஒத்துழைப்பும் மிக மிகத் தேவை என்பதை எடுத்துக் கூறி இந்த இனிய நிகழ்ச்சியை நான் தொடங்கி வைக்கின்றேன்.''

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை மாநகரின் 350 ஆண்டுக்கால வளர்ச்சியை விளக்கும் புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. பி.பி. ரங்கசாமி, இ.கா.ப. அவர்கள் நன்றி கூறினார். திரு. தாயன்பன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி

அரும் முயற்சியினால் இந்தத் துறை நல்ல முறையிலே வளர்க்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்திலே இந்தப் பொருட்காட்சி தொடங்கப் பட்டது. 1974-அம் ஆண்டு முதல் இதுவரை இடையிலே ஒரே ஒரு ஆண்டு தவிர, மற்ற எல்லா ஆண்டுகளிலும் இந்தப் பொருட் காட்சி இந்த இடத்தில் மிகச் சிறப் போடும் சீரோடும் மக்களுடைய பெரும் ஆதரவோடும், வரவேற் போடும், பாராட்டுக்களோடும் நடை பெற்று வருவதை நீங்கள் மிக நன் றாக அறிவீர்கள்.

அகில இந்தியா, அனைத்து இந்தியா

"இந்தப் பொருட்காட்சியை 'அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி' என்று நாம் அழைக்கின்றோம். வரவேற் புரையிலே சுற்றுலாத் துறைச் செயலர் குறிப்பிட்டதைப் போல வும், தலைமை உரையிலே சுற்று லாத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போலவும், இந்தப் பொருட்காட்சி அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி என்ற தலைப்பில் நடத்தப்பட்டு வருகின் றது. இங்கே என்னுடைய நண்பர் புலவர் நன்னன் அவர்கள் இருக்

கிறார்கள். அவர்கள் அண்மையிலே தான் இந்த அகில இந்தியா என்பது குறித்தும், அனைத்து இந்தியா என்பது குறித்தும் ஒரு ஆராய்ச்சி யைப் பத்திரிகையிலே எழுதியிருந் தார்கள். அதனைப் படித்துப் பார்த் தேன்.

"அகில இந்தியா என்று சொல் வது சரியா? அல்லது அனைத்து இந்தியா என்று சொல்வது சரியா? என்ற கேள்விக்கு என்னைப் பொறுத்தவரையில் எனக்குக் கிடைத்த விடை இரண்டுமே சரியில்லை என் பதுதான்.

"அகிலம் என்றால் உலகம். அகில இந்தியா என்று சொல்லும் போது உலக இந்தியா என்றாகிறது. எனவே அகில இந்தியா என்பது இதுவரையில் ஒரு தவறான பொரு ளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக் கின்றது. அகிலம் என்றால் உலகம் என்பதற்கு நான் புதிய உதாரணங் களைத் தேடித் தர விரும்பவில்லை. உங்களிலே பலருக்குப் பழக்கப்பட்ட ஆதாரத்தையே சொல்கிறேன். "அகிலாண்டேஸ்வரி" என்று வணங்குகின்ற தெய்வத்தைக் குறிப் படும்போது உலகத்திற்கே அவள் தேவி என்கின்ற அந்தக் கருத் திலேதான் அகிலம் என்றசொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே அகில இந்தியா என்று சொல்லும் போது "உலக இந்தியா" என்ற பொருள் வருகின்ற காரணத்தால் அது பொருத்தமாக இல்லை.

"அப்படியானால் அனைத்து இந்தியா என்று சொல்லலாமே என்கின்ற ஒரு கருத்து எழுமே யானால், அதற்கு நம்முடைய புலவர் நன்னன் அவர்கள் தருகின்ற மறுப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய மறுப்பாக இருக்கின்றது.

"அனைத்து என்கின்ற சொல் எப்போது வருகிறதென்றால், பல வற்றை ஒன்று சேர்க்கின்ற நேரத் திலே அனைத்து என்கின்ற சொல் வருகின்றது. ஒரு இருபது அல்லது

இருபத்தைந்து உறுப்பினர்கள் ஒரு மன்றத்திலே இருக்கின்றார்கள். நாம் அவர்களை ஒரு விழாவிற்கு வரவேண்டுமென்று அழைக்கிறோம். அப்படி அழைக்கும்போது எல்லோ ரும் வரவேண்டுமா? என்று அவர் களிலே யாராவது கேட்டால், அனைத்து உறுப்பினர்களும் வர வேண்டுமென்று நாம் சொல் கிறோம். அனைத்து உறுப்பினர் களும் வரவேண்டுமென்று சொல் லும்போது, இருக்கின்ற இருபது பேரோ, இருபத்தைந்து பேரோ அவ்வளவு பேரும் வரவேண்டும் என்ற பொருளிலேதான் அனைத்து உறுப்பினர்களும் வரவேண்டு மென்று சொல்கிறோம். எனவே அனைத்து இந்தியா என்றால், ஏழெட்டு இந்தியா உலகத்திலே இருப்பதைப் போலவும், எனவே அனைத்து இந்தியாவும் சேர்ந்தது தான் இந்த அனைத்திந்தியா என்று சொல்லுவதைப் போலவும் ஆகி விடுகின்றது. ஒரே இந்தியா என்ற குரலை வலுவாக இன்றைக்கு எழுப் பிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில், அனைத்திந்தியா என்று சொல்லி, பல இந்தியாக்கள் உலகத்திலே இருப்பதை நாமே ஒப்புக் கொண்டவர்களாக ஆகி விடக்கூடாது என்பதால்-அனைத் திந்தியா என்கின்ற அந்தச் சொல் லும் ஏற்றதாகத் தெரியவில்லை.

இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி

"நான் கேட்கின்றேன்-உங்களை யும் எண்ணிப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த "அகிலம்", "அனைத்து" என்கின்ற சொற்களையும் விட்டு விட்டு, 'இந்தியச் சுற்றுலாப் பொருட் காட்சி' என்று சொன்னால், புரி யாமல் போய் விடுமா? நான் கூட எண்ணிப் பார்த்தது உண்டு. இதை அனைத்து மாநிலங்கள் சுற்றுலாப் பொருட்காட்சி என்று அழைக்க லாமே என்று! அப்படியானால் இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலத்தினுடைய பங்கேற்பும் இந் தப் பொருட்காட்சியிலே இருந்தால் தான் அனைத்து மாநிலங்கள் என்று அழைக்க முடியும். ஒரு பத்து-பதி னைந்து மாநிலங்கள் பங்கு பெற்று, ஒரு ஐந்தாறு மாநிலங்கள் இங்கே பங்கேற்கவில்லையென்றால், அனைத்து மாநிலப் பொருட்காட்சி என்று

அழைக்க முடியாது. எனவே இந்த வம்பே வேண்டாமென்று இனி மேல் இதனை 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைப்பதே சரியாக இருக்கும் என்பதனை நான் இங்கே எடுத்துக் கூறுவதோடு, என்னிடத்திலே நிதி வேண்டு மென்று கேட்ட நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், முதலில் இந்தத் திருத்தத்தைச் செய்யுங்கள், பிறகு அந்த நிதியைப் பற்றி-யோசிக் கலாம் என்று கூறவும் நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழில் வளர, கலை வளர...

"சுற்றுலாவின் மூலமாகக் கலாச் சார உறவுகள் ஏற்படவும், சுற்றுலா மூலமாக உலகத்தைத் தெரிந்து கொள்ளவும், சுற்றுலா மூலமாகத் தொழில் வளரவும்-கலை வளரவும்- இலக்கியச் செல்வங்கள் பெருகவும் வழிவகை ஏற்படுகிறது என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறி வீர்கள். இங்கே தொடர்ந்து நடைபெறுகின்ற இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் ஆண்டுதோறும் வளர்ச்சி ஏற்பட்டு கடந்த ஆண்டில் நிகர லாபமாக ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் அளவிற்குக் கிடைத் திருக்கிறது என்பதை எண்ணிப் பாாக்கும்போது, சென்னை மாநக ரத்து மக்கள் மாத்திரம் அல்ல, தமிழகத்திலே பல்வேறு பகுதி களிலே வாழ்கின்ற மக்கள் மிகுந்த விருப்பத்தோடு இந்தப் பொருட் காட்சிக்கு வருகின்றார்கள் என் பதும், பொருட்காட்சியிலே பங்கேற் பவர்களும் தாங்கள் ஆற்றுகின்ற கடமைக்கு ஏற்ற ஒரு ஆதாயத்தைப் பெறுகிறார்கள் என்பதும் அனை வருக்கும் விளங்கும் என்றே நான் நம்புகின்றேன்.

"சுற்றுலாவின் மூலமாக ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தி லேயே பெரும் உயர்வு ஏற்படுகிறது என்பதை வெளிநாடுகளிலே நாம் காண முடிகிறது. வெளிநாடுகளில் அவர்கள் வளர்க்கின்ற பல்வேறு துறைகளில் மிக முக்கியமான துறை யாக அமைந்திருப்பது சுற்றுலாத் துறையாகும். சுற்றுலாவின் வாயி லாக இத்தாலி போன்ற நாடுகளில், ரோமாபுரி போன்ற நகரங்களில், வருகின்ற வருமானம் இன்றைக்கு அந்த நாட்டின் பொருளாதாரத் திலே மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

தொன்மை வாய்ந்த வரலாற்றுப் புதையல்கள்

"நான் பல ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தபோது, அந்த நாடுகள் அனைத்துமே சுற்றுலாவின் மூல மாகப் பெரும் பொருளை, ஆண்டு தோறும் வருமானமாக ஈட்டு கின்றன என்ற குறிப்புக்களை அந்தந்த அரசுத் துறையினரோடும், அமைச்சர்களோடும் பல்வேறு அதி காரிகளோடும் கலந்து பேசியதன் மூலமாக அறிந்தேன்.

"திரும்பியபோது, அன்றைய தினம் இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி

சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள்

பா. நாராயணமூர்த்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
செங்கை-அண்ணா மாவட்டம்

தமிழகத்தில் சென்னை, கோவை, பெரியார் மாவட்டங்களில் கிளை நூலகம் இல்லாத பகுதிகளுக்கு 'ஊரக இயங்கு நூலகம்' (Rural Mobile Library) இயங்கி வருவதுடன், இரவு நேரங்களில் திரைப்படக் காட்சிகள் மூலமும் மக்கள் பயனடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீடு தேடி நூல் வழங்கு திட்டத்தின் கீழ் மகளிருக்கு, அவரவர் வீட்டுக்குச் சென்று நூல்கள் வழங்கும் பணிக்காக இயங்கு நூலகங்கள் கோவையில் மூன்றும், மதுரையில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும் ஆக 5 இயங்கு நூலகங்கள் செயல்படுகின்றன.

இந்தியாவில் எழுபது ஆண்டுக் காலமாக நூலக இயக்கம் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் 1948-ஆம் ஆண்டு முதல் 41 ஆண்டுக் காலமாகப் பொது நூலகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 18 மாவட்ட மைய நூலகங்களும், 9 இயங்கு நூலகங்களும், 1,515 கிளை நூலகங்களுமாக மொத்தம் 1,543 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது, மக்களின் ஆர்வத்திற்கு ஏற்ப தற்போது வீதிக்கு வீதி வாடகை நூலகங்களும், அலுவலகங்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களிடையே சுற்றோட்ட நூலகமும் இயங்கி வருவதும் மக்களின் படிப்பார்வத்தை அறியக் கூடியதாகும்.

செங்கல்பட்டில் மாவட்ட நூலகம், 1953-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1955-இல் 12 கிளைகளுமாக வளர்ந்து, 1966-இல் 100 கிளைகளாகப் பெருகி, 1989-இல் 119 கிளை நூலகங்களுடன் ஒரு மாவட்ட மைய நூலகமாகப் பெருகி வளர்ந்துள்ளது. 1988-89-ஆம் ஆண்டு வரை 1,28,000 உறுப்பினர்கள்பதிவுசெய்யப்பட்டுள்ளது மக்களின் படிப்பார்வத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

தமிழ்நாட்டிலுள்ள 1,543 நூலகங்களில், 175 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 538 நூலகங்கள் வாடகையில்லாத கட்டடங்களிலும், 830 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்படுகின்றன.

5,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்கள்தோறும் கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு, இம்மாவட்டத்தில் 120 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மேலும் 26 கிராமங்களில் கிளை நூலகம் திறக்கப்பட வேண்டியுள்ளது. கிளை நூலகங்கள் திறக்க இயலாத, மக்கட் தொகை குறைவாக உள்ள கிராமங்களில் நூலகச் சேவை 'வழங்கு முனைகள்' 28 இடங்களில் செயல்படுகின்றன. அதுவல்லாது வீடு தேடி நூல் வழங்கு திட்டத்தின் 37 கிளை நூலகங்களில் மிதி வண்டி மூலம் மகளிர்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள 120 நூலகங்களில் 12,25,000 நூல்கள் உள்ளன. இந்த அரசு பதவியேற்ற உடன் செங்கை-அண்ணா மாவட்டத்தில் இந்த ஆண்டில் மட்டும் 30 இலட்சம் வாசகர்கள்படித்துச்செல்ல வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நூலகத்தில் மருத்துவப்படிப்பு மாணவர்களும் பொறியியல் கல்லூரி மாணவர்களும் பயனடைய, தேவையான பாட நூல்களிலிருந்து குறிப்பு எடுத்துத்தர நகல் எடுக்கும் (ஜெராக்ஸ்) வசதியும் உள்ளது.

செங்கல்பட்டில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட மைய நூலகக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டு பேசும் போது, "கல்லூரி மூலம் பெறும் அறிவை இந்த நூலகம் தருகிறது. அறிவுக்கு எல்லை இல்லை. நமது அறிவை வளர்க்க இந்த நூலகம் பயன்படும். சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள். நல்ல புத்தகத்தை விட உற்ற துணைவன் யாரும் இல்லை" என்று குறிப்பிட்டு நூலகம் கட்ட நிலம் கொடுத்த நன்கொடையாளர்களின் பரந்த உள்ளத்தைப் பாராட்டினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழரசு 16.12.89 இதழ் 42-ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, விளம்பர எண்:66 இல், 'இறுதி நாள்:8.1.1989 அன்று மாலை 5.30 மணி' என்பதை 8.1.1990 அன்று மாலை 5.30 மணி என்று திருத்திப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

கொடிநாள் நன்கொடை தமிழ்நாட்டிற்கு முதலிடம்!

மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

"மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கொடிநாள் அமைப்புக் குழு நிர்ணயித்திடும் இலக்கினையும் எஞ்சி, வாரி வழங்கும் வள்ளல்களாகத் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருவது நமது போற்றுதலுக்கும், நன்றிக்கும் உரியதாக விளங்குகிறது.

"இதனை மத்திய அரசு கண்ணுற்று, 1985-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு நன்கொடை பெற்ற மாநிலமாகிய தமிழ்நாட்டுக்கு அகில இந்தியக் கோப்பையை வழங்கினார். 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்கும் இக்கோப்பையைத் தமிழ்நாட்டு மக்கள் தம் வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

"இதுமட்டுமின்றி, மக்கள் தொகையையும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு அதற்குரிய கோப்பையும் 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு இந்திய அரசால் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு ரூ.102 இலட்சம் நன்கொடை வழங்கி, இப்பெருமையைப் பெற்றவர்கள் தமிழ்நாட்டு மக்கள்.

"படையின் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு வேலூரில் அமைத்துள்ளது. இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற்படுத்திய மாநிலம் தமிழ்நாடு.

"கைம்பெண்கள் உச்ச நீதிமன்றத்தினை அணுகுவதற்கு முன்பே 1.1.64க்கு முன் படைப் பணியில் இருந்து ஓய்வு பெற்று இறந்த படைவீரர்களின் மனைவியருக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதந்தோறும் நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தது தமிழ்நாடு.

"முன்னாள் படைவீரருக்கு நிதியுதவி அளிப்பதற்கு மட்டுமன்றித் தொழிலகங்கள் அமைத்து வேலைவாய்ப்பு உருவாக்க வழி செய்யும் வகையில் "தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம்" ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு. சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளிலிருந்து முன்னாள் படைவீரர்கள் பெறும் கடன்களுக்கு வட்டி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடே!

"முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு எனப் பல ஒதுக்கீடுகளை மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் நிர்ணயித்து இருப்பினும், இவற்றின் பயன்பாட்டினைக் கண்காணிப்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு.

"பெற்ற சுதந்திரத்தினைக் காத்திடும் உணர்வு வளர்ந்திட முன்னாள் படைவீரர்களை மதித்துப் பாராட்டும் வகையில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும் கொடிநாள் அன்று முன்னாள் படைவீரர்களைத்தேநீர் விருந்திற்கு அழைத்துப் பாராட்டுவதை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடு.

"முன்னாள் படைவீரர்கள் அவர்களைச் சார்ந்தோரின் குறைகளை மாதந்தோறும் குறிப்பிட்டதொரு நாளில் மாவட்ட ஆட்சியர்கள் நேரில் கேட்டு அவர்களின் குறைகளை விரைந்து தீர்த்திடும் திட்டத்தைச் செயல்படுத்தியதும் தமிழ்நாடே ஆகும்.

"சிறுநீரக மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கும் முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளித்திடும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடேயாகும்.

"இவ்வாறு நலத் திட்டங்கள் பலவற்றை நடைமுறையில் செயல்படுத்தியது தமிழ்நாடு" என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

"1989 ஜனவரித்திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 23,000 முன்னாள் படைவீரர்களும், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 26,000 முன்னாள் படைவீரர்களும் சிறப்புக் காவலர்களாக நன்முறையில் பணியாற்றியதும், அவர்களின் நடுநிலைத் தொண்டு அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளதும் இங்கு பாராட்டிக் குறிப்பிட வேண்டியதாகும்."

-'கொடிநாள்' அன்று வானொலி-தொலைக்காட்சி ஆகியவற்றில் ஆற்றிய உரையிலிருந்து.

பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள்
வரிசையில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள
முதல் நூல்

'அண்ணா போற்றிய பெருமக்கள்'

திருவள்ளுவர் முதல் இன்றைய ஆன்றோர்கள், சான்றோர்கள், இந்திய விடுதலை இயக்கத் தலைவர்கள், திராவிட இயக்கத் தலைவர்கள், அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பணியாற்றிச் சிறந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் ஆகியோர் பற்றி மறைந்த தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுரைகள் அடங்கிய ஓர் இலக்கியக் கருவூலம் *'அண்ணா போற்றிய பெருமக்கள்' (முதல் தொகுதி)* என்னும் நூல். இது வரலாற்று ஆய்வுக்கு மிகவும் பயன்படக்கூடிய அரிய இலக்கியப் பேழை.

பக்கங்கள் : 456

விலை : ரூ.46/-

நூல் கிடைக்குமிடங்கள்:

1) 'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

2) வள்ளுவர் கோட்டம்,
சென்னை-600 034.

3) அண்ணா சதுக்கம்,
சென்னை-600 005.

(4) மாவட்ட
செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலகங்கள்

குறிப்பு: பத்துப் படிகளும் அவற்றுக்கு மேலும் வாங்குவோருக்கு நூற்றுக்கு 15 விழுக்காடு கழிவுத்தொகை உண்டு.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்

உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி தொடக்க விழா (22-12-89)

தமிழரசு

16-1-1990 ரூ. 1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
31
எழும்பூர், சென்னை-600008.



இந்த இதழில் ...

பொங்கற் புதுநாள்-
தமிழர் திருநாள்
—பேரறிஞர் அண்ணா ... 2

பொங்கல் திருநாள்
—முதல்வர் கலைஞர் ... 7

சாது
— பேரறிஞர் அண்ணா ... 10

இதய நோய்த் தடுப்புக்கு
என்றும் உதவும் அரசு ... 14

அடடா, பொங்கல் அமிழ்து
(கவிதை)
—பாவேந்தர் பாரதிதாசன் ... 17

அருந்தமிழ்க் காவலர்
ஆறுமுக நாவலர் ... 19

தமிழ்த் திருநாள்கண்ட
நமச்சிவாயனார் ... 24
—மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

கால்நடைச் செல்வம் காத்திட ... 27

தைப்பாவை (கவிதை)
—கவியரசு கண்ணதாசன் ... 33

புதுத் தை (கவிதை)
—கவிஞர் வாணிதாசன் ... 36

ஏழைகளை
வாழவைக்கும் திட்டம் ... 37

உலக எழுத்தறிவு ஆண்டு ... 41

நூல்நயம் ... 47

பொங்கல் சிறப்பிதழ்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

சுக்ல ஆண்டு - தை - 3

மலர் : 20 இதழ் : 14

16 - 1 - 1990

பொங்கல் வாழ்த்து

அன்பு நெஞ்சங்களே! ...

வணக்கம்.

பொங்கல் புதுநாளில் 'தமிழரசு' வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர்.

பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்!

-பேரறிஞர் அண்ணா

தமிழக மக்கள் தனிச் சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுபெறும் திருநாள், பொங்கற் புதுநாள். எங்கிருந்தோ ஒரு புத்தெழில், இந்த விழாவன்று அரசோச்ச வந்திடும் விந்தை, சிந்தைக்கு இனிப்பளிக்கக் காண்கின்றோம். இன்னல் மிகுந்த வாழ்வில் பின்னிக் கிடந்திடும் நிலையினிலுள்ள மக்களையும், இன்றோர் நாள், கன்னல் கண்டு பேசிட, செந்நெல் குவிந்திருக்க, செவ்வாழை அருகிருக்க, உழைப்பின் பயனாக உருவான பண்டமெல்லாம் நிறைந்திருக்க, மாடு கன்றுகளும் மேனி மினுக்குடனே-பொங்கிடுவது நாங்கள் தந்திடும் பாலன்றோ எனக் கேட்பது போல் உலவி வர, இதயம் பாடிடும் நாள்! இஞ்சியும், மஞ்சளும் இயற்கை தந்த அணிகலன் என்பதனை உணரும் நன்னாள் என்றெண்ணி, மகிழ்வுதனைப் பெற்றுத் திகழ்தல் மக்கள் இயற்கை; பொருத்தமும்கூட.

நிறைவாழ்வு, கனிச்சுவை போன்றுளது; அதனை நித்தநித்தம் பெற்றிடும் வாய்ப்புக் கிடைக்கப் பெறாதோரும், இன்றோர் நாள், எழில் மாளிகைதனை எட்டிப்பார்த்துக் களிப்படையும் 'இல்லாதான்' போல, இன்னவிதமெல்லாம் இருந்திட்டால், வாழ்வு சிறந்திடும், பயன் மிகுந்திடும், நாடு பொலிவு பெறும், வையகம் கண்டு பெருமைப்படும் என்று எண்ணி மகிழத்தக்க இன்பநாள்.

இந்நாளில், தமிழ் மரபறிந்த எவரும், அறிதுயிலிலிருந்தபடி அண்டந்தனைக் காக்கும் அரி தங்கும் வைகுந்தம்; ஆடுவதில் வல்லவர் யார்; அறிந்திடுவோம் வந்திடு!'' என்று உமைதனை அழைத்து, மானாட-மழுவாட முக்திக்கு வழிதேடும் பக்தர்கள் மனமாட ஆடிடும் சிவனாரின் கைலையும் இவளழகா- அவளழகா? எவள் இன்று எம்முனிவன் தவம் கலைக்க? என்று தேவர் பேசிப் பொழுதோட்டும் இந்திராபுரியும், பிறவும்பற்றிப் பேசிடுவதுமில்லை, எண்ணமும் கொள்வதில்லை.

தாள ஒலி அல்ல. தையலரின் சிலம்பு இசைக்கும் ஒளிதன்னோடு போட்டியிட்டு, கட்டழகி பெற்றெடுத்த இன்பவடிவத்தை எடுத்தணைத்து, முத்தமிடும் இளைஞன் எழுப்பிவிடும் இச்சொலிக்கும் போட்டி எழ, கண்டு கருத்தறிந்து பண்டு நடந்ததனை எண்ணி எண்ணிப் பாட்டன் சிரித்திட, இடையே விக்கல், இருமல் கிளப்பிவிடும் ஒலியும், இன்னோரன்ன ஒலியே இசையாகிடக் காண்கின்றோம் இத்திருநாளில்.

இந்த யுகந்தனிலே, இந்தத் தேசந்தன்னில், இன்ன குலத்தினிலே அவதரித்த மன்னவனும், அவனைக் கெடுக்கவந்த அசுரனும் போரிட்ட போது மன்னவன் முற்பிறப்பில் மாதவம் செய்தான், எனவே, அன்னவனை ரட்சித்து, அசுரனைக் கொன்றிடுதல் முறை என்று, திருமாலும் 'சக்கரத்தை' அனுப்பி வைக்க, வந்தேன்! வந்தேன்! என்று துந்துபி என முழக்கி வந்தது காண் திகிரி, அழிந்தான் அசுரன்; அந்தநாள், இந்நாள்; பண்டிகைநாள்! இந்நாளில், பாகும் பருப்பும் பாலினிற் பெய்து பக்குவமாய்ச் சமைத்து சக்கர வடிவமாக்கி, உண்டு உருசி பெறுவதுடன் உத்தமர்க்குத் 'தானமாக'த் தருவார்கள், அடுத்த பிறவியிலே அரசபோகம் பெறுவார்கள், அத்திரி அருளியது ஆதிக்ரந்தமொன்று, அதிலிருந்து பிரித்தெழுதி அளித்திட்டார் மாமுனிவர், அவர் வழியில் வந்தவரே இன்று புராணம் படிப்பவரும், என்றெல்லாம் கதைத்திடும் நாள் அல்ல. வலிந்து சிலர் இதற்கும் கதை கூறமுனைந்தாலும், எவர்க்கும் அஃது இனிப்பதில்லை; நெஞ்சில் புகுவதில்லை; இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்; அறுவடை விழா! உழைப்பின் பெருமையை உணர்ந்து நடத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி வழிகிறது; அகமும் முகமும் மலருகிறது; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

அகமும் முகமும் மலருகிறது

வாழ்வின் பொலிவு

துலங்கித் தெரிகிறது.

இந்த உலகத்தின் எழில்யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினையும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும்-அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பதுபோல், நல்வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும், நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச் செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலே இயற்கை நீதி எனக்கொண்டு பணிபுரியும் ஆர்வமும் பெற்றிடப் பயன்படும் இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங்குண்டு. அவை தம்மைப் புத்துலக நுண்ணறிவால் மேலும் பயன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத்திட என்னென்ன முறை உண்டு என்பதெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம். இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தைப் புரிந்து கொண்டால், புனலாடிப் பொன்னார் இழை அணிந்து பொட்டிட்டுப் பூமுடித்து. பாற் பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாளைச் சிரிப்புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழிருக்க வேறு தரும் விந்தைதான் ஏதுக்கோ என்று கேட்டிட இயலாமல், குறும்புப் பார்வையினால் அவன் கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகைதான் கொள்ள, இல்லமுள்ளார் எல்லோரும் இன்புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்கவில்லை; ஆனால் முழுப் பாங்கு என்றதனை மொழிந்திடமாட்டேன் நான்; தித்திக்கும் சுவையுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு. முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டுமன்றோ! அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனைதொறும் மனைதொறும் காணப்படும் கவர்ச்சிமிகு கோலம்-புறத்தோற்றம்- கண்ணுக்கு விருந்தாகிறது. ஆனால் அதுமட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது; உணர்பவர்களுக்கு உணர்பவர்களே பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன்பிறந்தோரே; நீவிர், அந்நன்னோக்கத்துடன் இத்திருநாளின் தன்மையினை உணர்ந்து பயன் பெற வேண்டுமெனப் பெரிதும் விழைகின்றேன்.

(1968 உலகத் தமிழ் மாநாடு விழா மலரிலிருந்து)



தொன்மை வாய்ந்த மொழி, தமிழ் மொழி! அதங்கோட்டாசானிடம் மாணவராக இருந்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திலே இலக்கணம் 'ழுதப்பட்டது என்றாலும், அதற்கு முன்பு ஒரு ;யாயிரம் ஆண்டுகளாவது தமிழ்மொழி மெல்ல மெல்ல பண்படுத்தப்பட்டிருந்தால்தான், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டிருக்க முடியும்.

தொல்காப்பியர் காலமே மூவாயிரம் ஆண்டு கட்கு முற்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு வளர்ச்சி, தமிழுக்கு! ஆக எண்ணாயிரம் ஆண்டுக்கால வரலாறு படைத்த பழம் பெரும் மொழி தமிழ் மொழி.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்குக் கிடைத்த கருவூலம் திருக்குறள்!

நூல்களின் தன்மை பற்றிக் கூறவந்த ஆங்கில அறிஞன் ஜான்சன், ''வாழ்க்கை அறிவு புகட்டாத நூல்கள் பயனற்றவை! வாழும் கலையைத் தவிர வேறு எதைக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன?'' என்று கேட்கிறான்.

அந்த அடிப்படையில் நோக்கினால், எந்த வகையில் வாழ்ந்தால் வாழ்வு இனியதாக, எழிலுடையதாக, பண்புடையதாக, பயனுடையதாக இருக்குமென்பதை வலியுறுத்திக் கூறும் உயர் தனிப் பெருநூல் திருக்குறளாகும்.

நோபிள் பரிசுபெற்ற அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர், ''இந்தியக் கருத்தும் அதன் வளர்ச்சியும்'' என்று எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில்,

''திருக்குறள், உயர்ந்த - தலைசிறந்த அறங்கள்
அடங்கிய ஒப்பற்ற உலக இலக்கியம்''

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால்தானே ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனக் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் எக்காளமிடுகிறார்!

''தெள்ளு தமிழ் நடை
சின்னஞ் சிறிய இரண்டடிகள்
அள்ளு தொறுஞ் சுவை
உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம்
கொள்ளும் அறம், பொருள்
இன்பம் அனைத்தும் கொடுத்த திரு
வள்ளுவனைப் பெற்ற
தாற் பெற்றதே புகழ் வையகமே!''

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடுகிறார். வள்ளுவனைப் பெற்றதால் வையகமே புகழ் பெற்றது என அந்தப் பாவேந்தர் பெருமைப்படுகிறார். குறளுக்குப் பெருமை சேர்ப்பதும், குறள்நெறி மங்கியதை உணர்ந்து அதனை மீண்டும் தமிழ் மக்களின் உள்ளத்தில் பதிய வைக்கும் முயற்சியினை மேற்கொள்வதும் நமது கழகத்தினரால் இன்று நேற்று தொடங்கப்பட்ட தொண்டல்ல! சுமார் இருபத்தி எட்டு ஆண்டுகட்கு முன்பு பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முன்னின்று சென்னை நகரத்தில் ''குறள் மாநாடு'' ஒன்றையே மிகச் சிறப்புற நடத்தியிருக்கிறார்கள்.

''எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

இந்தக் குறள் வழி நின்று தான் பகுத்தறிவு இயக்கமே மலர்ந்தது. அந்த இயக்கத்தின் கொள்கை பரப்பும் பணிக்குக் குறள் ஒரு பெருந் துணை எனில் அது மிகையாகாது.

தமிழின் பெருமையை ஏட்டில், இலக்கியத்தில் மட்டும் வாழ வைக்காமல் புதியதோர் எழுச்சியுடன் வருங்கால முழுமைக்கும் வாழவைக்கப் பூம்புகாரின் பதிப்பெடுத்தோம். கடலில் ஆழ்ந்து போன பூம்புகார் நிலத்தில் விளைந்தது.

பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக மொழி பெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு இதோ, கோட்டம் அமைத்துவிட்டோம். வான் புகழ் கொண்ட தமிழ்நாட்டுக்கு வரலாற்றுப் புகழ் கொண்ட வள்ளுவர் கோட்டம்!

*15.4.76 அன்று முரசொலியில்
'கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம் தீட்டப்படுகிறது' என்ற தலைப்பில்
மாண்புமிகு முதல்வர் 'கலைஞர் அவர்கள் தீட்டிய கடிதத்திலிருந்து.*

பொங்கல் திருநாள்

முதல்வர் கலைஞர்

'மா நிலத்து மாந்தரெல்லாம்
மா, பலா, வாழையென்னும் முக்கனியின்
சுவையினூடே
தித்திப்புப் பொங்கல் தின்றிடவே
வேண்டுமென்று
-எம்
சக்திக்கு ஏற்றவாறு உழைக்கின்றோம்.'
பொங்குக பால் என்று முழங்குகின்றோம்
இந்நாளில்; அது
பசும்பாலா? அல்ல; அல்ல!
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் தந்த பால்
அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
அதற்கும் அப்பால்
வேறென்ன பால் பொங்க வேண்டும்?
''கன்னல் கொண்டு வா!'' என்றேன்
சுவைப்பதற்கு -
அவளோ பிள்ளைக்
கனியமுதைத் தூக்கித் தருகின்றாள்;
அதுதான் இன்பம்
''வாங்கி வருக மஞ்சள்'' என்றாள்!
''எதற்காக? அதனை
வழித்திடலாம் உன் முகத்தில்!'' என்றேன்.
என் வீட்டு மகிழ்ச்சி கண்டு
எதிர் வீட்டார் இஞ்சி தின்னல் ஆகாதென்று
அதனை
வேரோடு பிடுங்கிப் பொங்கல்
வேகின்ற பானையிலே கட்டுதலே
இந்நாட் சிறப்பாம்!
முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல் உண்டு;
மாடு பிடிக்கத் தோள்
தட்டுகின்ற வீரர்க்கும் பொங்கல் உண்டு.
காளைதனை வென்றவனே எனக்கேற்ற காளை
எனப்
பாளைநகைப் பாவையவள் பகர்ந்ததெலாம் -
பழைய
நாளை நினைப்பூட்டும் இலக்கியமாம்.
ஒளி வரவால் இருள் மறையும்;
உளி வரைந்த சிற்பங்கள் பளபளக்கும்;
களி நடன மயில்களெல்லாம் கலாபம் காட்டும்.
தெளிதேன் தருக என இழுத்திடுவான் குஞ்சி;
துளிதேன் தந்துவிட்டுப் பறந்திடுவாள் வஞ்சி!
பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்!
எதையும் அன்பால் அணுகி வென்றிட
உதய சூரியன் உயர்ந்தான் இன்று!
பார்த்தீரோ பசுமை வெள்ளம்
பச்சைப் பாய் விரித்தது போல் காட்சி
என்னே!
சிந்துபாடும் சிறுநதியின் சிரிப்பொலி கேள்!
சீறிவரும் வனவேங்கைக் காட்டாற்றுத் தண்ணீர்
மீறி வர வொண்ணுமோ அணைகள் தாண்டி!
கடன் பெற்று வேளாண்மை புரிகின்ற
முயற்சிக்கெல்லாம்
உடன்பட்டு உறுதுணையாய் நிற்கின்ற
அரசுகாண்க!'

*(12.1.1970 அன்று சென்னை
வானொலியில் 'பொங்கல் திருநாள்'
என்ற தலைப்பில் நடைபெற்ற
கவியரங்கத் தலைமையுரையிலிருந்து)*



ஏழை எளியோர்க்கு இலவச வேட்டி, சேலை, அரிசி

தமிழ்நாடு அரசின் சார்பில் மாதவருமானம் ரூ.201 முதல் ரூ.300 வரை பெறும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. இதனால் 31 இலட்சம் குடும்பங்களும், 4 இலட்சம் முதியோர்களும் பயனடைகிறார்கள். ரேஷன் கடைகள் மூலம் அவை வழங்கப்படுகின்றன.

இந்தப் பணி 8.1.90 முதல் நான்கு கட்டமாக நிறைவேற்றப்படுகிறது.

புதிய அரசு சென்ற ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்பொழுது, மாதவருமானம் ரூ.200 வரை பெறும் 52 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை வழங்கியது.

அதைத் தொடர்ந்து-ரூ.201 முதல் ரூ.300 வரை மாதவருமானம் உள்ள ஏழை எளிய குடும்பத்தார்க்குப் பொங்கல் திருநாளில் இலவச வேட்டி-சேலை வழங்க அரசு முடிவு செய்ததையொட்டி, 8.1.90 முதல் 12.1.90 வரை முதல்கட்டமாக வட ஆர்க்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், பெரியார், புதுக்கோட்டை, தஞ்சாவூர், காமராசர், திண்டுக்கல் காயிதே மில்லத், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 10 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை சென்னை, மதுரை, நீலகிரி, கோவை, நெல்லை-கட்டபொம்மன் ஆகிய 5 மாவட்டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச, வேட்டி, சேலை வழங்கப்படும்.

மூன்றாவது கட்டமாக மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை செங்கை-அண்ணா, திருச்சி, இராமநாதபுரம், தேவர் திருமகன், சிதம்பரனார் ஆகிய 5 மாவட்டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படும்.

நான்காவது கட்டமாக ஏப்ரல் 8-ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை சேலம், தர்மபுரி, தென் ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகிறது.

இதைத் தவிர 4 இலட்சம் முதியோர்கள் இலவச வேட்டி, சேலை பெறுகின்றனர்.

முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற்றுக் கொண்டிருப்போர், அந்தந்த மாவட்டங்களில் மேலே குறிப்பிட்ட தேதிகளில் ரேஷன் கடைகள் மூலமாக இலவச வேட்டி, சேலை பெற்றுக் கொள்ளலாம்.

இலவச அரிசி

இது மட்டுமல்லாமல் - பொங்கல் திருநாளையொட்டி 83 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்குத் தலா 5 கிலோ இலவச அரிசியும் வழங்கப்பட்டது.

பட்டை தீட்டிய வைரம்

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய, ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

பேச்சினால் அல்ல

திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல - செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

வள்ளுவரின் குறள்

"அறிவினால் உய்த்துணர்ந்து, ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப, இணைந்திருக்கக் கூடியனவும், ஆன கருத்துக்களைக் கொண்டு இயங்குகிறது வள்ளுவரின் குறள்."

"மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி ஊட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும், எல்லா மதத்தவரும், "எங்கள் குறள்" "எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்" என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்."

"மூடநம்பிக்கை யொழிந்து, அறிவு செம்மைப்பட திருக்குறள் செம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே 'திருக்குறள் கல்வி', அறிவு என்றாலே 'திருக்குறள் அறிவு' என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது."

—தந்தை பெரியார்

சிலப்பதிகாரம் தரும் செய்தி

கரியல்	இறஞ்சி
பேடகம்	வெண்பொத்தி
பரியட்டக்காசு	செம்பொத்தி
வேதங்கம்	பணிப்பொத்தி
புங்கர்காழகம்	கோசிலம்
சில்லிகை	பீதகம்
தூரியம்	பச்சிலை
பங்கம்	அரத்தம்
தத்தியம்	துண்டுகில்
வண்ணடை	கண்ணம்
கவற்றுமடி	வடகம்
நூல்யாப்பு	பஞ்சு
தருக்கு	இரட்டு
தேவாங்கு	பாடகம்
பொன்னெழுத்து	கோங்கலர்
குச்சரி	கோபம்
தேவகிரி	சித்திரக்கம்மி
காத தூலம்	குருதி

"என்ன சொற்கள் இவை? பழக்கத்தில் உள்ளவையாய்க் காணோமே! பொருளும் விளங்கவில்லையே" என்று யோசிக்கிறீர்கள் அல்லவா? - அர்த்தமற்ற சொற்களல்ல அவை.

சாடின்	பேடா
பாப்ளின்	ப்யூசி சில்க்

இவை புரிகின்றன அல்லவா? இவை போன்றுதான் அவைகளும்! துணி வகைகளின் பெயர்கள்! நாகரிக உலகிலே நடமாடுபவர்களின் நாவில் நர்த்தனமாடும் சொற்கள்! வெளிநாட்டுத் துணி வகைகளின் சொற்கள்!

அவை போன்றவைதான், முன்னாலே நாம் பொறித்திருப்பவை - ஆடைகளின் பெயர்கள்!

நம் நாட்டு ஆடைகள் பட்டாலானவை - பாண்டியனின் கொலு மண்டபத்தை அலங்கரித்தன - ரோம் நாடு வரை சென்றன.

இவ்வளவு வகையான பட்டாடைகளை இங்கு, தமிழர்கள் முன்பு தயாரித்தனர். கட்டுக்கதையல்ல. இட்டுக் கட்டியதல்ல - இலக்கிய ஆதாரம் - சிலப்பதிகாரத்திலே காணலாம் - இந்தத் தொழிலின் சிறப்பையும், தமிழரின் நாகரிகத்தையும், வாணிபத்தையும் விளக்கும் இச்செய்தியை!

—பேரறிஞர் அண்ணா

வரலாற்றுப் புகழ்கொண்ட வள்ளுவர் கோட்டம்

முதல்வர் கலைஞர்

பூம்புகார் உருவாக்கியதும், பாஞ்சாலங்குரிச்சி கண்டதும், புதிய எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதும் உணர்ந்த நல்லோர் சிலர், மயிலாப்பூர் திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடொன்றைத் தந்தனர் என்னிடம்!

மறுநாளே நானும் அறநிலைய அமைச்சர் கண்ணப்பனும் மயிலைக்குச் சென்றோம். கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதற்கென கருத்துரை வழங்கிடக் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இதற்கிடையே அந்தக் கோயிலையன்னியில் நகரின் நடுப்பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசையும் தோன்றியது. அதுபற்றி விவாதித்தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டுமென விரும்பினோம்.

பூம்புகார்க் கலைக்கூடப் பணிகளை முன்னின்று நடத்திய சிற்பி, கணபதி ஸ்தபதியாரிடம் கோட்டம் பற்றிய விவாத அரங்குகளைத் தொடர்ந்து நடத்தினோம்.

கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும், வள்ளுவர் சிலை இருக்குமிடம் எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கான ''கோணல் மாணல்'' கோட்டுச் சித்திரங்களை நானே வரைந்து காட்டினேன்.

திருவாரூர் தேர்போல ஒருபகுதி அமைய வேண்டும். கலையரங்கம் ஒன்று இலக்கிய விழாக்கள் நடத்திட மிகப் பெரும் அளவில் உருவாக்க வேண்டும். திருக்குறள் முதலிய தமிழ்ப் பனுவல்களை ஆய்ந்திடும் ஆராய்ச்சி மன்றமொன்றும் அங்கே இடம்பெற வேண்டும், குறளுக்கெனவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஐந்தாறு பெரும் புலவர்கள் (கிறிஸ்துவ ஆலயத்து பாதிரிமார்களைப் போல) வள்ளுவர் கோட்டத்திலேயே இருந்து குறள் பரப்பும் தூய்மைப் பணி ஆற்றிட வேண்டும். உலகில் எந்த நாட்டிலிருந்து வருகின்றவராயினும் இந்தக் கோட்டத்திற்கு வந்து பயன் பெற்றுத் திரும்பிட வேண்டும். குறள் பரவிடும் எளிமையான வழிகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எல்லாக் குறட்பாக்களும் கல்லில் செதுக்கிப் பதிப்பிக்கப்பட வேண்டும். தேரில் வள்ளுவர் சிலை விளங்கிட வேண்டும். கலையரங்கில் தொல்காப்பியரும், அதங்கோட்டாசானும் சிலை வடிவில் அமைக்கப்படவேண்டும். இத்தனை கருத்துக்களையும் எடுத்துரைத்தோம்.

நான் வரைந்து காட்டிய வள்ளுவர் கோட்ட அமைப்புச்சித்திரம் ''கோணல் மாணல்'' கோடுகளாக இருந்தாலும், அடிப்படை எண்ணத்தைப் புரிந்து கொண்டு அதனைத் திருத்தியமைத்து சிற்பிகளும், அரசு அதிகாரிகளும் வேலைகளைத் தொடங்கினர். இடையில் பணிகள் விரைவில் முடிவுற வேண்டி ஸ்தபதியார் எஸ்.கே. ஆச்சார் அவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டார்! அவர் தான் குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்க வண்ணம் வடித்துத் தந்தவர்.

குமரி முனையில் கோயில் எழுப்பிய சிற்பியும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் பூம்புகார் எழுப்பிய சிற்பியும், சேர்ந்து வழங்கும் சிறப்புமிகு கோட்டம்தான் சீர்சால் வள்ளுவர் கோட்டம்!

சிற்பக் கலைக்கு உயிரூட்டும் கழக அரசை அந்த இரு சிற்பிகளுமே பெரிதும் பாராட்டி உள்ளனர்.

''எத்தனையோ அற்புத சிற்பங்கள் இருக்கலாம்! ஆனால் ஒரு பெரிய கதையையே தொடர்ச்சியாக சிற்பங்களில் பூம்புகாரில் வடிக்கச் செய்த அரசு, இந்த அரசுதான்!'' என்று கழக அரசைக் கணபதி ஸ்தபதி பாராட்டினார்; ''பூம்புகார்ப் பெருந்தச்சன்'' என்ற விருதினை மாமல்லபுரத்தில் எனக்கு சிற்பிகள் வழங்கிய விழாவில்!

''பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக்கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளை அவர்கள் தூண்டியிருக்கிறார்களே தவிர, யாரும் தனது வாழ்நாளில் இப்படி ஒரு கல் தேரை பிரம்மாண்டமாக உருவாக்கும்படி கூறியதில்லை''

—என்று ஸ்தபதி எஸ்.கே. ஆச்சார் ஒரு பத்திரிகைப் பேட்டியில் கருத்து வெளியிட்டார்.

நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கும் ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்த திட்டங்கள்தான் இவைகள்! அதே நேரத்தில் தமிழ் மொழியின் மேன்மையை - கலாச்சார மாண்பை நிலை நிறுத்தும் பணியுமாகும்!

இந்தியா ஒரே நாடு! ஒருமைப்பாட்டு உணர்வை வளர்ப்போம்! என்று கூறுகிற அதே நேரத்தில், கலாச்சாரங்களைப் போட்டுக் குழப்ப வேண்டும் என்று யாரும் வாதிட இயலாது!

கலாச்சார உறவுகள் தேவை! வளர்க்கப்பட வேண்டியவை! அதற்காக எல்லாவற்றையும் சேர்த்து ''அவியல் கலாச்சாரம்'' ஒன்றைச்சமைத்திடக் கூடாது! முடியாததுங்கூட!

இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ் ஆண்டுப் பிறப்பு கொண்டாடினோம்! அதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு, தெலுங்கு வருடப் பிறப்பு கொண்டாடப்பட்டது!

தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கரும், ஆந்திரத்தில் உள்ள தமிழரும், தங்கள் தங்களுக்குரிய புத்தாண்டுகளைத்தான் கொண்டாடியிருக்கிறார்கள்.

எனவே, இந்தியா ஒரே நாடு என்பது ஒற்றுமைக்கு - ஒருமைப்பாட்டுக்கு - பாதுகாப்புக்கு - இப்படிப் பல நன்மைகளுக்காக நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை! அதற்காக அந்தந்தப் பகுதி மக்களுக்குரிய கலை, இலக்கியம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் இவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று கருதி விடக்கூடாது.



காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள்

மானுட பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிட மாய் - வாழ்க்கை வழி, நெறி முறைகளுக்கான வழிகாட்டியாய் - அமைந்துள்ளது நமது திருக் குறள். "காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி உலகினில் வேறு ஏது?" என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறை சாற்றிடலாம், அஞ்சிடத் தேவையில்லை.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'- நமது நாடு. எதனால் இப்படிக் கூறினார் பாரதியார். அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழி யினை - வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறை தனைத் தீட்டியதால்தான்.

—பேரறிஞர் அண்ணா

ஓர் இடத்திலே, கோபத்தைக் காட்ட முடிவ தில்லை - ஆனால், கோபமே ஏற்படவில்லை என்று பொருள் அல்ல! அது பிறகு, கொதித்துக் கிளம்புகிறது-வேறோர் இடத்தில்!

தோட்டக்காரன், பரம சாதுவாகத்தான் இருந்து தீர வேண்டி நேரிடுகிறது! இடம் அப்படி!

பொட்டைக் கண்ணி, பொறுமைசாலியாகத் தான் இருக்க வேண்டி நேரிடுகிறது - புருஷன் எதிரில்!

வீட்டில் அவன், தன் கோபத்தைக் காட்ட முடிகிறது. தாராளமாக! ஆகவே, வேலை செய்யு மிடத்திலே கட்டிப் போட்டிருந்த கோபம், கட்டு களை அறுத்துக் கொண்டு காட்டு மிருகம்போல் ஆக்கிவிடுகிறது-பரம சாதுவை! அவள் நிலையும் அதுதான்-தாய் வீட்டிலே-கிணற்றருகே-புருஷன் இல்லாத இடத்திலே!

அவர்கள் மட்டுந்தானா-நாம்? எத்தனையோ சமபவம்-இப்போது நினைவிற்குக் கொண்டு வந்தால் தெரியும்!

பரம சாதுவாக இருப்போம் சில சமயம்- கோபம் கொப்பளித்தெழும் சில சமயம்- இட பேதம், இயல்பைப் பேதப்படுத்தி இருக்கும்!

உளப் பண்பின் நுட்பம் அறிந்தவர்கள் கூறு கின்றனர் - 'ஒரு சமயத்தில், எக்காரணம் கொண்டோ ஏதோ ஓரிடத்தில் மூண்டு- இடபேதம் காரணமாக அடக்கப்பட்ட உணர்ச்சி, (கோபம் மட்டுமல்ல; எந்த உணர்ச்சியுமே) வேறொரு சமயம்-வேறோர் இடத்தில் பல மடங்கு வேகத்துடனும், அளவிலும் வெளிப்படும்' என்று!

குட்டிகளுக்கு அன்போடு பால் கொடுக்கா மலா இருக்கிறது பெண்புலி! மானைப் பிடித்துக் கொன்று இரத்தத்தைப் பெண்புலி குடிக்கும் போது எப்படி இருக்கிறது!

மக்களும் அப்படித்தான்! எனவேதான், 'பரசு ராமன் சாது; பாண்டுரங்கம் கோபக்காரன்; பார்வதி போக்கிரி; பரிமளா சரசி—எனப் பொது வாகக் கூறிவிடுவது முழு உண்மையாகி விடாது' என்று உளப் பண்பு உணர்ந்தோர் கூறுகின்றனர்!

புதுச் சம்பவம்

"ஏண்டா தடிக் கழுதே! ஏது-கோபம் பிரமாத மாக வருதோ?"

"கோபம் வராதா அய்யா?" நான் என்ன மாடா-மனுஷனா? எவ்வளவு உழைத்தாலும்-உள் ளன்போடே நடந்தாலும்-உனக்கு ஒரு துளி ஈவு இரக்கம் ஏற்படுதா? நாயைப் பேசறாப் போல பேசினா-நானும் மனுஷன்தானே-கோபம் வரா மலா இருக்கும்?"

உதைத்தால் தெரியும்-ராஸ்கல்!"

சும்மா இருங்க; உங்களிடம் வேலை செய்ய வந்திருக்கிறேனே தவிர, உதை வாங்க அல்ல! மனுஷாளை மனுஷாளுங்க அடிக்கிறதும், உதைக் கிறதும் தகாதுங்க; பொறுத்துக்கொள்ள வேணும்னு அவசியம் ஒண்ணும் கிடையாதுங்க; மாட்டை அடிச்சாக்கூட, அது முட்ட வரும்; மனுஷன் சும்மா இருக்க வேணும்னு சொன்னா, சரிங்களா?"

டே! நீயா இப்படிப் பேசறே! ஏண்டா-இதெல் லாம், யாரிட்ட போதனை? ஏண்டா-மறுத்து ஒரு பேச்சுப் பேச மாட்டே; அவ்வளவு அடக்க ஒடுக் கமா-சாதுவாக இருந்தவன், இப்படி-ஒரு சொல் சொல்லாதமுன்பு-கோபம் தலைக்கு ஏறி கொக் கரிக்கிறாயே-என்னடா சங்கதி?"

அந்தச் சங்கதி இது!

"இருப்பது இதுதான்."

"என்ன கழுதே! கேட்டா, 'இதுதான்'னு கத் தறே! எனக்கு வெண்டைக்கா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாதா கழுதே!"

தா! சும்மா கழுதே மேய்க்காதே!"

"அடி, நாயே! என்னடி-என்னமோ எதிர்த்து எதிர்த்துப் பேசறே!"

"உள்ளதைச் சொன்னா, 'எதிர்க்கிறது'ன்னு பேரா? நீ, காரணமில்லாமே கண்டபடி பேசவே கல்லா நானு? காலமெல்லாம் இந்தக் கதிதானா எனக்கு? உன் மனசு என்ன-இரும்பா!"

"அடடே! உபதேசம் செய்யக் கத்துக்கிட் டாயா- கழுதே!"

"மறுபடியும், மறுபடியும்..."

"சொன்னா, என்னவாம்! பதில் பேசினே- உதைதான்."

உதைச்சித்தான் பாரேன்."

எழுந்தான்-உதைத்தான்; ஆனால், அவன் தான் வீழ்ந்தான்! பொட்டைக்கண்ணி, அந்தக் காலைப் பலமாகப் பிடித்து ஒரு பக்கம் திருப்பி விட்டாள்!

அதுதான் நடந்த சங்கதி-அவனைச் சிந்திக்க வைத்தது! நெடுநேரம் யோசித்தான்-பலப்பல! புதுப் புதுவிதமாக யோசனை உதித்தது! புது ஆளானான்!

லோயுதத்துக்கு, அந்த சங்கதியும் அதன் சூட் சமும் தெரியாது; அவன் ஆச்சரியப்பட்டான்- 'பரமசாது, ஏன் இப்படி எதிர்த்துப் பேசுகிறான்' என்று!

"சரி; வாயை மூடுடி; உனக்குத்தான் பேசத் தெரியும்னு எண்ணமா?"

"பேசண்டி, பேசு; பேயாட்டம்-ஆடண்டி ஆடு."

"சரி; கிடடி கழுதே முண்டே!"

"யாருடி கழுதே!

"நீதாண்டி நாயே!"

கிணற்றங்கரை அமளி-பொட்டைக் கண்ணி யின் ஏக சக்கராதிபத்தியம் உடைந்தது-செல்லி யின் எதிர்ப்பால்!

உடைந்தது மட்டுமல்ல-பொட்டைக்கண்ணிக் கும் புதுப் புது எண்ணங்கள் உதித்தன; அதன் விளைவுதான், புருஷனிடம் அவள் எதிரித்துப் பேசியது! அதன் பலன்தான்-அவள் கணவன், தன் சர்வாதிகாரம் சரியக் கண்டது! அதன் தொடர்ச்சிதான்-வேலாயுதம், பழையபடி தோட் டக்காரனை எவ்வளவு கண்டித்தாலும், 'அவன் பரம சாதுவாக இருப்பது இனி நடைபெறாது' என்பதைத் தெரிந்துகொண்டது!

வேலாயுதமும் சிந்திக்கலானான் தோட்டக் காரனைப் போலவே - பொட்டைக்கண்ணி போலவே! அவனும் அவர்களைப் போலவே முறையையும் இயல்பையும் மாற்றிக் கொண் டான்! முன்கோபம் இல்லை!

அதோ, பேசுகிறான் கேளுங்கள்:-

ஏண்டாப்பா--'அடாபுடா'ன்னு கூப்பிடுவா னேன்...துரைசாமி! தோட்டத்துக்குத் தண்ணி பூரா பாய்ச்சியாச்சா?"

"ஆச்சிங்க."

"அப்போ, வீட்டுக்குப் போய்ட்டு வாப்பா."

"குழம்பிலே, உப்பு குறைவு குப்பி."

"ஆமாங்க; கவனிக்கலே."

"கொஞ்சம் போடு."

அதோ மேல் சட்டியிலே இருக்கு பாரு; எடுத்துப் போட்டுக்கோ; நான் குழந்தைக்குப் பால் கொடுக்கறேன்."

"ஆமாம்; நீ இரு; நான் எடுத்துக் கொள் கிறேன்."

மாறி விட்டது சுபாவம்! அளவுக்கு மீறித் தண்ணீர் வந்தால்-ஆற்றிலிருந்து வாய்க்காலில் திருப்பிவிட்டு வெள்ளத்தின் வேகத்தைக் குறைக் கிறோமல்லவா! உள்ள உணர்ச்சியும் அப்படித் தான்! அடக்கியே வைத்திருக்க வைத்திருக்க எங் கெங்கோ பாயும்-மேயும்! கட்டுக்குக் கொண்டு வந்து-பக்கம் பாாத்துத் திருப்பி-கொதிப்பு ஏறாத படி குறைத்து முறைப்படுத்தினால், மோதுதலும் தாக்குதலும் குறையும்.

இது நிகழும்போது தெரிவதில்லை; ஆனால், இந்த இரசாயனம் வெற்றிபெற்று நிலைமை மாறின பிறகு,நாம் கூறிவிடுகிறோம்-சூட்சுமத்தைத் தெரிந்து கொள்ளாமல்-'அவன் நல்லவன்; இவன் நல்லவன்' என்று!

இயல்பு, அவ்விதம்-பொதுவான இலக்கணத் துக்கு உட்படுவதில்லை! இடம்-காலம்-முறை-சம்ப வங்கள் - பயிற்சி - மற்றவருடன் கொள்ளும் தொடர்பு- ஆகியவைகளாலே உருவாக்கப்பட்டும், வளர்ந்தும், மாறியும், வேறு உருப் பெற்றும், ஒவ்வொரு வினாடியும் வளருகிறது! அதன் தன்மையை அறுதியிட்டுக் கூறிவிட முடியாது- கூறவும் கூடாது!

தமிழின் தனிச் சிறப்பு

பேரறிஞர் அண்ணா

வாழ்க்கை நெறி முறைகளிலும், நாகரிக நல்வாழ்வு நயத்திலும் மிக மேம்பாடுடன் வாழ்ந் திட்ட பண்டைத் திராவிடர்தம் மொழியாம் தமிழ்மொழி எல்லாம் வல்லதாய், பல்வளமும் பல்கிப் பெருகியதாய், நீண்ட நெடுங்காலந் தொட்டே நிலைபெற்று நீடித்து வழங்கி வருகின் றது என்பது மொழிப் பேரறிஞர் அனைவ ராலும் போற்றப்படுகின்றது இன்று.

தமிழின் சிறப்பியல்புகளை - செம்மொழிக் கேற்ற சீரிளம் இயல்புகளை மொழிவல்லார் - பலரும் மெத்தவும் மெச்சிடுகின்றனர்.

தமிழ்மொழி காலத்தால் மிக மிகத் தொன்மை யானது. இலக்கண இலக்கிய விதிகளையும், வரை முறைகளையும் செவ்வனே பெற்றுள்ளது. தூயது- தூய்மையானது; துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்திடும் சொல் வளம் மிகவும் படைத் தது. உணர்வுகளை நுட்பமாகவும், நுண்ணியமாக வும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டி டும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை, கொள்கை கோட்பாடுகளை வழு வாமல் பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

சூடு, சுவை, சூட்சுமம், மதிநுட்பம் வாய்ந்த குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை அத்துணை யும் ஆற்றிடவல்ல சொல்லாரம் தமிழ்க்களஞ்சியத் தில் ஏராளம், ஏராளம், மிக மிக ஏராளம்; எடுக்க எடுக்கக் குறையாதது; கொடுக்கக் கொடுக்க மாளாதது நம் தமிழ் மொழியின் வளம் - வல்லமை.

சாது

வேலாயுதம்

'பரமசாது-நம்ம தோட்டக்காரன்; கோபம் துளிகூடக் கிடையாது. எனக்குச் சற்று முன் கோபம் வருமல்லவா - அதனாலே, ஒவ்வொரு நாள் அவனைக் கண்டபடி திட்டிவிடுவேன்-'கழுதே; நாயே; கட்டிவைத்து உதைக்கிறேன் பார்' என்றெல்லாம்; கோபிக்கவேமாட்டான்-அவ்வளவு சாது; தலையைக் குனிந்தபடி நிற்பான்; எதிர்த்து ஒரு பேச்சும் பேசவேமாட்டான்.

''ஒருநாள், என்னவோ மனக்கஷ்டம் எனக்கு; அந்தச் சமயத்திலே அவன், ஏதோ தவறு செய்து விட்டான்; அதனாலே வந்த கோபத்தில், எதிரே இருந்த என் செருப்பைத் தூக்கி வீசினேன்-பயல் மீது; நல்ல வேளை-அவன்மீது படவில்லை, அப்போதுகூட அவன் கோபித்துக் கொள்ளவில்லை; கீழே விழுந்த செருப்பை எடுத்துவந்து-பழையபடி-இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான். அவ்வளவு சாது-என் தோட்டக்காரன். நான் பார்த்ததேயில்லை-அப்படிப்பட்ட அபூர்வமான குணமுள்ளவனை- பரம சாது!''

வள்ளி

''பூமாதேவி பொறுமைசாலி'' என்று சொல்கிறார்களே-அது தப்பு! நம்ம பொட்டைக்கண்ணி போலச் சாது இந்தப் பூலோகத்திலே வேறு யாரும் இருக்கமாட்டார்கள்!

பலரது மனப் பண்புகளையும் அறிந்து ஆய்ந்தால் தான், அந்தத் திறன் கைவரும்! மனப்பண்புகளை அண்ணா எப்படி எப்படி யெல்லாம் படம் பிடித்தார் என்பதற்கு இந்த எழுத்தோவியம் ஓர் எடுத்துக்காட்டு!

பேரறிஞர் அண்ணா

அவளுடைய புருஷன் அவளைப் படுத்துகிற பாடு-அடடா-தெய்வங்கூடச் சகிக்காது! நின்னா உதை-குனிந்தா குத்து! ஒரு காரணமுமில்லாமல் சண்டை போட்டு-அவளை நாயைப் பேசுகிற மாதிரியாப் பேசி-கையிலே கிடைச்சதை எடுத்து வீசி நாசம் செய்கிறான்! 'குழம்பிலே ஏண்டி காய் இல்லை; காயிலே ஏண்டி ருசி இல்லை; மாடத்திலே ஏண்டி காசு இல்லை; பிள்ளை ஏண்டி தூங்கவில்லை; பேசினா ஏண்டி பதிலில்லை' என்று-இப்படி விநாடிக்கு விநாடி 'டி' போட்டுத் திட்டியபடி இருப்பான்!

இவ்வளவு உதையையும் பட்டுக்கொண்டு அந்தப் புண்ணியவதி-பாவம்-வாய்திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டா பதிலுக்கு! அவ்வளவு சாது-அவ்வளவு பொறுமைசாலி! நான் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன்- அவளைப் போல் அடக்க ஒடுக்கமானவளைக் கண்டதே இல்லை! கணவன் கோணல் சேட்டை ஆடுகிறதைப் பொறுத்துக்கொண்டு, எப்படியோ குடித்தனம் செய்கிறா அந்தப் புண்ணியவதி! சாது-பரமசாது!''

செல்லி

''பொம்பளையா இவ-பஜாரி! கிணற்றுக்கு வந்தாப்போதும்-ஒரேஆர்ப்பாட்டம்! ஒரு சொல்லு சொல்லுவதற்குள்ளே 'ஓகோ'ன்னு கூவிக்கொண்டு, சண்டைக்குக் கிளம்பிவிடுகிறா ஒரு காரணமும் இல்லாவிட்டாக்கூட சண்டை போடுகிறா!

''அப்பப்பா! என்னென்னதான் பேசறா தெரியுமா! சபிச்சிக் கொட்டறா! வாயிலே வரத்தகாத பேச்செல்லாம் பேசுவா! பேச்சோடு விடுகிறாளா - குடத்தாலே இடிப்பா! கூந்தலைப் பிடித்து இழுக்கிறா! சில சமயம், அடிக்கவே வந்து விடுகிறா!

''அடங்காப் பிடாரி-வம்புச் சண்டைக்காரி-வாய்க் கொழுப்புக்காரி! அவ கிணற்றண்டை வருகிறான்னு தெரிந்தாலே, நான் போகமாட்டேன்-'செ! அந்த வாயாடி போக்கிரிக் கழுதை போய்த் தொலைக்கட்டும்'னு வீட்டிலேயே இருப்பேன்!

'அப்பப்பா! நானும் எத்தனையோ பொம்பளைகளைப் பார்த்தேண்டியம்மா-இவளைப் போல் பஜாரியைக் கண்டதுமில்லை! சனியன்-ஒழியுதாம் புருஷன் வீட்டுக்கு-நாளைக்கு! போய்த் தொலையட்டும்! நம் ஊர் சேமப்படும்! கிணற்றுப்பக்கம் தாராளமாகப் போய் வரலாம்-இனி!''

'பரமசாது' என்று எசமானரால் பாராட்டப்பட்ட தோட்டக்காரனேதான், 'நின்னா உதை-குனிந்தா குத்து' கொடுக்கும் கணவன்!

அந்தக் கணவனுடைய கோணல் சேட்டைகளைப் பொறுத்துக் கொண்டு, 'பூமாதேவியை விடச் சாது'வாக இருக்கும் பொட்டைக் கண்ணி தான், கிணற்றருகே போனால் வாயாடி வம்பு சண்டை பிடிக்கும் பஜாரி!

பரமசாது-கொடிய கணவனானதும், அடக்கமான மனைவி-அடங்காப்பிடாரியானதும் ஏன்!

எசமானரிடம் அவன் படும் கொடுமைகள், அந்தப் பரம சாதுவின் மனத்திலே கிளப்பிவிடும் கோபம் இருக்கிறதே-அங்கு அவர் எதிரே அடங்கிக் கிடக்கிறது! வீட்டில்-அபலையின் முன்னே வெளி வருகிறது! பரம சாது, கோபம், தலைக்கேறிய கொடியவனாகிறான்!

அவனுடைய கொடுமைகளைச் சகித்துக் கொண்டு பரம சாதுவாக-பொறுமைசாலியாக இருக்கும் அந்த மனைவியின் மனத்திலே அந்தச் சமயங்களிலே மூண்டுவரும் கோபம் அப்போது அடங்கிக் கிடக்கிறது-புற்றுக்குள் இருக்கும் பாம்பு போல! தாய் வீட்டில் - கிணற்றருகே வேறு பெண்கள் எதிரே-அந்தப் பாம்பு படமெடுத்தாடுகிறது! அப்போது பரம சாது-பஜாரியாகிறாள்!

வேலை செய்யுமிடத்திலே சாது! வீட்டிலே கோபக்காரன்!

புருஷன் எதிரிலே பொறுமைசாலி! அவளே பிறகு பஜாரி-வேறு பெண்கள் எதிரில்!

சேலம் 'ஒகேனக்கல்' அருகில், ஆடு தாண்டும் அளவுள்ள காவிரி, பிறகு அகண்ட காவிரியாகிறதே-வேறு மாவட்டத்தில்; அதுபோல, இட பேதம், இயல்பு பேதத்துக்குள்ள பல காரணங்களிலே ஒன்று!



புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்!!

பலவித புதிய	டிசைன்கள் வண்ணங்கள் ரகங்களில்	தூயபட்டு மற்றும் தரமான தங்க நூலிழை சரிகையுடன் கூடிய காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டுப் புடவைகள்

கீழ்க்கண்ட எங்களது கிளைகளில் கிடைக்கும்.

காஞ்சிபுரம்: 207, காந்திரோடு, காஞ்சிபுரம்-631 501.

பொரடட்டூர்: 13/401, சிவாலயம் தெரு, பொரடட்டூர்-60 (ஜோதிவஸ்திராலயம்)	**மதுரை** 102, கிழக்கு வெளிவீதி, மதுரை-1 (ஏஜென்சி பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி)	**ஈரோடு** 19, திருவேங்கடசாமிதெரு, ஈரோடு-1 (தேவி ஏஜென்ஸி)	**கோயம்புத்தூர்** 830, கிராஸ்கட் ரோடு கோயம்புத்தூர் (உமையாள் ஏஜென்ஸி)
சென்னை காஞ்சி கூட்டுறவுபட்டு உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர் சென்னை-2	**சேலம்** 256.2வது அக்ரஹாரம் சேலம்-1 (குமரகிரி ஏஜென்ஸி)	**காரைக்குடி** 45,அம்மன்சன்னதி தெரு காரைக்குடி, (ஏஜென்ஸி-ரங்கூன் ஹால்)	**பெங்களூர்** 178, கடை எண் 9 ஆனந்தபவன் காம்ப்ளக்ஸ் சிக்பெட், பெங்களூர்-53 (ஏஜென்சி பி.விஸ்வநாதய்யா & கோ)

போன்: 2222, 2836

தந்தி: ''திருகோ சில்க்''

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு எங்களின் உளம்கனிந்த வரவேற்பு

காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட் நெ.ஜி. 2054

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501

அடடா, பொங்கல் அமிழ்து!

பாவேந்தர் பாரதிதாசன்

தலைவி:

இதுதான் தைத்திங்கள் எனக்கடல் மேல்வந்த
புதிய இளங்கதிர், பொன்அத்தான், பொன், பொன், பொன்!

தலைவன்:

ஆம்!ஆம் என் அன்பின் உருவே அது 'சுடர்ப் பொன்'
நீர்மேல், நிலமேல், நிழல்தரும்பூஞ் சோலை மேல்
உன்மேல் தனதொளியை வீசி உளத்திலெல்லாம்
அன்பின் எழுச்சியினை ஆக்கியது. வாழ்க கதிர்!
காலை மலர்ந்ததுவே கண்ணேநான் சென்று, வயல்
வேலை தொடங்கி விளைச்சல் அறுத்துவந்தே
இந்நாளில் இந்தா எனக்கொடுக்கச் செல்கின்றேன்
பொன்னே! புனலாடி இல்லம் புதுக்கிடுநீ!

தலைவி:

செல்வப் பரிதி சிரித்து வந்த தைக்கண்டீர்
கொல்லைக் கொடிகள் குலுங்கச் சிரித்ததுபோல்
காலை மலர்ந்ததையும் கண்டீர்-விரைந்து வயல்
வேலை தொடங்கி விளைச்சல் அரிந்த அரிக்
கட்டடித்துத் தூற்றியொரு கட்டை வண்டி மேலேற்றிப்
பட்டபெரும் பாட்டின் பயனிந்தா என்பீர், பின்
உள்ள மகிழ்ந்துங்கள் உழுதோளை நான்தொழுது
வெள்ளத் தெடுத்து விடிவெள்ளி போலரிசி
ஆக்கி நல்ல பானையிலே ஆவின்தனிப்பாலைத்
தேக்கி அதிலிட்டுச் செங்கரும்பின் கட்டியிட்டு
''திங்களோ தைத்திங்கள்''''செந்தமிழே தாய்மொழியாம்!''
''பொங்கலோ பொங்கல்'' எனப் பொங்கிவரப் புத்துருக்கு
நெய்யும் பருப்பும் நறும்பொடியும் நேர்கொடுத்து
மெய்யன்பி னோடு தமிழர் விழா வாழ்த்திப்
பானை இறக்கிப் பலபேர்க் கிலையிட்டுத்
தேனைப் பலாச்சுளையைச் சேர்த்துப் படைப்பேன்.
எடுத்துண்டு நீவிர் அதை என்ன வென்று சொல்வீர்!

தலைவன்:

அடடா! இப் பொங்கல் அமிழ்தமிழ் தென்பேன் நான்!

இதயநோய்த் தடுப்புக்கு என்றும் அரசு உதவும்!

“இந்திய இதயநோய் மருத்துவக் கழகமும், மற்றும் இந்திய நெஞ்சு நோய் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கழகமும் இணைந்து நடத்தும் இந்தக் கூட்டுமாநாட்டில் கலந்து கொள்வது குறித்துப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்திய இதயநோய், மற்றும் நெஞ்சு நோய் மருத்துவ, அறுவை சிகிச்சைத் துறையினர் ஆண்டுதோறும் நடத்தும் மாநாடு இது எனக் கருதுகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு, சென்னை நகரைத் தேர்ந்தெடுத்திருப்பதே மருத்துவத் துறையில் சென்னை கண்டுள்ள முன்னேற்றங்களை அங்கீகரிப்பதற்கு ஒப்பாகும். சீனா, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், சவுதி அரேபியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம்கூட பிரதிநிதிகள் வந்து இம்மாநாட்டில் பங்கேற்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவுக்குள்ளிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் வந்துள்ள புகழ்வாய்ந்த பிரதிநிதிகளை உளமார வரவேற்கிறேன்.

நம் நாட்டில் - குறிப்பாகத் தமிழகத்தில், இதயநோய் மருத்துவம், நெஞ்சுநோய் மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியின் தேவை எப்போதோ உணரப்பட்டிருக்கிறது. அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளப் பயிற்சி பெற்ற திறமைசாலிகளான அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் உள்ளனர். சென்னையில் அரசினர் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, இராயப்பேட்டை மருத்துவமனை, குழந்தைகள் மருத்துவமனை ஆகியவற்றிலும், மதுரையிலும் தஞ்சாவூரிலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இதயநோய் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டுவருகிறது.

சென்னை பொது மருத்துவமனையில் நவீன சாதன வசதிகளுடன்கூடிய, இதயநோய் மருத்துவப் பிரிவு, இந்தியா முழுவதிலுமிருந்து வரும் இதயநோய் மருத்துவர்களுக்குப் பயிற்சியளிக்கும் முன்னோடிப் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த இதயநோய் மருத்துவப் பிரிவில் அண்மையில் அணுத்துறை சிகிச்சை முறையளிக்கும் சாதனம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதயம்-நெஞ்சு நோய் மருத்துவப் பிரிவு (Cardio Thoracic) பிறவியிலேயே ஏற்படும் பரம்பரையான நெஞ்சு நோய்கள் பற்றி சர்வே நடத்துவதுடன், நோயினால் சேதமடைந்துள்ள இதய வால்வுகளை மாற்றியமைக்கும் சிகிச்சையையும் மேற்கொள்கிறது. ஓப்பன் ஹார்ட் சர்ஜரி, கரோனரி பைபாஸ் சர்ஜரி, கரோனரி ஆர்டரி சர்ஜரி ஆகிய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள ஏழை மக்களுக்கு, மிக நவீன சிகிச்சை வசதிகள் இலவசமாகக் கிடைக்கின்றன. ஓப்பன் ஹார்ட் சர்ஜரி, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் அறுவைச் சிகிச்சை, புற்றுநோய்ச் சிகிச்சை முதலியவற்றுக்கான சிகிச்சைகளுக்காக 1989-ஆம் ஆண்டில் சுமார் 106 நோயாளிகளுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவியளித்திருக்கிறோம் என்பதை, இங்கு கூடியுள்ள புகழ் வாய்ந்த வல்லுனர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் 75 பேர் ஓப்பன் ஹார்ட் அறுவைச் சிகிச்சைக்காக உதவி பெற்றவர்கள். பைபாஸ் அறுவைச் சிகிச்சை வசதிகளைப் பெருக்குவதற்காக, இந்த அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

பொது சுகாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகப் பெருமளவில் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியிலும், மக்களிடம் நலவாழ்வு பற்றிய அறிவைப் பரப்பி, மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு அவர்கள் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையை மேற்கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பது இடம் பெற்றாக வேண்டும்.

தற்போது இந்த அரசு, பள்ளி நலவாழ்வுத் திட்டத்தை அமல்நடத்தி வருகிறது. அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள, இந்த பள்ளி நலவாழ்வுத் திட்டத்தை நலவாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறையினர் இந்த மாநிலத்திலுள்ள சில ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், நகராட்சிகளிலும் அமல்நடத்தி வருகின்றனர். இந்தத் திட்டத்தின்கீழ் 6 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளும், பின்வரும் குறைபாடுகள் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

1. ஊட்டச்சத்துக்குறை 2. கண் பார்வைக் குறைபாடு 3. பற்களின் நிலைமை 4. காசநோய் 5. தொழுநோய் உள்ளிட்ட, தோல் சம்பந்தப்பட்ட நலக் குறைவுகள், 6. சுபாவக் கோளாறு பிரச்சினைகள் 7. உடல் மற்றும் உளம் சம்பந்தப்பட்ட குறைபாடுகள்.

முதலாம் வகுப்பிலிருந்து 11 வயதாகும்வரை, ஒவ்வொரு மாணவ மாணவியருக்காகவும் தனியாக அட்டைகள் வைத்து உடல்நலம் பற்றிய குறிப்புகள் அதில் பதியப்பட்டு வருகின்றன. அவசியம் என்று தோன்றினால் இந்தத் திட்டத்தின்கீழ் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளைக் கொடுத்து சிகிச்சையளிக்கப்படுகிறது. விசேஷ கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகள் தேவைக்கு ஏற்ப, அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

வாதம் சம்பந்தப்பட்ட இதய நோய்கள் பற்றிய பிரச்சினைகள் என்ன என்பது இப்போது தெரிந்துவிட்டிருப்பதால், நமது திட்டத்தில் இது சம்பந்தமாகக் காணப்படும் இடைவெளியை அகற்றியாக வேண்டும். இதற்காகப் பள்ளி நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் மருத்துவ ஊழியர்கள், அவர்களுக்குக் கீழே உள்ள துணை நிலை ஊழியர்கள் ஆகியோருக்குத் தகுந்த பயிற்சியளிக்க வேண்டும்.

வாதம் சம்பந்தப்பட்ட இதய நோய்களால் தாக்கப்படும் வாய்ப்புள்ள குழந்தைகளுக்கு, அது சம்பந்தப்பட்ட பல்வேறு உடற்கூறுகளைக் கண்டறிவதிலும், ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவதிலும் ஏற்கெனவே நோய் வந்துவிட்டிருந்தால் சிகிச்சையளிப்பதிலும் இவர்களுக்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

இத்தகைய பயிற்சியளித்தால் மட்டும் போதாது. இந்தத் திட்ட அமலின் செயல்பாட்டையும், பலாபலனையும் தொடர்ந்து கண்காணித்து வந்து மதிப்பீடு செய்யும் ஏற்பாடும் இருந்தாக வேண்டும்.

தமிழகத்திலிருந்து இளம்பிள்ளை வாதத்தை அறவே விரட்டும் பொருட்டு, தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். தொத்து நோய்களிலிருந்து எல்லாக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கான அனைத்துத் தடைக்காப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

ஏழைக் குழந்தைகளுக்கு அவர்கள் சாப்பிடும் உணவுடன் கூட, கூடுதலாக ஊட்டச் சத்துள்ள பொருட்களை வழங்குவதன் மூலம், நோயை எதிர்த்துப் போராடும் திறனை அளிக்கவும், தவிர குழந்தைகளின் பொதுவான உடல்நலனை வளர்க்கவும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இப்போது தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டிய நோய்களின் பட்டியலில், வாதம் சம்பந்தப்பட்ட இதயநோயும் சேர்ந்துவிட்டதால், குழந்தைகளுக்கான நலவாழ்வுத் திட்டம் இன்னமும் அதிக இணக்கமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தாக வேண்டியுள்ளது.

மக்களின் ஒட்டு மொத்தமான உடல்நலப் பராமரிப்புக்கு வகை செய்யும் விஷயத்தில், அரசாங்கத்தின் முன்புள்ள பணி மகத்தானது என்பதை மாநில அரசு உணர்ந்துள்ளது.

இந்த முயற்சியில், இத்துறையைச் சேர்ந்த வல்லுனர்களின் ஒத்துழைப்பும், மருத்துவத் தொழில் திறனும் அரசுக்குத் தேவைப்படுகிறது. மருத்துவப் பணியில் உங்களுக்குள்ள பரந்த அனுபவம், புதுமுறையில் உங்களுக்குள்ள ஆர்வம் ஆகியவை கி.பி. 2000க்குள் இந்தக் குறிக்கோளை நாங்கள் எட்டிவிடத் துணைபுரியுமென நம்புகிறேன்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர்,

(27.12.89-இல், சென்னையில், இந்திய இதயநோய் மருத்துவக் கழகமும், இந்திய இதயநோய் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கழகமும் இணைந்து நடத்திய கூட்டு மாநாட்டின் துவக்க உரையிலிருந்து)

இரண்டாம் அட்டை

பொங்கல் திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அலங்காநல்லூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் ஜல்லிகட்டு காட்சி இரண்டாம் அட்டையை அணி செய்கிறது.

மனித உரிமைகளுக்காகப் பாடுபட்ட மாபெரும் தலைவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை; ஆனால், அவர்களுடைய இலட்சியங்கள் -கொள்கைகள் - கோட்பாடுகள் நம்மிடம் நிறைந்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற நாம் பாடுபட வேண்டும்.

— முதல்வர் கலைஞர்

சுத்தம் செய்யப்பட்ட நீரானாலும் காய்ச்சிப் பருகுவது நல்லது



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

டி.ஐ.பி.ஆர்/2818/எம்எஸ்/89

''தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இருகண்கள்; அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன்; அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்'' என்னும் இலட்சியத்தை வகுத்து அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார்.

மும்மொழிப் புலமையும் முதுபேரறிவும்

மிக இளம் பருவத்திலேயே தமிழும், ஆங்கிலமும் கற்றுத் துறை போகிய நாவலர், வேதாகமங்களை அறிதற்பொருட்டு வட மொழியும் கற்றுத் தேர்ந்தார். தொடக்கத்தில், வடமொழிவாணர் சிலர், இவர்க்கு வடமொழியைப் பயிற்றுவிக்கக் கூடாது எனத் தடைக்கற்களாக நின்றனர். பின்னர், 'கற்பித்தல் கூடாது', 'கற்பித்தல் கூடும்' என இரு சீட்டுகளை எழுதி, ஒரு குடத்தி லிட்டுத் திருவுளச் சீட்டு எடுத்தனர். 'கற்பித்தல் கூடும்' எனும் சீட்டு வந்தது. பின்னர் அமைதியாயினர்!

தம்பால் வருவாரிடத்துப் பன்னூல் கருத்துக்களையும், வாரிவாரி வழங்கினார் நாவலர். 'இவரே நம் ஐந்தாம் குரவர்' என இலங்கை மக்கள் மட்டுமின்றி, இந்திய மக்களும் போற்றிப் பாராட்டும் தகைமை பெற்றார்.

தமிழ்த் தோணியில் ஏறிச் சைவக் கடலில் நெடுந்தொலைவிற்குச் சென்றுவிட்ட நாவலர்க்கு இல்லறம் என்னுமொரு இன்பப் பொய்கை இருப்பதே மறந்துவிட்டது. இதனை நினைவூட்ட இவருடைய உடன்பிறந்தார் பன்முறை முயன்று பார்த்தும், தோற்றனர். முடிவில், நாவலரின் குருவாகிய வேதக் குட்டிக் குருவிடம் முறையிட்டனர். அவரும் நாவலரிடம் திருமணம் பற்றி வற்புறுத்தினார். ஆசானின் எந்தக் கருத்தையும் மறுத்து அறியாத நாவலர் முதன் முறையாக அன்றைய தினம், ''இந்த ஒரு பேச்சு மட்டும் வேண்டாம்'' எனப் பணிவுடனும், உறுதியுடனும் உரைத்தார்.

சொற்பொழிவுத் திறன்

1849-ஆம் ஆண்டு வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் முதற் சொற்பொழிவைத் தொடங்கினார் நாவலர். பின்னாளில் இவர் நாவலர் பட்டம் பெறுவதற்கான வித்து அன்றைக்கு ஊன்றப்பட்டது. வாரந்தோறும் நிகழ்ந்த அச்சொற்பொழிவிற்கு வரவேண்டிய கார்த்திகேய ஐயர் ஒருமுறை வரவில்லை. உடனே, அங்கிருந்த மக்கள் நாவலரைச் சொற்பொழிவாற்ற மிகவும் வேண்டினர். இவரோ 'ஆயத்தமில்லை' என முதலில் மறுத்தும், மக்கள் பெரிதும் வற்புறுத்தவே, 'ஆயத்தமில்லை' என்பதையே தலைப்பாக அமைத்து, 'மரணத்திற்கு ஆயத்தமில்லை' என விரித்து, இனிமை மலர, வியப்பு மணக்க, அரியதொரு சொற்பொழிவுத் தேன்மழையைப் பொழிந்தார்.

பொது நலத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் எவன் மீதும் சுயநல விஷமிகள் பொறாமைப் பட்டு, பொய்ப் பிரச்சாரம் செய்வது எப்போதுமே உண்டு. அதைக் கண்டு பயந்து விட்டால் அப்புறம் காரியம் நடக்காது. நம் சொந்த மானம் போவதாக இருந்தாலும் போகட்டும். இனமானம் காப்பாற்றப் பாடுபடுங்கள். விஷமப் பிரச்சாரத்திற்கு, விரட்டுதல் பிரச்சாரத்திற்கு, அடக்குமுறைப் பிரச்சாரத்திற்குப் பயப்படாதீர்கள்

நாவலர் சொற்பொழிவாற்றுதற்கு அணியமாகிய முறை இன்றைய பேச்சாளர்கட்கு ஒளிப்பாதை ஆகும். ஆம்! பேசுவதற்குப் பத்து நிமிடங்கட்கு முன், தொடர்புடைய நூல்களைப் புரட்டி, ஒரு தாளில் பாடல்களின் முதலடிகளைக் குறித்துக் கொள்வார். அதை வைத்துக் கொண்டே, நெடுநேரம் பேசி, மக்களை மகிழ்விப்பார். இதற்கு அடித்தளம் இவர்தம் நினைவாற்றலே ஆகும்.

சைவ சமயத்தின் சிறப்புகளை நாவலர் தேன்தமிழில் குழைத்துத் தந்த காரணத்தால், அந்நாளில் புறச் சமயங்கட்கு மாறவிருந்த எத்துணையோ தமிழர்கள் தாய்ச் சமயத்திலேயே வேரூன்றிக் கிளை பரப்பி விழுதுவிட்டனர்.

நாவலர் பட்டம்

இவர்தம் சொற்பொழிவுத் திறமையும், பெருமையும் கரை கடந்து தமிழகமெங்கும் பரவியது. இதன் பயனாகத் திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர், தமது ஆதீனத்திற்கு அழைத்து, சிறப்புப் பல செய்து, ''நாவலர்'' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். அன்று முதல் இவர் 'ஆறுமுக நாவலர்' எனக் கையெழுத்திடலானார்.

பாப் புனையா நோன்பு

எண்ணற்ற நூற் பயிற்சியும், வரம்பிலா இலக்கண அறிவும் வாய்க்கப் பெற்றிருந்தும் நாவலர் பாக்கள் இயற்றுவதை என்றுமே விரும்பவில்லை. அன்பர்கள் காரணங் கேட்டபொழுது ''பாடல்கள் இயற்றுவது இறைவழிபாடு செய்வதற்கே! அதற்குத் தேவாரத் திருவாசகச் செழும்பாடல்கள் உள்ளபொழுது பாடல் யாத்தல் வேண்டுவதில்லை'' என்று கூறுவார்.

நெஞ்சில் நிறைந்த நாவலர் தொண்டுகள்

நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும், தமிழகத் தில்லையிலும் ''சைவப் பிரகாச சாலை'' எனும் பெயரில் பள்ளிகள் தொடங்கினார். சிதம்பரத்தில், அப்பள்ளி தற்போது 'ஆறுமுக நாவலர் உயர்நிலைப் பள்ளி' எனும் பெயரில் இயங்கி வருகின்றது.

வண்ணார் பண்ணையில், 'வித்தியாநு பாலன யந்திரம்' எனுமொரு அச்சகம் நிறுவி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், சிவாலய தரிசன விதி, சைவ வினா-விடை ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

நாளடைவில் சென்னையில் ஓர் அச்சகம் நிறுவி, திருக்குறள் - பரிமேலழகர் உரை, தொல்காப்பியம்-

உயர்ந்த ரக பட்டு மற்றும் தரமான ஜரிகையுடன் கூடிய,
காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் தயாரிக்கும் சிறந்த கூட்டுறவு நிறுவனம்

டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டுக் கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., கே. எச். 4,
88-89, காந்தி ரோடு காஞ்சிபுரம்-631 501.

கிளை விற்பனை நிலையங்கள்:

1. ஸ்ரீஅய்யப்பன் சில்க் கேந்திரா, பெங்களூர்.
2. சாயிசுதா எண்டர்பிரைசஸ், இந்துப்பூர்.
3. தங்கம் சில்க்ஸ், பாண்டிச்சேரி.
4. காமதேனு சில்க்ஸ், சேலம்.
5. விஷ்ணு சில்க்ஸ். கோயம்புத்தூர்.
6. சரஸ்வதி, & கோ, மதுரை.
7. தேவி சில்க்ஸ், ஈரோடு.
8. காஞ்சி கூட்டுறவு சில்க்ஸ் சென்னை.
9. மான்ரோஸ் டெக்ஸ், கோடம்பாக்கம், சென்னை.

வ. கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்ஸி,
துணை இயக்குனர்/தனி அலுவலர்.

துவக்கம் : 1942 தொலைபேசி : 2478

அழகுக்கு அழகு செய்யும் கண்கவர் வண்ணங்களின் படைப்பு
நங்கையர்கள் விரும்புகிற அழகிய டிசைன்கள்

தமிழகத்தில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட பட்டுக் கூட்டுறவுச் சங்கம்

காஞ்சிபுரம் பட்டு நெசவாளர்கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட் எண்.ஜி. 1099,

443, காந்தி ரோட், காஞ்சிபுரம் 631 501

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

கிளைகள்:

(1) 231-232, சிக்பெட், கிருஷ்ணா மார்க்கெட், பெங்களூர் 560 053.
(2) 15-3-413, மெயின் பஜார், இந்துபூர் 515 201.
(3) 6, சி.எஸ்.ஐ. கட்டடம், அசோகா ரோட், தும்கூர் 572 101.
(4) 12 2-வது அக்ரஹாரம், சேலம் 636 001.
(5) 26/118, இராஜ வீதி, கோயம்புத்தூர்-641 501.
(6(12, கிருஷ்ணராஜேந்திரா சர்க்கிள், மைசூர்-570 001.
(7) 139, கீழ வெளி வீதி, மதுரை-625 001.
(8) 15/132, சுபாஷ் ரோட், நியூடவுன், அனந்தபூர்-515 001.
(9) 218, நேதாஜி ரோட், ஈரோடு-638 001.
(10) காஞ்சி கூட்டுறவு பட்டு, சென்னை-600 002.

இரா. நடராஜன்,
உதவி இயக்குநர்/தனி அலுவலர்.

தமிழ் வளர்த்த பெரியார்:

அருந்தமிழ்க் காவலர்

ஆறுமுக நாவலர்

வேலூர் ம. நாராயணன்

பிறந்தது முதல் தமிழே நினைந்து, தமிழே பேசி, தமிழே உயிர்த்துத் தமிழருக்காகத் தம் அகவாழ்வைத் துறந்த தண்டமிழ்த் துறவி;தொண்டர் தம் தலைவர்; இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் தந்த அருந்தமிழ்க் காவலர் ஆறுமுக நாவலர் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (18-12-1822) தோன்றி, தமிழுக்கும் சைவத்திற்கும் இமாலயத் தொண்டு களாற்றி அந்நூற்றாண்டின் இறுதியில் (4-12-1889) புகழுடம்பு எய்தியவர் நல்லூர் ஆறுமுக நாவலர்.

ஏதோ பிறந்தோம்; வளர்ந்தோம்; மணம் முடித்தோம்; மழலையரைப் பெற்றோம்; எல்லோரையும் போலவே ஒரு நாள் மறைந்தோம் என்னும் ஒரு சராசரி மாந்தனைப் போன்றில்லாமல், தாம் வாழ்ந்திருந்த அறுபத்தேழு ஆண்டுகளில் தமிழ் செழிக்கவும், சைவம் ஓங்கவும் உழைத்தவர் ஆறுமுக நாவலர்.

இளமைப் பருவம்

ஆறுமுக நாவலரைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிப் பெருமை பெற்றவர்கள் கந்தப்ப பிள்ளையும், சிவகாமி அம்மையாரும் ஆவர். தம் பெற்றோர்க்கு இறுதி மகவாகத் தோன்றிய நாவலர், இளம் வயதிலேயே கூர்த்த மதியுடன் விளங்கினார்; அறிவு கொழுந்தியதும் பற்றிக் கொள்ளும் கற்பூர மலையாகத் திகழ்ந்தார். பன்னிரண்டாம் வயதிற்குள் 'நிகண்டு', 'அந்தாதி', 'பிள்ளைத்தமிழ்' போன்ற நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

நாடகக் கலையில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த இவர்தம் தந்தையார் ஒருநாள் நாடகமொன்றினை எழுதிக் கொண்டிருந்த நிலையிலேயே மறைந்துவிட்டார். முற்றுப் பெறாத அந்த நாடகம், கட்டி முடிக்கப் பெறாத இல்லம் போலாகி விட்டது. அதனை எழில்மிகு மாடமாக்கி, முற்றுப் பெறச் செய்தார் நாவலர். அப்பொழுது இவர்க்கு வயது ஒன்பது!

இந்நிகழ்ச்சியால், இவர்தம் தமையன்மார்கள் பெரிதும் மகிழ்ந்தனர். அரவணைத்துப் போற்றிப் பாராட்டி ஒத்துழைப்பு நல்கினர். அதன் பயனாக நாவலரின் நெஞ்ச மஞ்சத்தில் தமிழும் ஆங்கிலமும் முறையாகவும், செறிவாகவும், நிறைவாகவும் சென்றமர்ந்தன. இரு மொழிகளையும் பெயர்க்கும் ஆற்றலைப் பெற்றார் நாவலர்.

இயேசு மதமும் இயற்றமிழ்க் கடலும்

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெர்சிவல் பாதிரியார் ஒரு பள்ளி நடத்தி வந்தார். அப்பள்ளியில் நாவலர் தமிழும், ஆங்கிலமும், பாங்குறப் பயின்றார். இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைத் தெளிவாக உணர்ந்த பெர்சிவல் பாதிரியார், தம் பள்ளியில் மாணவராக இருந்த நாவலரைக் கீழ் வகுப்புகட்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகட்கு தமிழும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக நியமித்தார். அப்பொழுது நாவலர்க்கு வயது பதின்மூன்று!

விவிலியத்தைத் தமிழில் பெயர்க்காமல், கிறித்தவத்தைத் தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்யவியலாது என்பதை நன்குணர்ந்த பெர்சிவல் பாதிரியார், அப்பெரும் பொறுப்பை ஆறுமுக நாவலரிடம் ஒப்படைத்தார். நாவலரும் அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றினார். ஏறத்தாழ, ஒரு நூற்றாண்டாகியும் இன்றளவும் தமிழ்க்கிறித்தவர்கள் இவராக்கிய விவிலியத்தையே பின்பற்றுகின்றனர் என்பதொன்றே இவர்தம் மொழிபெயர்ப்பு வன்மையைத் திண்மையாகக் காட்டுகின்றது.

பெரியபுராணப் பற்று

ஒரு நாட்டின் முதலமைச்சரால் (சேக்கிழார்) இயற்றப்பட்டது பெரிய புராணம்!சைவந் தழைக்கப் பாடுபட்ட அறுபத்து மூவர் வரலாற்றை நிறை தமிழில் நவில்வதுவே பெரிய புராணம். நம் நாவலர் இந்நூலைத் தம் உயிருக்கும் மேலாக விரும்பினார்.

இலட்சியம்

உலகில் உயர்திணையாகப் பிறந்தவர்க்கெல்லாம் ஓர் இலட்சியம் நிச்சயம் வேண்டும். நாவலரும்

தரமான காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பாவாடைகள், சோளி ரகங்கள்
நியாயமான விலையில் வாங்கச் சிறந்த இடம்.

தொலைபேசி : 2201 தந்தி : "முருகோசில்க்"

காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. ஜி, 1653,

79, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501.

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

விற்பனை நிலையங்கள்:

1. 'காஞ்சி கூட்டுறவுப் பட்டு,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811 அண்ணா சாலை,
சென்னை-600 002.
2. நெ.36, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
(நேரடி விற்பனை நிலையம்)
3. நெ. 9, கீழ் ஆவணி மூல வீதி,
மதுரை-625 001.
4. "வேதா சில்க்ஸ்"
நெ. 10.சி. இரண்டாவது அக்ரஹாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீவெங்கடேஸ்வரா சில்க் அவுஸ்,
நெ. 206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்-560 053.

க. சண்முகசுந்தரம்,
இணை இயக்குநர்/தனிஅலுவலர்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குச் சிறந்த இடம்

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட். நெ.ஜி. 1612

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

168.எ. காந்திரோடு காஞ்சிபுரம். 631 51. போன்:2202

கிளை விற்பனை நிலையங்கள்:

1.	28-10-26, மசூதி வீதி, அருண்டேல்பேட், விஜயவாடா-520 002.	போன்:77375
2.	231/13, கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட், பெங்களூர்-560 053	
3.	139, கீழவெளிவீதி, மதுரை-625 001	போன்:36988
4.	27, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்-636 001	போன்:68740
5.	15-3-423, பிரகாசம், பந்தலு ரோடு, இந்துப்பூர்-515 201	போன்:21061
6.	19, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு-638 001	போன்:78905
7.	காஞ்சி கோஆபரேடிவ சென்னை-600 002.	

இரா. விஜேந்திரன், பி.ஏ.,
துணை இயக்குநர்/தனிஅலுவலர்.

★★எங்கள் சங்கம் மாநிலத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேனாவரையர் உரை போன்ற பதினைந்து நூல்களைப் பதிப்பித்து அன்னைத் தமிழுக்கு அளப்பரிய தொண்டுகள் புரிந்தார்.

இவருடைய பதிப்பு நூல்கள் பிழையற்றிருக்கும்; திருத்தமுடன் தெளிவான விளக்கம் தருவனவாக இருக்கும். நாவலர் பதிப்பு என்றாலே, தமிழரிடையே நல்ல மதிப்பு பரவி இருந்தது.

ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், கோயிற்புராண உரை, சைவ சமய நெறியுரை, திருச்செந்தில் அந்தாதியுரை போன்ற நூல்களுக்கு இவர் எழுதியுள்ள உரை பொன் போல் போற்றத் தக்கதாகும்.

நான்கு பால பாடங்கள், இலக்கண வினா-விடை, திருவிளயாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனம் போன்ற நூல்களைப் புதிதாகப் படைத்துத் தமது படைப்பாற்றலையும் நாவலர் நிறுவியுள்ளார்.

பிறவாப் பெருநிலை

ஏறத்தாழ முப்பத்திரண்டாண்டுகள் ஓய்வின்றித் தொண்டாற்றிய நாவலர், 1889-ஆம் ஆண்டின் உச்சியில், ஒரு நாள், யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாவில் உரையாற்றினார். அப்பொழுது, தம்மையும் மறந்து யாவரும் கண்ணீர் சிந்துமாறு மிக உருக்கமுடன் பேசினார். பேச்சின் முடிவில், "இதுவே என்னுடைய கடைசிப் பேச்சு" எனக் குறிப்பிட்டார். அதன்பிறகு அவர் எந்தக் கூட்டத்திலும் பேசவே இல்லை. உடல் நலம் குன்றிய நிலையில், 4-12-1889 அன்று பிறவாப் பெருநிலை எய்தினார். அந்தநாள் தமிழுலகமே வருந்தித் துடித்த நாள்களுள் ஒன்றாயிற்று.

இசைபட வாழ்ந்த இலங்கை நாவலர் இவ்வையகத்திற்கு வழங்கிச் சென்ற செய்திகளுள் ஒன்று:

"ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்து நிற்கின்றீர்கள். தான் விரும்பிய சமயக் கொள்கைவழி யொழுகுவது தனிமனிதனின் உரிமையாகும். அதனினும் சிறந்தது, அவரவர் சமயத்தில் நின்று ஒழுகி உலகிற்குப் பயன் செய்வதாகும்" என்பதாகும்.

மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை செயலாக்க முறைகள்

தமிழகப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளின் நிதி நிலையினை வளப்படுத்தவும், அதிக அளவில் மாணவர்களைக் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளில் உறுப்பினர்களாக்கவும், கூட்டுறவுப் பண்டகச்சாலைகளைப் பள்ளிகளில் நன்முறையில் செயல்படச் செய்து, அதன் மூலம் மாணவச் சமுதாயத்தினருக்குத் தேவையான பொருள்களை வழங்க வழிவகை செய்யவும் பள்ளி நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட அறிவுரைகளை அரசு வழங்கியுள்ளது:

ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் சேர்க்கையின் போது அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுடன், மாணவர்களைக் கூட்டுறவுப் பண்டகசாலையில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள சேர்க்கைக் கட்டணமாக ரூ. 5 வசூலிக்க அனுமதிக்கப்படுகிறது. இத்தொகையைப் பங்குத் தொகை முதலீடாக வைப்பு நிதியில் செலுத்தலாம்.

பள்ளியிலுள்ள ஆசிரியர்களையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம். பொறுப்புள்ள ஆசிரியர் ஒருவரைக் கூட்டுறவுப் பண்டகச்சாலைக்குப் பொறுப்பாளராக நியமித்து, சிறப்பு மதிப்பூதியம் ரூ. 100/- மாதந்தோறும் அனுமதிக்கலாம்.

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில், எழுதுதாள், அழிப்பான், முக்கிய குறிப்புப் புத்தகங்கள், செயல்முறை நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பெருமளவில் விற்பனை செய்வதன் மூலம், இலாபம் அதிகம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை சிறந்த முறையில் நடைபெற மூலதனம் தேவை. இது வசதி படைத்த மாணவ/மாணவிகளிடமிருந்து நிர்ப்பந்தமின்றிப் பெறப்பட வேண்டும். பள்ளி வசதிக் கட்டணத்திலிருந்தும் கணிசமான தொகையை முதலீடாகச் செலுத்த அரசு அனுமதியளிக்கிறது.

பள்ளிகளில் சஞ்சயிகா திட்டம் நடைமுறையில் இருப்பதால் மாணவ/மாணவியரிடையே சிக்கன மனப்பான்மை ஏற்பட்டு பணம் சேமிக்க வாய்ப்புள்ளதால், பெற்றோர்களுக்குச் சிரமம் கொடுக்காமல் பங்கு முதலீடு திரட்டப்பட வேண்டும்.

மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை நன்முறையில் செயல்படுவதற்கு மூலதனம் நிதி உதவி தேவை. மாணவர்களுக்குத் தேவையான அதிகப்படியான பொருள்களை வாங்கி நல்லமுறையில் செயல்படச் செய்வதற்கு அரசு கடன் உதவி மூலம் நிதி உதவி திரட்டலாம். குழு உறுப்பினர்களும் கூட்டுறவுப் பண்டகச்சாலை ஆய்வாளரும் நல்லமுறையில் செயல்பட வேண்டும்.

அந்தந்தப் பள்ளிகளில் வசதி நிதிக் குவிப்பிலிருந்து, மாணவர் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம். அப்பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்து, பள்ளிக் கல்வி இயக்குநர் நிர்ணயிக்கும் ஒரு தொகையைச் சிறப்பூதியமாக வழங்கலாம்.

தமிழ்த் திருநாள் கண்ட நமச்சிவாயனார்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

“பொங்குக பொங்கல் பொங்குகஎங்கணும்
பொங்குக பொங்கல் இன்பமே எய்துக!
பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
பொங்குக பொங்குக பொங்குக பாலும்!
ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!
புத்துடை உடுமின் புத்தணி அணிமின்!
பத்தி கொண்டே பரமனைப் பணிமின்!
நந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!
தண்கடற் பரப்பிற் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்
வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

முதன்முதலாகப் பொங்கல் விழாவைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடத் தலைப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாயனார் வழங்கிய திருநாள் வாழ்த்து இதுவாகும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்வு தமிழர் என்னும் உணர்வற்றுத் தட்டுத் தடுமாறி நின்றது. தமிழ் மரபு, தமிழர் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்பவை குறித்துத் தெளிவின்றி நிலை கெட்டு நின்றனர் தமிழர். தமிழ் கற்ற புலவர்களிலேயே பலர், சமயச் சார்பால் கருத்துக் குழம்பிக் கிடந்தனர் எனில் மக்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? தமிழ் கற்றார் சிலர், கற்றாருள்ளும் தெளிந்தார் மிகச் சிலர். அவருள்ளும் தெளிந்ததனை வெளியிடும் துணிவுடையாரோ அரியர்.

அந்நிலையைத் தெளிந்தார் நமச்சிவாயனார். மக்களிடையே விளங்கிய பல்வேறு விழாக்களும், சில நம்பிக்கைகளையும் சமயச் சார்பான கதைகளையும், வடமொழிவழி எழுந்த வழக்குகளையும் ஒட்டியே கைக்கொள்ளப்பட்டன வாதலையும், பொங்கல் விழா ஒன்றுமே தமிழர் மரபொடு பொருந்தியும், இயற்கை நெறியோடும், உழவுத் தொழிலோடும், வேளாண்மைப் பண்போடும், விழாச் சூழலோடும் விளங்கியும், சமய வேற்றுமை கடந்து தமிழர் யாவர்க்கும் உரிய தாயும் அமைதலைக் கண்டறிந்தார். வாழ்கின்ற தமிழ் மக்கள் எல்லோரும், தாய்மொழிப் பற்றும் தமிழ் மொழித் தெளிவும் கொள்ளுதற்கு இத் திருநாளே ஏற்ற நன்னாள் எனக் கொண்டார்.

பண்டைத் தமிழரின் பெருவாழ்வை - சங்கத் தமிழ் இலக்கிய மாட்சியை - தமிழர்கள் பயின்ற கூத்தை - இத் திருநாளில் விளக்கியுரைத்தும்,

பாடிக் கேட்டும், ஆடிக் கண்டும் மக்கள் அறிந்து மகிழ வேண்டும் என்று விரும்பினார்.

அதன் பயனாகவே, பழந் தமிழ்ப்பொங்கல் விழா, உழவரும் பிறரும் மகிழ்ந்த கொண்டாட்டம், முத்தமிழ் முழங்கும் தமிழ்த் திருநாளாய் வண்ணங் கொண்டது. நமச்சிவாயனார் துவக்கி வைத்த தமிழ்த் திருநாளே, தென்னவர் எழுச்சிக்கு உரமூட்டும் திராவிடர் திருநாளாகவும் கொண்டாடப்படுவதாயிற்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், மக்கள் இடையே தமிழ்ப் பற்று இல்லை. மாணவர் இடையே தமிழ் கற்கும் ஆர்வம் இல்லை. அறுநீர்க் குளத்தில் ஆம்பல் பூக்குமோ? காயும் வெயில் எரிக்கையில் அல்லிதான் மலருமோ? தமிழகத்தின் தலையாய பல்கலைக் கழகத்திலும் ஒரு வட்டாரப் பேச்சு மொழி என்னும் பெயருடன், செந்தமிழ் ஓர் ஒதுக்கிடத்தில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப் புலமை எய்துதற்குப் பல்கலைக்கழகத் தேர்வு முறையிலேயே இடமில்லை. வடமொழியும் கற்றார்க்கே தமிழ்ப் புலமை உடையார் என்னும் தகுதி கிடைக்கும் என்னும் இடர்ப்பாடும் இழுக்கும் அடர்ந்து நின்றன. பள்ளிச் சிறார் தம் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்பக் கற்றற்கான நடையில் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லாது தமிழ்த் துளிர்கள் கருகிக் கொண்டிருந்தன.

அந்நிலையில் இந்தக் குறைகளைக் களைவதில் முன்னின்று, தமிழுக்குப் பல்லாற்றானும் தொண்டாற்றியவர் பேராசிரியர்நமச்சிவாயனார்.

தொண்டை மண்டலத்தில் உள்ள காவேரிப்பாக்கத்தில் 1876-ஆம் ஆண்டில் பிறந்து, இளமையிலேயே தமிழ்க் கல்வி கற்று, சென்னையில் ஒரு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, பெரும்புலவர் (மகா வித்துவான்) சண்முகம் பிள்ளை என்பாரிடம் தம்மை மாணவராக ஆக்கிக் கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கேட்டுத் தெளிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றிலும், மேரி அரசியார் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றிப் புலமைத் திறத்தாலும், தமிழ் ஆர்வத்தாலும் தம்மிடம் பயின்ற மாணவ மாணவியர்க்குத் தமிழ் அமுதூட்டி, இலக்கியத் தேன் சுவை பயிற்றி, இளந் தமிழ் உள்ளங்களில் தமிழ் ஆர்வப் பயிர் தழைத்தோங்கச் செய்தார். அதுகாறும், தமிழ் மாணவர்கட்குத் தமிழ் வகுப்பு என்றாலே வேண்டப்படாத வேம்பாக, கசப்பு மருந்தாக இருந்தது போக, அவரது தமிழ் இனிமையால், அதுவே விரும்பிச் சுவைக்கும் கரும்பாக, இனிப்புக் கட்டியாக மாற்றங் கொண்டது என்றால் மிகையாகாது.

அக்காலப் புலவர்கள் சமய நோக்கத்துடனேயே தமிழ் ஏடுகளைப் பயின்றதன் பயனாக, அவர்களிடையே சமய வேற்றுமை தலைதூக்கி நின்றது. சாதி பற்றிய மூடநம்பிக்கையாலும் வெறுப்பு வளர்ந்தது. இவற்றால் பிறந்த சண்டைகளும்,



தாக்குதல்களும் பலப்பலவாகலின், புலவரிடையே ஒற்றுமையும் புலமையிலே மொழிப் பற்றும் அரிதாயின. அவர்களால் தமிழ் தழைத்து வளரத்தான் கூடுமோ? நமச்சிவாயனாரோ, தம்முடைய ஆசிரியரான பெரும்புலவர் சண்முகனாரிடம் கற்கப் புகுந்த காலத்திலேயே, தாம் சமயச் சண்டையிலும், சாதிப் பிணக்குகளிலும் ஒருநாளும் தலையிடா திருப்பதாக அவர் விதித்த கட்டளையை உளமார ஏற்றிருந்தார். பின்னாள்களில் அவரது எண்ணமும் செயலும் பொது நோக்குடையனவாகச் சிறக்க அஃது ஏதுவாயிற்று எனலாம். அவர் சைவந் தழுவி நின்ற போதிலும், அவரது தமிழ்த்தொண்டுஒரு பக்கச் சார்புடையது ஆகாது, புலவர்களிடையே தமிழ் அடிப்படையினின்று எழும் பொது உணர்ச்சியும், ஒற்றுமையும் உருவாகத் துணையாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடுதற்கும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுதற்கும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில் அவற்றிற்கு வாய்ப்பாக முதன் முதலாகப் புலவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்க முனைந்தார் அவர். சென்னைத் தமிழ்ப் பண்டித சங்கம் பிறந்தது. புலவர்கள் ஒன்று கூடி, உரையாடி மகிழக் கருத்து விருந்து நுகரத் தம் குறைகளை அரசினருக்கு எடுத்துக் கூறிக் களையுமாறு கேட்க, தமிழாசிரியர் தம் மதிப்பைக் கல்வித் துறையிலும் சமுதாயத்திலும் உயர்த்திக் கொள்ள இச்சங்கமே உறுதுணையாயிற்று.

அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிறந்த புலவர்களாயினும் குறைந்த ஊதியமே பெற்று வருந்தினர். நமச்சிவாயர், அரசாங்கத்தை வற்புறுத்தித் தமிழாசிரியர் தம் ஊதியத்தை உயர்த்தச் செய்தார்.

பேராசிரியர் 1917-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவின் தலைவராகவும், 1920-ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தமிழ்க் கல்விக்குழுத் தலைவராகவும் அமர்ந்தார்.

சுடுநெருப்பில் புடம் போடப் போடத்தான் நல்ல தங்கம் கிடைக்கும். அதுபோல், பொது வாழ்க்கையில் இடையூறுகளுக்கு ஈடுகொடுத்தால்தான் நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் நல்ல பணிகளை ஆற்றிடமுடியும்.

அந்நாள்களில் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற விரும்பும் ஒரு தமிழ்மகன், தமிழேயன்றி வடமொழியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என விதி இருந்தது. வடமொழியை ஒதுக்கின் பிறிதொரு மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். அதன் பயனாகத் தமிழ் நாட்டில் வாழும் பிறமொழியாளர்கள் 'வித்துவான்' ஆவதற்கு இருந்த எளிய வாய்ப்பு தமிழர்க்கு இல்லை. 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களும், அச் சொல்லின் வடிவுக்கேற்பப் பெரும்பாலும் வடமொழிபயின்றவர்களே! வடமொழியும் கற்றவர் என்று கூறுவது பொருந்தாது. தமிழும் கற்றவர்கள் எளிதாகத் தமிழ் வித்துவான்கள் ஆனார்கள். உண்மையான தமிழ்ப் புலமையுடையார் பலரும், 'வித்துவான்' பட்டம் பெறுதற்குக் கருதவே இடமில்லாத நிலை! என்னே தமிழ்த் தாயின் அவலம் இருந்தவாறு!

நமச்சிவாயனார் கல்விக் குழுத் தலைவராக அமர்ந்த பின்னரே, பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலமையும் அமர்வதாயிற்று. தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு, இத்தேர்வு விதிகள் இடையூறாகும் வகையை அரசினருக்கு விளக்கிக் கூறி, வலியுறுத்தி அதனை மாற்றுதற்கு இசைய வைத்தார். அதன் பயனாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்ற அளவில், வித்துவான் பட்டம் பெறலாகும் நீதி பிறந்தது. இக் காலத்தில் தமிழ்ப் புலமையுடையார் பலராகப் பெருகி வாழ்தற்கு வழியமைத்துத் தந்த பேரறிவாளர் அவரே.

தமிழ்மொழி, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் ஒவ்வொரு துறையிலும் சிறக்க வேண்டுமென விரும்பி அவர் ஆற்றிய பணிகள் பல.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகள் படித்தற்கு ஏற்ற 'சிறுவர் ஏடு' முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வகுப்புகள் முடிய ஒவ்வொரு நிலையிலும் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற, உற்ற பாட நூல்கள் வரை, ஆங்கில மொழியில் அமைந்தவற்றிற்கு ஈடான பல ஏடுகளை எழுதினார் பேராசிரியர். எளிதான சில சொற்களில் தொடங்கி, வளமான கருத்துச் செறிந்த செந்தமிழ்க் கட்டுரை வரையில் இயற்றி, தமிழ்க் கல்விப் பயிர் வேர்விட்டு வளர நீர் பாய்ச்சினார். கற்றார் பலரும் படித்தற்கு ஏற்ற நூல்களும் எழுதினார்.

நாடகத் துறையில் மேல் நாட்டு இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுற்ற அவர், சில நாடகங்களும் (கீசகன், பிருதிவிராசன்) இயற்றினார். நல்ல தமிழ் நடை வளரவும் இலக்கியப் பயிற்சி செழிக்கவும், ஒரு திங்கள் ஏடு தேவை எனக் கண்டு 'நல்லாசிரியன்' என்னும் இதழைத் தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலம் பயனுற நடத்திப் பலருக்கும் அத்துறையில் வழிகாட்டியானார்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் அவர் ஆர்வம் கொண்டார். இளம்பூரணர் உரையோடு, தொல்காப்பியத்தின் சொல் பொருள் அதிகாரங்களையும், இறையனார் களவியலையும் வேறு சில இலக்கியங்களையும் அவர் பதிப்பித்தார்.

அவரது தமிழ்ப் பணியின் அருமையும் பெருமையும் அவர் மறைந்த ஞான்று தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் உள்ளங் கரைந்து பாடிய இரங்கற்பாவின் அடிகள் சிலவற்றால் விளங்கும்.

'அருந்திறை தமிழைப் பொருந்தி அமிழ்தென
என்றும் இன்மொழி நன்றே வழங்கினை
சாதியை யொழித்து நீதியில் நடந்தனை
செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்
கால ஒப்பனை சாலச் செய்தனை

நின்மொழி யுன்ன நின் செயல் எண்ண
உள்ளங் குழையுமே ஊனுங் கரையும்
என்ப நெக்குறும் அன்புக் கடலே
பெரிதே துன்பம் பெரிதே
காண்ப தென்றோ மாண்புறு முகமே!'

இவ்வாறு தமிழ்ப் பெரியார் உள்ளத்தில் இடம் பெற்ற நமச்சிவாயர் தமது உள்ளத்தில் தமிழுக்குத் தந்திருந்த இடம் தான் என்னே?

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணாய் வயங்குதன் மொழியே!
தரணியில் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தனித்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!'

தனித்தினிது ஓங்குவாய் எனத் தமிழை வாழ்த்தி, தமிழ் உணர்வு வளரும் வழி போற்றித் தமிழ்த் திருநாள் விழா எங்கணும் தோற்றித் தமிழனாக வாழ்ந்த பேராசிரியர் நினைவு தமிழொடும் வாழாதோ?

கால்நடைச் செல்வம் காத்திட..

டாக்டர் சி.கு. கல்யாண சுந்தரம், எம்.வி.எஸ்.சி,
இயக்குநர், கால்நடைப் பராமரிப்புத்துறை, சென்னை.

தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன், நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், மத்திய, மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி, பராமரித்து, பொருளாதாரத்தினை மேம்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும்.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள், வாத்து, பன்றி இனங்கள் விநியோகிக்கப்படுவதுடன், அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கால்நடைத் தீவனப் பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு போன்ற இதரப் பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது. இத்திட்டங்களின் மூலமாக, பழங் குடியினர்-மலைவாழ் மக்கள், வறட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் விசேடக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.

பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிப்பதற்குக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 30-6-89 முடிய 158 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 21 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் 29 கோழியின விஸ்தரிப்பு நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும், கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவியுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல்பட்டு வருகின்றது.

1988-89-இல் (31-3-89) புள்ளி விவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தில் கோழி முட்டை உற்பத்தி 2,287 மில்லியன் ஆக உயர்ந்து உள்ளது.

30-6-89 முடிய கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 10,891 உறுப்பினர்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,71,105 உறுப்பினர்களும் பயன்பெற்று வருகின்றனர்.

தந்தி: "அண்ணாசில்க்

போன்: 2248

கண்கவர் வண்ணங்கள்! நெஞ்சை அள்ளும் ரகங்கள்!!
தரமான காஞ்சிபுரம் பட்டாடைகள் வாங்க சிறந்த
கூட்டுறவு நிறுவனம்

அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட், நெ. கே. எச். 1

498-499, காந்தி சாலை, காஞ்சிபுரம்-631 501
(விற்பனைக் கூடம் குளிர் பதனம் செய்யப்பட்டது)

கிளைகள்

(1) 26/118, இராச வீதி, கோயமுத்தூர்
(2) 207, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்
(3) 40/1, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை.
(4) 138, கீழவெளி வீதி, மதுரை
(5) 8, கிருட்டினா அங்காடி மையம், சிக்பெட், பெங்களூர்
(6) 12, சர்வீஸ் லேன், கே. ஆர். சர்க்கிள், மைசூர்
(7) 15-84, சுபாஷ் ரோடு, அனந்தப்பூர்
(8) 15-3-421, மெயின் பஜார், இந்துப்பூர்
(9) 13, அசோகா ரோடு, தும்கூர்
(10) காஞ்சிகோவாப்பரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்.
அண்ணாசாலை, சென்னை 2.

தி.பொ. இலட்சுமணன், பி.காம்
துணை இயக்குநர்/தனி அலுவலர்

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்:

1971-72 முதல் தமிழகத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 30-6-89 முடிய உள்ள காலத்தில் 1,604 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்று தரமான ஆடுகளை வாங்கிப் பராமரித்து, பயன் அடைந்து வருகின்றனர்.

உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர்.

ஆடுகளுக்குக் காப்பீடு செய்வதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டு உள்ளன. இதுதவிர ஆடுகள் மரண நிதி என்ற நிதியினையும் ஒவ்வொரு சங்கமும் பராமரித்து வருகின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டு முடிய 11,726 ஆடு அலகுகள் விநியோகிக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றன. மேற்கூறிய காலம் முடிய 268.6 இலட்சம் ரூபாய் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகம்:

இத்திட்டத்தின் கீழ் 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ. 83 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ரூ. 38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகையாக முதலீடு செய்துள்ளது.

சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்:

இந்தத் திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு 1976-77 முதல் 1987-88 முடிய 21,044 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன, ஒரு யூனிட்டுக்கு (அலகு) 20 பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் ஆகும். 1987-88 முதல், யூனிட் ஒன்றுக்கு ரூ. 7,000 வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25 சதம், நடுத்தர விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்கட்கும் 33 சதம், மானியமாக வழங்கப்படுகிறது. மீதி உள்ள தொகை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1987-88 முடிய 250.85 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1988-89-ஆம் ஆண்டிற்கு 931 யூனிட்டுகள் வழங்கப் பெற்று ரூ. 25.38 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:

வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் வாழும் 16,195 பழங்குடி மக்கள் இத்திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1988-89 வரை இத்திட்டத்தின் கீழ் அரசு மானியமாக ரூ. 233.70 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு வைக்கோல் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான போக்குவரத்துச் செலவினம் அரசு மானியமாக வழங்கப்படுகின்றது.

மேச்சேரி இன ஆடுகள் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும், இராமநாதபுரம் மற்றும் வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும் வளர்க்கப்படுகின்றன. ஓசூர் பண்ணையில் மாண்டியா மற்றும் கொரிடல் இன ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. செட்டிநாடு மற்றும் திருநெல்வேலி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாய நிதி உதவி:

ஐரோப்பிய சமூகப் பொருளாதாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம், செங்கை அண்ணா, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயரின டார்செட் பெட்டை ஆடுகளும், 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து (இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியா) இறக்குமதி செய்து ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆடுகள் வாங்குவதற்கு ரூ.3.50 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி உயரின டார்செட் செம்மறிக் கிடாக்களை உள்ளூர் இன ஆடுகளுடன் இனச்சேர்க்கை செய்து 50 விழுக்காடு கலப்பினக் கிடாக்களை உற்பத்தி செய்து, இக்கிடாக்களை விவசாயிகளுக்கு விநியோகித்து அவர்களுடைய உள்ளூர் இன ஆடுகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் இன ஆடுகளின் உடல் எடை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

எங்கள் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உற்பத்தியாளர்

B. M. சில்க்ஸ்
249, காந்தி ரோடு,
காஞ்சிபுரம்-631 501
தொலைபேசி எண். 2970



தைப்பாவை



கவிஞர் கண்ணதாசன்

எந்தமிழர் கோட்டத்
திருப்பார் உயிர்வரை

எந்தமிழர் உள்ளத்
தினிமைப் பொருள்மலர

எந்தமிழர் கைவேல்
இடுவெங் களஞ்சிவக்க

எந்தமிழர் நாவாழ்
இளமைத் தமிழ்செழிக்க

எந்தமிழர் இல்லத்
திலங்கும் ஒளிவிளங்க

முந்துதமிழ்ப் பாவாய்
முன்னேற்றந் தான்தருவாய்

தந்தருள்வாய் பாவாய்
தைவடிவத் திருப்பாவாய்

வந்தருள்வாய்! கண்ணால்
வாழ்த்துரைப்பாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம்
ஏழா யிரமாண்டு

திங்கள்போல் வாழ்ந்து
செங்கதிர்போல் ஒளிவீசும்

மங்காத போர்க்களத்தும்
மாளாத வீரர்படை

கங்குல் அகமென்றும்
காலைப் புறமென்றும்

பொங்கி விளையாடிப்
புகழேட்டிற் குடியேறி

தங்கி நிலைத்துத்
தழைத்திருக்கும் காட்சியினைக்

கண்காண வந்த
கலைவடிவே நித்திலமே

பொங்கற்பால் பொங்கிப்
பூவுதிர்ப்பாய் தைப்பாவாய்!

அன்னங்கேள்! ஞானம்
அருள்வானை முன்னிறுத்தி

முன்னங்கால் சேர்த்து
முழந்தாளில் மண்டியிட்டு

தன்னங்கை கூப்பித்
தலைசாய்த்து யான்வணங்க

என்னங்கேள் ஈசன்
எனக்களித்தான் மெய்ஞ்ஞானம்

இன்னங்கே ளென்றான்
எவை கேட்பேன் இன்னமுதே!

பொன்னங்கோன் செம்பரிதி
பூத்தெழுங்கீழ் வானத்தே

அன்னங்கை காட்டும்
அருள்போதும் என்றுரைத்தேன்

மின்னுங்கீழ் வானில்
விரைந்தெழுவாய் தைப்பாவாய்!

மாணவர் பக்கம்

கல்வியின் சிறப்பு

—புலவர் நெல்லை சுப்பு

கல்வி யொன்றே கரையாத செல்வம்
கற்கக் கற்கத் தெவிட்டாத இன்பம்
அள்ளிப் பருகின் அமுதாக இனிக்கும்
அனைவர்க்கும் இதுவே பொதுவானதாகும்!

எண்ணும் எழுத்தும் கண்ணென மதிப்போம்!
எழுத்தறி வில்லா நிலையைக் களைவோம்
கற்கக் கற்க அறிவொளி பெருகும்
கனிந்த இன்பம் நெஞ்சினில் நிறையும்!

ஆடு மாடு அணிலும் கற்காது
பூடு பூண்டு புல்லும் பயிலாது
தேடும் செல்வம் யாவும் நிற்காது
தெளிந்த கல்வி என்றும் மறையாது!

காரணம் காட்டும் கறுப்புப்பெட்டி

விமான விபத்துகள் நடக்கையில், அதற்கான காரணம் என்ன என்று அறியப் புலனாய்வாளர்களுக்கு உதவும் சாதனத்தின் பெயர்தான் கறுப்புப் பெட்டி. எல்லா விமானங்களிலும் இது பொருத்தப்பட்டிருக்கும்.

'கறுப்புப்பெட்டி' என்று இது அழைக்கப் பட்டாலும், இதன் நிறம் கறுப்பு அல்ல; சில கறுப்புப்பெட்டிகள் பிரகாசமான ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். சில பெட்டிகள் மஞ்சளாக இருப்பதும் உண்டு. இது 'கறுப்புப்பெட்டி' என்று எப்படி அழைக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆரஞ்சு நிறத்தில் பெட்டி இருப்பதால், விபத்து நடந்த இடங்களில் சிதைவுகளுக்கு இடையேயும் 'பளிச்' என்று இது கண்ணில் படும்.

சில பெரிய விமானங்களில் ஒன்றுக்கு இரண்டு கறுப்புப்பெட்டிகள் இருப்பதும் உண்டு. கறுப்புப்பெட்டியில் உள்ள 'காக்பிட் வாய்ஸ்' என்னும் சாதனம், விமானியின் அறையில் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்யும். 'டேட்டா ரிகார்டர்' என்னும் மற்றொரு சாதனம் இந்த விமானத்தின் பல்வேறு இயக்கங்களைப் பதிவு செய்யும்.

ஒரு கறுப்புப்பெட்டியின் விலை 9,000 டாலர்களிலிருந்து 20,000 டாலர்கள் வரை இருப்பதுண்டு.

உங்கள் பார்வைக்கு

கிட்டப் பார்வையைத் தடுப்பதற்காகவும், பார்வைக் கூர்மையைக் காப்பதற்காகவும் பின்வரும் எளிய விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:

விளக்கு இடப் புறமாக இருப்பதுடன், பணியிடம் நல்ல வெளிச்சமாகவும் இருக்க வேண்டும்.

கண்களுக்கும், புத்தகத்துக்கும் இடையிலான தூரம், குறைந்த பட்சம் 30-36 சென்டி மீட்டர்களாவது இருக்க வேண்டும். குனிந்து உட்கார்ந்தபடியோ, படுத்துக் கொண்டோ, பஸ், கார், இரயில் போன்றவற்றில் பயணம் செய்யும்போதோ படிக்கக் கூடாது.

30-45 நிமிட நேரம் படித்ததற்குப் பின், அல்லது எழுதியதற்குப் பின், 5-10 நிமிடம் கண்களுக்கு ஓய்வளித்திடுக. உங்களுக்குக் கிட்டப் பார்வை இருப்பின், ஒவ்வொரு 25-30 நிமிட நேரத்துக்கும் ஒரு முறை ஓய்வு எடுத்துக் கொள்க.

கிட்டப் பார்வைக் கோளாறு அதிக அளவு இருப்போர் (மைனஸ் ஆறு டையோப்பர்களும் அதற்கு மேலும்) கனமான பொருள்களைத் தூக்குவதையும், சிறிய பொருள்களைப் பார்ப்பதையும், நெடுநேரம் தலை குனிந்தபடி அமர்ந்திருப்பதையும் தவிர்க்க வேண்டும்.

மாணவர் கடமை

1. காலையில் எழு.
2. கடவுளைத் தொழு.
3. காலைக் கடன்களை முடி.
4. கருத்துடன் பாடம் படி.
5. குறித்த நேரம் பள்ளி செல்.
6. சாலை விதிப்படி சரியாய் நட.
7. கற்றலே தலையாய கடனென்றெண்.
8. கற்பிப்பவற்றைக் கருத்தாய்க் கவனி.
9. திருத்தமாய் எழுதித் தெளிவாய் வாசி.
10. புரியாதன கேட்டுப் புரிந்து கொள்.
11. அன்றைய பாடத்தை அன்றே முடித்திடு.
12. வினாவைத் தெரிந்து விடையை எழுது.
13. தேர்வு அறையில் நேர்மை தவறாதே.
14. படிப்பு நிறுத்தப் பணியில் ஈடுபடாதே.
15. ஆசிரியர் பெற்றோர் ஆணைக்குக் கீழ்ப்படி.
16. பொய், களவு, வன்சொல் புறக்கணி.
17. ஒழுக்கம் விழுப்பம் தருமெனக் காண்.
18. உன்னைப்போல் பிறரையும் நேசி.
19. உள்ளத் தூய்மை உயர்வு தரும் என்றறி.
20. உடற்பயிற்சி செய்து உடலைப் பேணு.
21. சுற்றுப் புறத்தையும் சுத்தமாய் வை.
22. நல்லாரைத் தேர்ந்து நட்புக் கொள்.
23. நாட்டுக்கு இயன்ற தொண்டுகளாற்று.
24. இரவில் படித்து இல்லப் பயிற்சிகள் செய்.
25. இறையைத் தொழுது இன்பமாய்த் தூங்கு.

—எம். குமாரதாஸ்,
கரும்பாட்டூர்,
சுவாமிதோப்பு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

குழந்தை

சகிப்புத் தன்மையுடன் வாழும்போது அது பொறுமையுடன் இருக்கக் கற்றுக் கொள்கிறது.

தூண்டுதலுடன் வாழும்போது அது நம்பிக்கையுடன் இருக்கக் கற்றுக் கொள்கிறது.

புகழ்ச்சியுடன் வாழும்போது அது நீதியைக் கற்றுக் கொள்கிறது.

பாதுகாப்புடன் வாழும்போது அது நம்பிக்கைக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது.

உறுதிப்பாட்டுடன் வாழும்போது அது தன்னைத் தானே விரும்பக் கற்றுக் கொள்கிறது.

ஏற்றுக் கொள்ளும் நட்புடன் வாழும்போது அது உலகில் அன்பைக் காணக் கற்றுக் கொள்கிறது.

வெறுக்கப்படும் சூழ்நிலையில் வாழும்போது அது குறைசொல்லக் கற்றுக் கொள்கிறது.

வெறுப்பினிடையில் வாழும்போது சண்டை போடக் கற்றுக் கொள்கிறது.

கேலிக்கிடையில் வாழும்போது அது வெட்கப்படக் கற்றுக் கொள்கிறது.

அவமானத்துக் கிடையில் வாழும்போது குற்ற உணர்வு ஏற்படக் கற்றுக் கொள்கிறது.

தேர்வு எழுதுவது எப்படி?

1. முதலில் எக்கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என்று தெரிந்தெடுங்கள். அவை உங்களுக்கு நன்கு தெரிந்தவைகளாக இருக்கட்டும். அவற்றிலும் உங்களுக்கு நன்கு விடை தெரிந்தவற்றை முதலில் எழுதுங்கள்.

2. உங்கள் கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும். கோணல் மாணல் கிறுக்கல் தவிர்க்கப்பட வேண்டும்.

3. விடை மிக நீளமாகவோ, சுருக்கமாகவோ இருக்கலாகாது. கேள்விக்குத் தக்கவாறு அமைய வேண்டும்.

4. கட்டுரைகளைப் பத்திகளாகப் பிரித்துக் கொண்டு எழுதுங்கள். ஒவ்வொரு பத்தியிலும் ஒரு கருத்தினைத் தெரிவிக்கலாம். கருத்துத் தொடர்ச்சி பராமரிக்கப்பட வேண்டியது அவசியம்.

5. மையக் கருத்துக்களைத் தவறாது தெரிவியுங்கள்.

6. உங்களது மொழி நடை தெளிவாகவும், இலக்கணப் பிழையற்றும் இருக்க வேண்டும். கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் மதிப்பீட்டாளரைக் கவரும் வண்ணம் அமைய வேண்டும்.

7. உங்கள் கருத்துக்களைத் தர்க்க ரீதியாக விவாதித்து நிலை நாட்டுங்கள்.

8. மறைபொருள் தொடர்கள், சொற்றொடர்கள், முதுரைகள் ஆகியவற்றை ஏற்றபடி கையாளுங்கள்.

9. தேவையான விவரங்களையும், புள்ளி விவரங்களையும் தக்க இடத்தில் அளியுங்கள்.

10. முடிவில் விவாதித்த கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுங்கள்.

11. நீங்கள் அனைத்துக் கேள்விகளுக்குமே முழுக் கவனத்தோடு விடை தாருங்கள்.

—"தேர்வுகளில் வெற்றிபெற தெளிவான யோசனைகள்" என்னும் நூலிலிருந்து.

புதுத் தை வந்தது!

கவிஞர் வாணிதாசன்

கீழ்த்திசைக் கிளர்ந்தெழு பரிதி கண்டனம்!
வாழ்த்தினம் வந்த தை! மக்கள் வாழ்த்தினம்!
ஆழ்கடல் ஒலியொடு பொங்கல் ஆர்ப்பொலி
சூழ்ந்திட, இன்பமும் வாழ்வும் சூழ்ந்ததே!

பாரினில் விண்ணிடைப் பரிதி கண்டனம்!
ஊரினில், ஊரிடை உள்ள வீட்டினில்,
நீரினில், நீரிடை நிலவு பூக்களில்,
ஏரினில், ஊனுடல் எங்கும் இன்பமே!

வாடையை ஓட்டியே வந்த தைமுதல்
ஆடலும் பாடலும் அயரும் கன்னியர்
ஏடவிழ் கண்மலர் கண்டு காளையர்
தேடிய பொங்கலின் செந்தேன் என்பரே!

பொன்னொளி கண்டனம்! புதுத் தை வந்தது!
தென்னவர் வாயெலாம் பொங்கல் வாழ்த்தொலி!
மின்னொளி வாய்மொழிச் சுவையே மிக்கெனக்
கன்னலைக் கடிப்பவர் கவிதை யாப்பரே!

செங்கரும் பொடித்துணும் பிள்ளைச் செவ்விதழ்
'செங்கரும் பா' மெனச் செப்பும் சேயிழை
துங்க விழிமொழி துய்க்கும் கேள்வரும்
'பொங்கலைப் போன்றவர் புதல்வர்' என்பரே!

மதுரை மாவட்டத்தில்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்:-

ஏழைகளை வாழவைக்கும் புரட்சித் திட்டம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் ஏராளமான ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இந்தத் திட்டம் அருமையான திட்டம் என்றும், ஏழைகளை வாழ வைக்கும் நல்ல திட்டம் என்றும், இதனால் பயனடைந்தோர் கூறி வருகிறார்கள்.

அந்த வகையில், இத் திட்டத்தினால் பயனடைந்த சிலரைப் பேட்டி கண்டோம். அப்போது அவர்கள் கூறியதாவது:

மதுரை மாவட்டம் புதுவிளாங்குடி கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்து ஒரு லாட்ஜில் ரூ.250 மாதச் சம்பளத்தில் வேலை செய்து, தன் குடும்பத்தை நடத்தி வருகிறார். அவர் கூறுகிறார்:

''இந்தச் சொற்ப சம்பளத்தில் தன் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய எண்ணுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் என்று எண்ணி இருந்தேன். ஆனால் தமிழக முதல்வர் படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தை அறிவித்துள்ளார் என்பதை அறிந்த பின்புதான், என் மகளுக்கும் திருமணம் செய்ய முடிவு செய்தேன். இருந்தாலும் இத்திட்டத்தின் பயனை நாம் அடையும் முன்பு பல சிரமம் இருக்குமே என்று நினைத்து மலைத்தேன். நான் எங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரை அணுகி மனுச் செய்தேன். என் மனு பரிசீலிக்கப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரண்டே நாளில் முடிவு செய்யப்பட்டு, மூன்றாவது நாளில் திருமண நிதியுதவியை முழுமையாகப் பெற்றேன். இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடையும் என்போன்ற ஏழை எளிய மக்களின் நெஞ்சங்கள் வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

கம்பத்தைச் சேர்ந்தவர் சாகுல் அமீது இவருக்கு வயது 63 ஆகிறது. பல ஆண்டுகளாக பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். பிறகு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு தொழில் செய்யாமல் விட்டுவிட்டார். தற்போது லாட்டரிச் சீட்டுகள் விற்கிறார். இவருக்குத் தினசரி 10 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இவருக்கு இரண்டு மகள்கள். மூத்த பெண்ணுக்குத் திருமணம் நடந்து விட்டது.

திருமதி பீரப்பா தம் கணவருடன்

பயன் அடைந்தோர் பகர்வன:

2-வது பெண் பீரப்பா என்ற 27 வயது மகள். இவருக்குத் திருமணம் செய்ய முயன்று பண வசதியின்றி கஷ்டப்பட்டார். அதனால்தான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்து தன் மகளுக்கு 27 வயது ஆகியும் திருமணம் செய்து வைக்கமுடியாத நிலை ஏற்பட்டது. தற்போது முதல்வர் அவர்கள் அறிவித்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ், ரூபாய் 5,000 நிதியுதவி பெற்று, திருமணத்தைச் சிறப்புற நடத்தினார். அவரது மகள் திருமதி பீரப்பா கூறுகிறார்:

''எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். என்னைப் போன்ற ஏழைப் பெண்கள், வயது ஆகியும் திருமணம் செய்ய வழியில்லாமல் உள்ளவர்களுக்கு முதல்வர் கொண்டு வந்துள்ள இந்தப் புதிய திட்டம் புரட்சிகரமானதாகும். அதனால் நாங்கள் வாழ்வு பெற்றோம்''

மதுரை மாவட்டம், பரசுராம் பட்டியைச் சேர்ந்த அந்தோணிராஜ் - மேரிபாக்கியம் தம்பதியினருக்கு 6 பெண்களும், 2 ஆண்களும் உள்ளனர். 50 வயதுடைய அந்தோணிராஜ் கூலி வேலை செய்து தன் குடும்பத்தை நடத்தி வருகிறார். இவர் மனைவியும் இவருடன் சேர்ந்து கூலி வேலை செய்கிறார். இவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள நிலையில், குடும்பம் நடத்த இயலாத நிலையிலும் தன் மூத்த மகளான எலிசபெத்தை 8-வது வரைக்கும் படிக்க வைத்து, தையற் பயிற்சியும் பயில வைத்



நிலக்கடலையில் அதிக விளைச்சலுக்கு நுண்ணுயிர் உரம்

தமிழ்நாட்டில் நிலக்கடலை மானாவாரியாகவும், இறவைப் பயிராகவும் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. நிலக்கடலையின் வேர்களில் ரைசோபியம் என்னும் நுண்ணுயிர் வேர் முடிச்சுகளை ஏற்படுத்தி, காற்றிலுள்ள தழைச்சத்தை நிலைப்படுத்துவதால், நிலக்கடலையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பெரும்பகுதியான தழைச் சத்து கிடைக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கடந்த பல வருடங்களாக திறன்மிக்க ரைசோபிய நுண்ணுயிர்களைக் கண்டுபிடிக்கும் ஆய்வு நடைபெற்று வருகிறது. நிலக்கடலை அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்களில் இருந்து ரைசோபியம் நுண்ணுயிர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், டி.என்.ஏ.யூ. 14 என்னும் ரைசோபிய நுண்ணுயிர் அதிக தழைச் சத்தை நிலைப்படுத்தும் திறனுடையதாக அறியப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக கோவை, ஆழியார்நகர் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் பட்ட களப் பரிசோதனைகளில் இந்த ரைசோபிய நுண்ணுயிரை கோ.1, கோ.2, கே.எல்.24, ஆகிய நிலக் கடலை விதையுடன் கலந்து விதைக்கும் போது 16 சதவிகிதம் அதிக மகசூல் தந்துள்ளது.

நிலக்கடலைக்கான ரைசோபிய நுண்ணுயிர்கள் ஒரு பாக்கெட் ரூ.2 என்ற விலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிர்ப் பிரிவில் கிடைக்கிறது. ஒரு எக்டருக்குத் தேவையான விதையுடன் கலப்பதற்கு 3 ரைசோபிய பொட்டலங்கள் (600 கிராம்) தேவைப்படும்.

ஐப்பசி அடைமழையில் விதைக்க ஏற்ற மேய்ச்சல் நிலப்புல்

''ஐப்பசியில் அடைமழை'' என்பது பழமொழி. இந்த மழையைக் கொண்டு பயிர்கள் செழித்து வளரும். இந்த ஐப்பசியில் கோ.1 என்ற நீலக் கொழுக்கட்டை புல் ரகத்தை மானாவாரியாக மேய்ச்சல் நிலங்களில் விதைப்பதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.

இந்த ரகத்தில் 9.06 விழுக்காடு புரதமும், 41 விழுக்காடு மாவுச்சத்தும் மற்றும் 0.58 விழுக்காடு சுண்ணாம்புச் சத்தும் உள்ளன.

நிலத்தை நன்கு பண்படுத்தி, அதாவது இரண்டு, மூன்று முறை உழவு செய்து 16 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து இட்டு, விதைகளை மண்ணுடன் கலந்து தூவி, உழவிட்டு, மூட வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 3 கிலோ விதை தேவைப் படும். இப்போது பெய்யும் மழையில் இந்தப் புல் ரகம் நன்கு முளைத்து வேர் ஊன்றி விடும். விதைத்த 70-75 நாட்களில் முதல் அறுவடைக்கு/மேய்ச் சலுக்கு ஏற்றதாக இருக்கும். பின்னர் மழையைப் பொருத்தும், பயிரின் வளர்ச்சியைப் பொருத்தும் வருடத்தில் 4-லிருந்து 6 அறுவடை / மேய்ச்சல் செய்யலாம். ஆண்டிற்கு 4-லிருந்து 6 அறுவடை மேய்ச்சலில் ஏக்கருக்கு 16 டன் பசுந்தீவனம் கிடைக்கும். விதை விவரத்திற்கு தீவனப்பயிர்த்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை அணுகவும்.

மானாவாரியில் கலப்புப் பசுந்தீவனம்

காங்கேயம், தாராபுரம், பல்லடம் போன்ற பகுதிகளில் அதிகமாக மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. அவைகளில் கொழுக்கட்டைப் புல் ரகங்கள் பயிரிடப்பட்டு, நல்ல காங்கேயம் ரகக் காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வருவது யாவரும் அறிந்த ஒன்று. இந்தக் கால்நடைகள் மிகவும் திடகாத்திரமாகவும், எலும்புகள் உறுதியாகவும் இருப்பதுடன் பாரம் சுமப்பதற்கு ஏற்றதாகவும் இருப்பது யாவரும் அறிந்ததே.

கொழுக்கட்டைப் புல்லை மட்டும் தின்று நல்ல திடகாத்திரமான காளைகளை உற்பத்தி செய்யும் காங்கேயம் பகுதிகளில் மழைக் காலங்களில், கொழுக்கட்டைப்புல் விதையுடன் முயல் மசால் என்னும் ஒருவகை பயறுவகைத் தீவன விதைகளை ஒரு மீட்டர் இடைவெளியில் வரிசையில் விதைத்து கொழுக்கட்டைப் புல்லும், முயல்மசால் செடிகளும் நன்கு வளர்ந்தபின் கால்நடைகளை விட்டு மேய்த்தால் நல்ல புரதச்சத்து மிகுந்த பசுந்தீவனம் கிடைப்பதுடன் கொழுக் கட்டைப் புல் போன்றே வறட்சியையும் மேய்ச்சலையும் தாங்கி வளர்ந்து, நல்ல திடகாத்திரமான மாடுகளையும், காளைகளையும் கொடுக்கக்கூடியது.

இந்த முயல்மசால் பயிரில் 16 விழுக்காடு புரதமுள்ளதால் கால்நடைகளுக்குத் திடவுணவிற்குச் செலவு செய்யும் தொகையும் மீதமாகும். இப் பயிர் தனிப்பயிராக மானாவாரியில் 30 டன் 1 எக்டருக்கு 4-லிருந்து 6 அறுவடை/மேய்ச்சலில் மகசூல் தர வல்லது. ஊடுபயிராக 8-லிருந்து 10 டன் வரை பசுந்தீவனம் ஒரு எக்டரில் தரவல்லது. ஆகையால் காங்கேயம் காளைகளை உற்பத்தி செய்யும் வோளாண் மக்கள் ஊடுபயிரிட்டுப் பயன்பெற வேண்டுகிறோம். மேலும் எல்லாவிதமான மானாவாரி நிலங்களுக்கும் இது ஏற்றது.

வெளியீடு:
வேளாண் தகவல் பணிமையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை-641 003.

சமதர்மம் வேறு; சமத்துவம் வேறு; சமதர்மம் என்பது பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வற்ற நிலை வேண்டும் என்பது; சமத்துவம் என்பது, மனிதனுக்கு மனிதன் வேறுபாடு காட்டுகின்ற நிலை ஒழிந்து தீரவேண்டும் என்பது!

— முதல்வர் கலைஞர்

வேளாண்மைப் பல்கலைக் கழக

மாணவர்களின் சாதனை



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்தியாவின் பதினான்காவது பல்கலைக் கழகமாக 1971-இல் உதயமானது. இப்பல்கலைக் கழகம் வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கம் ஆகிய மூன்று தாரக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, உழவர் பெருமக்களுக்கு உற்ற நண்பனாகப் பணியாற்றி வருகிறது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. அம்முடிவுகள் இப்பல்கலைக் கழகத்தின் சிறப்பை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளன.

வேளாண்மைக் கல்வியின் பல பாடங்களில் அகில இந்திய முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டதோடல்லாமல், மொத்த இடங்களில் 35 சதவீதம் பெற்று, இந்தியாவிலேயே முதல் பல்கலைக்கழகமாக இப்பல்கலைக் கழகம் திகழ்கிறது என்பது பெருமைப் படத்தக்க செய்தி. இந்த, இளநிலை ஆராய்ச்சித் தேர்வில் முதல் இடம் பெற்ற மாணவ மாணவிகளின் பெயர்களும், சார்ந்த பாடங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வேளாண் விரிவாக்கம்	: என். சாதனா
வேளாண் பொருளாதாரவியல்	: பி.டி. உமாசங்கர்
வேளாண் பொறியியல்	: ரமேஷ்
விதை நுட்பவியல்	: என்.எஸ். ராதா
பூச்சியியல்	: கீதாஞ்சலி
நுண்ணுயிரியல்	: பிந்து
தேயிலை விஞ்ஞானம்	: ஆர். செல்வம்

இம்மாணவர்கள் சீரிய முயற்சியினால் முதல் இடங்களைப் பெற்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ் மண்ணுக்கும் மறக்க முடியாத இமாலயப் பெருமையைத் தேடித்தந்திருக்கிறார்கள். இவர்களை மனமுவந்து பாராட்டுவோம்!

வேளாண் தகவல் பணிமையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்—641 003.

1990-ஆம் ஆண்டு பொங்கல் நன்னாளில்
எங்களது நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீவரதராஜஸ்வாமி பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட். எண்.ஜி. 2105.

437 காந்திரோடு, காஞ்சிபுரம் 531 501

தொலைபேசி எண்: 2627

கிளைகள்:

1. 238-பி. 2-வது அக்ரஹாரம், சேலம்-1.
2. 323, ராஜவீதி, கோயமுத்தூர்-1
3. 84, பி.வி.கே. ஐயங்கார்ரோடு, பெங்களூர்-53
4. உம்மிடியார்ஸ் ஷாப்பிங்சென்டர், சென்னை-2.
5. 4 மதுதி வீதி, அருண்டல்பேட், விஜயவாடா
6. 15-3-422 மெயின்பஜார், இந்துப்பூர்.
7. லஷ்மி விலாஸ், லஷ்மிவிலாஸ் பில்டிங், கே.ஆர். சர்க்கிள்.
8. 137, கீழவெளி வீதி, மதுரை-1.

குறிப்பு: நவநாகரீகத்திற்கேற்ப பண்டிகை மற்றும் திருநாள், திருமணகாலங்களுக்கேற்ற புத்தம் புதிய வண்ணங்களில் நவீனவடிவமைப்புகள் கொண்ட பட்டு சேலைகள் தயாரித்து வழங்கும் மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனம்.

வருகைதாரீர்! ஆதரவுதாரீர்! பயனடைவீர்!

கே. சண்முகசுந்தரம்,
இணை இயக்குனர்/தனிஅலுவலர், கூடுதல்பொறுப்பு

செங்கை அண்ணா மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கம்,

பதிவு எண்: 45/1985

நெ.54, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம் 631 502



தமிழகம் முழுவதும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தமிழ்த் திருநாளில் எங்களுக்கு நல்லாதரவு அளித்து எங்களை ஊக்கப்படுத்தி வரும் பயணிகளுக்கும், ஏனைய பொதுமக்களுக்கும் எங்களது உளங்கனிந்த ''பொங்கல் நல்வாழ்த்துக்கள்''

'மக்களின் சேவையே மகேசன் சேவை' என்ற உயரிய குறிக்கோளின்படி பயணிகளின் பயணம் இனிது அமைய பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய, புதிய பேருந்துகளை விட்டு, பயணிகள் மனம் மகிழச் செய்கின்றோம்.

இம்மாவட்டத்தில் நல்ல முறையில் பேருந்துகளை வைத்து, பயணிகள் பாராட்டும் வண்ணம் செயலாற்றி நற்பணிகள் ஆற்றி வருகின்றோம்.

தமிழக அரசு தரும் பொன்னான வாய்ப்புகளைப் பயன்படுத்தி அரசு ஒத்துழைப்புடன் எங்களது சேவைகளைத் தொடர்ந்து ஆற்றுவோம் என்று அனைவர்க்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கம் ஆற்றி வரும் பொதுநலப் பணிகள்

1. காஞ்சிபுரம், திருத்தணி பேருந்து நிலையங்களில் பயணிகளின் குடிநீர் வசதிக்காக ரூ.50,000/-க்கு மேல் செலவு செய்து குளிர்சாதனப் பெட்டி அமைத்துத் தொடர்ந்து பராமரித்து வருகின்றோம்.
2. ஆண்டுதோறும் ''ஜூனியர் ரெட்கிராஸ்'' நடத்தும் முகாமில் 120 பேர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகின்றோம்.
3. பள்ளிகளில் போக்குவரத்து விதிகளைப் பற்றிப் போதனை செய்து போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி வருகின்றோம்.
4. சமூகநலத்துறை நடத்தும் உடல் ஊனமுற்றோர் உலக நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் ஊனமுற்ற மாணவ, மாணவிகட்குத் தேவையான பொருள்களை அன்பளிப்பாக அளித்து வருகின்றோம்.
5. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை, குழந்தைகள் நலப் பிரிவுக்காக வேண்டிய சாதனங்களையும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான தொலைக்காட்சிப் பெட்டியும் அளித்துள்ளோம்.

மேலும் இதுபோன்ற பற்பல மக்கள் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றோம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''மக்கள் சேவையே, மகேசன் சேவை''

செங்கை அண்ணா மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

ஏ.எம். முனுசாமி முதலியார் — *தலைவர்*

டி. முத்துசாமி — *செயலாளர்*

பி. இராதாகிருஷ்ணன் — *பொருளாளர்*

மற்றும் அனைத்து உறுப்பினர்களும்

உலக எழுத்தறிவு ஆண்டு

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர்

டாக்டர் க. அன்பழகன்

1990-ஆம் ஆண்டினை உலக எழுத்தறிவு ஆண்டாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்துள்ளது. கல்லாமை உலகந் தழுவிய ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. மக்கள் நலனுக்கும் நாடுகளின் முன்னேற்றத்திற்கும் எழுத்தறிவு இன்றியமையாததாகும். அரசு செயல்படுத்தும் பல வளர்ச்சித் திட்டங்களின் பலன்களை மக்கள் அடைய முடியாமல் போவதற்கு ஒரு முக்கிய காரணம் எழுத்தறிவின்மையாகும். இன்றைய உலகில் பெரும்பாலும் எழுத்து மூலமாகச் செய்திகள் பரிமாறிக் கொள்ளும் நிலையில் எழுத்தறிவு என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு திறன் ஆகும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்!'

ஆனால் இன்று உலகில் கல்லாதோர் எண்ணிக்கை 90 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது மக்களில் நான்கில் ஒரு பங்கிற்கு (1/4) மேல் கல்லாதவர்கள். பெண்களில் எழுத்தறிவு நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவர்களில் மூன்றில் ஒருவர் கல்லாதவர். உலகில் 9 நாடுகளில் ஒவ்வொன்றிலும் 10 கோடிக்கு மேற்பட்டவர்கள் கல்லாதவர்கள். இந்தியா அதில் ஒன்று. பலதரப்பட்ட திட்டங்கள் வாரியாக முயற்சிகள் செய்ததன் பலனாக கற்றோர்கள் சதவிகிதத்தை உயர்த்திட நம்மால் முடிந்துள்ளது. மக்கள் தொகை பெருகுவதால் கல்லாதவர்கள் எண்ணிக்கையும் நாள்தோறும் கூடிக்கொண்டே வருகிறது என்பது ஓர் உண்மையாகும். ஆகையால் எழுத்தறிவின்மையை நீக்கப் போர்க்கால அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான் இந்த ஆண்டு உலக எழுத்தறிவு ஆண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக எழுத்தறிவு ஆண்டின் நோக்கங்கள்

எழுத்தறிவின்மையின் அளவு, தன்மை,/ விளைவுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல்

—மக்களை ஒன்று திரட்டி - பங்கேற்கச் செய்தல்

—கல்லாமையை மாற்றிடும் முயற்சிக்குத் தேவையான வளங்களை அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வாயிலாகத் திரட்டல்

-பெண்களுக்குக், கல்வி வழங்குவதில் தனிப்பட்ட சில பிரச்சினைகளும் தேவைகளும் இருப்பதால் பெண் கல்விக்கான செயல்பாடுகளை அதிகரித்தல்

—கல்லாமைக்கெதிரான 'போராட்டத்தில் உலகளாவிய செயல்பாடுகளைத் தீவிரப்படுத்துதல்

-கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள், கல்லாமை நிலையை ஒழித்திட நமது முயற்சிகளைத்தீவிரப்படுத்துவதும் விரிவாக்கம் செய்வதும்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இந்திய அரசும் தமிழக அரசும் பல திட்டங்களை வகுத்துள்ளன.

இந்தியாவின் நிலை

1981-இல் இந்தியாவில் கற்றோர் சதவிகிதம் 36.23 ஆகும். 30 ஆண்டுகளில் இருமடங்காகக் கற்றோர் ஆயினர். இது 1951-இல் இருந்ததை விட 19.56 சதவிகிதம் அதிகமாகும். கற்றோரின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மக்கட்தொகைப் பெருக்கத்தின் காரணமாக கல்லாதோர் எண்ணிக்கையும் 30 கோடியிலிருந்து 40 கோடியாக அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் நிலை

1981-இல் தமிழ்நாட்டில் கற்றோர் சதவிகிதம் 47 சதவிகிதம் ஆகும். 1951-ஆம் ஆண்டில் பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தில் கற்றோர் சதவிகிதம் 21 ஆகும். 1961-இல் தமிழ்நாட்டில் எழுத்தறிவு சதவிகிதம் 31 ஆகும்.

தமிழகத்தில் எழுத்தறிவு நிலையை உயர்த்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வயது வந்தோர் கல்வித் திட்டம் 15-35 வயதுப் பிரிவினருக்காக நடத்தப்படுகிறது. தற்போதுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தின் அடிப்படையில் பார்க்

திருமதி எலிசபெத் தன் கணவருடன்

துள்ளார். மற்ற பிள்ளைகளில் இரண்டு பெண்களைப் படிக்க வைக்க முடியாத நிலையில் கூலி வேலைக்கு அனுப்பியுள்ளார். அவர் கூறுகிறார்:

"என் பெண்ணிற்குத் திருமணம் செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின் மூலமாக ரூ.5,000 உதவி என்பதைப் பத்திரிக்கை வாயிலாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அதன்பின் 23 வயதுடைய என் பெண்ணிற்கு திருமணம் செய்ய நிச்சயித்து மதுரை மாவட்டம் போடியைச் சேர்ந்த செபாஸ்டியனுக்குத் திருமணம் செய்து கொடுத்தேன். தமிழ்நாட்டில் உள்ள ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தனக்கு நிச்சயம் திருமணம் நடைபெறும், தாங்களும் மற்றவர்களைப் போல் சமுதாயத்தில் வாழ முடியும் என்ற தன்னம்பிக்கையை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. பணம் இல்லாத ஒரு குறையைத் தவிர மற்ற குறையேதும் இல்லாத என் மகள் போன்ற தமிழ்நாட்டில் உள்ள அத்தனை படித்த ஏழைப் பெண்களும் தமிழக முதல்வரின் இத்தகைய சீரிய திட்டத்தினால் பயன் பெறுகிறார்கள். இதுவரை இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு உன்னதமான திட்டத்தைத் தமிழக முதல்வர் செய்துள்ளார்.''

சின்னமனூரில் வசிக்கும் ஆதி-திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் பகவதி-அய்யம்மாள் தம்பதியினர். பகவதி விவசாயத்திற்குப் பூச்சிமருந்து அடிக்கும் தொழில் செய்து வருகிறார். இவருக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உண்டு. இவரது ஒரே மகள் தமிழரசி; வயது 20 ஆகிறது. 10-வது வரை படித்துள்ளார். வசதியில்லாத காரணத்தால் மகளின் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார்.

இத்திட்டம் பற்றி திருமதி தமிழரசியிடம் கேட்டபோது, ''என்னைப் போன்ற இல்லாத வீட்டுப் பெண்களுக்கு, அரசின் இந்தப் புதிய திட்டம் மிகவும் உதவியாய் உள்ளது'' என்றார்.

இத்திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திற்கு 415 பேர்களுக்கு நிதி வழங்க ரூபாய் 20.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்ட சமூகநலத்துறை, இதுவரை 327 பேர்களுக்கு ரூ.16 இலட்சத்து 35 ஆயிரம் வழங்கி சாதனை செய்துள்ளது.

ரெ. இராவணன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை மாவட்டம்

திருமதி தமிழரசி தன் கணவருடன்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

தென் ஆர்க்காடு மாவட்டம் சங்கராபுரத்தைச் சேர்ந்தவர் தா. உஷா என்பவர். இவர் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தந்தை தாசப்பன் சிறிய பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். திருமதி உஷா கூறுகிறார்:

''நான் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சோந்தவள். எனது தந்தையார் சிறிய பெட்டிக்கடை வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில், என்னுடன் பிறந்த 3 குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய ஏழ்மை நிலையில் எங்களது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். எனக்குத் திருமணம் கடந்த அக்டோபர்

திருமதி தா. உஷா

5-ந் தேதி நிச்சயிக்கப்பட்டு இருந்தது. திருமணச் செலவுக்கு எங்கு, யாரிடம் கடன் வாங்குவது என்று கஷ்டப்பட்டோம். அந்த சமயத்தில், திருமணத்திற்கு உதவி செய்வதாக அரசு செய்திருந்த விளம்பரத்தைப் பார்த்து எங்கள் ஊரைச் சேர்ந்த முக்கிய சேவிகாக்கள் மூலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகினோம். அவரும் எங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தந்து,'மாவட்ட சமூகநல அலுவலர் மூலமாக உங்களுக்குப் பண உதவி கிடைக்கும்'என்றார். அதன்படி, நாங்கள் மனு செய்த 20 நாட்களில் எங்களுக்குப் பணமும் கிடைத்தது. என்னைப் போன்ற படித்த ஏழைப் பெண்களுக்கு அரசு செய்து வருகின்ற இந்தப் பேருதவிக்கு நாங்கள் என்னென்றும் அரசுக்குக் கடமைப்பட்டு உள்ளோம்.''

திருமதி பானுமதி

தென் ஆர்க்காடு மாவட்டம் நல்லூர் ஊராட்சி ஒன்றியம் பெண்ணாடத்தைச் சேர்ந்தவர் பி. பானுமதி என்பவர். இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர். இவரது தந்தை மாவு அரைக்கும் நிலையத்தில் கூலித்தொழிலாளியாகப் பணி புரிந்து வருகிறார்.

இத்திட்டம் பற்றி திருமதி பானுமதி கூறும்போது, ''சொற்ப வருமானத்தில் எனது தாய், எனது உடன் பிறந்த 5 பெண்கள், 2 தம்பிகள் அனைவருமே குடும்பத்தை நடத்தி வந்தோம். என்னைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதம். நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க, பெண்களின் வாழ்வில் மறு மலர்ச்சி அடைந்திட ஒரு நல்ல திட்டத்தில் விண்ணப்பம் கொடுத்த 15 நாளில் பணம் கிடைத்தது. இத்திட்டத்தின் மூலம் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் மேலோங்கி வருகிறது'' என்றார் மகிழ்ச்சியுடன்.

நா. தில்லைகோவிந்தன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தென் ஆர்க்காடு மாவட்டம்
கடலூர்.

தெய்வதம் மலருதடி

கவிஞர் ப. கோவிந்தராசு

சித்தம் இனித்திட நித்தம் மகிழ்ந்திட
திருநாள் வருகுதடி-வளர்
புத்தமிழ் வாழ்த்துகள் பொழிந்திடும் தையினிற்
பூரிக்கப் பொங்குதடி!

கரும்புடன் மஞ்சள் கனிகளும் தீம்பால்
கவினுறக் குவியுதடி-மக்கள்
விரும்பும் சமதை, விஞ்ஞானப் புதுமை,
விரிபயன் விளைக்குமடி!

மக்கள், மாக்கள் உழைப்பினை நன்றிசேர்
மனங்கொளப் போற்றுமடி!-உலகில்
தக்கபல் தொழில்வளம் செழுங்கலை நுட்பமும்
தழைத்திடச் சாற்றுமடி!

உழைக்கும் வர்க்கம் துய்த்தே உயர்ந்திட
உயரறம் விளக்குதடி!-நலம்
தழைக்கும் பொதுமையில் தன்னலம் துறந்திடத்
தரணியே செழிக்குமடி!

ஓர்குலம், ஓரினம் உன்னத ஒருமையும்
ஓங்கிடச் சுடருமடி!-உயர்
வேரெனும் மானிடம் விளங்கிடும் நேயத்தில்
விரிபயன் படருமடி!

பார்மிசை யாவரும் பணிசெயத் தோய்ந்திட
பன்னலம் மிளிருதடி!-தவத்
தேரென அருள்வலம் திக்கெலாம் நடந்திடத்
தெய்வதம் மலருதடி!

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள், சென்னை நகரில் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டப் பணிகளைப் பார்வையிட்டார். (4.1.'90)

புகழ் பெற்ற உலகக் குத்துச்சண்டை வீரர் திரு. முகமது அலி அவர்கள், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார்கள். (4.1.'90)

திருக்குறள் திசை காட்டும் சூரியன்

கவியரசர் இளந்தேவன்



புள்ளிவிழா வெண்ணிலவே!
பூச்சிவிழா ஒளிப்பயிரே!
வள்ளுவமே! உயிர்ப்பயிரை
வாழவைக்கும் வான்மழையே!

ஞானத்தின் பொதுமறையே
நற்றமிழின் ஒருமறையே!
வானத்தைக் கையிரண்டில்
வழங்குகின்ற திருமறையே!

தமிழ்முனிவன் தலை-ஊற்றே!
தத்துவத்தின் தலையூற்றே!
உமிழ்நீரைத் தமிழ்நீராய்
ஊறவைக்கும் உள்ளுணர்வே!

தசைகளுக்குச் சத்துணவே!
சகலருக்கும் புத்தமுதே!
திசைகளுக்குத் திசைகாட்டும்
திராவிடத்துச் சூரியனே!

உனைப் பெற்ற தமிழன்னை
எனைப்பெற்றாள் என்பதனால்
முனைப்புற்றேன்; அவளேஎன்
மூச்சென்ற நினைப்புற்றேன்!



பொங்கல் சிந்தனை

பி.வி.கிரி

உண்மைகள் மலர வேண்டும்
உதவிகள் பெருக வேண்டும்
நன்மைகள் வாழ்வில் சேர
நல்வாழ்த்து கூற வேண்டும்!

தமிழ்மொழி வளர வேண்டும்
தமிழர்நிலை உயர வேண்டும்
அமைதியெங்கும் பரவ வேண்டும்
அன்புவழி செல்ல வேண்டும்!

வன்முறைகள் தொலைய வேண்டும்
வளமெல்லாம் நிறைய வேண்டும்
நன்முறைகள் நாளும் நண்ண
நாமெல்லாம் சேர வேண்டும்!

பெண்கல்வி உயர வேண்டும்
பேதைமை ஒழிய வேண்டும்
உண்மைசேர் நட்பே ஓங்க
உறுதிமொழி ஏற்க வேண்டும்!

மாற்றம் சொல்லில் அல்ல — கருத்தில்!

சொல்லிலே ஏற்படும் மாற்றம் சொல் அளவினதல்ல - கருத்தினுக்குக் கருவியன்றோ சொல்! எனவே, சங்கராந்தி தமிழர் திருநாள் ஆனது, ஒரு பதத்துக்குப் பதில் வேறொன்று என்று ஏற்பட்டதல்ல - ஒரு கருத்து ஒழிந்து பிறிதோர் கருத்து மலர்ந்ததைக் காட்டுவதாகும். அதைப்போலவே, கன்னிகாதானம் - திருமண மாகி, திருமணம் இன்று வாழ்க்கைத்துணை ஒப்பந்தமாகியிருக்கிறது.

கும்போது கணக்கீட்டின்படி 15-35 வயதுப் பிரிவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 1995-இல், அதாவது எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 117 இலட்சம் பேர் இருப் பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் இறுதிவரை வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற வர்கள் 60 இலட்சமாகும். 1989-90-இல் 10 இலட்சம் பேர் பயனடைவார்கள். மீதமுள்ள 47 இலட்சம் பேருக்கும் 1995-ஆம் ஆண்டுக்குள் எழுத்தறிவு அளிக்கப்பட வேண்டும்.

இந்த இலக்கினை அடைய தமிழகத்தின் நடுவண் அரசின் உதவியுடன் 8,100 வயதுவந்தோர் மையங்களும், தமிழக அரசின் உதவியுடன் 14,900 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தொண்டு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், நேரு இளைஞர் மன்றங்கள் மூலமாக 3,700 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 25,000 நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களும் வயதுவந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வயதுவந்தோர் கல்விக்காக 1989-90-ஆம் ஆண்டிற்கு மாநில அரசு மூலம் 4.33 கோடி ரூபாயும், நடுவண் அரசு மூலம் 4.32 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 8.65 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

புதிதாகக் கற்றவர்கள் கற்ற எழுத்தறிவை மறந்துவிடாமலிருக்க நடுவண் அரசு உதவியுடன் 700 தொடர்கல்வி மையங்களும், மாநில அரசு உதவியுடன் 100 தொடர் கல்வி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தொண்டு நிறுவனங்கள் 260 தொடர்கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றன.

கடலோர மீனவர்களுக்காக டேனிடா உதவியுடன் தமிழக அரசு தனியாக ஒரு வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை இவ்வாண்டு முதல் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 5 ஆண்டுகளில் 90,000 மீனவர்கள் பயன்பட உள்ளார்கள்.

தமிழகத்தில் படித்த அனைவரும் வயதுவந்தோர் கல்விப் பணியில் ஈடுபட வேண்டும். இதற்காக உலக எழுத்தறிவு ஆண்டான இவ்வாண்டில் செயல்படுத்த பல செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவை:

—ஜனவரி '90 முதல் டிசம்பர் வரை 'உலக எழுத்தறிவு ஆண்டு விழா' மாவட்ட வாரியாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

—உலக எழுத்தறிவு ஆண்டில் எழுத்தறிவின் அவசியம் குறித்துப் பரவலாக விளம்பரம் செய்ய வண்ணச் சுவரொட்டிகள், சிறு வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

—எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் உலக எழுத்தறிவு விழா கொண்டாடவும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபடுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

—வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்கள் மூலமாக எழுத்தறிவின் அவசியத்தை எடுத்துக்கூற முழக்கங்கள், ஒருவரிச் செய்திகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

'எழுத்தறிவைப் பரப்புவோம்
அறியாமையை விரட்டுவோம்!'

'எழுத்தறியார் கண்ணிழந்தார் எழுத்தறிவோர் அறிவொளி பெற்றோர்!'

'எழுத்தறிவு - பரவப் பரவ மூட நம்பிக்கை குறையும், முன்னேற்றம் விளையும்'

'எழுத்தறிவு - வாழ்விற்கு ஒளி'
'தற்குறிநிலை - வாழ்க்கையில் இருள்'
'எழுத்தறிவு பெறுவீர்! எழுத்தறிவால் திறமை வளரும்!'
வருமானம் பெருகும்! வறுமை விலகும்!' - இதுபோன்ற முழக்கங்கள் பரப்பப்படும்

-அனைத்துப் பத்திரிகைகளிலும் சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

திட்டப் பகுதிகளில் சிறப்பான முறையில் விழாக்கள், காட்சி அரங்கங்கள், ஊர்வலங்கள், பேரணிகள், கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

—ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஒருசில கிராமங்களைத்தேர்வு செய்து 100 சதவிகித மக்களும் எழுத்தறிவு பெற்றிட செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும் இப்பணி முழுமைபெற தமிழகத்தில் படித்த மக்களனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசியல் அமைப்புகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், தொழிலதிபர்கள், சுழற் குழுவினர் (Rotary) அரிமா சங்கத்தினர், ஜேசீஸ் குழுவினர், தேசிய வங்கிகள், சமூக நல மகளிர் மன்றங்கள், உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகள் போன்ற பலதரப்பட்ட அமைப்பில் உள்ள மக்களும், நிறுவனங்களும் ஈடுபாட்டுடன் முயன்றால் தமிழக மக்களின் எழுத்தறிவு நிலை பெரிதும் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. இதற்கு அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன். புத்தாண்டில் புத்துணர்ச்சியுடன் செயல்படுவோமாக.

அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்

(5-1-90 அன்று தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையிலிருந்து)

படமும் செய்தியும்

ஈராஸ் இயக்கத் தலைவர்கள் பாலகுமார், சங்கர் முகிலன் ஆகியோர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து உரையாடினர். (7.1.'90)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில், இலங்கை வட கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜ பெருமாள் அவர்கள் சந்தித்துப் பேசினார். (8.1.1990)

மகிழ்வு தரும் பொங்கல் திருநாள்

புலவர் தமிழ்ப்பித்தன்

பொங்கல் திருநாள் என்றாலே
பொங்கிடும் மகிழ்வு தன்னாலே
கங்குல் விலகும் கதிராலே
கடமை சிறக்கும், செயலாலே

மங்கலம் சேரும், பண்பாலே
மனக்கடல் ஒலிக்கும் அன்பாலே
மங்கையர் மகிழ்வர் தொண்டாலே
மழலையர் மகிழ்வர் கரும்பாலே

இல்லம் சிறக்கும் உழவாலே
இணைகள் மகிழ்வர் உறவாலே
வெல்லம் மணக்கும் நெய்யாலே
விழிகள் மலரும் உணர்வாலே

பொங்கல் அமுதச் சுவையாலே
புன்னகை நிறையும் மண்மேலே
சங்கம் வளர்த்த தமிழாலே
சந்ததம் வாழ்த்தி மகிழ்வோமே.

பொங்கல் நல்வாழ்த்து

பட்டுக்கோட்டை ராசேந்திரன்

ஊதை மார்கழிப் பனித்திரை விலக்கி
உதய சூரியன் காட்சிதந்தான் - புதுப்
பாதை தெரிந்தது; தகதக வெனத் தைப்
பாவை இன்று துணைக்கு வந்தாள்!

எங்கள் தமிழ்நிலம் எங்கள் தமிழினம்
எங்கும் பொங்கல் வாழ்த்தொலிகள் - தைப்
பொங்கல் நாளில்நெய் மணக்கும் சர்க்கரைப்
பொங்கல் போலும்தென் பாங்கிசைகள்!

மாடு பிடித்தனர் காளையர்; பாவையர்
மாக்கோலம் இட்டுப் பூவைத்தார் - தமிழ்
நாடு மகிழ்ந்தது; சிறுமியர் வளையல்கள்
நல்லிசை பாடிடக் கும்மிவைத்தார்!

தொல்லை வாழ்க்கை இல்லை நமக்கினி
தோழா தோளொடு தோள்திறப்பாய் - ஓர்
எல்லை [illegible] அன்பினுக் கேநீ
[illegible] இந்நாளில் வாழ்த்துரைப்பாய்!

நூல் நயம்

கடல் வீரன் நெல்சன்

ஆசிரியர் : அரக மணிமேகலை
வெளியீடு: மகாசக்தி பதிப்பகம்
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

விலை : ரூ.7 பக்கம் : 67

வரலாற்றுப் புகழ்மிக்க கடற் போர்களில் ஈடுபட்டு வெற்றி பெற்ற பிரிட்டிஷ் மாவீரன் லார்டு நெல்சனின் வீர வரலாற்றை இந்நூல் தெரிவிக்கிறது.

'பொறியின்மை யார்க்கும் பழியன்று' என்று எடுத்தோதினார் திருவள்ளுவர். அங்கத்தில் குறை ஏற்பட்ட போதிலும், அயராது ஆற்றலுடன் விளங்கினார் நெல்சன் என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது. கடமையைக் கண்ணாகப் போற்றிய மாவீரன் நெல்சன் - நெப்போலியனை வென்ற செய்தி - சுவையாக விவரிக்கப்பட்டு உள்ளது. நெஞ்சுறுதிக்கு நெல்சன் என்ற சிறப்பையும் அவர் பெற்றுள்ள செய்தி தெளிவாக்கப்பட்டுள்ளது. எளிய இனிய நடை நூலை அணி செய்கிறது.

மறக்க முடியாத மாபெருந் தலைவர்

ஆசிரியர் :
திருவாரூர் இரா. தியாகராஜன்
வெளியீடு: சாந்தா பதிப்பகம்
5, ஸ்ரீபுரம் 2-ம் தெரு
இராயப்பேட்டை
சென்னை-600 014

விலை : ரூ.15 பக்கம் : 167

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் சிறப்பியல்புகளின் தொகுப்பு நூல் இது. தொகுப்பாளர் ஒவ்வொரு பிரமுகரையும் நேரிற் சந்தித்து அவர்களின் அனுபவ வார்த்தைகளைச் செவியுற்று, அவற்றைச் சுவை ததும்பும் வகையில் கட்டுரைகளாக்கியுள்ளார். அதாவது குரல் பலருடையது; ஆனால் எழுத்து நூலாசிரியருடையது.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் காமராசர் அவர்களின் அதி உன்னதமான குண நலன்களை எடுத்துச் சொல்கின்றது.

ஏழை எளியவர்களுக்கு இரங்கும் உள்ளம், மாற்றுக் கட்சிக்காரரிடமும் காட்டும் மரியாதை, எளிய வாழ்க்கை - உறுதிபடைத்த நெஞ்சம் - இப்படி பல்வேறு இயல்புகளுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கிய செய்தியை இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

நிகழ்ச்சிகளைப் படிப்பது போல இல்லை - நேரிற் காண்பது போலவே இருக்கிறது. நூலாசிரியர் கையாண்டு உள்ள மேலான நடைதான் அதற்குக் காரணம்; பயனுள்ள நூல் இது.

—தமிழ்ப்பித்தன்

நீங்களும் நிருபராகலாம்

ஆசிரியர் : பி.வி. கிரி
வெளியிடு: முத்துமணி பதிப்பகம்
8, முத்துகிருஷ்ணன் தெரு,
2-வது தளம்
பாண்டி பஜார்,
சென்னை-600 017

விலை : ரூ.20 பக்கம் : 204

எந்த ஒரு நாடானாலும் சரி; அவ்வந்நாட்டுப் பத்திரிகைகளால் அந்நாடு பெறும் பலன் மிகப் பெரிதாக இருக்கும். சமுதாய நிமிர்வுக்குப் பத்திரிகைகளால் உண்டாகும் பணி மகத்தானது ஆகும். ஒரு பத்திரிகைக்கு, அதன் நிருபர் முதுகெலும்பு போன்றவராவார். அந்தத் தகுதிக்கு ஒருவர் உயர எத்தகைய தகுதிகளெல்லாம் தேவை என்பதே இந்த நூலுக்கு அடித்தளம்.

பல்வேறு தலைப்புகளின் கீழ் 11 கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. நடுத்தர நாளிதழின் வரைபடம்; தமிழ்த் தென்றல் திரு.வி.க., கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., தமிழறிஞர் மறைமலையடிகள் போன்றோரின் புகைப்படங்கள், அவர்கள் அந்நாளில் நடத்திய ஏடுகளின் படங்கள் எல்லாம்கூட தொகுக்கப்பட்டுள்ளன.

ஒரு பத்திரிகை அலுவலகத்தின் முழுப்பணி என்ன என்பதைத் தெளிவுபட விளக்கியிருக்கிறார் நூலாசிரியர் திரு. பி.வி. கிரி. பிரபல எழுத்தாளர்கள், ஏட்டாளர்கள், நிருபர்கள் ஆகியவர்களையும் பேட்டி கண்டு பத்திரிகைப் பணி - நிருபர் பணி ஆகிய விவரங்களையும் அரும்பாடுபட்டுத் தொகுத்தளித்திருக்கிறார்.

பத்திரிகையுலகில் - அதிலும் குறிப்பாக, நிருபராக ஒளிவீசி உயர நினைப்போருக்கு வழிகாட்டும் நூல் இது; இருப்பினும் அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

—இல. இராசேந்திரன்

தொலைக் காட்சியும் பிறதகவல் துறைகளும்

ஆசிரியர்: வெ. நல்லதம்பி,
வெளியீடு: வள்ளுவன் வெளியீட்டகம்,
81, மூன்றாவது கிழக்குத் தெரு,
திருவான்மியூர்,
சென்னை-600 041.

விலை:ரூ. 15 பக்கம்:109.

மக்கள் தகவல் தொடர்புத் துறைச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை இன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கும், சீர்திருத்தத்துக்கும் இந்தச் சாதனங்கள் பெருமளவில் பயன்படுகின்றன. இவற்றின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றை இத்துறைகளில் அனுபவம்மிக்க இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சியின் வரலாற்றைக் கூறுவதுடன், நிகழ்ச்சி தயாரிக்கும் விதத்தையும் விளக்கியிருக்கும் பாங்கு பாராட்டத் தக்கது. இதேபோல, வானொலியும், திரைப்படமும் விளக்கப்பட்டுள்ளது. செய்தித்தாள் என்கிறபோது, அதன் பழமையும் புதுமையும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

பொதுவாக இந்நூல், மேற்கண்ட துறைகளில் ஈடுபட விரும்புவோர்க்கு மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

-பொ. மறைமலை.

முத்துக்காளத்தி சிந்தனைகள்

ஆசிரியர்: அ. வசந்தகுமார்
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே,
சென்னை-600108

விலை: ரூ. 9. பக்கம்:96.

'நம்பிக்கை எல்லாவற்றுக்கும் மூல வேர்'.

'மனத்தின் ஆற்றல் வெளிப்பட வேண்டுமானால், நமது மனத்தைத் தீய எண்ணங்களிலிருந்து விடுவித்து, நல்ல இலட்சியத்திற்காக, உயர்வான குறிக்கோளுக்காகக் கட்டுப்படுத்த வேண்டும்'

'இலட்சியத்தை அடைய வேண்டுமானால் பயம் என்னும் நோய் போக்கப்பட வேண்டும்'.

-இப்படி வாழ்க்கை வண்டி தடை இல்லாமல் செல்லத்தக்க வகையிலே, சிந்தனை எனும் நல்ல பாதையைத் தந்திருக்கும், திரு. முத்துக்காளத்தியின் சிந்தனையை விளக்கிக் கூறுகிறார் இந்நூல் ஆசிரியர்.

சென்னை நகரச் சுற்றுலாத் தலங்கள்

ஆசிரியர்:அ. ராம்கோபால்
வெளியீடு:நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
41-பி., சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 98.

விலை: ரூ. 10 பக்கம்:96.

சென்னை மாநகரின் தோற்றமும் வளர்ச்சியும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான சென்னை மாநகரின் சிறப்புகளைக் கூறுவதுடன், அங்குள்ள முக்கியச் சாலைகள், ரயில் பாதைகள், பார்க்க வேண்டிய இடங்கள், தொழிற்சாலைகள் முதலான விவரங்களையும் இந் நூலில் நாம் விரிவாகக் காண முடிகிறது.

பொதுவாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு கையேடாகும்.

-பி.வி.ஜி.

நிழல் தேடும் நெஞ்சங்கள்

ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்
வெளியீடு: சுதா பதிப்பகம்
முத்து முதலித் தெரு
புரசைவாக்கம்
சென்னை-600 007

விலை:15 பக்கம்:136

நிழல் தேடும் நெஞ்சங்கள், தடங்கலுக்கு வருந்துகிறோம் என இரண்டு நாடகங்கள், முதலாவது நாடகம் சென்னை வானொலியிலும், இரண்டாவது நாடகம் சென்னைத் தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளி பரப்பான நாடகங்கள்.

மேடை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிற்கு நாடகங்கள் வெவ்வேறு கோணத்திலும், வெவ்வேறு விளக்கங்களுடனும் எழுத வேண்டும். சற்று சிரமமான காரியம்தான், ஆசிரியர் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

இந்நாடகங்களைப் படித்து மகிழலாம்.

தவறான தடங்கள்

ஆசிரியர்: ஐசக் அருமைராஜன்
வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை-600 003

விலை: ரூ. 26. பக்கம்: 190.

இந்நாவலைப் படிக்கும் போது உண்மைச் சம்பவங்களைப் படிக்கும் உணர்வு ஏற்படுகிறது.

பூஞ்சோலையாய்ப் பூத்துக் குலுங்க வேண்டிய நடுத்தரக் குடும்பம் ஒன்றின் மகிழ்ச்சியை, உயர்வை, கண்ணியத்தை, குடும்பத் தலைவியின் பொறுப்பற்ற செயல்கள் எவ்வாறு சின்னா, பின்னப்படுத்திச் சீரழிக்கின்றன என்ற நிலைமையைக் கூறுகிறது கதை.

பக்கங்களைப் புரட்டப் புரட்ட இந்த நாவலின் அசாதாரணம் நம்மை வியக்க வைக்கிறது. இன்றைய நாவல் வியாபார விதிகளுக்கு முற்றிலும் முரண்பட்ட வித்தியாசமான நாவல்.

ஒரு பெண், அல்லது ஆண் இந்தச் சமுதாயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற குறைந்தபட்ச நீதியை இந்த நாவல் எடுத்துச் சொல்கிறது.

-என். குமாரசாமி

வருந்துகிறோம்

'தமிழரசு' அச்சகத்திலும், பின்னர் தமிழரசு அலுவலகத்திலும் கடந்த 15 ஆண்டுக்காலம் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. முகம்மது இஸ்மாயில் அர்ஸத், 1.1.1990 அன்று தமது 35-வது வயதில் திடீரெனக் காலமானார்.

அன்னாரது மறைவுக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

வரப்பெற்றோம்

கீழ்க்காணும் நூல்கள் மூன்றும் விற்பனை உரிமை: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108. ஒவ்வொன்றும் விலை ரூ.3 பக்கம்:32

சிரிக்கவும் கொறிக்கவும்:

தொகுதிகள்-1,2,3.
ஆசிரியர்: மு. முத்துக்காளத்தி

*

திருக்குறள் உவமைக் களஞ்சியம்:

ஆசிரியர் : பசும்பொற்கிழார்,
வெளியீடு: பாவலர் பதிப்பகம்,
பாளையம்பட்டி - 632 611.

விலை:ரூ.5 **பக்கம்:64**

ஸ்ரீ ரமண மகரிஷி:

ஆசிரியர் : டாக்டர் சோ.சேசாசலம்
வெளியீடு: அநுராகம்,
10, கண்ணதாசன் சாலை,
தியாகராயநகர்,
சென்னை-17,

விலை:ரூ.2.50 பக்கம்:32

இராமாநுசர்:

ஆசிரியர் : மனசை நளினா,
வெளியீடு: சங்கம்,
135, சாந்தி நகர்,
குரோம்பேட்டை,
சென்னை-600 044.

விலை:ரூ.7 பக்கம்:92

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை

நவீன பருத்தி வகைகள்

உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையிலா புதுமைகள், எண்ணிலா வகைகள்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



12 பிப்
சென்னை-600008.

1-2-1990. ரூ. 1.



தோற்றம்:
15.9.1909

பிப்ரவரி - 3
பேரறிஞர் அண்ணா
நினைவு நாள்

மறைவு:
3.2.1969

இந்த இதழில் ...

உத்தமர் காந்தியார் —பேரறிஞர் அண்ணா	... 2
எம் அண்ணா இதய மன்னா! —முதல்வர் கலைஞர்	... 4
தமிழ்நாடு வளம்பெற புதிய திட்டங்கள் — சட்டமன்றத்தில் ஆளுநர் உரை	... 9
பயனடைந்தோர் பகர்வன:	... 19
திருவள்ளுவர் திருநாள்	... 24
கோவை மாவட்டத்தில்	... 33
செந்நாப் புலவர் கார்மேகனார்	... 39
உதயசூரியன் நகர் புதிய குடியிருப்புகள் திறப்பு விழா	... 41
டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு	... 46



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021
சுக்ல ஆண்டு - தை - 19
மலர் : 20 இதழ் : 15
1-2-1990

எம் அண்ணா

இதய மன்னா!

முதல்வர் கலைஞர்

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள்
எனினும்;
கலைமகளாம் நம் அன்னை, வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.
மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான் - மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் - நம்
கண்பட்டும்படாமலும்எழுகின்ற நச்சுமரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் - முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த
தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்
கண்டுவிட்டார்.

மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள்
- தமிழ்
'அழியினும் வாழினும் என்'னென்று இருந்திட்டார்.
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட
பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர்செய்தார் பிழை குவித்தார்.
மழையற்றுப்போன வயல்போல மாறிற்றுத் தமிழர்
மனம்;
அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச்சொல்
நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்;
பொருளிலார்க்கு இவ்வுலக மில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் -
இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடிபோட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை - சோகப் பாட்டுப்

பாடினாள் தமிழன்னை - சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை -
ஓடினாள் தமிழன்னை -
ஓடினாள் ஓடினாள்
ஒரு வழியும் கிடைக்கவில்லை,
புலியூர் விட்டுப் புகழூரில் வாழ்கின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று; 'அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்' என்றாள்!
'என்னம்மா' என்றான் குறளோன்!

'தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும்
தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டு'மென்றாள்.
'தங்கம் எடுக்கவா' என்றான்:
'தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க' என்றாள்,

இனிமேலே எனமகிழும்
உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத்
துள்ளி எழ

காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
'கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக' என்றாள்,

'இன்றென்ன ஆயிற்'றென்றான்.
'குன்றனைய மொழிக்கு ஆபத்'தென்றாள்;
'சென்றடையக் குடிலில்லை ஏழைக்'கென்றாள்;
'கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்'றென்றாள்;
'அறிவில் -
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும்
சொன்னாள்.

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுத மொழி வள்ளுவனும்
'அம்மா நான் எங்கே பிறப்ப'தென்றான்.
தொழுத மகன் உச்சி மோந்து - ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக்கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது

பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக -
பொதிகைமலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்
பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் - கீழ்
வானுதித்த கதிர்போல -
புரியாதார்க்கு ஒரு புதிர் போல!
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை.
தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்

உத்தமர் காந்தியார்

-பேரறிஞர் அண்ணா

“உலகிலேயே படைபலமும் இராசதந்திர பலமும் மிகுந்ததோர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காண முடியும் ஆயுத பலமுமின்றி” - என்ற எந்தத் திடமனதை எந்த உத்தமர் உண்டாக்கினாரோ அவரை - ஏகாதிபத்தியமே பணிந்துவிட்ட நேரத்தில் - எவனோ வெறியன் சுட்டுவிட்டான்! இந்த நாடும் உலகமும் இதனை மறப்பதற்கில்லை!

நமது வாழ்நாளிலே, நாடு விடுதலை பெறக் கண்டோம்! நாம் சாகுமுன், 'ஆங்கில நாட்டுக்கு நாமோர் அடிமை' என்று இருந்த இழிவு நீக்கப்பட்டு - அதனால் நமது மக்களெல்லாம் தலைநிமிர்ந்து நின்று, பூரித்து - 'நமது தலைமுறை மகத்தானது' என்று மார்தட்டிக் கூறினோம்! இன்றோ, 'மகாபாவியினால் மகாத்மா கொல்லப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர்கள் நாம்' என்ற துக்கம், மனதைப் பிய்த்துத் தின்னுகிறது!

அவருடைய முப்பதாண்டுப் பணியிலே ஒரு கடுமையான சொல் - ஒரு நேர்மையற்ற செயல் - ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை!

அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத் திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று!

அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர்!

அவர் மண் குடிசையிலே தங்கினால், 'அங்கு செல்வது மதிப்பளிக்கக் கூடியது' என்று மன்னாதி மன்னர்கள் எண்ணினர்!

அவருடைய மறைவு கேட்டு மாநிலமே துடிதுடித்ததுபோல், வேறு எங்கும் எந்தத் தலைவருக்கும் ஏற்பட்டதில்லை!

புதிய மார்க்கம் துவக்கிய புத்தர் - வீரத்தாலும் பிறகு விவேகத்தாலும் இந்தியாவின் புகழை வளரச் செய்த அசோகன் - பெரிய வல்லரசுகளைக் கட்டியாண்ட மன்னர்கள் ஆகியோர், படித்தவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடிய நிலை பெற்றனர்!

மகாத்மாவையோ மாநிலம் முழுவதும் - படித்தவர், பாமரர், பாராளுமன்றத்தினர் அனைவரும் அறிந்துகொண்டதுடன், அவர்களின் மனதிலே அவர் இடம் பெற்றார்!

'சத்தியம், அகிம்சை' எனும் இரு தத்துவங்களை நாடுகொள்ள வேண்டுமென்பதை, அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார்.

அரசியலிலே மோசடிகளும், படுகொலைகளும் நிகழ்ந்த போதும், அவர் மனம் வேதனைப்பட்டதேயன்றி, அவர் அந்த இரு தத்துவங்களை வலியுறுத்தத் தவறவில்லை! கடைசி வரையில் அந்தக் கொள்கையை அவர் கொண்டிருந்தார். நாடு அந்தக் கொள்கைவழி நிற்கவில்லையே' என்ற எண்ணம் - அவர் மனதிலே கிளப்பிய வேதனைப் புயல் - கொஞ்சமல்ல! கடந்த சில மாதங்களாகவே, இந்த மனவேதனையை அவர் எடுத்துக்கூறி வந்தார்.

எவரும், 'இயலாதது' என்று எண்ணி, போகத் துணிவு பெறாமல் இருக்கும் இடத்திற்குச் சென்று பணியாற்ற அவர் முன்வந்தார்! படுகொலைகள் நடைபெற்ற நவகாளி, கல்கத்தாப் பகுதிகளிலே அவர், கிராமம் கிராமமாக - ஒற்றையடிப் பாதைகளிலே - வயல் வரப்புகளின்மீது - குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று, நொந்த உள்ளங்களுக்கெல்லாம் ஆறுதல் அளித்தார்! மிருகத்தன்மையை மாற்றினார்! மக்களிடம் புதியதோர் மன மாறுதலை ஏற்படுத்தினார்!”

அவர் மறைந்தார் - அவரை அவனி மறவாது! அவருக்கு இருந்த மன உறுதியில் ஆயிரத்திலோர் பாகமேனும் நாம் பெற்றால் தான், அவனி நம்மைக் கண்டு, 'அவர் வாழ்ந்த நாட்டு மக்கள்தான் இவர்கள்' என்று கூறும்.

மனிதனுக்குள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் வெளி வந்து வெறிச்செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

அகில உலகமும் நம்முடன் இந்தத் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள புதிய நிலையைக் காப்பாற்ற, இந்த உறுதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியக் கோட்டையைத் தகர்த்து - யுகயுகமாக மூடிக் கிடந்த ஆலயங்களைத் திறந்து - மக்களிடையே புதிய மாண்பைக் காண்பதற்குத் தளராமல் பாடுபட்டு வந்த புனித புருஷரை இழந்துவிட்டோம்!

நமது வாழ்நாளிலே நேரிட்ட இந்த மகத்தான நட்டத்துக்கு, பலப்பல தலைமுறைகளுக்குப் பிறகும், ஈடுசெய்யக்கூடிய நிலை வராது.

இந்து மதத்தில் ஏறிப்போய் ஊறிப் போயிருந்த கேடுகளை எல்லாம், தமது பரிசுத்த வாழ்க்கையாலும் - தூய்மையான உபதேசத்தாலும் - புதிய தத்துவார்த்தத்தாலும் நீக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார்!

'இந்த அரும்பணியால், அன்பு மார்க்கம் தழைக்கும்; அனைவரும் ஆண்டவனின் குமாரர்களே என்ற உண்மை துலங்கும்' என்று மனமார நம்பினார்!

அந்தோ! 'இந்த அகத் தூய்மையோ, புறத் தூய்மையோ, நெடுங்காலமாகக் குவிந்து வளர்ந்து போயுள்ள மத வெறியர்களைத் திருத்தாதே' என்று கூறி வந்தோம்; யாரிடமிருந்து அவர் அன்பு மார்க்கத்தை எதிர் பார்த்தாரோ - அங்கிருந்தே அவர் உயிரைக் குடிக்கும் ஒரு வெறி பிடித்த இந்து கிளம்பினான்; அவன், 'இந்து மார்க்கத்தையும், இந்து அரசையும் நிலைநாட்டும் நோக்கம் கொண்டவன்' என்று கூறப்படுகிறது; ஐதராபாத் சமஸ்தான சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டவனாம்; பெயர் நாதுராம் வினாயக் கோட்சே!

உலகை நோக்கி - நமது உள்ளத்தை நோக்கி,

'உத்தமரை வீழ்த்தி விட்டான் ஓர் உலுத்தன்; அவருடைய உடலை நாங்கள் இழந்துவிட்டோம்; அவருடைய உத்தமக் கொள்கைகளின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார்; இந்தத் துக்க நாளன்று அவர், எங்கள் ஒவ்வொருவருடனும் கலந்து விட்டார்; இனி அவரை எங்களை விட்டுப் பிரிக்க முடியாது; யமுனைக் கரையிலே அவருடைய சடலத்தைக் கொளுத்தினோம்; ஆனால், வீடு திரும்புமுன், எங்கள் உள்ளங்களிலே அவர் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம்; அவர் இதோ இருக்கிறார் - எங்கள் நற்குணத்துக்கும், நல்ல நடத்தைக்கும் காரணமாக விளங்கிவருகிறார்' என்று கூறவேண்டும்; சொல்லால் மட்டுமல்ல - செயலால் - அனைவரும்!

(உத்தமர் காந்தியார் 30.1.1948-இல் மறைந்த செய்தி கேட்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் ''உத்தமரை இழந்தோம் - உலகெங்கும் அழுகுரல்'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து)

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் 'பெர்னாட்ஷாவையும், இப்ஸனையும்' நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். நாடகாசிரியர் இன்றி தமிழ்நாடு பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

அண்ணாவின் ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்ததன் பயனாக, ''இதோ ஒரு பெர்னாட்ஷா' தமிழ்நாட்டில் இருக்கிறார். இப்சனும் இருக்கிறார். இன்னும் கால்ஸ்வொர்த்திகூட இருக்கிறார்''

-கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.

நடிகர் என்பார் நாடக வேந்தர் என்பார்,
சொல்லாற்றல் சுவைமிக்க
எழுத்தாற்றல் பெற்றார் என்பார்.
மனிதரென்பார் மாணிக்கமென்பார்
மாநிலத்து அமைச்சரென்பார்
அன்னையென்பார் அருள்மொழிக் காவல் என்பார்
அரசியல் வாதி என்பார் - அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்
நெஞ்சத்து அன்பாலே
'அண்ணா' என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே - அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஒளவைக்கோர் சிலை;
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை;
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடிப் பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை;
கால்டுவெல்போப்புக்கும் சிலை; கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததினால் - அண்ணன்
தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய;
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது ...
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார் ...
ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்.
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஓர்விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன்
தொடர்ந்தாய்...?

உன் கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தோமே;
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி விட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய் விட்டாய்;
நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?...
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண் மூடிக்கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்...
இன்று மண் மூடிக் கொண்டு உன்னைப்
பார்க்காமல்

தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய், எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதும் அண்ணா;
எழுந்து வா எம் அண்ணா...!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா... நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...!

(பேரறிஞர் அண்ணா அவர்கள்
மறைவெய்திய போது,
பாடிய கவிதாஞ்சலியிலிருந்து)

வீரனின் நெஞ்சம்

சூட்கமேந்திக் களத்திலே குதித்த வீரன், 'கரி பாய்கிறதே - பரி பறந்து வருகிறதே' என்று எங்ஙனம் கலங்க மாட்டானோ - அது போலவே 'காரிய சித்தியே வாழ்க்கையின் இலட்சியம்' என்று கருதிவிட்டவன், மாடு மனை போனாலும் - மக்கள் சுற்றம் இழந்தாலும் - பெறுதற்கரிய உயிரையே குடித்தேகும் கொடுமைகள் வரினும் - தேள் கிணற்றிலே தள்ளப்படினும் - தீக்குண்டத்தில் உருட்டப்படினும் 'அஞ்சேன், அயரேன்' என்று ஆவேசம் கொண்டுவிடுகிறான்.

—பேரறிஞர் அண்ணா

தமிழகம் தொழில்மயமாகிறது!

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டி 'சிப்காட்' தொழில் வளாகத்தில் 11.1.90 அன்று மூன்று தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்தார்; இரண்டு தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. இராம கிருஷ்ணன் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். "மாண்புமிகு முதல்வர் அவர்கள் - இப்போதுதான் என்றல்ல; முன்பு தமிழக முதல்வராக இருந்த காலந்தொட்டே தமிழ்நாடு தொழில் வளர்ச்சி அடைய அரும்பாடுபட்டு வருகிறார். மாதம் ஒரு தொழிற்சாலை என்கிற அரசின் குறிக்கோளால், தமிழ்நாடு விரைவிலேயே தொழில் வளம் மிகுந்த முதல் மாநிலம் ஆகி விடும்" என்று தனது தலைமை உரையில் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தினுடைய தலைவர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் திருமதி மரகதம் சந்திரசேகர் எம்.பி., தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கி.வேணு நெல்லிக்குப்பம்திரு.கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர்வியாஸ், இ.ஆ.ப., மற்றும் ஊராட்சி மன்ற - ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் வருகை தந்திருந்தார்கள். விழா முடிவில் சிப்காட் நிறுவனத் தலைமைப் பொறியாளர் திரு. பி.எஸ். நாகேந்திரய்யா நன்றி கூறினார்.

கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் செஞ்சுரி சேஃப்டி கிளாஸ் இன்டஸ்ட்ரீஸ், சூரியோதயா பிளாஸ்டிக்ஸ், சென்னை, ஹைட் ராலிக் ஹோஸ் ஆகிய தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்தும் - கே.எஃப். லாக்ஸ், எஃப்.எம். பிளாஸ்டிக் ஆகிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"பிளாஸ்டிக் தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் தொடக்க விழாவும் - ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலையின் தொடக்கவிழாவும் - உறுதியான கண்ணாடி கிளாஸ் (Toughened Glass) தயாரிக்கின்ற தொழிற்சாலை தொடக்க விழாவும் இன்று இங்கு நடைபெறுகின்றன.

"தோல்பெட்டிகளுக்குத் தேவையான பித்தளைப் பூட்டுகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவும், கோ-எக்ஸ்டிரூடட் பிலிம்ஸ் தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழாவும், இத்துடன் இணைந்து - இந்த ஐந்து தொழிற்சாலைகளின் சார்பில் ஏறத்தாழ பத்துக் கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்யப்பட்டு, அதற்கு 'சிப்காட்' நிறுவனம் நிறைந்த ஒத்துழைப்பைத் தந்து, வேறு பல நிதி வழங்கக்கூடிய நிறுவனங்களின் சார்பிலும் உதவியைப் பெற்று - அரசின் சார்பில் அளிக்கப்படக்கூடிய சலுகைகளையெல்லாம் பெற்று, தொழிற்சாலைகளை இந்தப் பேட்டையிலே தொடங்குகிறார்கள்.

"சிப்காட் என்கிற இந்தத் தொழில் வளர்ச்சிக்கான நிறுவனத்தை தமிழ்நாட்டில் 1971-ஆம் ஆண்டு, நான் ஆட்சிப் பொறுப்பையேற்றபோது தொடங்கினேன்.

"அதனுடைய விளைவாக, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும் இந்தத் தொழிற்பேட்டைகள் உருவாகி, இன்றைய தினம் ஏழு தொழிற்பேட்டைகள் கும்மிடிப்பூண்டியைப் போல இந்த மாநிலத்திலே உருவாகியிருந்தாலும்கூட - இராணிப்பேட்டை, ஒசூர் ஆகிய இந்த இரண்டு தொழிற்பேட்டைகள்தான் இந்தியாவிலே இருக்கின்ற வேறு சில தொழிற்பேட்டைகளோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன.

"அதேபோன்ற வளர்ச்சியைக் கும்மிடிப்பூண்டியும் பெற வேண்டும்; கடலூரும் பெறவேண்டும்; தூத்துக்குடியிலும், மானாமதுரையிலும் இருக்கின்ற தொழிற்பேட்டைகளும் பெற வேண்டுமென்ற ஆசையோடுதான் இதைக் குறிப்பிடுகிறேன்."

தமிழ்நாடு மின்சார வாரியம்

வட சென்னை அனல் மின்திட்டம்

ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக [illegible] குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) [illegible] மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 மூன்றாவது தளம், [illegible] புலவர் [illegible] இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 [illegible] முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

1. பணியின் பெயர் — [illegible] அனல் மின்திட்டம் முதல் கட்டப் [illegible] நீர் தேக்கங்கள், மேல் நிலை நீர்த் [illegible] அதன் தொடர்பான பொதுவியல் [illegible]
2. ஒப்பந்த வரையறை எண் — [illegible] அ.மி.தி./12
3. பிணை வைப்புத் தொகை — [illegible] ஒரு இலட்சம் மட்டும்)
3அ மொத்த வேலையின் தோராய மதிப்பு — [illegible]
4. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் — [illegible] நாள் [illegible] .00 மணி வரை
5. தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் — [illegible] நாள் [illegible] மணி
6. ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை
   - தமிழ்நாட்டிற்குள் — [illegible]
   - தமிழ்நாட்டிற்கு வெளியே — [illegible]
7. ஒப்பந்தத்தை அனுப்புதல் — [illegible] ஒப் [illegible] நுட்ப இனங்களுக்கான [illegible] விலைக் குறி [illegible] முத்திரையிட்டு தனித்தனி [illegible] உரிய நாளில் [illegible] நுட்ப [illegible] விலைக்குறி [illegible] பற்றிய [illegible]

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், [illegible] மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை [illegible] விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை [illegible] ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்[illegible] பொதுவியல் அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 29.1.90 காலை 10-30 மணி முதல் [illegible] பெற்றுக் கொள்ளலாம். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை [illegible] வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் [illegible] அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.30/- கூடுதலாகச் செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு

டிஐபிஆர்/190/எம்எல்/90

தமிழ்நாடு வளம் பெற புதிய திட்டங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 18-1-1990 அன்று

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் ஆற்றிய உரை

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே!

இப் புத்தாண்டில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் திருநாள் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நாடாளுமன்றத்தில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் பேருரையில், புதிய தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ள தொடக்க நடவடிக்கைகளை இந்த அரசு வரவேற்கின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ், மாநிலங்களுக்கு இடையேயான குழு (Inter-State Council) ஒன்றை அமைப்பது என்றும், திட்டக் குழுவிற்கு அரசமைப்புச் சட்ட

முறைத் தகுதி வழங்குவது என்றும் புதிய அரசு எடுத்துள்ள முடிவுகள் தனி முக்கியத்துவம் வாய்ந்தவை. முழுமையான கூட்டாட்சி, மாநிலங்களுக்கு சுயாட்சி போன்ற கொள்கை களில், தங்களுடைய உறுதிப்பாட்டினைப் பிரதி பலிக்கும் வகையில், மத்திய அரசு மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கும் என நம்புகிறோம்.

3. தேசிய அளவில் இணக்கமும் கருத்தொற்று மையும் கொள்வதன் மூலம், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் எண்ணத்தை வரவேற்கிறோம். அதிகாரங்கள், பொறுப்புகள், நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைப் பஞ்சாயத்து அமைப்புகளுக்குப் பரவலாக்கும் செயல், மத்திய-மாநில கூட்டமைப்புத் தன்மையை எவ்வகையிலும் பாதிக்காத வகையில் மேற் கொள்ளப்படும் என்று நம்புகிறோம். தூய்மை யான, வெளிப்படையான அரசு அமைய எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகளை, குறிப்பாக, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சுயாட்சி அளிப்பது, ''லோக் பால்'' ஏற்படுத்தும் சட்டம் இயற்றுவது ஆகிய நடவடிக்கைகளை வரவேற்கிறோம்.

4. நாடாளுமன்றம் மற்றும் சட்ட மன்றங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க சட்ட முன்வடிவு ஒன்றை புதிய நாடாளு மன்றம் நிறைவேற்றியுள்ளது. நமது அரசு இந்த நடவடிக்கையை முழுமையாக ஆதரிக்கிறது. இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஏற்பு அளிக்கச் சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வரப்படும்.

5. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசுத் துறைகளில், கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்வது குறித்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயற் படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டப்பேரவை கடந்த ஆண்டு மே திங்களில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மண்டல் கமிஷனின் பரிந்துரைகளைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

6. நடப்பாண்டில், தென்மேற்குப் பருவ மழை, மாநில அளவில் மொத்தத்திலும், பெரும் பாலான மாவட்டங்களில் திருப்திகரமாகவும் இருந்திருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை, மாநில அளவில், 1988ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமே என்றாலும், 8 மாவட்டங்களைப் பொறுத்தவரை இயல்பான அளவைக் காட்டிலும் 20 சதவீத அளவிற்கு மேல் குறைவாகவே இருந்துள்ளது. தென் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழையினால் நிலைமை ஓரளவுக்குச் சீராகியுள்ளது. வேளாண்மை உற்பத்தியை

ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான ஒதுக்கீட்டை மேற்கொண்டும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க சட்ட முன்வடிவு

உயர்த்த அரசு எடுத்துள்ள பல்வேறு நட வடிக்கைகள் நல்ல அளவுக்கு உற்பத்தி கிட்ட உதவியுள்ளது. நடப்பாண்டில் அரிசி உற்பத்தி 58.5 இலட்சம் டன் அளவுக்கு, அதாவது, கடந்த காலத்தில் கிட்டிய உயரளவு உற்பத்திக்கு நிகரான அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம், கரும்பு உற்பத்தி 24.20 இலட்சம் டன் அளவுக்கும் பயறு வகைகளின் உற்பத்தி 5·2 இலட்சம் டன் அளவுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இவை ஏற்கெனவே எய்திய உயர் உற்பத்தியைவிட அதிகமாக இருக்கும். சிறு தானியங்கள் உற்பத்தி 13.88 இலட்சம் டன், பருத்தி உற்பத்தி 5.2 இலட்சம் பொதி என்னும் அளவுகளில் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

7. தமிழ் நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இவ்வரசு தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. இதுவரை குடிநீர் வசதியளிக்கப் படாத 10,323 குடியிருப்புகளுக்கு இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில்

தமிழ்நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முன்னுரிமை!

இவற்றில் 5,166 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளித்துள்ளது. எஞ்சியிருக்கும் 5,157 குடியிருப்புகளுக்கும் 1990 மே மாத முடிவிற்குள் குடிநீர் வசதியளிக்கப்படும். வறட்சி நிவாரணப் பணியின் ஒரு பகுதியாக 5,149 துளைக் கிணறுகள் அமைப்பதற்கான விரைவுத் திட்டம் வெற்றிகர மாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

8. 1989 ஜனவரியில் இந்த அரசு பொறுப் பேற்றபோது, கல்பாக்கம், இராமகுண்டம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய மின் நிலையங்களில் மின் உற்பத்திப் பிரச்சினை காரணமாகத் தமிழ்நாடு கடுமையான மின் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவாக, ஏப்ரல் மாதத்தில் மின்வெட்டை 60 சதவீதமாக அதிகரிக்க வேண்டியதாயிற்று. ஜூலை இறுதியில், மின்வெட்டு 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டது, டிசம்பர் 20ஆம் நாள் முதல் மின்வெட்டு 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு ஜனவரி 12ஆம் நாளிலிருந்து மின்வெட்டு அறவே நீக்கப்பட்டுவிட்டது. இந்நிலை மார்ச் இறுதிவரை தொடரும் என்று எதிர்பார்க்கிறோம். மேட்டூர் 3-வது மின் உற்பத்தி நிலையத்தைத் (210 மெ.வா.) தொடங்கவும், எண்ணூரிலுள்ள 110 மெ.வா. திறன் கொண்ட மூன்று மின் உற்பத்தி நிலையங்களையும் மீண்டும் பயனுக்குக் கொண்டு வரவும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திச் செயல்திறனைப் பெருக்கவும் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாலும், புனல் மின் உற்பத்தி நீர்த் தேக்கங்களில் இயல்பான அளவுக்கு நீர் வரத்து இருந்ததாலும், மின்வெட்டின் அளவைக் குறைக்க

வரித் தள்ளிவைப்பு ஆகிய சலுகைகளை, 105 பின்தங்கிய வட்டங்களிலும் மாநிலத்திலுள்ள எல்லா வளர்ச்சி மையங்களிலும் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், தெரிந்தெடுக்கப் பட்டுள்ள குறிப்பான 10 தொழில்களுக்கு சிறப்பு மூலதன உதவித் தொகை கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

16. கருங்கல் (கிரானைட்) தொழிலில் ஏற்றுமதியும் வேலை வாய்ப்பும் பெருகிடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அத் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கை, முதலீட்டாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரை, கூட்டுறவுத் துறையில் 5 புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க இசைவுக் கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) பொறுப்பில் மொத்தம் ரூ. 290 கோடி முதலீட்டுடன், கூட்டுத் துறையிலும் மற்றும் ஊக்கத் துறையிலும் புதிதாக 8 தொழில் திட்டங்களைத் தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 45 கோடி முதலீட்டில் 5 தொழில் திட்டங்களை தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மேற்கொண்டுள்ளது.

17. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) இதுவரை 7 தொழில் வளாகங்களை உருவாக்கியுள்ளது. அவற்றில் செய்யப்பட்டிருக்கும் முதலீடு மொத்தம் ரூ. 500 கோடிக்கும் அதிகமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 7 வளாகங்களில் இன்றியமையா அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை—பூம்புகார் பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஈரோடு—பெருந்துறைப் பகுதி, நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டான்—மானூர் பகுதி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 30 கோடி செலவில், 3 வளர்ச்சி மையங்களை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

18. சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்துவது என்ற கொள்கையை நிறைவேற்றுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுப்பணி நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் 30 சதவீதம் மகளிருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும் முதல் இரண்டு வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணியிடங்களிலும் மகளிரே நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். பல்வேறு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும்பொழுது 30 சதவீதத்தை மகளிருக்கு ஒதுக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றோம். தேர்தல் வாக்குறுதிக்கு ஏற்ப, ஏழை, நடுத்தர வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ. 5.05 கோடி செலவில் சுமார் 10,100 பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கருவுற்ற மகளிருக்கு 200 ரூபாய் உதவித் திட்டத்தின்கீழ் 65,597 தாய்மார்கள் பயன் அடைந்துள்ளனர். நிதிநிலை அறிக்கையில் பெண்களுக்கு இந்து சட்டத்தின்கீழ் பரம்பரைச் சொத்தில் சம உரிமை வழங்க, சட்டத் திருத்தம் மேற்கொள்வோம் என்று அறிவித்திருந்தோம். இச் சட்டத் திருத்தம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

19. *1990-91* ஆம் ஆண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் பணியாற்றும் மாநிலத் திட்டக்குழுவில் சிறந்த வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். திட்டக்குழு தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் பணியைக் கணிசமான அளவுக்கு நிறைவேற்றியுள்ளது. எனினும், தேசிய அளவில் எட்டாம் திட்டத்தை வகுக்கவும், திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கான மத்திய நிதியுதவி முறைகளைத் தீர்மானிக்கவும் இன்னும் சிறிது காலமாகும். மேலும், ஒன்பதாம் நிதிக் குழுவானது, அதன் இறுதி அறிக்கையை 1989-ம் ஆண்டு கடைசியில்தான் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. இக் குழுவின் பரிந்துரைகளின் மீதான மத்திய அரசின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்பிலும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி உதவியிலும் மத்திய அரசு தாராள அணுகுமுறையைப் பின்பற்றும் என நம்புகிறோம்.

20. *1989-ம்* ஆண்டு ஜூன் திங்களில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களும் நேரடியாகக் கலந்துரையாடியதன் அடிப்படையில், தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கு 12 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் வழங்கக்கூடிய இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், நடப்பாண்டில் நம் அரசு ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 60 கோடி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. அதில், ரூ. 30 கோடி வழங்கப் பட்டுவிட்டது. சென்னை மாநகருக்குப் பயன் அளிக்கும் மிக முக்கியத் திட்டமாக விளங்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எவ்வித காலதாமதமோ மறு சிந்தனையோ இருக்காது என்று, தற்போதைய ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளமைக்காக நமது நன்றியைத்தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இத் திட்டம் செயல்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆந்திர மாநில அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தவும், ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கால அளவிற்குள் இத் திட்டம் நிறைவு பெற அவர்களின் ஒத்துழைப்பைக் கோரவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்வோம்.

21. அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், காவிரி நீர் பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்வுக்கு அனுப்ப வேண்டுமென நம் அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இதை நாம் அண்மையில் அவர்களிடம் நினைவூட்டியுள்ளோம். காவிரி

தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை

பிரச்சினை குறித்து மேற்கொண்டும் விவாதிக்கத் தயாராக உள்ளதாகக் கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டுள்ளோம். பல ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே நடைபெற்ற விவாதங்கள் எவ்விதப் பலனையும் அளிக்கவில்லை. எனவே, இப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்புவது மேலும் தாமதப் படுத்துவதாகும் என்பதே நம்முடைய நிலையாகும். நடுவர் மன்றத்திற்கு இப் பிரச்சினையை அனுப்பிய பிறகும்கூட, பேச்சுவார்த்தைகளின் மூலமாக சுமுகமான தீர்வு காணும் முயற்சிகளை ஏற்பதற்குத் தயக்கம் காட்டமாட்டோம்.

22. தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களினால், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போட நேர்ந்தது. இவற்றில் மிக முக்கியமான காரணம், நகராட்சி நிர்வாகம் (Nagar Palikas) குறித்த அரசமைப்பு 65ஆம் திருத்தச் சட்ட முன் வடிவைச் சட்டமாக நிறைவேற்ற முந்தைய மத்திய அரசு கருதியதேயாகும். இந்தச் சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் படவில்லை. எனவே, மாநகராட்சிகளில் உள்ள இடங்களில் 30 சதவீதத்தை மகளிருக்கு ஒதுக்கவும்,

மாநகராட்சிகளுக்கு 1990 செப்டம்பர் 30-க்கு முன்னர் தேர்தல் நடைபெறும்

ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு மொத்த மக்கள் தொகையில் உரிய விகிதத்திற் கேற்பப் பிரதிநிதித்துவம் அளிக்கவும் சட்டம் கொண்டுவரக் கருதியுள்ளோம். சென்னை மாநகரில் கோட்ட (division) அளவில் சராசரி மக்கள் தொகை, சுமார் 22,000 ஆகும். இது பெங்களூர், கல்கத்தா, டில்லி, பம்பாய் போன்ற ஏனைய மாநகர் வார்டுகளில் உள்ள சராசரி மக்கள் தொகைக்குக் குறைவாகவேயுள்ளது. இருப்பினும், சென்னை மாநகரில் 8 மிகப் பெரிய கோட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் மக்கள் தொகை சுமார் 30,000-க்கு மேல் உள்ளது. அதே நேரத்தில், 10 கோட்டங்களில், ஒவ்வொன்றிலும் மக்கள் தொகை 10,000 முதல் 15,000 வரை மட்டுமே உள்ளது. மக்கள் தொகை, வாக்காளர் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்தவரை, கோட்டங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், எந்த ஒரு கோட்டத்திலும் மக்கள் தொகை 30,000-க்கு மேற்படாமலும், அதே நேரத்தில் பெரும்பாலான கோட்டங்களில் மக்கள் தொகை 15,000 முதல் 25,000 வரையில் மட்டுமே இருக்கும் வகையிலும், கோட்டங்களின் அமைப்பை மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். இந்த மாற்றங்கள் அடுத்த சில மாதங்களில் செய்யப்பட்டு, இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் 1990 செப்டம்பர் 30-க்கு முன்னர் தேர்தல் நடைபெறும்.

23. கடந்த ஆண்டில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறுவதற்கு உறுதி செய்ய சிறப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதை உறுப்பினர்கள் நன்கறிவர்.

பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து சார்புரைகள் வரப்பெற்றதன் பேரில் இத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. தேர்தல்கள் நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்களை நீக்கும்பொருட்டு, சட்டத்திருத்தங்கள் தேவைப் படுகின்றன. அரசு, சட்டப்பேரவையின் எதிர் வரும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரின் போது இத் திருத்தங்களைக் கொண்டுவரக் கருதியுள்ளது. இத் திருத்தங்களின் அடிப்படையில், தேர்தல் பணிகள், 1990 ஆகஸ்ட் மாதம் தொடங்கி நவம்பர் மாதத்தில் முடிவுறும்.

24. இந்தியாவிலேயே முதன் முதலாக இந்த அரசுதான் முதலமைச்சர்–அமைச்சர்கள் உட்பட, பதவியில் இருப்போர் மீது தவறான நடத்தை குறித்த குற்றச் சாட்டுகளை விசாரித்து, புலனாய்வு நடத்த வகை செய்யும் சட்டம் இயற்றியது. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளோர் (குற்றநடத்தை) சட்டம், இது தொடர்பான முன்னோடிச் சட்டமாகும். இந்தச் சட்டம் 1977-ல் ரத்து செய்யப்பட்டுவிட்டது. இதனை மீண்டும் கொண்டு வருவதாக தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்ட லோக் பால் சட்ட முன்வடிவு போன்று, முதலமைச்சர், அமைச்சர்கள் உட்பட, பதவி வகிப்பவர்களுக்கெதிரான தவறான நடத்தை குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், புலனாய்வு நடத்தவும் வகை செய்யும் சட்டமொன்றை வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கொண்டுவர முடிவு செய்துள்ளோம்.

25. இந்தக் கூட்டத் தொடரில் உங்கள் விவாதங்கள், ஆக்க பூர்வமானவையாகவும் மக்களாட்சியின் உயரிய மரபுகளைக் கட்டிக் காப்பவையாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

பெண்களுக்குச் சொத்தில் சமஉரிமை

தமிழக அரசின் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்க வகை செய்யும் தமிழக அரசின் சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார். இந்தத் தகவலை, சட்டமன்றத்தில் 20-1-90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

சட்டமன்றத்தில் கேள்வி நேரம் முடிந்ததும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிக்கை ஒன்றைப் படித்தார். அந்த அறிக்கை வருமாறு:

''மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 18-1-90 அன்று இந்த அவையிலே உரையாற்றும்போது, இந்து வழிமுறையுரிமை (வாரிசடைமை) ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் சம உரிமை வழங்க விழைகின்ற 1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவிற்குக் குடியரசுத் தலைவரின் இசைவினை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறியிருந்தார். இந்த அவையிலே அந்த மசோதா கடந்த ஆண்டு 6-5-89 அன்று நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு 24-5-89 அன்று அனுப்பப்பட்டது.

''அந்தச் சட்ட முன்வடிவிற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தனது இசைவினை அளித்துள்ளார் என்பதையும், அந்தச் சட்ட முன்வடிவு 18-1-90-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் நான்காம் பகுதி 2-ஆம் பிரிவின் சிறப்பிதழில் தமிழ்நாடு சட்டம் 1/1990 ஆக வெளியிடப்பட்டு உள்ளது என்பதையும், இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.''

142521
சென்னை-600 008.

TNPSC Advt No 2/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002

அரசு ஊழியர்கள் மற்றும் இதரர்களுக்கான சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் மே 1990.

அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடுத்த சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் (Special and Departmental Tests) 1990-ஆம் வருடம் மே மாதம் 5-ஆம் தேதி சனிக்கிழமை முதல் 1990-ஆம் வருடம் மே மாதம் 21-ஆம் தேதி திங்கட்கிழமை வரை நடைபெறவிருக்கின்றன. தேர்வாணைய அலுவலகத்திற்கு இதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசித் தேதி 28.2.1990 ஆகும். இதற்கான முழு விவரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகள் ரூ.4.60 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ) உறையுடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்கு, தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தாங்கள் எழுத விரும்பும் தேர்வு அல்லது தேர்வுகள் போன்ற விவரத்தைக் குறிப்பிட்டனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பினையும் இணைத்தல் வேண்டும். அவ்வாறு ரூ.4.60 அஞ்சல் தலையுடன் கூடிய சுயவிலாசமிட்ட (30 × 12 செ.மீ.) உறையுடன் வரப்பெறாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்குத் தனித்தனியாகக் கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும். முன்பு நடைபெற்ற தேர்வுகளுக்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இத்தேர்வுக்குக் கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது. இத்தேர்வுகளுக்கெனப் பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, தேர்வுக் கட்டணத்திற்கான அஞ்சல் ஆணைகளுடன், கையொப்பமிட்ட ஒரே மாதிரியான, புதிய இரண்டு நிழற்படங்களையும் (Photographs) இணைத்து, விண்ணப்பங்கள் நேரடியாகத் தேர்வாணைய அலுவலகத்திற்கு 28.2.1990 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு: இவ்விளம்பரம் அரசுப் பணிகளில் புதிதாக நியமனத்திற்கோ அல்லது தற்காலிகப் பணியில் இருப்பவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்துவதற்காகவோ அல்ல.

DIPR/174/MS/90

படைக் கல்வியைப் பெற ஊக்கம் தர வேண்டுமென்பதால் தான். பெண்களின் உரிமைக்காக அந்தக் காலத்திலேயே பாடுபட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் போலவே, எல்லாப் பெண்களும் உரிமை உணர்வுடன் வாழ வேண்டும்'' என்றார்.

விழாவில் விடுதலைவிரும்பி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு. இராமநாதன், இரா. மோகன், யு.கே. வெள்ளிங்கிரி, கோவை மாநகராட்சி ஆணையர் திரு. ஹேமந்த்குமார் சின்ஹா ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர்.

-இரா. பா. கார்மேகம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில்

ஏழைகள் வாழ்வு ஏற்றமடையவும், பாமர மக்களின் எண்ணம் ஈடேறவும், உன்னதமான திட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

''நம் குழந்தைக்கு, என்று திருமணம் நடக்கும்'' என்று ஏங்கித் தவித்த காலத்தை மாற்றி, ஏழைப் பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் மூலம் 5,000 ரூபாயை அரசு இலவசமாக வழங்கி அவர்களின் வாழ்க்கையைப் பொற்காலமாக மாற்றி அமைத்து - சரித்திரம் படைத்து - மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வில்லுக்குறியைச் சார்ந்த சலவைத் தொழிலாளியான திரு. முத்துக்கருப்பன் தமது மகள் வி.எம். சாந்தி திருமணத்திற்காக உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்திருந்தார். மணமகன் எம். வேல்முருகன். இவர் வெள்ளமடத்தைச் சார்ந்தவர். இத்திருமண உதவித்தொகைத் திட்டம் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்ததோடு அவர்கள் வாழ்க்கையை வளமடையச் செய்தது.

அவர்களைச் சந்தித்து, இத்திட்டம் பற்றிக் கேட்டபோது, தம்பதியர் கூறியதாவது:

''இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து, எங்களைப் போன்ற ஏழை எளியவர்களுக்குத் திருமணம் செய்ய உதவித் தொகை வழங்கும் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டம் ஏழைகள் வாழ்வில் மறுமலர்ச்சி அளிக்கின்ற சிறப்பான திட்டம்.''

த. இளங்கோவன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

தஞ்சை செக்கடிமேட்டில் சுடுமண் உருவங்கள் கண்டுபிடிப்பு

சீ. வசந்தி, அகழாய்வாளர்

தஞ்சையில் உள்ள செக்கடிமேடு என்ற இடத்தில் கலையழகுமிக்க சுடுமண் உருவங்கள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை மேற்கொண்ட கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டன.

தஞ்சையில் ஒரு பகுதியான சீனிவாசபுரம் மற்றும் செக்கடி மேட்டில் அகழாய்வு செய்தல் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அவை கிடைத்தன.

நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் சுடுமண் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினை அடுத்து கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுடுமண் உருவங்கள் சிவப்பு வண்ணத்தில் தர்மபுரி, கோவை ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. கோவையில் போளுவாம்பட்டி என்ற இடத்தில் பல அழகிய கலை நயம் மிக்க சுடுமண் உருவங்கள் சேகரிக்கப்பட்டன. மதுரையில் கேத்தகை என்ற இடத்திலும், காஞ்சிபுரம், உறையூர், திருக்காம் புலியூர், அழகரை ஆகிய இடங்களிலும் சோழர் காலச் சுடுமண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாட்டுப்புறக் கலை அழகு கொஞ்சும் சுடுமண் உருவங்கள் சில கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

தற்போது தஞ்சை செக்கடி மேட்டில், கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மராட்டியர் கால சுடுமண் உருவங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் விநாயகர், ஆயர், போர் வீரன், நந்தி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. விநாயகர் உருவத்தின் கால் பகுதி உடைந்துள்ளது. ஆயர் அல்லது வேணு கோபாலன் உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது. போர் வீரனின் உருவம் முழுக்கைச் சட்டை அணிந்து ஆங்கில வீரனின் தோற்றத்தில் உள்ளது. இங்கு கிடைத்த நந்தியின் தலைப் பகுதியும் காணப்படவில்லை. இவை தமிழக சுடுமண் உருவங்களின் வளர்ச்சி, மற்றும் வரலாற்றிற்கு ஒரு மைல்கல் ஆகும்.

TNPSC

Group I Services தொகுதி 1-இல் அடங்கிய பதவிகளுக்கு நேரடி நியமனம் முதல் நிலைத் தேர்வு (Preliminary Examination)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னுடைய விளம்பர எண்:55-இல் தொகுதி 1-இல் (Group I Services) அடங்கிய பதவிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்களை வரவழைத்தது. இப்பதவிகளுக்கு முதல் நிலைத் தேர்வு (Preliminary Examination) நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

முதல் நிலைத் தேர்வின் நாள் மற்றும் தேதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

நாள் மற்றும் தேதி	நேரம்	தேர்வுத் தாள்
சனிக்கிழமை 24.2.1990	காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை	பொது அறிவு முதல் தாள் (கொள் குறி தேர்வு) (Objective Type)
	பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை	பொது அறிவு, இரண்டாம் தாள் (விரிவுரை மற்றும் சிறு குறிப்புகள்) (Descriptive Type)

தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு (Hall-Ticket) தேர்வுக்கான இடம், நேரம் முதலியவற்றை தேர்வுக்கு பத்து தினங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அனுப்பப் படும். தேர்வு நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள், ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற்படத்தின் மற்றொரு நகல் நிழற்படத்துடன் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

DIPR/173/MS/90/ARIES

பயன் அடைந்தோர் பகர்வன:

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ...

125 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி

கோவையில் 8.12.1989 அன்று தமிழக அரசின் முன்னோடிச் சமுதாய நலத் திட்டமான, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், 125 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ. 5,000 உதவித் தொகை, மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் வழங்கப் பட்டது.

கோவை ஆர்.எஸ்.புரம் மாநக ராட்சி கலையரங்கில் நடைபெற்ற இவ் விழாவிற்கு, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப., தம் வரவேற்புரையில் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கோவை மாவட்டத்தில் 700 ஏழைப் பெண்களுக்கு ரூ.5,000 வீதம் நிதி உதவி வழங்க ஆணை பெறப்பட்டு உள்ளது. இதுவரை 417 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தனது தலைமையுரையில், "இதுவரை தமிழ்நாட்டில் இத்திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 14,500 ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடந்தேறியுள்ளது, பெண்கள் முன் னேற்றத்திற்காகத் தமிழக முதல்வர் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்" என்றார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 125 பெண்களுக்கும் ரூ.5,000க்கான காசோலையை வழங் கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனது விழாப் பேருரையில், "ஒரே நாளில் நூற்றுக்கணக்கான மணப் பெண்களுக்குத் திருமண நிதியுதவி அளிப்பது என்பது சாதாரண காரிய மல்ல. இந்தத் திட்டம் பற்றி முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த பின்பு தான் தற்போது இதன் பயனை அறிய முடிகிறது. பொதுவாக, பெண் சமூகம் உரிமையை இழந்துள்ளது. இதனால் நாட்டின் முன்னேற்றத்தில் பெண்கள் பங்கு வெகுவாகக் குறைந்து விடுகிறது. பெண்ணுரிமை பற்றி பாரதியாரும், பாரதிதாசனும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவை நடைமுறையில் சாத்திய மாகவில்லை. ஏழைகள் வீட்டில் பெண் கல்வியை அலட்சியப்படுத்து கிறார்கள். தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற பெண்களின் குறைந்த பட்சக் கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு என்று கலைஞர் அறிவித்திருப்பதே, ஏழைக் குடும்பத்துப் பெண்கள் அடிப்

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு மருத்துவப் பணியில்

உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு நேரடி நியமனம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 8.8.89 தேதியிட்ட தன்னுடைய அறிக்கையில் தமிழ்நாடு மருத்துவப் பணியில் 559 உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்களை வரவழைத்தது. இப்பதவிக்கு முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது.

எழுத்துத் தேர்வின் தேதி, மையங்கள் மற்றும் தேர்வுத் தாள் குறித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

17.2.1990 முற்பகல் *(சனிக்கிழமை)*	பொது அறிவு (விரிவாக்கப் பகுதி சிறு குறிப்பு கேள்விகளுடன் அடங்கியது)	2 மணி நேரம்
17.2.1990 பிற்பகல் *(சனிக்கிழமை)*	பாடம்-முதல் தாள் (இப்பதவியோடு தொடர்புடைய பாடப் பகுதியைப்பற்றிய தாள்)	3 மணி நேரம்
18.2.1990 முற்பகல் *(ஞாயிற்றுக் கிழமை)*	பாடம்-இரண்டாம்தாள் (இப்பதவியோடு தொடர்புடைய பாடப் பகுதியைப்பற்றிய தாள்)	3 மணி நேரம்
தேர்வு மையங்கள்	**சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி.**	

எழுத்துத் தேர்வின் முடிவுகளின் வாயிலாக தேர்வாணையம் வாய்மொழித் தேர்வுக்குத் தகுதி பெற்று அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்து, வாய்மொழித் தேர்வு நடத்தப்பட்டு, எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளில் பெற்ற கூட்டு மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப் படுவார்கள்.

தேர்வு அனுமதிக் குறிப்பாணை (கூட நுழைவுச் சீட்டு) விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுத்தேதிக்குப்பத்து நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும். தேர்வு நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன் அனுமதிக் குறிப்பாணை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற்படத்தின் நகலின் மற்றொரு நிழற்படத்தினை செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002-க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள்:

அண்ணா போற்றிய பெருமக்கள் (தொகுதி-1)

தொகுப்பாசிரியர்கள்:
கவிஞர் அ. மறைமலையான்,
புலவர் பெ.அ. இளஞ்செழியன்
வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு

விலை: ரூ. 46 பக்கம்: 436.

பேரறிஞர் அண்ணா தமிழ்ப் பேரொளியாக விளங்கியவர்; அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டி மகிழ்ந்தவர். அகில உலகமும் போற்றிப் புகழும் அருந்தமிழ்ப் படைப்புகளை வழங்கியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துமணிகள் காலக் கண்ணாடியாக விளங்குபவை. அத்தகைய நலமணிகள் இந்நூலில் அழகுறத் தொகுத்து, பகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழகம் தந்த பெருமக்கள் அனைவரையும் தாய்மனங்கொண்டு அரசியல் கருத்து வேறுபாடு பாராது அண்ணா போற்றிச் சிறப்பித்துள்ளார்.

இந்நூல் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: 1. சான்றோர்கள்-பாவலர்கள்-நாவலர்கள், 2. இந்திய விடுதலை இயக்கப் பெருமக்கள், 3. திராவிட இயக்கப் பெருமக்கள், 4. சமூக நலப் பெருமக்கள், 5. பிற அரசியல் கட்சிப் பெருமக்கள், 6. கலையுலகப் பெருமக்கள்.

நூலின் தொடக்கத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை ஏடு சில வரிகளில் கச்சிதமாகத் தொகுக்கப் பட்டுள்ளது.

முதற் பகுதியில், திருவள்ளுவரில் தொடங்கி, உடுமலை நாராயணகவி முடிய சான்றோர்கள் சிறப்பித்துக் கூறப்படுகிறார்கள்; இரண்டாம் பகுதியில், வ.உ. சிதம்பரனார், மூதறிஞர் இராஜாஜி என்று தொடங்கி சங்கரலிங்கனார் வரை இந்திய விடுதலை இயக்கப்போர் நினைவுகூரப்படுகிறது; மூன்றாம் பகுதியில், சர்.பி. தியாகராயர், தந்தை பெரியார் முதல் தமிழக முதல்வர் கலைஞர் வரையிலான திராவிட இயக்கப் பெருமக்களின் பெருமை பேசப்படுகிறது; நான்காம் பகுதியில், இராசா சர் அண்ணாமலை செட்டியார், ஜி.டி. நாயுடு, என். சிவராஜ், துறவி இராமசாமி அடிகள் ஆகிய சமூகநலப் பெருமக்களின் சிறப்பியல்புகள் சித்திரிக்கப்படுகின்றன; ஐந்தாம் பகுதியில் காயிதே மில்லத், ப. ஜீவானந்தம் ஆகிய பிற அரசியல் கட்சிப் பெருமக்களின் தொண்டுகள் பாராட்டப் பெறுகின்றன; ஆறாம் பகுதியில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் முதல் காருகுறிச்சி அருணாசலம் முடிய கலையுலகப் பெருமக்களின் தொண்டுகள் கூறப்பட்டுள்ளன.

இந்நூல், படித்துப் பயன்பெற வேண்டிய-பாதுகாக்கப்பட வேண்டிய பைந்தமிழ்ப் பெட்டகமாகும். இப்படிப்பட்ட அரிய நூலை தமிழக அரசு உருவாக்கியுள்ளது. அரசின் உதவியுடன் இந்நூல் அருமையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல், அண்ணா, சதுக்கம், சென்னை-5, தமிழரசு அலுவலகம், சென்னை-2, மாநிலச் செய்தி நிலையம், சென்னை-2, வள்ளுவர் கோட்டம், சென்னை-34, மற்றும் எல்லா மாவட்டங்களிலும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும் கிடைக்கும்.

-பி.வி. கிரி.

மழலை மொழி

ஆசிரியர்: கவிஞர் தமிழ்முடி
வெளியீடு: தமிழ்முடி நிலையம்
எச்.10, கே. பொன்னம்பலம் சாலை,
கே.கே. நகர்,
சென்னை-78.

விலை ரூ6.50 பக்கம் 64.

சின்னஞ் சிறு குழந்தைகள் படித்து மகிழ்வதற்கு ஏற்ற வகையில் 34 கவிதைகள் கொண்ட கவிதை மாலையாக இந்நூல் விளங்குகிறது.

தேசியக் கொடி, பொங்கல் திருநாள், காந்தித் தாத்தா, சித்திரையும் செடியும், நேரு எங்கள் நேரு ஆகிய தலைப்புகளில் உள்ள கவிதைகள் அருமை.



'கழுதைக்கும் கடிவாளம்!' என்னும் கவிதையில் உள்ள,
'ஆயா குழந்தையை வளர்த்தாலும்
தாயாய் ஆக முடியாது!
என்னும் வரிகள் எண்ணி எண்ணி மகிழத் தக்கன.

-தமிழ்ப்பித்தன்.

சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்

ஆசிரியர்: டாக்டர் அரங்க. சீனிவாசன்
வெளியீடு: மகாசக்தி பதிப்பகம்
61, மூன்றாவது மாடி
16, சுங்குராமத் தெரு
சென்னை-600 001

விலை: ரூ. 28 பக்கம்: 224

இந்திய விடுதலைப் போரில், ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ச்சி, கறுப்பு மையினால் எழுதப் படும் ஒரு துயர நிகழ்ச்சியாகும். சர் மைக்கேலின் ஆட்சியில் ஜெனரல் டையர் நடத்திய கொடுமை கண்டு உலகமே கண்ணீர் வடித்தது; கண்டனக் குரல் எழுப்பியது.

> மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பயன்பெற வேண்டும்.
>
> *
>
> பெருந்தன்மையோடு கூடிய பொது வாழ்வு வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.
>
> *
>
> கலை என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
>
> — பேரறிஞர் அண்ணா

அன்று நடந்த அந்த தியாக வரலாற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது இந்த நூல்.

பாரதத்தின் பழம் பெருமையிலிருந்து தொடங்கி, அன்றைய பஞ்சாப்பின் ஆட்சி அமைப்பையும் நிலவரத்தையும் கூறி, ரௌலட் சட்டம் பற்றிக் கோடிட்டுக் காட்டி, விடுதலைப் போரில் வீர மரணமடைந்த வீரர்களைக் கண் முன் கொண்டு வந்து நம்மை அக்காலச் சூழலுக்கே அழைத்துச் செல்கிறார் நூலாசிரியர்.

இளந் தலைமுறையினர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய தியாக வரலாறு இது.

முதல் அட்டை சொல்லும் செய்தி :

திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாள் 15-1-90 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்புற நடந்தது.

மங்கள நல்லிசையுடன் விழா தொடங்கியது. தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

வாழ்வுக்கு வழிகாட்டி

''வள்ளுவன்போல் கருத்துச் செறிவு மிக்க புலவன் இதுவரை தோன்றிய தில்லை. இந்தச் சமூகம் ஒற்றுமையடைய வள்ளுவனின் குறள் ஒவ்வொருவரின் வாழ்வோடு இணைந்த நிலை உருவாக வேண்டும். திருக்குறளை வாழ்வோடு இணைக்க, அதை ஒரு மதமாக மாற்ற வேண்டும் என்பர் சிலர். இந்த நூற்றாண்டில் சமயம் உருவாவது சாத்தியமில்லை. வள்ளுவனின் கருத்துக்களை வாழ்வோடு கடைப்பிடித்தால் அது வழிகாட்டியாய் அமையும்.''

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில், ''வள்ளுவர் தாம் எழுதிய ஒரே நூல் மூலமாக இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்'' என்றார்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் பேசுகையில், ''திருக்குறள் ஒரு விளக்கு போன்றது. இதில் இல்லாதது எதுவும் இல்லை'' என்றார்.

புதுக்கல்லூரித் தமிழ் முதுகலைத் தலைவர் திரு. ச. அமீது அவர்கள் பேசுகையில், ''குறள் உலக மக்களுக்காகப் பாடப்பட்ட நூல்'' என்றார்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மூதறிஞர் வ. சுப. மாணிக்கம், வழக்குரைஞர் திரு. கு.சி. ஆனந்தன் ஆகியோர்க்குத் **திருவள்ளுவர் விருது** வழங்கியும், சிறந்த நூல்கள் எழுதிய எழுத்தாளர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 17 பேருக்கு நிதியுதவி வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

மறைந்த தமிழறிஞர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் சார்பில் அவரது துணைவியார் திருமதி ஏகம்மை அவர்கள் விருதினைப் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

திருவள்ளுவர் திருநாளை - திருவள்ளுவருடைய பெயரால் விருதுகள் வழங்கி - திருவள்ளுவர் கோட்டத்திலே நடத்துகின்ற இந்தப் பெருமையை எண்ணியெண்ணி நான் மகிழ்ச்சியடைந்து உங்கள் அனைவருக்கும் தமிழர் திருநாள் பொங்கல் வாழ்த்துக்களை முதற்கண் கூறிக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் பொங்கல் வாழ்த்துக் கூற வந்தவர்களில் ஒருவராக வந்து நின்ற அவ்வை நடராஜன் அவர்கள் - எனக்கு மாலை அணிவித்துவிட்டு - காலையிலே 9 மணிக்கெல்லாம் கடற்கரைச்சாலைக்கு வந்து விடுகிறீர்களா என்று கேட்டார். எதற்கு என்றேன். வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கத்தான் என்றார். வள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிப்பது என்றால் - வள்ளுவர் கோட்டத்திலே இருக்கின்ற வள்ளுவர் சிலைக்கு அல்லவா மாலை அணிவிக்க வேண்டும் என்றேன். உடனே அவர் மகிழ்ச்சி அடைந்து ஓ, அதை மறந்து விட்டேனே என்றார். அவ்வைக்கு திருவள்ளுவரை - வள்ளுவர் கோட்டத்தை மறக்கின்ற நிலை வரலாமா? என்று நினைத்துக் கொண்டேன். சொல்லவில்லை.

வள்ளுவர் கோட்டத்தில் கடந்த சில திங்கள்களுக்கு முன்பு நுழைகின்ற வாய்ப்பினைப் பெற்று - தமிழ் மக்களால் அந்த வாய்ப்பினைப் பெற்று - வள்ளுவர் கோட்

டத்தில் நாங்கள் பார்த்துப்பார்த்துஒவ்வொரு நாளும் நோக்கி நோக்கி அமைத்த வள்ளுவர் பெருந்தகையின் சிலைக்கு மாலை அணிவித்து, அவருடைய பெருமையைப் போற்றுகின்ற நிகழ்ச்சியை இன்று காலையிலே வள்ளுவர் கோட்டத்தில் நடத்தினோம். நானும் பேராசிரியர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் தமிழ்ச் சான்றோர் பலரும் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது- இந்தப் படிகளிலே ஏறி அந்தத் தேர்த் தட்டுக்குச் செல்கின்ற வழியிலே வள்ளுவர் சிலைக்கு அருகாமையிலே இருந்து இசையோடு ஒலித்துக் கொண்டிருந்த குறட்பாக்கள் எங்கள் செவி வழி நுழைந்து சிந்தையிலே தேன்மழை பொழிந்தது. அப்போது நான் பேராசிரியரிடம் சொன்னேன். அவ்வை நடராஜனிடமும், நண்பர்களிடமும் சொன்னேன்.

வள்ளுவர் கோட்டத்தில் நாள்தோறும் குறளிசை!

இந்த நிகழ்ச்சியிலே நான் கேட்கின்ற இந்தக் குறள் இசை ஒவ்வொரு நாளும் வள்ளுவர் கோட்டத்திலே கேட்டுக் கொண்டிருந்தால் எவ்வளவு நேர்த்தியாக இருக்கும் என்று சொன்னேன். புன்னகை புரிந்தவாறு பேராசிரியரும் அதை உடனடியாக ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் குறிப்பிட்டு - அந்நாள் முதல் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் இந்த வள்ளுவர் கோட்டத்திலே குறள் இசை ஒரு குறிப்பிட்ட நேரம் வரையிலே ஒலிக்க வழிவகை செய்யப்படும் என்பதையும், இந்த வழியாகச் செல்கின்றவர்களுக்காவது தமிழ் உணர்வை வள்ளுவருடைய - அந்தத் திறனை - அவன் போதித்த அந்த அறத்தை - அவன் காட்டிய அரசியல் நெறியை நினைவுபடுத்தும் என்ற அளவிலாவது அது பயன்படும் என்பதற்கு - அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த இனிய விழாவிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று திருவள்ளுவர் விருது இருவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒருவர்- இங்கு உடலால் இல்லாமல் உள்ளத்தால்- உணர்வால் நம்மோடு இருப்பவர் தமிழ்ப் பெரியார் - வ.சுப. மாணிக்கம் அவர்கள். வ.சுப. மாணிக்கம் அவர்கள் தமிழின் பாலும், தமிழ் இன உணர்வின் பாலும் எப்படி தன்னை ஒப்படைத்துக் கொண்டிருந்தவர் என்பதற்கு உங்களிடையே நான், சான்றுகள் பல பகர வேண்டிய நிலையிலே நீங்கள் இல்லை. அவரை முழுதும் உணர்ந்தவர்கள் பெரும்பாலோர் இங்கிருக்கிறீர்கள்.

சிறந்த நூல்களுக்கான பரிசுத் தொகை திருவள்ளுவர் விருதுக்கான தொகை உயர்வு!

''பல்வேறு தலைப்புகளிலே புத்தகங்களை எழுதுகின்றவர்களுக்குப் பரிசுகளை வழங்குகின்ற ஒரு திட்டம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்படி தொடங்கிய போது சிறந்த புத்தகங்களுக்கு முதல் பரிசாக, இரண்டாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக ஆயிரம் ரூபாயும் என்று அறிவிக்கப்பட்டு, இருபதாண்டுக் காலமாக அதுவே நடைமுறையிலே இருந்து வருகின்றது.

இன்றைக்கு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் சார்பாகச் செய்யப்பட்டு உள்ள பரிந்துரை இருபதாண்டுக்காலமாக முதல் பரிசுரு.2,000 என்றும், இரண்டாம் பரிசு ரூ.1,000 என்றும் இருக்கின்றது, அதனை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள்.

நானும் கல்வி அமைச்சரும் இது குறித்து கலந்து பேசினோம்.நியாயமாக கல்வி அமைச்சர்தான் நிதியமைச்சரோடு கலந்து பேச வேண்டும். ஆனால் நானும் பேராசிரியரும் அப்படி எங்கள் பணிகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் அல்ல என்பது எங்களைப் பகுத்திட நினைப்பவர்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன் - நான் பேராசிரியரை இந்த மேடையிலே கலந்து பேசி அவரிடத்திலே அதுபற்றி கருத்துக் கேட்டு, அந்த இரண்டாயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்கிற முதல் பரிசும், இரண்டாம் பரிசும் என்கின்ற அந்தத் தொகைகளை உயர்த்தி, இனிமேல் முதல் பரிசு ஐயாயிரம் ரூபாய் என்றும், இரண்டாம் பரிசு மூவாயிரம் ரூபாய் என்றும், மூன்றாம் பரிசு என்று ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தி அதற்கு ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே திருவள்ளுவர் விருது பத்தாயிரம் ரூபாய் என்பது அடுத்த ஆண்டு முதல் இருபதாயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

-திருவள்ளுவர் திருநாளில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து
(15-1-90).

அவருடைய அருமைத்துணைவியாரும், அவருடைய குடும்பத்தினரும் அவருக்கென வழங்கப்பட்ட அந்த விருதினைப் பெற்றிட மேடைக்கு வந்தபோது அவர்களுடைய கண்கள் மாத்திரமல்ல, நம்முடைய கண்கள் எல்லாம் குளமாயின. அவர்கள் இன்னும் பல ஆண்டுக்காலம் நம்மோடு இருந்திருப்பாரேயானால், அவருடைய துணை கொண்டு இந்த அரசின் சார்பில், தமிழுக்கு நாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் பலவற்றைத் திறம்படச் செய்திருக்க முடியும். அந்தப் பெரும் வாய்ப்பை நாங்கள் இழந்து விட்டோமென்றாலுங்கூட, எனக்கு இன்னமும் ஒன்று நினைவிருக்கின்றது.

தலைநிமிர்ந்து நடக்கும் நிலை

அவர்கள் மறைவதற்கு ஒரு கிழமைக்கு முன்பு ஒருநாள் காலைப்பொழுதில் என்னை இல்லத்திலே வந்து சந்தித்தார். அவரை வரவேற்று மகிழ்ந்தபோது அவர்கள் சொன்னார்கள். 'எந்தப் பயன் கருதியும் நான் உங்களைச் சந்திக்க வரவில்லை, பரிந்துரை ஏதாவது செய்வதற்காகவும் நான் இங்கே வரவில்லை, ஒன்றைச் சொல்லத் தான் வந்தேன்' என்று சொன்னார். ''என்னய்யா?'' என்று கேட்டேன், வழக்கமாக அவரிடம் காட்டுகின்ற மரியாதையோடு. அதற்கு அவர், ''சில நாட்களாக நாங்கள் தலைநிமிர்ந்து நடக்கிறோம் அய்யா- அது போதும். எங்களுக்கு, வேறு எந்தப் பயனும் தேவையில்லை. என்னைப் போன்றவர்கள் தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய ஒரு நிலை இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றதே, அது போதும்" என்று சொல்லி விட்டுச் சென்றார்கள்.

அதே நிமிர்ந்த தலை - அதே நேர்மையான நெஞ்சம் - இந்தத் தமிழுக்காகவே வாழ்ந்த தமிழன் இன்றைக்கு நம்மை விட்டுப் பிரிந்து விட்டாரென்றாலும் அவர் உருவாக்கிய உணர்வுகள், அவர் ஆற்றிய தொண்டு, நாள்தோறும் அவர்கள் சிறப்புறச் செய்திட்ட செந்தமிழ்ப் பணி - நம்மை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, தமிழுக்கும் தமிழ் நிலத்திற்கும் வெற்றிகளைத் தேடித் தர துணை நிற்கும் என்ற அளவில், அந்தத்தன்னலத்தை எதிர்பார்த்துத்தான், அவருடைய குடும்பத்தாரிடம் அவருக்கான விருதினை அரசின் சார்பில் வழங்கியிருக்கிறோம்.

அடுத்து திருவள்ளுவர் விருதினை என்னுடைய அன்பிற்குரிய நண்பரும், இந்த இயக்கத்திலே இளமைக் காலந்தொட்டு, தன்னை ஒப்படைத்துக் கொண்டிருப்பவரும், தமிழுக்கு தொடர்ந்து தொண்டாற்றி வருபவரும், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பேரன்பையும், பேராசிரியர் அவர்களிடத்திலே நல்ல மதிப்பினையும் பாசத்தையும் பெற்றுத் திகழ்பவருமான ஆனந்தன் அவர்கள் இங்கே பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் பல நூல்களை தமிழர்கள் விழிப்புறவும், மக்களாட்சியின் மாண்பு தழைக்கவும் எழுதியிருக்கின்றார்கள். திருக்குறளை பல கோணங்களிலே ஆய்ந்து அரிய நூல்களை யாத்திருக்கின்றார்கள். அவர் இந்த விழாவிலே விருது பெற்றிருக்கின்றார்.

மாணவர்க்கு

குறளைக் கற்றுக் கொள்வதால்,
நீங்கள் செம்மைப்பட்டு,
நீங்கள் செம்மைப்படுவதால்,
நாடு செம்மைப்பட்டு,
நாடு செம்மைப்படுவதால்,
உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்.

பல்வேறு தலைப்புகளில் பல்வேறு கோணங்களில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பல்வேறு செய்திகளை எழுத்தாரங்களாகத் தந்திருக்கின்ற பலர் இங்கே விருது வழங்கப்பட்டு நம்முடைய பாராட்டுக்களையெல்லாம் பெற்றிருக்கின்றார்கள். அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் வழங்குகின்றேன்.

குறிப்பாக என்னுடைய சகோதரர் அரங்கண்ணல் அவர்கள் இங்கே பரிசு பெற்றிருக்கின்றார். அவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய அருகாமையிலே இருந்து திராவிட நாடு, காஞ்சி இதழ்களில், ஏன் அதற்கு முன்பு தந்தை பெரியாரோடு அமர்ந்து விடுதலை இதழில் கட்டுரைகளைத் தீட்டியவர். நல்ல செய்திகளை தமிழ் மக்களுக்காகத் தந்தவர். அவருடைய நீண்ட கட்டுரைகள் - அவர் எழுதிய விரிவான நூல்கள் - மற்றவர்களுக்குப் பயன்படக் கூடியவைகளாக அமைந்தவை. அவர்கள் இன்று பரிசு பெற்றிருக்கிறார்கள். நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இந்த விழாவிற்கு வந்தது குறித்து பேராசிரியர் அமீது அவர்கள் பேராச்சரியம் தெரிவித்து, அவருக்குப் பாராட்டுக் கூறினார். நானோ, பேராசிரியரோ சொல்லியிருக்க வேண்டியதை அமீது சொன்னார் என்றால், எங்களை முந்திக் கொண்டு சொன்னார் என்றல்ல, இங்கே அமர்ந்திருக்கும் உங்கள் அனைவரது உள்

ளங்களிலும் என்ன இருக்கிறதோ அதை அமீது எதிரொலித்தார் என்பதுதான், உண்மை.

தமிழ் உணர்வு ஒன்று சேர்க்கும்

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் சட்டப் பேரவையிலே எதிர்த்து வாதாடினாலும், பொது மேடைகளிலே மாலை நேரத்து மேடைகளிலே கருத்து மாறுபாடுகள் எனக்கும் அவருக்கும் உண்டு என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னாலும் - அவருடைய சொற்கள் எப்போதும் அழுத்தந்திருத்தமாகத்தான் வரும் என்பது உங்களுக்குத் தெரியும் - அரசியல் உணர்வுகள் எங்களைப் பிரித்து எடுத்தாலும்கூட, அவைகளை எல்லாம் குப்புற வீழ்த்தி விட்டு, தமிழ் உணர்வு உங்களை ஒன்று சேர்க்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் இங்கு வந்துள்ளார். அவருக்கு விருது வழங்குகின்றோம் - என்று நாங்கள் அறிவிக்காமல் கூட, அவர் வராமல் இருந்திருக்கலாம் - வருவதை விட வராமல் இருப்பதுதான் இப்போது பெரிய செய்தி நாட்டிலே - திருமணங்களிலே கூட நீங்கள் பார்க்கலாம். வந்தவர்களுடைய பெயர்களை எல்லாம் பெரும்பாலும் பத்திரிகைகளிலே போட மாட்டார்கள். தந்தி மூலம் வாழ்த்தியவர்களின் பெயர்கள் எல்லாம் பத்திரிகைகளிலே வெளிவரும் - ஆனால் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்து 'நாம் எல்லோரும் தமிழர்கள்' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலுக்கு இலக்கண இலக்கியம் வகுத்திருக்கின்றார்.

''வெள்ளம் போல் தமிழர் கூட்டம் - வீரம் கொள் கூட்டம் - உள்ளத்தால் ஒருவரே - மற்றும் உடலினால் பலராய்க் காண்பர் - கள்ளத்தால் நெருங்கொணாதே என வையம் கலங்கக் கண்டு களிக்கும் நாள் எந்நாளோ?''

—என்ற பாவேந்தரின் பாட்டுக்கு இலக்கணமாகத் திகழ்கின்ற அருமை நண்பர் இலக்கியச் செல்வர் அவர்களை நான் மனமார வாழ்த்துகின்றேன்.

பரிசு பெற்ற எழுத்தாளர்கள் அனைவருக்கும் பாராட்டு!

மற்றும் அரிமதி தென்னகன், காவல் துறையிலே பணி புரிந்தாலும், தமிழுக்குக் கடமையாற்ற வேண்டுமென்று முன் வந்த திலகவதி, மனசை கீரன், வாசவன், மற்றும் எழுத்தாளர்கள் எல்லாம் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக என்னுடைய அருமை நண்பர் அறந்தை நாராயணன் தமிழ் நாட்டின் சினிமா வரலாறு குறித்து எழுதிய ஒரு நூலுக்காக இன்று பரிசு பெற்றிருக்கின்றார். அவர் அதனை நூல் வடிவிலே எழுதவில்லை - எனக்குத் தெரியும். தொடர் சித்திரமாக - தொடர் கட்டுரையாக அவர் ஒரு வார இதழிலே எழுதி வந்த தொகுப்புத்தான் அந்த நூல். நான் இந்த நூலைப் படிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு வாரமும் அந்தக் கட்டுரையைத் தவறாமல் படித்திருக்கிறேன்.

அறந்தை நாராயணன் நான் படித்திருப்பேன் என்று எண்ணியிருக்க மாட்டார். ஒரு வாரம் வராவிட்டால், அது ஏன் வரவில்லை அந்த இதழ் என்று குறிப்பிட்டுக் கேட்கக் கூடிய அளவிற்கு, திரை உலகத்திலே பழங்காலந்தொட்டு, பேசாத படங்கள் வந்த அந்தக் காலந்தொட்டு, இந்தக் காலம் வரையிலே நவீன உத்திகளுக்கெல்லாம் இடம் அளித்திருக்கின்ற திரை உலகின் வளர்ச்சி குறித்தும் - திரையுலகிலே வாழ்ந்து வளர்ந்து தேய்ந்த கலைஞர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டும் - அவர் எழுதிய அந்தக் கட்டுரைகளின் தொகுப்பு நூலுக்காக அவர் இன்று பரிசு பெற்றிருககின்றார். நல்ல துடிப்பான அவரையும் நான் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

இந்த இனிய விழாவிலே மற்றொரு அறிவிப்பாக - நான் இந்த மேடைக்கு வந்ததும் வள்ளுவர் கோட்டத்து வட்டாரத்திலே உள்ள வியாபாரிகள் சங்கத்தினர் ஒரு கோரிக்கை என்னிடத்திலே வழங்கினார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்பதில் இங்கே அமர்ந்திருக்கின்ற தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற தமிழர்கள்- ஏன் கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள் கூட தயங்க மாட்டார்கள். அவர்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கை-

''தங்கள் கலைக் கண்ணோட்டத்தில் இன்று பார் புகழும் வள்ளுவர் கோட்டம் எங்கள் தொகுதியில் சிறப்புடன் தமிழின் பெருமையை நாளும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. இந்தக் கோட்டம் அமைந்துள்ள டேங்க் ரோடு, ரங்கனாதன் ரோடு, வில்லேஜ் ரோடு என்று மூன்று பெயர்களிலே அழைக்கப்படுகின்றது. இதனை வள்ளுவர் கோட்டம் தொடங்கி ஸ்டர்லிங் சாலை வரை ஒரே பெயரில் ''வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை'' என்ற பெயரிலே அழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.''

இதனை ஏற்றுக் கொள்ளலாமா? (ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக் கொள்ளலாம் என்று மக்கள் குரல்) வியாபாரிகள் சங்கத்தின் இந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் ஆணையிட்டுத் தெரிவித்திருக்கின்ற காரணத்தால், வள்ளுவர் கோட்டம் தொடங்கி ஸ்டர்லிங் சாலை வரையிலே செல்கின்ற இந்த நெடுஞ்சாலைக்கு ''வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை'' என்று பெயர் வைக்கப்படும். இதனை ஆட்சியின் வாயிலாகச் செய்யலாமா? அல்லது மாநகராட்சி மன்றத்தின் மூலமாகச் செய்யலாமா என்பதைச் சிந்தித்து உடனடியாக முடிவெடுக்கப்படும். ஏனென்றால் அவர்கள் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்றால் அவர்களை மீற, அவர்களுடைய அதிகாரத்தில் நாங்கள் தலையிட மாட்டோம். யாருடைய அதிகாரத்திலும் தலையிடக் கூடாது என்பது எங்கள் கொள்கை. நாம் தலையிட வேண்டியது திருவள்ளுவரின் அதிகாரங்களே தவிர வேறு யாருடைய அதிகாரத்திலும் அல்ல என்று கூறி அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

விழா முடிவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. கு. சிவஞானம் அவர்கள் நன்றி கூறினார்.

அமரர் திருச்சி லோகநாதன் திருமகனார் திரு. தி.லோ. மகராசன் குழுவினரின் தென் தமிழ்த் தேனிசை நிகழ்ச்சி நடந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி



எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்கள்

தமிழ்மொழியை- என் கல்லூரி வாழ்வில் முறையாக நான் கற்கவில்லை. கல்லூரியிலிருந்து வெளியேறியபோது, தமிழைக் கற்க நான் முயற்சி எடுத்துக் கொண்டது உண்டு.

இண்டர்மீடியட் வகுப்போடு தமிழ்க் கல்வி நாங்கள் இருந்தபோது முற்றுப் பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு ஆங்கில மொழியில் எண்ணிடும் அளவிற்கு அமைந்த ஆங்கிலக் கல்வியே எனக்குக் கிடைத்தது.

நான் கல்லூரியில் பயின்றபோது, தமிழ் வகுப்பு என்பது ஓய்வுக்குரிய நேரமாகக் கருதப் பட்டது.

தமிழ் வகுப்புக்குச் செல்லாமல், நூலகத்திற்குச் சென்று- சரித்திர ஏடுகளையோ- கணக்கு ஏடுகளையோ புரட்டிப் பார்ப்பதுதான் திறமையான மாணவனுக்கு அடையாளம் என்று கருதப் பட்டு வந்தது.

அப்போது கூட எனக்கு மிகவும் சுவையும் பயனும் அளித்த வகுப்பு , தமிழ் வகுப்புதான். எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் தமிழ் ஆசான்களில் ஒருவர் மோதூர் கந்தசாமி முதலியார். அவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலும் புலமையுடையவர். அவரது வகுப்பில் 40 நிமிடம் ஆங்கிலமும், 20 நிமிடம் தமிழும் நடமாடும். தமிழ்க் கவிதைக்கு நிகரான-அல்லது அதற்கு மேலான ஆங்கிலக் கவிதைகளை எடுத்து உரைத்து, இரண்டையும் அழகுற ஒப்பிட்டுக் காட்டுவார்.

இன்னொரு ஆசான் மணி. திருநாவுக்கரசு என்பவர். அவர் வகுப்பில் ஆங்கிலம் நுழையாது. தமிழின் அடித்தளத்திற்கே சென்று, தமிழ் மொழியின் மாண்பினை எடுத்துக் காட்டி, தமிழ்த்தேனை மாந்தி மாந்தி இன்பம் துலங்கச் செய்வார்.

எனக்கு இப்போது ஏதாவது தமிழார்வம் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இந்த இருபெரும் புலவர்கள்தான்!

—பேரறிஞர் அண்ணா

திருவள்ளுவர் சிலைக்கு முதல்வர் கலைஞர் மாலை அணிவித்தார்.

திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு 15-1-1990 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாலை அணிவித்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. மு. கண்ணப்பன், திரு. ஆற்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு. டி. இராமகிருஷ்ணன் ஆகியோரும், அரசு அலுவலர்களும் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியம்
வடசென்னை அனல்மின் திட்டம்

ஒப்பந்த விளம்பரம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காகத் தனித்தனியே அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

வரிசை எண்	வேலையின் விவரம்	விவரக் குறிப்பு	வைப்புத் தொகை	ஒப்பந்த வரையறைப்படிவம் பெற்றுக்கொள்ளும் கடைசி தேதி
(1)	(2)	(3)	(4)	(5)
1.	மூன்று "2 இ" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 2,3 மற்றும் 4) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்மந்தமாக	சி எஸ்.இ.II 11/89-90	ரூ.10,000/-	5-2-90 பகல் 12மணி வரை
2.	இரண்டு "4 எப்" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 2 மற்றும் 3) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக	சி எஸ்.இ.II 12/89-90	ரூ.8000/-	5-2-90 பகல் 12மணி வரை
3.	இரண்டு "எச்" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 3 மற்றும் 4) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக.	எஸ்.இ.சி.II 13/89-90	ரூ.5000/-	9-2-90 பகல் 12மணி வரை
4.	ஒன்று மட்டும் "8 ஜி" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண் 2) கட்டுமானப்பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக.	எஸ்.இ.சி.II 14/89-90	ரூ.5000/-	9-2-90 பகல் 12மணி வரை

ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த வரையறைப்படிவத்தின் விலை ரூ.100/- தமிழ்நாட்டிற்குள்
ரூ.115/- தமிழ்நாட்டிற்கு வெளியே

ஒப்பந்த வரையறைப்படிவம் 24-1-90 முதல் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவம் கடைசித் தேதியில் திறப்பதற்கு முன்னாள் மாலை 4 மணிக்குப் படிவம் கொடுப்பது நிறுத்தப்படும்.

ஒப்பந்த வரையறைப் படிவம் வேண்டுவோர் அந்தந்த வேலைக்கு மேலே குறிப்பிட்ட தொகையைப்பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ விளக்க விபர எண்ணையும், சுய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு துணை நிதிக்கட்டுப்பாடு அதிகாரி, வடசென்னை அனல்மின் திட்டம், எண்ணூர், சென்னை-57 என்ற முகவரியில் செலுத்தி, அவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல்மூலம் பெறப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப்படிவத்திற்கு ரூ.15/- அதிகம் செலுத்த வேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்த வரை படிவங்கள் உரியவருக்குச் சேராவிட்டாலோ, தாமதமாகப் போய்ச் சேர்ந்தாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்பந்த வரையறைப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்த வரையறைப்படிவங்களும், மேற்குறிப்பிட்ட நாள் நேரத்திற்குள் சமர்ப்பிக்கப் பெறாத ஒப்பந்த வரையறைகள் திறக்கப்படமாட்டாது.

சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த வரையறைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் வந்தவர்கள் முன்னிலையில் பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த வரையறை ஏற்கும் அதிகாரி எந்த ஒப்பந்த வரையறைகளையும் பிரிக்கவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது நிராகரிக்கவோ உரிமை பெற்றவராவர். ஒப்பந்தக்காரர்கள் வைப்புத் தொகையைக் குறிப்பிட்ட தேதியில் காலை 12.00 மணிக்குள் செலுத்திவிட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்/பொது II
வடசென்னை அனல் மின்திட்டம்
எண்ணூர், சென்னை-57

டிஐபிஆர்/23/செ.அ/90/ஏடிடி

கோவை மாவட்டத்தில்...

ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா

கோவை மாவட்டத்தில் மலுமிச்சம் பட்டி கிராமத்தைச் சார்ந்த 500-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட கிறிஸ்து வர்கள் 1974-ஆம் ஆண்டு முதல் குடிசைக்கு வழியின்றி, அரசு மூலம் வீடுகட்ட நிலம் கேட்டு மனு தந்த வண்ணம் இருந்து வந்தனர். கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக இவர் களின் கோரிக்கை இருந்து கொண்டே வந்தது.

தற்போது இவர்களின் கோரிக் கையை ஏற்று மலுமிச்சம்பட்டியில் 25 ஏக்கர் நிலத்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் கையகப்படுத்தி, 549 ஏழைக் குடும்பத்தினருக்குப் பட்டா வழங்கியுள்ளார்.

தனியார் கூட்டுறவுகள் நடத்திய ரேசன் கடைகள் அரசு ஏற்பு

கோவை மாவட்டத்தில் தனியார் கூட்டுறவு அங்காடிகள் மூலம் செயல்பட்ட 102 ரேசன் கடைகளை அரசு ஏற்று உள்ளது. இதற்கான நடவடிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் எடுத்து இருக்கிறார்.

கோவை மாவட்டத்தில் தனியார் கூட்டுறவு அங்காடிகள் மூலம் 102 ரேசன் கடைகள் செயல்பட்டு வந்தன. அவைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரிவரக் கிடைப்பது இல்லை என்ற புகார்கள் பொதுமக்களிடம் இருந்து வந்தன. அதைத் தொடர்ந்து அதிகாரி களைக் கூட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை நடத்தினார். கோவை வந்திருந்த மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் இது பற்றி ஆலோசனை நடத்தினார். அதன் பிறகு அந்த 102 ரேசன் கடைகளையும் அரசு ஏற்பது என்று முடிவு செய்யப்பட்டது. இனி அந்த கடைகளை அரசு நிறுவனங் களான சிந்தாமணி [illegible]ப் பண்டக சாலையும், [illegible] விற்பனை சங்கமும் நடத்த–

இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தமிழக அரசு ரூ.10,000 நிதியுதவி

கோவை மாவட்டத்தில், ஏழ்மை யில் வாடிய ஒரு இளம்பெண்ணுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற் கொள்ள இந்தியப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000-மும், தமிழக முதல்வர் நிதியிலிருந்து ரூ. 5,000-மும், மேலும் தமிழக முதல்வரின் பரிந்துரையும் கிடைத்துள்ளன.

புஞ்சைப் புளியம்பட்டியில் வசிக்கும் நாவிதர் இனத்தைச் சேர்ந்த இளம்பெண் அமுதா. இவர் இருதய நோயால் கஷ்டப்பட்டு வந்தார். இவ ருக்குச் சிகிச்சை அளிக்க மொத்தம் 25 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என கோவை குப்புசாமிநாயுடு மருத்துவ மனையில் பரிந்துரை செய்தனர்.

தன்னுடைய ஏழ்மை நிலையை விளக்கி பிரதமருக்கும், தமிழக முதல்வருக்கும் செல்வி அமுதா, சிகிச் சைக்காக நிதி உதவி கே..ரி, மனு செய்தார். ஆகவே, இந்தியப் பிரதமர் நிதியிலிருந்து ரூ. 10 ஆயிரம் வழங்க உத்தரவிடப்பட்டது. தமிழக முதல்வ ரின் நிவாரண நிதியில் இருந்து ரூ. 5,000 வழங்க உத்தரவானது.

எனினும், சிகிச்சை பெற மேலும் ரூ. 10 ஆயிரம் தேவைப்பட்டது. இதனைச் சமாளிக்க, தமிழக முதல்வர், கோவை மாவட்ட ஆட்சித்தலைவருக் குப் பரிந்துரை செய்தார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர், குப்புசாமி நாயுடு மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு மருத்துவச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.

இதேபோல் கோவை மாவட்டம் திருப்பூர் தாலுக்காவைச் சேர்ந்த திருமதி பாக்யலட்சுமி என்கிற ஏழைத் தாயின் மகள் வசந்தி; இருதய நோயால் வாடும் இப்பெண்ணிற்கு உரிய சிகிச்சை மேற்கொள்ளவும் தமிழக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

சிறு சேமிப்பு வசூல்- தமிழகத்தில் முதலிடம்

தமிழ்நாடு சிறு சேமிப்புத்துறைத் தலைவர் தி[illegible]தமான்கான் அவர்கள் அண்மையில் கோவை வருகை புரிந்தார். அப்போது நடந்த செய்தி யாளர் கூட்டத்தில் அவர், தமிழ்நாட் டில் சிறு சேமிப்பில் நடப்பாண்டில் கோவை மாவட்டம் முதலிடம் வகிப்ப தாகத் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

"தமிழகத்தில் இந்த ஆண்டு சிறு சேமிப்புத் துறையின் சார்பில் ரூ. 400 கோடி வசூல் செய்ய குறியீடு நிர்ண யிக்கப்பட்டது. இதில் ரூ.125 கோடி வசூலாகி உள்ளது. கோவை மாவட்டத் தின் குறியீடு ரூ. 36 கோடி. இவற்றில் ரூ.26 கோடியே 50 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

"தமிழகத்தில் சிறுசேமிப்பிலும் பரிசுக் கூப்பன் விநியோகத்திலும் கோவை மாவட்டம் முதலிடம் வகிக் கிறது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன் இ.ஆ.ப., மற்றும் சிறு சேமிப்புத் துறை அலுவ லர் திரு.கே. குருசாமி, நேர்முக உதவியாளர்கள் துரைசாமி (ஊரக வளர்ச்சி) கோவிந்தராமானுஜம் (பேரூராட்சி வளர்ச்சி) மற்றும் சிறு சேமிப்புத்துறை ஊழியர்கள் ஆகியோ ருக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாராட்டு இனியும் தொடர அவர்கள் பாடுபடு வார்கள் என நம்புகிறேன்.

"சிறுசேமிப்பை மக்களிடம் ஊக் கப்படுத்தும் வகையில் பரிசுக் கூப்பன் திட்டம் அண்மையில் அறிவித்தோம். இந்தத் திட்டம் மகாராஷ்டிரா, கர் நாடகம் ஆகியவற்றில் உள்ளன. பரிசுக் கூப்பன் திட்டத்துக்குத் தமிழ கத்தில் மக்களிடையே பெரும் வர வேற்பு உள்ளது. 2 இலட்சம் பரிசுக் கூப்பன்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு பரிசுக் கூப்பன் ஆயிரம் ரூபாய். கோவை மாவட்டத்தில் 18 ஆயிரம் பரிசுக் கூப்பன் வினியோகிக்க குறியீடு செய்யப்பட்டதில், அவை அனைத்தும் விற்பனையாகி விட்டன. மேலும் பரிசுக் கூப்பன்கள் வினியோகிக்கப் படும்.

"ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, இவற்றில் சிறு சேமிப்பு மூலம் வசூல் செய்கிற அந்த அமைப் பைச் சேர்ந்தவற்றுக்கு அரசு பரிசுத் தொகையாக ஊக்கத் தொகை வழங் கும். இதனை கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களான பாலம் கட்டுதல் சாலை போடுதல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம்.

இலவசக் கண்சிகிச்சை முகாம்

கோவையில், அண்மையில் நடந்த தமிழக அரசு இலவசக் கண்சிகிச்சை முகாமில், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 85 பேருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கண்ணாடிகளை வழங்கினார்.

தமிழ்நாடு மின்சார வாரியம்
வடசென்னை அனல்மின் திட்டம்

ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல்-1 மின்னாக்கம் மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

1.	பணியின் பெயர்	:	வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி - பொதுகட்டடப் பணிகள் தொகுதி இரண்டு (General Building Works Part.II)
2.	ஒப்பந்த வரையறை எண்	:	SECT.I/NMTPP/10
3.	மொத்த வேலையின் தோராய மதிப்பு	:	ரூ.265 இலட்சங்கள்
4.	பிணை வைப்புத் தொகை	:	ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)
5.	ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும்	:	1990, பிப்ரவரி 21-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி
6.	தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும்	:	1990, பிப்ரவரி 21 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி
7.	**ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை**		
	தமிழ்நாட்டிற்குள்	:	ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்)
	தமிழ்நாட்டிற்கு வெளியே	:	ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்)
8.	ஒப்பந்தத்தை அனுப்புதல்	:	இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள செக்ஷன் ஏ3ன் 16வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப் படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 20.1.90 காலை 10-30 மணி முதல் 19.2.90 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாக செலுத்த வேண்டும். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் கொடுக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்துசேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

DIPR/68/MS/90

தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு



கும்மிடிப்பூண்டியில்
ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானம்

செங்கை-அண்ணா மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 15 ஏக்கர் நிலப் பரப்பில் சுமார் 30 இலட்சம் மதிப் பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ''ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானத்தை'' மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் 10.1.90 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு சாலைப் போக்குவரத்து நிறுவன இயக்குநர் திரு. ஆர். ரத்தின சபாபதி வரவேற்புரையாற்றினார். விழாவிற்கு, கும்மிடிப்பூண்டி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கி. வேணு தலைமையேற்றார். விழாவில் பொன்னேரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. சுந்தரம், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் மதுராந்தகம் திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் உரை யாற்றினார்கள்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் ஓட்டுநர் சிறப்புப் பயிற்சி மைதானத்தைத் திறந்து வைத்து அங்கு பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிப் பேசினார். அவர் தன் உரையில்,

"இந்தியாவிலேயே முதல்முறையாக ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மைதானம் 30 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் கும்மிடிப் பூண்டியில் அமைக்கப்பட்டு உள்ளது. விபத்துக்களைத் தவிர்க்க இதுபோன்ற பயிற்சி மைதானங்களைத் தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

''15 நாட்களில் ஓட்டுநர் உரிமம் வேண்டுமா? என்ற விளம்பரங்களுடன் தனியார் ஓட்டுநர்கள் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன. அத்தகைய நிறுவனங்களில் சேருகிறவர்களுக்கும் சில அதிகாரிகள் ஓட்டுநர் உரிமம் கொடுத்து விடுகிறார்கள். அந்த நிறுவனங்கள் ஓட்டுநர் பயிற்சி அளிப்பதை விட, ஓட்டுநர் உரிமம் வாங்கிக்கொடுக்கும் நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. ஓட்டுநர் பயிற்சி, முறையாகக் கொடுத்து வந்தால் விபத்துக்களைக் குறைக்க முடியும்.

''இங்கு பயிற்சி பெற்ற 2 ஆயிரத்து 700 ஓட்டுநர்களில் ஆயிரம் பேர், தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்களாக வேலை பார்த்து வருகின்றனர். மற்றவர்கள் வெவ்வேறு நிறுவனங்களில் ஓட்டுநர்களாகப் பணியாற்றுகின்றனர். இங்கு பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தமிழக அரசு போக்குவரத்து நிறுவனங்களில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

''விபத்துக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1985-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 24 ஆயிரத்து 500 விபத்துக்கள் நடந்துள்ளன. இதனால், 4 ஆயிரத்து 405 பேர் மரணம் அடைந்துள்ளனர். 1986-ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 847 விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளன. 4 ஆயிரத்து 550 பேர் மரணம் அடைந்துள்ளனர். 1987-ஆம் ஆண்டு 27 ஆயிரத்து 58 விபத்துக்கள் நடந்துள்ளன. 4 ஆயிரத்து 850 பேர் மரணம் அடைந்துள்ளனர். 1988-ஆம் ஆண்டு 30 ஆயிரத்து 147 விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளன. இதனால் 5 ஆயிரத்து 468 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

''1985-ஆம் ஆண்டு இருந்த வாகனங்களைவிட 4 மடங்கு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. 2 சக்கர 'மொபெட்' போன்றவற்றில் செல்பவர்கள் உரிமம் வைத்து இருக்கிறார்களா என்று தெரிவது இல்லை.

''ஓட்டுநர்களுக்கான உரிமம் கொடுக்கும்போது எந்தவிதமான சலுகைகளும் இல்லாமல் தகுதியின் அடிப்படையில் உரிமம் கொடுக்க வேண்டும். மாவட்ட அளவில் விபத்துக்களில் அதிகம் திருச்சி மாவட்டத்தில்தான் ஏற்பட்டு இருக்கிறது. அங்கு 469 விபத்துக்கள் ஏற்பட்டு இருக்கின்றன. 455 பேர் மரணம் அடைந்துள்ளனர். இரண்டாவதாக அதிக அளவில் விபத்துக்கள் செங்கை-அண்ணா மாவட்டத்தில் ஏற்பட்டு உள்ளன.

''எனவே, விபத்துக்களைக் குறைக்க இதுபோன்ற ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் கும்மிடிப்பூண்டியில் இருப்பது போல ஓட்டுநர்கள் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

எந்த கிராமமாக இருந்தாலும் சாலை வசதி இருந்தால், அந்த கிராமத்திற்கு பஸ்களை விட வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

இறுதியில் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவுத் துணை இயக்குநர் திரு. ஜெ. ஜனார்த்தன் நன்றி நவின்றார்.

—தமது செய்தியாளர்

TNPSC விளம்பர எண்: 1/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

அகில இந்திய பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலருக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள், மார்ச் - 1990.

அகில இந்திய பணிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப்பிரிவு அலுவலருக்கான (Certain classes of Officers) அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் இவ்வாணையத்தினால் 22.3.1990 முதல் நடத்தப்படும். இத்தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 13.2.1990 ஆகும். விண்ணப்பப்படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002, அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்புகள்:

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ் மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்திய பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூபாய் 1,000/- ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப் புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு 13.2.1990-க்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

DIPR/81/MS/90/CHHAGA

கோவை அருகே உள்ள ஆலாந்துறை அரசு மேல்நிலைப் பள்ளியில், இலவசக் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 205 பேர் தேர்வு செய்யப்பட்டு 85 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

19 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி

கோவை மாவட்டத்தில் நடப்பாண்டில் 18,970 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கோவையில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது:

கோவை மாவட்டத்தில் கடந்த 1988-ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 123 எக்டேரில் மட்டும்தான் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் (1989-90) இதுவரை 18 ஆயிரத்து 970 எக்டேர் நிலத்தில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை சாதகமாக இருந்ததால் மானாவாரி பகுதியில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் எக்டேரில்தான் சிறு தானியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. உடுமலைப் பகுதியில் மக்காச்சோளம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஏக்கருக்கு 11.2 டன் வரை மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் நடப்பு ஆண்டில் 13,676 எக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் மார்ச் மாதத்திற்குள் சுமார் 5 ஆயிரம் எக்டேரில் கரும்புச் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு 18 ஆயிரம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை அறுவடை செய்யப்பட்டதில் இருந்து ஏக்கருக்குச் சராசரி 9 குவிண்டால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரம்பிக்குளம் முக்கியக் கால்வாயில் பொள்ளாச்சிக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், ஆளியாறுபீடர் கால்வாய்ப் பகுதியில் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேலும் 10,000 எக்டேர் நெல் சாகுபடி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆளியாறு பழைய ஆயக்கட்டிலும், உடுமலைத் தாலுகாவிலும் 2749 எக்டேரில் ஏற்கெனவே நெல் அறுவடையாகியுள்ளது. ஆளியாறு ஆயக்கட்டுப் பகுதியில் எக்டேருக்குச் சராசரியாக 9.7 டன் வீதமும், உடுமலைத் தாலுகாவில் எக்டேருக்குச் சராசரியாக 7.2 டன் வீதமும் மகசூல் கிடைத்துள்ளது.

1990-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

1990-ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்களாகக் கீழ்க்காணும் நாட்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களுடன், கீழ்க்காணும் நாட்களும் பொது விடுமுறை நாட்களாகும்.

1990-ஆம் ஆண்டின் அரசு விடுமுறைநாட்கள்

சனவரி	1	திங்கள்	...	ஆங்கிலப் புத்தாண்டு நாள்
,,	14	ஞாயிறு	...	பொங்கல் திருநாள்
,,	15	திங்கள்	...	திருவள்ளுவர் நாள்
,,	16	செவ்வாய்	...	உழவர் திருநாள்
,,	26	வெள்ளி	...	குடியரசு நாள்
மார்ச்	27	செவ்வாய்	...	தெலுங்குப் புத்தாண்டு நாள்
ஏப்ரல்	2	திங்கள்	...	வங்கிக் கணக்குகள் ஆண்டுமுடிப்பு
,,	13	வெள்ளி	...	நல்ல வெள்ளி
,,	14	சனி	...	தமிழ்ப் புத்தாண்டு நாள்
,,	27	வெள்ளி	...	ரம்சான்
மே	1	செவ்வாய்	...	மே தினம்
ஜூலை	4	புதன்	...	பக்ரீத்
ஆகஸ்டு	2	வியாழன்	...	மொகரம்
,,	15	புதன்	...	விடுதலை நாள்
,,	24	வெள்ளி	...	விநாயகர் சதுர்த்தி
செப்டம்பர்	27	வியாழன்	...	வங்கிக் கணக்குகள் அரையாண்டு முடிப்பு
,,	28	வெள்ளி	...	ஆயுத பூஜை
,,	29	சனி	...	ஆயுத பூஜை
அக்டோபர்	2	செவ்வாய்	...	காந்தி ஜெயந்தி மீலாடி நபி
,,	17	புதன்	...	தீபாவளி
டிசம்பர்	25	செவ்வாய்	...	கிருஸ்துமஸ்

குறிப்பு:-

ஏப்ரல் 2 திங்கட்கிழமை, செப்டம்பர் 27 வியாழக் கிழமை ஆகிய விடுமுறை நாட்கள் அரசு அலுவலகங்களுக்குப் பொருந்தா.

கீழ்க்காணும் நாட்களும் அரசு விடுமுறை நாட்களாகும்.

எல்லா இரண்டாவது சனிக்கிழமை நாட்கள்

ஏப்ரல் 7 சனிக்கிழமை மகாவீரர் ஜெயந்தி

மாநகராட்சி வணிக வளாகம்!

கோவை நகரத் தூய்மைக்கு விரைவில் தீவிர இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தெரிவித்துள்ளார். 6-1-90 அன்று கோவை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்ட புதிய வணிக வளாகத்தை அவர் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்-

"இந்த வளாகம் டாட்டாபாத்தில் ரூ. 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டதாகும். இந்த வளாகத்தில் ஒவ்வொரு கடையும் மாதத்திற்கு ரூ. 700 என்ற அளவில் வாடகைக்கு விடப்படுகிறது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகள் பயனடைவர்.

தமிழ்நாடு மின்சார வாரியம்
வடசென்னை அனல்மின் திட்டம்

ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல்-1 மின்னாக்கம் மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

1.	பணியின் பெயர்	:	வட சென்னை அனல் மின்திட்டம் - முதல் கட்டப் பணி - பொதுகட்டடப் பணிகள் தொகுதி ஒன்று (General Building Works Part.I)
2.	ஒப்பந்த வரையறை எண்	:	SECT.I/NMTPP/11
3.	மொத்த வேலையின் தோராய மதிப்பு	:	ரூ.200 இலட்சங்கள்
4.	பிணை வைப்புத் தொகை	:	ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)
5.	ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும்	:	1990, பிப்ரவரி 14-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12.00 மணி
6.	**தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும்**		1990, பிப்ரவரி 14 ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி
7.	**ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை**		
	தமிழ்நாட்டிற்குள்	:	ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்)
	தமிழ்நாட்டிற்கு வெளியே	:	ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்)
8.	ஒப்பந்தத்தை அனுப்புதல்	:	இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு. ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறையில் உள்ள செக்ஷன் ஏ3ன் 16வது பிரிவில் கண்டுள்ள விதிகளின்படி அனுப்பப்பட வேண்டும். இவ்விதிமுறைகளுக்கு முரணாக சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள் தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை - 600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 17.1.90 காலை 10-30 மணி முதல் 12.2.90 மாலை ஐந்து மணி வரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத் தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50/- கூடுதலாக செலுத்த வேண்டும். பொதுவாக, ஒருவருக்கு ஒரே ஒரு ஒப்பந்த வரையறை மட்டும் தான் கொடுக்கப்படும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணைவைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்துசேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை எனக் கருதும் போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

DIPR/107/MS/90/MCS

தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு

நல்ல எண்ணங்களைத் தூவினால் தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.

போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்றவேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு.

"கோவை நகரைத் தூய்மைப் படுத்தவும், சுகாதார வசதிகளை மேம்படுத்தவும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றார். நகரின் குப்பைகளை அகற்றுவதற்காக 5 டிரக்குகளை மாநகராட்சிக்கு அவர் வழங்கினார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு மாநில அரசு ரூ. 100 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது. இத்தொகையில் ரூ. 15 கோடி அளிக்கப்பட்டு விட்டது. மேலும் ரூ. 5 கோடிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகிறது.

"தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் குப்பைகளை அகற்றும் பணியை விரைவாக்கி, சென்னை நகரைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க ஆவன செய்யப்படும்.

37 தொகுப்பு வீடுகள்

கோவை மாவட்டம் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மைலேரிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட மாமபள்ளி கிராமத்தில் 4 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 37 தொகுப்பு வீடுகளின் திறப்பு விழா 7-1-90 அன்று நடந்தது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் விழாவில் பங்கேற்று, தொகுப்பு வீடுகளைத் திறந்து வைத்தார். ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 42 ஆயிரம் வீடுகள் கட்டப்பட உள்ளதாகவும், இதில் 90 சதவீத வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளியவர்களுக்கு பொங்கல் பரிசாக அளிக்கப்படும்" என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பட்டார்.

ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் ஆறுமுகம், செயலர் டாக்டர் நாராயண், விடுதலை விரும்பி எம்.பி., நடராஜன் எம்.எல்.ஏ., மதுக்கரை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமலைசாமி உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டு பேசினார்கள்.

வேலைவாய்ப்புப் பெயரைப் பதிவு செய்ய புதிய முறை!

கோவை மாவட்டம் வால்பாறை-உடுமலைப்பேட்டை வட்டங்களில் உள்ளவர்கள் வேலைவாய்ப்பு கோரி பெயரைப் பதிவு செய்ய, கோவையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வரவேண்டியது உள்ளது. இதற்குப் பதிலாக கோவை மாவட்டத்தில் புதிய முறை அமல் படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்த இரு வட்டங்களுக்கும் வேலைவாய்ப்புப் பதிவு அதிகாரிகள் வேனில் சென்று பெயர்களைப் பதிவு செய்வார்கள். வால்பாறையில் ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கட்கிழமை அன்று வால்பாறை டவுன்ஷிப் அலுவலகத்திலும், உடுமலைப்பேட்டையில் ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை அன்று நகராட்சி அலுவலகத்திலும் பெயர்களை அதிகாரிகள் பதிவு செய்வார்கள்.

இப்புதிய முறை அமல்படுத்திய முதல் நாளன்று, வால்பாறையில் 150 வேலையில்லாதோரும், உடுமலையில் 75 பேரும் பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

ஊரக வளர்ச்சிப் பணிகள்

கோவையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது குறிப்பிட்டதாவது:

தமிழ்நாட்டில் 6481 ஊராட்சி மன்றங்கள், 124 பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் சொந்தமாக கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

"தமிழ்நாட்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு ரூ. 297 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அதில் இதுவரை ரூ. 148 கோடி செலவிடப்பட்டுள்ளது. எடுத்துக் கொள்ளப்பட்ட 97 ஆயிரம் வேலைகளில் 75 ஆயிரம் வேலைகள் முடிக்கப்பட்டு உள்ளன. தவிர 42 ஆயிரம் வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 30 ஆயிரம் வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மீதமுள்ள வீடுகள் மாாச்சு மாதத்துக்கு முன்பாக கட்டி முடிக்கப்படும்.

"கோவை, மதுரை, சென்னை மாநகராட்சிகளில் தற்போது இருக்கும் மக்கள் தொகை அடிப்படையில் "வார்டுகள்" பிரிக்கும் பணி நடந்து வருகிறது. இந்த வேலை முடிவடைந்ததும் மாநகராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும்.

"கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளி, ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவது உள்பட 3,524 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் இதுவரை 3,390 பணிகள் செய்து முடிக்கப்பட்டு உள்ளன. 1,765 தொகுப்பு வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு இவை முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

15 வகை புதிய பயிர் இரகங்கள்!

கோவையில் 9-1-90 அன்று நடந்த உழவர் தின விழாவில், வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்த ஆண்டு கண்டுபிடித்துள்ள 15 வகை புதிய பயிர் வகைகளை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வெளியிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், விவசாயத் துறை ஆகியவை இணைந்து கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உழவர் தின விழா மற்றும் விவசாயக் கருத்தரங்கை நடத்தின. விழாவுக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சோ. ஜெயராஜ் தலைமை தாங்கினார்

வேளாண்மைப் பல்கலைக் கழகம் சார்பில் கோயமுத்தூர் 45 நெல், கோவில்பட்டி 9 சோளம், டி.சி.எச்.பி 241 பருத்தி, விருத்தாசலம் 3 நிலக்கடலை, பயூர் 1 எள், கோவில்பட்டி 5 நெட்டை சோளரகம் உள்பட 15 வகை புதிய ரகப் பயிர் வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளை பொங்கல் தினப் பரிசாக விவசாயிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

தகவல்: அ. சந்திரசேகரன்
உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

டிஐபிஆர்/உ௪௧௮/எம்எஸ்/௪௧.

தமிழ் வளர்த்த பெரியார்:

செந்நாப் புலவர் கார்மேகனார்

சோ. பால்ராஜ் எம்.எல்.ஏ.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் தலைமணிகளில் ஒருவராய் விளங்கிய செந்நாப்புலவர் பேராசிரியர் திரு. ஆ. கார்மேகனார் அவர்கள் தன் வாழ்நாளெல்லாம் நாட்டுக்கும் மொழிக்கும் நற்றமிழர் இனத்துக்கும் அயராது உழைத்த அறிஞராவார். கார்மேகம் எனும் தம் பெயருக்கு ஏற்ப, சொன் மாரி பொழியும் திறன் மிக்கவர். தமிழுக்கோ, தமிழர் நலத்திற்கோ கேடு சூழும்பொழுது எவருக்கும் அஞ்சாமல் பேசும் உள்ள உரம் கொண்டு திகழ்ந்தார். நிறைந்த புலமையும், சிறந்த சொல்லாற்றலும், விரிந்த சிந்தையும், பரந்த நோக்கும் கொண்ட திரு. கார்மேகனார் அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 37 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி மாணவர்பால் தமிழ் ஆர்வத்தை ஊட்டினார். சங்கநூல்களில் அழுத்தமான பயிற்சியும் நுண்மாண் நுழைபுலமும் கொண்ட அவர் இலக்கிய நூல்கள் பல இயற்றியும், ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியும், உணர்ச்சி ஊட்டும் பல பாக்கள் புனைந்தும் தமிழ் வளர்த்த பெருமைக்கு உரியவர் ஆவார்.

பேராசிரியர் ஆ. கார்மேகனார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம் என்னும் ஊருக்கு அணித்தான அகத்தார் இருப்பில் ஆயர் மரபில் 1889ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார். இவர்தம் தந்தையார் ஆயர்பாடிக் கோனார்; தாயார் இருளாயி அம்மாள். தந்தையார் கல்வியில் பிற்போக்குற்றுக் கிடக்கும் மக்களின்-குறிப்பாக ஆயர் குல மக்களின் இழிநிலையை நீக்குவதற்கு அல்லும் பகலும் உழைத்தார்.

கார்மேகனார் தொடக்கக் கல்வியை முடித்தவுடன் அந்நாளில் மேற்படிப்புக்கு அவ்விடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமையால் ஓராண்டுக் கல்வி இடையில் தடைப்பட்டது. இராமநாதபுரம் சேதுபதிகளின் வழித் தோன்றலான திரு பாண்டித்துரைத் தேவர் அவர்கள் 1901ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 14ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். கார்மேகனாரின் தந்தையார் மதுரைக்கு வரும் போதெல்லாம் அத்தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று அங்கு புலவர்கள் தமிழ் நூலாராய்ச்சி செய்வதையும், மாணவர்கள் கல்வி பயிலுவதையும் மிகுந்த விருப்பத்துடன் பார்ப்பதுண்டு. அதன் விளைவாக அச்சங்கத்தில் தம் மகனையும் சேர்த்து, தமிழ் இலக்கண இலக்கியக் கல்வி பயில்விக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்டார்.

தமிழ்ச்சங்கக் கல்லூரியில் மாணவர்கள் சேர்வதென்பது எளிதானதன்று. தமிழ்ச்சங்கத்தலைவர் திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்களின் கட்டளைப்படி, கல்லூரித் தலைவர், கார்மேகனாரின் தமிழறிவைச் சோதித்து அறிந்து, கல்லூரியில் சேர்த்துக் கொண்டார். முதலில் புகுமுக வகுப்பில் சேர்ந்து படித்தார். இவர் கல்வியில் பேரார்வமும் ஊக்கமும் உடையவராய் கல்வியிலேயே சிறந்த நாட்டமுடையவராய் விளங்கினார். அதனால் மாணவர்களிடையே இவர்பால் நன் மதிப்பும் ஆசிரியர்களிடையே சிறந்த அன்பும் உண்டாயின.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது இயற்கையிலேயே! இருக்கும் அறிவு தெளிவு பெற, பகுத்தறிவு பெருக, கல்வி கேள்வி மிகவும் முக்கியம்!
>
> —முதல்வர் கலைஞர்

இவர் சிறந்த நினைவாற்றல் உடையவராக இருந்தமையால் நன்னூல் முதலிய இலக்கண நூற்பாக்களையேயன்றி உரைகளையும், இலக்கியங்களில் நூற்றுக்கணக்கான பாடல்களையும் நெட்டுருவாகச் சொல்லக் கூடியவராக இருந்தார். இலக்கியங்களை ஒப்பு நோக்கி ஆராய்ந்து படிப்பதில் சீரிய விருப்பம் உடையவராக விளங்கினார். சங்க இலக்கியங்களின் வரலாறுகளையும் அவற்றில் வரும் சேர, சோழ, பாண்டியர்களின் சரிதங்களையும் சாசனங்களில் வரும் தமிழ் வேந்தர்களைப்பற்றியும், காலவரையறைப்படி ஆராய்ந்து அறியும் ஆர்வமுடையவராகவும் இருந்தார்.

இவர் தமிழ்ச்சங்கத்தில் பயிலும் போது கப்பலோட்டியதமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் கார்மேகனாரின் அறிவாற்றலைக் கண்டு ''நீ நன்றாகப்படி; பிற்காலத்தில் சிறந்த சொற்செல்வனாக விளங்குவாய்'' என வாழ்த்துரை பகர்ந்தார். இவ்வாழ்த்துரையின்படி இவர் சொற்செல்வராய் விளங்கினார். 22 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பேரவையில் சிதம்பரனார் அவர்களே இவரது சொற்பொழிவைக் கேட்டுப் பாராட்டலானார்.

தேர்தலில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றமையால் புதுக்கோட்டை மன்னரின் பொற் பதக்கப் பரிசுக்கு உரியவரானார் கார்மேகனார். இப் பரிசு தமிழ்ச்சங்கத்தலைவர் பாண்டித் துரைத் தேவர் அவர்களின் தலைமையில் சங்கப் பேரவையில் இவருக்கு அளிக்கப்பட்டது.

1912ஆம் ஆண்டு மே திங்களில் கார்மேகனாருக்கும் க. பத்மாசினியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த சில திங்களின் பின்னரும் இவர் தமிழ்ச் சங்கத்துக்கு வந்து பண்டித வகுப்பில் கல்வி பயின்றுகொண்டிருந்தார். கோடை விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்த போது 'மெயில்' நாளிதழில் அமெரிக்கன் 'கல்லூரியில் பணியாற்றத் தமிழ்ப் பேராசிரியர் தேவை' என்ற விளம்பரத்தைக் கண்ணுற்று, உடனடியாக கல்லூரி முதல்வருக்கு விண்ணப்பம் செய்தார். கல்லூரித் தலைவர், தமிழ்ப் பேராசிரியர் பணிக்கு வந்திருந்த விண்ணப்பங்கள் அனைத்தையும்

தமிழ்ப்பேரறிஞர் மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாத அய்யர் அவர்களிடம் கொடுத்துத் தக்கவரைத் தெரிவு செய்ய வேண்டிக்கொண்ட பொழுது, அவர், 'மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்தவர்களே இப்பதவிக்குத் தக்கவர்கள்' என்றும் 'கார்மேகனார் நிறைந்த தகுதி உடையவர்' என்றும் குறிப்பிட்டுச் சொன்னார். உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பயிற்சி இல்லாத-22 வயது நிரம்பாத இளைஞரை நிர்ணயம் செய்வதில் கல்லூரித் தலைவர் தயக்கம் காட்டியபோதும், சங்கத்தில் தமிழ் பயின்ற ஒருவர் ஆசிரியர் பயிற்சி இல்லையாயினும் திறம்படப் பணியாற்றுவார் என்ற நம்பிக்கையில் 1914-ஆம் ஆண்டு தமிழ்ப்பேராசிரியர் பணியைக் கார்மேகனாருக்கு அளித்துச் சிறப்பித்தார். இக்கல்லூரியில் தமிழாசிரியர் இவர் ஒருவரே. இண்டர்மீடியட், பி.ஏ. என்னும் இரண்டு வகுப்புக்களே இருந்தன. மாணவர்கள் ஒத்த வயதினராக இருந்தனர். இவர். ஆண்டில் இளையவராக இருப்பினும் உயர்ந்த தோற்றமும் அதற்கேற்ற உடற்கட்டும் உடையவராக இருந்தார். நீண்ட கருமைநிறச் சட்டையும் வெள்ளைத் தலைப்பாகையும் மடித்த சரிகை மேல்வேட்டியும் அணிந்த தோற்றத்தோடு இவர் வகுப்பிற்குள் நுழையும்போது மாணவர்க்கு மன எழுச்சியும் மகிழ்ச்சியும் விளையும். இவர் பாடம் சொல்லும் முறை, இவரது சொல்நடை மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து இழுக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் கல்வி பயில்வதைக் கண்ட கல்லூரி முதல்வர் கார்மேகனாரைப் பாராட்டி மகிழ்ந்தார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவிதாங்கூர் பல்கலைக் கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் குழுக்களில் உறுப்பினராக இருந்து அரும்பணி ஆற்றி இருக்கிறார். இவர் எண்ணற்ற நூல்களை எழுதி தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டு பெருமிதத்திற்கு உரியதாகும்.

செந்நாப்புலவர் கார்மேகனார் தம் வாழ்க்கையை இயன்ற அளவு புனிதமாகவே நடத்த வேண்டும் என்ற கொள்கை படைத்தவர். மானம் அழியாமல் போற்றி ஒழுக வேண்டும் என்ற எண்ணம் பெரிதும் உடையவர்; பிறர்க்கு இன்னா செய்தலைக் கனவிலும் கருதாதவர்; இன்னா செய்தவருக்கும் இனியவே செய்யும் மனப்பான்மை படைத்தவர்; பிறர் பொருளைப் பெற்று வாழ்தலுக்கு ஒரு சிறிதும் ஒருப்படாத உள்ளம் உடையவர்; நேர்மையினின்று பிறழுகின்றவர்களைச் சீறிக் கடியும் மனத்திண்மை பூண்டவர்; தமிழ் மொழியை எள்ளிப் பழிக்கும் எவரையும் கடிந்து ஒதுக்கும் உரமுடையவர்; பிறர் துன்பம் துடைக்க முற்படும் இரக்கமும் குழைவும் உடைய அகமுடையவர்.

சீரிய பண்பு நலன்கள் பெற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழறிஞர் பேராசிரியர் அ. கார்மேகனார் அவர்களுக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகச் சார்பில் 1955ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாளில் (தமிழ்த் திருநாளன்று) தமிழவேள் திரு. பி.டி. இராசன் அவர்கள், நாவலர் கணக்காயர். திரு. ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்திச் "செந்நாப் புலவர்" என்ற சிறப்புப் பட்டமும் வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

அறிவும், ஆற்றலும், புலமையும், புகழும் ஒருங்கே அமைந்த பேராசிரியர் கார்மேகனார் இறவாத புகழ் படைத்த பெருநூல் பல இயற்றி, ஆராய்ச்சி மிக்க அரிய சொற்பொழிவுகள் ஆற்றித் தமிழுக்கும் தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் ஆற்றிய தொண்டுகள் அளவற்றவை-என்றும் நின்று நிலைப்பவை.

'தேவகோட்டை சாலை'

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் காரைக்குடிக்குத் தெற்கே தேவகோட்டை செல்லும் வழியில் உள்ள இரயில்வே நிலையம் 'தேவகோட்டை ரஸ்தா' என்ற பெயரில் 1937- முதல் கடந்த 52 ஆண்டுகளாக இருந்து வந்தது.

இரயில்வே நிலையத்தின் பெயர் தமிழில் இல்லாமல், இந்தியில் 'ரஸ்தா' என்று இருந்து வந்தமையால், இப்பெயரைத் தமிழில் மாற்ற வேண்டும் எனத் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., அவர்கள், மதுரையில் உள்ள தென்னக இரயில்வேயின் மண்டலப் பொறியாளருக்குக் கடிதம் எழுதினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தைப் பரிசீலித்த தென்னக இரயில்வே நிர்வாகம் இக்கோரிக்கையை ஏற்று உடனடியாக இப்பெயரை தமிழில் மாற்றி எழுத உத்தரவிட்டது. இதன்படி தேவகோட்டை ரஸ்தா என்ற பெயருக்குப் பதிலாக 'தேவகோட்டை சாலை' என மாற்றி தமிழில் எழுதப்பட்டது.

—துரை. தாமரைச் செல்வம
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
சிவகங்கை.

புதிய குடியிருப்பகள் திறப்பு விழா

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், சென்னை - வியாசர்பாடி பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள 'உதயசூரியன் நகர்ப்புதிய குடியிருப்பு'களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 16.1.90 அன்று திறந்து வைத்தார்.

வியாசர்பாடி - மல்லிகைப்பூ குடியிருப்புப் பகுதியில் மிகவும் சீர்கேடாக வாழ்ந்துவந்த குடும்பங்களுக்காக ரூ.83.34 இலட்சம் செலவில் உருவானதே 'உதயசூரியன் நகர்' திட்டப்பகுதி. அட்கோ உதவியுடன் 324 மூன்று அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் இங்கே செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதன் திறப்புவிழா மாண்புமிகு மின்துறை மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரிய அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்களும் இந்த விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. வீ. மணிவண்ணன், இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைமைப் பொறியாளர் திரு. தி.ப. காளியப்பன் நன்றி கூறினார்.

இந்த விழாவில் - வாரிய ஆலோசனைக்குழுத் தலைவர் திரு. கோ. சிட்டிபாபு, தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கை சிவம், வீட்டுவசதி, மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. சி. செல்லப்பன் இ.ஆ.ப., மக்களவை உறுப்பினர் திரு நா. பாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி படிக்கப் பட்டது.

அதன்பின்னர் - 'உதயசூரியன் நகர்' குடியிருப்புகளைத் திறந்துவைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதே இந்த அரசின் கொள்கை. வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் குடிசை மாற்று வாரியம் ஒரு களமாகும். சென்னை மாநகரம் தமிழ்நாட்டின் தலைநகரம். இங்கே, முகத்தில் குறுமருக்கள் போலக் குடிசைப் பகுதிகள் ஆயிரத்துக்கு மேல் இருக்கின்றன. குடிசைப் பகுதிகளில் வசதிகளை வழங்குவதை விட அந்தப் பகுதிகளையே தலைகீழாக மாற்றி குடிசை வாழ் மக்களை அங்கே குடியேற்ற வேண்டும் என்பதே இந்த அரசின் திட்டம். அதற்கேற்ப 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்றுவாரியம் தொடங்கப்பெற்றது. அதற்கெனத் தலைவர், உறுப்பினர்கள், விதி முறைகள் அமைத்து வாரியத் தலைவர் சகோதரர் அரங்கண்ணல் அவர்களின் ஆர்வ மிகுதியின் அடையாளமாகக் குடிசைகள் கோபுரமாகிற காட்சியைக் காணுகிறோம். பூச்சி புழுக்களைப் போல் சாக்கடை ஓரங்களில் வாடி வதங்கும் மனித தெய்வங்களுக்கு இந்தக் குடிசை மாற்று வாரியக் கோயிலை அமைத்ததை, பெரியதோர் புண்ணியச் செயலாக நான் கருதுகிறேன். திருத்தலங்களுக்கு யாத்திரை செய்து பெறும் பயனை விட, இந்தத் திவ்விய ஸ்தலங்களை அமைப்பதிலே பெரும் பயன்கிட்டுவதாகவே நான் நம்புகிறேன்."

"-இவ்வாறு 71-ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தினுடைய வெற்றியை நானே மகிழ்ந்து பூரித்துப் பாராட்டி, இந்தப் பணியை இந்த அரசு எப்படிக் கருதுகிறது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்த வரிசையிலே இன்றைய தினம் உதய சூரியன் நகர்-ஏறத்தாழ 300க்கு மேற்பட்ட வீடுகள் - 80 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவிலே கட்டி முடிக்கப்பட்டு அதனுடைய திறப்பு விழா இன்று நடைபெற்றிருக்கின்றது.

"குடிசை மாற்று வாரியம் என்ற இந்தப் பெயர் ஏன் சூட்டப்பட்டது என்றால், ஏற்கெனவே கூட குடிசை வாழ் மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக முன்பிருந்த அரசுகள் முயற்சிகளை மேற்கொண்டது உண்டு. மத்திய அரசாக இருந்தாலும் சரி. மாநிலத்திலே இருந்த காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி - அந்த அரசுகள் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டது உண்டு. நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அவைகள் எல்லாம் குடிசைவாழ் மக்களுடைய மேம்பாட்டுத் திட்டங்களாகத்தான் (Slum Improvement Scheme) இருந்தன. எனவே, அந்த மேம்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை - சாலை

அறிவளித்த ஆசான்!

-கவிஞர் பல்லவன்

வரலாறு சிறந்த காஞ்சியிலே
கண்மலர்ந்த அறிஞன்நீ!
நல்லோர் புகழும் [illegible]
நாட்டில் பிறந்த [illegible]நீ!

ஆயிரங் காலத்து இருளோட்டி
அறிவளித்த ஆசான்நீ!
தாய்மொழி காத்த இனியன்நீ
தந்தை பெரியார் தனயன்நீ!

பண்பை விதைத்த பெருந்தகைநீ!
பகைநட் பாக்கிய வித்தகன்நீ!
அன்புளம் கொண்ட அண்ணன்நீ!
அறவழி நடந்த மன்னன்நீ!

காய்மொழி பேசாக் கண்ணியன்நீ!
கருத்தமு தூட்டிய அன்னையும்நீ!
வாய்மை அரசியல் வளர்த்தவன்நீ!
வரலாற்று வானச் சூரியன்நீ!

இதயத் துடிப்பில் ஒலிப்பாய்நீ
இரத்த நாளத்தில் இழைவாய் நீ!
உதயக் கடரில் சிரிப்பாய்நீ!
உலவும் காற்றில் மணப்பாய்நீ!

எக்காலத்தும் வாழ்வாய்நீ!
எங்கள் நெஞ்சை ஆள்வாய்நீ!
முக்கா லத்து வினைத்தொகைநீ!
மூவாத் தமிழ்போல் வாழியநீ!

வசதிக்காக - விளக்கு வசதிக்காக - சுகாதார வசதிக்காக - கழிவு நீரை அகற்றுவதற்காக - குடிநீரை வழங்குவதற்காக அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை உரிய இடங்களுக்கு உரியவர்களுக்குப் போய்ச் சேராமலே மறைந்து விட்டது.

"எனவேதான் மேம்பாட்டுத் திட்டமும் இருக்கட்டும், அதற்கிடையே குடிசைகளை அறவே அகற்றுகின்ற திட்டமும் இருக்கட்டும் என்ற வகையில் - இந்தத் திட்டத்தை 1970-ஆம் ஆண்டிலே அறிமுகப்படுத்தி 1971-ஆம் ஆண்டு முதல் சென்னையிலும் கோவை - சேலம் - திருச்சி போன்ற வேறு பல நகரங்களிலும் குடிசை மாற்று வாரியப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"இந்தப் பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்தும் நமக்குத் தாராளமாக உதவி கிடைக்கும் என்பதை அமைச்சர் வீராசாமி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். மத்திய அரசு சென்னை நகரத்திற்குக் கடந்த காலத்தில் வழங்க வேண்டிய உரிய நிதியை வழங்கவில்லை, என்று ஏற்கெனவே குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திட்டக் குழுவிடமும், நிதிக்குழுவிடமும் தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையிலே நான், கடந்த சில மாதங்களுக்கு முன்பு - முந்தைய ஆட்சியில் பேசிய போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

"இந்தியாவிலே இருக்கின்ற வேறு பல பெரிய மாநகரங்களுக்கு ஐம்பது கோடி ரூபாய் என்ற அளவிற்குக் குடிசைப் பகுதிகளுக்காக அவற்றின் மேம்பாடுகளுக்காக நீங்கள் செலவழித்திருக்கிறீர்கள். ஆனால் சென்னை மாநகரத்திற்கு என்று எதுவும் தரவில்லை என்று எடுத்துச் சொல்லி, அந்தத் திட்டக்குழு, நிதிக் குழு உறுப்பினர்களை எல்லாம் சென்னையிலே உள்ள குடிசை வாழ் மக்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு அழைத்துச் செல்கின்ற அந்தப் பணியினையும் அதிகாரிகளையும், அமைச்சர்களையும் கொண்டு செய்வித்தது நேரிலே பார்த்த பிறகு - ஆமாம், நாங்கள் தவறுதான் செய்து விட்டோம் - என்று அந்தக் குழுவின் தலைவர்களே ஒப்புக் கொண்டு சென்றார்கள்.

"ஆனால் இன்றைக்கு விடுபட்டுப் போன பட்டியலிலே இல்லாமல் அடிபட்டுப் போன சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக - அதிலும் குறிப்பாக ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற இதுபோன்ற பகுதிகளின் வளர்ச்சிக்காக - தேவையான பணத்தை மத்திய அரசு தருவதற்குத் தயங்காது என்று கருதுகிறேன். தயங்கக்கூடாது என்று நான் எண்ணுகிறேன். உங்கள் சார்பாகத் தொடர்ந்து அந்த நிதி உதவியைப் பெறவும், மாநில அரசின் நிதியை அதோடு சேர்த்து உங்கள் நல்வாழ்விற்கான திட்டங்களை வகுக்கவும் இந்த அரசு முன்வரும் என்ற உறுதியை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இன்னொன்று - இந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளில் கடந்த காலத்தில் 71 முதல் 76 வரையில் குடி அமர்த்தப்பட்டவர்கள் அதற்குப் பிறகு பத்தாண்டுக் காலத்தில் வேறு யாரையோ அந்த வீடுகளிலே உப வாடகைக்கு வைத்துவிட்டு, இவர்கள் மீண்டும் குடிசை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை நான் அறியாதவன் அல்ல. அப்படி ஒரு கணக்கெடுத்த போது, சென்னை மாநகரத்திலே மாத்திரம் 13 சதவீதம் பேர் - அது போல யாருக்கு இந்தக் குடிசை

மாற்று வாரிய வீடுகள் கொடுக்கப் பட்டதோ அவர்கள் அதிலே குடித்தனம் நடத்தாமல், வாழாமல், வேறு யாரையோ கொண்டு வந்து அங்கே குடி வைத்து, அவர்களிடம் வாடகை பெறுகின்ற நிலை இன்றைக்கு இருக்கின்றது.

"இது உண்மையிலே ஒரு சமுதாயக் குற்றம் என்பதை அவர்கள் உணர வேண்டும். உணர்ந்து திருந்த வேண்டும். இனி அப்படிப்பட்ட செயல்களிலே அவர்கள் ஈடுபடக்கூடாது என்று என்னுடைய சொந்தக் சகோதரர்களாக இருக்கின்ற குடிசை வாழ் மக்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

"அதே போல் ஆதி திராவிட மக்களுக்காக இலவச வீடுகளைக் கட்டித் தரும் திட்டம் கொண்டு வந்தது, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே நம்முடைய அரசுதான் - 1971-ஆம் ஆண்டில், சென்னை மாநகரிலே எம்.எம்.டி.ஏ. திட்டத்தைக் கடந்த காலத்திலே நாம் அரசுப் பொறுப்பிலே இருந்தபோது கொண்டு வந்த செய்தியை அமைச்சர் தங்கவேலு இங்கே எடுத்துச் சொன்னார். அந்த எம்.எம்.டி.ஏ.வின் முயற்சியின் காரணமாகத்தான் இன்றைக்கு மறைமலைநகர் உதயமாகியிருக்கின்றது. சென்னையில் விரிவான வளர்ச்சியை இன்றைக்குக் காண முடிகின்றது. ஆனால் முழுமையான மன நிறைவு பெறத்தக்க அளவிற்கு அந்த வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை!

"நண்பர் தா. பாண்டியன் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், இன்னமும் தூய்மை முழுமையாகப் பேணப்படாத காரணத்தால் கொசுத் தொல்லையும் தொத்து நோய்கள் எந்த நேரத்திலும் பற்றிக் கொள்ளக்கூடும் என்கிற அச்சமும் நகர மாந்தருக்கு இல்லாமல் இல்லை. இவைகளை எல்லாம் நாம் ஒரேயடியாக ஒரே நேரத்தில் செய்து முடித்து விட முடியாது. சில நேரங்களில், நடந்து விட்ட தவறுகளைத் திருத்துவதற்கு நீண்ட காலம் ஆகும்.

"அவர்கள் குறிப்பிட்டதைப் போல் கழிவு நீர் செல்வதற்கான குழாய்களை அமைக்கின்ற நேரத்தில் அதை உடைப்பதும் அந்த இரும்பை எடுத்துச் சென்று அதை விற்றுப் பிழைப்பதும், அந்த வியாபாரத்தின் மூலம் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்று நினைப்பதும் ஒரு மனிதனுடைய விவகாரம் அல்ல; ஒரு சமுதாயத்தின் விவகாரம் என்பதை நினைத்துப் பார்த்தால் - அந்தச் சமுதாய விரோதச் செயல்களிலே யாரும் ஈடுபடமாட்டார்கள். எனவே, அரசு மாத்திரம் எல்லாக் காரியங்களையும் செய்து முடித்துவிட முடியாது. நான் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக நினைக்கக் கூடாது. எல்

தன்னலம் கருதாத தாயுள்ளம்

கவிஞர் முருகுவண்ணன்

அண்ணா ஓர் உலகப் பெருங் காவியம்!
அறிவுலகம் பரவும் குற ளோவியம்!
-அறிஞர் (அண்ணா)

அண்ணா ஓர் உதயக் கதிர் வானகம்
அறிவியக்கப் புரட்சி செய்த நாடகம்!
-அறிஞர் (அண்ணா)

தமிழ்ப் பொழில் தழைக்கவந்த இளவேனில்-செந்
தமிழ்ப்பகைப் புலம்வென்ற புறப்பாடல்
தமிழினம் எழுச்சிபெற்ற புதுக்கோலம்-உயர்
தமிழின வரலாற்றில் புகழ்க்காலம்!
-(அறிஞர் அண்ணா)

இலக்கியம் படைக்கின்ற சொல்வண்ணம்!-ஏழை
எளியவரை உயர்வாக்கும் நல்லெண்ணம்!-தன்
நலத்தினைக் கருதாத தாயுள்ளம்!-மக்கள்
நலத்திற்குத் தனைத்தந்த பேருள்ளம்!
-அறிஞர் (அண்ணா)

கலைநகர் காஞ்சி தந்த புகழ்ச்சுரங்கம்-தமிழ்க்
கன்னி அர சாளவைத்த புதிய சுரங்கம்!-நம்
உலகினர் உள்ளம் வாழும் கவியரங்கம்! உறங்கும்
உயிரிசைச் கடலருகே உறங்காமல்
-அறிஞர்(அண்ணா)

லோருக்கும் இருக்கும் பொறுப்பினை உணர்த்துகின்றேன். அந்தப் பொறுப் புணர்வோடு அனைவரும் இதிலே ஈடுபட வேண்டும்.

"தம்பி டி.ஆர். பாலு எடுத்துக் காட்டியதைப் போல, எனக்குக் கூட ஆசைதான். இந்தவீடுகளை எல்லாம் வாடகைக்கு உங்களுக்கு விடுவதை விட, உங்களுக்கே சொந்தமாக ஆக்கி விட்டால், அதைப் பழுது பார்ப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அரசு முன் வருவதைவிட, அதைப் பழுதுபார்க்க - சீர்படுத்த அந்த அக்கறை உங்களுக்குத் தானாக ஏற்படும் என்று எனக்குத் தெரியும். எனவே அதற்கான திட்டங்களையும் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, தங்கவேலு மற்றும் அதிகாரிகள் மூலமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன்.

"ஒவ்வொரு வீட்டின் விலையையும் நிர்ணயித்து, தவணை முறையிலே அந்தப் பணத்தைக் கட்டி அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்கி விடலாமா என்பதைப் பற்றியும் அரசு யோசித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி - உதயசூரியன் நகர் குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியேறப் போகின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். இராசேந்திரன்

படமும் செய்தியும்

சென்னையில் மேயர் டி. சுந்தர்ராவ் நாயுடு அவர்களின் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி, திரு. கி. வீரமணி மற்றும் விழாக் குழுவினர் உடன் உள்ளனர்.
(18-1-90)

சென்னை மயிலாப்பூரில் கிளை நூலகக்கட்டடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.
(21-1-1990)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் ரூ. 60 இலட்சம் செலவில் சென்னை மாநகராட்சி வாங்கியுள்ள நவீன குப்பை இறுக்கி ஊர்திகளை (Compactors) இயக்கி வைத்தார்.
(11-1-1990)

சென்னைப் பெருநகர் பள்ளிப்பட்டு பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
(24-1-1990)



டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுச் சிறப்பு அஞ்சல்தலை வெளியீடு

டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் நினைவுச் சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழா 17.1.1990 அன்று சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய அரசு தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. கே.பி. உன்னிகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

தமிழ்நாடு அஞ்சல்துறைத் தலைவர் திரு. வி.எஸ். வரதன் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இந்த அஞ்சல் தலை வெளியிட ஒரு குழு அமைக்கப்பட்டது என்றாலும், தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைந்த பிறகே அதன் பணிகள் முடுக்கி விடப்பட்டன; அதன் பலனாக இப்போது இந்த அஞ்சல்தலை வெளியிடப்படுகிறது. அரசியலில் எத்தனையோ வேறுபாடுகள் இருந்தாலும்-எம்.ஜி.ஆர் பெயரால் மருத்துவப் பல்கலைக் கழகம்; நினைவிடத்தை முழுமைப்படுத்தல்; அவர் சிலை வைக்க அனுமதி என்றெல்லாம் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும் பெருமை நமது முதல்வர் அவர்களுடையது. எம்.ஜி.ஆர். பிறந்த நாளான இன்று; நமது முதல்வர் அவர்களின் பெருமுயற்சியால் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவாகச் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடுவது மிகவும் பொருத்தமானது ஆகும்.''

சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டு மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு. கே.பி. உன்னி கிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''என்னுடைய துறைக்கு உட்பட்ட அலுவலகக் கட்டடங்களுக்கு, நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றோர் முதலாகப் பல துறை வல்லுநர்களின் பெயர்களையும் சூட்டும்படி ஆணையிட்டிருக்கிறேன். அதன்படி வடமாநிலங்களில் உள்ள கட்டடங்களுக்குத் தென் மாநிலத்தார் பெயர்களும்-தென் மாநிலங்களில் அமையும் கட்டடங்களுக்கு வட மாநிலத்தாரின் பெயர்களும் வைக்கப்படும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு வளர இது ஒரு சிறந்த வழியாகும். மகாராட்டிர மாநிலத்தில் இருக்கும் ஒரு தொலைபேசி இணைப்பகத்திற்கு, தமிழ் நாட்டைச் சேர்ந்த மறைந்த விடுதலை வீரர் சத்தியமூர்த்தியின் பெயர் சூட்டப்படவிருக்கிறது. அதேபோல - இங்கு அம்பேத்கார், திலகர் போன்றவர்களின் பெயர்கள் சூட்டப்படும்.

''நான் எனது மாணவப் பருவத்தில், எம்.ஜி.ஆர். நடித்த பல திரைப் படங்களைப் பார்த்திருக்கிறேன். அவர், திரையில் மட்டுமல்லாமல், திரைக்கு வெளியிலும் சிறந்த நட்சத்திரமாகத் திகழ்ந்தார். தமது தாயாரின் பேரில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர், மூகாம்பிகை பக்தராகவும், நாட்டின் ஒருமைப்பாட்டில் உறுதி கொண்டவராகவும் இருந்தார். அவர் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.''

-அஞ்சல் தலையைப் பெற்றுக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''தேசிய முன்னணிக்கே தொடக்க விழா நடத்தியது சென்னை மாநகரம் என்ற உரிமையோடு, இன்று இந்தியாவில் நடைபெறுகின்ற நம்முடைய தேசிய முன்னணி ஆட்சியின் சார்பில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அஞ்சல் தலை வெளியிடுகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்வதை நான் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன்.

ஒரு அரசுக்கு உரிய கடமையைச் செய்கிறோம் என்றாலுங்கூட, தனிப்பட்ட முறையிலே எனக்கும் எம்.ஜி. ஆருக்கும் இருந்த நட்புணர்வை என்னையும் அவரையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள்தான் - தெரிந்திருக்க முடியும். புரிந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தவர்கள், தொலைவிலே இருந்தவர்கள், செய்திகளை மாத்திரம் மேடைகளிலே கேட்டறிந்தவர்கள், ஏடுகளிலே படித்தறிந்தவர்கள் அதைப் புரிந்து கொள்ள இயலாது. உண்மையிலேயே அந்த நட்பை உணர்ந்தவன், அதற்கு மதிப்பளிப்பவன் என்ற காரணத்தினாலேயேதான்-அவர் உயிரோடு இருந்த காலத்திலே அறிவிக்கப்பட்டு - ஆனால் தொடர முடியாத ஒரு முயற்சியாக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்து அதற்கான திறப்பு விழா நடத்தி இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகம் பல கோடி ரூபாய்ச் செலவில் அமைவதற்கான முயற்சியிலே இந்த அரசுதான் ஈடுபட்டிருக்கின்றது.

''அதைப்போலக் குடியரசு தலைவர் கலந்துகொண்ட அகில இந்தியக் கலைத்துறை நிகழ்ச்சி ஒன்றில், இனிமேல் தமிழ்நாட்டில் கலைத்துறையிலே பரிசு பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் பரிசுகளில்-கலைவாணர் பெயராலும், டைரக்டர் ராஜா சாண்டோ பெயராலும் சிறப்பு விருதுகள் வழங்கியதோடு-எம்.ஜி.ஆர் விருது என்ற ஒரு விருதும் வழங்கப்படும் என்று நான் முன்பு அறிவித்தேன். அந்த விருதினை நண்பர் ரஜினிகாந்த் அவர்கள் இந்த ஆண்டு பெற்றிருக்கிறார்கள் என்பதனையும் நான் சொல்லத் தேவையில்லை. அறிவித்ததோடு நின்றுவிடவில்லை. அது அமுலுக்கும் வந்தது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

''அதுபோல எம்.ஜி.ஆர் மறைந்த பிறகு நினைக்கப்படாமலே கிடந்த நினைவிடத்தை ஏறத்தாழ நாற்பது இலட்சம் ரூபாய் செலவிலே கட்டி முடித்து, அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சியிலும் நானே முன்னின்று உரையாற்றினேன் என்பதையும் நீங்கள் நன்கறிவீர்கள்.

நான் அந்த நிகழ்ச்சியிலே பேசும்போது-நானும், எம்.ஜி.ஆரும் நண்பர்களாக இருந்த காலத்திலும், நாங்கள் அரசியலிலே வேறுபட்டிருந்த 'காலத்திலும் அவரைப்பற்றி நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் அந்த நினைவிட விழாவில் எடுத்துச் சொன்னேன். இன்றைக்கு அதற்கு மாறாக-அவர் என்னைப் பற்றிச் சொன்ன கருத்துக்களை இந்த விழாவிலே சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

''அரசியலிலே மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, அரசியல் பண்பாட்டோடு அரசியல் நாகரீகத்தோடு நாங்கள் எல்லாம் அண்ணாவின் பள்ளியிலே பயின்றவர்கள் என்கின்ற அரசியல் பரந்த மனப்பான்மையோடு நடத்தப்பட்ட அந்தக் காரியங்களை உங்களிடம் தொகுத்துச் சொல்கிறேன்.

சிறப்பு அஞ்சல்தலை

''தமிழகத்தின் முதல்வர் என்னும் முறையில் நல்ல நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறார் கலைஞர்-'' இது எம்.ஜி.ஆர். '71-ஆம் ஆண்டு பரங்கிமலை விழாவிலே குறிப்பிட்டதாகும். அவர் சொன்னது உண்மையா அல்லவா என்று இன்று நடைபெறுகின்ற இந்த விழாவிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

''நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறோம்'' என்று அவர் அன்று சொன்ன அந்த வாசகத்தின்-அடிப்படையிலேதான் தொடர்ந்து இந்த அரசு இயங்கி வருகின்றது.

அவர் அந்த விழாவிலேதான் மேலும் ஒன்றைக் குறிப்பிட்டார். அப்போது எனக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டு இருபதாண்டுக் காலமாகியிருந்த நேரம். அதனால் 71-ஆம் ஆண்டு அவர் பேசும்போது ''தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டுக் கால தொடர்பு உண்டு. அப்போது நான் கோவையிலே இருந்தேன். ஊருக்குள் பிளேக் என்ற நோய் பரவிக் கொண்டிருந்த காரணத்தால், குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு கலைஞர் என் வீட்டில் வந்து தங்கினார். என் வீடு என்றால், அப்போது பன்னிரண்டு ரூபாய் வாடகை. இரண்டு பேரும் ஒன்றாக இருந்தோம். ஆனால் அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், நான் காங்கிரஸ்காரனாகவும் இருந்தேன். அப்பொது எல்லாம், அவரை என் பக்கம் இழுக்க முயற்சித்தேன். ஆனால் நிலைமை தலைகீழாக ஆனது. நான் அவர் பக்கம் ஈர்க்கப்பட்டேன். இன்று அவர் கழகத்தின் தலைவராகவும், நான் கழகத்தின் பொருளாளராகவும் இருக்கும் நிலைமைக்கு அந்த ஈர்ப்பு நடைபெற்றது'' என்று அன்றைக்கு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதைப்போலவே அவர் 'பாரத்' பட்டம் பெற்றபோது, 28-7-'72-இல் நடைபெற்ற பாராட்டு விழாவில் எம்.ஜி.ஆர். பேசும்போது-''நான்

அதிமதுரச் சொல்லுடைய அண்ணா!

திருவாளர் சி.என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென் நாட்டில் அவரைத் தெரியாதார் யாரும் இரார். இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த்திரிபவர் பலர் உளர், எனில் எழுத்திலும் பேச்சிலும் பழுத்த மொழியாட்சியிலும் திறனுடையோர் மிகச்சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லவர்தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையவர் இவர்.

தமிழினிலோ அமிழ்துமிழும் சொல் வளமும் உணர்வெழுப்பும் தொடர்ச்சிச் செறிவும் குரவனிடம் கல்லாமல் தான், பயின்று திறம்பெற்ற சொல்லின் செல்வர், தமிழ் இளைஞர், 'புத்துலகு' விரைந்து தொழில் கேட்க நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர்.

அதிமதுரச் சொல்லுடையார்; தளராத உள உரனும் வளரறிவும் வளமலியும் தன்னுடைமையாகக் கொண்டோர்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

முதன் முதலாகப் பெற்ற பட்டம் புரட்சி நடிகர் பட்டம். அந்தப் பட்டத்தை எனக்கு முதன்முதலாகத் தந்து பாராட்டியவர் இன்றைய கழகத் தலைவரும், தமிழக முதல்வராகவும் இருக்கும் கலைஞர் அவர்கள்'' என்று குறிப்பிட்டார். எனவே அவருக்குப் பட்டம் அளிப்பது-அவரைப் பாராட்டுவது என்பதெல்லாம் இன்று ஏதோ அரசியல் மாற்றங்களின் அடிப்படையிலே நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி அல்ல என்பதையும், எனக்கும் அவருக்கும் இருந்த அந்த நெருங்கிய தொடர்பு எத்தனையோ அரசியல் கருத்து வேறுபாடுகளால் என்றைக்கும் அகன்றதில்லை என்பதையும் உங்களுக்குச் சுட்டிக்காட்டத்தான் இவைகளைக் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அஞ்சல் தலை இந்த விழாவிலே வெளியிடப்பட்டிருக்கின்றது.

''இங்கே பேசிய மத்திய அமைச்சர் அவர்கள்-வட பகுதியிலே உள்ள தலைவர்களைத் தென் பகுதியிலே உள்ளவர்கள் மதிப்பதும், தென் பகுதியிலே உள்ள தலைவர்களை வட பகுதியிலே உள்ளவர்கள் மதிப்பதும் இயல்பான ஒன்றாக ஆக வேண்டுமென்று-குறிப்பிட்டார்கள்.

''தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வடநாட்டிலே பிறந்ததலைவர்களுக்குப் பெருமை அளிக்க, மதிப்பு அளிக்க, அவர்களுடைய பெயர்களுக்கு விளம்பரம் தர என்றைக்குமே நாம் தயங்கியதில்லை. தமிழன் அதற்குத் தயங்க மாட்டான். ஆனால் வடக்கே உள்ள பகுதிகளில் தென்னாட்டவரை மதிக்கின்ற நிலை இது வரையிலே இருந்ததில்லை!

இந்தியாவின் ஒருமைப்பாட்டை நாம் உண்மையிலேயே போற்றுகிறோம் என்றால், உண்மையிலேயே கடைப்பிடிக்க வேண்டுமென்றால்-இந்தச் சாதாரண விஷயத்தில்கூட அங்கிருப்பவர்கள் அலட்சியம் காட்டக்கூடாது.

''பெரியாரைப் பற்றி மத்திய அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்தப் பெயர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்குத் தெரிந்திட வேண்டும். அம்பேத்காரைப் பற்றிச் சொன்னார். அம்பேத்கார் பிறந்தது மராட்டிய மாநிலம். இன்னமும் மராட்டிய மாநிலத்திலே அம்பேத்கார் பெயரால் ஒரு பெரிய நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் கழக அரசு கடந்த காலத்தில் அம்பேத்கார் பெயரால் முதன் முதலாக இந்தியாவிலே கல்லூரி ஒன்றை அமைத்ததை யாரும் மறந்திருக்க முடியாது. அதைப் போலவே இந்தியாவிலே எங்குமில்லாத அளவிற்கு அம்பேத்கார் சிலையைத் தமிழ்நாட்டிலே காணலாம். அதைப் போலவே இந்தியாவிலே எங்குமில்லா அம்பேத்கார் மாவட்டத்தை, இந்த அரசுதான் உருவாக்கி-வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றது. அதைப் போல அண்ணா பெயரால்-பெரியார் பெயரால் வடபுலத்திலே உள்ள மாநிலங்களில் டெல்லி போன்ற நகரங்களிலே நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட வேண்டும். அதற்கு பிறகு தான் தேசியம் என்பதிலும்-ஒருமைப்பாடு என்பதிலும் எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட முடியுமேயல்லாமல் ஒருமைப்பாடு என்பது மற்றவர்களை ஏமாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வலையாக இருத்தல் ஆகாது.''

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.

விழாவில்-மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. எஸ். துரைமுருகன், மாண்புமிகு முதல்வரின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. துரைசாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

செய்தித்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப. முன்னுரையோடு தொடங்கிய விழா முடிவில்-செய்தி சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., நன்றி உரையாற்றினார்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு டவுன் பாங்க் லிமிடெட் எண்-3

90-91, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம்

தொலைபேசி : 2340

★ இந்தியாவில் துவக்கப்பட்ட முதல் கூட்டுறவு நகர வங்கி
★ மொத்த டிபாசிட்டுகள் இருப்பு ரூ.11 கோடிக்கு மேல்.
★ மொத்தக் கடன்கள் நிலுவை ரூ.8 கோடிக்கு மேல்.
★ 1979-80 & 1984-85-ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் கூட்டுறவு நகர வங்கி என்ற சிறப்புக் கேடயம் பெற்ற வங்கி.
★ காஞ்சியில் 3 கிளைகள் சேவை செய்கின்றன.

சிறப்பு அம்சங்கள்

(1) இதர வங்கிகளை விட கூடுதலாக டிபாசிட்டுகளுக்கு 1% வட்டி உண்டு.
(2) டிபாசிட்டுக்கு உயர்ந்தபட்சம் வட்டி 11% உண்டு.
(3) சிறுதொழில், குடிசைத் தொழில் மற்றும் சுயமாக வேலை செய்யக் கடன்கள், புதிய பஸ், லாரி வாங்க கடன்கள் உண்டு.
(4) டிபாசிட்டர்களுக்கு ரூ.30,000/- வரை இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு.
(5) பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

எஸ். மணிமுடி, பி.ஏ. எச்.டி.சி.,
செயலாளர்

வி.எம். இராதாகிருஷ்ணன்
துணைப் பதிவாளர்/தனி அலுவலர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்

100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

தமிழரசு

16-2-1990 ரூ.1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
1 - மார் 199
எழும்பூர், சென்னை-600008.



இந்த இதழுடன்

இலவச இணைப்பு

‘நாளும் தொடரும் நமது பணிகள்!’

(ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்திற்கு
மாண்புமிகு முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை)

இந்த இதழில் ...

சென்னையில் பிரதமர்	... 2
டெல்லியில் திட்டக்குழுக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர்	... 4
குடியரசு நாள் விழா நிகழ்ச்சி	... 7
பி.பி.சி.யின் உலக சேவை	... 10
மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்	... 33
கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம்	... 41
செயற்கை வைரத் தொழிற்சாலை	... 45
நூல் நயம்	... 48

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021
மாசி- 4
மலர் : 20 இதழ் : 16
16-2-1990

அட்டை சொல்லும் செய்தி :

சென்னையில் பிரதமர்

இந்தியப் பிரதமராகப் பதவி யேற்ற பின்னர், திரு வி.பி. சிங் அவர்கள் 3.2.90 அன்று , முதன் முறையாகச் சென்னை மாநகருக்கு வருகை தந்தார். அவரது துணைவி யாரும் உடன் வந்தார்.

அவர்கள் வருகையையொட்டி நக ரெங்கும் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. விமான நிலை யத்தில் மாண்புமிகு இந்தியப்பிரதமர் அவர்களை மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், அவரது துணைவியார் திருமதி அக்கம்மாள், மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு மத்திய செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் திரு. உபேந்திரா, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், அரசு தலை மைச் செயலாளர் திரு. எம்.எம். ராஜேந்திரன், செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர்வியாஸ், ஆகியோர் மாலையணிவித்து வரவேற்றார்கள்.

அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் வரவேற்பை ஏற்றுக் கொண்ட பின்னர் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர் களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அங்கிருந்து புறப்பட்டுப் பெரியார் திடலுக்குச் சென்றார்கள். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

பிறகு கடற்கரையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவிடத்திற்கு அவர்கள் வருகை தந்தனர். மாண்புமிகு பிரதமர் அவர்கள், அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத் தினார்.

அதன்பின், கடற்கரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் காந்திசிலை அருகே நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கல்வி யமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு

பிரதமர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி, பூம்புகார் எழுநிலை மாடம் உருவம் பொறித்த நினைவுப் பரிசு வழங்கி, மாலையணிவித்தார்கள்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. உபேந்திரா, திரு. முரசொலி மாறன், தமிழ்நாடு ஜனதாதளத் தலைவர் திரு. சிவாஜிகணேசன் ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்களின் முன்னிலை உரையைத் தொடர்ந்து-மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமை யுரையாற்றினார். அப்போது அவர், "பிற்படுத்தப்பட்ட சாமானிய மக்களுக் காக அரும்பாடு பட்டார்கள், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் ஆகியோர் • இங்குள்ள விமான நிலையங்களுக்கு அவர்கள் பெயரைச் சூட்டவேண்டும் என்று நீண்டகாலமாகக் கேட்டு வருகிறோம். எனவே சென்னையில் உள்ள சர்வ தேச விமான நிலையத்திற்கு 'அண்ணா விமான நிலையம்' என்றும், உள் நாட்டு விமான நிலையத்திற்குக் 'காமராசர் விமான நிலையம்' என்றும் பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு வி.பி. சிங் அவர்கள் பேசுகையில் "சென்னையில் உள்ள விமான நிலையங்களுக்கு அண்ணா, காமராசர் ஆகியோரின் பெயர்களைச் சூட்டி, மறைந்த அந்தத் தியாகிகளுக்கு உண் மையான அஞ்சலியைச் செலுத்து கிறேன்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் , தம்முடைய உரையைத் தமிழிலே துவக்கிய போது, மக்கள் பலமாகக் கைதட்டி, தங்களின் மகிழ்ச் சியைத் தெரிவித்தார்கள். "என்னு டைய தமிழ் உச்சரிப்பு சரியாக இல்லாததற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால், என் இதய பூர்வமாக அதைப் பேசுகிறேன். ஏனென்றால் - நான் தமிழை நேசிக் கிறேன்" என்றும் மாண்புமிகு பிரதமர் குறிப்பிட்டார். அதன்பின் அவர் தம்முடைய உரையை ஆங்கிலத்தில் தொடர்ந்தார். அதைத் திரு. வை, கோபாலசாமி எம்.பி., தமிழில் மொழிபெயர்த்தார்.

கடற்கரைப் பொதுக்கூட்டம் முடிந்து, ராஜ்பவனுக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு பிரதமர் அவர்கள், அங்கு திறந்த வெளியில் தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்னாள் இரா ணுவ வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அக்கூட்டத்தில் திரு. எம்.இ.ஏ. கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். திரு. வி.எஸ்.பி. முதலியார், திரு. எஸ்.பி. மகாதேவன், திரு. வேத மூர்த்தி, திரு. பெலிகன் ஆகியோர் பேசினார்கள். கூட்ட முடிவில் திரு. வாலண்டைன் ஜேசுதாஸ் நன்றி கூறினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். துரைமுருகன், திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. சந்திரசேகரன், திரு. கே. பொன்முடி, திரு. எஸ். தங்கவேலு, திரு. இ. இராம கிருஷ்ணன் , சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. பி. துரைசாமி, திரு. வை. கோபால்சாமி எம்.பி., திரு. டி.ஆர். பாலு எம்.பி., ஆகியோரும் இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந் தார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், அரசு தலைமைச் செய லாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. ஆகியோரும் , மாண்புமிகு பிரதமர் அவர்களுடன் மேடைக்கு அழைக்கப்பட்டார்கள்.

"முன்னாள் இராணுவத்தினருக்கு நலம் சேர்ப்பதில் தமிழக அரசு மிகவும் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது; இதேபோல மற்ற மாநில அரசுகளின் நடவடிக்கைகளும் அமைந்திட வேண் டும் என்று கேட்டுக் கொள்ளுவேன்" எனக் குறிப்பிட்டார் பிரதமர்.



மாண்புமிகு பிரதமர் அவர்கள் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்

அதன்பிறகு - ஆளுநர் மாளிகைக் குள் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மாண்புமிகு பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களும் - மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. உபேந் திரா, திரு. முரசொலி மாறன் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.

-இதன்பின், ஆளுநர் மாளிகையை விட்டு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தம் துணைவியாருடன் இரவு 11 மணிக்கு டில்லிக்குப் பயண மானார். விமான நிலையத்தில்-மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக் சாண்டர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் வழியனுப்பி வைத் தார்கள்.

—நமது செய்தியாளர்

டெல்லி சென்றிருந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களைச் சந்தித்து உரையாடினார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் உடன் உள்ளார். (5.2.90)

வேண்டுமென்று குறிப்பிட்டீர்கள். நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களோடு பெரிய திட்டங்களையும் நிறைவேற்றவேண்டுமென்பதை நீங்களும் மறுக்க மாட்டீர்கள்.

''கிராம மக்களுக்கான திட்டங்கள் என்கிற அளவிலே ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்தது என்பது கடந்த கால ஆட்சியாளர்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இப்போது எங்களுக்கு நெய்வேலி விரிவாக்கம்; அதைப்போல 'கேஸ் பைப்லைன்' தென்னகத்திற்கு - குறிப்பாகத் தமிழகத்திற்கு வருகின்ற முயற்சி; இவைகளின் மூலம் மின்சாரப் பெருக்கத்தை எங்களால் மேலும் அதிகமாக ஆக்கமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

''பொதுவாக மத்திய அரசிடம் இருந்து எங்களுக்குக் கிடைக்கும் மத்திய அரசு உதவி என்று எடுத்துக்கொண்டால், 1976-இல் ஐந்தாவது இடத்தில் இருந்தது இப்பொழுது பத்தாவது இடத்திற்குக் குறைந்துள்ளது. இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு திட்டக் குழு முடிவெடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

இப்படிப் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு 1989-90 நடப்பு ஆண்டு திட்டத்தைப் பொறுத்தவரையில் 1,360 கோடி ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டுக்கான ஆண்டுத் திட்டம் அலுவலர்கள் மட்டத்தில் பேசப்பட்டபோது ரூபாய் 1,100 கோடிக்கு மேல் இருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்பட்டிருந்தது.

இன்றைய விவாதத்தின்போது, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மத்திய அரசின் உதவி மேலும் அளிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன், ஆண்டுத் திட்டம் ரூபாய் 1,450 கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். திட்டக் குழு துணைத்தலைவர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் ரூபாய் 1,400 கோடிக்கு மேல் வாய்ப்பு இல்லை என்று முதலிலேயே குறிப்பிட்டாலும் மறுபடியும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில் 'ரூபாய் 1,450 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்படும்' என்று உறுதியளித்தார். இது நடப்பு ஆண்டுத் திட்டத்தைவிட ரூபாய் 90 கோடி அதிகமாகும்.

குடியரசு நாள் விழா நிகழ்ச்சி

சென்னையில் 26.1.90 அன்று 41வது குடியரசு நாள் விழா, மிகச் சிறப்பான வகையில் கொண்டாடப்பட்டது.

கடற்கரையை ஒட்டியுள்ள காமராசர் சாலையில் குடியரசு நாளையொட்டி நடைபெற்ற முப்படை வீரர்கள் முதலானோர் நடத்திய அணிவகுப்பைமேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் க. அன்பழகன் மற்றும் அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

குடியரசு நாள் விழாவினையொட்டி, கடற்கரைச் சாலையில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலை பூச்சரங்களால் அழகுபடுத்தப்பட்டு, மாலையணிவிக்கப்பட்டிருந்தது. அதன் எதிரே தனிமேடை அமைக்கப்பட்டிருந்தது.

ஆங்கே வருகைதந்த மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. அவர்களும் வரவேற்றார்கள். பின்னர் - தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம், கோவா மாநிலங்களின் முப்படைத் தளபதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அங்கே அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பத்தில் சரியாகக் காலை 8 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் - தேசிய கீத இசை முழக்கத்தினிடையே - தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். அதைத் தொடர்ந்து முப்படை வீரர்கள் முதலானோர் நடத்திக் காட்டிய அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக் கொண்டார்.



டெல்லியில் திட்டக்குழுக் கூட்டத்தில் முதல்வர் கலைஞர்

தமிழ்நாடு அரசின் 1990-91-ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டம் குறித்து முடிவு எடுத்திட 5.2.90 அன்று டெல்லியில் திட்டக்குழு அலுவலகத்தில் திட்டக்குழு துணைத்தலைவர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்களுடனும், திட்டக்குழு உறுப்பினர்களுடனும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 2 மணி நேரத்திற்கு மேல் விவாதம் நடத்தினார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடன் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன், முதல்வரின் ஆலோசகர் திரு. குகன், முதல்வரின் செயலாளர் திரு. கே.ஏ. சுந்தரம், நிதித் துறைச் செயலாளர் திரு. என். நாராயணன், திட்டக்குழுச் செயலாளர் திரு. இன்ப சாகரன், திட்டக்குழு உறுப்பினர்-செயலர் திரு. வெங்கட்சுப்பிரமணியம் ஆகியோர் இந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள். திட்டக்குழுவின் சார்பில் பல்வேறு அதிகாரிகளும் இந்த விவாதத்தில் பங்கேற்றனர். தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விரிவான விவாதம் நடைபெற்றது.

விவாதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய திட்டக் குழு துணைத் தலைவர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், விவாதத்திலே பங்குபெற வந்திருந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை வரவேற்று, 'கடந்த காலத்திலே தமிழகத்திலே பல நல்ல திட்டங்களைத் தொடங்கி சிறப்பான முறையிலே செயல்படுத்தியவர் முதல்வர் டாக்டர் கலைஞர்' என்று பாராட்டி, அந்த வளர்ச்சி இடைக்காலத்திலே தொய்வு ஏற்பட்டதைக் குறிப்பிட்டு, 'அதுபற்றி ஆராய வேண்டும்' என்றார்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய திட்டக்குழு உறுப்பினர்களே, உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த நிலைமைகளை எல்லாம் நன்கு உணர்ந்த ஒருவர், இன்று திட்டக் குழுவின் தலைவராக வந்திருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளிக்கிறது. திட்டக் குழு விவாதம், வழக்கம் போல் இல்லாமல், ஒரு மாநிலத்தினுடைய கடந்த கால வளர்ச்சிகள், எதிர்காலத்திலே ஏற்படுத்த வேண்டிய வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து ஆராய்கின்ற வகையிலே முதன் முதலாக நடைபெறுவது பாராட்டுக்குரியதாகும்.

''தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையைத் தயாரித்தவர்களில் நீங்களும் நானும் ஒன்றாக இருந்தோம். அந்த அடிப்படையில் நாட்டின் பிரச்சினைகளை அணுக வேண்டும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. அவர்கள் முதலில் எடுத்துக்காட்டியதைப்போல, தமிழ்நாடு கடந்த காலத்திலே வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிய மாநிலங்களில் ஒன்றாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அந்த வளர்ச்சி இடைக்காலத்திலே இல்லை என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அந்தத் தொய்வுகளை நீக்கிவிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க சில நல்ல திட்டங்களை 1967-ஆம் ஆண்டிலிருந்து நாம் செய்து முடித்திருக்கிறோம்.

''இந்தியாவிலேயே ஹரியானாவுக்கு அடுத்தபடியாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு தரப்பட்டது தமிழ்நாட்டிலே தான். 1967-ஆம் ஆண்டுக்கு முன்பு 2 இலட்சம் பம்ப்செட்டுகளுக்குத்தான் மின் இணைப்பு தரப்பட்டிருந்தது. கழக ஆட்சியில் 1976-க்குள் 8.5 இலட்சம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டு அது உயர்ந்தது. இன்று வரை 13 இலட்சம் பம்ப்செட்டுகளுக்குத் தமிழ்நாட்டிலே மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது.

''குடிநீர் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு இன்றைக்குக் கூடுமானவரையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிராம மக்களுக்குத் தருவதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்பதற்குப் பதிலாக, குடிசைமாற்று வாரியம் என்ற திட்டத்தை இந்தியாவிலேயே நாங்கள் தான் முதன் முதலாகத் தொடங்கினோம். ஆனால் இடையிலே அதிலே மிகப்பெரும் தொய்வு ஏற்பட்டுவிட்டது.

''நிதி ஆதாரங்களில் 50 சதவீதம் கிராமப்புற மக்களுக்குச் செலவழிக்க



முன்னாள் படைவீரர்கள், இரயில்வே பாதுகாப்புப்படை, குதிரைப் படை, சென்னை மாநகர ஆண்-பெண் காவலர், தேசிய மாணவர் படையினர், ஊர்க்காவல் படையினர், செஞ்சிலுவைச் சங்கத்தார், தீயணைப்புப் படையினர், பல்வேறு பள்ளிகள் - கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர், அரசு சீர் திருத்தப் பள்ளி மாணவர்கள் ஆகியோர் இந்த அணிவகுப்பில் பங்கேற்றிருந்தனர்.

அதையடுத்து திருமதி மேரி, திரு. சிவசுந்தரம், அவரது மகன் திரு. சிவகுமார், செல்வன் சம்பத் குமார் ஆகிய நான்கு பேர்களுக்கும் அறிஞர் அண்ணா வீரப் பதக்கங்களையும், தலா ஆயிரம் ரூபாய் பணத்தையும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலைக்குழுவினர் அணிவகுப்பில் - மாணவ, மாணவிகளின் ஆடல் பாடல்களும் தமிழகம் உட்படப் பல்வேறு மாநிலங்களின் இசை-கலைக் குழுவினர் நடத்திய கண் கவர் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அதன்பிறகு, பல்வேறு துறைகளைச் சேர்ந்த 21 அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு அழகாக அமைந்திருந்தது.

விழா முடிவில், நூற்றுக்கணக்கான பலவண்ண பலூன்கள் விண்ணில் பறக்க விடப்பட்டன. இந்தக் குடியரசு நாள் விழா நிகழ்ச்சிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும், நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கண்டு களித்தார்கள்.

குடியரசு நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட - சென்னை - மயிலாப்பூர் குழந்தைகள் மேல் நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் நடத்திய 'இமாலய நடனத்திற்கு' முதல் பரிசு அளிக்கப்பட்டது. இரண்டாவது பரிசு பாங்க்ரா நடனம் ஆடிய எம்.சி.டி.எம். மேல் நிலைப் பள்ளி மாணவிகளுக்கும், மூன்றாவது பரிசு 'மராட்டிய கிராமிய நடனம்' ஆடிய ஜவகர் பாலபவன் குழந்தைகளுக்கும் வழங்கப் பட்டன.

அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார வண்டிகளில் - வேளாண்மைத் துறை அலங்கார வண்டிக்கு முதல் பரிசு, தொழில் துறை அலங்கார வண்டிக்கு இரண்டாவது பரிசு, கைத்தறி - காவல்துறை அலங்கார வண்டிகளுக்கு மூன்றாவது பரிசும் கிடைத்தன.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
இல. இராசேந்திரன்



2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ்க் கல்வெட்டுக்களைத் (தமிழ் பிராமி) தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டறிந்துள்ளது. இக்கல்வெட்டுக்கள் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்தில் கீழப்பூங்குடி என்ற கிராமத்திற்கு அருகிலுள்ள திருமலைக் குன்றில் பொறிக்கப்பட்டுள்ளன. சிவகங்கையிலிருந்து இவ்வூர் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

திருமலைக் குன்றின் வடபுறமுள்ள இயற்கையான குகைத் தளங்களில் சமண முனிவர்களுக்காக உருவாக்கப் பட்ட கற்படுக்கைகள் உள்ளன. கீழ்ப் புறமுள்ள குகைத்தளத்தின் முகட்டில் காணப்பெறும் கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

எக்காடூரன் காவிதிகன் பொறிய பாளிய'

'எக்காட்டூரைச் சார்ந்த காவிதிகன் இக்குகைத்தளத்துப் படுக்கையை உருவாக்கினான்

என்பது இக்கல்வெட்டின் பொருளாகும். மேற்புறமுள்ள குகைத்தளத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் முற்பகுதியும் பிற்பகுதியும் அழிந்து விட்டன. கிடைத்துள்ள எழுத்துக்களை 'வகாரண்டை' எனப் படிக்கலாம்.

இக்கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்களின் உருவ அமைப்பைக் கொண்டு கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கணிக்கலாம்.

முதல் கல்வெட்டில் காணப்படும் 'எக்காடூர்' என்ற சொல் திருப்பரங் குன்றம், பிள்ளையார்பட்டி முதலிய இடங்களில் கிடைத்த பழங் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது. பிள்ளையார்பட்டிக் கல்வெட்டில் குறிப்படப் பெறும் எக்காட்டூர் அவ்வூரைச் சார்ந்த பெருந்தச்சனைக் குறிப்பிடுகிறது. திருப் பரங்குன்றத்துக் கல்வெட்டில் எக்காட்டூரைச் சார்ந்த 'ஈழக்குடும்பிகன்' குறிப்பிடப்பட்டுள்ளான். இதனால் எக்காட்டூர் என்ற ஊர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஊராக விளங்கியிருந்திருக்கிறது என்பதை அறிய முடி கின்றது.

'காவிதி' என்ற சொல் சங்க காலத்தில் அரசால் வழங்கப்பட்ட பட்டப் பெயர்களுள் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. சித்தன்னவாசலில் கிடைத்த பழந்தமிழ்க் கல்வெட்டிலும் 'காவிதி' என்ற சொல் 'ஈதென்' என்பவன் பெயரோடு சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது. சிறப்பு வாய்ந்த முறையில் பணி செய்த அரசியல் அதிகாரிகளுக்குக் 'காவிதி' என்ற பட்டம் வழங்கப்பட்டதைச் சங்க இலக்கியம் மூலம் அறியலாம்.

வரலாற்றுப் பெருமை படைத்த இக்கல்வெட்டுக்களைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த மதுரைப் பிரிவு அலுவலர்கள் திருவாளர்கள் சு. இராசகோபால், வெ. வேதாசலம், சொ. சாந்தலிங்கம் ஆகியோர் இப்பகுதியில் கல்வெட்டாய்விற்குச் சென்றபோது கண்டறிந்தனர்.

இக்கல்வெட்டுக்கள் அமைந்த திருமலைக் குன்றின் தென்புறமுள்ள குகைத் தளங்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறை ஓவியங்களும் உள்ளன. செங்காவி நிறத்தில் தீட்டப்பட்டுள்ள இவ்வோவியத்தில் கம்புகளைக் கொண்டு சண்டையிடும் மனிதர்களும், மான் போன்ற விலங்கினங்களும் காணப்படுகின்றன.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இப்பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்களையும் ஓவியங்களையும், பேணிக் காப்பதற்குரிய நடவடிக்கைகள் தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்டைத் தமிழ்க்கல்வெட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது - திருமலை.



இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கு கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் செய்தித்தாள்களான தி டைம்ஸ், கார்டியன், இன்டிபென்டன்ட், தி டெய்லி மிரர், தி டெய்லி டெலிகிராப் போன்ற பத்திரிகைகளில் வந்த தலையங்கத்தையும், தலைப்புச் செய்திகளையும் அதில் வெளியாகியிருக்கும் புகைப்படங்களைப் பற்றியும் உலகெங்கும் இருக்கும் நேயர்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு நாளில் இரண்டு தடவைகள் சுருக்கமாக பி.பி.சி.யில் விமர்சிக்கிறார்கள். மேலே சொன்ன பத்திரிகைகளைப் படிக்க வாய்ப்பில்லாதவர்கள் இந்தச் செய்தி மூலம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

பி.பி.சி. ரேடியோவைக் கேட்பவர்கள் எந்த கிராமத்தில் இருந்தாலும் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே உலக நாடுகளைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் ஒரு படப்பிடிப்பைப் பாாப்பதுபோல் அறிந்து கொள்ள முடியும். ஒரு தேசத்தை, அங்கு ஏற்படும் அரசியல், பொருளாதார, சமூக மாற்றத்தைக் குறித்து, வாரத்தில் மூன்று நாட்கள் ஒலிபரப்புகிறார்கள். இந்தியாவில் ஏற்படும் மாற்றங்களைக் கடல் கடந்த நாடுகளில் வாழும் இந்தியர்கள் பி.பி.சி. வாயிலாகக் கேட்கும்பொழுது வியப்படையாமல் இருக்க முடியுமா? இந்தச் செய்தியை 'தி வோர்ல்ட் டுடே', 'அசைன்மென்ட்' என்ற நிகழ்ச்சித் தலைப்புகளில் வாரத்திற்கு மூன்று நாட்கள் கேட்கலாம்.

பி.பி.சி.யில் 'அவுட் லுக்' என்று ஒரு நிகழ்ச்சியை வானொலி நேயர்கள் மிகவும் சுவாரசியமாகக் கேட்கிறார்கள். வாரத்தில் ஐந்து நாட்கள் இந்த நிகழ்ச்சி உண்டு. பரபரப்பான செய்திக்கு உரியவர்களை நேரிடையாகப் பேட்டி கண்டு ஒலிபரப்புகிறார்கள். நேயர்களின் நெஞ்சில் உலவும் கேள்விகளைத் தொடுத்துப் பதிலை வரவழைக்கும் பாங்கு எவர் மனத்தையும் ஈர்க்கும். இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் திரு. ஜான் டிட்மார்ஸ் என்பவரும், திருமதி பார்பரா மேயர்ஸ் என்ற அம்மையாரும் ஆவர்.

பொதுச் சந்தையில் ஒரு பொருளின் விலை நிர்ணயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? ஒரு பொருளின் விலையை இங்கிலாந்து விலையை வைத்தே உலகெங்கும் நிர்ணயிக்கிறார்கள். ஆகவே தங்கம், தாமிரம், பிளாட்டினம் முதல் காப்பி, டீ, சர்க்கரை வரை என்ன விலையென்றும், உலக நாணயங்களான டாலர், பிரெஞ்ச்-ப்ராங்க், ஜெர்மன் டாட்ச் மார்க், ஜப்பான் யென் போன்ற நாணயங்களின் மதிப்பையும் திங்கள் முதல் சனிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் இருமுறை ஒலிபரப்புகிறார்கள். வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் இது உதவுகிறது.

பி.பி.சி. டைரக்டர் ஜெனரல் திரு. மைக்கேல் செக்லண்டு அவர்களுடன் திரு. மார்மருயுக் அல்ஸி.

அமெரிக்காவிலிருந்து கடிதம் (லெட்டர் ப்ரம் அமெரிக்கா) என்ற தலைப்பில் ஒலிபரப்பாகும் பகுதி நமது சிந்தனைக்கு விருந்து படைக்கிறது. இதைச் சனிக்கிழமை மாலை நேரங்களில் கேட்கலாம். வெளிநாட்டுச் செய்தி முகவர்களின் சிறப்பு நிகழ்ச்சி இது.

செவிக்கு விருந்து

எல்லா நாடுகளிலும் இசைக்கு ஒரு சிறப்பு உண்டு. அதுபோல் மேற்கத்திய சங்கீதத்திற்குச் சில மணித்துளிகளை ஒதுக்கி இருக்கிறார்கள். சில நாட்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எ ஜாலி குட் ஸோ-சனிக்கிழமை, எனிதிங் கோஸ்-ஞாயிறு, மல்டிடிராக்-திங்கள், புதன், வெள்ளிக்கிழமை, ஜான் பீல்-செவ்வாய்க்கிழமை என்று நாட்களை ஒதுக்கி அந்த நாட்களில் பால் மெக்கார்டனி, மைக்கேல் ஜாக்சன், ஸ்டீவி ஒண்டர், டீனா டர்னர் போன்ற உலகப் புகழ்பெற்ற இசைவாணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இசைத்தட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறார்கள், செவிக்கினிய இசை கேட்பவர்களுக்கு, இவை பெரும் விருந்து.

பி.பி.சி. நேயர்களுக்கு ஒரு நல் வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்கள் விரும்பிக் கேட்கும் ஒரு இசைத் தட்டின் பெயரை எழுதி, உங்கள் முழு முகவரியையும் எழுதி, ஜாலி குட் ஷோ, பி.பி.சி. புஷ் ஹவுஸ் இலண்டன் என்ற முகவரிக்கு எழுதி அனுப்பினால் அந்த இசைத் தட்டு இசையை ஒரு குறிப்பிட்ட நாளில் ஒலிபரப்பி, நீங்கள் கேட்கும்படிச் செய்கிறார்கள். அது மட்டுமல்ல. 15 நாட்களுக்குள் ஒரு 'டி-சர்ட்' அன்பளிப்பாக அனுப்புகிறார்கள். அதில் பி.பி.சி. என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கும். உலகின் புகழ் பெற்ற முதல் இருபது (Top-Twenty) இசைத்தட்டுகளின் தொகுப்பை வாரத்திற்கு ஒரு முறை ஒலிபரப்பக் கேட்கலாம்.

நீங்கள் உங்கள் நண்பருக்கோ, அல்லது உறவினருக்கோ பிறந்த நாள், திருமண நாள் வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமானால் அதையும் பி.பி.சி.க்கு எழுதி அந்த நாளில் வாழ்த்துத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டால், தெரிவிக்கிறார்கள். இப்படி ஒரு மகிழ்ச்சியான ஏற்பாடு அங்கே உண்டு.

இசையில்தான் எத்தனை வகைகள்? ஜாஸ், சாஸ்திரிய சங்கீதம், சேம்பர் மியூசிக், கிராமிய நாட்டுப் பாடல்கள், பாப் சாங், ராக் மியூசிக், டிஸ்கோடேக் என்ற நடனமுறை இசை ஆகிய எல்லா வகைச் சங்கீதங்களையும் கேட்கலாம். இசைத் தட்டைப்போட்டு நடனமாட வேண்டுமா? அதற்கும் வசதியாக இசைத் தட்டுகளை ஒலிபரப்புகிறார்கள். நீங்கள் வீட்டில் இருந்தபடியே நடனமாடலாம்.

விளையாட்டு நேயர்களுக்காக டென்னிஸ், பேட்மின்ட்டன், கூடைப் பந்து, கால்பந்து, பேஸ்பால், ஸ்கேட்டிங், கோல்ப், குதிரைப் பந்தயம் மற்றும் பல விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய வர்ணனைகளை பி.பி.சி. மூலம் ஒலிபரப்புகிறார்கள். ஸ்போர்ட்ஸ் இண்டர்நேஷனல்-செவ்வாய்க்கிழமை, ஸ்போர்ட்ஸ் ரவுண்ட் அப் - ஞாயிறு, ஸ்போர்ட்ஸ் ஒர்ல்ட்-சனிக்கிழமைகளில் கேட்கலாம். விளையாட்டுப் பிரியர்களுக்கு இது மகிழ்ச்சி அளிக்கிறது. பி.பி.சி.யில் குட் புக்ஸ்(Good Books), புக்ஸ் சாய்ஸ் (Books Choke) என்ற தலைப்புகளில் புத்தக விமர்சனப் பகுதி ஒவ்வொரு திங்கட் கிழமையும் உண்டு.

புதிய மருந்துகளின் கண்டுபிடிப்புகள், அறுவைச் சிகிச்சையில் புதிய சாதனங்கள், இருதய, சிறுநீரக உறுப்பு மாற்றங்கள், இதில் முன்னேற்றங்கள், ஆகியவை, வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 'சயன்ஸ் இன் ஆக்சன்' என்ற தலைப்பில் ஒலிபரப்பப்படுகின்றன. இவை தவிர இளைஞர்களில் படிப்பு, வெளிநாட்டுப் பயணம், மேம்பட்ட வாழ்க்கை, முன்னேற உதவும் வழிகள் பற்றியும் தொகுத்துக் கூறுகிறார்கள். இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பயனுள்ள செய்திகளை மெகமிக்ஸ் என்ற பகுதியில்

தந்தி: 'சென்டெக்ஸ்' தொலைபேசி: 232, 426

ஒவ்வொருவரும் தேர்ந்தெடுப்பது ஒவ்வொருவரும் விரும்புவது ஒவ்வொருவரும் உபயோகிப்பது

சென்டெக்ஸ்

கைத்தறித் துணிகள்!

படுக்கை விரிப்புகள்!
தலையணை உறைகள்!
அலங்காரத் துணிகள்!
டவல்கள், டெர்ரிடவல்கள்!
மேஜை விரிப்புகள்
பாலியஸ்டர் சூட்டிங்!
சர்ட்டிங், வேஷ்டிகள்!
மற்றும் டெர்ரிடசார் துணிகள்!

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்:

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், No. K.K. 885

P.B. No.32

M.P. நாச்சிமுத்துமார்ளிகை - சென்னிமலை - 638 051

G.S. பாலசுப்ரமணியன்
துணை இயக்குநர்/தனி அலுவலர்

சென்டெக்ஸ் ஷோ ரூம்கள்:

- 811, அண்ணாசலை, சென்னை-600 002
- 147, ஈஸ்வரன் கோவில் வீதி, ஈரோடு-638 001
- 13, மேலச்சித்திரை வீதி, மதுரை-625 001
- 489, பெரிய கடை வீதி, திருச்சி-620 008
- எம்.ஜி.ஸி. மார்க்கட், சிராளா-523 155
- 7-7-44, ஸ்ரீ வாசவி தர்மசாலா ரோடு, இந்துப்பூர்-515 201
- 27-21-53 காளீஸ்வரராவ் ரோடு, கவர்னர் பேட், விஜயவாடா-520 002
- 125, அருணாசல ஆசாரி வீதி, சேலம் - 636 001
- 445, S.G.R. காம்ப்ளக்ஸ், ஒப்பணக்கார வீதி, கோவை-641 001
- 7-9-7/1 மெயின் பஜார், ஏலூரு-534 001
- 191, கௌரம்மாஸ், ஹாஸ்டல் சந்து, சிக்பேட்டை, பெங்களூர்-560 053

செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக் கிழமை களில் ஒலிபரப்புகிறார்கள்.

வேளாண்மைத் துறை குறித்து 'பார்மிங் வோர்ல்ட், 'நேச்சர் நவ்' என்ற தலைப்பில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் - நம் நாட்டில் ஒலிபரப் பாகும் 'உழவர்களுக்கு ஒரு வார்த்தை', 'வீடும் வயலும்' போன்ற நிகழ்ச்சி களுக்கு ஒப்பானவை யாகும். பி.பி.சி. யில் ஒரு புதுமை என்ன வென்றால் புதுப்புது ஒலிபரப்பு டிரான்ஸ் மீட் டர்கள், கம்ப்யூட்டர் முறையில் இயங் கும் வானொலிப்பெட்டி ஆகியவற் றைப் பற்றி வாரத்திற்கு ஒருமுறை அறிவிக்கிறார்கள். ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் வேவ் கைடு என்ற நிகழ்ச்சியில் இவற்றைக் கேட்கலாம்.

கடல்வாழ் மக்களுக்கு

கடல்வாழ் மக்களுக்கு மட்டும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஒலிபரப்பு கிறார்கள். செவன் சீஸ் (Seven Seas) என்னும் தலைப்பில் இந்நிகழ்ச்சிகள் வெள்ளிக் கிழமை களில் ஒலிபரப்பப்படுகின்றன. மாலுமி களுக்குப் பயன்தரும் செய்தி இது. எந்தக் கப்பல் எங்கு மூழ்கிக் கொண் டிருக்கிறது? கடலில் எங்கே/ கொந் தளிப்பு அதிகம்? புயலும், சூறாவளியும் எங்கே சுழன்றடிக்கிறது? என்பதை இதற்குரிய தயாரிப்பாளர்கள் செய்தி யாகத் தருகிறார்கள், மாலுமிகள் கவனத்தை இது கவர்ந்து, ஆபத்துக் களைச் சமாளிக்க உதவுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக உலகத் தலைவர்களிடையே நேரடித் தொலை பேசி மூலம் உலகின் பல பாகத்திலிருக் கும் பி.பி.சி. நேயர்கள் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி அவர்களின் நேர்முகக் கேள்விகளின் பதிலையும் ஒலிபரப்புகிறார்கள். அதற்கு 'வோர்ல்ட் போன்-இன் சொர்வீஸ்' என்று பெயர். மற்றொன்று 'ஓப்பன் ஏர்' என்றழைக் கப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இங்கி லாந்திலுள்ள மான்செஸ்டர் நகரி லிருந்து ஆண்டுக்கு ஒருமுறை ஒலி பரப்பப்படும் இந்நிகழ்ச்சியில் உலகச் சேவையின் நிர்வாக இயக்குனர் திரு. ஜான் டியூசர் அவர்களே நேயர்களுக்கு நேர்முகமாகப் பதில் அளித்து வருகிறார்.

இங்கிலாந்தில் கிறிஸ்துவ மதம் பரவியிருப்பதால் கிறிஸ்துவர்களுக்காக ஒவ்வொரு ஞாயிறு, திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் உலகப் புகழ் பெற்ற தேவாலயங்களில் நடைபெறும் பிரார்த்தனை வழிபாடுகளை நடத்து கிறார்கள். இன் பிரெய்ஸ் ஆப் காட் (In Praise of God) என்ற நிகழ்ச்சியை இந்திய நேரப்படி ஒவ்வொரு ஞாயிறு மாலை நான்கு மணிக்கும், இதன் மறு ஒலிபரப்பைத் திங்கட்கிழமை காலை 6 மணிக்கும் ஒலிபரப்புகிறார்கள். மதச் சார்புடைய கிறிஸ்துவ நேயர்களுக்கு இது மனங்கவரும் ஒலிபரப்பாகும்.

திரு. சங்கர மூர்த்தி அவர்களுடன் கட்டுரை ஆசிரியர்.

நியூ ஐடியாஸ் என்ற சிறப்பு நிகழ்ச்சியைச் செவ்வாய்க்கிழமைகளில் ஒலிபரப்புகிறார்கள். தொழில் சம் பந்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் பற்றித் தயாரிப்பாளர்களைக் கொண்டே விவரமாகவும், விளக்கமாகவும் சொல்லு கிறார்கள். உலகெங்கிலுமுள்ள பய னாளிகள் இதனால் பெரிதும் பயன் அடைகிறார்கள். நேயர்கள், புத்தம் புதுச் சிந்தனைகளைப் பெறுகிறார்கள்.

நீங்கள் எந்த நாட்டு ஒலிபரப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்ற சந்தேகம் தோன்ற இடமில்லாமல் 'இப்போது பி.பி.சி. வானொலியைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்' என்று அடிக்கடி நினைவுபடுத்துகிறார்கள். பி.பி.சி. யின் ஒலிபரப்பு, இந்திய நேரப்படி காலை 5-30 மணிக்குத் (ஜி.எம்.டி. நள்ளிரவு 00.00 மணிக்கு) தொடங்கி மறுநாள் காலை 5.30 மணி வரையில் தொடர்ந்து ஓய்வின்றி ஒலிபரப்பப்படுகிறது. அடுத்து என்ன நிகழ்ச்சி, அடுத்த வாரம் என்ன நிகழ்ச்சி என்று, முன் கூட்டியே அறிவித்து நம்மை ஒவ் வொரு நிகழ்ச்சியையும் கேட்கத் தூண்டுகிறார்கள். "லண்டன் காலிங்", டிபார்ட்மெண்ட்-பி.பி.சி, 76 ஜி, புஷ் ஹவுஸ், இலண்டன்" என்ற முகவரிக்கு எழுதினால் ஒரு மாதத்திற்குரிய நிகழ்ச்சிகளை வண்ண மலராக அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பி.பி.சி. வானொலி ஒரு பொழுது போக்குச் சாதனம் என்ற நிலையோடு நிறுத்திக் கொள்ளாமல் அறிவுப் பசிக்கு ஆக்கப் பூர்வமான மருந்தாக வும், விருந்தாகவும் அமைந்து, நம்மை ஆரோக்கியமான மனிதர்களாக உரு வாக்குகிறது என்பதை மறந்து விடக் கூடாது. உலக மொழிகளில் ஒன்றான ஆங்கிலம் கற்றவர்களுக்கு பி.பி.சி. அமுதக் கலசம், அமுத சுரபி என்று சொன்னால் அது மிகையாகாது.

பி.பி.சி. உலக சேவை 24 மணி நேரமும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சி களை 6050, 7325, 9600, 9635, 9915 போன்ற சிற்றலை வரிசைகளில் கேட்கலாம்.

அண்மையில் பி.பி.சி. உள்ளிட்ட முன்னாள் பிரிட்டிஷ் வெளிவிவகார காமன்வெல்த் அமைச்சரும், தற் பொழுது உதவிப் பிரதமராகப் பொறுப்பேற்றிருப்பவருமான சர் ஜாப்ரி ஹௌ (Geoffrey Howe)அவர்கள் கூவம் கால்வாயைச் செப்பனிட்டு, சென்னைச் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சீரமைக்க பிரிட்டிஷின் சிறப்புத் திட்ட உதவி யைத் தமிழக முதல்வர் கலைஞரிடம் நேரில் கொடுக்க சென்னைக்கு வந்திருந்தார்.

தமிழோசை

முதன்முதலாக 1941-ஆம் வருடம் ஜூன் திங்கள் பி.பி.சி. உலக சேவை யின் ஒரு பகுதியாகத் "தமிழோசை" என்ற பெயரில் ஒலிபரப்பைத்தொடங் கியது. இதில் பெரும் பங்காற்றியவர் களில் திரு. சிவபாதசுந்தரம், சுந்தா என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. சுந்தரலிங்கம் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

தமிழோசை என்ற தலைப்புச் சூட்டியவர் சிவபாத சுந்தரம் ஆவார்.

தமிழ் எனும் தீபம் ஏந்தி, தடை யிலா வான்வெளியில் கமழ்கின்ற ஒளித்தென்றல், காலத்தின் விந்தையாக மலர்ந்த பி.பி.சி. தமிழோசை நிகழ்ச்சி, ஞாலத்தை இணைக்கும் நற்பாலமாக அமைந்தது நமக்கோர் வரப்பிரசாதமாகும். பி.பி.சி. யில் தமிழோசை ஒலிபரப்பு, திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் இந்திய, இலங்கை நேரப்படி இரவு 9 மணி முதல் 9.30 மணி வரை 25, 41, 49 மீட்டர் சிற்றலைகளில் உலகெங்கும் வாழும்

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனப் பாடினார் பாரதியார். பி.பி.சி. (பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்) 'தமிழோசை' இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகி, உலக நாடுகளுக்கெல்லாம் பரவி வருகிறது.

தேம்ஸ் நதிக் கரையிலிருந்து
தேடிவரும் ஓசை
தேன் தமிழில் தேடி பல
பாடி வரும் ஓசை!

ஆங்கிலத் தாய் நாட்டிலின்று
அன்னைத் தமிழ் முழங்கிடவே
ஓங்கு புகழ் பி.பி.சி.
ஒலி செய்யும் நாளிதுவே

—சங்கர்

பி.பி.சி.யின் உலக சேவை

க.ந. நாகராஜன்
தமிழோசை-செல்வத்துரைவர்

உலக நாடுகளனைத்தையும் ஒரு குடையின் கீழ் நிறுத்தி அரசாட்சி செய்து வந்த இங்கிலாந்துப் பேரரசு இன்று குறிப்பாக ஒலிபரப்புத் தொடர்பு, பி.பி.சி. வானொலி, காட்சி வானொலி (தொலைக்காட்சி) வழியாக ஒப்பற்ற உலக சேவை புரிந்து வருகிறது.

இயல், இசை, நாடகம், இன்றியமையாத உலகச் செய்திகள் யாவும் அமிழ்தென இலங்க அமைந்தது இலண்டன் பி.பி.சி. ஆகும். 1927-ஆம் வருடம் செம்ஸ்போர்டு என்னும் நகரத்துக்கு அருகில், பெயர் பெற்ற உலகப் புகழ் எய்திய மார்க்கோனி தொழிற்சாலைக்குப் பக்கத்தில் முதன்முதலாக ஆய்வு முறையிலே ஒலிபரப்பை வெள்ளோட்டமாக - லார்ட் ரீத் என்பவர் துவக்கினார். துவக்கக் காலத்திலே, வாரத்துக்கு ஐந்து நாட்கள் ஒலிபரப்பி வந்தார்கள்.

மேற்கத்திய வல்லரசுகள் அனைத்தும் உலகம் முழுவதும் தங்களுக்குச் சொந்தமாக காலனி நாடுகளை வைத்திருந்த காலகட்டம் அது. "டச்சு" நாட்டில் அவர்கள் காலனிக்காகத் தனி ஒலிபரப்பைத் துவக்கினார்கள். அதைப் போலவே பிரெஞ்சு ஏகாதிபத்தியம் தனக்குச் சொந்தமான தனி ஒலிபரப்பைத் துவக்கியது. கனடா, ஆஸ்திரேலியா, நியுஸிலாந்து போன்ற நாடுகள் அப்போதே தன்னாட்சி பெற்றுத் தங்களுடைய தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய தன் காரணமாக ஒலிபரப்பை ஒரு முக்கிய அம்சமாகக் கருதிச் செயல்பட்டன.

பி.பி.சி. எம்பயர் சர்வீஸ்

நைஜீரியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகள் சுதந்திரம் கேட்டுப் போராடிக் கொண்டிருந்த நேரம். இந்தக் காரணங்களால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழுள்ள நாடுகளுக்குத் தன்னுடைய தொடர்புகள் அதிகரிக்க வேண்டும் என்பதன் நிமித்தமாக இந்த பி.பி.சி. எம்பயர் சர்வீஸ் விரிவாக்கப்பட்டது. பிறகு, இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்கியது. இதற்குப் பிறகு, மத்தியக் கிழக்கு தேசங்களுக்காகவும் ஒலிபரப்பைத் துவங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுவாக இதுவரை எம்பயர் சர்வீஸ் என்பது ஆங்கிலத்தில் தான் தனது ஒலிபரப்பை நடத்தி வந்தது. 1932-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆங்கிலத்தைத் தவிர, இத்தாலி, மற்றும் லேட்டின் அமெரிக்கா, பிரேசில் போன்ற நாடுகளுக்கு அவர்களுடைய மொழிகளிலேயே தனித் தனியாக உலக சேவை (வொர்ல்டு சர்வீஸ்) விரிவாக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்கியவுடன் இந்த ஒலிபரப்பின் அவசியம் அதிகமாகி, மேலும் வளர்ந்து, பன்மடங்காகப் பெருகி, உலகத்திலேயே நம்பக்கூடிய செய்திகளைக் கொடுக்கக்கூடிய ஒரே நிறுவனம் பி.பி.சி. என உலக நாட்டு மக்கள் கருதும் நிலைக்கு வளர்ச்சி பெற்றது. அப்போதுதான் எம்பயர் சர்வீஸ் என்னும் நிலைமாறி 'வொர்ல்ட் சர்வீஸ்' என்னும் பெயர் மாற்றம் அடைந்தது. இப்படித் தொடங்கப் பெற்ற இலண்டன் பி.பி.சி. உலக சேவையானது, ஆங்கில ஒலிபரப்புக் தான் பொன்விழாவை அண்மையில் கொண்டாடியது. அதே போல் அரபிக் ஒலிபரப்பும் பொன்விழாக் கண்டது.

இந்த பி.பி.சியின் ஒப்பற்ற உலக சேவை 37 மொழிகளில் உலகமெங்கும் ஒலித்து வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில் வங்காளம், உருது, இந்தி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் தினமும் ஒலிபரப்பு நடைபெற்று வருகிறது. இந்த உலக ஒலிபரப்புச் சேவையை உலக நாடுகள் அனைத்துக்கும் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும் அளிக்கும் பொருட்டு, ஒலிபரப்பு சக்தியை அதிகரித்து, தெளிவாகக் கொடுக்கக்கூடிய வகையிலே பல வெளி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக, சைனா, செசல்ஸ், ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் கோடியிலுள்ள லுசோத்தோ மற்றும் பிரிட்டனில் பல இடங்களிலும், வட அமெரிக்கா, தென் அமெரிக்காவுக்கும் இடையிலும் புதிய சக்தி வாய்ந்த டிரான்ஸ்மீட்டர்கள் பொருத்தப்பட்டன.

இந்த உலக சேவையை 24 மணி நேரமும் உலகத்திலுள்ள எந்தப் பகுதியிலுள்ள மக்களும் நன்கு கேட்க, பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. 'சேட்லைட்' போன்ற செயற்கைக்கோள் வழியாக மிக வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் வானொலி இன்று காட்சி வானொலியாகவும் (தொலைக்காட்சி) விரிவடைந்து, இங்கிலாந்தில் தற்போது இயங்கி வரும் சானல்-4 மற்றும் இதரஒலி அலை வரிசைகளைத் தவிர உலகெங்கும் ஒளிபரப்ப, தற்போதுள்ள வெளி நாட்டுச் சேவையின் நிர்வாகத்தின் பெருமுயற்சியால் அதற்கான பணிகள் நிறைவடைந்து ஆய்வு முறையில் முதல் ஒளிபரப்பையும் நடத்தி, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் பண அனுமதிக்காகக் காத்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உண்மையை உண்மையாகவே உரைப்பது

உலக சேவையை ஒரு கண்ணாகவும் (வானொலி), காட்சி வானொலி (தொலைக்காட்சி)யை ஒரு கண்ணாகவும் கொண்டு செயல்பட்டு வரும் பி.பி.சி. நிறுவனத்திற்கு ஜான்டியூஸர் என்பவர் மேலாண்மை இயக்குநராக இருக்கிறார். பி.பி.சியின் முதல் டைரக்டர் ஜெனரல் ரீத்பிரபு காலம் தொட்டு ஜெரால்டு, மான்சில், ஹியூ கிரீன் போன்ற திறமை மிக்க நிர்வாகிகளின் காலம் முதல் இன்று தலைமைப் பொறுப்பிலுள்ள திரு. மைக்கேல் செக்லேண்ட் வரை பி.பி.சி. கடைப்பிடிக்கும் ஒரே கொள்கை "செய்திகளைப் பாரபட்சமின்றி உண்மையை உண்மையாகவே உலகுக்கு உரைப்பது" என்பதே யாகும். இதே கருத்தையே தற்போது உள்ள வெளிநாட்டுச் சேவைக்குப் பொறுப்பாளராக இருக்கும் ஜான் டியூஸர் அவர்கள் மிக அழகாகச் சித்திரித்திருப்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அவர் கூறுகிறார்: "பாதகம் ஏற்பட்டாலும், அல்லது சாதகம் ஏற்பட்டாலும் பி.பி.சியின் ஒலிபரப்பு உண்மையையே பிரதிபலிக்கும்" என்பதாகும். இதனால் பி.பி.சி. நிறுவனம் பல சந்தர்ப்பங்களில் பல சங்கடங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது.

1988-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் கருத்து வேற்றுமையின்றி பி.பி.சி ஒலிபரப்பின் சிறப்பினைப் பாராட்டி அது நோபல் பரிசு பெறுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டது, இதற்களிக்கப்பட்ட தனிப்பட்ட கௌரமாகும்.

தன்னாட்சி பெற்ற நிறுவனம்

இந்த நிறுவனத்தினுடைய செலவுக்கான நிதியை பிரிட்டிஷ் பாராளுமன்றம் வழங்கும் நிதி ஒதுக்கீடு மூலமாகவும், ஒளி - ஒலிப்பெட்டி விற்பனையில் விதிக்கப்படும் வரிகள் மூலமாகவும் ஈடுகட்டுகின்றனர். அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலே கூட சுமார் 200க்கும் மேலான அந்த நாட்டு ஒலிபரப்பு நிலையங்கள் பெரும்பாலான பகுதியை பி.பி.சி.யின் மறு ஒலிபரப்பு நிலையங்களாகவே ஆக்கிக்கொண்டு செயல்படுகின்றன என்பதைக் கேட்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? எந்த உள்நாட்டு ஒலிபரப்பிலும் பி.பி.சி. செய்தியை மேற்கோள் காட்டியே தனது அறிவிப்பிற்கு ஒரு முக்கியத்துவத்தைத் தேடிக் கொள்கின்றது என்பது நாம் அன்றாடம் பார்க்கும் உண்மையாகும். எப்படி இந்த மகத்துவம், பி.பி.சிக்கு மட்டுமே கிடைத்திருக்கின்றது? இதற்கு முக்கியமான காரணம் இந்த நிறுவனம் தன்னாட்சி பெற்றது.

பிரிட்டிஷ் அரசி எலிசபெத்.

ஆங்கில ஒலிபரப்பின் நிகழ்ச்சி விவரங்கள்

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் செய்திச் சேவை செய்து கொண்டு வருகிறது இலண்டன் பி.பி.சி. இந்த நிலையத்தில் சுமார் 25 ஆயிரம் பேர் பல்வேறு துறைகளில் பணியாற்றுகிறார்கள். வட்ட வடிவமைப்பிலுள்ள மாபெரும் செய்தி அறை இங்கே உள்ளது. உலகெங்கிலுமுள்ள செய்தி முகவர்கள் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அன்றாட நிகழ்ச்சிகளைச் சூடாகவும், சுவையாகவும் இலண்டன் புஷ் ஹவுஸ் கட்டடத்தில் உள்ள இந்தச் செய்தி அறைக்கு இடைவிடாமல் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் சுமார் 18 தடவைக்கு மேலாக உலகச் செய்திகளையும், நான்கு முறை நியூஸ் ரீல், செய்தித்திரட்டு மற்றும் செய்தி முகவர்களுடைய சிறப்புச் செய்திப் பிரிவு என்று பல வகையில் ஒவ்வொரு நிமிடத்திலும் உலகத்தின் பல பாகங்களிலிருந்து வரும் செய்திகளைத் திரட்டி, நேயர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது பி.பி.சி. செய்தி முகவர்கள் தொலைத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி உலகின் மூலை முடுக்குகளிலிருந்து அனுப்பும் செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டு, உலகக் கண்ணோட்டத்தில் 37 முக்கிய மொழிகளில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. இது தவிர இச்செய்திகளை அந்த நாட்டுச் செய்தி முகவரிடமிருந்து நேரிடையாகத் தொலைபேசியில் பதிவு செய்து, செய்திச் சுருளாக நாள் ஒன்றுக்கு மூன்று முறை நியூஸ் ரீல் செய்தியாக வழங்குகின்றது. நாள் முழுவதும் ஒலிபரப்பப்படும் 'செய்தி நேரம்' (நியூஸ் ஹவர்) என்ற தலைப்பிலும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

12678	12831	12875	12924	12944	13018	13035	13063	13095	13147	13172	13204	13220	13263	13270
13278	13349	13351	13410	13442	13452	13486	13535	13590	13596	13608	13689	13838	13888	13962
14001	14026	14027	14056	14101	14182	14265	14306	14440	14453	14523	14541	14657	14727	14784
14823	14888	14920	14940	14967	14971	14976	15011	15074	15165	15209	15213	15217	15233	15262
15279	15319	15330	15332	15354	15409	15434	15441	15471	15557	15565	15639	15806	15817	15922
15995	16005	16006	16156	16244	16361	16430	16472	16634	16646	16672	16697	16770	16879	16975
17217	17251	17272	17300	17301	17306	17317	17388	17411	17476	17495	17499	17589	17624	17638
17658	17727	17753												

குற்றவியல் நீதிமுறைத்தேர்வு பாகம்-III

293	323	737	738	870	981	1022	1187	1258	1277	1408	1464	1569	1913	1952
2419	2744	3002	3041	3088	3225	3485	3511	3894	3963	4018	4116	4121	4128	4177
4216	4275	4477	4484	4503	4659	4668	4821	4831	4849	5110	5256	5271	5511	5786
5899	5995	6110	6215	6224	6258	6470	6493	6742	6796	6847	7149	7368	7381	7435
7443	7581	7639	7665	7789	7961	8010	8039	8106	8199	8712	8767	9184	9549	9991
10033	10207	10310	10331	10354	10361	10466	10469	10550	10560	10655	10731	10877	10879	10961
11071	11085	11112	11134	11167	11233	11243	11365	11473	11737	11968	12059	12181	12406	12520
12586	12814	12903	12909	12927	13007	13065	13067	13074	13163	13181	13222	13258	13281	13290
13429	13457	13480	13488	13496	13508	13511	13908	13945	14018	14396	14501	14842	14905	15108
15318	15405	15440	15446	15632	15737	15748	15774	16141	16453	16477	16626	16719	16903	17372
17517	17580	17627												

சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-II

66	69	156	179	200	293	323	365	375	395	469	523	526	533	569
579	590	695	712	734	746	815	830	844	863	886	937	1059	1067	1081
1138	1183	1464	1493	1576	1642	1647	1667	1684	1685	1725	1749	1811	1816	1874
2091	2109A	2481	2494	2520	2547	2600	2629	2658	2664	2667	2688	2735	2753	2785
2788	2805	2815	2934	2940	2986	3064	3076	3088	3147	3257	3329	3346	3359	3368
3380	3408	3423	3439	3441	3483	3533	3543	3575	3613	3615	3623	3664	3669	3671
3680	3734	3768	3798	3837	3858	3865	3875	3887	3899	3912	3936	3970	3974	3996
4040	4074	4077	4084	4087	4101	4104	4115	4120	4142	4163	4166	4167	4169	4170
4177	4284	4295	4323	4355	4361	4363	4365	4372	4374	4375	4390	4404	4441	4447
4458	4480	4484	4488	4530	4536	4558	4564	4612	4631	4638	4666	4679	4694	4702
4712	4720	4733	4742	4756	4761	4787	4809	4825	4856	4863	4871	4872	4924	4946
4955	4996	5005	5007	5008	5063	5088	5103	5131	5139	5143	5224	5238	5271	5292
5371	5372	5400	5404	5408	5410	5439	5446	5473	5491	5515	5539	5547	5567	5591
5608	5612	5614	5647	5651	5688	5721	5728	5737	5741	5752	5765	5772	5779	5804
5811	5846	5902	5913	5923	5937	5941	5971	5972	5997	6004	6006	6047	6133	6137
6140	6145	6148	6194	6212	6216	6229	6245	6280	6335	6343	6360	6362	6386	6389
6400	6403	6415	6430	6439	6456	6462	6465	6478	6527	6528	6554	6558	6588	6607
6662	6669	6687	6797	6799	6800	6814	6826	6829	6838	6848	6852	6867	6877	6902
6936	6946	6995	6997	7014	7043	7053	7067	7117	7120	7161	7187	7188	7193	7206
7211	7228	7231	7235	7250	7286	7300	7320	7326	7339	7343	7351	7373	7373A	7382
7386	7431	7462	7463	7485	7487	7495	7498	7511	7515	7559	7580	7590	7605	7651
7746	7761	7810	7819	7832	7843	7844	7846	7853	7897	7898	7915	7961	7962	7964
8042	8120	8163	8180	8206	8212	8265	8282	8285	8314	8322	8344	8349	8351	8359
8454	8529	8622	8668	8671	8759	8766	8767	8795	8826	8846	8891	8909	8949	9022
9024	9029	9034	9037	9043	9055	9067	9084	9093	9100	9138	9155	9175	9208	9209
9242	9249	9252	9271	9290	9304	9315	9348	9352	9353	9386	9393	9417	9418	9439
9443	9445	9477	9484	9535	9551	9593	9604	9605	9641	9671	9676	9683	9697	9799
9866	9882	9899	9911	9918	9965	9983	10007	10024	10039	10087	10127	10207	10226	10240
10270	10288	10300	10307	10344	10346	10405	10487	10696	10762	10773	10788	10791	10886	10935
10937	10962	10964	10968	10990	11001	11006	11016	11020	11022	11026	11037	11089	11098	11101
11103	11105	11114	11140	11142	11171	11181	11198	11202	11211	11222	11228	11229	11259	11285
11299	11312	11318	11327	11328	11342	11357	11362	11393	11411	11431	11433	11447	11456	11466
11478	11487	11578	11600	11702	11758	11773	11802	11812	11823	11837	11842	11888	11896	11897

12128	12144	12146	12171	12178	12185	12198	12200	12212	12215	12231	12236	12265	12318	12383
12400	12413	12434	12439	12442	12448A	12503	12710	12712	12842	12853	12860	12861	12892	12919
12932	12948	12981	13018	13020	13022	13023	13024	13031	13047	13068	13091	13093	13142	13149
13156	13191	13229	13244	13251	13258	13269	13275	13277	13281	13297	13302	13303	13322	13344
13346	13350	13361	13373	13379	13380	13403	13413	13414	13416	13422	13447	13450	13465	13467
13497	13527	13531	13558	13559	13560	13571	13596	13597	13617	13623	13624	13629	13639	13640
13654	13658	13661	13685	13714	13716	13721	13733	13776	13786	13791	13818	13826	13834	13851
13870	13878	13884	13894	13910	13913	13923	13946	13948	13954	13998	14015	14020	14026	14034
14075	14079	14088	14089	14099	14106	14129	14134	14136	14139	14143	14167	14224	14227	14230
14301	14335	14344	14349	14351	14378	14381	14384	14406	14412	14421	14430	14434	14435	14472
14479	14480	14481	14514	14548	14561	14563	14566	14574	14578	14598	14609	14674	14685	14698
14710	14729	14759	14765	14803	14806	14850	14860	14885	14905	14915	14923	14931	14947	14972
14989	15047	15063	15102	15108	15110	15179	15187	15252	15255	15279	15301	15337	15393	15405
15440	15445	15446	15449	15494	15535	15568	15570	15581	15588	15592	15613	15623	15631	15632
15681	15692	15706	15710	15711	15713	15714	15726	15727	15737	15827	15852	15898	15975	16000
16091	16203	16224	16251	16291	16297	16307	16322	16327	16350	16354	16369	16394	16404	16442
16463	16508	16521	16533	16585	16603	16608	16627	16644	16654	16669	16671	16672	16699	16708
16712	16726	16750	16755	16853	16860	16886	16903	16918	16950	17013	17015	17018	17038	17048
17101	17105	17224	17257	17297	17306	17315	17316	17343	17347	17370	17394	17397	17405	17427
17430	17444	17455	17456	17457	17469	17472	17473	17476	17481	17482	17487	17499	17512	17523
17532	17534	17545	17546	17558	17563	17577	17595	17605	17612	17613	17614	17616	17621	17634
17659	17700	17702	17708	17710	17739	17746	17755	17758	17762	17771	17777	17789		

பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-I

95	105	108	186	233	241	243	255	260	275	321	388	442	512	975
1072	1201	1203	1266	1380	1499	1549	1625	2004	2061	2066	2213	2292	2516	2772
2979	2984	3241	3516	3560	3721	3802	3854	4748	4968	4990	5189	5204	5234	5337
5616	5736	6158	6192	6269	6566	6610	6725	6920	6969	6977	7074	7137	7152	7486
7916	8023	8098	8399	8471	8571	8654	8799	9082	9172	9225	9234	9279	9280	9287
9295	9323	9420	9471	9504	9518	9632	9846	9849	9857	10161	10232	10382	10518	10717
10856	10862	10984	11077	11084	11130	11173	11325	11435	11436	11462	11684	11743	11817	11912
11916	12169	12193	12302	12601	12679	12680	12916	13038	13077	13126	13563	13788	13931	13934
14042	14047	14163	14168	14181	14415	14586	14588	14672	14750	14796	14970	15058	15092	15257
15269	15544	15591	15736	16059	16306	16345	16389	16469	16493	16821	17023	17103	17298	

மொழி பெயர்ப்புத் தேர்வு - முதல் தாள் - தமிழ்

97	997	2413	2966	4617	5542	5605	5656	5670	5685	5790	5794	5889	5892	5901
6001	6029	6034	6085	6102	6135	6207	6247	6255	6397	6485	6590	6622	6639	6746
6915	6934	6972	7013	7030	7229	7318	7564	7684	7795	7799	7812	7833	7882	8216
8249	8258	8293	8327	8375	8505	8580	11571	15341	15459	16090	16346	16409	16503	16633
16780	16900	17111	17267											

மொழி பெயர்ப்புத் தேர்வு - முதல் தாள் - உருது

8408

மொழி பெயர்ப்புத் தேர்வு - முதல் தாள் - தெலுங்கு

இல்லை

தமிழ் மக்களுக்காக ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. இதில் இடம் பெறும் செய்தியரங்கம் தலையாய அம்சம். நான்கு நிமிடங்கள் உலகச் செய்திகளின் சுருக்கமும், அதனைத் தொடர்ந்து 15 நிமிடங்கள் செய்திக் குறிப்புகளும், ஆய்வுரைக் கண்ணோட்டங்களும் இடம் பெறுகின்றன. திங்கள் கிழமை-சித்திரம், செவ்வாய்-அறிவியல், புதன்-கதம்ப மாலை, வியாழன்-நேரடிப் பேட்டி நிகழ்ச்சி, வெள்ளி-கேள்வி, பதில் நிகழ்ச்சி, சனி-ஆங்கிலப் பாடம் ஆகிய நிகழ்ச்சிகளும் இவை தவிர எல்லா நாட்களிலும் நேயர் கடிதங்களை வாசிக்கும் நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றன.

தமிழோசை தலைமைத் தயாரிப்பாளரான திரு. சங்கரமூர்த்தி அவர்கள் சிறந்த எழுத்தாளர், கவிஞர், ஒலிபரப்புக் கலையில் வல்லவர். அவருடன் தமிழோசைக் குடும்பத்திலிருப்பவர் திருமதி ஆனந்தி சூரியப் பிரகாசம் அவர்கள். ஒலிபரப்புக்கு ஒளிபரப்பும் வல்லமை கொண்டவர்.

தமிழோசை ஒலிபரப்பு ஒவ்வொரு நாளும் மேள தாளத்துடன் துவக்கப் படுகிறது. முகப்புக் குரலாக உலகப் பொதுமறையாம் வள்ளுவரின் குறள் ஒன்றை விளக்கித் தமிழ் முழக்கம் செய்து வருகிறார் திரு. சங்கரமூர்த்தி அவர்கள். சித்திரம், அறிவியல், கதம்ப மாலை நிகழ்ச்சிகளில் இவரது கை வண்ணம் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் உள்ளது. உலகில்

சுந்தரலிங்கம் என்ற சுந்தா.

தமிழர் வாழும் பகுதிகளிலிருந்து மேனாட்டுக்கு விஜயம் செய்யும், குறிப்பாக இலண்டனுக்கு வரும் தமிழறிஞர்கள், மருத்துவ வல்லுநர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், அரசியல் வாதிகள், ஆன்மீகவாதிகள், இசை மற்றும் நடனக் கலைஞர்கள் மற்றும் ஏராளமான தமிழ்மக்களைச் சிறப்புப் பேட்டி கண்டு வியாழக்கிழமை தோறும் ஒலிபரப்புவது ஒரு சுவையான நிகழ்ச்சியாகும்.

இங்கிலாந்து நாட்டு வெளிநாடு மற்றும் காமன்வெல்த் விவகாரத் துறைச் செயலர் ஜாப்ரி ஹாவ் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 29-3-89 அன்று சந்தித்தபோது

பொன்விழா காணும் பி.பி.சி. தமிழோசை

"வினவுங்கள்-விடை தருவோம்" என்ற தலைப்பில் யாவரும் தெரிந்து கொள்ள வேண்டிய பல அரிய, பெரிய உண்மைகள் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந் நிகழ்ச்சி மூலம் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. இப்பகுதியைக் கவனித்துக் கொள்பவர் திரு. சுவாமிநாதன் அவர்கள். "தெரிந்த ஆங்கிலத்தை மறவாதீர்கள்" என்ற தலைப்பில் ஒவ்வொரு சனிக்கிழமையும், தெளிவான தமிழ் விளக்கங்களுடன் ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகின்றது. ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பையும், நடைமுறையில் பேசும் ஆங்கிலம் எவ்வாறு இலக்கிய ஆங்கிலத்தை விட மாறுபட்டிருக்கிறது என்பதையும் நேயர்கள் புரிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. பி.பி.சி. தமிழோசை 1991 ஜூன் 3 அன்று 50 ஆண்டுகள் நிறைவைப் பெறுகிறது.

தற்போதுள்ள அரை மணி நேர ஒலிபரப்பை 1 மணி நேர ஒலிபரப்பாக மாற்ற வேண்டுமென உலகெங்கிலுமுள்ள தமிழ் நேயர்களிடமிருந்து வேண்டுகோள் குவிந்த வண்ணமிருக்கின்றது. மேலும் அதிக ஒலிபரப்பு நேரத்தைப் பெருக்கித் தமிழோசையை இன்னும் சிறப்பு மிக்க ஒலிபரப்பாக்கத் தமிழோசைக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அயராது பணியாற்றி வருகின்றனர்.

1989 ஜனவரியில் தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றிகளைக் குவித்த தி.மு. கழகத்தைப் பற்றியும்,

'தமிழோசை' என்னும் பெயர் சூட்டிய திரு சிவபாதசுந்தரம்.

முதல்வர் கலைஞரைப் பற்றியும் நேரடி தொலைபேசிப் பேட்டி மூலம் செவ்வி கண்டு சிறப்பு ஒலிபரப்பாக ஒலிபரப்பி உலகமெங்குமிருக்கும் தமிழ் மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தியதற்கு, திரு. சங்கரமூர்த்தி அவர்களுக்குத் தமிழகத்தின் மீதுள்ள பற்றுதான் காரணம் என்றால் அது மிகையாகாது. இந்தியச் செய்திகளுக்கும் இலங்கை வாழ் தமிழர்கள் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பிப் பாராட்டைப் பெற்று வருகிறது பி.பி.சி.

சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள்

சிறப்புத் தேர்வுகள், நவம்பர் 1989

தேர்ச்சி பெற்றவர்களின் பதிவெண்கள் பட்டியல்

நீதித்துறை உறுப்பினர்களுக்கான உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமுறைத் தேர்வு-பாகம் I

197	284	379	393	428	439	701	704	874	1823	2317	2450	2458	2465	2557
2621	2666	2700	3628	3666	3719	4139	4168	4353	4448	4456	4468	4473	4548	4552
4808	4848	4852	5012	5017	5333	5536	5548	5590	5712	5778	5840	5893	5950	6135
6165	6255	6266	6331	6332	6485	6654	6737	6991	7077	7223	7229	7318	7546	7553
7560	7608	7691	7812	7882	7904	7925	7989	8052	8074	8140	8168	8175	8179	8222
8249	8326	8341	8397	8419	8491	8789	8862	8902	9081	9103	9194	9218	9260	9379
9628	9804	9925	9931	9994	10005	10432	11153	11236	11484	11685	11808	12017	12151	
12254	12320	12521	12566	12598	12625	12632	12775	12781	12785	12813	12901	13114	13208	13225
13533	13620	13726	13861	14137	14461	14463	14497	14614	14735	14755	15059	15104	15321	15368
15369	15395	15618	15697	15801	15835	15869	15909	15952	15971	16017	16020	16148	16158	16258
16381	16432	16447	16478	16527	16596	16642	16660	16749	16847	17027	17100	17128	17334	17462
17464	17514	17528	17560	17655	17754									

வருவாய்த்துறைத் தேர்வு பாகம் II

138	182	336	508	685	693	698	940	1061	1547	1645	1769	1876	1893	2185
2395	2527	2564	2567	2601A	2615	2663	2701	2777	2949	3221	3265	3268	3342	3352
3493	3569	3582	3780	3793	3798	3832	3834	3924	3964	4070	4094	4137	4154	4198
4259	4310	4445	4480	4565	4574	4592	4635	4639	4664	4675	4720	4749A	4776	4787
4946	4957	4960	5015	5053	5101	5373	5468	5594	5672	5735	5821	5924	6023	6129
6276	6355	6424	6488	6611	6635	6644	6653	6686	6827	6847	6855	6947	7000	7009
7086	7213	7259	7361	7388	7400	7411	7449	7501	7675	7740	7767	7781	7846	7894
7938	7960	7981	8115	8152	8200	8461	8532	8564	8653	8752	8774	8783	8800	8908
8915	9079	9104	9136	9243	9317	9339	9356	9428	9482	9529	9583	9666	9744	9796
9806	9831	9834	9912	10022	10285	10324	10724	10801	10819	11064	11181	11226	11286	11289
11294	11298	11351	11358	11363	11516	11520	11709	11838	11899	11957	11968	12083	12188	12195
12200	12221	12265	12274	12295	12393	12409	12642	12678	12830	12831	12875	12885	12920	12924
12953	13009	13035	13047	13066	13095	13220	13259	13270	13274	13282	13349	13351	13410	13437
13452	13521	13526	13590	13596	13608	13678	13799	13838	13885	13962	14056	14101	14151	14182
14265	14306	14440	14453	14459	14470	14523	14530	14541	14657	14727	14737	14784	14823	14958
14967	14976	15004	15011	15074	15100	15165	15209	15262	15320	15330	15409	15441	15474	15530
15553	15565	15639	15654	15673	15720	15731	15818	15829	15874	15904	15914	15922	15938	15940
15951	15959	15995	16005	16006	16051	16069	16156	16244	16271	16472	16672	16770	17251	17301
17306	17317	17336	17385	17411	17429	17465	17476	17499	17536	17549	17727			

வருவாய்த்துறைத் தேர்வு பாகம் - III

698	940	1192	1357	1460	1537	1569	1607	1702	1816	1893	1971	2089	3095	3352
3569	3793	3827	3832	3834	3911	3963	3964	3984	3992	4154	4198	4252	4257	4281
4310	4361	4445	4470	4483	4531	4565	4575	4620	4635	4639	4658	4659	4664	4675
4689	4692	4701A	4734	4839	4957	4997	5015	5125	5309	5748	5768	6153	6276	6320
6353	6424	6488	6694	6781	7000	7086	7127	7213	7355	7361	7400	7411	7675	7740
7781	7846	8115	8200	8461	8752	8821	8860	8908	8915	8930	8979	9042	9079	9136
9227	9335	9428	9482	9529	9559	9583	9666	9744	9776	9806	9831	10690	10724	10755
10819	11036	11064	11289	11294	11298	11463	11516	11520	11709	11729	11776	11838	11897	11899
11955	11957	12083	12188	12200	12221	12274	12295	12337	12378	12393	12409	12619	12642	12660

மொழி பெயர்ப்புத் தேர்வு - இரண்டாம் தாள் - தமிழ்

97 6247 6252 6397 7516 7564 7657 7946 8249 11769 12279 16503 16780 16900

மொழிபெயர்ப்புத் தேர்வு - இரண்டாம் தாள் - உருது

8408

துறைத் தேர்வுகள், நவம்பர் 1989

வேளாண்மை விற்பனைத்துறைப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வு

19223 19613 19876 20514 21381 21412 21542 22193 24416 26336 26377 26520 28183 29008

மதிப்பாய்வு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறைக்கான துறைத் தேர்வு

24712

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-I : முதல் தாள்

19977 33263

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-II : இரண்டாம் தாள்

19977 27761 28137 28751 31294 32116 32607

நிலஅளவைத் தேர்வு (திருத்தியமைக்கப்பட்டது) பாகம்-I : மூன்றாம் தாள்

23869 27114 27485 27547 27573 27607 27664 27761 28038 31152 31294

பேராட்சியர் மற்றும் அலுவலகப் பொறுப்பாட்சி அலுவலகத்தின் இளநிலை உதவியாளர்களுக்கான துறைத் தேர்வு

24681

மீன்துறைத் தேர்வு I (பாகங்கள் I மற்றும் II)

22968 23174 23340

தேசிய வேலைவாய்ப்புப் பணியின் தமிழ்நாடு அமைச்சுப் பணியினைச் சார்ந்தவர்களுக்கான துறைத்தேர்வு

22180 22337 24407 24311 24325 29355 33255

1939-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டமும் அதன்கீழான விதிகள், அறிக்கைகள் ஆகியவற்றில் போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வு

18060 18653 18739 19065 20326 20540 21139 21266 21345 21414 21417 21510 21521 21539 21665
21677 23011 23616 25763 25822 26097 26348 26516 26527 27331 27410 27510 27648 27792 28045
30507 30566 30804 31818 32003 32112 32605 32694

எழுதுபொருள் அச்சுத்துறைத் தேர்வு பாகம்-அ

23016 24332 26913

எழுதுபொருள் அச்சுத்துறைத் தேர்வு பாகம்-ஆ

23016

குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பில் போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வு

18967 19065 23213 24733 24903 25931 27331 29605 30507 30804 30915 32694 33162

காவல்துறை இளநிலை உதவியாளருக்கான துறைத் தேர்வு

18008 18010 18102 18460 19142 20690 20747 21783 21863 23298 23354 23408 23454 23457 23494
23508 23562 23589 23759 23771 23801 24063 24560 24590 24598 25003 25010 25139 25160 26920
27102 28644 28729 28972 29615 30139 30238 30382 30419 31156 31292 31358 33020

நிலஅளவைத் துறைத் தேர்வு- வருவாய் வரைவாளர் தேர்வு - முதல் தாள்

18906 19018 19087 19448 19491 19678 19791 19945 19964 20038 20089 20163 20247 20331 20401
20427 20462 20523 20531 20584 20598 21003 21824 21931 22055 22834 22837 24395 23764 25385
25439 25640 25846 26515 26641 26669 26686 26711 26743 26783 26825 26871 26902 26924 26930
26975 26981 26991 27002 27140 27146 27177 27227 27252 28316 28374 28425 28475 28490 28503
28566 28970 28986 29066 29134 29371 29648 29658 29791 29840 30221 30234 30244 30245 30445
30514 30599 30637 30664 30775 30940 30952 30984 31077 31087 31103 31224 31229 31263 31286
31724 31778 31787 31792 31943 32103 32127 32225 32243 32633 32652 32702 32945 33377

பதிவு எண் 28520 கொண்ட விண்ணப்பதாரரின் தேர்வு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

மீன்துறைத் தேர்வு - II பகுதி - அ

22486 23174

மீன்துறைத் தேர்வு - II பகுதி ஆ

22486 22608 23174

மீன் துறைத் தேர்வு - II பகுதி இ

22486 23174

பொதுப்பணி பட்டறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு

இல்லை

நாளும் தொடரும்
நமது பணிகள் !

நாளும் தொடரும் நமது பணிகள்!

முதல்வர் கலைஞர்

அரசு அச்சகத்துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு

23228

கால்நடை பராமரிப்புத்துறைத் தேர்வு-கால்நடை பராமரிப்புத்துறை நடைமுறை நூல் (நூல்களுடன்)

18144 18300 18477 18514 20479 21213 21352 21461 21557 21720 22035 22763 22803 23289 23541
23871 24505 24559 24722 24852 25449 25676 25762 26121 26262 26311 26624 26732 26987 27020
27155 27257 27265 27296 27442 27744 28354 28360 28510 28550 29074 29130 29156 29195 29567
29822 30058 31459 31831 32291 32335 32380 32876 33291 33413

கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு - தணிக்கையியல் - முதல் தாள் - தேர்வு முடிவுகள்

18028 18197 18273 18440 18689 18883 18892 18953 19232 19372 19418 19525 19549 19558 19863
20018 20349 20527 20607 20620 21088 21130 21152 21154 21164 21186 21248 21267 21309 21429
21439 21473 21628 22001 22216 22381 22466 22501 22734 22749 22867 22895 22972 22989 23019
23022 23083 23096 23100 23140 23147 23192 23227 23242 23304 23305 23309 23316 23318 23325
23435 23474 23490 23514 23529 23594 23601 23603 23619 23622 23709 23725 23730 23742 23770
23777 23792 23807 23817 23823 23853 23854 23872 23879 23908 23922 23940 23954 23968 23973
23984 24079 24080 24089 24098 24104 24118 24158 24165 24180 24193 24221 24245 24260 24266
24290 24295 24319 24337 24398 24404 24450 24458 24478 24512 24514 24520 24522 24536 24644
24699 24715 24740 24746 24754 24755 24767 24792 24805 24807 24822 24830 24846 24848 24853
24854 24889 24897 24944 24947 24961 24967 25054 25115 25117 25134 25172 25173 25251 25325
25399 25443 25457 25476 25478 25511 25528 25553 25584 25597 25602 25660 25669 25686 25715
25723 25728 25736 25824 25849 25854 25864 25888 25909 25917 25998 26002 26008 26019 26020
26061 26075 26077 26326 26331 26413 26680 26785 26788 26790 26827 26970 26993 27048 27207
27414 27541 27549 27622 27659 27668 27686 27725 27751 27797 27800 27866 27908 28014 28082
28087 28127 28298 28355 28364 28439 28459 28548 28681 28786 28866 29108 29154 29377 29563
29693 29788 30311 30344 30773 30896 31080 31164 31420 31612 31735 32307 32747 33004 33105
33156 33203 33289 33327 33380 33427

பதிவுத்துறைத் தேர்வு - தொகுதி ஒன்று முதல் தாள் - தேர்வு முடிவுகள்

18079 18160 18181 18641 19260 19754 19837 20643 21073 21231 21257 22994 23031 23042 23095
23140A 23459 23499 23812 24258 24543 24556 24593 24684 24700 24751 24763 24841 24926 25028
25378 25591 25858 26010 26302 27027 27143 27172 27197 27277 27318 28519 30594 30847 30930
31779 31861 31879 31890 31901 32094 32249 32334 32352 32584 32673 32844

தொகுதி ஒன்று - இரண்டாம் தாள் - தேர்வு முடிவுகள்

18641 21231 21257 21346 21471 21596 21942 22558 22828 22994 23031 23042 23812 23838 24096
24235 24542 24556 24593 24684 24700 24751 24763 24824 24926 24965 25079 25258 26143 26279
26423 27027 27086 27143 27172 27197 27277 27338 27452 27595 27642 27891 28259 29544 30194
30359 30508 30534 30547 30594 30700 30847 30930 31009 31879 31901 31939 32062 32249 32352
32584 33393

தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குத்துறை சார்நிலை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு தேர்வு முடிவுகள்

20020 20139 20152 20275 21146 21704 21729 21894 22102 23005 23286 23805 24641 24742 25908
26021 26510 27165 27601 27991 28380 29250 29343 30299 30356 30448 31186 31526 31564 31933

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியப் பணியாளர்களுக்கான துறைத்தேர்வு - முதல் தாள் - தேர்வு முடிவுகள்

18029 18311 18506 18516 18571 18668 18725 18745 18812 18857 18913 19272 20031 20191 20340
20397 21107 21200 21348 21384 21718 22442 22918 22947 23098 23172 23415 23540 23559 24645
24980 25694 25759 25777 26593 27106 27603 27704 27750 27965 28028 28288 28313 28376 28558
28611 29165 29611 29966 30109 30252 30683 31491 31598 33011 33341

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வு - இரண்டாம் தாள் - தேர்வு முடிவுகள்

18029 18056 18304 18812 19272 19551 20753 21107 21590 21718 21864 22077 22578 23098 23415
23559 25777 26369 26408 27474 27906 28313 28376 28909 29004 29165 33240

வணிக வரிச் சட்டங்களில் துறைத் தேர்வு பாகம் - III தேர்வு முடிவுகள்

18309 18386 18403 18404 18456 19366 19712 19748 19865 20653 20807 21159 21378 21880 21985
22114 22817 22873 22955 22978 22990 23038 23045 23134 23148 23334 23349 23583 23599 23674
23675 23684 23685 23782 24008 24019 24020 24021 24055 24105 24123 24152 24176 24182 24214
24240 24492 24507 24588 24658 24667 24688 24718 24748 24750 24778 24803 24867 24871 24885
24893 24925 25472 25801 25884 27256 27362 27530 27592 28021 28278 29476 29610 30455 30766
30998 31183 31271 31376 31478 32275 32686 32727 32954 33040

கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வுகள் தணிக்கையியல் இரண்டாம்தாள் - தேர்வு முடிவுகள்

18028 18197 18440 18667 18689 18761 18883 18892 19232 19372 19525 19863 20018 20071 20103
20138 20349 20527 20567 20607 20618 20620 20732 20864 21088 21130 21152 21164 21186 21248
21267 21309 21439 21473 21526 21628 21682 21740 22001 22140 22177 22178 22216 22381 22466
22626 22734 22825 22830 22895 22972 22989 22992 23009 23019 23083 23096 23140 23192 23227
23242 23267 23304 23309 23316 23318 23325 23353 23435 23474 23485 23514 23529 23594 23601
23603 23619 23622 23709 23725 23730 23742 23770 23792 23807 23817 23823 23853 23879 23900
23922 23940 23954 23968 23984 24079 24080 24098 24104 24118 24158 24165 24180 24193 24221
24245 24260 24266 24295 24308 24319 24337 24392 24398 24404 24450 24458 24478 24514 24520
24522 24715 24740 24746 24754 24755 24767 24789 24805 24807 24830 24846 24848 24854 24889
24944 24959 25115 25117 25134 25172 25173 25251 25263 25325 25399 25443 25457 25476 25478
25511 25528 25553 25584 25597 25654 25660 25669 25686 25696 25709 25713 25715 25723 25728
25736 25793 25824 25849 25854 25864 25888 25909 25917 26002 26008 26019 26020 26061 26075
26136 26326 26375 26384 26413 26459 26637 26790 26827 26934 26993 27162 27329 27541 27549
27622 27659 27668 27725 27751 27866 27908 27933 27959 28014 28087 28127 28130 28298 28355
28364 28382 28439 28459 28548 28690 28786 29071 29108 29154 29377 29563 29693 29788 29935
30227 30344 30773 30896 31080 31308 31420 31507 31612 31735 31896 32747 32778 33019 33105
33156 33203 33230 33289 33327 33334

வணிகவரிச் சட்டங்களின் துறைத் தேர்வு - பாகம் II

18180 18238 18386 18390 18403 18774 18780 19787 19055 19163 19163A 19186 19501 19503 19581
19660 19674 19712 19748 19865 20154 20221 20437 20593 20692 20736 20807 21053 21075 21159
21287 21321 21372 21378 21476 21507 21562 21598 21758 21880 21907 21960 22114 22494 22504
22681 22978 22990 23038 23045 23110 23134 23182 23258 23272 23334 23349 23539 23583 23599
23675 23684 23761 23785 23816 24008 24019 24020 24036 24105 24116 24123 24146 24152 24163

பதிப்புரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 18.1.90 அன்று ஆற்றிய உரை மீது நடைபெற்ற விவாதத்திற்கு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 24.1.90 அன்று ஆற்றிய பதிலுரையை 'நாளும் தொடரும் நமது பணிகள்' என்னும் தலைப்பில் சிறுநூல் வடிவாக்கி தமிழரசு 16.2.'90 இதழின் இலவச இணைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு.

நாளும் தொடரும் நமது பணிகள்!

முதல்வர் கலைஞர்

ஆளுநர் உரையின் மீது இந்த மாமன்றத்தில் நண்பர் ஈமணி அவர்களோடு நாற்பது பேர் தங்களுடைய கருத்துக்களை- உரையின்மீது கொள்கை விளக்கங்களை-இந்த அரசு இந்த உரையைத் தொடர்ந்து எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற அறிவுரைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

உரைக்கு நன்றி தெரிவித்தும், உரையில் தங்களுக்குள்ள மன வேறுபாடுகளை எடுத்துரைத்தும் நடுநிலையாக நின்று இந்த அரசு செயல்பட வேண்டிய விதம் குறித்தும் உரையாற்றிய அனைவருக்கும் நான் இந்த அரசின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்போடு என்னுடைய உரையைத் தொடங்கலாமென்று கருதுகின்றேன். நாளை மறுநாள் குடியரசு நாள். நேற்றையதினம், இதுவரையிலே பெருமளவு மறந்து போயிருந்த அல்லது மறக்கின்ற அளவிற்கு செய்யப் பட்டிருந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய பிறந்தநாளை இந்தியா முழுமையும் கொண்டாடி இந்தியாவின் பிரதமர், தேசிய முன்னணியின் தலைவர் வி.பி. சிங் அவர்கள் நேதாஜி அவர்களைப் பற்றிப் பாராட்டுரை வழங்கி, தொலைக் காட்சியில் - வானொலியில் அவருடைய அருமை பெருமைகளை யெல்லாம் பேசப்பட்ட நாள்.

நாளை மறுநாள் குடியரசு நாள். அதற்கிடையே இந்த அரசு நாட்டு விடுதலைக்காகப் போராடியவர்களை மறந்ததில்லை என்பதற்கு அடையாளமாக, கடந்த காலத்தில் பல காரியங் களைச் செய்திருக்கின்றது. அதைப்போலவே எல்லை மீட்புப் போராட்டம், மொழிக் காவலர்கள் என்ற நிலையில் மொழியைப் பாதுகாக்க, களம் புகுந்தவர்களுடைய தியாகம் இவற்றை யெல்லாம் மனதில் கொண்டு அவர்களுக்கு ஏற்கெனவே 250 ரூபாயாக இருந்த, மாதாந்திர ஓய்வு ஊதியமாக வழங்கப் பட்ட தொகையை, ரூ.350- ஆக மாற்றியது இந்த அவை உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நேற்றைய தினம் அவர்களின் சார்பாக காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த சிலரும், எந்த இயக்கத்தையும் சாராத சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக அமைப்புக்களை வைத்திருப்பவர்களும் என்னைச் சந்தித்து அவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதனை அதிகாரிகளோடு கலந்து பேசி இப்பொழுது அறிவிக்க விரும்புகின்றேன்.

தமிழக அரசுப்போக்குவரத்துக் கழகங்களில் சுமார் ஆறாயிரம் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு - மாநில அரசு ஓய்வு ஊதியமாக ரூ.350 பெறுகின்ற அந்தப் போராட்ட வீரர்கள், அதேபோல எல்லைப் போராட்ட வீரர்கள் உள்ளிட்ட சுமார் ஆயிரம் மொழிக்காவலர்கள் - இவர்களுக்குப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகச் செல்ல ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் கிலோ மீட்டர் என்ற அடிப்படையில் ரூபாய் ஐநூறு மதிப்புள்ள பேருந்து பாஸ் வழங்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளதென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *(கர ஒலி)*

இந்த ஆளுநர் உரையின் முகப்பில் இன்று மத்தியில் அமைந்துள்ள தேசிய முன்னணி அரசு குறித்தும் அந்த அரசு தேர்தல் நேரத்திலே வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றத் தொடங்கியிருப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டு உள்ளது. அதனையொட்டியும், வெட்டியும் இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

எட்டு ஆண்டுகளாகக் கேட்பாரற்றுக்கிடந்த அறிக்கை!

குறிப்பாக இன்று காலையிலே பேசிய சட்டப் பேரவையின் முன்னாள் தலைவர் பி.எச். பாண்டியன், நேற்றைய தினம் பேசிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள மண்டல் கமிஷன் குறித்துத் தங்களுடைய பாராட்டுதலை-மகிழ்ச்சியை-தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மண்டல் கமிஷன் என்பது ஏற்கெனவே ஜனதா ஆட்சிக் காலத்தில் 1978 டிசம்பர் 20-ந் தேதி அறிவிக்கப்பட்ட ஒரு குழு. அது தன்னுடைய பணிகளைத் தொடங்கிய நாள் 21.3.79. அது தன்னுடைய பணியை முடித்து அறிக்கை வழங்கிய தேதி

31.12.80. அது நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்ட தேதி 20.4.82. '78-இல் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திலே அந்த அறிக்கை 82-இல் வைக்கப்பட்டு, கிட்டத்தட்ட எட்டு ஆண்டுக் காலமாக அது கேட்பாரற்ற நிலையில் ஆனால் இந்தியாவிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் - குறிப்பாக தமிழகத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அவர்களுக்காகக் குரல் எழுப்புகின்ற இயக்கங்கள் குறிப்பாக தி.மு.க., திராவிடர் கழகம் போன்ற இயக்கங்கள் எடுத்த முயற்சிகளைப்பற்றியோ, அவர்கள் வடித்தெடுத்த மாநாட்டுத் தீர்மானங்கள் பற்றியோ, முன்பிருந்த அரசு கவனிக்கவுமில்லை. அதிலே ஆர்வம் காட்டவுமில்லை. அது மாத்திரமல்ல.

இங்கே நண்பர் பாண்டியன் குறிப்பிட்டதைப் போல் இந்த அவையிலேயே கடந்த கூட்டத் தொடரில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆராய்ந்து உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டுமென்று நிறைவேற்றிய தீர்மானம் அன்றைய ராஜீவ் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது பற்றியும் யாரும் கவலைப்படவில்லை. மண்டல் கமிஷன் அறிக்கையிலே அப்பொழுது தரப்பட்ட புள்ளிவிவரங்கள் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய மிக முக்கியமான குறிப்பாகும்.

மண்டல் கமிஷனை அமைத்த குறிக்கோளே இந்தியா முழுமையுமுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்திய அரசு அலுவலகங்களிலோ அல்லது மத்திய அரசுச் சார்புடைய நிறுவனங்களிலோ ரயில்வே அல்லது வங்கிகள், நெய்வேலி லிக்னைட் போன்ற கார்ப்பரேஷன்கள் இவைகளில் எல்லாம் வேலைவாய்ப்புக்களை பிற்படுத்தப்பட்ட மக்கள் பெற முடியாமல் ஏற்கெனவே முன்னேறிய மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு நியாயமான விழுக்காடு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே தான் - அந்த மையக் கருத்தை வைத்துத்தான் மண்டல் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அப்படித் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டபோது அதிலே தரப்பட்ட சில விவரங்களை இங்கே நான் படித்துக் காட்டுவது உறுப்பினர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

Class I பெரிய அதிகாரிகள், மத்திய அரசு அல்லது நிறுவனங்கள் இவைகளிலே பணியாற்றுகின்ற பெரிய அதிகாரிகள் என்ற பட்டியலை எடுத்துக் கொண்டால் மொத்தப் பணியாளர்கள்

1,74,043 பேர். இந்த 1,74,043 பேரில் தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் 9,891 பேர். பிற்படுத்தப் பட்டவர்கள் 8,169 பேர். மீதமுள்ள 1,55,983 பேர் முன்னேறிய வகுப்புக்களைச் சார்ந்தவர்கள். இது Class I.

அடுத்தது Class II அதிகாரிகள். அதிலே மொத்தமுள்ள பணியாளர்கள் 9,12,925. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982. அதாவது முதல் வகுப்பு வேலைவாய்ப்புக்களில் மிகக் குறைவாகவும் அடுத்து Class II என்ற அந்த வாய்ப்புக்களில் ஓரளவு அதிகமாகவும் ஆனால் நியாயமான அளவிற்கு அல்ல, ஓரளவு அதிகமாகவும் 9,12,925 மொத்தப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982 பேராக, பிற்படுத்தப்பட்ட வர்கள் 97,000 பேராக, முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் 6,49,943 உள்ள இந்த நிலையையும் மண்டல் கமிஷன் அறிக்கை வெளிப்படுத்தியது.

Class III, IV ஆகிய இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அலுவலாளர் களின் மொத்த எண்ணிக்கை 4,84,646. அதிலே தாழ்த்தப் பட்டவர்கள் 1,18,282 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் 90,575 பேர். மீதமுள்ளவர்கள் முன்னேறிய சமுதாயப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

வாக்குறுதிகளை நிறைவேற்ற மும்முரமான முயற்சி!

இந்த ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்பட்டு, வகுப்புவாரியாக அவர் களுக்குள்ள உரிமை வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படை யிலே பரிந்துரைத்த இந்தக் குறிப்புக்கள் எதுவும் ராஜீவ் காந்தி காலத்திலே நடைபெற்ற அரசால் ஏற்றுக் கொள்ளப்படாமல் அல்லது அதை ஆய்ந்து முடிவெடுக்க முன்வராமல் புறக்கணிக்கப் பட்டு விட்டபோது, தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொன்னதற்கு இணங்கவும், அதைப் போலவே தமிழ்த்தி திலே வெளியிடப்பட்ட தி.மு. கழக தேர்தல் அறிக்கையிலே மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும், அதற்காக நாம் குரல் எழுப்ப வேண்டுமென்று எடுத்துச் சொன்ன அடிப்படையிலும், தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் திட்டவட்டமாகத் தெரிவித்த வகையிலும் இன்றைய தினம் அதற்கான முயற்சிகள் மும்முரமாக மத்திய அரசிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அப்படி நடைபெறுகின்ற அந்த முயற்சிகள் 'ஏதோ ஒரு காரியம் நடைபெறக்கூடாதென்றால் அதன் தலையிலே ஒரு கல்லைப் போடு; இல்லா விட்டால் கமிட்டியைப் போடு' என்று ஒரு காலத்திலே 'கல்கி' சொன்னதைப்போல ஆகிவிடாமல் அந்தக் காரியம் உடனடியாக நிறைவேறுவதற்கு உரிய முயற்சி களை மத்தியிலே உள்ள அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இங்கே நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இதைப்போலவேதான், இந்த மண்டல் கமிஷன் பரிந் துரையை நிறைவேற்றுவதற்கு எப்படி தேர்தல் அறிக்கை யினுடைய அடிப்படையிலே தேசிய முன்னணி அரசு முன் வந்திருக்கிறதோ, அதைப் போலவே 'எலக்ஷன் மானிபெஸ்டோ' - தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்ட 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்', அதையும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு மத்தியிலே உள்ள தேசிய முன்னணி அரசு பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அதுகுறித்து நேற்றையதினம் நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இங்கே விளக்கமாகப் பேசி இருக்கின்றார்கள். முதல்நாள் இந்த விவாதம் தொடங்கிய நேரத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய உறுப்பினர்கள், 'இண்டர்- ஸ்டேட் கவுன்சிலை' விமர்சித்து, அதை ஏதோ ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப் போலவும், இப்போது, 'இண்டர்-ஸ்டேட் கவுன்சிலை' ஏற்றுக் கொள் கிறீர்களா என்பதைப் போலவும் சில வினாக்களை எழுப் பினார்கள்.

மாநில சுயாட்சி: இந்திரா காந்தியின் விவேகமான பதில்!

இதே மாமன்றத்தில் '74-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை நீங்கள் அனைவரும் தெளிவாக அறிவீர்கள். மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாக, அடிப்படையாக அமைந்த அறிக்கை, 'இராஜமன்னார் குழு அறிக்கையாக' இருந்தது என்பதும் அந்தத் தீர்மானம் நிறை வேறியபோது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இராஜமன்னார் குழுவின் அறிக்கை எல்லா மாநில முதல் அமைச்சர்களுக்கும் அப்போது அனுப்பப்பட்டது. அன்றைய

தினம் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அன்றைய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் மாநில சுயாட்சி என்பது பயங்கரமான ஒன்று என்று கூறாமல் இது முதல் அமைச்சர்கள் மட்டத்திலே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் விவேகத்தோடு ஒரு பதிலை அன்றைய தினம் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதற்குத் தொடர் நடவடிக்கை இல்லையே தவிர மாநில சுயாட்சி என்கிற வார்த்தை பயங்கரமானதென்றோ அல்லது நாட்டைப் பிரிக்கக்கூடியதென்றோ அல்லது தேச விரோதமானதென்றோ அன்றைய பிரதமர் இந்திராகாந்தி சொல்லவில்லை.

ஆனால் மாநில சுயாட்சி என்றாலே தேச விரோதமானது என்ற ஒரு கருத்தை நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலும் அதற்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் நேரத்திலும் இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா இடங்களிலும் பேசினார்கள். 'இது தேசத்தைப் பிரிக்கக்கூடியது. நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடியது. வெளிநாட்டுக்காரனுக்கு நாட்டை துரோகம் செய்து காட்டிக் கொடுக்கக்கூடியது' என்றெல்லாம் மிகக் கடுமையான– பயங்கரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மாநில சுயாட்சி என்கின்ற அந்தத் தத்துவத்தையே உடைப்பதற்கு ராஜீவ் காந்தி, அன்றைக்கு முயற்சித்தார்கள்.

இண்டர் - ஸ்டேட் கவுன்சில்: '74-இல் நிறைவேறிய தீர்மானம்!

இண்டர்-ஸ்டேட் கவுன்சில், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்த ஒன்று என்பதற்கு அன்றைய தினம் இங்கே பேசிய உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்து வைத்த வாதம், நாம் '74-ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் முழுப் பகுதியையும் எடுத்து வைத்துக் கொள்ளாமல், அதிலே இரண்டு வரிகளை மாத்திரம் பிரித்து எடுத்துக் கொண்டது தன்னுடைய வாதத்திற்கு வலுச் சேர்த்துக் கொண்ட முயற்சி ஆகும்.

'74-ஆம் ஆண்டுத் தீர்மானத்தில், அந்த வரிகள் அரசியல் அமைப்பின் 263-ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள மாநிலக் குழு, அனைத்து மாநிலக் குழு பயனற்றது, அதனால் எவ்விதப்

பயனும் கிட்டாது என்று நாம் அதிலே சொல்லியிருந்தாலும்கூட, முன்னும் பின்னும் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதுதான் முக்கியம். 'முதலில் எல்லா முதலமைச்சர்களையும் அல்லது அவர்களுடைய நியமனதாரர்களையும் கொண்ட அனைத்து மாநிலங்கள் குழு அமைக்கப்பட வேண்டும், எல்லா மாநிலங்களுக்கும் சம பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும், இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் அதன் தலைவராக இருக்க வேண்டும், மைய அமைச்சர்கள் அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கத் தேவையில்லை, பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து, நாணயச் செலாவணி ஆகியவை குறித்து எடுக்கப்பட வேண்டிய எந்தவொரு நடவடிக்கையும், மைய - மாநில அரசுகளுடைய உறவைப் பாதுகாக்கின்ற வகையில், அதைப் பொறுத்து, அனைத்து மாநிலக்குழு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். அதைப்போல மைய அரசு மேற்கொள்ளும் பொருளாதாரம், நிதி, பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் விவாதிக்கும் வாய்ப்பையும் அந்த மாநிலக் குழு, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் கொண்டிருக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 263-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள அனைத்து மாநிலக்குழு பயனற்றது. அதனால் எந்தப் பயனும் கிட்டாது, எனவே அனைத்து மாநிலக் குழுவினுடைய பரிந்துரைகள் மைய அரசையும் மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். பரிந்துரை எதுவும், ஏதேனும் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டால், அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் நாடாளுமன்றத்தின் முன்பும், மாநில சட்டமன்றங்கள் முன்பும் வைக்கப்பட வேண்டுமென்பது, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் எப்படி மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்ற நிலையிலே, '74-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொணர்ந்து இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய வாசகங்களாகும்.

மாநிலங்களின் யோசனைகளைக் கோரி பிரதமர் வி.பி. சிங் கடிதம்!

இப்போதும்கூட நம்முடைய பிரதமர் வி.பி. சிங் அவர்கள் அப்படியே 263-ஆவது பிரிவில் சொல்லப்பட்ட அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள்கூடச் சொல்லவில்லை. அவர்கள் கூட, என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்று மாநில முதலமைச்சர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில், 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

அதிலே என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்பதை நீங்கள் எழுதி அனுப்புவீர்களேயானால் அவைகளையெல்லாம் நாங்கள் சீர்தூக்கிப் பார்த்து உடனடியாக முதலமைச்சர்களையெல்லாம் அழைத்து ஒரு மாநாடு கூட்டி அதிலே உங்களுடைய கருத்தைக் கேட்டு, அதிலே திருத்தங்களோடு, அந்த 263வது பிரிவை நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும்' என்று அவர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 25.3.89-இல் இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை வைத்தபோது நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். 'பிப்ரவரித் திங்களில் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய - மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம், சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மத்திய மாநில அரசின் உறவுகள் குறித்து ஒன்றுக்கொன்று தொடர்பான முறையில் தொகுத்து விவாதிக்க முன்வருவது அவசரமும் அவசியமுமானதாகும் என்று விளக்கியுள்ளேன். இதன் தொடர்பாக அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் 'அனைத்து மாநிலங்களின் குழு''வை (இண்டர்-ஸ்டேட் கவுன்சில்) உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அத்தகைய குழுவின் அமைப்பு, செயல்முறைகள் பற்றிப் பிரதமர் அவர்கள் (அப்போது ராஜீவ் காந்தி பிரதமர்) மாநில முதலமைச்சர்களுடன் வெகுவிரைவில் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளேன்' என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். அப்போது அது கவனிக்கப்படவில்லை. இப்போது கவனிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால், மத்திய மாநில உறவுகளைப் பற்றி அறிய, மத்திய அரசு ஏற்கெனவே அமைத்த சர்க்காரியா கமிஷனுக்கு எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப் பட்டன. அப்படி அனுப்பப்பட்டபோது அன்றைக்கு இருந்த அ.தி.மு.க அரசின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன.

அ.தி.மு.க. அரசில் முன்னுக்குப் பின் முரணான காரணங்கள்!

அந்தக் கருத்துக்கள் எப்படி அமைந்தன என்றால் 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையே இல்லை. 263-வது பிரிவையே எடுத்துவிடலாம்' என்று அ.தி.மு.க. ஆட்சியினால் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. 1985-ஆம் ஆண்டு அந்தக் கருத்துக்கு ஒரு காரணம் சொன்னார்கள். அந்தக் குழு, மத்திய-மாநில அரசுகள்

சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டுமென்ற அளவிலே இல்லாத காரணத்தால் இந்த 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். பிறகு மீண்டும் காரணம் கேட்டு சர்க்காரியா கமிஷன் அ.தி.மு.க. அரசை வினவியபோது, 1985-ஆம் ஆண்டு ஒரு கருத்தை எழுதினார்கள். அதுதான் வேடிக்கை. '35 ஆண்டுகளாக இந்த 263-வது பிரிவின் கீழ் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் அமையவில்லை. ஆகவே இனியும் அமையத் தேவையில்லை' என்று முன்பிருந்த அ.தி.மு.க. அரசு ஒரு அருமையான கருத்தை எழுதி, 'அப்படியே அந்தப் பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துவிடலாம்' என்று எழுதினார்கள்; இதில் வேடிக்கை என்னவென்றால், அ.தி.மு.க. அரசு இப்படி எழுதியது, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் உள்ள பிரிவையே எடுத்து விடலாம் என்று. ஆனால் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெளியிட்ட அவர்களது தேர்தல் அறிக்கையில், 'மத்திய மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் அமைத்திடப் பாடுபடுவோம்' என்று தெரிவித்தார்கள். இது தேர்தல் அறிக்கை. 1985-ஆம் ஆண்டு இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி, 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். ஆகவே அந்தப் பதிலைப் படித் தார்களோ படிக்கவில்லையோ, ஆனால் இப்படி இவர்களுடைய தேர்தல் அறிக்கையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி, 263-வது பிரிவையே எடுத்து விடலாம் என்று எழுதினார்கள். ஆகவே அந்தப் பதிலை படித்தார்களோ படிக்கவில்லையோ, ஆனால் இப்படி இவர்களுடைய தேர்தல் அறிக்கையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலை அமைக்கப் பாடுபடுவோம் என்று அ.தி.மு.க கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வளவு முரண்பாடுகளுக்கு இடையில் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலைப் பற்றி அந்தக் கட்சி தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில், நாம் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இண்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவை, அதற்காக 263-வது பிரிவில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று முடிவெடுத்து, அந்த முடிவு எவ்வாறு அமைய வேண்டுமென்பதற்கு முதல் அமைச்சர்களைக் கூட்டி, பிரதமர் வி.பி. சிங் அவர்கள் கலந்தாலோசிக்கக் கூடிய ஒரு நல்ல நிலையை இந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் மட்டத்தில் உருவாக்கியிருப்பதற்கு நான் இந்த மாமன்றத்தில் அவருக்கும், மத்திய அரசுக்கும் நன்றி கூற, பெரிதும் கடமைப்பட்டு இருக்கிறேன். *(கர ஒலி)*

நல்வாழ்வுப் பணிகளின் திட்டச் செலவு குறையாது!

இங்கே பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களில் சிலர் - குறிப்பாக நண்பர் அப்துல் லத்தீப் அவர்களும், நேற்றைய தினம் பேசிய பொன். விஜயராகவன் அவர்களும் 'பைனான்சியல் டிசிப்ளின்' கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று அறிவுரைகள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இலவச் அரிசி, சத்துணவு, இலவச முட்டை வழங்குதல் போன்ற காரியங்களால் 'பைனான்ஷியல் டிசிப்ளின்' சீர்குலைந்துவிடும் என்கின்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் செயல்பாடுகளால் நிச்சயமாக நிதியாதாரக் கட்டுப்பாடு குலைந்து விடாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மூலதனச் செலவையோ அல்லது திட்டச் செலவையோ, நலிந்தோருக்காகச் செய்யப்படுகிற இந்த நல்ல உதவிகள் பாதித்துவிடவில்லை. அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் நல்வாழ்வுத் திட்டங்களை நாம் செய்தாலும்கூட 1,360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு எந்த அளவிலும் குறையாது என்ற நம்பிக்கை யோடு நாம் இருக்கிறோம்.

இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கின்றன இந்தத் திட்ட ஆண்டு நிறைவுற. அதிலே நாம் ஏற்கெனவே அறிவித்த வாறு 1,360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு முழுமை பெறும் என்ற நம்பிக்கையோடு நாம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப்போல,மூலதனச் செலவும் எந்த வகையிலும் குறையப் போவது இல்லை என்ற உறுதியையும் நான் இந்த அளவுக்குத்தரத் தயாராக இருக்கிறேன். ஆனால் கடந்த ஆண்டு, அதாவது 1989-ஆம் ஆண்டில், ஆளுநர் ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு 1,457 கோடி ரூபாய். திருத்திய மதிப்பீட்டில் அது 1,202 கோடி ரூபாயாகக் குறைந்ததையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாங்கள் இந்த 1,360 கோடி ரூபாயை நிச்சயமாக இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துவோம் என்று உறுதிபூண்டிருப்பதை எண்ணும் போது ஏற்கனவே பைனான்ஷியல் டிசிப்ளின் குலைந்துபோய் இருந்தாலும், அந்த டிசிப்ளின் குறையாமல் காப்பாற்றுகிற பொறுப்பை இந்த அரசு ஏற்று, உங்கள் நம்பிக்கைக்கு உரியதாக நடக்கும் என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நல்வாழ்வுத் திட்டங்களுக்காக ஒரு அரசு செலவிடுவது இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாததொன்றாகும். நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் கூடச் சொன்னார்கள் - 'ஓட்டு களுக்காக நாம் செய்கின்ற காரியம் இது' என்று. நான் அவருக்கும் சொல்கிறேன், மற்றும் இங்கே பேசிய பல நண்பர்களுக்கும்,'இந்த இலவச உணவு, இல்வச உடை, இலவச முட்டை இவைகள் எல்லாம் தேவைதானா?' என்று கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அவர்கள் வாக்களிப்பார்களா? அல்லது வாக்களிக்க மாட் டார்களா என்பதல்ல. நான் நன்றாக இதை ஆராய்ந்து பார்த் திருக்கிறேன். நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் ஏறத்தாழ 60 இலட்சம் பிள்ளைகளுக்குச் சத்துணவு போடப்பட்ட போது அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலோ அல்லது அதற்குப் பிறகு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலிலோ அந்தக் கட்சி வெற்றி பெற்றுவிடவில்லை. எனவே வாக்குகளுக்காக இந்தத் திட்டங்கள் என்றோ அல்லது திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதால் வாக்குகள் விழுந்துவிடும் என்றோ கடந்த காலத்திலே திரு. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே நாம் அதை ஆராய்ந்து பார்த் தால், 'அல்ல' என்ற விடை நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எனவே வாக்குகளுக்காக அல்ல!

வாழ்க்கையில் எந்தவிதமான பிடியும் இல்லாமல், சுதந்திர இந்தியாவில் இன்னமும் நடைபாதையில் வாழ்கிற மக்கள், ஈனமுற்ற நிலைமையில் எந்த உதவியும் கிடைக்காமல் நலிந்து கொண்டிருக்கிற மக்கள், தங்களுடைய நோயைப் போக்க முடியாமல் துடித்துக்கொண்டிருக்கிற மக்கள், பசிப் பிணியால் பரிதவித்துக்கொண்டிருக்கிற மக்கள், குடிசையில் குமுறிக் கொண்டிருக்கிற மக்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் ஒரு அரசு, 'நாங்கள் நீண்ட காலத் திட்டங்களைத் தந்து நிறைவேற்றுவோம், அதுவரையில் பொறுத்திரு' என்று சொன்னால் அது 'அரசன் வருவான், கழுத்திலே உனக்கு மாலை சூட்டுவான்' என்று ஒரு ஏழையைப் பார்த்து 'அதுவரையில் நீ எதிர்பார்த்துக் கொண்டிரு' என்று சொல்லி ஏங்க வைத்து, எதிர்பார்த்தது நடக்காமல் வாழ்விழந்து போவதுபோல் அது முடிந்துவிடும். எனவேதான் இன்றைக்கே நம்மால் முடிந்த காரியங்களை, நல்உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

கட்சிச் சார்பற்ற முறையிலே
சிகிச்சைக்கு உதவி!

அதற்காக நீண்ட காலத் திட்டங்களை இந்த அரசு புறக் கணித்து விடவில்லை. புறக்கணிக்கப்போவதும் இல்லை. அது வரையிலே பொறுத்திருக்க இயலாதவர்கள். துடித்துக்கொண்டு இருப்பவர்கள், அவர்களை ஓரளவுக்காவது கை தூக்கிவிட வேண்டும் என்று எடுக்கின்ற முயற்சிகள்தான் இவைகளே தவிர வேறு அல்ல. உங்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்ல வேண்டுமே யானால், 10.1.1990 இந்த நாள் வரையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டு, இந்தக் கால கட்டத்தில், இருதய நோய், அதனால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்குச் சென்ற வர்கள், சிறுநீரகக் கோளாறால் சிகிச்சைக்குச் சென்றவர்கள், மற்றும் வேறு பல நோய்களுக்கு ஆளாகியவர்கள் இவர்களுக் கெல்லாம் உதவி அளிக்கும்படி, இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள், கட்சிச் சார்பற்ற முறையில், அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம், யார் ஆதாரங்களோடு அரசுக்கு முறையீடு செய்தாலும் அவைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக இருதய நோய் சிகிச்சைக்காக மாத்திரம் 88 பேர்களுக்கு இந்த அரசு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. அது போலவே, சிறுநீரக சிகிச்சைக்காக 23 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. வேறு பல நோய்களுக்காக 9 பேர்களுக்கு, மொத்தம் 120 பேர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

10,100 பேருக்கு
திருமண உதவித் தொகை!

திருமண உதவித் திட்டம், மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் பெயரால் அமைந்துள்ள திருமண உதவித் திட்டம். அதில் இதுவரையில் 10,100 பேர்களுக்கு இந்த ஓராண்டுக் காலத்தில், முழுமையாக ஓராண்டு முடியாத இந்தக் கால கட்டத்தில் 10,100 பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் படிக்க வேண்டுமென்ற ஊக்கத்தையும் பெறுகிறார்கள். அதே நேரத்தில் ஏழ்மை நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வாழ்வே இல்லை என்ற அவநம்பிக்கையிலிருந்து அவர்கள் விடுபட்டு, ஒரு புதிய

ஒளியை அவர்கள் பெற முடிகிறது. இந்த ஓராண்டுக் காலத்திலே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாழ்வு வழங்கப்பட்டு இருக்கிறது. அதுபோலவே கருவுற்ற மகளிருக்கு, கிட்டத்தட்ட 66 ஆயிரம் பெண்களுக்கு, அவர்கள் கருவுற்றிருக்கிற நேரத்தில் அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும், குழந்தை பிறந்த பிறகும் கூட அதற்கான செலவினங்களுக்காக 200 ரூபாய் தருவதாக அறிவித்து, அது அறிவிக்கப்பட்டு நின்று விடாமல், அப்படியும் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 5 அல்லது 6 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் செலவால் நம்முடைய நிதி ஆதாரக் கட்டுப்பாடு குலைந்துவிடும் என்று நாம் அஞ்சத் தேவையில்லை. நீண்டகாலத் திட்டங்களை நாம் நிறைவேற்றுகிற அதே நேரத்திலேயே, இந்தத் திட்டங் களையும் நிறைவேற்ற, தவிர்க்க முடியாத சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய நண்பர்கள் சிலர் விவசாயிகளுடைய பிரச்சனை பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையிலே எதுவும் குறிப்பிடவில்லை என்று வருத்தப்பட்டார்கள். விவசாயி களுடைய வேதனைகளைத் தீர்க்க இன்னும் பல முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோடிட்டுக் காட்டினார்கள். ஏற்கெனவே நம் வரவுசெலவுத் திட்டத்திலே அறிவித்ததற்கு இணங்க, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி களில், மாற்றியமைக்கப்பட்ட குறுகிய காலக் கடன்களும், தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தும் அறவே ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. குறுகிய, மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. நீண்ட காலக் கடன்கள் மீதுள்ள ஒத்தி வைக்கப் பட்டுள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 39 கோடி ரூபாய் செலவை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இது அன்னியில் கடந்த ஆண்டில் அரசு, விவ சாயிகளுக்கு வட்டிச் சலுகை அளிப்பதாக அறிவித்ததனால் அந்தச் சலுகையையும் அறிவித்ததோடு அதற்கு ஈடுசெய்ய, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்தத் தொகையை வழங்காத காரணத்தினால் நிலுவைத் தொகையாக நின்றுவிட்ட 6 கோடி ரூபாயை இந்த அரசுதான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கேகூட நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துக் காட்டியது போலவும், நம்முடைய உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர், முன்னால் அந்தப் பொறுப்பேற்றிருந்த வீராசாமி அவர்கள், இதைப்பற்றி மிக விவரமாக எடுத்துக் கூறியது போலவும், நபார்ட் நிறுவனத்தினுடைய பலமான எதிர்ப்பு

வழக்குத் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றது. ஆனால் 10 ஆண்டுக்காலத்தில் எந்த முயற்சியும் செய்யப்படவில்லையா அல்லது செய்து கடந்த காலத்திலே நடைபெற்ற அதே பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சிதான் விளைவாக இருந்ததா என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்க அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் விரும்பவில்லை. ஆனால், இன்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்த்தேன். கர்நாடக சட்டசபையில் நாம் கேட்ட தண்ணீரை அளிக்க இயலாது என்று திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள்; 30 டி.எம்.சி. கேட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள், 30 டி.எம்.சி. கேட்டு, அவர்கள் தரத் தயங்கிய பிறகு, அந்த 30 டி.எம்.சி. வேண்டுமென்று வலியுறுத்தி, முதல் அமைச்சர் திரு. வீரேந்திரபாட்டீலோடு இரண்டுமுறை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன். அவர் 'தருகிறேன்' என்று சொன்னார்.

பிறகு, பொதுப்பணி அமைச்சரை அனுப்பி வைத்தேன். பொதுப்பணி அமைச்சர், அந்த மாநிலத்திலே முதல் அமைச்சர் இருப்பார், அவர் மாலையிலே பெங்களூர் வருவார் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே சென்றார். ஆனால், அந்த மாநில முதல் அமைச்சர் பெங்களூருக்குத் திரும்பாமல் டில்லிக்குப் போய்விட்டார். டில்லியிலும் விடவில்லை. அங்கே இருக்கிற மத்திய அமைச்சர் திரு. மாறனிடம் சொல்லி, திரு. வீரேந்திர பாட்டீலோடு தொடர்பு கொள்ளச் சொன்னேன். அவரும் தொடர்பு கொண்டு பேசினார். அங்கிருந்து திரு. வீரேந்திர பாட்டீல், 'உங்கள் பொதுப்பணி அமைச்சரை மீண்டும் பெங்களூருக்கு அனுப்பி வையுங்கள், பேசுகிறேன்' என்று சொன்னார்.

பொதுப்பணி அமைச்சர் பெங்களூர் சென்று அங்குள்ள நீர்ப்பாசன அமைச்சரோடு பேசினார். அதிகாரிகளோடு பேசினார். அன்று மாலையிலே முதல் அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீலோடு பேசினார். 'எங்களால் இயன்றதைச் செய்கிறோம், உங்கள் முதலமைச்சரிடம் சொல்லுங்கள், நம்பிக்கையோடு இருக்குமாறு' என்று சொல்லி அனுப்பினார்கள்.

அதற்குப்பிறகு, இங்குள்ள கஷ்டத்தை அவர்களுக்குப் புரிய வைத்து,'15 டி.எம்.சி.யாவது வழங்குங்கள்'என்று நாம் கேட்டுக் கடிதம் எழுதினோம். '15 டி.எம்.சி. வழங்குவதைப்பற்றி யோசிக்கிறோம்' என்று அங்கிருந்த பொதுப்பணி அமைச்சர் — கர்நாடகத்துப் பொதுப்பணித்துறை அமைச்சர் பேசியதாகச் செய்தி வந்தது.

நேற்றையதினம் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார்கள், 30 டி.எம்.சி. தர இயலாது என்று. பேசித்தீர்க்கலாம் என்று சொல்கிறார்களே, நாம் இன்றைக்கு வறண்டு போயிருக்கிற அல்லது இன்னும் சில நாளில் வறண்டு விடக்கூடிய அல்லது வாடி உலர்ந்துவிடக்கூடிய பயிர்களைக் காட்டி, தஞ்சை, திருச்சி போன்ற காவிரி நதி தீரத்திலே வாழ்கின்ற தமிழக விவசாயிகளுடைய வயிற்றிலே அடிக்காதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்கின்ற இந்த நேரத்திலே கூட,ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக 10 டி.எம்.சி.யோ, 15 டி.எம்.சி.யோ வழங்குவதற்குத் தயாராக இல்லாதவர்களிடத்தில் பேசி என்ன பயன் விளையும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த காலத்திலே ஜனதா தள ஆட்சியினுடைய தலைவர், முதலமைச்சர் பொம்மை அவர்கள் இங்கே வந்தபோது, ஒரு பொதுக்கூட்டத்திலே தான் இந்த அமைச்சரவைக்கு நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில் காவேரியிலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீரை அவசரமாகத் தர வேண்டுமென்று கேட்டபோது, அவர் அந்தக் கூட்டத்திலேயே அறிவித்தார். அடுத்த ஒன்றிரண்டு வாரங்களில் அந்த 5 டி.எம்.சி. தண்ணீரை ஜனதா தளக் கட்சியினுடைய முதலமைச்சர் நண்பர் பொம்மை அவர்கள் உடனடியாகத் தமிழ்நாட்டிற்கு வழங்கினார்கள்.

வேடிக்கை என்னவென்றால், அதற்கு முன்பு கவர்னர் ஆட்சியிலும் 5 டி.எம்.சி. தண்ணீர் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அங்கிருந்து தண்ணீர் தரும் போதெல்லாம் அதற்கு மாற்றாக இங்கிருந்து மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்ட மின்சாரத்திற்கு ஒரு பரிந்துரை அல்லது ஒரு பரிமாற்றமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக அதற்கு ஓரளவு கட்டணமும் கேட்கப்பட்டிருக்கிறது. இது எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றது. இந்தக் கணக்கை எல்லாம் இப்போது வீரேந்திர பாட்டீல் அவர்கள் நமக்கு எழுதி, 'அந்தப் பழைய பாக்கி எல்லாம் இருக்கிறது; அதை எல்லாம் கொடுங்கள்' என்று கேட்டிருக்கிறார்கள்.

அதிலே வேடிக்கை என்னவென்றால், இப்படி ஒரு பரிவர்த்தனை இல்லாமலே திரு. பொம்மை அவர்கள் 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தாரே அதற்கும், அவர்கள் கேட்காத பரிவர்த்தனையை அதிலே நுழைத்து, அதற்கும் நீங்கள் மின்சாரம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த நிபந்தனையைப் போட்டு பொம்மை அவர்கள் தண்ணீர் தரவில்லை.

4 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு. மின் கட்டணத்தை ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாயிலிருந்து 50 ரூபாய்க்குக் குறைத்து, 10 கோடி ரூபாய் இழப்பை இந்த அரசு இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றோடு விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் அல்லது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் அல்லது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பலன்கள் முற்றுப் பெற்றுவிட்டன என்று சொல்ல மாட்டேன். என்றைக்கும் விவசாயிகளுடைய பிரச்சினை நடந்து கொண்டே இருப்பவை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். எனவே, இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நிதிநிலை அறிக்கையிலே இன்னும் விரிவாக அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் பற்றிச் சொல்லப்படும் என்பதையும் இந்த மன்றத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திசை திருப்பும் முயற்சி

அடுத்து, காவிரிப் பிரச்சினை குறித்து நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள்கூட இன்று காலையிலே விளக்கமாகப் பேசினார்கள். அதைப்பற்றிச் சில ஆதாரபூர்வமான உண்மைகளை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். வழக்குகளை அதாவது காவிரிப் பிரச்சினையிலே தமிழ்நாட்டினுடைய உரிமையை மையப்படுத்தி நாம் தொடர்ந்திருந்த வழக்குகளை எந்தக் கட்சியையும் கேட்டுக் கொள்ளாமல் தமிழ்நாடு முதல் அமைச்சர் தானாக முன்வந்து அன்றைக்குத் திரும்பப் பெற்று விட்டார் என்கின்ற ஒரு குற்றச்சாட்டு. இங்கே அவையிலே பேசப்பட்ட - எடுத்து வைக்கப்பட்ட உண்மையான ஆதாரங்களை மறுத்து, ஏதோ வெளியிலே பத்திரிகைகளிலே புழுதி வாரித் தூற்றிவிட்டால் - அதை வெளியிடுவதற்கும் சில பத்திரிகைகள் இருக்கின்ற காரணத்தால், அவர்களே அந்தப் பத்திரிகைக்காரர்களே, இதை ஆராயாமல் இது எப்படி உண்மையான ஆதாரமா, எது போலியான ஆதாரம் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் சில பத்திரிகைக்காரர்கள் அதைப் பெரிய அளவிலே வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிற காரணத்தால் அவர்கள் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் 7.5.'82-லே இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டோம், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமலே வாபஸ் பெற்று விட்டோம் என்றும், இன்னொரு குற்றச்சாட்டாக ஹேமாவதி, கபினி, ஹாரங்கி நதிகளில் கட்டப்படும் அணைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்பு இருந்த கழக அரசு முன்வரவில்லை என்கின்ற இன்னொரு குற்றச்சாட்டையும் சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கின்ற

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது ஒரு தவறான எண்ணம் ஏற்படுத்தப் பெருத்த முயற்சி செய்யப்படுகிறது. அதைத்தான் அவர்கள் இங்கே பேசும் போது குறிப்பிட்டார்கள்.

ஒரு 20 சதவீத மக்கள், இன்னமும் இவைகளை எல்லாம் நம்பிக்கொண்டு இருக்கிற மக்கள், அவர்களைத் திருத்தி அவர்களுடைய விழிகளைத் திறக்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டார்கள். இந்த அரசு மாத்திரமல்ல, அரசுக்கு, அரசை நடத்துகின்ற ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கிற நாங்களும் உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதுபோன்ற புனை சுருட்டுகளால் உண்மைக்கு மாறான கருத்துக்களால், செய்திகளால் நாட்டு மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்புகின்றவர்களை அடையாளம் காட்டுகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் தொடர்ந்து ஈடுபட்டு ஆக வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய - உண்மைக்குச் சற்றும் பொருந்தாத ஒரு செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்கின்ற ஆதாரங்கள் மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

21.5.1972 அன்றையதினம் இந்திராகாந்தி அம்மையார் சென்னை வந்தார்கள். அவர்களிடத்தில் நான் காவிரிப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினேன். அதைப் பற்றி பெங்களூரிலிருந்து வெளியாகின்ற 'டெக்கான் ஹெரால்டு' என்ற பத்திரிகையிலே பின்வருமாறு செய்தி வந்தது:

> **"Prime Minister Indira Gandhi said today that inter-state disputes at river waters should be thrashed out by the Chief Ministers concerned. It is much easier that way. If there is anything I can do, I will certainly help. She told the pressmen after Tamil Nadu Chief Minister Karunanidhi had met her."**

இந்தச் செய்தி 'டெக்கான் ஹெரால்டு' பத்திரிகையிலே அன்றைக்கு வந்து இருக்கிறது. அப்படிச் சந்தித்துப் பேசிய பொழுதுதான் அவர்கள் என் இடத்திலே சொன்னார்கள். வழக்கு இருக்கும்போது பேசுவது என்பது சற்றுச் சிரமமான காரியம். இரு தரப்பிலும் எரிச்சல் ஊட்டக்கூடிய நிலைமையிலே பேச்சுவார்த்தை அமைய வேண்டாம்.

ஆனாலும் இவர்கள் நிபந்தனையை வலுவிலே புகுத்தி, அதையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் கேட்ட தண்ணீரைப் பற்றி எந்தவிதமான பதிலும் கிடையாது. திரு. வீரேந்திரபாட்டீலைப் பொறுத்தவரை நானும் அவரை மிக நன்றாக உணர்ந்தவன். அவருக்கும் என்னை மிக நன்றாகத் தெரியும். இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ, எப்படி தமிழ்நாட்டிற்கு அரிசி வழங்கக்கூடாது என்று மத்திய அரசு அன்றைக்கு முடிவு எடுத்ததோ, அன்றைக்கு தமிழக மக்களுடைய வயிற்றிலே அடித்ததோ, அதைப்போல தி.மு.க. ஆட்சி இருக்கின்ற காரணத்தால் தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களிலே இருக்கின்ற விவசாயிகளுடைய வயிற்றிலும் அடிக்கலாம் என்று அவர்களுக்கு யாராவது, அரிசி வழங்காதவர்கள் இப்போது இந்த அறிவுரையை வழங்கியிருப்பார்களோ என்று நான் எண்ணிட வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன்.

ஒரு மனிதாபிமானம்கூட இல்லாமல், மனித நேய உணர்வு கூட இல்லாமல் தஞ்சையிலே வாடுகின்ற, திருச்சியிலே வாடுகின்ற, தென்னார்க்காடு மாவட்டத்திலே வாடுகின்ற விவசாயிகளுக்கு நாம் பலமுறை கேட்டும்கூட - இன்னும்கூட சொல்கிறேன் - மூன்று நாட்களாக நான் தொலைபேசியிலே அவர்களோடு தொடர்பு கொள்ள முயலுகிறேன். ஆனால் தவிர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களால் பேச இயலவில்லை. இவ்வளவு நெருங்கிய நண்பர் பேச முடியவில்லை என்றால் எவ்வளவு பெரிய அரசியல் தாக்கம் இதிலே விளையாடுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

எதையும் பேசக்கூடியவர்கள் இதையும் பேசுவார்கள்!

சில பேர் கேட்கிறார்கள், முதலமைச்சர் ஏன் அங்கே போகக் கூடாது என்று. அங்கே போனால் சட்டசபையை விட்டு விட்டு எங்கே போனார் என்று கேட்பார்கள். எதையும் பேசக்கூடிய அரசியல்வாதிகள் இதையும் பேசுவார்கள். எனவேதான் நான் இந்த அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும்,காவேரி தீரத்திலும் வாடிக் கொண்டிருக்கின்ற, காய்ந்து கொண்டிருக்கிற அந்த நிலங்களை, பயிர்களைக் காப்பாற்ற மீண்டும் ஒரு முறை என்னுடைய நெருங்கிய நண்பர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திரபாட்டீல் அவர்களே,

உங்களால் இயன்றதைச் செய்யுங்கள், 10 டி.எம்.சி.யோ, 15 டி.எம்.சி.யோ தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று மிகுந்த பணிவன்போடு இந்த அவையின் சார்பாக வீரேந்திர பாட்டீல் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளுடைய நிலைமையைப் பற்றி நண்பர் சொக்கர் அவர்கள் இங்கே விரிவாகப் பேசினார்கள். அவருக்கு விரிவாக நான் பதில் சொல்ல விரும்பினேன். ஆனால் அவர் இங்கே இல்லை. அவர் இங்கே இல்லா விட்டாலும் கூட நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும். சில பேர் தங்களுடைய கடமையைச் செய்ய மறந்தாலும்கூட, கடமைகளை கடமைகள் என்று உணர மறுத்தாலும் கூட, நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

நிதி ஆதாரங்களைப் பெருக்க அரசு செய்த வழி வகைகள்

நகராட்சிகளுடைய நிதியாதாரங்கள் கவலைப்படத்தக்க அளவில் இருப்பதை இந்த அரசு உணராமல் இல்லை. அவைகளை எல்லாம் உணர்ந்திருக்கிற காரணத்தால், நகராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து வைத்துப் பேசியும், அதிகாரிகள் மட்டத்திலே கலந்து பேசியும், நிதி ஆதாரங்களை நகராட்சிகள் மேலும் பெருக்கிக் கொள்ள என்னென்ன வழி வகைகளைச் செய்யலாம் என்பதைக் குறித்து வரவு செலவு திட்டத்திலே ஒரு நல்ல அறிவிப்பை இந்த அரசு வெளியிட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமானால் நம்முடைய சென்னை மாநகராட்சியை எடுத்துக் கொண்டால் - பம்பாய் மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய். ஆனால் சென்னை மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் வெறும் 68 கோடி ரூபாய். ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பட்ஜெட்டைக் கொண்ட பம்பாய் மாநகராட்சி மன்றத்தையும், 68 கோடி ரூபாய் அளவுக்கு இயங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்தின் நிலைமைகளையும் எண்ணிப் பார்த்தால், ஏதாவது ஒரு முயற்சி எடுத்து இந்த வருமானத்தை - இந்த பட்ஜெட்டினுடைய தொகையை விரிவாக்க வேண்டும் - பெருக்க வேண்டும் என்ற அந்த நிலையை இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

முன்பிருந்த அ.தி.மு.க. அரசு 1.6.1986-இல் நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிகளிலே பணியாற்றும் இதர அலுவலாளர்கள் ஆகியவர்களையெல்லாம் அரசு அலுவலாளர்களாக ஆக்கி ஆணையிட்டது. ஆனால் அந்த ஆணை நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1986-இல் போடப்பட்ட அந்த ஆணை நடைமுறைக்கே வரவில்லை. ஆணையினுடைய விவரம் என்னவென்றால் நகராட்சி ஆசிரியர்கள் - அதாவது நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத இதர அலுவலாளர்களை, ஊழியர்களை அரசு அலுவலர்களாக ஆக்கி அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் அந்த ஆணை நடைமுறைக்கே வரவில்லை. இப்போது இந்த அரசு அதைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி) அதாவது, நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளிகளிலே பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோருடைய முழுச்செலவையும் 1.4.1990 முதல், அரசாங்கமே நேரடியாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடிக்கு மேல் மீதமாகும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அரசின் பரிசீலனையில் கடந்த ஆட்சிக்கால இன்ஷூரன்ஸ் திட்டம்

முக்கியமாக ஒன்றைச் சொன்னார்கள். பலரும் பேசினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு இன்ஷூரன்ஸ் திட்டம் இருந்தது. 10 ரூபாய் தொழிலாளர்களிடத்திலே - ஏழைகளிடத்திலே வாங்கப்பட்டது. அதே ரூபாய் அவர்களுக்குத் திருப்பித் தரப்படாமலேயே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. சில பேருக்கு ரூ.6.50 தான் திருப்பியனுப்பப்படுகிறது - இது நியாயமா என்றெல்லாம் திரு. பீட்டர் அல்போன்ஸ் தொடங்கி மற்றும் இங்கே உள்ள திரு. பொன். விஜயராகவன் போன்றவர்களும், மற்றவர்களும் கேட்டார்கள்.

இந்தத் திட்டம் 1984-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இதிலே 16 இலட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்ந்தார்கள் என்பதைவிட, சேர்க்கப்பட்டார்கள் என்பதுதான் சரியான தகவல். ஒரு 3 அல்லது 4 இலட்சம் பேர்தான் அவர்களாகவே முன்வந்து சேர்ந்தார்கள். இதிலே அதிகப்படியான பேர்களைச் சேர்க்க வேண்டுமென்று அன்றைக்கு கிராமங்களிலேயிருந்த அதிகாரிகள்-

வி.ஏ.ஓ. போன்றவர்களெல்லாம் உத்தரவிடப்பட்டு ''நீங்கள் இவ்வளவு பேரைச் சேர்த்தாக வேண்டுமென்று'' உத்திரவிடப்பட்டு, அவர்களும் அதன் காரணமாகப் பலபேரைச் சேர்க்க முயன்று, அதிலே தோல்வியடைந்து, அவர்களே சில பெயர்களை எழுதி, அவர்களுக்குக்கான ரூ.10-ஐயும் அவர்களே கட்டினார்கள்.

அதன்படி 16 இலட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்க்கும் போதே என்ன நிபந்தனை என்றால் இந்த 10 ரூபாயில் 3.50 ரூபாய் 'லைப் இன்ஷூரன்சுக்குச்' சென்றுவிடும். மீதமுள்ள 6.50 ரூபாய்தான் உங்களுடைய கணக்கில் வைப்பு நிதியாக வைக்கப்படும் என்று 6.50 ரூபாய் அளவுக்கு மட்டுமே அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டது. அப்படி வைக்கப்பட்ட நிலையில் 6 ஆண்டுக்கு, வசூலாகிற ரூ.120-இல் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 75 ரூபாய்தான் அவர்களின் வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, வட்டியோடு அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதிலே 4 இலட்சம் பேரைத் தவிர 12 இலட்சம் பேர் 2, 3 மாதங்களுக்குப் பிறகு பணத்தை ஒழுங்காகக் கட்டவில்லை. 4 இலட்சம் பேரிலும் பெரும்பாலோர் கட்டவில்லை.

இவைகளையெல்லாம் ஆராய்ந்து இந்தப் பணத்தை ஓரளவுக்கு உரிய முறையில் அவர்களுக்குத் திருப்பித் தருவதற்காக இன்றைக்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. உறுப்பினர் அர்ஜுனன் பேசும்போது ஒரு தகவலை - எல்லோரும் அதிர்ச்சியடையக்கூடிய ஒரு தகவலைச் சொன்னார். 'ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு இந்த அரசில் கம்பல்சரியாக வெயிட்டிங்கில் வைக்கப்பட்டுப் பழி வாங்கப்படுகின்றார்கள்' என்று சொன்னார். அதற்கான ஆதாரம் கேட்ட போது, ஆதாரங்கள் எதையும் அவர் தரவில்லை. எப்படி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் மீது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லி, அவர் அதை மறுத்த பிறகு எந்த ஆதாரமும் இல்லாமல் கைபிசைந்து நின்றாரோ, அதைப்போலவே இந்த 'கம்பல்சரி வெயிட்டிங்' பற்றி ஒரு தகவலைச் சொன்னார் - தவறான தகவலைச் சொன்னார்.

யாரையும் பழிவாங்குகிற அரசு அல்ல!

இந்த அரசைப் பொறுத்தவரையில் யாரையும் பழி வாங்குகின்ற அரசு அல்ல. கழக அரசிலே கூட ஒரு சிலர் கம்பல்சரியில் வெயிட்டிங்காக இருக்க நேரிட்டிருக்கின்றது. ஆனால் அது ஒரு சில நாட்களுக்கு - ஐந்து, பத்து நாட்களுக்குத்தான். ஆனால் பழி வாங்கப்படுவதற்காக அல்ல. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் - அந்தப் பட்டியலிலே முப்பது நாட்களுக்கு மேல் யார் யார் கம்பல்சரி வெயிட்டிங்கில் வைக்கப் பட்டிருந்தார்களோ அவர்களுடைய பெயர்களை மட்டும் படிக்கின்றேன். 30 நாட்களுக்குள் வெயிட்டிங் லிஸ்ட்டிலே இருந்தவர்கள் தனியாக ஐம்பது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கும். முப்பது நாட்களுக்கு மேலாக கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால்,

1.	எம்.எ.கே. தயாப்	ஐ.ஏ.எஸ்.	1986	87	நாட்கள்
2.	ஏ.எஸ். பத்மநாபன்	...	1983	30	...
3.	எஸ்.ஏ. சுப்ரமணி	...	1986	30	...
4.	வி. செல்வராஜ்	...	1987	33	...
5.	அஷோக் ஜோஷி	...	1987	50	நாட்கள்
6.	எஸ். அரவிந்த்	...	1986	42	...
7.	ஏ. நாகராஜன்	...	1983	53	...
			1986	30	...
8.	எம். ராமு	...	1982	88	...
			1985	72	...
9.	கே.ஏ. மாத்யூ	...	1987	53	...
10.	எஸ். ஸ்ரீனிவாசன்	...	1982	35	...
11.	சித்ரா ஜெயபாலன்	...	1983	45	...
12.	கிருஷ்ணசாமி ராஜீவன்	...	1984	39	...
13.	எம். மாணிக்கவேலு	...	1985	63	...
14.	எம். கனகசபாபதி	...	1986	78	...
15.	டி.ஆர். சீனிவாசன்	...	1982	36	...
16.	லங்க்தாசா	...	1982	56	...
17.	ரெங்கமணி	...	1982	120	...
18.	ஆர். நாகராஜன்	...	1981	41	...

இவர்களை அன்னியில் 53 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 30 நாட்களுக்கும் குறைவாக கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருந்திருக்கின்றார்கள்.

காவல்துறையிலே ஐ.பி.எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் அதிகம் பேர் இருக்கின்ற காரணத்தால் ஐம்பது நாட்களுக்கு மேல் கம்பல்சரி வெயிட்டிங்கிலே அ.தி.மு.க. ஆட்சியிலே - கடந்த கால ஆட்சியிலே இருந்தவர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1.	கே.ஜி. தினமணி	ஐ.பி.எஸ்	1981	64	நாட்கள்
2.	ஆர். ராஜகோபாலன்	...	1981	57	...
3.	நாஞ்சில் குமரன்	...	1982	58	...
4.	வி.கே. ராஜ கோபால்	...	1982	62	...
5.	ஆர்.கே. ராகவன்	...	1982	87	...
6.	ஜோசப்	...	1982	73	...
7.	திலகவதி	...	1983	56	...
8.	எஸ். கணபதி	...	1985	63	...
9.	ஆர்.எஸ். சவானி	...	1985	50	...
10.	ஆர்.வி. சுப்ரமணியன்	...	1985	107	...
11.	வி.கே. ராஜகோபால்	...	1985	107	...
12.	கே. கந்தசாமி	...	1985	62	...
			86-87	72	...
13.	வி.கே. ராஜகோபால்	...	1987	69	...
14.	திலகவதி	...	1988	75	...
15.	கே.ஜி. கோபாலகிருஷ்ணா	...	1988	95	...
16.	கணேசன்	...	1988	60	...

ஆனால் அர்ஜூனன் பேசும்போது - இல்லாததைச் சொல்லி - இப்போது சில பேர் வெயிட்டிங் லிஸ்டில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தை எல்லாம் உள்துறை செயலாளரின் சம்பளத்திலும், டி.ஜி.பி. சம்பளத்திலும் பிடித்துக் கொள்வீர்களா என்று கேட்டார்.

இப்போது யாரும் வெயிட்டிங் லிஸ்டில் வைக்கப்படவில்லை. இப்போது படித்துக் காட்டினேனே - அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தை எல்லாம் யாரிடமிருந்து பிடித்துக் கொள்வது என்பதை அ.தி.மு.க. வின் எதிர்க்கட்சித் தலைவர் இங்கேயிருந்தால் சொல்லியிருப்பார். இவைகளை எல்லாம் சொல்ல வேண்டுமே என்பதற்காகவோ என்னவோ அவர்கள் எல்லாம் இன்றைக்குப் போய் விட்டார்கள். பரவாயில்லை.

டிராக்டர், ஸ்கூட்டர் எண்களைக் கூறி கார் என்பதா?

இன்னொன்றையும் அர்ஜுனன் சொன்னார். அவருடைய தலைவர் அல்லது தலைவியார் ஹைதராபாத் சென்றதாகவும், அவரைப் பின்பற்றி சி.ஐ.டி.க்கள் சென்றதாகவும் சொல்லி, அதை மெய்ப்பிக்கின்ற வகையிலே - சி.ஐ.டி.க்கள் சென்ற கார்களின் நம்பர்களை எல்லாம் இங்கே சொன்னார். அது பதிவேட்டிலே கூடப் பதிவாகியிருக்கின்றது. 'எங்களுடைய பொதுச் செயலாளர் சொந்த வேலையாக ஹைதராபாத் சென்ற போது சி.ஐ.டி. அதிகாரிகள் டி.டி.ஓ. 3448, டி.டி.எல். 149 என்ற எண் உடைய இரண்டு கார்களிலே பின் தொடர்ந் தார்கள்' என்றும் கூறினார்.

டி.டி.எல். 149 என்ற எண் உடைய வாகனம் கார் அல்ல, அது ஒரு ஸ்கூட்டர். இது சேலம் பெருமாள் கோவில் தெரு கதவு எண் 12ஏ வீட்டில் வசிக்கும் வரதப் பிள்ளை மகன் சி.வி. சுப்பிரமணியம் என்பவருக்கு உரியது. இன்னொன்று - டி.டி.ஓ. 3448 என்ற எண் உள்ள வாகனம் கார் அல்ல-அது ஒரு டிராக்டர். அது தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, பாளையங் கோட்டை கிராமம், பன்னீர் செல்வம் மனைவி திருமதி ப. லலிதா என்பவருக்குச் சொந்தமானதாகும்.

இப்படிப்பட்ட ஆதாரங்களை அள்ளி வீசி அவர் நேற்றைக்குப் பேசி இருக்கிறார்.

மதுவிலக்கு, கள்ளச் சாராயம் இவைகளைப் பற்றி நம் முடைய பூவராகன் அவர்கள் வெகு விரிவாகப் பேசியதை நான் படித்துப் பார்த்தேன். நான் அப்போது அவையில் இல்லை. பிறகு படித்துப் பார்த்தேன். யாருடைய பேச்சுக்களும் அலட் சியம் செய்யப்படக் கூடாது என்பதற்காக எல்லோருடைய பேச்சுக்களையும் நான் படித்துப் பார்த்தேன். கள்ளச் சாராயம் இன்றைக்குப் பெருகி ஓடுவதாக அவர்கள் எடுத்துக் காட் டினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகக் கடும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

ஆனால் முழுமையாக ஒழிந்துவிட்டது என்று மார்தட்டிக் கொள்ளத் தயாராக இல்லை. அது முழுவதும் ஒழிக்கப்படு வதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக,

காவல் துறையினுடைய ஒத்துழைப்பு மிக மிக அதிகமாகத் தேவை. ஏனென்றால், இதிலே அவர்களுக்கே சில இடங்களில் உடன்பாடு இருக்கிறது. அவர்களுக்கே சிலருக்கு, நமக்கெல்லாம் தேர்தல் அலையன்ஸ் இருப்பதைப் போல, அவர்களுக்கு இதிலே அலையன்ஸ் இருக்கிறது என்பதெல்லாம் வெறும் கற்பனைகள் அல்ல, உண்மைகளாக இருக்கிற காரணத்தால் இனிமேல் இந்தக் கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபடுகிறவர்களை தண்டிப்பதை விட, அதற்குத் துணை போகிறவர்கள் காவலர்களாக இருந் தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மாத்திரம் குண்டர் சட்டம் அல்ல, அதற்குத் துணை போகிற காவல் துறை அதிகாரிகளையும் குண்டர் சட்டம் தாக்கும் என்ற அளவிலே அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் மிக உறுதியோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்ற ஆண்டு கவர்னர் உரையில் பத்தி 14-அதிலே ஒன்றைச் சொன்னோம். நீதிமன்றங்களில் மதுவிலக்கு சம்பந்த மாகத் தேங்கிக் கிடக்கும் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகளில் விரைவில் தீர்வு காண மதுவிலக்குச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதன்படி பிப்ரவரி மாதம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தோம். அதன்படி மதுவிலக்குச் சட்டத்தில் 24-டி என்ற பிரிவு திருத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் நீதிமன்றம் மூலமாக 1988-ஆம் ஆண்டு முழுவதும் வசூலான தொகை - 1988-இல் நீதிமன்றம் மூலமாக இந்த சாராய வழக்குகளில், மதுவிலக்கு வழக்குகளில் வசூலான தொகை 37 இலட்சத்து 15 ஆயிரத்து 460 ரூபாய். ஆனால் 1989-இல் நவம்பர் மாதம் வரையில் நாம் எடுத்த முயற்சிகளின் காரணமாக, நீதிமன்றத் திலே வழக்குகளை விரைவுபடுத்தி நடத்தியதன் காரணமாக, அபராதமாக வசூலான தொகை 7 கோடியே 2 இலட்சத்து 29 ஆயிரத்து 120 ரூபாய். இதில் 35 இலட்சத்திற்கும் 7 கோடிக்கும் உள்ள வேறுபாட்டை நான் உணர்த்தத் தேவை இல்லை. எனவே, நீதிமன்றங்கள் மூலமாகப் பெரும்பாலான வழக்குகள் விரைவில் பைசல் செய்யப்பட்டன என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

அதல்லாமல், 1988-ஆம் ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் 5 இலட்சத்து 17 ஆயிரத்து 392 வழக்குகள் இருந்தன. இவைகளைச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தோமே அதன்மூலம் கம்பவுண்டிங் முறையிலே அதாவது முன்முடிவு எடுக்கப்பட்டு, கம்பவுண்ட் செய்து, தீர்க்கப்பட்ட வழக்குகள் அதிலே 2 இலட்சத்து 93 ஆயிரத்து 42. 1989 நவம்பர்

2.	30.12.89 வரை இருப்பாக உள்ளது ஆரம்ப இருப்புடன் சேர்த்து ”	: 1411.595
3.	பயன்படுத்தப்பட்ட நிதி (ரூ. இலட்சத்தில்)	: 1438.150
4.	1989-90-ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் இலக்கு (இலட்சத்தில்)	: 56.420
5.	மனித சக்தி நாட்கள் திரட்டப்பட்டது (இலட்சத்தில்)	: 74.314
6.	ஆதிதிராவிடர்களுக்குக்கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை	: 4256
7.	முடிக்கப்பட்ட பிற வேலைகள்	: 4455

ரா. சிவசுப்பிரமணியன், எம்.ஏ.,
திட்ட அலுவலர் (பொ)

சமீர் வியாஸ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும் பெருந்தலைவர்

தொலைபேசி: 79462

சுவையும், மணமும் நிறைந்த

சாயிபாபா காபி அருந்தி மகிழுங்கள்

சாயிபாபா காபி ஒர்க்ஸ்

நெ.8, R.K.V. ரோடு, ஈரோடு - 638 001

PROP: N. இராதாகிருஷ்ணன்

கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் இருக்கும் காரைக் குடிக்கு அருகில் உள்ள நெல்லிக்கா ஊருணி கிராமத்தில், 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக் கும் கவியரசு கண்ணதாசன் மணிமண் டபத்திற்கு 30.1.90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு அரசு சார்பில் உரு வாக்கப்பட இருக்கும் இந்த நினைவு மண்டப அடிக்கல் நாட்டு விழாவுக்கு, மாண்புமிகு செய்தி மற்றும் தொழி லாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன். முத்துராமலிங்கம், டாக்டர் சந்திரசேகரன் ஆகியோரும் - திரு. வை. கோபால்சாமி, எம்.பி., சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். தென்னரசு, திரு. இராம. நாராயணன், காரைக்குடி நகராட்சி மன்றத் தலைவர் திரு. சிவசிதம்பரம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன் இ.ஆ.ப. ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

இந்த விழாவில் - 82 இலட்சம் ரூபாய் அளவில் - தையல் எந் திரங்கள், ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள், மூவலூர் இராமா மிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி போன்ற அரசு நல உதவிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 5,800 ஏழை, எளிய மக்களுக்கு வழங் கப்பட்டன. பரமக்குடி-திருச்சிராப் பள்ளி வழித்தடத்தில் இரண்டு பேருந் துப் போக்குவரத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

செய்தி, சுற்றுலாத் துறைச் செய லாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் வரவேற்புரை யாற்றினார். விழா முடிவில், செய்தித் துறை இயக்குநர் திரு. கி. இராஜ மாணிக்கம், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

கவியரசு கண்ணதாசன் மணி மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"இங்கே வை. கோபால்சாமி பேசும்போது - எழுச்சியோடும், மிக்க மகிழ்ச்சியோடும் இந்த விழா நடப்ப தாகக் கூறினார். வாழ்ந்து முடிந்த ஒரு நண்பருக்கு வாழ்ந்து கொண்டிருக் கின்ற மற்றொரு நண்பர் நினைவு மண்டபம் எழுப்புவதைக் கேட்டு அவர் மகிழ்ந்து இருக்கக்கூடும்.

"நான் மகிழ்ந்திடும் உள்ளத்தோடு அல்ல; நெகிழ்ந்திடும் உள்ளத்தோடு கலந்துகொள்கிறேன். பாசமிகு நண்பர் கண்ணதாசனின் குடும்பத்தில் - அவரது துணைவியார் திருமதி பார்வதி கண்ணதாசன், மகன்கள் காந்தி கண்ணதாசன், கண்மணி சுப்பு, கண்ணதாசனின் சகோதரர் திரு. கண்ணப்பச் செட்டியார் ஆகியோர் இந்த விழாவில் கலந்துகொண்டு நன்றி தெரிவித்தனர். அவர்களிடம் நன்றியை எதிர்பார்த்தோ, உங்களிடம் நன்றியை எதிர்பார்த்தோ இதை நாங்கள் அமைக்கவில்லை.

"எனக்கும், கண்ணதாசனுக்கும் 1948-ஆம் ஆண்டு நட்பு ஏற்பட்டது. எங்கள் நட்பு, பொது வாழ்வில் ஒன்றோடு ஒன்று மோதியது உண்டு. ஆனாலும் இருவருடைய உள்ளமும் நட்பும் தொடர்ந்து தழைத்து வந்தது. 40 ஆண்டுக்கு மேலாக இருவரும் நண்பர்களாக வாழ்ந்தோம்.

"காரைக்குடியில் கண்ணதாசனின் திருமணம் நடந்தது. நானும், சகோ தரர் அரங்கண்ணலும் திருமணத்திற்கு

கழிவுநீர்க் குழாய் குப்பை கொட்டுவதற்கு அல்ல; கழிவுநீருக்காக



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்



ஐதராபாத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்களைச் சந்தித்து, தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி ஆகியோர் உடன் உள்ளனர். (4.2.90)

வந்து இருந்தோம். நாங்கள் மண விழாவில் கலந்துகொண்டதைப் பார்த்த கண்ணதாசன், எங்களை வாழ்த்திப் பேசுமாறு கூறினார். அப்போது அவரது அண்ணன் - இங்கு வந்துள்ள கண்ணப்ப செட்டியாரின் கண்கள், கனல் பொறி பறக்கச் சிவந்தன.

"கறுப்புச் சட்டைக்காரர்கள் இங்கு வந்து வாழ்த்துவதா என்று கடிந்து கொண்டார். நாங்கள்-காலம் ஒருநாள் மாறும், வெற்றி பெறுவோம் என்று அன்றைக்குச் சொல்லிக் கொண்டோம். இன்று அது நிறைவேறி இருப்பதைப் பார்க்கிறீர்கள்.

"அரசியலுக்கு அப்பாற்பட்டு, எங்கள் நட்பு மலர்ந்து, மணம் வீசியது. நட்பின் அடையாளச் சின்னமாகத் தான் இங்கு மணிமண்டபம் அமைக்கப் படுகிறது.

"1983-ஆம் ஆண்டு தமிழகச் சட்டசபை வரவு-செலவுக் கூட்டத்தில் கண்ணதாசனுக்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது; எத்தனையோ வாக்குறுதிகள் காற்றில் பறந்ததுபோல் இந்த வாக்குறுதியும் காற்றில் பறந்துவிட்டது.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கண்ணதாசனுக்கு மணிமண்டபம் கட்டுவோம் எனக் காரைக்குடியில் இராம. நாராயணனை ஆதரித்துப் பேசிய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அறிவித்தேன்.

"அதேபோல் இராம. நாராயணனை வெற்றி பெறச் செய்தீர்கள். அவரை வெற்றி பெறச் செய்ததற்கு மட்டும் இதைக் கட்டவில்லை. இப்போது போல அரசுப் பொறுப்பில் நான் இல்லாவிட்டாலும்- எனக்குள்ள ஆற்றலைப் பயன்படுத்தி ஆயிரம் பேரிடம் கையேந்தியாவது மணி மண்டபம் எழுப்பி இருக்கக்கூடும். இப்போது அரசு சார்பில், அதுவும் ஆருயிர் நண்பனுக்கு ஒரு நண்பரால் இந்த மணிமண்டபம் கட்டப்படுவது பெருமைக்குரியது.

"இடையில் எங்கள் நட்பைக் கெடுக்க எவ்வளவோ சூறாவளி வீசியது. நட்பின் காரணமாக அதையெல்லாம் மறந்து விடுகிறேன்.

"கண்ணதாசன் மறைந்த நேரத்தில் நான் எழுதிய கண்ணீர்க் கவிதையை இங்கு படிக்க அமைச்சர் நேரு கொண்டு வந்துள்ளார். (அந்தக் கவிதையை வாங்கி முதல்வர் அவர்கள் படித்தார். அது மேலும் உருக்கமாக இருந்தது) இது எனக்கும் கண்ணதாசனுக்கும் நட்பின் அடையாளமாக எழுந்த கண்ணீர் வரிகளாகும்!

"நினைவு மண்டபம் ரூ.30 இலட்சம் செலவில் ஒரு ஏக்கர் நிலத்தில் எழுப்பப்படும். இங்கு பேசிய எஸ்.எஸ். தென்னரசு இது ஒரு வருடத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டும் எனக் கூறினார். இந்த மண்டபம் 6 மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு, திறப்பு விழா நடைபெற வேண்டும் என அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

"கவிஞர் கண்ணதாசன் நலிந்தோருக்காகவும், ஏழை எளியோருக்காகவும் பாடியவர், அண்ணா-பெரியாருக்குப் பாடியவர். இந்த விழாவில் அரசு நலத் திட்ட உதவிகள் பல வழங்கப்பட்டன. தொடர்ந்து இந்த நல உதவிகள் வழங்கப்படும். கண்ணதாசன் புகழ் வாழ்க"

-இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசினார்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின் நிலையம்

ஒப்பந்த விளம்பரம்/கே:2 காண்ட்ராக்ட்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண்	வேலை விவரங்கள்	விவரக் குறிப்பு எண்	ஒப்பந்தப் பிரதியின் விலை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரத்தக்கதல்ல		வைப்புத் தொகை	ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசி நாளும் நேரமும்
			தமிழ்நாடு மட்டும்	தமிழ்நாடு தவிர்த்து வெளி மாநிலங்களுக்கு	ரூ.	
1.	எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நீர் பகுப்பாய்வு நிலையம் கட்டுதல்	எஸ்.இ.சிவில் பராமரிப்பு 8/1989-1990	ரூ.100/-	ரூ.125/-	ரூ.30,600/- (ரூபாய் முப்பதாயிரத்து அறுநூறு மட்டும்)	7.3.'90

டெண்டர் படிவங்கள் (6.3.'90 பிற்பகல் 3 மணி வரையில் விற்கப்படும். டெண்டர் படிவங்கள் வேண்டுவோர் வேலைக்கு எதிராகக் குறிப்பிட்ட தொகையைப் பண அஞ்சல் (மணி ஆர்டர்) மூலமாகவோ அல்லது நேரிலோ விளக்கவிவர எண்ணையும் சுய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு கணக்கு அலுவலர்/எண்ணூர் அனல் மின் நிலையம், எண்ணூர், சென்னை-600 057 என்ற முகவரியில் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் டெண்டர் படிவங்கள் உரியவர்கட்குச் சேராவிட்டாலோ, தாமதமாகப் போய் சேர்ந்தாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

டெண்டர் படிவங்கள் திறக்கப்படும் நாள் அன்று விற்பனை செய்யப்பட மாட்டாது. சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்கள் சம்பந்தப்பட்ட டெண்டர்தாரர்களில் வந்தவர்கள் முன்னிலையில் அதே தேதியில் மாலை 3.00 மணிக்குத் திறக்கப்படும். டெண்டர் ஏற்கும் அதிகாரி எந்த ஒரு டெண்டரையும் அல்லது டெண்டர்களையும் பிரிக்கவோ அல்லது எவ்விதக் காரணம் காட்டாது நிராகரிக்கவோ உரிமை பெற்றவராவார். டெண்டர்தாரர்கள் வைப்புத் தொகையை 7.3.'90 அன்று காலை 11.00 மணிக்குள் செலுத்திட வேண்டும்.

தலைமைப் பொறியாளர்/எ அமிநி&பேபாமிநி

ஒத்துழைப்பும் தொடர்ந்து இருந்திட வேண்டும் என்பதை நானும் உணர்கிறேன்.

அதற்கேற்ப மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்தி [illegible]சைத் தொழிலாக ஒரு காலத்திலே ஏறத்தாழ 60 ஆண்டுக் காலத்திற்கு முன்பு தொடங்கப்பட்ட - தொழில்கள் - [illegible] தொழில்கள் என்றாலும்கூட [illegible] அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல - இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் வசதி வாய்ப்புகளோடு வாழக் கூடிய சூழ்நிலை முன்பு இருந்தாலும் அதற்குப் பிறகு ஒரு சீர்குலைவு அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்டதும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவிலே - அதிலும் குறிப்பாகத் தமிழகத்திலே இந்தச் செயற்கை மணிக்கற்களைவெட்டி மெருகேற்றுகின்ற இந்தத் தொழிலை நாம் வளர்ப்பதற்குச் சில வாய்ப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

குறிப்பாக - ஏற்கெனவே தென் கொரியா, தைவான் போன்ற நாடுகளில் இந்தத் தொழில் மும்முரமாக நடைபெற்று, இப்போது அதை அவர்கள் ஏறத்தாழ கைவிட்டுவிட்ட நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால், நாம் இதை வளர்ப்பதற்கு வாய்ப்புக் கூறுகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட, கடமைப்பட்டிருக்கின்றேன்.

செயற்கை மணிக்கற்களை வெட்டி மெருகூட்டுவது என்பது, தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற செய்முறை உற்பத்தியாகும். இவை திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங்களில் மற்றும் கோவை மாவட்டத்தின் சில பகுதிகளில் ஏறக்குறைய 25 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ள ஒருபெரும் தொழிலாகும்.

சிறு கற்களாக வெட்டுதல், அதைச் சீவுதல், வெட்டிய கற்களை வடிவமைத்தல், வெட்டிய கற்களுக்குப் பட்டை தீட்டுதல், அந்தக் கற்களுக்கு மெருகூட்டுதல் போன்றவற்றுக்கும், செயற்கை மணிக்கற்களுக்குப் பட்டை தீட்டுவதற்கும், கற்களை வெட்டுவதற்கும், திறமை வாய்ந்த கைவினைஞர்கள் தேவைப்படுகிறார்கள். இத்தகைய தொழிலாளர்கள் நம்முடைய நாட்டில் திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் தான் ஏராளமாக இருக்கின்றார்கள். உயர்ந்த தரமுள்ள மூலப் பொருள்கள் இல்லாத காரணத்தால் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில், நான் ஏற்கெனவே சொன்னதைப் போலத் திறமை வாய்ந்த கைவினைஞர்கள் இருந்தும்கூட, செயற்கைக் கற்களை வெட்டி மெருகூட்டும் தொழில் ஏற்றுமதிச் சந்தையில் நல்லமுறையில் இடம் பெறவில்லை. இதன் விளைவாக வேலை வாய்ப்புகளில் தேக்கம் ஏற்பட்டு, ஏற்கெனவே தொழிலில் ஈடுபட்டவர்களின் கூலியை உயர்த்தவும் இயலவில்லை. இத்தகைய நிலைக்குப் பல காரணங்கள் உண்டு.

> அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாமல், உனக்கென்று வகுத்துக் கொண்ட நேரிய வழியில் செல்வாயானால், நீ கடந்திருக்கின்ற தொந்தரவுகளை எத்தனையோ ஆவாய்.
>
> —மார்க்கஸ் அரேலியஸ்

பழைய கருவிகள், பழங்காலத் தொழில்நுட்பம், ஒழுங்கான முறையில் கியூபிக் பிர்கனியாவும் மற்றும் மூலப் பொருளும் கிடைக்காதது ஒரு காரணமாகும். நவீன கருவிகளையும், உபகரணங்களையும் பயன்படுத்துவதில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி இல்லாதது ஒரு காரணம். தற்போது உபயோகத்தில் உள்ள கருவிகளும், உபகரணங்களும் 1940-ஆம் ஆண்டினைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன.

ஒருநாளுக்கு 12 மணி நேரம் வேலை செய்தால், சுமார் 13 ரூபாய் முதல் 20 ரூபாய் மாத்திரமே அவர்களுக்கு ஊதியம் கிடைக்கின்ற ஒரு நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. கைவினைஞர்கள் கியூபிக் பிர்கானியாவை மூலப்பொருளாகவும், நவீன வெட்டு மற்றும் மெருகூட்டும் கருவிகளையும்பயன்படுத்தினால் அவர்களுக்குத் தொழிலுள்ள திறமைசாலிகளைப் பொறுத்து தற்போது அவர்கள் ஈட்டும் தினக்கூலியை நான்கு மடங்கு உயர்த்த முடியும்.

வருங்காலத்தில் தொழில் முனைவோர்கள் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த முனைவதற்கு, ஒரு செயல்முறை விளக்க மையம் விரைவிலே உருவாக்கப்படும்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறுவதற்குத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டும் அளவில் சாத்தியமான நிலைத்திருக்கக்கூடிய நிலைகள் பற்றி விரிவான விவரங்களை அளித்திட தொழில்முனைவோர்களுக்கு வசதி செய்யும் நிலையமும் ஏற்படுத்தப்படும்.

பலதரப்பட்ட திறன் வடிவம் மற்றும் அமைப்புகளைக் கொண்ட கச்சா [illegible] வெட்டி மெருகேற்றப்பட்ட கற்களைத் தயாரிக்க நல்ல தொழில்நுட்பத்தை வழங்குவதற்காக எல்லா வசதிகளையும் கொண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையமும் செயல்படும்.

இப்படிப்பட்ட முயற்சிகளால் [illegible] பத்தி பெருகிடவும், 80 கோடி [illegible] அளவுக்கு மேல் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு வலிவு நமக்கு ஏற்படவும் முடியும் என்று நான் நம்புகிறேன்.

இப்போது நிரந்தரமாக ஒரு தொழிற்பேட்டை அமைவதற்கு நாம் அடிக்கல் நாட்டினாலும் கூட, இது அமைகின்ற வரையில் தற்காலிகமாக திருச்சியிலே உள்ள கலையரங்கத்தில் பயிற்சியளிப்பதற்காக ஒரு பயிற்சி மையம் நிறுவப்பட்டிருக்கிறது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின் உதவியால் செயற்கை மணிக்கற்களை வெட்டி மெருகேற்றும் நவீன எந்திரங்களை வாங்க 25 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு கைவினைஞருக்கும், கடனாக அளிக்கப்படவிருக்கிறது. வைரம் மற்றும் மணிக்கற்கள் மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து எந்திரங்களைக் கைவினைஞர்கள் வாங்க, இந்தச் சிறப்புத் திட்டம் உதவிடும். இது 10.5 சதவிகிதம் குறைந்த வட்டி கொண்ட கடனாக இருக்கும்.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

நூல் நயம்

காந்திஜி வாழ்வில்
சுவையான நிகழ்ச்சிகள்
தொகுதி-1,2.

தொகுப்பாசிரியர்: விஷ்ணு பிரபாகர்
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020

விலை: ரூ. 4. பக்கம்: 108.

அண்ணல் காந்தியடிகள் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள், இந்நூலின் இரண்டு தொகுதிகளிலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

சமூக நலம், வாழ்க்கை வளம் முதலான கருத்துக்கள் உள்ளடக்கிய அண்ணலின் அரிய கருத்துரைகள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பொதிந்துள்ளன.

பொதுவாக எல்லோரும் படிக்க வேண்டிய நூல் என்றாலும், குறிப்பாக இளைய தலைமுறை இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

திரு.வி.க. உள்ளமும்
உயர் நூல்களும்

ஆசிரியர்கள்: சக்திதாசன்
சுப்பிரமணியன்
ஜலஜா சக்திதாசன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி., சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ. 25 பக்கம்: 244.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் உள்ளத்தில் உதித்த உயர் நூல்கள் குறித்து ஆராய்கிறது இந்நூல்.

நூலின் தொடக்கத்தில், திரு.வி.க. எழுதிய 41 நூல்களின் பட்டியலைப் போட்டுக் காட்டி, பிறகு அன்னாரின் உரைநடைச் சிறப்பை எடுத்துக் கூறி, திரு.வி.க.வின் திருக்குறள்-விரிவுரை ஆராய்ச்சியை விளக்கிடும் பாங்கு போற்றுதற்குரியது.

திரு.வி.க.வும் சைவமும்-சன்மார்க்கமும் என்னும் தலைப்பில் உள்ள கட்டுரைகளில் நூலாசிரியர்கள் தம் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் திரு.வி.க..வின் சிறப்பியல்புகள், தொண்டுகள் முதலான பண்புகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

தமிழ் ஆர்வலர் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் இந்நூலைப் படிப்பதால், தமிழ்த் தென்றலின் இனிய சுகத்தை அனுபவிக்க முடியும்.

-பி.வி. கிரி.

சமூகச் சீர்திருத்தத்தில்
பாரதப் பெண்மணிகள்

ஆசிரியர்கள்: திருமதி குஞ்சிதம்
அண்ணாமலை
புலவர் அண்ணாமலை
வெளியீடு: பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம்
பிள்ளை தெரு,
சென்னை-600 005

விலை: ரூ. 10. பக்கம்: 94

மும்மணிகளான மூன்று பெண்மணிகளைப் பற்றிப் பேசுகிறது இந்நூல்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அன்னை இந்திரா, சரோஜினிதேவி ஆகியோர் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளை இந்நூலில் கதை வடிவில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. தெளிவான நடையில் அனைவரும் படிப்பதற்கேற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

-பா. மறைமலை.

எழுத்தாளர்களுக்கு

ஆசிரியர்: எர்வாடி. எஸ். இராதாகிருஷ்ணன்.
வெளியீடு: சுதா பதிப்பகம்
4, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை: ரூ. 10.00 பக்கம்: 94

எழுத்தாளர்கள் தனது படைப்புகளை வானொலி, தொலைக்காட்சிக்கு அனுப்ப, நூலாய் வெளியிட, அவற்றை விற்பனை செய்ய, விருதுகள், பரிசுகள் பெற, இலக்கிய அமைப்புகளின் பாராட்டுகளை, பரிசுகளைப் பெற, சம்பந்தப்பட்ட விவரங்கள், விளக்கங்கள், முகவரிகள் இந்நூலில் தெளிவாய் உள்ளன.

மிகவும் பயனுள்ள வகையில் வியந்து பாராட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இந்நூல்; தங்கள் படைப்புகளை என்ன செய்யலாம், எதைச் செய்ய இயலும் என்று அறியாமல் தடுமாறும் படைப்பாளிகளுக்கு வழிகாட்டும்

-என். குமாரசாமி

> மாணவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மனத்திலே உள்ள மாசை நீக்க வேண்டும். மனத்திலுள்ள மாசை நீக்கி பகுத்தறிவைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மனம் தெளிவடைவர்; அறிவைப் போற்றுவார்கள்; அஞ்ஞானத்தைக் கைவிடுவார்கள்; உண்மையை நம்புவார்கள்; பொய்யை நம்ப மாட்டார்கள்.
>
> —பேரறிஞர் அண்ணா

வரப்பெற்றோம்

கீழ்க்காணும் நூல்கள் தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம் (மதுரை-625 020) வெளியிட்டவை:

1. யோகாசனங்கள்:

ஆசிரியர்கள்: க. அருணாசலம், வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி,

விலை: ரூ. 2 பக்கம்: 11

2. பற்களைப் பேணல்:

ஆசிரியர்: க. அருணாசலம்,

விலை: ரூ. 2 பக்கம்: 11

3. ஆரோக்கியமாக வாழ ஆறு செயல்கள்:

ஆசிரியர்: க. அருணாசலம்,

விலை: ரூ. 2 பக்கம்: 22

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ..., சென்னை-600 002.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



குடியரசு நாள் விழா,
(சென்னை)





பரிசு பெற்ற
அலங்கார ஊர்திகள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில், மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் - இரசாயனத்துறை அமைச்சர் திரு. எம்.எஸ். குருபாதசாமி அவர்கள் சந்தித்தார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும் உடன் உள்ளார். (18.2.90)

இந்த இதழில் ...

நீர் ஆதாரங்களைப் பெருக்குவோம்!
—முதல்வர் கலைஞர் ... 2

அன்னை நாகம்மையார் ... 5

தமிழக அரசும் மகளிர் நல்வாழ்வும்
—முதல்வர் கலைஞர் ... 9

பற்களைப் பாதுகாப்போம் ... 13

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - சிறப்புத் தேர்வு முடிவுகள் ... 17

பெரியாறு அணை வலிமை பெறுகிறது ... 33

தென்னாப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா ... 41

தமிழக அரசின் மானியம் பெறும் தமிழ்த் திரைப்படங்கள் ... 46

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

மாசி 17

மலர்: 20 1-3-1990 இதழ்: 17





நீர் ஆதாரங்களைப் பெருக்குவோம்

- முதல்வர் கலைஞர்

திருச்சியை அடுத்த துவாக்குடியில் தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலைய 'காவிரி வளாகத்தை' 29-1-1990 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே. என். நேரு அவர்கள், மாண்புமிகு கால் நடைத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ந. சுந்தரதேவன் அவர்கள், திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள், மற்றும் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சாமிநாதன், தமிழ்நாடு பாசன நீர்வள நிலை ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் மோகனகிருஷ்ணன், பாசன தலைமைப் பொறியாளர் திரு தம்பியண்ணன் ஆகியோரும் உரையாற்றினர். விழாவிற்கு வந்திருந்தோரைப் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத் தலைவரும், தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறைச் செயலாளருமான திரு. து. முருகராஜ், இ.ஆ.ப. வரவேற்று உரை ஆற்றினார். பாசன மேலாண்மைப் பயிற்சி நிலைய இயக்குநர் பேராசிரியர் இரா. கோபால கிருஷ்ணன் நன்றி நவின்றார்.

தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

''நீர் வளத்தைக் காப்பாற்றுவதும், பெருக்குவதும், அதைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் இன்றைய தினம் பயிற்சி பெற வேண்டியவைகளில் ஒன்றாக ஆகியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே இந்த நிலையம் இங்கே காட்சி அளிக்கின்றது.

உலகத்திலே 100 கோடி மக்கள் வேளாண்மை ஒன்றினை மாத்திரம் நம்பி வாழ்கிறார்கள்-என்றாலும் அப்படி வாழ்கின்ற மக்களில் நவீனப்படுத்தப்பட்ட பாசனத்தைப் பயன்படுத்தி வேளாண்மைத் தொழிலைப் பெருக்கிக் கொள்கிற நிலையில் இந்தியாவில்-அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில்-நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் தேவையான உரிய முன்னேற்றத்தை இன்னும் பெறவில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதைத்தான் இங்கே பொதுப் பணித் துறை அமைச்சர் தன்னுடைய விளக்கமான உரையில் இன்னமும் தமிழ்நாட்டினுடைய விவசாயிகள் தங்களுடைய உடமை, நீர், நிலம், அதன் வளம் என்பதை எண்ணிப் பாராமல் செயல்படுவதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

'அவர் இங்கே பேசும்போது இந்தியாவிலேயே மிகக் குறைவான நீர் வளம் உடையது ராஜஸ்தான் என்றும், அதற்கு அடுத்தது தமிழ்நாடு என்றும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.''

''இராமநாதபுரம் மாவட்டம் போன்ற சில மாவட்டங்கள் தமிழகத்தில் பாலைவனம் என்கின்ற பெயரில்இல்லாவிட்டாலும் பாலைவனத்திற்குரிய குணங்கள் என்னென்ன உண்டோ, பாலைவனத்திற்குரிய தகுதிகள் எவையெவை உண்டோ, பாலைவனத்திற்குரிய தீமைகள் எவையெவை உண்டோ, இவைகள் எல்லாம் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு இன்றைக்கு உண்டு.

''தமிழகம், இந்தியாவிலேயே நீர்வளம் குறைந்த மாநிலம் என்பது மாத்திரம் அல்ல. மேலும் மேலும் இன்றைக்கு நீர் வளம்குறைந்து கொண்டிருக்கிற மாநிலம். ஏற்கெனவே உரிமையோடு நாம் பெற்று வந்த காவிரி நீரைப்போல இன்றைக்குப் பெறமுடியாத-அதற்காக இன்றைக்கு வாதாட வேண்டும்-வழக்காட வேண்டும்-நடுவர் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட குரல் கொடுக்கின்ற அளவில் அமைந்திருக்கின்ற ஒன்றாக இன்றைக்கு மாறியிருக்கின்றது.

''காவிரி, கர்நாடகத்திலே தோன்றினாலும், காவிரியை இலக்கியம் ஆக்கியவர்கள், காவிரிக்குக் காவியம் படைத்தவர்கள், காவிரிக்குக் காப்பியம் பாடியவர்கள், 'நடந்தாய் வாழி காவிரி' என்று சிலப்பதிகாரத்திலே இயற்றியிருப்பவர்கள் தமிழர்கள் தான். ஆனால் அந்தக் காவிரியினுடைய முழுப் பயனை நாம் பெற வேண்டும் என்று சொல்லவில்லை, ஏற்கெனவே பெற்ற பயனை நாம் பெறவேண்டும் என்று வாதிடுகிறோம்.

''காவிரிப் பிரச்சினை இன்று நேற்றல்ல. ஏறத்தாழ பனிரெண்டு அல்லது பதிமூன்று ஆண்டுகளுக்கு மேலாக-இன்னும் சொல்லப் போனால்-இருபதாண்டுக் காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. இது 1924-ஆம் ஆண்டு – ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்ற அந்தக் கால கட்டத்தில் மைசூர் ராஜ்யம் என்று அழைக்கப்பட்ட அந்த அரசும், சென்னை ராஜ்யம் என்று அழைக்கப்பட்ட காவிரி நதி நீர் பாய்கின்ற அந்த தீரத்திற்குச் சொந்தக்காரர்களாகின்றவர்கள் பரிபாலிக்கின்ற இந்த அரசும் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தம். 'இது ஏற்கெனவே இருந்த நிலப்பரப்பு வேறு. இன்றைக்கு இருக்கின்ற நிலப்பரப்பளவு வேறு. எனவே 1924-ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செல்லாது' என்கின்ற ஒரு வாதம் கர்நாடகத்தில் நீண்ட காலமாக வைக்கப்படுகின்றது.

"நான் அண்மையிலே கூட சட்டப் பேரவையில் விளக்கம் அளித்த போது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இரண்டு அரசுகள் செய்து கொண்ட-ஒப்பந்தம் என்ற நிலையிலே இதைக் காண வேண்டுமேயல்லாமல், அந்த அரசுகள் ஒப்பந்தம் செய்துகொண்டபோது அதனுடைய நிலப்பரப்பு என்ன என்று-பார்க்கக் கூடாது. இன்றைக்கு இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டால், இன்னொரு ஐம்பதாண்டுக் காலத்திற்குப் பிறகு அந்த ஒப்பந்தம் செய்து கொண்ட இரண்டு அரசுகளுடைய நிலையைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கவேண்டுமேயல்லாமல், அந்த நேரத்திலே இலங்கையின் நிலப்பரப்பு என்ன? இந்தியாவின் நிலப்பரப்பு என்ன என்று யாரும் பார்த்துக் கொண்டிருக்க இயலாது. வாதத்திற்காக அப்படியே பார்த்தாலும்கூட 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது எந்த நிலப்பகுதிக்காக நீர் வேண்டும் என்று கேட்கப்பட்டதோ அதே நிலப்பரப்புத்தான் இன்றைக்கும் இருக்கிறது. திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகள் அடங்கிய இந்தத் தொலைதூரத்திற்குப் பெயர் காவிரி டெல்டா. அதிலே எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எனவே ஒப்பந்தம் செய்துகொண்ட அரசாங்கங்களின் பெயர்கள் மாறலாம். நிலப்பரப்பிலே அந்த அரசு அல்லது இந்த அரசு சில மாற்றங்களைப் பெற்றிருக்கலாம்.

"அந்த மாநிலத்திற்கும் இந்த மாநிலத்திற்கும் இடையிலே சில மாற்றங்கள் உருவாகியிருக்கலாம். ஆனால் எந்தப் பகுதிக்குத் தண்ணீர் வேண்டும் என்று 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதோ, அந்தப் பகுதிக்குத்தான் இன்றைக்குத் தண்ணீர் தேவை இருக்கிறது, தேவைப்படுகிறது என்று கேட்கிறோம்.

"நான் இந்த விழாவிலே இதனைக் குறிப்பிடுவதற்குக் காரணம் தண்ணீர் சிக்கனப்படுத்துவது எப்படி என்ற பயிற்சியும் இந்த மையத்திலே வழங்கப்படுகிற காரணத்தினாலேதான்.

"1974-75-ஆம் ஆண்டு வாக்கில் மத்தியில் உள்ள அமைச்சர்களின் முன்னிலையில் தமிழகம், கேரளம், கர்நாடகம், புதுவை ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் உரையாடி அங்கே பேசி எடுக்கப்பட்ட முடிவு-இறுதியாக ஆக்கப்படாததும், இறுதியாக ஆகாமல் முறிந்துவிட்டதுமான அந்த முடிவு; 'தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்ள தயாராய் இருக்கவேண்டும்' என்ற ஒரு கோரிக்கையை கர்நாடக அரசு வைத்தபோது நான் அதை ஏற்றுக் கொண்டேன். சிக்கனத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒரே நாளில் இத்தனை டி.எம்.சி. தண்ணீரைச் சிக்கனப் படுத்துகிறாம் என்று சொல்ல இயலாது.

"இத்தனை ஆண்டுக்கால இடைவெளியில் கொஞ்சம் கொஞ்சமாக மெல்ல மெல்ல நாங்கள் சிக்கனப் படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னேன். சிக்கனப்படுத்துகிறோம் என்றால் எப்படி? குறைத்துக் கொள்வது அல்ல. 'வருகிற தண்ணீரை, வாய்க்கால்களை நவீனப்படுத்தி, கழனி நீர் பாய்கின்ற அந்தப் பகுதிகளை நவீனப்படுத்தி சிக்கனப்படுத்திக் கொள்கிறோம்' என்று சொன்னோம். அதற்காகத்தான் உலக வங்கியிடம் இருந்து கழக ஆட்சி முன்பு இருந்தபோதுகூட உதவி கேட்டு அவர்கள் அந்தக் கால கட்டத்திலே நாற்பது கோடி ரூபாய் தருவதாக வாக்களித்தார்கள்.

"ஆனால் அந்த மாடர்னைசேஷன் ஸ்கீமை நிறைவேற்றக் கூடாது என்று கர்நாடக அரசு அன்றைக்கு மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக மத்திய அரசு நம்முடைய கோரிக்கைக்கு இணங்காமல் இங்கே துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப் போல இன்றைக்கு மாநில அரசின் செலவிலேயே காவிரி நீர் பாய்கின்ற பகுதிகளில் மாடர்னைசேஷன் ஸ்கீம் ஓரளவு நிறைவேற்றப்பட்டு வருகிறது."

"இந்த அரசு அமைவதற்கு முன்பு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் நீர் ஆதாரங்களைப் பெருக்கவும், அதற்கு வழிவகை, காணவும், கீழ் பவானித் திட்டத்திற்கு ஆண்டுக்கொரு முறை தண்ணீர்விட உத்தரவாதம் அளிக்கவும், வானம் பார்த்த பூமியாக இருக்கிற தென் மாவட்டங்களில் அதற்கேற்ற தானியங்களைப் பயிரிடும் நீர் ஆதாரங்களை ஆய்ந்திடவும், இவைகளுக்காகச் சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஒரு நீர்ப்பாசன மேம்பாட்டுநிலைக்குழு அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப திரு. திருமலை அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அது தன்னுடைய பணிகளை இன்றைக்கு ஆற்றிக் கொண்டிருக்கிறது. அந்தக் குழுவும், இந்த மையத்திற்கு வந்து இதன் பணிகளைப் பாராட்டியிருப்பதாகச் சொன்னார்கள்.

"நாம் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட மற்றொரு பிரச்சினை, காவிரி மாத்திரம் அல்லாமல் பாலாறு, வைகை, தாமிரபரணி போன்ற நதிகளும் அவற்றைச் சார்ந்த கால்வாய்களும் உரிய இடங்களில் கான்கிரீட் லைன் அமைக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அந்த முயற்சிகளிலும் இந்த அரசு-இந்த குழுக்கள், இதைப் போன்ற பயிற்சி நிலையங்கள் நடத்துகின்றவர்கள் அத்தனைப் பேர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று நடைமுறைப் படுத்த இந்த அரசு முன்வரும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்".

பன்முகப்படுத்தப்பட்ட மக்கள் நாற்றங்கால்

சிறு விவசாயிகளுக்கும், வறுமைக் கோட்டிலுள்ள விவசாயிகளுக்கும் வருமானம் கூடுதலாகக் கிடைக்கும் வகையிலும், மரம் வளர்க்கும் உணர்வுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடனும், இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. சிறு சிறு தேவைகளுக்கெல்லாம் வனத்தைச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்.

இந்தத் திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் 21 இலட்சம் நாற்றங்கால்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கும் பல்வகை நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாற்றுகளை உற்பத்தி செய்தவர்களுக்கு வழங்குவதற்காக மொத்தம் ரூ.9.50 இலட்சம் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலைசாதியினருக்கும், மகளிர்களுக்கும் இந்தத் திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

அன்னை நாகம்மையார்

—இரா. இராதா

மகளிர் நலம் காப்பதற்காகத் தமிழக அரசு உருவாக்கியுள்ள மகத்தான திட்டங்களில் ஒன்று, மகளிர் இளங்கலை வகுப்பில் படிப்பதற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் ஆகும்.

இந்தத் திட்டத்திற்கு தந்தை பெரியாரின் மனைவியார் நாகம்மையார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஈ.வெ.ரா. 'நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்' எனப் பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

நாகம்மையார் அவர்களைக் குறித்து இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இக்கட்டுரை இடம் பெறுகிறது.

சேலம் மாவட்டம் தாதம்பட்டியைச் சேர்ந்த ரெங்கசாமி நாயக்கர், பொன்னுத்தாய் ஆகியோரின் மகளாகப் பிறந்தார் நாகம்மையார். ரங்கசாமி, தந்தை பெரியாரின் தாயாரான சின்னத்தாய் அம்மையாரின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார்.

அதனால் இரு குடும்பத்தினரும் மிகவும் நெருக்கமாக இருந்து வந்தனர். ஒருவர் வீட்டுக்கு மற்றவர் விருந்துக்குப் போவது வாடிக்கை. அப்போதெல்லாம் சிறுவர் ராமசாமியும், சிறுமி நாகம்மாளும் சந்தித்துக் கொள்வர். நாகம்மாளிடம் ராமசாமி மிகுந்த அன்பு வைத்திருந்தார்.

சிறுமி நாகம்மாள் நல்லதோற்றம் படைத்திருந்தார். தோற்றத்திற்கேற்ற சிறந்த குணமும் அவரிடம் குடிகொண்டிருந்தது. அதேபோல் சிறுவர் ராமசாமியிடம் துணிச்சலும், தர்க்கவாதமும் உறைந்திருந்தன. சாதிபேதமில்லாத மனம் அவருக்கிருந்தது.

பள்ளிப்படிப்பில் ராமசாமிக்கு நாட்டமில்லாததால் அவர் தமது தந்தையார் நடந்திவந்த மண்டியில் வேலை பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆண்டுகள் பறந்தன. ராமசாமி 19 வயதுள்ள இளைஞரானார். அவருக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் எனப் பெற்றோர் நினைத்தனர். தங்களது குடும்பத் தகுதிக்கேற்றபடி செல்வந்தர் குடும்பத்துப் பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தனர். இந்த உண்மையை அறிந்த இளைஞர் ராமசாமி "நான் நாகம்மாளைத்தான் மணம் செய்து கொள்வேன்! வேறு எந்தப் பெண்ணையும் மணக்கமாட்டேன்" என்று பெற்றோரிடம் தெளிவாகக் கூறிவிட்டார்.

அப்போது நாகம்மாள் 12 வயது நிறைவெய்தியவராக இருந்தார்.

அவரது பெற்றோர் அவருக்குத் திருமணம் முடிக்க நினைத்து, மாப் பிள்ளையைத் தேடிக் கொண்டிருந் தனர். ஊரெல்லாம் வலை வீசி, இரண்டு மனைவிகளை இழந்து, மூன்றாவது திருமணம் செய்து கொள்வதற்குத் துடித்துக் கொண்டி ருந்த முதியவர் ஒருவரைத் தேடிப் பிடித்தனர். அவருக்குத் தங்கள் மகளை மணம் செய்விக்க முனைந் தனர். பெற்றோரின் திட்டத்தை அறிந்த நாகம்மாள் மறுப்புத் தெரி வித்தார். முதியவரை மணம் செய்து கொள்ள அவருக்கு விருப்பம் இல்லை. மேலும் அவர், ராம சாமிக்குத் தமது உள்ளத்தில் இடம் கொடுத்திருந்தார். ''மணந்தால் ராம சாமியை மணப்பேன்; இல்லா விட்டால் தற்கொலை செய்து கொண்டு இறப்பேன்'' என்று மிக உறுதியாகத் தெரிவித்தார்.

'ஆற்றில் விழு' என்று பெற்றோர் சொன்னாலும் தட்டாமல் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை சமுதாயத்தில் நிலவிவந்த காலத்தில்- அதிலும் பெண்களுக்கு உரிமையே கிடையாது என்ற பரிதாபநிலை படர்ந்திருந்த காலத்தில், 13 வயது நாகம்மாள் தனது விருப்பத்தைப் பெற்றோரிடம் துணிந்து கூறியது வியப்புக்குரிய செய்திதான்!

ராமசாமி - நாகம்மாள் திருமணம் 1898-ல் நடைபெற்றது.

மணமான இரண்டு ஆண்டு களில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால், அது 5 மாதம் வரைதான் உயிர் வாழ்ந்திருந்தது.

சீர்திருத்தக் கொள்கைகள் குறித்து விவாதிக்கும் திறமை அவருக்கு இருந்தது. தந்தை பெரியார் நடத்திய போராட்டங்களில் எல்லாம் அவரும் பங்கு கொண்டார். தந்தை பெரியார் அவர்களின் பொது வாழ்க்கை சிறப் படைந்ததற்கு நாகம்மையாரின் ஒத் துழைப்பு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

1920-ஆம் ஆண்டு, நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் துவங் கியது. நாகம்மையார் தமது சுக வாழ்வைத் துறந்தார். பட்டாடை களைக் கைவிட்டு முரட்டுக் கதர் ஆடைகளை அணிந்தார். வெள்ளையர் அரசுக்கு எதிராக காங்கிரஸ் இயக் கத்தில் முன்னோடியாகச் செயல் பட்டார் நாகம்மையார்.

மலேயா புறப்படுவதற்கு முன்னர்
தந்தை பெரியாரும், திருமதி நாகம்மையாரும்

1921-ஆம் ஆண்டு ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் நடைபெற்றது. ஆங்கிலேய அரசு அதற்கு 144 தடை ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையை மீறித் தந்தை பெரியார் கைதானார்.

மறுநாள் பெரியார் அவர்களின் தங்கை கண்ணம்மாள் அவர்களுடன், அன்னை நாகம்மையார் அவர்களும் தடையை மீறிப் போராட்டக் களத் தில் இறங்கினர். அரசோ திகைத்தது- திணறியது. 144 தடை நீக்கப் பட்டது. அன்னை நாகம்மையாரும் அவருடன் போராட்டத்தில் ஈடு பட்டவர்களும் கைது செய்யப்பட வில்லை. இந்தச் சூழ்நிலையில் கள்ளுக் கடை மறியல் தொடர்பாக அரசுடன் சமாதானப் பேச்சுக்கள் துவங்கின.

சர்.சங்கர (நாயர்) தலைமையில் 'மாளவியா மாநாடு' கூடியது. இந்த மாநாட்டில் பேசிய காந்தியார் ஈரோடு மறியல்கள் பற்றி வெகு வாகக் குறிப்பிட்டார். ''கள்ளுக் கடை மறியலை நிறுத்துவது என்றால் அதற்கு ஈரோட்டில் உள்ள இரு வரைத்தான் (அன்னை நாகம்மையார், பெரியாரின் சகோதரி கண்ணம்மாள்) கேட்க வேண்டும்'' என்றார் காந்தியார்.

1920-ஆம் ஆண்டு முதல், ஆறு ஆண்டுகள் நாகம்மையார் அவர்கள் எல்லா காங்கிரஸ் மாநாடுகளிலும் தமது கணவருடன் தவறாமல் பங்கு பெற்றார்.

மாகாண காங்கிரஸ் குழு மட்டும் இன்றி, அனைத்திந்திய காங்கிரஸ் குழுவுக்கும் நாகம்மையார் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1924-ஆம் ஆண்டு கேரளத்தைச் சேர்ந்த வைக்கம் என்ற ஊரில் சத்தியாகிரகம் ஆரம்பமானது. தாழ்த்தப்பட்டவர்கள் - தெருக்களில் நடக்கவே முடியாத நிலை அங்கு இருந்தது. இதனை எதிர்த்து எழுச்சி மிகு கிளர்ச்சி உருவானது. தந்தை பெரியார் இதில் ஈடுபட்டுக் கைதானார். அவரைத் தொடர்ந்து நாகம்மையாரும் கிளர்ச்சியில் ஈடு பட்டார். அவர், தமிழகத்தில் இருந்து பல பெண்களைத் தம்முடன் வைக்கம் கிளர்ச்சிக்கு அழைத்துச் சென்றார். கேரளப் பெண்களையும் அழைத்துக் கொண்டார். காங்கிரஸ் கட்சியின் உதவியையும் எதிர்பாராமல் தனித்தே போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினார் நாகம்மையார். கொட்டும் மழை, கடும் வெப்பம் போன்ற இயற்கைச் சூழலிலும் தமது போராட் டத்தைத் தொடர்ந்தார்; கைதானார்.

இது பற்றித் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், ''தீண்டா மையை வீழ்த்த வேண்டி வைக்கம் சத்தியாகிரகப் போரில் புகுந்து சிறை சென்று அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் சலியாது உழைத்து, வாகை மாலையையும் சூடினார்'' எனக் குறிப்பிட்டார்.

1925-இல் சுயமரியாதை இயக்கம் உதயம் ஆகியது. இந்த இயக்கத்திற் காகவே 'குடியரசு' ஏடு தொடங்கப் பட்டது. இந்த ஏட்டின் பதிப் பாசிரியர் மற்றும் வெளியீட்டாள ராகத் தமது இறுதிக்காலம் வரை செயல்பட்டார் நாகம்மையார். இந் தியாவில் பத்திரிகை வெளியீட்டாள ராகவும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்த முதல் பெண்மணி அன்னை நாகம்மையார் அவார்கள்.

சுயமரியாதை இயக்கத்துக்கு, ஆரம்பகாலத்தில் எதிர்ப்புகளே 'வரவேற்பு'களாக இருந்தன. வைதீகர் களின் எதிர்ப்பு, பழைய பத்தாம் பசலிகளின் எதிர்ப்பு, காங்கிரசாரின் கண்டனக் கணைகள் - இத்தனை இருந்தும் தளராமல் நாகம்மையார், தந்தை பெரியார் அவர்களுடன் தொண்டு புரிந்து, இயக்க வளர்ச் சிக்கு இணையற்ற உறுதுணையாக இருந்து பாடுபட்டார். மனிதத் தன்மை யற்ற முறையில் தந்தை பெரியார் அவர்களையும் நாகம்மையாரையும் குறித்துக் கண்டனக் கடிதங்கள் பல வரும். ''பொதுக்கூட்டத்தில் கொலை செய்யப்படுவீர்கள்'' என்ற அச் சுறுத்தல் கடிதங்களும் வரும். இவற் றிற்கெல்லாம் அஞ்சாமல் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தார் நாகம்மையார்.

அறியாமையிலிருந்தும், மூட நம்பிக்கையிலிருந்தும் மக்கள் விழிப்பு உணர்வு பெற, அண்டை மாநிலச் சுற்றுப்பயணங்கள் மேற்கொண்டு பிரச்சாரம் செய்தவர்நாகம்மையார் ஆவார். பொதுமக்கள் நலனுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்கள், இளைஞர்கள் அனை வரையும் தமது குழந்தைகளாகப் பாவித்து அவர்களுக்கு உதவிகள் பல செய்தார். எல்லோருக்கும் தாயாகத் திகழ்ந்தார்.

தந்தை பெரியாருடன் அன்னை நாகம்மையார் மலேசியா சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 'முன்னேற்றம்' என்ற சிங்கப்பூர் ஏடு குறிப்பிட்டதாவது:

''நாகம்மையார் அவர்களின் மலாய் நாட்டின் விஜயத்தினால் மலாய் நாட்டு மக்கள் எல்லாம் அவருக்கு அறிமுகமானார்கள். மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கம் அதி தீவிரமாய்ப் பரவி இருந்ததைப் பார்த்த அன்னை யாரின் களிப்பு அளவிடற்கரியது. சிங்கப்பூர் வந்து திரும்பும்போது, மலாய் நாட்டில் தங்களுக்குத் தேவை

யான பொருள் என்ன வேண்டு மென நாம் கேட்டதற்கு, 'நீங்கள் எல்லாம் இந்த மண்ணில் சுய மரியாதை இயக்கத்தைப் பரப்பி இருப்பதே நான் விரும்பும் பொருள்' என்று அன்னையார் சொல்லிய சொற்கள் இன்னும் நமது செவியில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன''.

—நாகம்மையாரின் பொதுநல நோக்கிற்கும் சுயநலமில்லா மனப் பாங்குக்கும் இந்தப் பாராட்டு வாசகம் எடுத்துக்காட்டு ஆகும்.

நாகம்மையார் கல்வி வாய்ப்பு அதிகம் பெறாதவர். அய்யா அவர் களுடன் மேற்கொண்ட பல மேலை நாட்டுச் சுற்றுப்பயணங்களிலும், பின்னர் சில சந்தர்ப்பங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்துக் கையொப்பமிடக் கற்றுக் கொண்டார்.

குடும்பத்தைக் கட்டிக்காப்பதில் அன்னையாருக்கு நிகர் அவரே! எத்தனை விருந்தினர் முன் அறிவிப்பு இன்றி வீட்டிற்கு வந்தாலும் அவர் களுக்கு உணவு அளிப்பதில் சலிப் படைந்ததே இல்லை. ஐந்து பேராக இருந்தாலும் ஐம்பது பேராக இருந் தாலும் எல்லாருக்கும் ஒரே வகை உப்சரிப்பு; எப்போது வந்தாலும் மனம் கோணாமல், முகம் சுளிக் காமல் அவர்களை உபசரிக்கும் பாங்கு நாகம்மையாருக்கே உரிய தனிச்சிறப்பு.

சுயமரியாதை இயக்கக் கொள்கை களில் நாகம்மையார் அவர்களிடம் விவாதித்து யாரும் வெற்றி பெற்றதே இல்லை எனலாம். ஐயா அவர் களுடன் சுற்றுப் பயணங்களில் தொடர்ந்து அவரும் ஈடுபடுவதைப் பற்றி அவர்களின் குடும்பத்தினர் பலமுறை இடித்துரைப்பதுண்டு.

அதைப் பொருட்படுத்தாத நாகம்மையார், தன் கணவர் விருப் பத்திற்கு மாறாக நடப்பதில்லை என்பதையே இறுதிவரை இலட்சிய மாகக் கொண்டு வாழ்ந்தார். தந்தை பெரியாரின் வாழ்க்கையில் இறுதி வரை ஒத்துழைத்து, தென்னாட்டின் அரசியல், சமுதாயத் துறையில் இணையற்ற மகளிர் குலத் தலைவி யாக விளங்கியவர் நாகம்மையார்.

1933-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நாகம்மையார் நோயுற்றார். ஈரோடு மிஷின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்; தந்தை பெரியார் தமது துணைவியாரின் அருகில் அல்லும் பகலும் அமர்ந்து கவனித்துக்

கொண்டார். மே திங்கள் 10 ஆம் நாளன்று வடஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற இருந்த சுயமரியாதை மாநாட்டுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை தந்தை பெரியாருக்கு ஏற்பட்டது. 'போகவேண்டாம்' என்று உறவினர் பலரும் தடுத்தனர். தந்தை பெரியார் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. திருப்பத்தூர் மாநாட்டுக்குச் சென்று விட்டார். மறுநாளே திரும்பி வந்துவிட்டார். அவர் திரும்பி வந்தவுடன், அவரது மனைவி நாகம்மையாரின் உயிர் பிரிந்துவிட்டது. கணவரின் வருகைக்காக உயிரைக் கையில் பிடித்துத் தாங்கிக் கொண்டிருந்தது போலவே அந்த நிகழ்ச்சி விளங்கியது.

நேசமிக்க மனைவி, வாசுகி மறைந்த போது, அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத திருவள்ளுவர்,

"அடிசிற் கினியாளே
அன்புடை யாளே
படிசொல் தவறாத பாவாய் -
அடிவருடி
பின்தூங்கி முன்எழும்
பேதாய் போதியோ
என்தூங்கும் கண்கள் இரா.

— என்று கழிவிரக்கத்துடன் பாடியதாகக் கர்ண பரம்பரைச் செய்தி ஒன்று உண்டு.

திருவள்ளுவரைப் போலவே தந்தை பெரியாரும், தமது துணைவியின் மறைவால் துடித்திருக்கிறார். மனைவியின் மரணம் ஏற்படுத்தியுள்ள சூழலை, அத்தனை கால இல்லற வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை - 14-5-1933 'குடியரசு' இதழில், தந்தை பெரியார் அவர்கள் உள்ளது உள்ளவாறு குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு:-

'எனதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11.5.1933 அன்றுமாலை 7.45 மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு இலாபமா, நஷ்டமா என்பது இதுசமயம் முடிவுகட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.

'எப்படியிருந்தாலும், நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்து விட்டேன். நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல், நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்', 'காலியாய்', 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்கமுடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும், பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ - போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்துகொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

'ஆனால், நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்து கொண்டிருந்தார் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

'நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழியத் தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக் கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

'அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும்போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

'ஆகவே, நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று - சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!

'எது எப்படியிருந்த போதிலும், நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை.

'நாகம்மாளை அற்ப ஆயுள்காரியென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு 48 வயது ஆனபோதிலும், அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறையானபோதிலும் இந்திய மக்களின் சராசரி வாழ்நாளாகிய 23½ - (இருபத்தி மூன்றரை) வயதுக்கு இரட்டிப் பென்றே சொல்லவேண்டும். 'செத்தால் சிரிக்கவேண்டும்; பிறந்தால் அழவேண்டும்' என்ற ஞான மொழிப்படி நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும் ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல், அதை ஒரு மகிழ்ச்சியாகவும், இலாபமாகவும் கருதவேண்டும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்றும் கருதுகிறேன்'.

பொது உடைமைத் தத்துவத்தைப் போதித்த கார்ல் மார்க்ஸிற்கு வாய்த்த துணைவி ஜென்னியைப் போல, பகுத்தறிவுத் தந்தை பெரியாருக்கு மனைவியாக வாய்த்தவர் அன்னை நாகம்மையார் என்று குறிப்பிடலாம்.

அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே தமிழக அரசு அன்னை நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்பு உதவித் திட்டத்தை உருவாக்கியிருப்பது பாராட்டுக்கு உரியது. ●

> ***சா***தாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்ற பெயரை யாருக்கு உபயோகப்படுத்தலாமென்றால் முதலில் நமது பெண் மக்களுக்குத்தான் உபயோகப் படுத்தலாம். ஏனெனில் நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களுடைய தாய்மார்களே.
>
> —*தந்தை பெரியார்*



தமிழக அரசும் மகளிர் நல்வாழ்வும்

முதல்வர் கலைஞர்

"நம் நாட்டின் பொது வாழ்வில், கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பல்வேறு சமூக சீர்திருத்த இயக்கங்களில் நான் பங்கேற்றிருக்கிறேன். தேசிய அளவில் முடிவுகள் எடுக்கும் பல்வேறு நடைமுறைகளிலும், பெண்கள் தீவிரப் பங்கு ஏற்பதைப் பொறுத்தே நமது வாழ்க்கையின் தரம் உயரும் என்பதே என் உறுதியான நம்பிக்கையாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக, பொதுவாழ்வில் நம்முடைய சமூக நெறிமுறைகள் மகளிர் மேம்பாட்டுக்கு உகந்ததாக இல்லை. ஆனால், நாட்டின் இந்தப் பகுதியில், பெரியார் ஈ.வெ.ரா. போன்ற சமூக சீர்திருத்தத் தலைவர்களின் முன்னோடிப் பணிகளினால், இந்தச் சூழ்நிலை மாறத் தொடங்கியுள்ளது. இன்றைய பெண்கள், தேசத்தைக் கட்டி வளர்க்கும் பணியில் தாங்கள் பங்கேற்க முடியும் என்பதை உணரத் தொடங்கிவிட்டனர்.

1929-ஆம் ஆண்டிலேயே, தமிழ் நாட்டில், மாநில அளவிலான முதலாவது சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. எல்லாத் துறைகளிலும் மகளிருக்குச் சம உரிமைகள் இருக்க வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை அந்த மாநாட்டில் தந்தை பெரியார் நிறைவேற்றி வைத்தார்.

எப்போதுமே பெண்களின் நல்வாழ்விற்காகப் பாடுபட்டு வரும் தமிழக அரசு-சென்ற ஆண்டில், பல்வேறு மகளிர் நலத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. பட்டப் படிப்பு வரை ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மாணவியருக்கான "ஈ.வெ.ரா. நாகம்மை இலவசக் கல்வித் திட்டம்", ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமணத்தை நடத்துவதற்கான, "மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்", மகப்பேறு காலத்தில் ஏழை உழைக்கும் மகளிருக்குப் பண உதவி அளிப்பதற்கான "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டம்" கலப்பு மணங்களுக்கான "அஞ்சுகம் அம்மையார் திட்டம்", கைம் பெண்கள் மறுமணத்தை ஊக்குவிப்பதற்காக, ரூ. 5000 ரொக்க உதவி அளிக்கும் "டாக்டர் தர்மாம்பாள் திட்டம்" போன்ற திட்டங்கள் மூலம், இதுவரையில் 76,572 பேர் பயனடைந்துள்ளனர். இவற்றிற்காகத் தமிழக அரசு, மொத்தம் ரூ. 6.46 கோடி செலவிட்டிருக்கிறது.

மேற்கூறியவற்றைத் தவிர, பாகப் பிரிவினை ஆகாத இந்து கூட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பூர்வீக சொத்துக்களில் சம உரிமை அளிக்கும் சட்டம் ஒன்றையும் இந்த அரசு நிறைவேற்றி,

மகளிர் வேலை வாய்ப்பு

''மக்கள் தொகையில் பெண்கள் ஐம்பது சதவிகிதம் பேர் இருந்து, அவர்களில் பன்னிரண்டு சதவிகிதம் பேர்தான் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். அதிலும் ஆறு சதவிகிதம் பெண்களே உயர் பதவி வகிக்கிறார்கள். இந்தியாவில் மட்டுமல்ல; உலக நாடுகளிலெல்லாம் இந்த நிலை இருக்கிறது.

''அமெரிக்க நாட்டுப் பெண்களுக்கே 1920-ஆம் ஆண்டில்தான்ஓட்டுரிமை கிடைத்தது.

''பெண்களுக்கு வேலை வாய்ப்பு என்று சொன்னாலே-டெலிபோன் ஆபரேட்டர், டைப்பிஸ்ட், நர்ஸ் என்றுதான் நமக்கு நினைவு வரும். இந்த நிலை மாற நாமெல்லாம் பாடுபட்டாக வேண்டும்.

''இப்போது நிர்வாகத் துறையிலும் பெண்கள் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். அவர்களை மேலும் ஊக்கப்படுத்தி இன்னும் வளரச் செய்ய வேண்டும். அதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து நாம் நடைமுறைப்படுத்தியாக வேண்டும்.

''பெண்களுக்கு முப்பது சதவிகித இட ஒதுக்கீடு என்கிறோம்; ஆனால் அரசியலில் அவர்களுக்குப் பத்து சதவிகித வாய்ப்பும் அளிக்கப்படாமல் இருக்கிறது.

பெண்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க-அரசுடன் தனியார் நிறுவனங்களும் சேர்ந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும். பெண்களுக்கான வேலைவாய்ப்பை மேலும் எந்த முறையிலெல்லாம் அதிகம் ஆக்கலாம் என்பது பற்றி இதுபோன்ற கருத்தரங்குகள் ஆராய்ந்து-தகுந்த கொள்கை வடிவங்களை அரசுக்கு அறிக்கையாக அளித்திட வேண்டும். அதன் மேல் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பி. உபேந்திரா
(சென்னையில் 2.2.90-இல் நடைபெற்ற மகளிர் கருத்தரங்க விழாவில்)

அதற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதலும் கிடைத்துள்ளது. அரசாங்க வேலைகளில் மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்து இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தொடக்கப் பள்ளி நிலை வரை, இனி ஏற்படும் காலி இடங்களுக்குப் பெண்களே ஆசிரியைகளாக நியமிக்கப் படுவர்.

நிர்வாகத்துறை என்பது ஆண்களுக்காக மட்டும் ஏகபோகமாக ஒதுக்கப்பட்டுள்ளது அல்ல. குறிப்பாக, இந்தக் காலக்கட்டத்தில், ஒருவர் வெற்றிகரமான நிர்வாகியாக விளங்க வேண்டுமெனில் வரப்போகும் மாறுதல்களை முன்கூட்டியே யூகித்து அறிந்து, அந்த மாறுதல்களுக்கு ஈடுகொடுத்துச் செயல்படும் திறமை வாய்ந்தவராக இருக்கவேண்டும். இந்தத் திறமைகள் பெண்களிடம் இயல்பாகவே அமைந்துள்ளன.

ஆண்களோ, பயிற்சியினால் இந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பெண்களிடம் இவை ஏற்கெனவே இருந்து வருகின்றன.

தேச அளவிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி, துரித வளர்ச்சிக்கு ஏற்ற ஒரு சூழ்நிலை காணப்படும் இந்தத் தருணத்தில், பெண்கள் இன்னும் திட்டவட்டமான, முடிவானதொரு பங்கினை ஏற்றாக வேண்டியது அவசியமாகும். நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் மேற்கொண்டிருக்கும் வளர்ச்சிப் பணிகளின் காரணமாகக் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வீட்டு உபயோகப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களில்தான் மொத்த வேலை வாய்ப்பில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. இருப்பினும், வீட்டு உபயோகப் பண்டங்கள் அல்லாத உற்பத்தித் தொழில்களில் ஆண்களின் வேலைவாய்ப்புகள் அதிகரித்திருக்கும் வேகத்தில், பெண்களின் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவில்லை. பணித்துறையிலும் கூட (சர்வீஸ் செக்டர்) நகர்ப்புறங்களில் மட்டுமே பெண்கள் ஓரளவு முன்னேறியுள்ளனர். ஆசிரியர்கள், டாக்டர்கள், மருத்துவத்துறை ஊழியர்கள் போன்ற நல்ல ஊதியத்துடன் கூடிய பணிப் பிரிவுகளில், இந்த முன்னேற்றம் கணிசமாகவும், துரிதமாகவும் காணப்படுகிறது. வீட்டுவேலைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

ஊதியம் இல்லாத வீட்டு வேலைகள், மிகக் குறைந்த ஊதியம் பெறும் வேலைகள், அமைப்பு விதிகள் இல்லாத வேலைகள், தற்காலிக வேலைகள் போன்ற வேலைகளில் பெண்களும், சிறுமிகளுந்தான் மிகப் பெரும்பாலோராக உள்ளனர் என்பதும் வெட்டவெளிச்சமான உண்மையாகும். எழுத்தறிவில்லாதவர்களிலும் சரி; அரைகுறையாகப் படிப்பை நிறுத்திக்கொண்டு பள்ளிகளிலிருந்து நின்று விடுபவர்களிலும் சரி; பெண்களே அதிகம் பேர்! அதேபோல, போஷாக்குக் குறைவு மற்றும் மருத்துவக் கவனிப்புக் குறைவு ஆகியவற்றுக்கு ஆளாகிறவர்களிலும் பெண்களின் பங்கே அதிகம்.

தமிழ்நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஆண்டுதோறும் 1.25 இலட்சம் பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். இதில் 10 சதவிகிதம் பேர், மேல் படிப்பைத் தொடருவதாகவும், 10 சதவிகிதம் பேர் திருமணம் செய்து கொண்டு விடுவதாகவும் வைத்துக் கொண்டால்கூட, ஒரு இலட்சம் பேர் எதிர்கால வாழ்க்கை பற்றி யாதொரு உற்சாகமும் அற்றவர்களாகவும் விரக்தியில் வாடுபவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

பலவீனமான பிரிவினர், வாழ்க்கையில் பரிமளிப்பதற்கான வாய்ப்புகள் திட்டமிட்ட ரீதியில் இவ்வாறு மறுக்கப்படுகிறது என்று அல்லாமல் வேறு என்ன சொல்வது? மனித ஆற்றல் பெருமளவில் விரையமாக்கப்படுகிறது என்றுதானே சொல்லவேண்டும்!

எனவே, இவர்களுக்கு (கம்ப்யூட்டர் துறையில்) டேட்டா-எண்டிரி, வொர்ட் பிராசசிங், புரோகிராமிங் லாங்குவேஜஸ் போன்றவற்றில் பயிற்சியளிக்கத் தக்கதொரு திட்டம் வகுக்கலாம். இதனால் உள்நாட்டு கம்ப்யூட்டர் தொழில்துறையில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள 30 சதவிகித வளர்ச்சி வேகத்தை 40 சதவிகித அளவுக்கு அதிகரிக்கச் செய்யலாம். சுயவேலை வாய்ப்புத்துறையிலும், ஏராளமான வேலை வாய்ப்புகளுக்கு வகை செய்து தரலாம். இதற்கான ஆய்வை மேற்கொண்டு பரிந்துரைகள் வழங்குவதற்கான யோசனைகளை இந்த மாநாடு வழங்கலாம். இத்தகைய சிறப்பு சர்வேக்களை மேற்கொள்வது பற்றி நமது நிர்வாகப் பயிற்சிக் கழகங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மாநாடு சென்னையில் நடத்தப்படுவது குறித்து, நான் இன்னொரு வகையிலும் மகிழ்ச்சியடைகிறேன். பெண்களின் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்காக என்றே-'மகளிர் மேம்பாட்டுக் கழகம்' ஒன்றை இந்திய நாட்டிலேயே முதன்முதலாக ஏற்படுத்தியுள்ள மாநிலம் தமிழகம்தான்.

எங்கள் தரப்பில் அரசாங்கம் என்னதான் முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், பெண்கள் வெற்றிகரமான நிர்வாகிகளாகவோ அல்லது தொழில் முனைவர்களாகவோ திகழ வேண்டுமெனில், அவர்களும் தங்களது தனித்தன்மையையும், உரிமைகளையும் நிலைநாட்ட முனைப்பான முயற்சிகளில் ஈடுபட்டால்தான் அது கைகூடும்!

—மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னையில் 2.2.90-இல் நடைபெற்ற 'நிர்வாகத்தில் பெண்களின் பங்கு' என்ற கருத்தரங்கில் - விழா மலரை வெளியிட்டு ஆற்றிய சிறப்புரையின் ஒரு பகுதி

கண்ணைக் கவரும் வண்ணப் புடவைகள்!
கருத்திற்கிசைந்த அழகிய டிசைன்கள்!
அனைத்தும் ஒருங்கே அமைந்த
கைத்தறித் துணிகளை வாங்கிட சிறந்த ஒரே நிறுவனம்!



அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்,
எஸ். 532, அம்மாப்பேட்டை, சேலம்-636 003

நவீன டிசைன்களில் ஸ்பன் மற்றும். நூல் புடவைகள், பிரிண்ட் சேலைகள், ஜரிகை, பாவிஞ்சு, குண்டஞ்சு பார்டர் வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், கைக்குட்டைகள், துண்டுகள் பெட்சீட்டுகள் ஆகிய அனைத்தும் வாங்க சிறந்த நிறுவனம்!

எங்கள் சிறப்புத் தயாரிப்பு நல்ல பட்டு வேட்டி, அங்கவஸ்திரங்கள் மற்றும் நல்ல பட்டுப் புடவைகள் வாங்கிடுவீர்!

கைத்தறித் துணிகளை வாங்கிடுவீர்!

நெசவாளர் வாழ்வு சிறக்க ஆதரவு தாரீர்!

திரு. க. சீனிவாசன், உதவி இயக்குநர்/தனி அலுவலர்
(கூடுதல் பொறுப்பு)
அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
எஸ்.532, அம்மாப்பேட்டை, சேலம்-3

''பல் நோய் வருவதற்குக் காரணமே, பற்களைச் சரிவரப் பேணாததே யாகும். குழந்தைப் பருவ முதலே பற்களைப் பாதுகாத்து வரவேண்டும்.

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும்சொல்லுக்குறுதி'; என்பதுபோல, பற்களைச் சரியான படி துலக்குவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

''கிராமங்களில் இன்றுங்கூட செங்கல், அடுப்புக்கரி, சாம்பல் பொடிகளைக் கொண்டு பல் தேய்க்கிறார்கள். இதனால் பற்சிதைவும் தேய்வும் ஏற்படுகிறது. ஈறு மிருதுத் தன்மை இழந்து இரத்தக் கசிவு ஏற்படுகிறது. நாளடைவில் பாக்டீரியாக்கள் சேர்ந்து பல் சொத்தையாகி, பல்லே ஆட்டங் காணுகிறது. பல்நோயால் உடலின் மற்ற பாகங்களும் பாதிக்கப்படுகின்றன.

''புன்னகைக்கு வெண்மையான பற்கள் வேண்டும். முக வசீகரத்துக்கும் அவை உதவுகின்றன. அது மட்டு மன்று, நாம் உண்ணும் உணவை மென்று ஜீரணிக்கத் தக்க வகையில் பக்குவப்படுத்தித் தருபவையும் பற்களே.

டாக்டர் எச்.டி. குப்தா அவரது துணைவியார் திருமதி சந்திரகாந்தா

'பல் போனால் சொல் போச்சு' என்பார்கள். ஆம். சரியான உச்சரிப்புக்கும் பற்கள் மிகமிக இன்றியமையாதவையாகும்.

'பற்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?'

இந்த வினாவுக்கு டாக்டர். ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள் விளக்கம் தருகிறார்:

''நாள்தோறும் பச்சைக் காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை நாம் சாப்பிட வேண்டும். வெள்ளரிக்காய், தேங்காய், காரட், மணத்தக்காளிக் கீரை இவற்றைப் பச்சையாகவே மென்று தின்னலாம். ஆப்பிளையும் கடித்துச் சாப்பிடலாம். ஆப்பிள் வாங்க இயலாதவர்கள் தேங்காயைச் சாப்பிடலாம். இவை இயற்கையாகவே பற்களைச் சுத்தம் செய்கின்றன. "Eat an Apple a day, keep the doctor and dentist away" என்று சொல்லுவார்கள். தினம் ஒரு ஆப்பிளைச் சாப்பிட்டால், பல் டாக்டரிடம் போக வேண்டாம்.

''இன்று பற்பசைகளும், பிரஷ்களும் புழக்கத்தில் நிறைய உள்ளன. எதை வாங்குவது? எதை விடுப்பது? டூத் பிரஷ் மீடியமாக இருக்க வேண்டும். பற்பசை, புளோரைடு அதிகம் இல்லாததாக இருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே? புளோரைடு, பற்சொத்தை வராமல் காக்கும்.

''பற்பசை இனிப்பாக இருப்பதால், குழந்தைகள் சில சமயங்களில் அதை விழுங்கிவிடுவதுண்டு. அதனால் பாதகமில்லை, குழந்தைகளுக்கு ஏற்ற அளவில் பிரஷ்களைப் பயன்படுத்த வேண்டும்.

''பற்களை, பிரஷ் கொண்டு சுற்று முறையில் துலக்க வேண்டும். தேய்க்கக் கூடாது. துலக்குவதால் பல் சுத்தமாகிறது. தேய்ப்பதால் பற்சிதைவு ஏற்படுகிறது. பிரஷ்களை 60 நாட்களுக்கு ஒரு முறை மாற்றி விடுவது நல்லது.

செனனை அரசு பல்மருத்துவமனையின் முகப்புத் தோற்றம்.

கருவுற்ற தாய் கவனிக்க வேண்டியவை:

''கருவுற்ற ஆறாவது வாரத்தில் குழந்தைக்குப் பற்கள் உருவாகின்றன. அதற்காக, கருவுற்ற தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். குழந்தைக்குத் தாய்ப்பாலே ஊட்ட வேண்டும். தாய்ப் பாலில் நோயைத் தடுக்கும் ஆற்றல் உள்ளது. பற்களுக்கு வரக்கூடிய சொத்தையைத் தடுக்கும் ஆற்றல் தாய்ப்பாலில் உள்ளது.

''புட்டிப் பால் கொடுக்கவே கூடாது. அதனால் பற்கள் வெகு விரைவில் சிதைந்து, வேகமாகக் கெட்டுப்போகின்றன. குழந்தை பிறந்த 3-வது மாதத்திற்குப் பிறகு ஊட்டச்சத்து உணவு தர வேண்டும். மிட்டாய், சாக்லெட் குழந்தைகளுக்குத் தரக் கூடாது; அதாவது வெண்சர்க்கரை கொண்ட-எளிதில் ஒட்டிக் கொள்ளக்கூடிய, மிருதுவான உணவுப் பொருள்களைப் பழக்கப் படுத்தக் கூடாது.

''பொதுவாக, எல்லாரும், காலையிலும் இரவிலும் (தூங்கப் போகும் முன்பு), பல் துலக்க வேண்டும். பற்களை ஆறு மாதத்திற்கொரு முறையாவது, மருத்துவரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்ளத் தவறக்கூடாது. அவ்வாறு செய்வதால் பல் நோய் வருமுன் காக்கலாம்.

நாம் சளைத்தவர்கள் அல்ல:

''பல் மருத்துவத் துறையில் இன்று உலக நாடுகள் வெகுவாக முன்னேறி வருகின்றன. பல் மருத்துவச் சாதனங்களில் இன்று ஜப்பான் முதலிடம் வகிக்கிறது எனலாம். அடுத்து அமெரிக்கா இதில் சிறந்து விளங்குகிறது. பல் மருத்துவத் துறையில் நாமும் சளைத்தவர்கள் அல்ல. பல் மருத்துவத்தைச் செயல்படுத்துவதில், இத்துறை அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், இதுபற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் நம் நாட்டில் நிறையப் பேர் இருக்கிறார்கள். இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.''

★ குழந்தைகளுக்குப் பல் முளைக்கவில்லை என்பதற்காக, தாய் மாமனைக் கொண்டு, ஈற்றில் நெல்லால் கீறச் செய்வார்கள். இது பழைய முறையும் மட்டுமல்ல, அறியாமையுங்கூட.

★ பல் வலி வரும்போது, அந்தப் பல்லில் தலைவலித் தைலம், மூக்குப்பொடி ஆகியவற்றைத் தடவுவார்கள். இது ஊறு விளைவிக்கும் செயலாகும். பல் ஈற்றில் திசுக்களை (பற்களைச் சுற்றியுள்ள தசைகளை) உறுத்தி, எரித்துவிடும் தன்மை இவற்றுக்கு உண்டு.

★ வெற்றிலை பாக்கு போடுவது நல்லது தான். வெற்றிலை பாக்கில் இயற்கையாக உள்ள ஊட்டச்சத்து உள்ளது. ஜீரணிக்கக்கூடிய பொருளும் அதில் உள்ளது. ஆனால் அதையே காலை முதல் மாலை வரை போட்டுக்கொண்டு குழப்பிக் கொண்டிருக்கக்கூடாது. எதற்கும் அளவு உண்டு.

வெற்றிலை பாக்குடன் புகையிலையையும் சேர்த்துக் கொள்வதால், அது நஞ்சாக மாறுகிறது.

★ பொக்கை வாய் உள்ளவர்கள், வாயை இப்படியும் அப்படியுமாக அசைத்துக் கொண்டிருப்பார்கள். இது எதனால்?

நரம்பு இயக்கத்தால் இப்படி ஏற்படுகிறது. அதாவது கோணல் மாணலாக வாயை அசைக்கத் தூண்டுகிறது. இவர்கள் செயற்கைப் பல் பொருத்திக் கொள்வதுதான் நல்லது. அது அழகுக்கு மட்டுமல்ல, உடலுக்கு வேண்டிய வைத்திய முறையுமாகும்.

சென்னை அரசு பல் மருத்துவமனை (Madras Dental College Hospital) சென்னைப் பூங்கா நகரில், கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ளது. காலை 7 மணி முதல் 11 மணி வரை இது இயங்குகிறது. 'அவசர கேஸ்கள்' மாலை 4 மணி வரை கவனிக்கப்படுகின்றன. எல்லாவகையிலும் சிறப்பான பல் மருத்துவம் இங்கே அளிக்கப்படுகிறது.

அன்றைக்குச் சிறைக்குள் சென்றவர் தான் அவர், 27 ஆண்டுகளின் பின்னாலே இன்றைக்கு அவரை விடுவித்திருக்கிறது, அந்த நாட்டு அரசு!

அன்றைக்கு-அவர் மீதும், அவர்வழி நடக்கும் மற்றும் எட்டுப் பேர் மீதும் நாசவேலை குற்றச்சாட்டு சுமத்தி 'ரிவோனியா வழக்கு' தொடரப்பட்ட பிறகு, ரோபென் தீவுச் சிறையில் அடைக்கப்பட்டவர்தான் மண்டேலா. தென்னாப்பிரிக்க அரசின் சட்டப்படி, தண்டனைக் குறைப்போ மன்னிப்போ, ஜாமினில் விடுதலையோ இல்லை என்ற

அளவில் ஆயுள்தண்டனையாக ஆக்கப் பட்டுவிட்டது அது.

1964 ஏப்ரல் 20ஆம் நாளன்று, சிறை செல்லுமுன் பிரிட்டோரியா உச்ச நீதிமன்றத்தில், தம் வழக்குத் தொடர்பாக அவர் வைத்த அறிக்கையின் சில பகுதிகள் நம் நெஞ்சை நெருடுவதாக இருக்கின்றன—

''இந்த வழக்கின்படி, முதலாவது குற்றவாளி நான். கலையில் இளநிலைப் பட்டம் பெற்றவன். பல ஆண்டுக்காலம் ஜோகன்ஸ்பர்க்கில் ஆலிவர் டாம் போவுடன் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்கிறேன்.''-என்று தொடங்குகிறது அந்த அறிக்கை.

''நான் செய்வது எதுவாயினும் - யாவும் தனிப்பட்ட முறையிலும், எனது மக்களின் தலைவன் என்ற முறையிலும், என் சொந்தம் காரணமாகவும் செய்ததேயாகும். வெளிநாட்டவர் சொல்லிச் செய்தது எதுவுமில்லை...

''நாசவேலைக்குத் திட்டமிட்டேன் என்பதை நான் மறுக்கப் போவதில்லை; ஆனால் எதைப்பற்றியும் கவலைப் படாமல் அதற்கு நான் திட்டமிடவில்லை. ஏனென்றால் வன்முறை மீது எனக்கு எந்தக் காதலும் இல்லை. நீண்டகாலக் கொடுங்கோன்மை, வெள்ளையர்கள் என் இனத்தார் மீது நடத்திவரும் அடக்குமுறை ஆகியவற்றின் காரணமாக எழுந்துள்ள அரசியல் சூழ்நிலை பற்றி அமைதியாகவும், அவசரப்படாமலும் நான் எடுத்த முடிவே அதற்குக் காரணமாகிவிட்டது. இது தவிர, எங்கள் 'உம் கோண்டோ' இயக்கம் வன்முறை இயக்கம் அல்லவே அல்ல...

''வெள்ளையாட்சி வெறியர்களின் கொள்கையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வன்முறையைத் தவிர வேறு எந்த நன்முறைவழியும் ஆப்பிரிக்க மக்களுக்குத் திறந்திருக்கவில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

''முதலில், வன்முறையின்றிச் சட்டத்தை எதிர்க்கத் தொடங்கினோம். எங்களை அடக்கி ஒடுக்க அரசு வன்முறையைக் கையாண்டது. எனவே தான், வன்முறைக்கு வன்முறையாலேயே பதில் கூறத் தொடங்கினோம். ஆனால் நாங்கள் கையாண்ட வன்முறை பயங்கரவாதம் அல்ல. இதுவல்லாமல் இனத்துக்கு இனம் ஒரு யுத்தத்தை ஏற்படுத்த நாங்கள் என்றுமே விரும்பியதில்லை.

''அரசியல் போராட்டத்தில் வன்முறையைக் கையாள நாங்கள் தள்ளப்

விடுதலைக்குப் பின்
நடைபெற்ற விழாவில்
நெல்சன் மண்டேலா

பட்டோம். இந்தப் பாதைக்கு அரசாங்கமே எங்களைத் தள்ளிச் சென்றது.

''எந்த தேசத்தின் வரலாற்றிலும் 'சரணாகதி' அல்லது 'போராட்டம்' என்கிற முடிவுக்கு வரும் காலம் ஒன்று வந்தே தீரும். அந்த நேரம், தென்னாப்பிரிக்காவுக்கு இப்போது வந்துவிட்டது. நாங்கள் சரணடைய மாட்டோம்; நம் மக்களை, நம் எதிர்காலத்தை நம் சுதந்திரத்தைப் பாதுகாக்க, எல்லாவிதமான சக்தியையும் பயன்படுத்துவது தவிர, வேறு வழி நமக்கில்லை!''

—நெல்சன் மண்டேலா, உச்ச நீதி மன்றத்தில் அன்று வைத்த அறிக்கையின் சில பகுதிகள் இவை.

அன்றைய தினம் தென்னாப்பிரிக்க அரசின் அதிபராக இருந்த வெர்வவுர்டர் என்பவர், நெல்சன் மண்டேலா என்றாலே நெஞ்சம் கலங்கினார். அதன்பின் அங்கே அதிபராக இருந்த போத்தா என்பவரின் நிலையும் தெளிவில்லாமல் இருந்தது.

அவரைச் சிறையிலடைத்துவிட்டதால், கறுப்பர் போராட்டம் கட்டுக்கடங்கி விட்டதா என்றால் அதுதான் இல்லை. 54 வயதடைந்த நெல்சன் மண்டேலாவின் துணைவியார் திருமதி வின்னியும், மண்டேலாவின் அருமை நண்பர் ஆலிவர் டாம்போவும் விடுதலைப் போராட்ட நெருப்பில் நீறுபூத்துவிடாமல் காத்து வந்தார்கள். மண்டேலா குடும்பத்தையே அழித்துவிட, அவர் வீட்டின் மீது குண்டு வீசும் சம்பவங்களும், தீப்பந்து எறிதலும், துப்பாக்கிச் சூடும், அவ்வப் போது வின்னியைக் கைது செய்வதும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தன!

என்ன நடந்தாலும் இதயம் குலைந்து விடாமல்-'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்ற விதத்தில் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார் திருமதி வின்னி மண்டேலா.

போல்ஸ்மோரில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலாவுக்குத் தணிக்கை செய்யப்பட்ட செய்தித்தாள்களே தரப்பட்டன. உள்ளூர் வானொலிச் செய்திகளைக் கேட்க மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆனால் எழுபது வயதானாலும் எழுச்சிமயமான எண்ணங்களின் காரணமாக, அவர் ஓர் இளைஞருக்குள்ள சுறுசுறுப்புடனேயே காணப்பட்டார்.

கறுப்பு இனமக்களின் விடுதலை வேண்டி, தோளுயர்த்தி நின்ற அந்தத் தன்மானச் சிங்கத்தை விடுதலை செய்ய வேண்டுமென்று நமது இந்தியா உட்பட, உலக நாடுகளெல்லாம் ஒருமித்த குரலை எழுப்பின; சில வெள்ளை நாடுகளும்கூட இதற்கு ஆதரவாகக் கரம் உயர்த்தின!

தென்னாப்பிரிக்காவின் மொத்த மக்கட்தொகையில் ஒரு கோடியே 90 இலட்சம் கறுப்பு இன மக்கள் வாழ்கிறார்கள். 25 இலட்சம் பேர் கலப்பு இனமக்கள். மற்ற சிறுபான்மையினரே வெள்ளையர்கள். அதாவது ஐந்தில் ஒரு பங்கு வெள்ளையர், எல்லோரும் தமக்கு அடங்கியே ஆகவேண்டும் என்று அடம் பிடித்தார்கள், அவர்கள்.

முடிவில்-நியாயம் வென்றுவிட்டது!

அந்த 72 வயதுக் கறுப்பு நெருப்பின் முன், இன ஒற்றுமைக்கு உலை வைக்க முனைவோர், நிச்சயமாக இனியும் தலை நிமிர்த்தி நடைபோடமுடியாது!

சேலம் நகரில் விற்பனை சேவையில் ஒரு கூட்டுறவு

கூட்டுறவே நாட்டுயர்வு!

விவசாய பெருமக்கள்

தங்கள் விளைபொருட்களான கடலைக்காய், பருத்தி, மஞ்சள், சூரிய காந்தி விதைகள், ஆமணக்கு மற்றும் எள் ஆகியவற்றை

நியாயமான விலைக்கு விற்கவும்,
சரியான எடையில்,
விற்று முதலுக்கு உடன்பட்டுவாடா பெறவும்
உகந்ததொரு நல்ல நிறுவனம்

சேலம் விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (வ.து) எண்.எஸ். 439
305, சூரமங்கலம் நெடுஞ்சாலை, சேலம்-636 009

தந்தி: மார்க்கெட்டிங்

தொலைபேசி: தலைமையகம்:52119
தனி அலுவலர்:51173

சங்க தலைமையகத்தை எல்லாக் காலங்களிலும், சங்க அயோத்தியாப்பட்டணம், வாழப்பாடி, பனமரத்துப்பட்டி, இராமமூர்த்திநகர் மற்றும் கொளத்தூர் கிளைகளை அறுவடைப் பருவ காலங்களிலும் நாடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்காணும் விளைபொருட்களின் ஈட்டின் பேரில் சரக்கீட்டுக் கடன் ரூ.10,000/- வரை பெற்று, அவற்றின் விலை மதிப்பு உயர்ந்தபின், விற்பனை செய்தும் பயனடையலாம்.

மஞ்சள் பாலிஸ் செய்யவும், விற்பனை செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

நுகர்வோர்

நியாயமான விலையில், தரமான சங்க 'மல்கோவா' பிராண்ட் அக்மார்க் கடலை எண்ணெய், அரிசி வகைகள், சுத்தப்படுத்தப்பட்ட மளிகை மற்றும் அழகு சாதனங்களைப் பெற சேலம் நகரிலுள்ள சங்க அனைத்து நியாயவிலைக் கடைகள், மேட்டூர் மற்றும் ஓமலூர் வட்டத்திலுள்ள கிராம கூட்டுறவு அங்காடிகளை நாட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இரா. செயராமன், பி.ஏ., டி.எஸ்.எஸ்.ஏ. சி.
செயலாளர்

சென்னியப்பன், பி.ஏ., பி.டி.,
துணைப்பதிவாளர்-தனி அலுவலர்

சேலம் நகர கூட்டுறவு வங்கி லிமிடெட், நெ. 25

முதல் அக்ரஹாரம், சேலம்-1
தலைமை அலுவலகம்

தொலைபேசி: 63264
63499

கிளைகள்: 1. குகை, 2. அரிசிப்பாளையம், 3. பொன்னம்மாபேட்டை, 4. அஸ்தம்பட்டி 5. உடையாப்பட்டி

வங்கியில் அனைத்து வகை டெபாசிட்டுகளுக்கும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளைவிட ஒரு சதவிகிதம் கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

78 மாதங்களில் இரு மடங்கு தொகை வழங்கும் "**திருவிளக்கு**" டெபாசிட் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

இந்தியா முழுவதும் குறைந்த கமிஷனில் டிமாண்டு டிராப்ட் வழங்கப்படுகின்றது.

வெளியூர் காசோலைகள், பில்கள் குறைந்த கமிஷனில் வசூலித்துத் தரப்படுகிறது.

சிறு தொழில் கடன்கள், பஸ், லாரி, வேன் வாங்கவும் மற்றும் சுயதொழில் புரிவோருக்கும் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது.

தமிழ்நாட்டிலேயே அதிக டெபாசிட்டுகள் பெற்றுள்ள நகர வங்கி.

டெபாசிட்டுகளுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ள வங்கி.

திரு. பி.வி. வெங்கடாசலம், பி.ஏ.,
கூட்டுறவு சார் பதிவாளர்/
காரியதரிசி (பொறுப்பு)

திரு. அ. வெங்கடசுப்ரமணியன், பி.காம்.,
துணைப்பதிவாளர்/தனி அலுவலர்

முதல் அட்டை சொல்லும் கட்டுரை:

தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுக்கால சிறைவாசத்திற்குப் பின்னர் விடுதலை பெற்றிருக்கிறார்.

மண்டேலா விடுதலைக்கு மகிழ்ச்சி தெரிவித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் வாழ்த்துச் செய்தியனுப்பியுள்ளார்; அதுமட்டுமல்ல - முதலாவதாக இந்தியாவுக்கு வருகைதந்து சிறப்பிக்க வேண்டும் என்றும் தமது அன்பார்ந்த வரவேற்பு அழைப்பைத் தெரிவித்துள்ளார்.

'இந்தியப் பெருமக்களின் இதயபூர்வமான வரவேற்பை ஏற்க வருகை தர வேண்டும்' என்ற மாண்புமிகு பிரதமர் அவர்களின் கடிதம் நெல்சன் மண்டேலாவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார் மாவீரன் மண்டேலா.

தமிழகத்தில்-திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற தி.மு. கழக மாநாட்டில் பங்கு கொண்டிருந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் நெல்சன் மண்டேலாவின் விடுதலைச் செய்தியறிந்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். அதுகுறித்த தீர்மானம் ஒன்றையும் அவர் அந்த மாநாட்டில் கொண்டு வந்தார். மாநாட்டில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கானோர் எழுந்து நின்று இரண்டு நிமிட நேரம் கையொலி எழுப்பித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியப் பெருநாட்டிற்கு வருகைதரவிருக்கும் நெல்சன் மண்டேலாவை வரவேற்றிட அமைக்கப்பட்டுள்ள அகில இந்திய அளவிலான குழுவில் - மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் அங்கம் வகிக்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வழக்கறிஞராக நெல்சன் மண்டேலா

தென்னாப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

—பி.எல். ராஜேந்திரன்

ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் கொரில்லாப் படைப்பிரிவின் தலைவரும், அந்நாட்டுக் கறுப்பர் இன விடுதலைக்கு வித்திட்டவருமான நெல்சன் மண்டேலா, கேப்டவுன் அருகேயுள்ள விக்டர் வெர்ஸ்டர் சிறையிலிருந்து 11.2.1990 ஞாயிறன்று மாலை நான்கு மணிக்கு (இந்திய நேரப்படி 7.30 மணிக்கு) விடுதலை செய்யப்பட்டார்.

உலக நாடுகளெல்லாம் - விஞ்ஞான முன்னேற்றம், தத்துவ முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் கண்டுவரும் இந்நாளில், தமது இன மக்கள் உலக மக்களுக்கு இணையாகச் சுதந்திர வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் முதல் குரல் கொடுத்து, தொடர்ந்து போராடிய பெருமை பெற்றவர் நெல்சன் மண்டேலா.

1962 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் நாள் இதன் காரணமாகவே கைது செய்யப்பட்ட அவர்மீதும், மற்றும் எண்மர் மீதும்- 1964ல் அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, மண்டேலா முதலான எட்டுப் பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அன்று முதலே அரசியல் கைதியான அவரை விடுதலை செய்ய வேண்டும் என

தமிழக அரசு மானியம் பெறும் தமிழ்த் திரைப்படங்கள்

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த்தகசபை, திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று, தரமான படங்களுக்கு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் வரை மானியம் அளிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி 12 பிரதிகளுக்குக் குறையாமல் 20 பிரதிகள் வரை வெளியிடப்படும் - குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு ரூ.3 இலட்சம், 20 பிரதிகளுக்கு மேல் 30 பிரதிகள் வரை உள்ள குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு ரூ.2 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

தரமான படங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக - தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. துரைசாமி அவர்களின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப் பெற்றது. மொத்தம் 7 பேர் கொண்ட இந்தக் குழு, 1989 ஜனவரி முதல் டிசம்பர் முடிய வெளிவந்த படங்களில் 35 படங்களை ஆய்வு செய்தது. ரூ.3 இலட்சம் மானியத்திற்குரியவை என 7 திரைப்படங்களையும், ரூ.2 இலட்சம் மானியத்திற்குரியவை என 20 திரைப்படங்களையும் தேர்ந்தெடுத்தது.

ரூ.3 இலட்சம் மானியத்திற்குரிய படங்கள்

சட்டத்தின் திறப்பு விழா (ஆஸ்கார் மூவீஸ் - எம். பாஸ்கர் தயாரிப்பு)

வலது காலை வைத்துவா (பியூச்சர் சினி கிரியேசன்ஸ் - ஆர். செல்லக்கண்ணு தயாரிப்பு)

அத்தைமடி மெத்தையடி - (சி. ஆர். புரடக்ஷன்ஸ் - கே.எஸ். கோபாலகிருஷ்ணன் தயாரிப்பு)

அன்று பெய்த மழையில் (பிலிம் மெர்ச்சண்ட்ஸ் இன்டர்நேசனல் - அசோக்குமார் தயாரிப்பு)

அன்னக்கிளி சொன்ன கதை (ஸ்ரீ அனந்த லட்சுமி பிலிம் கம்பைன்ஸ் - தனலட்சுமி தயாரிப்பு)

பூமனம் (எஸ்.கே. பிலிம்ஸ் கம்பைன்ஸ் - எஸ்.கே. ராஜகோபால் தயாரிப்பு)

கை வீசம்மா கை வீசு (எம்.பி.சி. ஆர்ட்ஸ் - எம். பாலச்சந்திரன் தயாரிப்பு)

ரூ.2 இலட்சம் மானியத்திற்குரிய படங்கள்

எல்லாமே என் தங்கச்சி (ஸ்ரீ தண்டபாணி கிரியேஷன்ஸ் - தட்சிணா மூர்த்தி தயாரிப்பு)

தங்கமணி ரெங்கமணி (ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் - ராதா ராமநாராயணன் தயாரிப்பு)

சோலைக் குயில் (நாச்சியார் மூவிஸ் - வி.ஈ. தமிழ்மணி தயாரிப்பு)

சொந்தம் 16 (ஸ்ரீ துர்கா பிலிம்ஸ் - டி.எஸ். கிருஷ்ண குமார் - மலர்க்கொடி துரைராஜ் தயாரிப்பு)

மணந்தால் மகாதேவன் (முரளி சினி ஆர்ட்ஸ் - எச். முரளி தயாரிப்பு)

மனிதன் மாறி விட்டான் (கமல ஜோதி கம்பைன்ஸ் - செங்கமலம், மணிவண்ணன் தயாரிப்பு)

நியாயத் தராசு (மேனகா பிக்சர்ஸ் - வேத மூர்த்தி தயாரிப்பு)

வரம் (லட்சுமி சம்பூரணம் மூவிஸ் - எஸ். சிவகுமார் தயாரிப்பு)

நெத்தியடி (அவினாசி ஆர்ட்ஸ் - அவினாசி மணி தயாரிப்பு)

தென்றல் சுடும் (ஜி.பி. ஆர்ட் கம்பைன்ஸ் - கோவிந்தராஜுலு தயாரிப்பு)

காவல் பூனைகள் (ரேணுகா டிஸ்டிரிபியூட்டர்ஸ் - ஜி. சாமுண்டீசுவரி தயாரிப்பு)

இது உங்க குடும்பம் (ஸ்ரீ தேவி கலாசித்ரா - ஜி.கே. ரெட்டி தயாரிப்பு)

பாச மழை (பூம்புகார் புரடக்ஷன்ஸ் - முரசொலி செல்வம் தயாரிப்பு)

தாயா, தாரமா? (அமர்ஜோதி பிக்சர்ஸ், - எம். கலா தயாரிப்பு)

ஒரு தொட்டில் சபதம் (உத்திரா மூவி மேக்கர்ஸ் - மோகன் தயாரிப்பு)

நினைவுச் சின்னம் (தமிழ்நாடு மூவிஸ் - சக்கரபாணி தயாரிப்பு)

சின்ன சின்ன ஆசைகள் (முக்தா பிலிம்ஸ் - வி. சீனிவாசன் தயாரிப்பு)

முந்தானை சபதம் (ஆனந்த் & ஆனந்த் - வி.சி குகநாதன் தயாரிப்பு)

பொங்கிவரும் காவேரி (மனோரமா மூவிஸ் - பி.எல். முத்தாயி தயாரிப்பு)

திருப்பு முனை (பி.கே. என்டர்பிரைசஸ் - பி. கந்தசாமி தயாரிப்பு)

திரைப்படங்களுக்கு உரிய மானியத் தொகை ரூ.61 இலட்சத்தைத் தயாரிப்பாளர்களிடம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 8.2.90 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

திரு. இராம. நாராயணன்

திரு. முரசொலி செல்வம்

திரு. அசோக்குமார்

திரு. கே. எஸ். கோபால கிருஷ்ணன்

திரு. வி. சீனிவாசன் (முக்தா)

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் மாண்புமிகு மத்திய எரிசக்தி மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ஆரிப் முகமது கான் அவர்கள் சந்தித்துப் பேசினார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும் உடன் உள்ளார். (12.2.90)

25-வது இந்திய தொழில் திறனாய்வுத் தேர்வில் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக வழங்கப்பட்ட குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்துடன் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள்.

இந்த இதழில் ...

பவள விழாக் காணும் இராணி மேரி கல்லூரி ... 2

சேமிப்பின் அவசியம் ... 5

கலைமாமணி விருது பெற்ற கண்மணிகள் .. 7

தமிழீழத்தில் தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் — முதல்வர் கலைஞர் ... 10

உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணை ... 15

கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 17

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ... 21

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ... 27

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 29

தலைநகரின் தாகந் தீர்க்கும் சென்னைக் குடிநீர் வாரியம் ... 33

அண்ணலைக் கவர்ந்த ஆச்சார்ய நரேந்திர தேவா ... 37

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

பங்குனி 2

மலர்:20 இதழ்:18

16-3-1990



மறைந்த பெரணமல்லூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எட்டியப்பன் அவர்களின் மனைவி திருமதி எட்டியம்மாளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7.3.90 அன்று சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் எம். தமிழ்க்குடிமகன் அவர்கள் முன்னிலையில் ரூ.50,000/-க்கான காசோலையை வழங்கினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களும் உடன் இருக்கிறார். (சட்டமன்ற உறுப்பினர் பதவிக் காலத்தில் மரணமடைந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.50,000 வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.)

தமிழ்நாடு மின்சார வாரியம்

மேட்டூர் அனல்மின்திட்டம், மேட்டூர் அணை-1

(1.0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

வரிசை எண்.	வேலையின் பெயர்	ஒப்பந்த எண்	ஒப்பந்தப்பிரதியின் விலை	வைப்புத்தொகை	ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசி தேதியும் நேரமும்	ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும் நேரமும்	ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை
1.	மேட்டூர் அனல்மின் திட்ட தொட்டில்பட்டி குடியிருப்பு வளாகத்தில் உள்ள கப்பி சாலைக்கு "தார்ரோடு" (Block Topping) போடுதல்	SEC.2/MTPP 2244/89-90	தமிழ்நாட்டிற்குள் Rs.300/- வெளி மாநிலங்கள் வரி உட்பட Rs.330/-	Rs.2,200/-	14.3.90 புதன் கிழமை பகல் 12.00 மணி	14.3.90 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணி	Rs.2,20,000
2.	மேட்டூர் அனல்மின் திட்டம் பிளாக் நெ.56 தொட்டில்பட்டி குடியிருப்பு வளாகத்தில் 'R' வகைக் குடியிருப்பு இல்லங்கள் மின் வசதி செய்வது உட்பட (Electrification) 3 தொகுதிகள் கட்டுவது.	SEC.2/MTPP 2245/89-90.	தமிழ்நாட்டிற்குள் Rs.300/- வெளி மாநிலங்கள் வரி உட்பட Rs.330/-	Rs.15,400/-	21.3.90 புதன் கிழமை பகல் 12.00 மணி	21.3.90 புதன் கிழமை பிற்பகல் 3.30 மணி.	Rs.15,34,300/-

(2.0) ஒப்பந்தப்பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினைப் பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணைக் குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல்மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்குச் செலுத்திப் பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். தாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகையின்றி பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Executive Assistant to Superintending Engineer/CII/MTPP) அவர்களால் பெறப்படும். ஒப்பந்தங்கள் Russian Erectors' Quarters -இல் திறக்கப்படும்.

(3.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப் பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

(4.0) ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.

(5.0) ஒப்பந்தப்பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் இருபது சேர்த்து அனுப்ப வேண்டும்.

(6.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின்வாரியம் தன்னைக்கட்டுப்படுத்திக்கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக்கருதுகின்ற போது தளர்த்தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

(7.0) ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

தலைமைப் பொறியாளர்/மேட்டூர் அனல்மின் திட்டம்

DIPR/40/SLM/90/Chhaya

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

விக்கு எந்த வகையிலே விடை கிடைக்கிறதோ அந்த வகையில் அதற்கு இணையான நிதியினை வழங்க மாநில அரசு முன்வரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

''மறைமலை அடிகள், 'அறிவுரைக் கோவை' என்ற நூலிலே பெண்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள வாசகம் - நம் நெஞ்சிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டிய வாசகமாகும். அவர் அதிலே குறிப்பிடுகிறார்.

''கல்வியிலும் உடம்பு நலத்திலும் நல்லொழுக்கத்திலும் மேன்மேல் உயர்வதற்குப் பெருந்தடையாய் உள்ள சிறு பருவ மணத்தை அறவே ஒழித்தல் வேண்டும். (அந்தக் காலத்திலே நடைபெற்ற பால்ய விவாகத்தை அவர் எந்த அளவிற்குத் தீவிரமாக எதிர்த்திருக்கிறார் என்பதற்கு இந்தச் சொற்றொடர் சான்றாகும்) பெண் மக்களுக்கு இருபதாண்டும், ஆண் மக்களுக்கு இருபத்தைந்தாண்டும் நிரம்பும் முன் அவர்களை மணம் செய்வித்தல் ஆகாது. அங்ஙனம் மணம் செய்யுமிடத்தும், ஒருவரை ஒருவர் அன்பு பாராட்டுதல் அறிந்து அதன்பின் அவர்களை மணம் பொருத்தல் வேண்டும். ஆணையாவது, பெண்ணையாவது ஆடுமாடுகளைப் போல் விலை கொடுத்து வாங்கும் கொடிய வழக்கத்தை வேரோடு களைவதற்கு எல்லோரும் மடி கட்டி நிற்றல் வேண்டும். ஏனென்றால், அன்பில்லா வாழ்க்கையால் வரும் தீமைகள் அளவில்லாதவைகளாய் இருக்கின்றன. அன்பில்லா சேர்க்கையில் பிறக்கும் பிள்ளைகள் குறுகிய வாழ்நாளும் பல தீய தன்மைகளும் உடையவராய் இருக்கின்றனர். அன்பு வளர்ச்சிக்கு ஏதுவாக ஆண் மக்களும், பெண் மக்களும் கள்ளங்கபடமின்றி நடமாடச் செய்தல் வேண்டும். பெண் மக்களைக் கல்வியிலும் நன்முறையிலும் பழக விடாமல், மணமாகின்ற வரையில் அவர்களை அறைகளில் அடைத்து வைப்பதும் பெரும் தீமைகளை விளைவிக்கின்றது. பெண்மக்களைப் பெரும்பாலும் தமிழ் முதலிய தாய்மொழிக் கல்லூரியிலே கல்வி பயிற்றுவித்தல் வேண்டும். உணவமைத்தல், இல்லறம் நடப்பித்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலிய முறைகளில் தேர்ச்சி பெற வேண்டுவது பெண் மக்களுக்கு இன்றியமையாததாகும்.''



இராணி மேரி கல்லூரி பவள விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி நிறைவுரை ஆற்றினார்.

—என்று பெண்களுக்கு அறிவுரை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

''தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெண்களுக்காக வாதாடியவர். தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் போன்றவர்கள் எல்லாம் பெண்களின் சுதந்திரத்திற்காக, பெண்களின் உரிமைக்காக எத்தனையோ கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னவர்கள். அவர்கள் அறுபதாண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றிய தீர்மானங்களையெல்லாம் இன்றுள்ள தமிழக அரசு சட்டங்களாக - திட்டங்களாக நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது.

''இன்றைக்குப் பெண்கள் முன்னேறியுள்ள ஒரு காலக் கட்டத்தில் வாழ்கிறோம். மூவாயிரம் மாணவியர் படிக்கின்ற ஒரு கல்லூரியின் பவள விழாவினைக் கொண்டாடுகின்றோம். படிப்பைப்பற்றிக் கவலைப் படாமல் ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்கின்ற நிலையில் அடுப்பூதிக் கொண்டிருந்த அந்தச் சமுதாயத்தில் இன்றைக்கு ஒரு மாறுதலை உருவாக்கியிருக்கின்ற அந்தப் பெரியவர்களை எல்லாம் எண்ணிப் பார்த்து, மகிழ்ச்சி அடைகிறோம்.

''எத்தனையோ தாய்கள் தங்களுடைய குழந்தைகளை வீரர்களாக ஆக்கியிருக்கின்றார்கள். அன்றைய தமிழகத்தில்-சங்க காலத்தில் நம்முடைய தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளை வீரர்களாக வளர்த்தார்கள். நாட்டுக்கு - மன்னனுக்கு - மக்களுக்குத் தீமை வந்தால், பகைப் புலத்தால் தீங்கு வருமேயானால், அந்த நாட்டைக் காப்பாற்றவும், மண்ணை மீட்கவும் போரிடக்கூடிய வீரர்களாக உருவாக்கினார்கள் - அப்படிப் போரிடக்கூடியவர்கள் நெஞ்சிலே வேல் தாங்கி, வாள் தாங்கி, விழுப்புண் பெற்ற வீரர்களாக மரணம் அடைய வேண்டும்; அந்த மரணம் அவர்களைப் பெற்றெடுத்த மாதாவிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது என்கின்ற வகையிலே அன்றைக்குப்பிள்ளைகளை வளர்த்திருக்கின்றார்கள்.

''அப்படிப்பட்ட தாய்க்குலமாக இந்தக் கல்லூரியிலே பவள விழாக் காணுகின்ற நேரத்தில் அமர்ந்திருக்கின்ற நம்முடைய சகோதரிகள் எல்லாம் - மாணவிகள் எல்லாம் எதிர்காலத்திலே விளங்க வேண்டும் என்ற என்னுடைய வாழ்த்துக்களை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். முடிவில், இராணிமேரி கல்லூரி மாணவியர் தலைவி, செல்வி எஸ். உமாராணி நன்றி கூறினார்.

-பி. எல். ராஜேந்திரன்

சேமிப்பின் அவசியம்

அ. ரகுமான்கான், எம்.எல்.ஏ.
துணைத்தலைவர், மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக்குழு

நாளைய தேவைக்காகப் பணத்தை இன்று தனியாக ஒதுக்கி வைத்துப் பாதுகாப்பதுதான் சேமிப்பு. இன்றைய மனித வாழ்வில் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று வள்ளுவர் அன்றே சொல்லி இருக்கிறார்.
''இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்பது நமது முன்னோர்கள் சொல்லி இருக்கும் முதுமொழி ஆகும். மனித சமுதாயத்தின் இயக்கமே பொருளாதாரப் போராட்டம் என்பதுதான், கார்ல் மார்க்ஸின் கண்டுபிடிப்பு. ஆகவே நாளைய உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இன்றே பணத்தைச் சேமிக்க வேண்டியதின் அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடர்ந்த காட்டுக்குள் வாழ்கிறோம் என்பதற்காக மரங்களை நாசப்படுத்தினால், பிறகு காடு காடாக இருக்காது. மரங்கள் அற்ற பாலைவனமாகத்தான் இருக்கும். குன்றனைய செல்வம் இருந்தாலும் அது சேமிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படவில்லையென்றால் அந்தச் செல்வம் கோடையில் உருகிய பனியாகிவிடும். எனவே சேமிப்பு மிகவும் அவசியமானதாகும். இயற்கையின் படைப்புக்கள்கூட இந்த உண்மையை நமக்கு வலியுறுத்துகின்றன. எறும்பு தன் தேவைக்காகச் சேமித்து வைக்கிறது. தேனீக்கள் தங்களுக்கு வேண்டியதைத் துளித்துளியாக ஒன்று சேர்த்துச் சேமிக்கிறது. பாலைவனப் பயணத்திற்குத் தயாராகும் ஒட்டகக் கூட்டங்கள்கூட தங்களுக்குத் தேவையான தண்ணீரைச் சேமித்துக் கொண்டுதான் பயணத்தைத் தொடங்குகின்றன.

திடீர் வேலை இழப்பு, வணிக நட்டம், வருமானக் குறைவு, உடல்நலக் குறைவு, எதிர்பாராத விபத்துக்கள்-இப்படி, பலவற்றை மனிதன் தன் வாழ்வில் சந்திக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட துயரமான சூழ்நிலைகளில் வெறும் எதையும் தாங்கும் இதயம் மட்டும் இருந்தால் போதாது, பணத்தைச் சேமித்து வைக்கும் பழக்கம் தான் காக்கும் கரமாக இருந்து நம்மைக் காக்க முடியும்.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'' என்ற

வள்ளுவரின் வாசகம் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

''ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை'' என்ற குறளும் செல்வம் வரும் வழி அதிகமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் செல்வம் அழியாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று நமக்கு அறிவுரை கூறுகிறது.

ஆகவே சேமிப்பை நமது வாழ்வின் நெறியாக நாம் பின்பற்ற வேண்டும். சேமிப்பு என்பது தனி மனிதனின் அல்லது

பவளவிழாக் காணும் இராணி மேரி கல்லூரி

முதல் அட்டை சொல்லும் செய்தி:

சென்னையில் இராணிமேரி கல்லூரியின் பவள விழா 7.3.1990 அன்று காலை 10.30 மணியளவில் தொடங்கியது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்களும், நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி. வைஜெயந்திமாலா பாலி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கணபதி அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாண்புமிகு உணவு - கூட்டுறவு அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி அவர்களும், திருமதி. மீனா முத்தையா அவர்களும் விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்தனர்.

விழா தொடங்குமுன் - மஞ்சள் வண்ணச் சீருடையும் தலையில் கிரீடமும் அணிந்து இருமருங்கும் அணிவகுத்து நின்ற கல்லூரி மாணவியர் மலர் தூவியும், வணங்கியும் வரவேற்பு வழங்க - கல்லூரி பாண்டு வாத்தியக் குழு இசையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் விழா மேடைக்கு அழைத்து வந்தார் கல்லூரி முதல்வர் டாக்டர். நிர்மலா தியாகராசன்.

இராணிமேரி கல்லூரியின் முன்னாள் மாணவியர், விரிவுரையாளர்கள், பேராசிரியைகள், அலுவலர்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பட்டது.

கல்லூரி மாணவியர் பேரவை சார்பில் முதலமைச்சர் நிதிக்கெனப் பத்தாயிரம் ரூபாய் காசோலை வழங்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர். பி.எஸ். சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். பொருளியல் பேராசிரியை திருமதி லலிதா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

> தமிழ்நாட்டிலேயே
> 75 ஆண்டுகளாக
> மகளிர்க்கு
> உயர் கல்வி அளித்து
> பவளவிழாக் காணும்
> முதல் மகளிர் கல்லூரி
> இராணிமேரி கல்லூரியே!

இராணிமேரி கல்லூரி (தன் ஆட்சி) பவளவிழா அறிக்கையைக் கல்லூரி முதல்வர் டாக்டர். நிர்மலா தியாகராசன் படித்தார். "நாளும் வளர்ச்சி பெற்று நற்கலைகள் பலவும் பயிற்றுவிக்கும் இராணிமேரி கல்லூரி இப்போது எழுபத்தைந்து ஆண்டுகள் முடிந்து பவளவிழா காணுகிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரியின் வைர விழாவைத் தொடங்கிவைத்த சிறப்பால் அரசு மகளிர் கல்லூரிகளிலேயே தன்னாட்சி பெற்ற ஒரே கல்லூரியாக எங்கள் கல்லூரி உயர்ந்திருக்கிறது. பெண் கல்விக்காக நமது முதல்வர் அவர்கள் அளித்திருக்கும் சலுகைகள் மகத்தானவை. இக்கல்லூரியில் படித்துக் கல்விப்பயன் பெற்றோர் பலர் உலகளவிலே பல சிறப்பான நிலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு பல கலைக்கழக மானியக் குழுவைப் பவள விழாக்காணும் இக்கல்லூரிக்கு இருபது இலட்சம் ரூபாய் வழங்கக் கேட்டிருக்கிறோம். அதற்கு இணையாகத் தமிழக அரசும் அளித்தால், நல்லதோர் நூலகம், ஆய்வுக் கூடமெல்லாம் கொண்ட பவளவிழா நினைவுக் கட்டிடம் கட்டும்படியான

வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்" - என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2,268 சதுரஅடிப்பரப்பில் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைகள் பற்றிய தொழில் நுட்ப அறிக்கையினைப் பொதுப்பணித் துறையின் கட்டடப்பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு. ஏ.வி. சத்தியகாமன் படித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி. ராஜாத்தி அம்மையார், முன்னாள் மாணவியர் சங்கத்தலைவியும் - பவளவிழாக் குழுத் தலைவியுமான திருமதி. மீனா முத்தையா, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி. வெற்றிச் செல்வி ஆகியோர் விழாவைச் சிறப்பிக்கும் வகையில் குத்து விளக்கேற்றி வைத்தனர்.

புதிதாகக் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளைத் திறந்துவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்கள் பேசுகையில் - "பூக்களில் சிறந்தது தாமரை என்பது போல, ஆறுகளில் சிறந்தது காவிரி என்பது போல, மன்னர்களில் சிறந்தவன் சோழ மன்னன் என்பது போல, மகளிர் கல்லூரிகளில் சிறந்தது இராணி மேரி கல்லூரியே" என்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர். மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், பவளவிழா மலரை வெளியிட்டார். அன்னை தெரசா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திருமதி. வசந்திதேவி முதல் மலரைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தமது வாழ்த்துரையில் - "பெண்கள் சமஉரிமை பெற வேண்டும் என்று இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் - கண்டு வரும் கனவுகள் இப்படிப்பட்ட கட்டுக்கோப்பான மகளிர் கல்லூரிகள் மூலமே நிறைவேறியாக வேண்டும்" என்றார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் இராணிமேரி கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் டாக்டர் ஐராவதி, திருமதி.என். சண்முகசுந்தரம், செல்வி கே. ஜெகதாம்பாள், திருமதி இளயதுளிசா முனவர், செல்வி சரோஜினி, திருமதி. ராஜ ராஜேசுவரி ஆகியோருக்கும், தற்போதைய முதல்வர் டாக்டர் நிர்மலா தியாகராசனுக்கும் சிறப்பு செய்யப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:- "இன்று நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற கல்லூரிகளுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையிலே இந்தக் கல்லூரி அமைந்திருக்கின்றது. நல்ல கட்டுப்பாட்டோடு, கடமை உணர்வோடு, கண்ணியத்தோடு இந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற மாணவியர்கள் விளங்குகின்றார்கள் என்பது - நான் கேள்வியுற்று மகிழ்ச்சியடைகின்ற ஒரு செய்தி. எனவே, அத்தகைய தேன்பாயும் செய்தியை என்னைப்போன்றவர்களுக்கு வழங்குகின்ற இந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவிகள் அனைவருக்கும் - அவர்களை அந்த வகையிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியப் பெருமக்களுக்கும் என்னுடைய பாராட்டுதலை - மகிழ்ச்சியை - வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இதுபோன்ற பெண்கள் கல்லூரிகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்டவை இருக்கின்றன. மேலும் இத்தகைய கல்லூரிகள் உருவாக வேண்டும் - வளரவேண்டும் - பெருகிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஒவ்வொரு கல்லூரியும் எல்லா வகையிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று அந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற மாணவர்களும், அவைகளை நடத்திச் செல்கின்ற நிர்வாகிகளும் விரும்புவது இயற்கை. அதனால்தான் இந்தப் பவள விழாவை முன்னிட்டு மத்தியப் பேரரசிடம் இருபது இலட்ச ரூபாய் நிதி உதவி கேட்டிருப்பதாகவும், அந்த நிதி உதவி கிடைக்குமேயானால் அதற்கு ஈடாக மாநில அரசும் நிதி வழங்க வேண்டுமென்றும்கல்லூரி முதல்வர்அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.

"மத்திய அரசு ஒன்றைச் செய்யும் போது, மாநில அரசும் அதற்கு இணையாக ஒன்றைச் செய்தால் மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஆகிவிடும் என்பது பழைய காலக் கொள்கை. ஆனால் இன்றைக்கு மத்திய மாநில அரசுகள் சமமாக இணைந்து, நாட்டு நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்கின்ற ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டிருக்கின்ற கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

"பிரதமர் வி.பி.சிங் அவர்கள் கூட, சில மாதங்களுக்கு முன்பு கேரளாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது இனிமேல் மாநிலங்கள் மத்திய அரசிடம் யாசகம் கேட்கின்ற நிலையிலே கையேந்த வேண்டிய அவசியமில்லை. நமக்குக் கிடைப்பது ஒரு ரொட்டித் துண்டாக இருந்தாலும், அதனை மாநிலங்கள் என்ற சகோதரர்களோடு அனைவரும் பகிர்ந்து கொள்வோம் என்று குறிப்பிட்டார்கள். அது, மத்திய அரசும் மாநில அரசுகளும் சமமான மரியாதை கொண்டவை - என்பதைக் காட்டுகின்ற காரணத்தால் மத்திய அரசு எந்த அளவிற்குத் தொகை இந்தப் பவள விழாவை முன்னிட்டு வழங்க முன் வருகிறதோ, அதற்கு இணையான தொகையை வழங்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கை நிச்சயமாக மாநில அரசால் பரிசீலிக்கப்படும் என்பதை எடுத்துக்கூறி, இருபது லட்சம் மத்திய அரசு தருமா என்ற அந்தக் கேள்

சிறுசேமிப்புப்பழமொழிகள்

- சிறப்பை அளிப்பது சிறு சேமிப்பு
  செல்வம் தருவது சிறு சேமிப்பு.
- சேமிப்பு இல்லாக் குடும்பம்
  கூரையில்லா வீடு.
- சிக்கனம் வீட்டைக் காக்கும்
  சேமிப்பு நாட்டைக் காக்கும்.
- இன்றைய நமது சேமிப்பு
  நாளைய சந்ததிக்குப் பாதுகாப்பு.
- ஒற்றுமையில் வலிமை
  சேமிப்பினால் வளமை.
- வீட்டையும் நாட்டையும்
  காக்கச் சிறு சேமிப்பு.

குடும்பத்தின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல, ஒரு சமுதாயத்திற்கும் அவசியமானது.

சேமிப்பிற்கு அடிப்படை சிக்கனம். கஞ்சத்தனம் என்பது வேறு. சிக்கனம் என்பது வேறு. சிக்கனம் என்பது தேவையானவற்றிற்கு மட்டுமே செலவழிப்பது. கஞ்சத்தனம் என்பது தேவையானவற்றிற்கும் கூட செலவழிக்க மறுப்பது. ஆகவே சிக்கனத்தின் மூலம் நாம் சேமிக்க வேண்டும். இதுவரை சேமிக்காதவர்கள் இனிமேலாவது சேமிக்க வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுகின்றேன். ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை அரவணைக்க உங்களை அன்புடன் வேண்டுகிறேன். நீங்கள் சேமிக்கக்கூடிய பணத்தை அஞ்சலகங்களில் முதலீடு செய்யுங்கள். இந்த சிறு சேமிப்பு முதலீட்டுக்கு வங்கிகளைக் காட்டிலும் அதாவது 12% அதிக வட்டி உண்டு. நீங்கள் சிறுசேமிப்பு முதலீடு செய்வதற்கு இந்திரவிகாஸ் பத்திரங்கள், கிஸான்விகாஸ் பத்திரங்கள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள், குறிப்பிட்ட கால முதலீடு, பொது நலத்திட்டம், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கான திட்டம், பள்ளி மாணவர்களுக்குரிய சஞ்சய்கா சேமிப்புத் திட்டம், மாதாந்திர வருமானத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. சிறுசேமிப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்களை அணுகினால், அது பற்றிய விவரங்களைப் பெறலாம். வருமானவரி விலக்கிற்குக்கூட இத்திட்டங்கள் வழி வகைகள் செய்கின்றன.

சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் தனி மனிதர்கள் மட்டும் லாபம் பெறவில்லை. ஒரு சமுதாயமே பலன் அடைகிறது. சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் திரட்டப்படும் பெரும் நிதி மாநில அரசின் சமூக நலத்திட்டங்களுக்கும் மத்திய அரசின் நலத்திட்டங்களுக்கும் பயன்பெறுகின்றன. மாநில அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் அமுத சுரபியாக இந்தப் பெருந்தொகை பயன் படுகிறது. இந்த ஆண்டு சிறுசேமிப்புத் துறையின் மூலம் திரட்டப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ.400 கோடி. இதில் 100 கோடி ரூபாய் மத்திய அரசிற்குச் சென்றுவிடும். மீதி 300 கோடி ரூபாய்தான் தமிழக அரசிற்குக் கிடைக்கும். இது சமுதாயத்தின் அடித்தள மக்களுக்குப் பயன்படும் வகையில் உதவுகிறது.

முட்டை, வைட்டமின் மாத்திரைகளுடன் கூடிய சத்துணவு, 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கல், இலவச சேலை வேட்டி வழங்கல், கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.200/- வழங்குதல், திருமணம் ஆகாத இளம்பெண்களின் திருமணச் செலவிற்கு ரூ. 5,000/- வழங்கல், தொழிற்சாலைகள் உருவாக்கல், கல்விக்கூடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல், போக்குவரத்து வசதி செய்துகொடுத்தல் போன்ற பல திட்டங்களை நிறைவேற்ற இந்த நிதி பயன்படுகிறது.

ரூ.400 கோடி சிறுசேமிப்பின் மூலம் பெறப்படவேண்டுமென்ற இலக்கு நோக்கி நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம். இதுவரை ரூ.160 கோடி சேர்ந்துள்ளது. விரைவில் இலக்கை அடைவோம். இந்தத் துறை இப்போது மக்களின் கவனத்தை ஈர்க்கும் துறையாக மாற்றப்பட்டு வருகிறது. சேமிப்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் பல திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்தி வருகிறோம். 1.12.89 முதல் கார் போன்ற பல பொருட்களைப் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். ரூ.1000/- சிறு சேமிப்பு முதலீடு செய்து பரிசுக் கூப்பன் வாங்கினால் அவர்கள் கார் போன்ற பரிசைக் குலுக்கலின் மூலம் பெற முடியும். குலுக்கலில் கார் அல்லது பரிசுப் பொருட்கள் பெறவில்லையென்றால், அவர்கள் தங்கள் பணத்தை இழக்க மாட்டார்கள். வட்டியுடன் கூடிய முதலீட்டுப் பணத்தைப் பெறுவார்கள். இது மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு சீரிய திட்டங்கள் இன்னும் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. நீங்களும் இதில் பங்கேற்றுப்பயன்பெற அன்புடன் அழைக்கிறேன்.

(24.1.1990-இல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)

இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், கிராமியக் கலைகள் ஆகிய துறைகளில் சிறப்புமிக்க பணியாற்றிய கலைஞர்களுக்கும், பணியாற்றி வரும் கலைஞர்களுக்கும் ஆண்டுதோறும் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்.

தொடக்கத்தில் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்னும் பெயரைத் தாங்கியிருந்த இந்த அமைப்புக்கு 1973-இல் தமிழ்நாடு

கலைமாமணி விருது பெற்ற கண்மணிகள்

இயல், இசை நாடக மன்றம் என்னும் பெயரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் சூட்டினார்.

1959-60 முதல், கடந்த முப்பதாண்டுக் காலத்தில் மொத்தம் 675 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது அளித்துள்ளது இந்த மன்றம்.

இந்த ஆண்டு (1989) 28 கலைஞர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

விருது பெறும் கலைஞர்களின் உருவப் படங்களையும் வாழ்க்கைக் குறிப்புகளையும் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'.


திரு. வா.மு. சேதுராமன் (இலக்கியம்)

திரு. மன்னர் மன்னன் (இலக்கியம்)

திரு. வா.மு. சேதுராமன் (இலக்கியம்)

இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்டநாயகபுரத்தில் திரு. வா.முத்து, திருமதி இராமாயி தம்பதிக்கு 1938 ஜூன் திங்கள் 15-ஆம் நாளில் மகனாகப் பிறந்தவர் திரு வா.மு. சேதுராமன் அவர்கள்.

பெரும்புலவர் ஆறுமுகம் பிள்ளை, தமிழ்க்கடல் இராமதாசர், தவத்திரு சுவாமி சாது குரு அடிகள், வித்வான் சுந்தரராச ஐயங்கார் போன்ற ஆசிரியர்களிடம் தமிழ் பயின்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இவர். பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு 'தமிழ் நூலில் கவிதைக் கருத்துக்களும் கற்பனைகளும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சென்னையில் முசுலீம் மேல் நிலைப்பள்ளியில் தற்போது தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

காவியங்கள், கட்டுரைகள் என 56 நூல்களை இயற்றியுள்ளார்.

திரு மன்னர் மன்னன் (இலக்கியம்)

புதுவை என்று அழைக்கப்பட்டுவரும் புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசன் - திருமதி பழநியம்மாள் ஆகியோரின் மகனாக 3.11.1928 அன்று பிறந்தவர் திரு மன்னர் மன்னன் அவர்கள்.

கோபதி என்னும் இயற்பெயருக்குச்


திரு. நாகூர் அனீபா (இசை)

திரு. திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் (இசை)

திரு. களக்காடு இராமநாராயண அய்யர் (இசை)

திரு. ஆர். நடராசன் (ஓவியம்)

சொந்தக்காரரான இவர், தமது தந்தை பாவேந்தரிடமே தமிழ் பயின்றார்.

கவிதை, கதை, கட்டுரை, நாடகம் என எழுத்துக் களத்தின் பல துறைகளிலும் திறமை பெற்றுள்ள இவர், 14 நூல்களை உருவாக்கியுள்ளார். இவற்றில் இரண்டு நூல்கள் தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளன.

புதுவை வானொலி நிலையத்தில் தமிழ் எழுத்தாளராகவும் பேச்சுத்துறை ஆசிரியராகவும் 16 ஆண்டுகள், சென்னை வானொலி நிலையத்தில் நாடகத்துறை, பேச்சுத்துறை, குடும்பநலத் துறை ஆகியவற்றில் 4 ஆண்டுகள் என 20 ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார்.

திரு இ.எம். அனீபா (இசை)

இராமநாதபுரத்தில், ஜனாப் முகம்மது இஸ்மாயில், ஜனாபா முகம்மது மரியம் ஆகியோரின் புதல்வராக 1925 டிசம்பர் 25-ஆம் நாளன்று பிறந்தவர் திரு இ.எம். அனீபா அவர்கள்.

பன்னிரண்டாம் வயது முதல், தந்தையின் ஊரான நாகூரில் வாழ்ந்து வருகிறார். பள்ளியில் பயில்கின்ற காலத்திலேயே இன்னிசைப் பாடல்களை ஆர்வத்துடன் செவிமடுத்துத் தாமும் பாடுவதற்குப் பழகிக் கொண்டார்.

52 ஆண்டுகளாக இசைத் தொண்டு ஆற்றிவரும் இவருக்கு 1940-ல் கோகிலத் தொனி என்றும் 1945-ல் இசை முரசு என்றும் சிறப்புப் பட்டங்கள் வழங்கப பட்டன. 1989-ல் கலைஞர் விருது பெற்றார்.

1938 முதல் சுயமரியாதை இயக்கத் தில் பங்கேற்று வரும் இவர் 1971 முதல் 76 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணி ஆற்றியுள்ளார். 1989 முதல் வக்பு போர்டு உறுப்பின ராக இருந்து வருகிறார். பல வெளி நாடுகளுக்குச் சென்று இன்னிசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார்.

திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம் (இசை)

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பாம்புரத்தில், திரு ந. சோமசுந்தரம் பிள்ளை, திருமதி பட்டம்மாள் தம்பதி யின் மகனாக 15-7-1937-ல் பிறந்தவர் திரு சோ. சண்முகசுந்தரம் அவர்கள்.

தமது எட்டாவது வயதிலிருந்து பதின்மூன்றாவது வயது வரை, சிறந்த இசைப் பேரறிஞரான தமது தந்தை சோமசுந்தரம் பிள்ளையிடமும், பின்னர் தமது பெரிய தந்தையார் புல்லாங்குழல் மேதை திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையிடமும் இசை பயின்றார்.

முப்பது ஆண்டுகளாகக் கலைப்பணி புரிந்துவரும் இவர் தற்போது சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் முதல்வராகப் பணிபுரிந்து அதன் மேன்மைக்குப் பாடுபட்டு வருகிறார். எண்ணற்ற இசைக கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

களக்காடு எஸ். இராமநாராயண ஐயர் (இசை)

திருநெல்வேலி மாவட்டத்தில் களக் காடு என்னும் ஊரில் திரு என். சுப்பையா பாகவதர், திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 1910 அக்டோபர் பத்தாம் நாளன்று பிறந்தவர் திரு களக்காடு இராமநாராயண ஐயர் அவர்கள்.

தமது 7-ஆம் வயதிலேயே தம் தந்தை யிடம் இசைப் பயிற்சியைத் தொடங் கினார். இவரது தந்தையாரும் இசைத் துறையில் புகழ் பெற்றவர்; கொழும்பில் கனகசபை மகாராஜாவாலும், திருவனந்த புரம் ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜா வாலும் சிறப்பிக்கப்பட்ட அவர் விவேகா நந்தரின் ஆசியையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் 1928-ல் சென்னைக்கு வந்து மன்னார்குடி சுவாமி நாதய்யர், முடிகொண்டான் சபாபதி ஐயர் ஆகிய இசையறிஞர்களிடம் 10 ஆண்டுகள் பயிற்சி பெற்றார்

ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாகக் கலைப்பணிபுரிந்து வரும் இவர் பல சிறப்புப் பட்டங்களையும், பல் வேறு பரிசுகளையும் பெற்றுள்ளார்.



திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் (வயலின்)

திரு. குருவாயூர் துரை (மிருதங்கம்)



41-ஆம் பக்கம் பார்க்க

TNPSC

விளம்பர எண்: 7/90

தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணியில் கீழ்க்கண்டவாறு மாவட்டக் கல்வி அலுவலர்/மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவியில் 13 காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய 2.4.1990 அன்று மாலை 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வெளிச்சந்தையிலிருந்து ... 10
அரசு அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து ... 3

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000

(ஆதிதிராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) ... 2
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) ... 2 (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) ... 4 ,,
பகிரங்கப் போட்டி (ப.போ.) ... 5 ,,

குறிப்பு : தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அந்தக்காலியிடம் ஆண் விண்ணப்ப தாரரைக்கொண்டு நிரப்பப்படும்.

வயது : I. வெளிச்சந்தை:
1.7.1990 அன்று 30 வயதிற்குக்குறைவாக.
II. அரசு அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு:
1.7.1990 அன்று 40 வயதிற்குக்குறைவாக.

QUALIFICATIONS:

I. For both open market and Teacher candidates:-

i. A Master's Degree in any one of the following subjects viz.- Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, Commerce or Geography of any University in the State of Tamil Nadu with not less than 50% of marks or at least 'B' grade under the grading system in the Master's degree examination or a Degree of equivalent standard; and

ii. B.T., or B.Ed., Degree of any University in the State of Tamil nadu or a Degree of equivalent standard.

NOTE: Candidates who do not possess the B.T., or B.Ed., Degree may also apply. But such candidates, if selected, should acquire the said qualification before appointment.

iii. Must have taken Tamil under Part-I or Part-II in the Intermediate or Pre-University Course or Higher Secondary Course.

II. For teachers employed in recognised aided Secondary Schools:-

Teaching experience in a recognised School for a period of not less than twelve years after acquiring the B.T. or B.Ed. degree.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப் பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக் கூடிய 1.3.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.90/அன்றோ அல்லது அதற்குப்/பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) 'யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்கு மாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR 509/MS/90/ad.bureau/3119

தமிழீழத்தில் தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்

- முதல்வர் கலைஞர்

26-2-90 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இலங்கையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் குழுவின் சார்பில் சென்னை வந்த பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களும் பேச்சுவார்த்தையிலே கலந்து கொண்டார். அதற்குப் பிறகு முதல்வர் கலைஞர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

''1983இல் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரம் தோன்றி, இனப்படுகொலை நடைபெற்ற அந்தக் கொடுமையான நாட்களிலிருந்தே தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, அந்த ஒற்றுமை ஏற்படுவதற்குத் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வந்திருக்கின்றேன். ஆனால் தமிழ்நாட்டு அரசியல் நிலவரங்களினால் அந்த ஒற்றுமைச் சூழ்நிலை பாதிக்கப்பட்டதோடு, எனது முயற்சிக்கு மாறாகப் போராளிக் குழுக்களிடையே பிளவு மனப்பான்மையை உருவாக்குவதில் சில சுயநல ஸ்தாபனங்கள் கடந்த காலத்தில் வெற்றிபெற்று விட்டன. அதன் விளைவாகவும், இந்தியா இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி எல்லா அதிகாரங்களும் வடகிழக்கு மாநிலமான தமிழீழத்துக்கு இலங்கை அரசிடமிருந்து இந்திய அரசு வாங்கித் தந்துவிட்டதாக முன்பு பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களே பல கூட்டங்களில் திட்டவட்டமாகக் கூறியதைத் தமிழ்நாட்டு மக்கள் நம்பிய தன் காரணமாகவும் - அவ்வாறு நம்ப வைக்கப்பட, வானொலியும், தொலைக்காட்சியும் நாள்தோறும் பயன்படுத்தப்பட்டதனாலும் இந்திய மக்களும், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களும் திசை திருப்பப்பட்டார்கள்.

ஆனால் இலங்கைத் தமிழீழத்தில் ஆயுதம் தேடல் என்ற முறையிலும், இந்திய சிப்பாய்களைத் தாக்குவது என்ற நிலையிலும் ஈழத் தமிழர்களும் இந்திய சிப்பாய்களும் ஆயிரக் கணக்கில் உயிரிழக்க நேரிட்டது. அங்கே அமைந்த வடகிழக்கு மாநில அரசும் திரு. வரதர்ராஜப் பெருமாள் அவர்கள் தலைமையில் அதிகாரமற்ற ஒரு அரசாகவே இருந்திடும் நிலை ஏற்பட்டுள்ளது. 1983-இல் சிங்கள ராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் யுத்தம்; பிறகு இந்திய ராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் யுத்தம்; அதன் பிறகு தமிழ்ப் போராளிகளே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு யுத்தம் நடத்துகின்ற நிலைமை; இதற்கிடையே பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் இந்திய அமைதிப் படை கடந்த டிசம்பர் 31ஆம் தேதிக்குள் வாபசாகி விடும் என்று அறிவித்து, அதன்படி வாரந்தோறும் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் இலங்கையிலிருந்து வாபஸ் வாங்கவும் தொடங்கி விட்டார்கள். இந்தியாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணி அரசு வி.பி. சிங் தலைமையில் உருவானதும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் அமைதிப்படை வாபஸ் என்பதை மாற்றி, மார்ச் 31-ஆம் தேதிக்குள் என்று அறிவிக்கப்பட்டு, மேலும் மூன்று மாத கால அவகாசம் தரப்பட்டது.

இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி தமிழீழத்தில் நடைபெறும் தமிழ்ப் போராளிகளுக்கு இடையேயான மோதுதலைத தவிர்க்கவும், தமிழர்கள் ரத்தம் சிந்துவதை நிறுத்தவும் போராளிகள் குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டு, எல்லா போராளிக் குழுக்களுடனும் பலமுறை, பல நாட்கள் பல மணி நேரம் பேசிவிட்டேன்.

அண்மையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் டெல்லியிலிருந்து வந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் கலந்து கொண்டார்.

பேச்சுவார்த்தை விவரங்கள் அவ்வப்போது பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கும், வெளி உறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் அவர்களுக்கும் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தையின் இறுதிக் கட்டமாகத் தமிழீழத்தில் போராளிகளுக்கிடையே மோதுதலைத் தவிர்க்க, போர் நிறுத்தம் ஏற்படவும், விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.) ஜனநாயக அரசியலுக்குத் திரும்பவும் நான் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் - எல்.டி.டி.ஈ. யினர் ஜனநாயக வழிக்கு வருவதற்கு வசதியாகத் தற்போதுள்ள வடகிழக்கு மாகாண சபையை வரதராஜப் பெருமாளே முன்வந்து கலைப்பதற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும்- 3, 4 மாதங்களுக்குள் அங்கே தேர்தலை நடத்தி மக்கள் ஆதரவின் அடிப்படையில் வடகிழக்கு மாநிலத்தில் புதிய அரசு அமைக்க வேண்டுமென்றும் விடுதலைப்புலித் தலைவர்கள் திட்டவட்டமாகக் கூறினார்கள்.

அதுகுறித்து ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ஈராஸ், டெலோ, பிளாட் ஆகிய இயக்கத் தலைவர்களை அழைத்துப் பேசினேன்.

எல்.டி.டி.ஈ.யின் கருத்துக்கு ஈராஸ், டெலோ, பிளாட் ஆகிய இயக்கங்கள் ஒப்புதல் தெரிவித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சில யோசனைகளையும் தெரிவித்துள்ளன.

ஈ.என்.டி.எல்.எப். குழுவினர் இந்தப் பிரச்சினையில் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ன முடிவெடுக்கிறதோ அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறிவிட்டனர்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினர் இப்போது வடகிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவதால் மோதுதல்கள் ஏற்படும் என்றும் - எல்.டி.டி.ஈ.க்குத் தேவையான பிரதிநிதிகளை வடகிழக்கு மாகாண சபையில் தாங்களே தருவதாகவும் கூறினர்.

அதன் தொடர்பாக மீண்டும் மீண்டும் இரு சாரரிடமும் நான் பல மணி நேரம் பேசினேன்.

மலையகத் தமிழர்களுக்கான தனி மாநிலம் - மாகாண அரசுக்கு வெளிநாட்டுத் தொடர்பு போன்ற 19 நிபந்தனைகளை முன்வைத்து அவைகள் நிறைவேற்றப்பட்டால்

எத்தனை பிரதிநிதிகளை வேண்டுமானாலும் மாகாண சபையில் எல்.டி.டி.ஈ. எடுத்துக் கொள்ளட்டும், தேர்தல் வேண்டாம் என்பது தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப்., எடுத்து வைக்கும் வாதம்.

ஜனநாயக வழிக்கு வரும் நாங்கள், மக்கள் ஆதரவு எங்களுக்குப் பெரும்பான்மையாக இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்ட விரும்பும்போது, எதற்காக மாகாண சபையில் இடங்களை யாசகம் பெறவேண்டும் என்பது எல்.டி.டி.ஈ. எடுத்து வைக்கும் வாதம்.

இன்று என்னை இலங்கை வடகிழக்கு மாகாண அரசிலிருந்து சபாநாயகர் திரு ராஜகாரியர், தொழில் அமைச்சர் திரு அபுயூசுப், மற்றும் திருமதி ஸ்ரீதரன், கந்தசாமி ஆகிய மாநிலக் கவுன்சில் உறுப்பினர்களும் திரு சாந்தன் அவர்களும் சந்தித்துப் பேசினார்கள்.

திரு வரதராஜப் பெருமாளும், திரு பத்மநாபாவும் எனக்கு எழுதியுள்ள கடிதங்களையும் என்னிடம் அவர்கள் அளித்தார்கள். நான் முதலில் குறிப்பிட்ட 19 நிபந்தனைகளையும் இன்று வந்த பிரதிநிதிகள் தான் எனக்குத் தெரிவித்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினரும், எல்.டி.டி.ஈ. குழுவினரும் தாங்கள் எடுத்து வைக்கும் வாதங்களில் பிடிவாதமாக இருப்பதாலும், ஈ.பி.ஆர்.எல்.எப். 19 புதிய நிபந்தனைகளை இப்போது புதிதாக வலியுறுத்துவதாலும் நான் விரும்புகிறபடி ஒற்றுமையானதும், அமைதியானதுமான சூழ்நிலை உடனடியாக விளைந்திட, தடங்கல் ஏற்பட்டுள்ளது.

நிருபர்: *தடங்கலை நீக்க என்ன செய்யப் போகிறீர்கள்?*

முதல்வர்: இப்போதுள்ள நிலைமையை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். மேலும் இந்தப் பிரச்சினையிலே இரு சாராருக்கும் அனைத்து நிலைமைகளையும் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இதிலே நான் எந்தக் கருத்தையும் யார் மீதும் திணிக்க விரும்பவில்லை. நான் திணிக்க விரும்புகின்ற கருத்து **தமிழீழத்தில் தமிழர்கள் ரத்தம் சிந்துவது நிறுத்தப்பட வேண்டும்.** இதிலே எந்தக் குழுவினர் மீதும் எந்தக் குழுவினர் கருத்தையும் நான் திணிக்க விரும்பவில்லை.

நிருபர்: *இந்திய அமைதிப்படை திரும்புவது என்னவாகும்?*

முதல்வர்: அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி முன்பே அமைதிப்படை திரும்பும் என்று சொல்லிவிட்டார். அதன்படி திரும்பி வருவதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் தான் அமைதிப்படை திரும்பி வந்த பிறகு, தமிழீழம் ரண களமாகவும் ரத்தம் சிந்தும் பூமியாகவும் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் தான் நாங்கள் இவ்வளவு முயற்சிகளையும் மேற்கொண்டோம்.

நிருபர்: *19 நிபந்தனைகள் என்ன என்ன? என்ன எழுதியிருக்கிறார்கள்?*

முதல்வர்: வரதராஜப்பெருமாளும், பத்மநாபா அவர்களும் எழுதிய கடிதம் வருமாறு:

"அன்பும் பண்பும் நிறைந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு,

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைக் கரிசனையுடனும், ஆழ்ந்த அனுதாபத்துடனும் அணுகும் தங்கள் நற்பண்பை மிகவும் நேசத்துடன் வரவேற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தங்களின் கூர்மையான கவனத்திற்கும் மேலான அவதானத்திற்கும், இன்று ஈழத் தமிழர் முகம் கொடுக்க நேர்ந்திருக்கும் பிரச்சினைகளுக்குத் தான் நல்லதென சிந்திக்கும் தீர்வுகளை, இக்கடிதத்துடன் பிரேரணை மூலமாக முன் வைத்திருக்கிறது. இப்பிரேரணையுடன் எமது உயர்மட்ட தூதுக் குழுவொன்று தங்களை நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாட வருகின்றது. அன்புகூர்ந்து தாங்கள் தங்களது திடமான கருத்தினை வெளியிட்டு ஈழத்தமிழர் சமாதானமாகவும், நிம்மதியுடனும் வாழ வழி செய்வீர்கள் என அந்தரங்க சுத்தியுடன் எதிர்பார்க்கிறோம்."

இவ்வாறு எழுதிவிட்டு அவர்கள் நிபந்தனைகளை எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் நிபந்தனையிலே 1957-ஆம் ஆண்டு பண்டார நாயகாவிலிருந்து ஆரம்பிக்கின்றார்கள். மாகாண அரசாங்கம் வெளி நாடுகளுடனோ, அல்லது வெளி நாட்டு நிறுவனங்களுடனோ முதலீடுகள், நன்கொடைகள் தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பது போன்ற நிபந்தனைகள் அதிலே உள்ளன.

இதிலே கவனிக்க வேண்டியது இரண்டு மூன்று மாதங்களாக பேச்சுவார்த்தை நடப்பதால் ஓரளவு மோதுதல் குறைந்திருக்கின்றது. சாவு எண்ணிக்கையும் குறைந்திருக்கின்றது என்பதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

நிருபர்: *பேச்சுவார்த்தை தோல்வி என்று சொல்லலாமா?*

முதல்வர்: தடங்கல் ஏற்பட்டுள்ளது என்று தான் சொன்னேன். தொலைக்காட்சியிலே கூட தடங்கல் ஏற்பட்டால் பிறகு நிகழ்ச்சிகள் தொடருவதில்லையா? இதிலே யாராவது ஒருவர் விட்டுக்கொடுக்க முன் வர வேண்டும். பேச்சுவார்த்தை வெற்றியா தோல்வியா என்பதல்ல அங்கேயுள்ள **தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்** என்பது தான் எங்களுடைய கவலை.

நிருபர்: *விடுதலைப் புலித் தலைவர்கள் [illegible], மாத்தையா போன்றவர்களை [illegible] பேசுவீர்களா?*

முதல்வர்: பாலசிங்கமும், யோகியும், பிரபாகரன், மாத்தையா போன்ற தலைவர்களிடம் பேசிவிட்டுத் தான் என்னிடம் வந்து பேசினார்கள். நால்வரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்து எடுத்த கருத்தைத் தான் தெரிவித்தார்கள். இதிலே ஒரு இறுதி முடிவு எடுக்கின்ற நிலைமை வந்தால் அவர்களுடனும் பேசலாம். அதில் ஒன்றும் இடைஞ்சல் இல்லை.

—மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (26.2.90) செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து.

நூல்நயம்

வைரமுத்து வரை

ஆசிரியர்:
டாக்டர் க. சண்முக சுந்தரம்

வெளியீடு:
காவியா புக்ஸ்,
16, 17வது குறுக்கு,
இந்திரா நகர், 2வது நிலை
பெங்களூர்-560 038.

மதுர பாஸ்கர தாஸ் முதல் வைரமுத்து வரை ஏறக்குறைய 600க்கு மேற்பட்ட திரைப்படப் பாடலாசிரியர்களின் திறமை, பெருமை குறித்தும் சாதனைகள் குறித்தும் எழுதப்பட்டுள்ள அரிய நூல் இது.

'மதுர பாஸ்கர தாஸ் முதல் வைரமுத்து வரை' என்றே நூலுக்குத் தலைப்புச் சூட்டியிருக்கலாம். இன்றைய கவிஞருக்கு இனிய வரவேற்பை நல்கும் நூலாசிரியர் சென்ற தலைமுறையைச் சிறப்பிப்பதில் தவறில்லையே!

இந்திய சரித்திரத்தில் ஆங்கிலேயர் காலத்தைக் குறித்து 1949ல் தொடர்கட்டுரை எழுதிய ஆனந்த விகடன் 'கிளைவ் முதல் ராஜாஜி வரை' என்றே தலைப்புச் சூட்டியிருந்தது. முதல் இருந்தால்தான் வரை என்பதற்குப் பொருள் இருக்க முடியும்.

இந்நூலில் சில பாடலாசிரியர்களின் வரலாறும் சாதனைகளும் விரிவாக உள்ளன. சிலரது சாதனைகள் [illegible] சாதனைகளை [illegible] றுகள் [illegible] ஆசிரியரின் எழுத்தாற்றலை [illegible]

ஆசிரியரின் கடும் உழைப்புக்குக் கட்டியங் கூறுகிறது இந்நூல். ஒரு மாளிகையைக் கறுப்புக் கோடுகளால் ஒரு நொடியில் வரைந்து காட்டிவிட முடியும். ஆனால் அதனை மெய்யாகவே உருவாக்குவதென்பது எளிதான செயலன்று. இந்நூலும் உருவாக்கப்பட்ட ஒரு மாளிகை போல் திகழ்கிறது.

என்றாலும் இம்மாளிகையில் ஒரு சில குறைபாடுகள் இல்லாமல் இல்லை. ஒருவர் எழுதிய பாடல், வேறொருவர் எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பாடலாசிரியரைக் குறித்து இந்நூலிற்குத் தேவை இல்லாத தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

நூல் முழுதும் வைரமுத்து ஒளி [illegible] திகழ்கிறார். அவரது அணுகுமுறை - அவரது திறமை - பிற கவிஞரிடம் உள்ள ஈடுபாடு - தொடர்பு - மதிப்பீடு - ஆகியவை நன்[illegible]ளக்கப்பட்டுள்ளன இந்நூலில்.

[illegible] இசையமைப்பாளர்களும் [illegible] விதத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் இந்நூல் இமாலயச் சாதனையாக விளங்குகிறது.

— எஸ்.எஸ். சுந்தரம்

இல்லை. ஆனால், அதைப்பற்றி அவர்கள் - சொல்வதைக் கேட்கத் தான் ஆள் இல்லை. அந்த நேரத் தில் அவர்கள் மனக்குறை அன்பு டனும் ஆதரவுடனும் செவிமடுக்கப் பட்டிருந்தால், ஒரு தற்கொலை - தவிர்க்கப்பட்டிருக்கலாம். அதாவது அவர்கள் தங்கள் நிலையைச் சொல் கிறபோது, 'இவர்களுக்கு வேறு வேலை இல்லை' என்று நாம் அலட் சியம் செய்துவிடுகிறோம்.

தற்கொலை முயற்சி என்பது என்ன?

தற்கொலை முயற்சி என்பது இரட்டை மனநிலையில் - அதாவது வாழவேண்டும் என்று ஒருபுறம் ஆசை, சாகவேண்டும் என்று ஒரு மனநிலை. இந்நிலையில் தற்கொலை முயற்சி என்பது உதவி கேட்கும் குரலாக அமைகிறது.

ஆம். தற்கொலையை நம்மால் தவிர்க்க முடியும்.

தீராத வியாதி

தனிமைத் துயர்

வீட்டில் சண்டை, சச்சரவு

திருமண முறிவு

வரதட்சிணைக் கொடுமை

மனச்சோர்வு

பெற்றோர்களின் கொடுமை

ஊனம்

போதை மருந்துக்கு அடிமை

தங்கள் நிலைமையை மற்றவர் களிடம் சொல்லத் தயக்கம்

நெருங்கியவர்களின் மரணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமை

பொருளாதாரப் பிரச்சினை

இந்த நிலைமைகளுக்கெல்லாம் ஏழை, பணக்காரன் என்ற வித்தி யாசம் இல்லை; இளையோர் முதி யோர் என்கிற வயதுப் பாகுபாடும் இல்லை.

இந்தச் சூழ்நிலையில் - 'ஏன் வாழ வேண்டும்?' என்கிற விரக்தி ஏற்பட்டுள்ள நிலையில் - அவர்கள் மனத்தில் பொங்கி வழியும் மனக் குமுறல்களுக்கு - மனச்சுமைக்கு ஒரு வடிகால் தேவை. அந்த வடிகாலாக அமைகிறது - 'சிநேகா'.

இந்த நிறுவனத்தில் 45 தொண் டர்கள் இருக்கிறார்கள். காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை இந்தத் தொண்டர்கள் 'ஷிப்டு' முறை யில் வந்து தொண்டாற்றுகிறார்கள்.

நமக்குள்ள பிரச்சினைகளை - சிக்கல்களை இவர்களிடையே பகிர்ந்து கொள்ள முடியும். எப்படி?

உங்கள் மனப்பாரத்தை நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு மனச்சுமையைப் பகிர்ந்து கொள் ளலாம்.

இந்த நிறுவனத்தில் இதுவரை ஏழாயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்புகொண்டு, தங்கள் குறை களைப் பகிர்ந்து கொண்டதுடன் உரிய தீர்வும் பெற்றிருக்கிறார்கள்.

'சிநேகா' - உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைகிறது.

பலருக்கு மனநிம்மதி அளித்து வருகிறது.

பலரை மரணப்பிடியிலிருந்து காப் பாற்றியிருக்கிறது.

கண்ணீருடன் உள்ளே நுழைந்த வர்கள், தமது மனச்சுமையை இறக்கி விட்டு, தெளிந்த மனதுடன் வெளியே வருகிறார்கள்.

தங்கள் தொண்டுகளைப் பலரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற பரந்த நோக்கில், பேருந்து களில் இவர்களது விளம்பரம் காணப் படுகிறது. நாடகங்கள் மூலமாகவும் இவர்கள் சமுதாயப் பிரச்சினையைச் சித்தரித்து வருகிறார்கள். 'சிநேகா' ஆதரவுடன் பல்லவன் போக்கு வரத்துக் கழகத் தொழிலாளர்கள் மத்தியில், அந்தத் தொழிலாளர் களே நடத்திய நாடகம் நல்ல பலனைத் தந்திருக்கிறது. அவர்கள் பணியைப் பற்றி ஏனைய மக்களும் தெரிந்து உதவி பெற ஒரு மாதத் திற்கு முன்பு ஒரு நாடகமும் நடத்தப்பட்டது.

பிரச்சினையை இவர்கள் அணுகும் முறை சிறப்பானது. தொலைபேசி யில் பேசினாலும் [illegible] சலிப்பில்லாமல் அமைதி [illegible] யாகக் கேட்பதும், நேரில் வந்து எவ்வளவு ஆவேசத்துடன் அவர் களது உள்ளக் குமுறலை எரிமலை யாய் வெடித்தாலும் அதைத் தவிர்க்கும் வகையில் தன்மையாகப் பேசுவதும், இவர்களுக்கு இயல்பாகவே அமைந் துள்ளது. இவர்களிடம் தொடர்பு கொள்பவர்களுக்கு மனோதத்துவ ஆலோசனை தேவைப்பட்டால் அவர்கள் மனோதத்துவ நிபுணரி டம் தொடர்பு கொள்ள உதவு கிறார்கள்.

யார் எந்தப் பிரச்சினையுடன் வந்தாலும், அது இரகசியமாகவே இங்கு பாதுகாக்கப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த நிறுவனத்தைப் போலவே பல அமைப்புகள் உள்ளன.

இந்தியாவில் டெல்லி, பம்பாய், பெங்களூர், ஐதராபாத், திருவனந்த புரம் ஆகிய மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் இம்மாதிரியான தொண்டு நிறுவனங்கள் உள்ளன.

டாக்டர் லட்சுமிவிஜயகுமார் இதன் இயக்குநர். இந்த நிறுவனத் தின் செயலாளர் திருமதி சரோஜா சுப்பராமன் அவர்களைச் சந்தித்தபோது, அவர் கூறினார்—

"மற்றவர்கள் மனத்தைப் புரிந்து கொள்ளுங்கள்; எப்படிப்பட்டதாக இருப்பினும், அவர்கள் கஷ்டங் களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். யாருடனும் சிநேக பாவத்துடன் நடந்து கொள்ளுங்கள். பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முடியாவிட்டா லும் பிரச்சினையின் பாதிப்பைப் பரிவான - செவிமடுப்பால் குறைக் கலாம். யாரையும் அலட்சியம் செய்யா தீர்கள். உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணையாக 'சிநேகா' இருக்கிறது. 'சிநேகா'வுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்:473456-ஐப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்கிறார் மகிழ்ச்சி யுடன்.

—பேட்டி: பி.வி. கிரி.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

பொருளாதார வசதி இன்மையால் மண வயதடைந்தும் கூட, திருமணமாகாமல், தங்கள் வாழ்வு மலராதா என்று ஏங்கிக் கிடந்த ஏழை, எளிய பெண்களின் துயரத்தினைத் துடைக்க அரசு அளித்த நல்லதோர் திட்டம்தான் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மை யார் நினைவுத் திருமண உதவித் திட்டம்'. இத்திட்டத்தின் கீழ், ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செய்வ தற்கு அரசு தலா ரூ. 5,000 வீதம் இலவசமாகத் திருமண உதவித் தொகை வழங்கி வருகிறது. இவ்வகை யில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டில் 388 பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந் துள்ளார்கள். இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 19.40 இலட்சம் ஆகும்.

'கருவுற்ற ஏழைப் பெண்கள் கண் கலங்கக்கூடாது, அவர்கள் மகிழ்வுடன் மக்கட்பேறு பெற்று மனநிறைவு அடைய வேண்டும்' என்ற மிக நல்ல நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உயரிய திட்டம்தான் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம். இதன் கீழ் இந்த மாவட்டத்தில் கருவுற்ற பெண்கள் 1,428 பேர் இந்த ஆண்டு பயன் அடைந்துள்ளார்கள். இதற்குச் செல விடப்பட்ட தொகை ரூ. 2,85,600 ஆகும்.

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரிற் பழுத்த பலா' என்று பாவேந்தர் பாரதிதாசன் நமது சமு தாயத்தில் இளம் கைம்பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றிப் பாடிய அந்த நாள் நிலை யினை அரசு-இந்த நாளில் மாற்றிக் கொண்டு வந்த சீர்மிகு 'விதவைகள் மறுமணத் திட்டத்தின்' கீழ், இம் மாவட்ட ஓராண்டு ஒதுக்கீடான ரூ. 30,000, ஆறு கைம்பெண்கள் பயன் பெற வழங்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய, திக்கற்ற கைம் பெண்களின் மகள்கள் மங்களகர மாக மணவாழ்வு பெற்று வாழ வழி வகுக்கும் வகையில் விதவைகளின் மகள் திருமணத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட உதவித்தொகை ரூ. 45,000, 45 இளம் பெண்கள். மணவாழ்வு பெற இந்த ஓராண்டுக் காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மாதம் ரூ.300-க்குக் குறைவாக வருமானமுள்ள ஏழைக் குடும்பத் தினருக்குத் தலா 5 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரரின் எண்ணிக்கை 2,78,222. இந்த ஆண்டில் ஐந்து முறைகள் வழங்கப் பட்ட இலவச அரிசியின் மொத்த அளவு 6,760 மெட்ரிக் டன் ஆகும்.

TNPSC

விளம்பர எண்: 8/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு 2.4.90 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிகளுக்குப் பொருந்தாது):-

1. ஒரு ஒளிப்பதிவாளர் (Cameraman)

(தமிழ்நாடு பொதுச் சார்நிலைப்பணி) தமிழ்நாடு திரைப்படப் பிரிவைச் சார்ந்தது. ரூ.1640-2900/-

வயது: 1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

தகுதி: அ. (i) ஸ்டேட்போர்டு ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அண்டு ட்ரெய்னிங், தமிழ்நாடு, சென்னை அவர்களால் வழங்கப்பட்ட சினிமாடோகிராபியில் ஒரு பட்டயம்,

மற்றும்

(ii) ஃபீட்சர் (feature) ஃபிலிம்ஸ் அல்லது டாக்குமெண்டரி ஃபிலிம்ஸ் அல்லது நியூஸ்ரீல் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் ஒளிப்பதிவாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாகச் செயல்வழி அனுபவம்.

அல்லது

ஆ. (i) குறைந்தபட்ச பொதுக் கல்வித்தகுதி மற்றும்

(ii) ஒளிப்பதிவாளராக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்

2. ஒரு இளநிலை வேதியியலர் (Junior Chemist)

(தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணி) புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்தது. ரூ.1400-2600/-

வயது: 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

தகுதி: வேதியியலின் ஏதாவது ஒரு பிரிவில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு முதுநிலைப் பட்டம்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் குறிப்பிட வேண்டும்.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட 10/-ரூபாய்க்கான (பத்து ரூபாய்) சென்னை, அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-600006-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft)யுடனும், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் (ரூ.10/-) செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

DIPR 507/MS/90/MCS

உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணை

பதினான்கு வயதுப் பெண் ஒருத்தி பருவமடைந்தபின், அதைத் தனக்கு வந்த தீராத நோய் என்று கருதி, பய உணர்ச்சி காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

இந்தச் செய்தி அந்தப் பகுதி முழுவதும் பரவுகிறது.

இந்தத் துயர நிகழ்ச்சி 'சார்டு வாரா' என்னும் பாதிரியாரின் மனத்தை வருத்தியிருக்க வேண்டும்.

அந்த இளம் வயதுப் பெண்ணுக்கு என்ன பிரச்சினை இருந்திருக்கும்? அவள் மனத்தில் அலை பாய்ந்த உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லையா? இது போன்ற நிலைமை நீடித்தால் சமுதாயம் என்ன ஆகும்?

உடனே அந்தப் பாதிரியாருக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

மனம் விட்டுப் பேசினால், மன பாரத்தைக் குறைத்து எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க உதவலாம். மற்றவர் குறைகளைக் கேட்டு ஆறுதல் கூறுவதும், தன்னால் ஆனவற்றைச் செய்வதும் ஒருவகைத் தொண்டு தானே!

மறுநாள் ஒரு விளம்பரம் செய்திருந்தார் அவர். அதில், உங்களுக்குப் பிரச்சினையா? மனம் விட்டுப் பேச, இந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் என்றும், அல்லது மாதாகோவிலில் இந்த நேரத்தில் என்னை வந்து சந்தியுங்கள் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பிறகு பலர் வர ஆரம்பித்தார்கள். அந்தத் துயர நிகழ்ச்சிக்குப் பிறகு Be Friend International என்னும் ஓர் அமைப்பே தோன்றியது.

இது நடந்தது 1953 ஆம் ஆண்டு, இலண்டனில்!

அன்று ஊன்றிய இந்த விதை தான் இன்று ஆலமரமாக வளர்ந்து உலகமெங்கும் பல விழுதுகளைப் பரவவிட்டிருக்கிறது. அதன் ஒரு விழுதுதான் சென்னையிலுள்ள 'சிநேகா' என்னும் தொண்டு நிறுவனம்.

'சிநேகா' என்ன செய்கிறது?

'சென்னை இராயப்பேட்டை, எண்.4, லாயிட்ஸ் சந்து' முகவரியிலுள்ள 'சிநேகா'வுக்குள் நுழைகிறோம்.

''Please come in, Can I help you?'' என்ற 'போர்டு' நம் கண்களில் படுகிறது.

உள்ளே ஒருவர் தம் பிரச்சினையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததையும், இந்த அமைப்பின் தொண்டர் ஒருவர் அவர் கூறுவதை அன்புடனும் ஆதரவுடனும் கேட்டுக் கொண்டிருந்ததையும் பார்க்க முடிந்தது.

ஒரு மனிதன் எப்போது தற்கொலை செய்து கொள்கிறான் என்று யாராலும் உறுதியாகக் கூற முடியாது.

சந்தர்ப்பம், சூழ்நிலை, சமுதாயப் பிரச்சினை இவைகளால், தான் பாதிக்கப்படும்போது ஏற்படுகிற மனக்கவலை, சிக்கல்கள்- ஒருவனைத் தற்கொலைக்குத் தூண்டலாம்.

இது மனநோயாளிக்கு மட்டுமல்ல, சாதாரணமானவர்களுக்கும் தோன்றுகிற எண்ணம்தான்.

பொதுவாக, 80 சதவிகிதத்தினர் தற்கொலை செய்து கொள்வது பற்றி முன்பே தம் எண்ணத்தைச் சொல்லிவிடுகிறார்கள். சாகிற எண்ணம் அவர்களுக்கு எப்போதும்

அதன் மதிப்பு ரூ. 1 கோடி 19 இலட்சத்து 11 ஆயிரத்து 168 ஆகும்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதல்வரின் பிறந்த நாளாகிய 3-6-1989 முதல் மாதம் இருமுறை சத்துணவுடன் முட்டையும் வழங்கப்படுகிறது. இதனால் இம்மாவட்டத்தில் 2,71,000 குழந்தைகள் பயனடைகிறார்கள்.

விபத்து நிவாரணத் திட்டத்தின் மூலம் 6 பேர் பயனடைந்தனர். அவர்களுக்கு மொத்தம் ரூ. 33,000 வழங்கப்பட்டது.

துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் 213 பேருக்கு ரூ. 4.26 இலட்சம் வழங்கப்பட்டது.

1989-ஆம் ஆண்டில் 544 பேருக்கு முதியோர் ஒய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் தொழில் வளர, தொழில் வினைஞர்கள் வாழ்வு மலர, மாவட்டத் தொழில் மையத்தின் வாயிலாக 25 நிரந்தர சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, 714 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். குடிசைத் தொழில்கள் 43-க்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, 125 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஊரகத் தொழில் கடனாக ரூ. 2,10,000 வழங்கப்பட்டுள்ளது.

ஊரகக் கைவினைப் பயிற்சித் திட்டம் மற்றும் மின் மானியத் திட்டம் ஆகியவை நல்ல முறையில் செயல்படுத்தப்படுகின்றன. ஆரல்வாய்மொழியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கு 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுப் பணிகள் தொடங்க, துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மக்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்க, அரசு அனைத்து வழிகளிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கிராமக் குடிநீர்த் திட்டப் பராமரிப்பில், குமரி மாவட்டத்தில் தற்போது 1,614 ஆழ்குழாய் அடிப்பம்புகள் செயல்பட்டு வருகின்றன. 388 விசைப்பம்புகள் குடிநீர்த் திட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விஞ்ஞானத்தை வளர்ப்போம்!
விளையும் மாசைத் தவிர்ப்போம்!

Pollution Controlஐ மாசுக் கட்டுப்பாடு என்று நாம் தமிழிலே மொழிபெயர்த்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். 'மாசு' என்றால் தமிழில் பல்வேறு பொருள் உண்டு. ஆனால் எல்லாப் பொருளும் ஒரு அடிப்படைத் தன்மை வாய்ந்தது. மாசு என்பது - ஒருவர்மீது படிகின்ற 'தூசு' - அதைக் கூட மாசு என்றுதான் சொல்கிறோம். ஒரு மனிதனுடைய உள்ளத்தில் உருவாகின்ற தவறான எண்ணங்கள்-அந்த எண்ணங்களின் காரணமாக ஏற்படும் விளைவுகள் - அவற்றையும் மாசு என்றுதான் சொல்கிறோம்.

எனவேதான் வடலூர் வள்ளலார் அவர்கள் 'மாசற்ற வாழ்வு நாம் வாழ வேண்டும்' என்று சொல்லியிருக்கின்றார். அவர் ஆன்மீக வழியிலே-தத்துவத் துறையிலே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

—முதல்வர் கலைஞர்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் மூலம் மாணவ, மாணவியர் உதவித் தொகை பெற அவர்களது, பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 ஆக இருந்தது. அது ரூ. 12,000 ஆக இந்த ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் பட்டப்படிப்பு வரையிலும் இலவசமாகக் கல்வி பயில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் பிரகாரம் இம்மாவட்டத்தில், கீழ்க்கண்டவாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பயன் அடைந்துள்ளனர்.

இதேபோன்று தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானத்தை ரூ. 12,000-த்திலிருந்து ரூ. 24,000 ஆக உயர்த்தி அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த 10,600 மாணவ, மாணவியர் இம்மாவட்டத்தில் பயன் அடைகிறார்கள். இதற்காகும் செலவுத் தொகை ரூ. 15,35,000 ஆகும்.

ஏழை எளிய மக்களும் பண்டிகை நாட்களைக் குறிப்பாகக் கொண்டாடும் வகையில் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்து, அதனைச் செயல்படுத்தி வருகிறது. தீபாவளித் திருநாளை முன்னிட்டும், பொங்கல் பண்டிகையை முன்னிட்டும் இலவச வேட்டி, சேலைகள் மொத்தம் 5,28,752 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர் உதவித்தொகை:

உயர்நிலைப்பள்ளி வரை பயன் அடைந்த மாணவ மாணவியர்	...	7080
வழங்கப்பட்ட தொகை	...	ரூ. 1,55,971
மேல்நிலை மற்றும் பட்டப்படிப்பு வரை பயனடைந்த மாணவ மாணவிகள்	...	10,522
வழங்கப்பட்ட தொகை	...	ரூ. 21,57,146

மிகப் பிற்படுத்தப்பட்டோர் உதவித்தொகை

உயர்நிலைப்பள்ளி வரை பயனடைந்த மாணவ, மாணவியர்	...	788
வழங்கப்பட்ட தொகை	...	ரூ. 15,877
மேல்நிலை மற்றும் பட்டப்படிப்பு வரை பயனடைந்த மாணவ மாணவியர்கள்	...	1,001
வழங்கப்பட்ட தொகை	...	ரூ. 2,10,815

இலவசக்கல்வி:

மேல்நிலைப்பள்ளிப் படிப்பில் பயனடைந்த மாணவ, மாணவியர்	...	205
வழங்கப்பட்ட தொகை	...	ரூ. 34,014

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நமது அரசின் ஊரக வளர்ச்சிப் பணிகளை முறையாகச் செயல்படுத்தியதால் கடந்த ஓராண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்த 9,824 குடும்பங்கள், அரசின் கடன் மற்றும் மானியமாக ரூ. 461.72 இலட்சம் நிதியுதவி பெற்றுப் பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளன. ஊர்ப்புற இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 315 ஆண், பெண் இருபால் இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்றுப் பயன் பெற்றுள்ளனர்.

மேலும், மாபெரும் விவசாய உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ், கடந்த ஓராண்டில் ரூ. 49.23 இலட்சம் அரசு மானியமாகவும், கடனாகவும் பெற்று, 125 ஊர்ப்புற வேளாண் பெருமக்கள் பயனடைந்துள்ளனர்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஊர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அந்தந்த ஊராட்சிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, நிலையான சொத்துக்களை ஏற்படுத்தி, இவ்வாண்டு ரூ. 349.035 இலட்சம் செலவிடப்படுகிறது. 11,30,000 மனித உழைப்பு நாட்கள் ஏற்படுத்த அரசு இலக்கு நிர்ணயித்ததில் இம்மாவட்டம் 12,76,000 மனித உழைப்பு நாட்களை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1512 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1213 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 299 பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

ஒளிமயமான எதிர்காலத்தை, தொழில் வளத்தைக் காணும் பொற்காலத் தமிழகத்தை உருவாக்கிட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

-த. இளங்கோவன்,
செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

மீண்டும் வாரத்திற்கு 5 நாள் அலுவல்

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞர் அவர்களை ஜேக்டீ-அரசு ஊழியர் இயக்கங்களின் பேரமைப்பின் சார்பில் ஆட்சிக் குழு அமைப்பாளர் திரு. அ. மயில்சாமி, மற்றும் உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சி-சுந்தரம், திரு. எம்.ஆர். அப்பன், திரு. ச. அப்துல் மஜீத் மற்றும் பலரும் 7-2-90 அன்று சந்தித்துப் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவாதித்தனர்.

தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் திரு. நமசிவாயம் தலைமையில் அதனுடைய நிர்வாகிகளும் முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்தனர்.

இதற்கு முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. சிவ. இளங்கோ அவர்களும், தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி அண்டு டி) பிரிவின் சார்பில் திரு. கே.கே. மோகன் அவர்களும், தமிழ்நாடு அரசு அலுவலர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. தேவநாதன் அவர்களும் சந்தித்துக் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருப்பதாவது:

(1) தேர்வு நிலை/சிறப்பு நிலை ஊதிய விகிதங்கள் அடுத்த உயர் பதவிக்குரிய ஊதிய விகிதங்களாக அமைக்க வேண்டும், தேர்வு நிலை/சிறப்பு நிலைச் சலுகைகள் முன்போல் தொடர வேண்டும், என்ற கோரிக்கை கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், அதனுடைய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வரவு செலவுத் திட்டத்தின்போது அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

(2) குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது (1988) நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டக் காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட 16 முதல் 31 நாட்கள் வரை ஈட்டிய விடுப்பு ஆசிரியர், அரசு ஊழியர் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், அதேபோல 1983-இல் நடந்த ஆசிரியர் மன்றப் பேராட்டத்தையொட்டிய இதேவிதக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

(3) வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு- இப்போது காலை 10-00 மணி முதல் 5-30 மணி வரை என்றிருக்கும் வேலை நேரம் காலை 9-45 மணி முதல் மாலை 5-45 மணி வரை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணி நேரம் 11-2-90 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது

மற்ற கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டு உள்ளது.

(தமிழக அரசு, செய்தி வெளியீடு)

THE HOSUR SEED CENTRE

18 RAMAR KOIL STREET, HOSUR 635 109.

Marketing for West Coast Rasayan

International Pvt. Ltd. Bombay.

Use

Phytolacin 84	on Grapes and Potato
Bactrosan	Bactricide
Neemant	Anti feedent and Anti Repellant
Neemank 15 G	Nematicide
Photozyme	A cytokinim Farmulation Growth Promotion

to get Bumper yields on your valuable crops.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ...

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:

100 ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி

கோவை மாவட்டத்தில், கடந்த நவம்பர் மாதம் பண்டித நேரு பிறந்த நாளில், தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், 100 ஏழை மணமக்களுக்குத் தலா ரூ.5,000 நிதி வழங்கப்பட்டதுடன், இலவசமாகத் திருமணமும் செய்து வைக்கப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இதற்கான விழா கோவை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. 100 மணப்பெண்களுக்கு மாக ஒரே நாளில் ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் மூன்று பெண்கள் விதவைகள் ஆவார்கள். பல்வேறு சமூக நல சங்கங்கள் சார்பில் மணமக்களுக்கு இலவசமாக வேட்டி சேலைகளும் இனிப்பும் வழங்கப் பட்டன.

திருமணம் செய்து கொண்ட ஒரு சிலரைப் பேட்டி கண்டதில், இது "ஏழையரை வாழ வைக்கும் ஏற்றமிகு திட்டம்" என்று கருத்து தெரிவித் தார்கள்.

தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய வேண்டும்.

மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல்பகைகள்.

— தந்தை பெரியார்

கோவை மாவட்டம் பல்லடத்தில் இலவச சட்ட உதவி முகாம்

பல்லடம் சட்ட உதவி ஆலோசனை மையத்தினர் பல்லடம் ஒன்றியத்தைச் சேர்ந்த செம்மிபாளையம் கிராமத்தில் இலவச சட்ட உதவி முகாமை நடத்தினர். மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி என். நடேசன் தலைமை ஏற்று முகாமைத் துவக்கி வைத்துப் பேசினார். பொது மக்களால் கொடுக்கப்பட்ட மனுக்களை இவர் பெற்றுக் கொண்டார். மொத்தம் 155 மனுக்கள் வந்தன. அவைகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பெருமாநல்லூர் பழனிச்சாமிக்கும் குப்பிச்சி பாளையம் பாக்கிய லட்சுமிக்கும் பெரியோர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. பாக்கிய லட்சுமியின் 3 பவுன் தங்க நகையும், ரொக்கம் 2,000 ரூபாயும் கணவன் பழனிச்சாமியால் அபகரிக்கப்பட்டது. பின்னர் 5 மாதம் கழித்து பாக்கியலட்சுமியை அவரது கணவன் பழனிச்சாமி விரட்டி விட்டார். "மீண்டும் கணவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்றால் ரொக்கமாக 15,000 ரூபாய் கொண்டு வர வேண்டும்" என்று மாமனார், மாமியார், கணவர் ஆகிய மூவரும் பாக்கியலட்சுமியிடம் சொல்லி விட்டார்கள்.

தாய் வீட்டுக்குச் சென்ற பாக்கிய லட்சுமி, நடந்த விவரங்களைப் பெற்றோர்களிடம் சொல்லி அழுதார். எளிய வாழ்க்கை வாழ்ந்து வரும் பெற்றோர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு நீதி கிடைக்கும் பொருட்டு மனுக்கள் கோரப்படுகின்றன என்கிற தகவல் தெரிந்ததும் பாக்கியலட்சுமி மேற்கண்ட விவரங்களோடு சென்று முகாமில் மனுவைக் கொடுத்து, "நான் என் கணவரோடு சேர்ந்து வாழ வழி வகையைச் செய்து கொடுத்து, என்னை வாழ வையுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களில் இதுவும் ஒன்று.

கமலா-திருமணமாகாத இளம் பெண். கை, கால்கள் வாத நோயால் பாதிக்கப்பட்டதால் வேலை செய்து பிழைக்க முடியாத நிலை; அதனால் "மாதாமாதம் எனக்கு உதவித்தொகை கிடைக்கச் செய்யுங்கள்" என்கிற மனுவைக் கொடுத்தார். தக்க ஏற்பாட்டை உடனே செய்வதாக நீதிபதி உறுதி கூறினார். இந்த முகாமில் பல்வேறு மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தீ விபத்தில் பாதிக்கப்பட்டோர், மோட்டார் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டோர் நிதி உதவி கேட்டிருந்தனர். சிலர் குடிதண்ணீர் வசதி கோரியும், சிலர் மின்சார வசதி கோரியும், சிலர் வீடு, நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை குறித்தும் மனுக் கொடுத்திருந்தனர். வீடு கட்டக் கடன்கோரியும், வேலைவாய்ப்புக் கோரியும், தொழில் செய்ய வங்கிமூலம் கடன் பணம் கிடைக்க வழி செய்யக் கோரியும் - முதியோர், விதவை, ஊனமுற்றோர் - உதவித்தொகை கிடைக்கக் கோரியும் மற்றும் கணவனை விட்டுப் பிரிந்த மனைவி கணவனிடம் ஜீவனாம்சம் பெற்றுத் தருமாறு கோரியும் மனுச் செய்திருந்தனர்.

கோவை தலைமைக் குற்றவியல் நீதிபதி திரு. ஆர். சிங்காரவேலு, செம்மிபாளையம் டாக்டர் ரவிச்சந்திரன், அரசு வழக்கறிஞர் திரு. வேலுசாமி, வழக்கறிஞர்கள் திரு. சிவசுப்பிரமணியம், திரு. ஈஸ்வரன், பல்லடம் காவல்துறைத் துணை ஆய்வாளர் திரு. காமராஜ், பல்லடம் தாசில்தார் திரு. சையத் அபுபக்கர் ஆகியோரும் இந்த முகாமில் பேசினார்கள்.

பெரிய அளவில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

கோவை மாவட்டத்தில் 60,000 ஏக்கர் நிலங்களில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை வேளாண்மைத் துறை தொடங்கியுள்ளது.

"இத்திட்டத்தின் கீழ் ரூ. 6.81 இலட்சம் மதிப்புள்ள பூச்சிகொல்லி மருந்துகள் வழங்கப்படவுள்ளன. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இவை, வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 வேளாண்மைக் கோட்டங்களுக்கென இது தொடர்பாக தனித் தனி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீவிர பருத்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பருத்தி விவசாயிகளுக்கு 25 சதவிகித விலைச் சலுகையில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன. மருந்து தெளிப்பான்கள், கைத்தெளிப்பான்கள் போன்றவைகளும் மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இதற்கெனக் கோவை மாவட்டத்துக்கு ரூ. 1,05,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 960 எக்டேரில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்திற்கென விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்க ரூ. 96,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ் 3,000 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

பூச்சி நிர்வாகப் பணியில் வேளாண் அபிவிருத்தி அதிகாரிகள், துணை வேளாண் அலுவலர்கள் ஆகியோருக்கு இம்மாவட்டத்தில் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பூச்சிகளையும், உதவி செய்யும் பூச்சிகளையும் இனம் கண்டறியவும் சரியான விகிதத்தில், மருந்துகளைத் தெளிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்."

வேளாண்துறை இணை இயக்குநர் திரு. கே. முருகையன் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை: புதிய சிறப்பு அறுவை மருத்துவப் பிரிவு

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இரைப்பை, குடல், மலக்குடல் புதிய சிறப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவினை, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் பேராசிரியர் எம். சுசீலாராஜ் அவர்கள் புத்தாண்டு நாளன்று காலை தொடங்கி வைத்தார். நவீன இம் மருத்துவப் பிரிவில் இரைப்பை, குடல், மலக்குடல் பகுதியில் உண்டாகும் புற்றுநோய், இரத்த வாந்திபேதி, குடற்புண், மஞ்சள் காமாலை முதலான நோய்களைக் குணப்படுத்த முடியும். இந்தப் பகுதியில் இதுவே முதல் சிறப்புப் பிரிவானதால் இது ஒரு தனி நிறுவனமாக மேம்படுத்தப்படும் வாய்ப்பும் உள்ளது.

1-1-90 அன்று துவங்கப்பட்ட இச்சிறப்புச் சிகிச்சைப் பிரிவு, புதன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை நேரத்தில் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்

பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதியில் நிலத்தடி நீரைக் கூட்டாகப் பகிர்ந்து கொள்வதற்கு, நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் டிசம்பர் (1989) மாதம் முடிவடைந்த நீர் ஆதார நிர்வாகம் பற்றிய அனைத்து நாட்டுப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இந்தக் கருத்துரையைத் தெரிவித்தனர்.

தொழில் வளர்ச்சி முகமையின் நிதி உதவியுடன், சுவீடனின் ராயல் தொழில் நுட்ப நிலையம், தண்ணீர் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (கோவை) ஆகியவை இணைந்து இந்த 5 நாள் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுவீடனைச் சேர்ந்த 18 பேர்களும், இந்தியாவைச் சேர்ந்த 3 பேர்களும் இதில் கலந்து கொண்டனர். இதன் நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். ஜயராஜ் உரையாற்றினார்.

தமிழ்நாடு விவசாய முறையைப் பற்றி அறிய வட மாநில விவசாயிகள் குழு கோவை வருகை

"இப்சோ" உர நிறுவன சார்பில், ஒருமைப்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் வட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளைத் தமிழ் நாட்டிற்கும், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளை வட மாநிலங்களுக்கும் அனுப்பி, அங்குள்ள விவசாய முறைகளை அறியச் செய்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், குஜராத், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் இருந்து 40 விவசாயிகள் தமிழகத்திற்கு வந்தார்கள். இந்த விவசாயிகள் கோவைக்கு வந்தார்கள். கோவையை அடுத்த தடாகத்திலுள்ள நஞ்சுண்டாபுரத்தில் நடைபெறும் விவசாய முறை பற்றி இவர்களுக்குக் கூறப்பட்டது.

தகவல்:
அ. சந்திரசேகரன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்

தமிழக அரசு
நிறைவேற்றிவரும்
சமூக நலத்திட்டங்களுக்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்!

தொலைபேசி: 78

வெண்ணந்தூர் கொல்லு மற்றும் தச்சுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்,
வெண்ணந்தூர் 637 505.
சேலம் மாவட்டம்.

(கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆளுகைக்குட்பட்டது).

பயன் அடைந்தோர் பகர்வன

டாக்டர் தருமாம்பாள் நினைவு

விதவை மறுமண

உதவித் திட்டம்:

திருமதி ஜோஸ்மின் தன் கணவர் அகஸ்டினுடன்

தாய்-தந்தைக்கு ஒரே பெண் ஜோஸ்மின் (வயது-26) பள்ளியிறுதி வகுப்புத் தேறியவர். மானாமதி கண்டிகைக் கிராமத்தில் பவுல்ராஜை மணம் செய்து கொண்டு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தை களைப் பெற்று வாழ்ந்து வந்தவர். இடையில் கணவன் காலமாகிவிடவே இரண்டு குழந்தைகளைக் காப்பாற்ற விவசாயக் கூலி செய்து வந்தார். இப் போது, களியாம்பூண்டியில் கிராமப் பால்வாடியில் வேலை பார்த்து வரு கிறார்.

''எப்படித் துணிந்து மறுமணம் செய்து கொண்டீர்கள்'' என்று திருமதி ஜோஸ்மின்னிடம் கேட்ட போது, ''மறுபடியும் கல்யாணம் செய்து கொள்வதா? என்ற குழப்ப மான சூழ்நிலையில், எனக்குப் பழக்க மான உத்திரமேரூர் யூனியன் விரி வாக்க அலுவலர் அவர்களிடம் ஆலோ சனை கேட்டேன். உடனே அவங்க, 'மறுமணம் செய்துக்க அரசாங்கம் ஆதரவு தருது. டாக்டர் தருமாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ் ரூபாய் ஐயாயிரம் தராங்க.' என்று தைரியம் சொன்னாங்க. பிறகு நானும் அவரும் (அகஸ்டின்) 27.3.89-இல் பதிவு அலுவலகத்தில் திருமணம் செய்து கொண்டோம்.'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

இதேபோல 23.3.89 அன்று, திருவொற்றியூர் சி.எஸ்.எஸ்.ஆர். நகரில் வசிக்கும் திருமதி குமாரி திரு. முனுசாமி என்பவரை மணந்து கொண்டார்.

அம்பத்தூர் ஆசிரியர் காலனி, திரு.வி.க. வீதியில் வசிக்கும் திருமதி கன்னியம்மாள்- திரு.உமாபதி என்பவரை மறுமணம் செய்து கொண்டார்.

டாக்டர் தருமாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ், பதிவுத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதி களுக்கு தமிழ்நாடு அரசு ரூ.5,000க் கான சேமிப்புப் பத்திரத்தினை வழங்கு கிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு தம்பதிகள் இரட்டிப்புத் தொகையாக இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

பா. நாராயணமூர்த்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
செங்கை-அண்ணா மாவட்டம்

மூடப்பழக்க வழக்கத்தை முறியடிக்க வேண்டும் இளைஞர்கள்!

தமிழ்ச் சமுதாயத்திலே பகுத்தறிவு ஒளி பரவ வேண்டும் எனபதற்காக, பகுத்தறிவுப் பகலவனாக பெரியார் தோன்றினார். அந்தப் பகலவனின் ஒளிக்கற்றையாகப் பேரறிஞர் அண்ணா பணியாற்றினார். இன்றைக்கு அவர்கள் தந்த இந்த ஒளிமயமான தமிழகத்தில் - அந்த ஒளி மங்கி விடாமல் காப்பாற்ற நாம் தொடர் பணி ஆற்றி வருகின்றோம்.

ஆனால் இன்னமும் சமுதாயத்தைப் பிடித்திருக்கின்ற சில குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள், அறவே நீங்கியபாடில்லை. அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் இளைய தலைமுறை ஈடுபட்டாக வேண்டும். பழைய வழக்கங்கள் அறவே அற்றுப் போய் விடவேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். நான் சில இடங்களிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, பழையன முற்றும் கழிந்துவிட வேண்டும் என்று கருதுகின்றவன் அல்ல நான். அப்படிச் சொன்னால் சங்க இலக்கியங்களுக்கே வேலையில்லை என்று சொன்னதாக ஆகிவிடும். பழைய கருத்துக்கள், பழைய எண்ணங்கள், பழைய பண்பாடுகள், கலாச்சாரங்கள், மரபுகள் இவைகளை எல்லாம் அடிப்படையாக வைத்து அடித்தளமாக வைத்து. உரமாக வைத்து உரமாக ஏற்றுக்கொண்டு, புதியவைகள் பூத்துக் குலுங்க வேண்டும் —முதல்வர் கலைஞர்

பார்வையற்ற பெண்ணுக்கு, பதினைந்தே நாட்களில் வேலை!

கண் பார்வையுடன் பிறந்து வளர்ந்து வந்த செல்வி கே. ரமீலா, தனது 7-வது வயதில் போலியோ நோய் மற்றும் கடுமையான தலை வலி காரணமாக கண்கள் இரண்டும் பார்வையிழந்து, பின்னர் மதுரை கண் மருத்துவர் ஒருவர் வாயிலாக திருப்பத்தூர் ஸ்வீடிஷ் மிஷனைச் சேர்ந்த டி.இ.எல்.சி. பார்வையற் றோர் பள்ளியில் சேர்ந்து ஆரம்பக் கல்வி பயின்றார்.

சென்னை பூந்தமல்லிப் பள்ளி யில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி யினைப் பயின்றிருக்கிறார். பின்னர் மற்ற மாணவ நண்பர்களின் உதவி யுடனும், ஒலிப்பதிவுக் கருவியின் வாயிலாகவும் பாடங்களைப் படித்த தன் மூலம் இளங்கலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்வி ஆகிய கல்வியினை 1983-ஆம் ஆண்டு முடித்துள்ளார். பின்னர் முதுகலை (வரலாறு) கல்வியினையும் முடித் துள்ளார்.

1983-ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்த அவருக்கு, அண்மையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் படி, வேலை கிடைத்தது.

''1983-ஆம் ஆண்டு முதல் நான் வேலைக்காக எனது வாழ்க்கை யில் பட்ட துன்பங்களை, திருப்பத் தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பி னர் திருவாளர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களிடம் தெரிவித்தேன். அவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் எனது நிலையை எடுத்துக் கூறினார்

''நான் முறையிட்ட பதினைந்தே நாட்களில் எனக்கு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை வேலைக்கான உத்தரவு வந்தது. மேலும் நான் படித்து வளர்ந்த இதே திருப்பத் தூரிலுள்ள அரசினர் ஆறுமுகம் பிள்ளை மேல்நிலைப்பள்ளியிலேயே ஆசிரியையாகப் பணியாற்றுமாறு உத்தரவு கிடைத்தது''என்று நன்றிப் பெருக்குடன் கூறுகிறார் செல்வி ரமீலா.

திருப்பத்தூர் டி.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளி வைர விழாவில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கலந்து கொண்டார். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன் இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு, நாடாளுமன்ற மாநிலங் களவை உறுப்பினர் திரு. பசும் பொன் தா. கிருட்டினன், மானா மதுரை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பெ. துரைப் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

— செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

எவ்வளவுதான் திறமைசாலி என்றாலும், தீமையான மனிதனைப் புத்திசாலி என்று சொல்வது சரியல்ல.
-பெஞ்சமின் பிராங்க்ளின்

இயற்கையின் உண்மைகளை, பகுத்தறிவுக் கண்கொண்டு ஆராய்வதால் ஏற்படுவதுதான் உண்மையான அறிவு.
—புருனோ

TELEGRAM:"DHARCOSPIN"
(UTHANGARAI)

TELEPHONE: S.O. (PER): 27 UTHANGARAI
Office : 61 "
S.O (RES) : 16 TIRUPATTUR N.A. DISTRICT

THE DHARMAPURI DISTRICT
CO-OPERATIVE SPINNING MILLS LIMITED,
NO. S.A. 108, POST BAG NO.2, UTHANGARAI - 635 207
DHARMAPURI DISTRICT, TAMIL NADU

MANUFACTURERS OF BEST QUALITY YARN BY USING MODERN MACHINERIES.

HANK YARN : 26s, 40s, 60s, 80s, 2/30s & 2/80s

CONE YARN : 30s, 34s, 40s, 60s & 80s.

WE ARE SELLING OUR YARN TO THE WEAVERS CO-OPERATIVE SOCIETIES AND PRIVATE PARTIES.

WE ARE ALSO SELLING OUR YARN THROUGH
M/s. AMIT ENTERPRISE,
THE DEPOT AGENTS
AT BOMBAY & BHIWANDI
IN MAHARASTRA STATE.

PLEASE CONTACT US FOR YOUR REQUIREMENTS.

V. VISWANATHAN
SPECIAL OFFICER

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நடைபெறும் பல் வேறு வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்காகச் செய்தியாளர்கள் சுற்றுப்பயணம் செய்தனர். அவர்கள் அறிந்த விவரங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் பள்ளிப்பட்டி, இந்திராநகரில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 60 ஆயிரம் ரூபாய் செலவில் கழிவுநீர் வாய்க்கால், கோட்டைப்பட்டியில் 88 ஆயிரம் ரூபாய் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர், பாலம், எ.வெள்ளோடு கிராமத்தில் கசிவுநீர்க் குட்டை ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் சித்தையன்கோட்டையில் மூங்கில் கூடை செய்வதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பல குடும்பங்கள் பயன்பெறுகின்றன. சின்னாளபட்டியில் இத்திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 500 ரூபாய் 24 பேர்களுக்கு (பைல்) அரம் செய்வதற்குக் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 100க்கு மேற்பட்டவர்கள், தொழில் வாய்ப்புகள் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலேயே இங்கேதான் இவ்வகைக் கைத் தொழில் நடைபெறுகிறது. இதில் பெண்களும், ஆண்களும் இணைந்து செயல்படுகின்றனர். கைத்திறனாலேயே உருவாகும் இந்தத் தொழில் (அரம் தயாரிப்பது) வளர்வதற்கு அரம் உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஸ்டீல் ராடுகள், கண்ட்ரோல் விலையில் கிடைத்தால் நல்லது. இதனால் இத்தொழில் பார்க்கும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைப்பதோடு அதிக அளவு இலாபம் கிடைக்கும் எனக் கடனுதவி பெற்றவர்கள் தெரிவித்தனர்.

நடுப்பட்டி கிராமத்தில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்பட்டு உள்ளன. பாறைப்பட்டி கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலகக் கட்டடமும், மேலக்கோவில்பட்டியில் தொகுப்பு வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

திண்டுக்கல் கோட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 758 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டதில் 711 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். ஒவ்வொரு வீடும் 11 ஆயிரத்து 200 ரூபாய் மதிப்பிலும், ரோடு வசதி, சமூகக் கூடம் போன்றவற்றிற்கு, தலா 3 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டு, இவ்வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 15 இலட்சம் செலவில் 56 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. ரூ.8 இலட்சம் செலவில் 81 தடுப்பு அணைகளும் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 80 இலட்சம் செலவில் சாலை போடுதல், பாலம் கட்டுதல் போன்ற 232 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், இதுவரை 192 வேலைகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள வேலைகள் பிப்ரவரி திங்களுக்குள் முடிக்கப்படும். 11 இலட்சம் ரூபாய் செலவில் பஞ்சாயத்துக் கட்டடங்கள் கட்டுதல், டி.வி. செட் அமைக்கும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தலா 24 ஆயிரத்து 500 ரூபாய் செலவில், ஆதி-திராவிடர் காலனியில் 10 மீட்டர் ஆழம் வரை, 33 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டு வெள்ளத் தடுப்புச் சுவர், ஆழ் குழாய்க் கிணறுகள், மற்றும் பல்வேறு பணிகள் நடந்து வருவதாகத் திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அதிகாரி பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்கு 41 இலட்சத்து 25 ஆயிரம்

With
Best
Compliments
From

M. Thimmarayappa & Brothers

Dealers in : Hybrid Seeds Farmers & Pesticides

63 B Main Road, Hosur 835 109

Thirumala Agro Service

No.1. D.D.D.C. Building New Bus Stand

Hosur 635 109

தரமான விதை,

பூச்சி மருந்து

இரசாயன உரங்கள்

கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

1) அன்னை ஊழிய நிலையம், அரூர்.

2) அருணா விவசாய சேவா நிலையம், மொரப்பூர்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்

மகளிர் நலன்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்குத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 240 பெண்களுக்கு மொத்தம் ரூ.12 இலட்சம் நிதி, இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் கருவுற்ற 4 ஆயிரம் ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.200 வீதம் ரூ.8 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டத்தின் கீழ் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளின் வாயிலாக ஏழை-நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமான மகளிர் பயன்பெற்று வருகின்றனர்.

ஏழை எளியோர் நலன்

119 புதிய மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்‌ஷாக்கள், 15 ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென வழங்கப்பட்டுள்ள கடன் ரூ.11.13 இலட்சம்; இதில் அரசு மானியம் ரூ.1.51 இலட்சம் ஆகும்.

கடந்த 11.6.89 அன்று மானாமதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் இம்மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறத்தக்க வகையில் ரூ.663.71 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும் 1,21,785 பேர்கள் பயன்பெறும் வகையில் ரூ.380.58 இலட்சம் மதிப்பீட்டிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் (மொத்தம் ரூ.10.5 கோடி) இதே விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

விபத்தில் இறக்கும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரமும், குடும்பத் தலைவர்களை இழந்த ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.2 ஆயிரமும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவு சாப்பிடும் 1.74 இலட்சம் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கொருமுறை கோழி முட்டை வழங்கப்பட்டுள்ளது.

ரூ.35 ஆக வழங்கப்பட்டுவந்த முதியோர் உதவித் தொகை ரூ.50 ஆக உயர்த்தப்பட்டதுடன், தகுதியுடைய அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையும் வழங்கிட உத்திரவிட்டதால் கூடுதலாகப் பயன்பெறும் 700 முதியோர் உட்பட மொத்தம் 10,076 முதியோர் தற்போது பயன்பெற்று வருகின்றனர்.

ஆதி-திராவிடர் சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் விதை, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், வேளாண் கருவிகள் விநியோகம் செய்ய ரூ.5.34 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன்பெற்ற ஆதி-திராவிட விவசாயிகள் 16,510 பேர்களாகும்.

811 ஆதி - திராவிடர்களுக்கு 36.29 ஏக்கர் வீட்டு மனைப்பட்டா இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

ரூ.46,59,600 செலவில் 53,900 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்துறை வாயிலாக வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விளைச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3,77,855 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.67,08,534 நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள 112 கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.164.44 இலட்சம் குறுகிய காலக்கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடன்கள் மற்றும் வட்டி ரத்து செய்யப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணத்திட்டம் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டங்களின் கீழ் நடப்பு ஆண்டில் இதுவரை ரூ. 27.67 இலட்சம் செலவில் 462 பணிகள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., தெரிவித்தார்.

ரூ. 3,44,200 செலவில் 169 கிணறுகள் ஆழப்படுத்தும் பணி, ரூ. 4,15,800 செலவில் 93 உறைக் கிணறுகள் அமைக்கும் பணி, ரூ. 6,20,000 செலவில் 21 திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் பணி, ரூ. 48 ஆயிரம் செலவில் 41 கிணறுகள் தூர் எடுக்கும் பணி, ரூ. 4,55,000 செலவில் விசைப்பம்புகள் மேம்படுத்தும்பணி, ரூ. 3,60,000 செலவில் 30 குடிநீர்க்குழாய் விரிவாக்கப் பணி, ரூ. 3 இலட்சம் செலவில் 37 குடிநீர்த் திட்டங்கள் பழுது பார்க்கும் பணி ஆகியபணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. மேலும் ரூ. 2.14 இலட்சம் செலவில் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் 43 பணிகளும் இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன. 3109 அடி குழாய்க் கிணறுகளும் 406 விசைப்பம்புகளும் இம்மாவட்டத்தில் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

1989-90 ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சார்ந்த காலணி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்து ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த 35 நபர்களுக்குக் காலணிப் பணிக்கூடம் மற்றும் தையல் இயந்திரம் தலா ரூபாய் 9,000 வீதம் மொத்தம் ரூ. 3,15,000 மதிப்பில் இலவசமாக வழங்கப்பட உள்ளன

துரை. தாமரைச்செல்வம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

Best Compliments

தரமான விதைகள், உரம் மற்றும் பூச்சி மருந்துகள் சகாய விலையில் கிடைக்கும்.

B.S. RAJAGOPALAN
E I D Parry and Spic Dealer
64, Gandhi Street
Denkanikotta 635 107
Phone: 59

தர்மபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், பாலக்கோடு

நடப்பு 1989-90 நடவுப் பருவத்திற்குக் கீழ்க்கண்டவாறு மானியங்கள் வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1. முதல் நிலை நாற்றங்காலுக்கு விதைக்கரும்பும், லாரி வாடகையும் முழு மானியம்.
2. புதிய ரகங்களின் நாற்றங்கால் பதிவுக்குக் காலத்திற்கேற்ப ரூ.800/- வரை ஒரு ஏக்கருக்கு மானியம்.
3. புதிய ரகங்களின் அரைவைப் பதிவுக்குக் காலத்திற்கேற்ப ஒரு ஏக்கருக்கு நடவுக்கு ரூ.800/- வரையும், மறுதாம்புக்கு ரூ.350/- வரையும் மானியம்.
4. விதைக்கரனை நேர்த்திக்காக நடவின்போதே பூஞ்சான மருந்து முழு மானியம்
5. கரும்புப் பயிருக்கான இரசாயன மருந்துகளும், வைரஸ் மற்றும் ஒட்டுண்ணியும் பாதி விலையில் வழங்கப்படும்.
6. 40 கி.மீக்கு மேல் உள்ள கூடுதல் தூரத்துக்கான லாரி வாடகை முழுவதும் மானியம்.

எனவே; அதிக அளவில் கரும்பு பயிர் செய்து பயனடைய விவசாயப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தேவையான விவரங்களைத் தலைமை அலுவலகம் மற்றும் அந்தந்தப் பகுதி கரும்பு உதவியாளர்/கரும்பு அலுவலர்களை அணுகிப் பெறலாம்.

தனி அலுவலர்.

ரூபாய் செலவில் 218 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆத்தூர் யூனியனில் 40 இலட்சம் ரூபாய் செலவில் 296 வேலைகளும், வத்தலக்குண்டு யூனியனில் 34.3 இலட்சம் ரூபாய் செலவில் 215 வேலைகளும் செய்து முடிக்கப்பட்டு உள்ளன.

கொடைக்கானலிலுள்ள தற்போதைய மக்கள் தொகை 20 ஆயிரமாகும். இதுதவிர, சராசரி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். நகரின் குடிநீர்த் தேவைக்கு ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கத்தி லுள்ள குடிநீர் 2 மாத காலத்திற்கே போதுமானதாக உள்ளது. எனவே பாம்பாற்றின் குறுக்கே 10.6 எம்.சி. எப்.டி. கொள்ளளவு கொண்ட புதிய அணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. 2.15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இவ்வணையின் மூலம், சுமார் 25 ஆயிரம் மக்களுக்கு தினமும் 70 லிட்டர் குடிநீர் என்ற அளவில் 6 மாத காலத்திற்குத் தண்ணீர் விநியோகம் செய்ய முடியும். இவ்வணை பழைய நீர்த்தேக்கத்தைவிட மும்மடங்கு பெரியதாகும்.

இப்பகுதியில், மாலை நேரங்களில் வன விலங்குகள் நீர் பருக வரும் காட்சி சிறப்பாக உள்ளது. மேலும் இப்பகுதியில் ஒரு பூங்காவை அமைத்தால் கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகள், கொடைக்கானலில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வணைப் பகுதியைச் சுற்றிப் பார்க்க வருவர்.

அடர்ந்த காடுகள்

கொடைக்கானலில் உள்ள பழைய, புதிய அணைப் பகுதிகளில் அடர்ந்த காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.8.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 100 ஏக்கர் பரப்பளவில் மரக்கன்றுகள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எம். அண்ணாமலை
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்

திண்டுக்கல்லில் மதிப்பீட்டுக் குழு

சட்டமன்ற உறுப்பினர்கள் 16 பேர் கொண்ட மதிப்பீட்டுக் குழு பழனி, எருமநாயக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, செம்மடைப்பட்டி, சாணார்பட்டி, நத்தம் ஆகிய பகுதிகளுக்கு 5-2-90 அன்று சென்று, பொதுப் பணித் துறைக் கட்டடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டது.

மதிப்பீட்டுக் குழு, கூட்டுறவு வங்கி, கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப் பெறும் கடைகள், ஆதிதிராவிடர் குடியிருப்புகள், கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், கூடை முடையும் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டது.

திண்டுக்கல்லில் மதிப்பீட்டுக் குழுவினர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு சண்முகம் (ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் கூறும்பொழுது:

"நாங்கள் 10 மாதங்களாகப் பல மாவட்டங்களுக்குச் சென்று வந்திருக்கின்றோம். குறிப்பாக ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஒழுங்கான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்று பார்த்தோம். மற்ற மாவட்டங்களைவிட இந்த மாவட்டத்தில் ஒழுங்கான முறையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் ஒழுங்காக, நல்லமுறையில் கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்தைச் சுற்றி வெளிப்புறச் சுவர் கட்டப்பட வேண்டும் என அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றோம். இதனால் ஆக்கரமிப்புகள் குறையும்." இங்குள்ள கூட்டுறவுச் சங்கம் மூலம் கடைகள் நல்ல லாபத்தோடு நடைபெற்று வருகின்றன. மற்ற இடங்களில் 70 விழுக்காடு நட்டத்தில் நடக்கின்ற நிலையில் இங்கு இலாபத்தில் நடப்பது பாராட்டுதற்குரியது. அரசுத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

இம்மாவட்டத்தில் கரும்பு, பருத்தி அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே இங்கு கூட்டுறவு நூற்பாலை, சர்க்கரை ஆலை ஆகியவை அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் எங்கெல்லாம் தோல் பதனிடும் தொழிற்சாலை உள்ளதோ அங்கெல்லாம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதற்காக இம்மாவட்டத்திற்கு ரூ. 270 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய, மாநில அரசுகள் 50 சதவீதமும், தோல் தொழிற்சாலை வைத்திருப்போர் 15 சதவீதமும், மீதித் தொகையை நிதி நிறுவனமும் கொடுக்கும். ஏற்கெனவே மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 30 இலட்சம், தோல் தொழிற்சாலை அதிபர்கள் கொடுத்துள்ளனர்" என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த மதிப்பீட்டுக் குழுவில் ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சண்முகம், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. பிச்சாண்டி, வலங்கைமான் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா, திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஏ. தங்கராஜ், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. தீட்சிதர், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன், நத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சுத்தம் செய்யப்பட்ட நீரானாலும் காய்ச்சிப் பருகுவது நல்லது





சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

டி.ஐ.பி.ஆர்/2818/எம்எஸ்/89

தலைநகரின் தாகந்தீர்க்கும் சென்னைக் குடிநீர் வாரியம்

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகர மக்களுக்குப் புழலேரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் நூறாண்டுகளுக்கு முன்பே செயல்பெறத் தொடங்கி விட்டது. 1872-ஆம் ஆண்டு முதல் அமுத சுரபியாக விளங்கிய புழலேரி, கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னால் முற்றிலும் வற்றி விட்டது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றி வரும் சென்னை குடிநீர் வாரியம், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து, அதை முழுவதும் பயன்படுத்தி நகரின் மூலை முடுக்கெங்கும் விநியோகிக்க மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் புரிந்து [illegible] வதற்குச் சில அடிப்படைப் புள்ளி விவரங்களைத் தெரிந்து [illegible] இன்றியமையாததாகும்.

சென்னை நகரின் மக்கட்தொகைப் பெருக்கம்

1872 ஆம் ஆண்டு [illegible] முறையாக மக்கட் தொகைக் [illegible] கெடுப்பு நிகழ்ந்தது. அப்போது சென்னை நகரில் நான்கு இலட்சம் பேர் மட்டுமே வசித்து வந்தனர். இத் தொகை இருமடங்காவதற்கு 65 ஆண்டுகள் பிடித்தன. அது மேலும் இருமடங்காவதற்கு 25 ஆண்டுகள் உருண்டோடின. அதிலிருந்து பின்னும் இருமடங்காவதற்கு 20 ஆண்டுகள் சென்றன. 1981 ஆம் ஆண்டில் 32 இலட்சம் என்ற எண்ணிக்கையை எட்டியது. இப்போதைய சென்னை மாநகரின் மக்கள் தொகை, சற்றொப்ப 41 இலட்சமாக இருக்கலாம் என்று கணக்கிடப் படுகிறது.

இறப்பு வீதக் குறைவு, அதற்கு ஈடாகப் பிறப்பு வீதம் குறைவுபடாமை, மற்றும் நகருக்குக் குடிபெயர்ந்து வரும் மக்கட் பெருக்கம் ஆகிய மூன்றும் இந்த மக்கட்தொகை வளர்ச்சிக்குக் காரணங்களாகும். சென்னை நகர எல்லைகள் 1946 ஆம் ஆண்டிலும், மீண்டும் 1978ஆம் ஆண்டிலும் விரிவு படுத்தப்பட்டதும் ஒரு காரணமாகலாம். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சிகள் மேலும் பரந்துபட்டவை என்றாலும், சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது சென்னை மாநகராட்சியின் 150 கோட்டங்களின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் தேவைகளை மட்டுமே தீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

குடிநீர்த் தேவை:

இந்தியாவிலுள்ள பல்வேறு நகரங்களின் குடிநீர்த் தேவையையும், அது கிடைக்கும் அளவையும் ஒட்டு மொத்தமாகக் கருத்திற்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சென்னை நகர மக்களுக்கு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் 70 லிட்டர் குடிநீர் அளவு மிகக் குறைந்ததுதான். இந்தியத் தர நிர்ணய அடிப்படையில், நகர் வாழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் 130 லிட்டர்

ஏ.பி. முத்துசாமி,
இ.ஆ.ப.
தலைவர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

சென்னை 147-வது வட்டம் பள்ளிப்பட்டு பகுதிக்குக் குடிநீர் வழங்கலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் 24.1.90 அன்று துவக்கி வைத்தார். மாநிலங்களவை உறுப்பினர் திரு டி.ஆர். பாலு, சைதை சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.எஸ். ஸ்ரீதர், வாரியத் தலைவர் திரு ஏ.பி. முத்துசாமி. இ.ஆ.ப., வாரிய நிர்வாக இயக்குநர் திரு எஸ்.பி. இளங்கோவன். இ.ஆ.ப., வாரியப் பொறியியல் இயக்குநர் திரு எ. வேதகிரி ஆகியோர் உடன் உள்ளனர்.

தண்ணீர் அன்றாடம் வழங்கப்படல் வேண்டும். சென்னை நகரில் பெரும்பாலான வீடுகளில் கிணறுகள் அமைந்துள்ளன. இவற்றில் குறைந்த அளவிலேயே தண்ணீரும் கிடைக்கிறது. எனவே, மக்களின் குடிநீர் மற்றும் சமையல் முதலிய இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டும், குறைந்தது 100 லிட்டர் நீராவது ஒவ்வொருவருக்கும், நாள்தோறும் வழங்குவது விரும்பத்தக்கது. சென்னை நகரில் வசதி படைத்தவர்கள், வசதிக் குறைவானவர்கள் என இரண்டு வகையாகவும் கலந்து வாழ்வோர், வாணிபப் பகுதியினர், தொழிற்சாலைகள் என்று பல திறப்பட்ட மக்களின் தேவைகளின் சராசரிக் கணக்கின்படி, சென்னை நகர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவது அவசியமாகிறது.

நடைமுறையிலுள்ள குடிநீர் வழங்குமுறை

முன்னரே குறிப்பிட்டதைப் போல, ஏரிகளிலிருந்து சென்னைக்குக் குடிநீரைக் கொண்டு வந்து வழங்கும் திட்டம், 1872 ஆம் ஆண்டுமுதல் பழக்கத்தில் உள்ளது. தண்ணீரை வடிகட்டித் தூய்மையாக்கி, நகரின் பல பாகங்களுக்கும் விசைக்குழாய்கள் வாயிலாகப் பகிர்ந்தளிக்கும் முறை 1914 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறது.

கொடுந்தலை ஆற்றின் உபரி நீரை ஆதாரமாகக் கொண்ட பூண்டி, சோழவரம், புழலேரி நீர்த்தேக்கங்கள் மூன்றும் சேர்ந்து 1830 இலட்சம் கனமீட்டர் கொள்ளளவுடையனவாகும். இதுவே இன்றும் நடைமுறையிலுள்ள சென்னை மாநகரின் குடிநீர் வழங்கு முறைக்கு நிலைக்களனாகும். இந்த மூன்று நீர்த்தேக்கங்களும் நிரம்புவதற்கு, ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் டிசம்பர் திங்கள் வரை பெய்யும் வடகிழக்குப் பருவமழையையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஒழுங்காக மழை பெய்யும் ஆண்டுகளில், அந்த நீர்த்தேக்கங்களிலிருந்து அன்றாடம் 20 கோடி லிட்டர் நீரைச் சென்னை நகர மக்களின் தேவைகளுக்காகப் பெறுவது சாத்தியமாகும். ஆனால், இந்த ஏரிகள் போதிய ஆழமின்மையால், இவற்றிலுள்ள நீரின் மொத்தக் கொள்ளளவில் 43 விழுக்காடு ஆவியாகி, வீணாகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு திட்டம் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பூண்டி, சோழவரம், புழலேரி ஆகிய மூன்று நீர்த்தேக்கங்களும் மேல் வழங்கு கால்வாய், கீழ் வழங்கு கால்வாய் என்னும் திறந்த கால்வாய்களால் இணைக்கப்பட்டுள்ளன. புழலேரியிலிருந்து நீர், மூன்று மூடு கால்வாய்கள் வழியே கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கே தூய்மையாக்கப்படும் நீர், பின்னர் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

நிலத்தடி நீர் வழங்கு முறை

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன், சென்னை நகரின் வடகிழக்குப் பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இதறின் விளைவாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் பாலாறு பாய்ந்த நீர்ப்படுகை புதையுண்டு கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. 50 கிலோமீட்டர் நீளமும், 5 கிலோ மீட்டர் அகலமும் கொண்ட இந்த நீர்ப்படுகையிலிருந்து கிணற்றுப் புலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1965 முதல் 1987 வரை, மீஞ்சூர், பஞ்செட்டி, தாமரைப்பாக்கம், கன்னிகைப்பேர், பூண்டி, மற்றும் கொடுதலையாறு, வெள்ளக்கரம்பு ஆகிய பகுதிகளில், நிலத்தடி நீர்ப் புலங்கள் நிறுவப்பெற்றன. 76 ஆழ் கிணறுகளிலிருந்து நாள்தோறும் சுரக்கும் 1480 இலட்சம் லிட்டர் நீர் இறைக்கப்பட்டு, சென்னைக் குடிநீர்த் தேவைகளுக்கும் மணலியிலுள்ள பெரிய தொழிற்சாலைகளுக்கும் விசைக்குழாய் வாயிலாகச் சென்னை மாநகருக்குக் கொண்டுவரப்படுகிறது.

மற்றுமுள்ள நீர் நிலையங்கள்

வழக்கமாக மழை பொழியும் ஆண்டுகளில், நீர்த்தேக்கங்களில் 2000 இலட்சம் லிட்டர் மற்றும் நிலத்தடி நீர் 1480 இலட்சம் லிட்டர் ஆகமொத்தம் 3480 இலட்சம் லிட்டர் அல்லது 348 மில்லியன் லிட்டர் என்ற அளவில் அன்றாடம் குடி நீர் பெறப்பட்டு, சென்னைக் குடிநீர் வாரியத்தால் சென்னை நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இவையன்றியும், ஊரூர், திருவான்மியூர், போரூர், காட்டுப்பாக்கம் ஆகிய ஊர்களிலுள்ள பெரிய கிணறுகளிலிருந்து கிடைக்கும் ஓரளவு நீரும் சென்னை நகரின் பகுதிகளுக்கு வழங்கப் பயன்படுத்தப்படுகிறது. மாமல்லபுரம் கடற்கரைச் சாலையிலுள்ள சில கிணறுகளும், சென்னை நகர மக்களின் தாகந்தீர்க்கப் பயன்படுகின்றன. இவற்றிலிருந்து, நாள்தோறும் 200 இலட்சம் லிட்டர் நீர் கிடைக்கிறது.

சென்னை நகர மக்களின் நீர்த் தேவையை நிறைவு செய்ய, சென்னை நகரில் மேலும் கிடைக்கக்கூடிய 20 கிணறுகளின் தண்ணீரைக் குடிநீர் முதன்மைக் குழாய்களில் நேரடியாக இறைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் 35 நகராட்சிக் கிணறுகள், ஆங்காங்குள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்குத் தண்ணீரை இறைத்து அவற்றைச் சூழ்ந்துள்ள பகுதிகளுக்கு நாள்தோறும் 50 இலட்சம் லிட்டர் நீர் வழங்கப் பயன்படுத்தப்படுகின்றன.

திருவான்மியூரிலிருந்து முட்டுக்காடு வரை 18 கிலோ மீட்டர் நீளத்திற்குள்ள கடற்கரையில், 12 மீட்டர் ஆழத்தில் அதில் பாதியளவு நன்னீர்ச் சுரப்பு மிகுந்துள்ளது. இதனைத் தனியார் மிகுதியும் பயன்படுத்தி, லாரிகள் வாயிலாக எடுத்துச்சென்று சென்னை நகரில் மொத்தமாக விற்பனை செய்து வந்தனர். இதனை நிலத்தடி நீர்ச் சட்ட வாயிலாகத் தடைசெய்து, சென்னை குடிநீர் வாரியம் உரிமம் வழங்கிக் கட்டுப்படுத்தி வருகிறது. ஆழக்குறைவும், கடல் அருகில் இருப்பதால் உப்பு நீர் கலக்கும் அபாயமும், இக்கிணறுகளை மேலும் அதிகமாகப் பயன்படுத்த ஒட்டாமல், மட்டுப்படுத்துகின்றன.

பற்றாக்குறையைப் போக்கும் பணிகள்

குடிநீர்த் தேவைகள் தவிர்த்த எஞ்சிய பிற தேவைகளுக்கு, வீட்டுக் கிணறுகள், போதுமான மழை பொழியும் காலங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து அன்றாடம் 100 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவையன்றியும், சென்னை நகரில் 5700 சிறு விசைக் குழாய்களும், 5237 ஆழ்துளைக் கிணறுகளும் நிறுவப்பட்டுள்ளன. இதில் இந்த ஆண்டு மட்டும் 710 ஆழ்துளைக் கிணறுகள் (இந்தியா மார்க் II பம்புகள்) புதிதாக நிறுவப்பட்டுள்ளன. மேலும் நூறு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றிலிருந்து கிடைக்கும் 500 இலட்சம் லிட்டர் தண்ணீர், சென்னை நகர மக்களின் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுகிறது.

1987-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், நிலவிவரும் கடும் வறட்சி காரணமாய், சென்னை நகருக்குக் குழாய்களில் ஒருநாள் மாற்றி ஒருநாள் குடிநீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு குழாய்களின் வாயிலாகக் குடிநீர் கிடைக்கப் பெறாத மேட்டுப்பாங்கான பகுதிகளிலும் குடிநீர் எட்ட முடியாத தொலை தூரப்பகுதிகளிலும் 2908 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பெற்று லாரிகள் வாயிலாகக் குடிநீர்த்தொட்டிகளுக்கு அன்றாடம் வழங்கப்படுகிறது. இதில் 500 குடிநீர்த் தொட்டிகள் இந்த ஆண்டு புதியனவாக நிறுவப்பட்டவையாகும். இதற்காக 400 குடிநீர் லாரிகளும், 200 டிராக்டர்களும் அமர்த்தப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கு முறையைப் பராமரித்தல்

சென்னை நகரின் 92 விழுக்காடு பரப்பளவுள்ள பகுதிகளுக்குக் குழாய்கள் வாயிலாகக் குடிநீர் வழங்கும் வசதிகள் ஏற்கெனவே இருக்கின்றன. 1979-ஆம் ஆண்டில் சென்னை நகரோடு சேர்க்கப்பட்ட முன்னாள் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கு குழாய்களைப் பதிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சென்னை நகரில் 100 மி.மீ. விட்டத்திலிருந்து 1200 மி.மீ. விட்டம் வரையுள்ள குடிநீர்க்குழாய்கள் 1400 கி.மீ. நீளத்திற்குப் பதிக்கப்பட்டுள்ளன.

நகரிலுள்ள குடிநீர்ப் பகிர்மானக் குழாய்கள் நூற்றாண்டுப் பழமை வாய்ந்தவை. 1978-ஆம் ஆண்டில் திரட்டிய புள்ளிவிவரப்படி, இவற்றில் 40 விழுக்காட்டளவிலான குழாய்கள், 50 ஆண்டுப் பணியைச் செய்து முடித்தவையாகும். எனவே இவ்வாறு காலத்தால் பழுதுபட்டுத் தூர்ந்து போன குழாய்களை மாற்றியமைக்கும் திட்டத்தை வாரியம் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. 1981-82 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளில், 30. கி.மீ. நீளத்திற்குப் பழைய குழாய்கள் பதிக்கப்பட்டன. தற்போது உலக வங்கி நிதியுதவியுடன், 1988-89-ஆம் ஆண்டுகளில் மட்டும், 50 கிலோ மீட்டர் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

எல்லாப் பகுதிகளுக்கும் சீராக நீர் கிடைக்கச் செய்யும் வகையில்



செங்குன்றம் நீர்த்தேக்கம்

த்மநாப நகர், கொருக்குப்பேட்டை, மேற்கு மாம்பலம் முதலிய பற்றாக் குறை பகுதிகளில், மண்டல நீர்த் தேக்கங்களை வடிவமைத்துக் கட்டு வதற்கான திட்டமிடப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கலை மேம்படுத்து வதற்கான குறுகிய காலத் திட்டங்கள்

1. இருக்கின்ற நீர் நிலைகளை உறுதிப்படுத்துதல்
2. தொழிற்சாலைகளுக்குக் கழிவு நீரைத் தூய்மையாக்கிப் பயன் படுத்துதல்
3. புதிய நீர்நிலைகளை உருவாக்கு தல் - என்ற மூன்று வகைகளிலும் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற் கான குறுகிய காலத் திட்டங்களைச் சென்னைக் குடிநீர் வாரியம் திட்ட மிட்டு நிறைவேற்றி வருகின்றது.

பொதுமக்களின் பயனுக்கென சென்னைக் குடிநீர் வாரியத்தால் அமைக்கப்பட்ட கைப்பம்பு.

வெள்ளத்தடுப்பு அணைகளும் இணைப்புக் காலவாய்களும்

சென்னைக் குடிநீர் வழங்கு நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்து தலை நோக்கமாகக் கொண்ட, ரூ.150 கோடிக்கான உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் 1986 முதல் நடை பெற்று வருகின்றன. இத்திட்டத்தில் கூடுதலான நிலத்தடி நீர்ப் புலங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

ஆரணியாற்றிலிருந்து கொடுதலை ஆற்றை இணைக்கும் கால்வாய் அமைத்தல், மற்றும் வெள்ளத் தடுப்பு அணைகள் கட்டும் பணி, ரூ.18 கோடி மதிப்பீட்டில் தொடங்கி நடைபெறுகிறது. இப்பணி, 1991 ஆம் ஆண்டில் முடிவுறும். இதனால் மேலும் 470 இலட்சம் லிட்டர் நீர் நாள்தோறும் கிடைக்கும் என மதிப் பிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டம்

சென்னைக் குடிநீர்த் தட்டுப் பாட்டைத் தவிர்க்க நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட் டுள்ள திட்டம் கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டமாகும். 1951-ஆம் ஆண்டில், இந்திய அரசின் திட்ட ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கோசலா குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து, மகாராட்டிரம், கரு நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும், ஒவ்வொரு மாநிலமும், தன் பங்கிலான கிருஷ்ணா நதி நீரில் 5 டி.எம்.சியை சென்னைக் குடிநீருக்கு ஒதுக்க இசைந்தன.

பொதுமக்களுக்கெனக் குடிநீர் லாரி நீரேற்றல்

1983-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு அரசுக் கிடையில், ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த ஒப்பந்தத்தின்படி, 34 கோடி கனமீட்டர் (12 டி.எம்.சி) தண்ணீர் ஆண்டுதோறும், தமிழ் நாட்டின் எல்லையில் தரப்படும். இதனால் சென்னைப் பெருநகருக்கு நாளொன்றுக்கு 95 கோடி லிட்டர் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகும்.

ரூ.937 கோடி மதிப்பீட்டில் உருவாகிவரும் இத்திட்டத்திற்குத் தமிழ்நாட்டின் பங்கு ரூ.250.98 கோடியாகும். இதனைத் தொடர்ந்து, சென்னைக் குடிநீர் வாரியம் கிருஷ்ணா நதி நீரைத் தூய்மை செய்து மக் களுக்கு வழங்க ரூ.410 கோடிக்குத் திட்டம் தீட்டியுள்ளது.

இவ்வாறு, இருக்கும் நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்துவதுடன், நீண்ட காலத் திட்டங்களையும் நிறைவேற்றி, தமிழகத் தலைநகரின் தாகம் தீர்க்கச் சென்னைக் குடிநீர் வாரியம் தமிழக அரசின் ஆதர வுடன் செவ்விதின் செயலாற்றி வருகின்றது. ●

அண்ணலைக் கவர்ந்த ஆச்சார்ய நரேந்திர தேவா

புலவர் தமிழ்ப்பித்தன்



1929 ஆம் ஆண்டு. காசி வித்யா பீடத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டி ருந்தது. அவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அண்ணல் காந்தி அடிகள் அழைக்கப்பட்டிருந்தார். அண்ணல், வழக்கமான நான்கு முழ வேட்டியும் துண்டும் அணிந்தவாறு வந்திருந்தார். பட்டமளிப்பு விழா என்பதற்காகச் சிறப்பான ஆடை எதுவும் அவர் அணிந்திருக்கவில்லை

மேடையில் அமர்ந்திருந்த அண்ண லிடம் உயரமான மனிதர் ஒருவர் நெருங்கி வந்தார். தமது கையிலே வைத்திருந்த பட்டமளிப்பு விழா அங்கியை அண்ணலிடம் கொடுத்து, ''பாபுஜி'' தாங்கள் இப்போது இந்த உடையை அணிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

எப்போதுமே இதுபோன்ற சம்பிரதாயங்களை விரும்பாதவர் அண்ணல். ஆனால் அன்று எப் படியோ அந்தப் புதிய மனிதரின் பார்வையினால் கவரப்பட்டார். ''இந்த உடையை நான் அணிய மாட்டேன்'' என்று சொல்ல முடி யாத நிலைக்கு ஆளானார்.

வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்ன ரிடம் உரையாடுவதற்குச் சென்றி ருந்த பொழுதுகூட அரை ஆடை யுடன் காட்சி அளித்த அண்ணல் 'வேறு உடை அணியவேண்டும் என்று கட்டாயம் செய்தால் மன்ன ருடன் சந்திப்பே தேவையில்லை' என்று உறுதியாகத் தெரிவித்த அண்ணல், அந்தப் புதிய மனிதரிடம் மறுத்துச் சொல்ல முடியாதவராகி விட்டார்.

புதிய மனிதர் அளித்த அங்கியை அணிந்து கொண்டார். மன்னரால் சாதிக்க முடியாத செயலை ஒரு சாதாரண மனிதர் சாதித்துவிட்டார்.

அந்த மனிதர் யார் என்று அண்ணலுக்குத் தெரியாது. விழா முடிந்து ஸ்ரீபிரகாசா அவர்களுடன் காரில் சென்று கொண்டிருந்த போது, 'ஆமாம் இன்று ஒரு புதிய மனிதரைச் சந்தித்தேன். மனிதரில் சிறந்த இத்தகைய மாணிக்கத்தை எப்படி இதுவரை என் கண்ணில் காட்டாமல் மறைத்து வைத்திருந் தீர்கள்?' என்று அண்ணல் வின வினார்.

''மகாத்மாஜி! மாணிக்கங்கள் தம்மை விரும்புவோரைத் தேடிச் செல்வதில்லை. அவை எவருக்குத் தேவையோ அவர்கள்தான் அவற் றைத் தேடிச் செல்ல வேண்டும்'' என்று பதிலுரைத்தார் ஸ்ரீபிரகாசா.

முதல் சந்திப்பிலேயே அண்ண லின் மனத்தில் இடம்பெற்றுவிட்ட அந்த மாணிக்கம் - மாமனிதர் - ஆச்சார்ய நரேந்திர தேவா ஆவார்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் அயோத்தி என்னும் நகருக்கு அருகில் உள்ள சீதாபூர் கிராமத்தில் வாழ்ந்து வந்தார் பாபு பலதேவ் பிரசாத் என்னும் வழக்கறிஞர். பஞ்சாபி காத்ரி குடும்பத்தைச் சேர்ந்த அவரது புதல்வனாக 1889 அக்டோபர் 30 ஆம் நாளில் பிறந்தார் அவனாசிலால்.

வழக்கறிஞர் தொழிலை முன் னிட்டு பல்தேவ் பிரசாத், சீதாபூரை விட்டு, பைசாபாத்திற்குக் குடியேறி னார். அவரது இல்லம் நற்பணி களுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தது. துறவிகள் பலரும் அவ்வில்லத்திற்கு வந்து தங்குவதுண்டு.

பண்டித மாதவ் பிரசாத் மிஸ்ரா என்னும் துறவி, பல்தேவின் வீட் டிற்கு வந்து மாதக் கணக்கில் தங்கு வார். குடும்பத்தில் உள்ள குழந் தைகளுக்கெல்லாம் செல்லப் பெயர் சூட்டுவது அவருக்கு மகிழ் வளிக்கும் பணி. அவனாசிலாலை அன்புடன், 'நரேந்திர தேவா' என்று பெயரிட்டு அழைத்தார். அந்தப் பெயரே குழந்தைக்கு நிலைத்து விட்டது.

மகன் நரேந்திர தேவாவிற்கு, தந்தை பல்தேவ், ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தார். பின்னர் தக்க ஆசிரி யர்களை நியமித்து இந்தி, சமஸ் கிருதம், உருது, பார்சி முதலிய மொழிகளைக் கற்பிக்கச் செய்தார். பதின்மூன்றாவது வயதில் தான் நரேந்திர தேவா பள்ளிக்கூடம் சென்றார். அதுவரை வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. பத்தாவது வயதிலேயே இந்தியப் பண்பாட்டில் ஆழ்ந்த பற்றும், விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் நரேந்திர தேவாவிற்கு ஏற்பட்டது.

பத்தாவது வயதிலேயே துளசி தாஸரின் இராமாயணம், மகாபார தத்தின் இந்திமொழி பெயர்ப்பு ஆகியவற்றை நரேந்திர தேவா படித் தார். வேத சுலோகங்களைப் பிழை யின்றி ஒப்புவித்தார்.

லக்னோவில் 1899-ல் நடை பெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்ற பல்தேவ் பிரசாத், தனது மகன் நரேந்திர தேவாவையும்

அழைத்துச் சென்றார். மாநாட்டு நடவடிக்கைகள் எதுவும் 10 வயதுச் சிறுவரான நரேந்திர தேவாவிற்குப் பிடிபடவில்லை, என்றாலும் அப்போதுதான் எரவாடா சிறையிலிருந்து விடுதலையாகி மாநாட்டில் கலந்து கொண்ட லோகமான்ய பாலகங்காதர திலகர் மீது அவருக்கு ஒரு பற்று - பக்தி ஏற்பட்டுவிட்டது. நாளாக நாளாக இந்தப் பற்று அதிகரித்தது.

1906-ல் நரேந்திர தேவாவின் உயர்நிலைக் கல்வி முடிவுற்றது. பண்டித மதன மோகன் மாளவியா அவர்களின் அறிவுரைப்படி - நரேந்திர தேவாவை அலாகாபாத் மையர் மத்திய கல்லூரியில் சேர்த்தார் அவரது தந்தை. அங்கு விடுதியில் தங்கிப் படித்தார் நரேந்திர தேவா. அப்போது பல பெரியோர்களிடம் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது.

கல்லூரி மாணவப் பருவத்திலேயே, புரட்சி இயக்க நூல்களைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டினார் தேவா. மாஜினியின் நூல்கள், பிரெஞ்சுப் புரட்சி நூல்கள், திலகர், அரவிந்தர் ஆகியோரின் நூல்கள் அவரைக் கவர்ந்தன.

நாட்டு விடுதலைக்கு வன்முறையே சிறந்தது என்ற கருத்து அந்நாளில் [illegible] இளைஞர்களிடம் காணப்பட்டது. தேவாவிற்கு அந்தக் கருத்தில் உடன்பாடு கிடையாது.

பி.ஏ. பட்டம் பெற்ற பின்னர், தேவா, பனாரஸ் சென்று கியூன்ஸ் கல்லூரியில், அகழ்வாய்வுத் துறை பகுதியில் சேர்ந்து எம்.ஏ. பட்டம் பெற்றார்.

வழக்கறிஞர் பணியில் ஈடுபட அவருக்கு நாட்டம் இல்லாதிருந்தது. [illegible] அந்தத் தொழிலில் இருந்[illegible] பொதுப்பணி புரிவதற்கு [illegible] ஏற்படும் என்பதை [illegible] சட்டம் படிக்க விரும்பி [illegible] வணையே ஈடு [illegible] சட்டப்படிப்பில் தேறினார். [illegible] வழக்கறிஞர் [illegible] தொடங்கினார்.

[illegible] நிர்வாகங்களை இந்[illegible] ஈடுபட்டு [illegible] அரசு [illegible] [illegible] அதனைத்,

தீவிரவாதிகள் எதிர்த்தார்கள். ''நிர்வாகப் பணி பெறுவதல்ல நமது கொள்கை! முழு விடுதலை வேண்டும். இதுவே நமது இலட்சியம்'' எனத் திலகர் அறிவித்தார். இளைஞருலகம் அவரைத் தீவிரமாக ஆதரித்தது. அதில் முன்னணி இடத்தில் இருந்தவர் நரேந்திர தேவா.

இந்நிலையில் முதலாவது உலகப் பெரும்போர் முடிவுற்றது. பிரிட்டனின் கை வலுத்தது. இந்த தைரியத்தில் - இந்தியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை ஆங்கில அரசு மீறியது. இந்தியரின் உரிமைகளையும் நசுக்க முயன்றது. ரௌலட் சட்டம், மார்ஷல் சட்டம் போன்ற பயங்கர சட்டங்களை நடைமுறைப்படுத்தியது. ஜாலியன் வாலா பாக்கில் ஆயிரக் கணக்கான மக்களைச் சுட்டுக் கொன்றது.

இந்தச் சமயத்தில், இந்திய விடுதலைப் போர்க்களத்தில்

அதனை அடக்குவதற்கு ஆங்கில அரசு புதுப்புதுச் சட்டங்களை உலா வரச் செய்தது. விடுதலை உணர்வு கொண்ட பெருமக்கள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை; அயரவில்லை. தேவா போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்; ஒரு முறை அல்ல, பல முறை.

1920, 1930, 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்.

அந்நிய ஆங்கிலேயர் நடத்தும் கல்விக் கூடங்களில் மாணவர்கள் பயிலக் கூடாது என்று கட்டளையிட்ட அந்நாளைய நாட்டியக்கத் தலைவர்கள், [illegible]திய கல்வி நிலையங்களை உருவாக்கினர். இந்தியக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிட்டனர். அப்படி ஏற்பட்ட அமைப்புகளில் ஒன்று

ஆச்சார்ய நரேந்திர தேவா ஒரு அரிய மாறுபட்ட பிறவி; உணர்ச்சி, பண்பு, அறிவு, மனதின் முதிர்ச்சி முதலிய அனைத்திலுமே அவர் நான் கண்ட மற்ற பெரியார்கள் அனைவரிலும் மாறுபட்டவர் ஆவார்.

—பண்டித ஜவகர்லால் நேரு

அண்ணல் காந்தி அடிகள் நுழைந்தார். அவரது முழக்கத்தை மக்கள் பேரார்வத்துடன் கேட்கத் தலைப்பட்டனர். 1920-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் அண்ணலின் குரல் முன்னணி பெற்றது.

''மாணவர்கள் கல்விக்கூடங்களை உதறித் தள்ளவேண்டும். சட்டமன்றத் தேர்தலை காங்கிரஸ் இயக்கம் உதற வேண்டும்'' என்றெல்லாம் அண்ணல் சில கொள்கைகளை வலியுறுத்தினார்.

அண்ணலின் குரல், தேவாவின் செவிகளில் பதிந்தது. வழக்கறிஞர் தொழிலை உதறித் தள்ளினார். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்.

அந்தச் சமயத்தில் திலகர் மறைந்துவிட்டதால இயக்கத்தின் முழுத் தலைமைப் பொறுப்பும் அண்ணலிடம் வந்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் [illegible] ஏற்பட்டது.

காசி வித்யா பீடம். சிவபிரசாத் குப்தா என்னும் நாட்டுப் பற்றாளர், அதனை நிறுவுவதற்கு ரூ.10 இலட்சம் நன்கொடையாக வழங்கினார்.

தத்துவ அறிஞர் பாபு பகவான் தாஸ், வித்யா பீடத்தின் முதல்வராகவும், பாபு சம்பூரணானந்த் தத்துவ ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர்.

முதல்வர் பகவான்தாசும் நரேந்திர தேவாவும் நண்பர்கள்; கல்லூரித் தோழர்கள். ஆதலால் தேவாவை வித்யா பீடத்தில் பணியாற்ற அழைத்தார் பகவான்தாஸ். பண்டித ஜவகர்லால் நேருவும் தேவாவிடம் வலியுறுத்தினார். இரு பெருமக்களின் விருப்பத்தையும் தட்டிக் கழிக்க முடியாததால், காசி வித்யா பீடத்தில் பேராசிரியா பணியில் சேர்ந்தார் தேவா.

பல்கலைக் கழகத்தில் பண்டைக் கால குருகுல வாழ்க்கையை அவர் வாழ்ந்து காட்டினார். மாணவர்கள் தங்கியிருந்த விடுதியிலேயே அவரும் தங்கினார். அவர்களிடம் பேரன்புடன் பழகினார். தமக்குக் கிடைத்து வந்த மாத ஊதியத்தில் ரூ. 500/- மட்டுமே சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொண்டு மீதிப் பணத்தை மாணவர்களின் நலனுக்கே செலவு செய்தார்.

வித்யா பீடத்தில் மாணவர்களுக்கு பாலி, பிராகிருதி ஆகிய புராதன மொழிகளையும் பயிற்றுவித்தார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், உருது, இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவற்றில் பெரும்பாலான மொழிகளை அவர் சிறையிலிருந்த காலத்தில் கற்றுக் கொண்டார்.

[illegible]மான நூல்களை எழுதியுள்[illegible] பல நூல்களை மொழி பெயர்[illegible]ளார். தேவா எழுதிய நூல்க[illegible] மிகச் சிறந்தது 'புத்த தர்[illegible]' என்னும் நூலாகும்.

தில் அண்ணல் காந்தி அடிகள் பேச்சுரிமை வேண்டி, தனிநபர் அறப்போரைத் தொடங்கினார். ''நாடு விடுதலை பெறுவதற்குத் தேவை அனைத்து மக்களின் போராட்டமே தவிர, தனிநபர் அறப்போர் அல்ல'' என்று தேவா கூறினார் என்றாலும் தனிநபர் அறப்போரில் ஈடுபட்டுக் கைது செய்யப் பெற்றார், தேவா. 1941-ல் விடுதலை பெற்றார்.

தேவாவின் உடல்நிலை அடிக்கடி சீர்கெட்டது. சில நேரங்களில் தமது கருத்துக்கு மாறுதலான கருத்தை தேவா எடுத்துரைத்த போதும் கூட அவரிடம் அண்ணல் காந்தி அதிக மதிப்பு வைத்திருந்தார். அவரது உடல்நிலையை விசாரித்துக் கடிதம் எழுதுவார்.

சிறிது காலம் தன்னுடன் வார்தாவுக்கு வந்து தங்குமாறு அடிக்கடி தேவாவிடம் வேண்டிக் கொண்டார் அண்ணல். ஆனால் தேவா ஏதாவது

[illegible]ஷலிச சித்தாந்தத்திற்கு ஆச்சார்ய நரேந்திர தேவா அளித்த கொடைக்கு நிகரே இல்லை. அவருடைய உன்னதமான சிந்தனைகள் சமதர்ம இயக்கத்திற்கு மட்டுமல்லாது, நாட்டின் புனரமைப்புக்கும் பேருதவியாக இருந்தன. நவீன இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் தேவா.

—ஜெயபிரகாஷ் நாராயணன்

தூரக் கிழக்கு நாடுகள் வரலாறு, இந்திய வரலாறு ஆகியவற்றில் மிகுந்த திறமை பெற்றிருந்தார். இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளையும் இணைத்து ஒரு பொது லிபியை உருவாக்க வேண்டும் எனத் திட்டமிட்டு உழைத்து வந்தார்.

''ஒவ்வொரு தென்னிந்தியரும் இந்தி மொழியைக் கற்க வேண்டும்; அதே போல் ஒவ்வொரு வட இந்தியரும் தென்னிந்திய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என வலியுறுத்தினார்.

கல்விப் பணியும், அரசியல் பணியும் அவரது இரு குறிக்கோள்கள். இரண்டுக்கும் இடையே பற்பல சமயங்களில் மோதுதல் ஏற்படுவதுண்டு. என்றாலும், வாழ்நாளின் இறுதிவரை இந்த இரு பணிகளிலும் தனது கடமையை நிறைவேற்ற அவர் தவறியதில்லை.

1939-ல் 2வது உலகப் பெரும் போர் தொடங்கியது. அந்தச் சமயத்

ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தார்.

1942-ன் துவக்கத்தில் வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தேவா, அண்ணலின் வேண்டுகோளின்படி வார்தாவில் சில நாட்கள் தங்கினார். அவருக்குச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

அப்போது ஒரு நாள், தேவாவின் உடல்நிலை மிகவும் மோசம் அடைந்தது. மருத்துவர்களே அஞ்சிவிட்டனர். இரவு ஒரு மணியிருக்கும்; அண்ணலை எழுப்பிச் செய்தியைச் சொன்னார்கள். அன்று அண்ணலின் பேசா நோன்பு தினம் என்றாலும், தேவாவுக்காகத் தனது பேசா நோன்பைக் கைவிட்டு விட்டு, எழுந்து வந்தார். அவசர வாகனத்துக்கு ஏற்பாடு செய்து, அனுபவமிக்க மருத்துவர்களை வரவழைத்துச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.

மறுநாள், தேவாவின் உடல் நிலை சற்றுத் தேறியது. அன்று அண்ணல் டில்லிக்குச் சென்று சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸைச் சந்திக்க வேண்டியிருந்தது. தேவாவை அந்த நிலையில் விட்டுச் செல்ல மனமில்லை. தேவாவின் வற்புறுத்தலுக்குப் பின்னர் அண்ணல் டில்லிக்குச் சென்றார். அங்குச் சென்ற போதும் தேவாவின் நினைவாகவே அவர் இருந்தார். அதனால் வார்தாவுக்கு விரைவில் திரும்பி விட்டார்.

1942 ஆகஸ்ட் போராட்டத்தைக் குறித்து அண்ணல் முனைப்பாகச் சிந்தித்த போது, தேவா அவருடன் இருந்தார் என்பதும் அண்ணல் தெளிவான முடிவினை மேற்கொள்வதற்கு, தேவாவுடன் நடத்திய கலந்துரைதான் காரணம் என்பதும் வரலாற்றுச் செய்திகள்.

1942 ஆகஸ்ட் எட்டாம் நாள் பம்பாயில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் கூட்டத்தில், ''வெள்ளையனே வெளியேறு'' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார் அண்ணல். ஜவகர்லால் நேரு முன்மொழிந்தார். நரேந்திர தேவா முழு மனத்துடன் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

ஆகஸ்ட் போராட்டம் தொடங்கியது. நாடெங்கும் மக்கள் போர் முரசு கொட்டினர். ஆங்கில அரசு அடக்குமுறை ஆயுதத்தைப் பயன்படுத்தியது. அண்ணல், கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் வைக்கப்பட்டார்.

நரேந்திர தேவா, அபுல்கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு, வல்லபாய் படேல் ஆகியோர் கைது செய்யப்பட்டு அல்மோரா சிறையில் அடைக்கப்பட்டனர்.

தலைவர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்ட போதிலும் போராட்டம் நீடித்தது. நாட்டு விடுதலையை நாடிய இந்திய மக்கள் எல்லாரும் ஈடுபட்டதால், போராட்டம் வலுப் பெற்றது. ஆங்கில அரசு அஞ்சி நடுங்கியது. இனிமேல் இந்தியர்களை அடக்கி ஆள முடியாது என்ற முடிவுக்கு வந்தது.

சிறை வைக்கப்பட்ட தலைவர்கள் எல்லாரும் 1945 ஜூன் 14 ஆம் நாளன்று விடுதலை செய்யப்பட்டனர்.

1946ல் இடைக்கால அரசு ஏற்பட்டது. பண்டித ஜவகர்லால்

நேரு இந்தியப் பிரதமரானர். 1947ல் இந்திய நாடு இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரு பிரி வாக்கப்பட்டு, சுதந்திரம் பெற்றது.

காசி வித்யாபீடத்தில் தேவா ஆற்றிய பணியைக் கண்ட சில நண்பர்கள், லக்னோ பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவரிடம் வேண்டினர். புதிய சூழ்நிலை அவரது நோயைக் குறைக்க உதவும் என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாகவும் லக்னோ பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் தொடர் முயற்சியாலும் தேவா, லக்னோ பல்கலைக் கழகப் பணியை ஏற்றுக் கொண்டார்

தேவாவின் உடல்நிலை 1951ல் மிகவும் மோசமான நிலையை அடைந்தது. அதனால் லக்னோ பல்கலைக் கழகப் பணியைத் துறந்தார். ஆனால் மத்திய கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் அவர்களின் வற்புறுத்தலின் காரணமாக 1952ல் மீண்டும் காசி வித்யா பீடத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்கலானார். தொடர்ந்து நீண்ட காலம் அவரைப் பணி ஆற்ற விடவில்லை - ஆஸ்துமா நோய்! 1954 வாக்கில் அப்பதவியையும் துறந்து, அரசியலில் முழு ஈடுபாடு கொண்டார்.

1956-ஆம் ஆண்டு வாக்கில் தேவாவின் உடல்நிலை மிகமிக மோசமாகியது. அப்போது சென்னை மாகாணத்தில் ஆளுநராக இருந்த ஸ்ரீபிரகாசா, தேவாவின் உற்ற நண்பர் ஆவார். தேவாவை 'ஆச்சார்ய' என்று அழைத்தவரும் இவரே!

''பனிக்காலத்தில் தமிழகத்தில் குளிர் மிதமாக இருக்கும். இங்கு (பெரியார் மாவட்டத்தில் உள்ள) பெருந்துறையில் சிறந்த மருத்துவமனை உள்ளது. எனவே இங்கு வந்து சிகிச்சை பெறலாம்'' என்று தேவாவுக்கு வேண்டுகோள் விடுத்தார் ஸ்ரீபிரகாசா.

தேவா ஒப்புக் கொண்டு சென்னைக்கு வந்தார். அவரைப் பெருந்துறை மருத்துவமனையில் சேர்த்தார் ஆளுநர். தேவாவின் உடல்நிலை தேறி வந்தது. ''கடந்த ஐந்து ஆண்டுகளாக எனது உடல்நிலை இவ்வளவு நன்றாக இருந்ததில்லை; இப்போது நன்றாக உள்ளது'' என்று சொல்லி மகிழ்வெய்தினார் தேவா.

பிப்ரவரி 6-ஆம் நாளன்று அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற ஸ்ரீபிரகாசா, அவர் நலம் பெற்று வருவது கண்டு மகிழ்ந்தார். அவரைத் தனது காரில் வைத்துச் சிறிது தூரம் சுற்றுப் பயணம் செய்தார். அந்தப் பயணம் தேவாவின் உடல் நலத்தைப் பாதித்துவிட்டது. பிப்ரவரி 8-ஆம் நாளன்று படுத்த படுக்கையாகி விட்டார்.

அச்சமயம் - தேவாவின் அறிவுரைக்காக பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் பிப்ரவரி 11,12,13 ஆகிய நாட்களில் பெருந்துறையில் கூட்டப்பட்டது. மருத்துவர்கள் தடுத்தும்கூட அந்தக் கூட்டத்தில் 45 நிமிடம் மொழிவாரி மாநிலப் பிரிவினை குறித்துத் தேவா உரையாற்றினார். அந்தச் செயலும் அவரது உடல்நலக் குறைவை அதிகரித்து விட்டது.

தேவாவின் உடல்நிலை மோசமுற்றதை அறிந்த ஸ்ரீ பிரகாசா, உடனே பெருந்துறைக்கு விரைந்தார். தேவாவை லக்னோவுக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டார். பிப்ரவரி 19-ஆம் நாளன்று தேவாவையும் அவரது துணைவியாரையும் தமது காரில் அமர்த்திக் கொண்டு, கோவை விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார் ஸ்ரீ பிரகாசா

பெருந்துறையிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள ஈரோடு செல்லும் போதே நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அங்குள்ள பிராஜக்ட் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, படுக்க வைக்கப்பட்டார். சில விநாடிகளில் தேவாவின் இன்னுயிர் பிரிந்துவிட்டது.

தேவாவின் மரணச் சேதி நாட்டில் உள்ள எல்லாத் தரப்பினரையும் உலுக்கிவிட்டது.

20-ஆம் தேதி அவரது உடல் - லக்னோவை நோக்கி விமானத்தில் பறந்தது. உயிருடன் அவரை அனுப்பி வைக்க நினைத்த ஸ்ரீபிரகாசாவின் எண்ணம் நிறைவேறவில்லை; உயிரற்ற உடலாகத்தான் அனுப்பிவைக்க முடிந்தது.

அன்று மாலையே தேவாவின் உடல், மோதிலால் மைதானத்தில் எரியூட்டப்பட்டது. மக்கள் வடித்த கண்ணீருக்கு அளவே இல்லை. தேவா எரியூட்டப்பட்ட இடத்தில் அவரது நண்பர் சி.பி. குப்தா அவர்களின் முயற்சியால் ஒரு நூலகம் உருவாக்கப்பட்டது.

அவர் உயிர்நீத்த ஈரோடு பிராஜக்ட் அலுவலகத்தில் தேவாவின் திருவுருவப்படமும் நினைவுக் கல்லும் அமைக்கப்பட்டன. அன்றைய முதல்வர் காமராஜர் தலைமையில், ஆளுநர் ஸ்ரீபிரகாசா நினைவுக் கல்லையும், திருவுருவப் படத்தையும் திறந்துவைத்தார்.

ஆண்டுக்கு ஒரு முறை பிப்ரவரி 19-ஆம் நாள் அன்று தேசபக்தர்களும்- சோஷலிஸ்டுகளும் அங்கே சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தேவா மறைவெய்திய அந்த மாளிகைக்கு 'ஆச்சார்ய நரேந்திர தேவ் நினைவு விடுதி' என்ற பெயரை 27.3.'89 அன்று தமிழக அரசு சூட்டி, அவருக்குப் பெருமை சேர்த்துள்ளது.

இந்திய நாட்டின் விடுதலைப் போரில் பெரும் பங்கு வகித்த ஆச்சார்ய நரேந்திர தேவா - இந்திய மக்கள் அனைவரும் ஏற்றிப்போற்றும் சிறப்புக்கு உரியவராக விளங்கினார். வரலாற்றில் அவருக்குத் தனி இடம் உண்டு.

சுயராஜ்ய கட்சி தொடர்பாக உரையாறறுவதற்கு திலகர் 1907-ல் அலகாபாத்திற்குச் சென்றபோது அவரை வரவேற்க மாணவ சமுதாயம் ஆயிரக்கணக்கில் திரண்டெழுந்தது. திலகரை ரயில் நிலையத்திலிருந்து நகருக்குள் அழைத்து வருவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கோச் வண்டியின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு விட்டு, சில மாணவர்கள் தாங்களே வண்டியை இழுத்துச் செல்ல ஆர்வம் காட்டினர். திலகர், அவர்களைத் தடுத்து விட்டார். வண்டியை இழுக்க வந்த தீவிரமான மாணவர்களில் முதன்மையாக நின்றவர் அப்போது அலாகாபாத்தில் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த 17 வயதுடைய நரேந்திர தேவா என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. ஆர். நடராஜன் (ஓவியர்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திரு. இராமகிருஷ்ணன், திருமதி தாயம்மாள் ஆகியோரின் மகனாக 1924 ஏப்ரல் 13 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. ஆர். நடராஜன் அவர்கள்.

தனது பத்தாவது வயதில் தந்தையாரிடம் 10 ஆண்டுக் காலம் ஓவியக் கலையைக் கற்றுக் கொண்ட இவர், பின்னர் ஓவிய மன்னர் திரு. கே. மாதவன் அவர்களிடம் பயிற்சி பெற்றார்.

கடந்த 45 ஆண்டுகளாக இவர் ஓவியம் தீட்டி வருகிறார். இவரது அரிய ஓவியங்கள் இந்தியா முழுதும் பரவியுள்ளதுடன் வெளிநாடுகளுக்கும் சென்று இவருக்குப் புகழ் ஈட்டிவருகின்றன. பல்வேறு பரிசுகள் பெற்றிருக்கிறார்.

திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் (வயலின்)

முந்தைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சித்தூரில் திரு வேதாசல ஐயர், திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1921 ஆகஸ்ட் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு சித்தூர் கோபால கிருஷ்ணன் அவர்கள்.

தமது 13-வது வயதில், (1934) தந்தையாரிடமே வயலின் கலையைப் பயிலத் தொடங்கினார். அதற்கு முன்னரே, வாய்ப்பாட்டு, ஹரிகதை ஆகியவற்றில் பயிற்சி உண்டு.

இவரது கலைப்பணி 53 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருவையாற்றில் உருவான தென்பிராந்திய கலாச்சார மையத்தின் அமைப்பாளராக 1987 நவம்பர் முதல் பணியாற்றி வருகிறார்.



திருமதி பொன்னுத்தாய்
(நாதசுரம்)

திரு குருவாயூர் துரை (மிருதங்கம்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த குருவாயூரில், திரு ஜி.எஸ். கிருஷ்ண ஐயர், திருமதி என்.வி. மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1935 ஜூலை 2-ஆம் நாளன்று பிறந்தவர் திரு குருவாயூர் துரை அவர்கள்.

தமது எட்டாவது வயதில் (1943), பாலக்காடு சுப்பய்யர் அவர்களிடம் மிருதங்க இசை பயிலத்தொடங்கிய இவர், பின்னர் பழனி சுப்பிரமணியபிள்ளை அவர்களிடம் பயின்றார். நாற்பதாண்டுகளுக்கு மேலாகக் கலைப்பணி ஆற்றிவருகிறார். தமிழகத்தில் மட்டுமின்றி, அமெரிக்கா, மலேசியா, ரஷ்யா, ஜெர்மனி, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், லெபனான், ஹங்கேரி, போலந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், துபாய் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று கச்சேரிகளில் கலந்து கொண்டிருக்கிறார்.



திரு. தவபாண்டியன்
(இசை ஆராய்ச்சியாளர்)

மதுரை எம்.எஸ். பொன்னுத்தாய் (நாதசுரம்)

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த பழனி நகருக்கு அருகில் உள்ள புது ஆயக்குடியில் திரு ஸ்ரீபதி, திருமதி சுப்புத்தாய் ஆகியோரின் புதல்வியாக 1929 ஜூலை 5-ஆம் நாளில் பிறந்தவர் எம்.எஸ்.பொன்னுத்தாய் அவர்கள்.

தமது பத்தாவது வயதில் (1939) மதுரை நாதஸ்வர வித்துவான் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களின் குமாரர் நடேச பிள்ளையிடம் நாதஸ்வர இசைப் பயிற்சியில் சேர்ந்தார். நான்காண்டுகள் பயின்றார். பின்னர் மன்னார்குடி குருசாமி பிள்ளை, கோவில்பட்டி ராமையா பிள்ளை ஆகியோரிடம் பயின்றார்.

புகழ்பெற்ற நாதஸ்வர மேதை டி.என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களுடன் துணை நாதஸ்வரக் கலைஞராகவும் சில இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற பெருமை இவருக்கு உண்டு. திருச்சி வானொலி நிலையத்தில் 30 ஆண்டுக் காலம் தனி இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். கொழும்பு வானொலியிலும் இவரது நாதஸ்வரநிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. பம்பாய், செகந்திராபாத் போன்ற வெளி மாநிலங்களிலும், தமிழகத்தின் பட்டி தொட்டிகள் - நகரங்கள் ஆகியவற்றிலும் இவரது நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடந்துள்ளது.

திரு. வைரமுத்து
(திரைப்படப் பாடல்)

திரு. லியோ பிரபு
(நாடகம்)

நேரு இந்தியப் பிரதமரானர். 1947ல் இந்திய நாடு இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரு பிரிவாக்கப்பட்டு, சுதந்திரம் பெற்றது.

காசி வித்யாபீடத்தில் தேவா ஆற்றிய பணியைக் கண்ட சில நண்பர்கள், லக்னோ பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவரிடம் வேண்டினர். புதிய சூழ்நிலை அவரது நோயைக் குறைக்க உதவும் என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாகவும் லக்னோ பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் தொடர் முயற்சியாலும் தேவா, லக்னோ பல்கலைக் கழகப் பணியை ஏற்றுக் கொண்டார்

தேவாவின் உடல்நிலை 1951ல் மிகவும் மோசமான நிலையை அடைந்தது. அதனால் லக்னோ பல்கலைக் கழகப் பணியைத் துறந்தார். ஆனால் மத்திய கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் அவர்களின் வற்புறுத்தலின் காரணமாக 1952ல் மீண்டும் காசி வித்யா பீடத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்கலானார். தொடர்ந்து நீண்ட காலம் அவரைப் பணி ஆற்ற விடவில்லை - ஆஸ்துமா நோய்! 1954 வாக்கில் அப்பதவியையும் துறந்து, அரசியலில் முழு ஈடுபாடு கொண்டார்.

1956-ஆம் ஆண்டு வாக்கில் தேவாவின் உடல்நிலை மிகமிக மோசமாகியது. அப்போது சென்னை மாகாணத்தில் ஆளுநராக இருந்த ஸ்ரீபிரகாசா, தேவாவின் உற்ற நண்பர் ஆவார். தேவாவை 'ஆச்சார்ய' என்று அழைத்தவரும் இவரே!

''பனிக்காலத்தில் தமிழகத்தில் குளிர் மிதமாக இருக்கும். இங்கு (பெரியார் மாவட்டத்தில் உள்ள) பெருந்துறையில் சிறந்த மருத்துவமனை உள்ளது. எனவே இங்கு வந்து சிகிச்சை பெறலாம்'' என்று தேவாவுக்கு வேண்டுகோள் விடுத்தார் ஸ்ரீபிரகாசா.

தேவா ஒப்புக் கொண்டு சென்னைக்கு வந்தார். அவரைப் பெருந்துறை மருத்துவமனையில் சேர்த்தார் ஆளுநர். தேவாவின் உடல்நிலை தேறி வந்தது. ''கடந்த ஐந்து ஆண்டுகளாக எனது உடல்நிலை இவ்வளவு நன்றாக இருந்ததில்லை; இப்போது நன்றாக உள்ளது'' என்று சொல்லி மகிழ்வெய்தினார் தேவா.

பிப்ரவரி 6-ஆம் நாளன்று அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற ஸ்ரீபிரகாசா, அவர் நலம் பெற்று வருவது கண்டு மகிழ்ந்தார். அவரைத் தனது காரில் வைத்துச் சிறிது தூரம் சுற்றுப் பயணம் செய்தார். அந்தப் பயணம் தேவாவின் உடல் நலத்தைப் பாதித்துவிட்டது. பிப்ரவரி 8-ஆம் நாளன்று படுத்த படுக்கையாகி விட்டார்.

அச்சமயம் - தேவாவின் அறிவுரைக்காக பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் பிப்ரவரி 11,12,13 ஆகிய நாட்களில் பெருந்துறையில் கூட்டப்பட்டது. மருத்துவர்கள் தடுத்தும்கூட அந்தக் கூட்டத்தில் 45 நிமிடம் மொழிவாரி மாநிலப் பிரிவினை குறித்துத் தேவா உரையாற்றினார். அந்தச் செயலும் அவரது உடல்நலக் குறைவை அதிகரித்து விட்டது.

தேவாவின் உடல்நிலை மோச முற்றதை அறிந்த ஸ்ரீ பிரகாசா, உடனே பெருந்துறைக்கு விரைந்தார். தேவாவை லக்னோவுக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டார். பிப்ரவரி 19-ஆம் நாளன்று தேவாவையும் அவரது துணைவியாரையும் தமது காரில் அமர்த்திக் கொண்டு, கோவை விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார் ஸ்ரீ பிரகாசா

பெருந்துறையிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள ஈரோடு செல்லும் போதே நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. அங்குள்ள பிராஜக்ட் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு, படுக்க வைக்கப்பட்டார். சில விநாடிகளில் தேவாவின் இன்னுயிர் பிரிந்துவிட்டது.

தேவாவின் மரணச் சேதி நாட்டில் உள்ள எல்லாத் தரப்பினரையும் உலுக்கிவிட்டது.

20-ஆம் தேதி அவரது உடல் - லக்னோவை நோக்கி விமானத்தில் பறந்தது. உயிருடன் அவரை அனுப்பி வைக்க நினைத்த ஸ்ரீபிரகாசாவின் எண்ணம் நிறைவேறவில்லை; உயிரற்ற உடலாகத்தான் அனுப்பிவைக்க முடிந்தது.

அன்று மாலையே தேவாவின் உடல், மோதிலால் மைதானத்தில் எரியூட்டப்பட்டது. மக்கள் வடித்த கண்ணீருக்கு அளவே இல்லை. தேவா எரியூட்டப்பட்ட இடத்தில் அவரது நண்பர் சி.பி. குப்தா அவர்களின் முயற்சியால் ஒரு நூலகம் உருவாக்கப்பட்டது.

அவர் உயிர்நீத்த ஈரோடு பிராஜக்ட் அலுவலகத்தில் தேவாவின் திருவுருவப்படமும் நினைவுக் கல்லும் அமைக்கப்பட்டன. அன்றைய முதல்வர் காமராஜர் தலைமையில், ஆளுநர் ஸ்ரீபிரகாசா நினைவுக் கல்லையும், திருவுருவப் படத்தையும் திறந்துவைத்தார்.

ஆண்டுக்கு ஒரு முறை பிப்ரவரி 19-ஆம் நாள் அன்று தேசபக்தர்களும்-சோஷலிஸ்டுகளும் அங்கே சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தேவா மறைவெய்திய அந்த மாளிகைக்கு 'ஆச்சார்ய நரேந்திர தேவ் நினைவு விடுதி' என்ற பெயரை 27.3.'89 அன்று தமிழக அரசு சூட்டி, அவருக்குப் பெருமை சேர்த்துள்ளது.

இந்திய நாட்டின் விடுதலைப் போரில் பெரும் பங்கு வகித்த ஆச்சார்ய நரேந்திர தேவா - இந்திய மக்கள் அனைவரும் ஏற்றிப்போற்றும் சிறப்புக்கு உரியவராக விளங்கினார். வரலாற்றில் அவருக்குத் தனி இடம் உண்டு. ●

சுயராஜ்ய கட்சி தொடர்பாக உரையாற்றுவதற்கு திலகர் 1907-ல் அலகாபாத்திற்குச் சென்றபோது அவரை வரவேற்க மாணவ சமுதாயம் ஆயிரக்கணக்கில் திரண்டெழுந்தது. திலகரை ரயில் நிலையத்திலிருந்து நகருக்குள் அழைத்து வருவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கோச் வண்டியின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு விட்டு, சில மாணவர்கள் தாங்களே வண்டியை இழுத்துச் செல்ல ஆர்வம் காட்டினர். திலகர், அவர்களைத் தடுத்து விட்டார். வண்டியை இழுக்க வந்த தீவிரமான மாணவர்களில் முதன்மையாக நின்றவர் அப்போது அலகாபாத்தில் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த 17 வயதுடைய நரேந்திர தேவா என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. ஆர். நடராஜன் (ஓவியர்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திரு. இராமகிருஷ்ணன், திருமதி தாயம்மாள் ஆகியோரின் மகனாக 1924 ஏப்ரல் 13 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. ஆர். நடராஜன் அவர்கள்.

தனது பத்தாவது வயதில் தந்தையாரிடம் 10 ஆண்டுக் காலம் ஓவியக் கலையைக் கற்றுக் கொண்ட இவர், பின்னர் ஓவிய மன்னர் திரு. கே. மாதவன் அவர்களிடம் பயிற்சி பெற்றார்.

கடந்த 45 ஆண்டுகளாக இவர் ஓவியம் தீட்டி வருகிறார். இவரது அரிய ஓவியங்கள் இந்தியா முழுதும் பரவியுள்ளதுடன் வெளிநாடுகளுக்கும் சென்று இவருக்குப் புகழ் ஈட்டிவருகின்றன. பல வேறு பரிசுகள் பெற்றிருக்கிறார்.

திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் (வயலின்)

முந்தைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சித்தூரில் திரு வேதாசல ஐயர், திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1921 ஆகஸ்ட் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு சித்தூர் கோபால கிருஷ்ணன் அவர்கள்.

தமது 13-வது வயதில், (1934) தந்தையாரிடமே வயலின் கலையைப் பயிலத் தொடங்கினார். அதற்கு முன்னரே, வாய்ப்பாட்டு, ஹரிகதை ஆகியவற்றில் பயிற்சி உண்டு.

இவரது கலைப்பணி 53 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருவையாற்றில் உருவான தென்பிராந்திய கலாச்சார மையத்தின் அமைப்பாளராக 1987 நவம்பர் முதல் பணியாற்றி வருகிறார்.



திருமதி பொன்னுத்தாய் (நாதசுரம்)

திரு குருவாயூர் துரை (மிருதங்கம்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த குருவாயூரில், திரு ஜி.எஸ். கிருஷ்ண ஐயர், திருமதி என்.வி. மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1935 ஜூலை 2-ஆம் நாளன்று பிறந்தவர் திரு குருவாயூர் துரை அவர்கள்.

தமது எட்டாவது வயதில் (1943), பாலக்காடு சுப்பய்யர் அவர்களிடம் மிருதங்க இசை பயிலத்தொடங்கிய இவர், பின்னர் பழனி சுப்பிரமணியபிள்ளை அவர்களிடம் பயின்றார். நாற்பதாண்டுகளுக்கு மேலாகக் கலைப்பணி ஆற்றிவருகிறார். தமிழகத்தில் மட்டுமின்றி, அமெரிக்கா, மலேசியா, ரஷ்யா, ஜெர்மனி, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், லெபனான், ஹங்கேரி, போலந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், துபாய் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று கச்சேரிகளில் கலந்து கொண்டிருக்கிறார்.



திரு. தனபாண்டியன் (இசை ஆராய்ச்சியாளர்)

மதுரை எம்.எஸ். பொன்னுத்தாய் (நாதசுரம்)

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த பழனி நகருக்கு அருகில் உள்ள புது ஆயக்குடியில் திரு ஸ்ரீபதி, திருமதி சுப்புத்தாய் ஆகியோரின் புதல்வியாக 1929 ஜூலை 5-ஆம் நாளில் பிறந்தவர் எம்.எஸ்.பொன்னுத்தாய் அவர்கள்.

தமது பத்தாவது வயதில் (1939) மதுரை நாதஸ்வர வித்துவான் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களின் குமாரர் நடேச பிள்ளையிடம் நாதஸ்வர இசைப் பயிற்சியில் சேர்ந்தார். நான்காண்டுகள் பயின்றார். பின்னர் மன்னார்குடி குருசாமி பிள்ளை, கோவில்பட்டி ராமையா பிள்ளை ஆகியோரிடம் பயின்றார்.

புகழ்பெற்ற நாதஸ்வர மேதை டி.என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களுடன் துணை நாதஸ்வரக் கலைஞராகவும் சில இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற பெருமை இவருக்கு உண்டு. திருச்சி வானொலி நிலையத்தில் 30 ஆண்டுக் காலம் தனி இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். கொழும்பு வானொலியிலும் இவரது நாதஸ்வரநிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. பம்பாய், செகந்திராபாத் போன்ற வெளி மாநிலங்களிலும், தமிழகத்தின் பட்டி தொட்டிகள் - நகரங்கள் ஆகியவற்றிலும் இவரது நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடந்துள்ளது.

திரு. வைரமுத்து (திரைப்படப் பாடல்)

திரு. லியோ பிரபு (நடனம்)



திரைப்பட உதவி இயக்குநர் பணி கிடைத்தது. அங்கு 6 ஆண்டுக்காலம் 15 படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தார். இவர், முதன் முதலாக இயக்குநராகப் பொறுப்பேற்ற படம் 'மாங்கல்யம்' ஆகும். 1948-ஆம் ஆண்டிலிருந்து 1978 இறுதிவரை, திரைப்படத்துறையில் பணியாற்றிய இவர், 15 படங்களுக்கு மேல் இயக்கியுள்ளார்.

திரு மலேசியா வாசுதேவன் (பின்னணிப் பாடகர்)

மலேசிய நாட்டில் போர்ட்டிக்ஷன் என்னும் ஊரில் திரு கே.சாத்து, திருமதி அம்மாளு அம்மையார் ஆகியோருக்கு மகனாக 1944 ஜூன் 15-ஆம் நாளன்று பிறந்தவர் திரு மலேசியா வாசுதேவன் அவர்கள்.

இவர், தமது 8-வது வயதிலேயே, (1952) தந்தையாரிடம் நாடகக் கலையைக் கற்றார். 5 ஆண்டுக்காலம் பயின்ற பின், தமது மூத்த சகோதரரிடம் இசைக் கலையைக் கற்றார். தொழில் நாடகக் கலைஞராக 5 ஆண்டுகளுக்கு மேல் இருந்திருக்கிறார். கடந்த 38 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றிவரும் இவர், தமிழக அரசு வழங்கும் சிறந்த திரை இசைப் பாடகர் விருதினைப் பெற்று உள்ளார்.

திருமதி எம்.எஸ். ராஜேஸ்வரி (பின்னணிப் பாடகி)

மதுரை நகரில், திரு குப்புசாமி, திருமதி பி.வி. ராஜசுந்தரி தம்பதிக்கு மகளாக 1935 பிப்ரவரி 5-ஆம் நாளன்று பிறந்தார் திருமதி எம்.எஸ். ராஜேஸ்வரி அவர்கள்.

இவர் 4வது வயதிலேயே தம் தாயாரிடம் இசைப் பயிற்சி பெற்றார். இவரது தாயார் நாடகங்களில் பங்கு கொண்டவர் என்பதும், திரைப்படக் கலை தொடங்கிய காலத்தில் விப்ர நாராயணா, அரிச்சந்திரா போன்ற படங்களில் நடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1942 -ல் எச்.எம்.வி. நிறுவனத்தாரின் முழு நீள இசைத்தட்டில் பாடல்கள் பாடியிருக்கிறார். இவர், முதன் முதலில் பின்னணி பாடிய திரைப்படம் "நாம் இருவர்" ஆகும். இவர் இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய வேற்றுமொழிப் படங்களிலும் பின்னணி பாடியிருக்கிறார்.

திரு டி.கே. ராமமூர்த்தி (திரைப்பட இசை)

திருச்சியில் திரு கிருஷ்ணசாமி, திருமதி நாகலக்குமி ஆகியோரின் மகனாக 1922 மே 18-ஆம் நாளில் பிறந்தவர் திரு டி.கே. ராமமூர்த்தி அவர்கள். தமது 12 வயதிலேயே (1934) தமது தந்தையாரிடம் கர்நாடக இசையை நான்காண்டுக் காலம் கற்றுக் கொண்டார். இவரது தந்தையார் புகழ்பெற்ற வயலின் இசைக் கலைஞர் ஆவார்.

1939-ஆம் ஆண்டின் இறுதியில் எச்.எம்.வி இசைத் தட்டு நிறுவனத்திலும் 1941-ஆம் ஆண்டில் கொலம்பியா நிறுவனத்திலும் (சரஸ்வதி ஸ்டோர்ஸ்) வயலின் இசைக் கலைஞராகப் பணியாற்றியிருக்கிறார். புகழ்பெற்ற திரைப்பட இசையமைப்பாளர் திரு சி.ஆர். சுப்புராமன் அவர்களிடம உதவியாளராகச் சேர்ந்து, பல படங்களில் வயலின் இசைத்திருக்கிறார்.

. விசுவநாதனுடன் சேர்ந்து இவர் இசை அமைத்த படங்களில் பல. வெளளி விழாக்களைக் கொண்டாடியுள்ளன;

1965-க்குப் பின்னர், இவர் தனியாக இசை அமைக்கும் பணியை மேற்கொண்டார். இசை அமைத்த படங்களில் குறிப்பிடத்தக்கது 'மறக்க முடியுமா' ஆகும்.

திரு. கே. சொர்ணம் (திரைப்பட உரையாடல்)

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூரில், திரு. டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி திருமதி மீனாட்சி அம்மையார் ஆகியோரின் மகனாக 1935 செப்டம்பர் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. கே. சொர்ணம் அவர்கள்.

முரசொலி உதவி ஆசிரியராகப் பணி புரிந்த இவர் திரைப்படத் துறையில் கதை வசன ஆசிரியராகவும், பின்னர் பட இயக்குநராகவும் பணியாற்றியிருக்கிறார்.

31 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றிவரும் இவர், சிறந்த திரைப்பட வசன ஆசிரியர் என்பதற்குரிய தமிழக அரசின் விருதை 1971-ஆம் ஆண்டில் பெற்றுள்ளார். தற்போது தமிழ்நாடு அரசின் திரைப்படக் கல்லூரித் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.





திருமதி பி.எஸ். சீதா (திரைப்பட நடிகை)

சென்னை நகரில் திரு பி.எஸ். மோகன் பாபு, திருமதி சந்திரா ஆகியோரின் மகளாக 1970-ல் பிறந்தவர் திருமதி பி.எஸ். சீதா அவர்கள்.

சிறுவயதிலேயே கலை ஆர்வம் கொண்ட இவர், திரையுலகில் சேர்ந்து, நடிப்புத்துறையில் ஒளிவீசித் திகழ்கிறார். தமிழ்த் திரைப்படங்களிலும், மலையாளத் திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார்.

திரு மு. மஸ்தான் (திரைப்பட ஒளிப்பதிவாளர்)

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு பா.கா. முஹம்மது இஸ்மாயில், திருமதி மீரா நாச்சியார் ஆகியோரின் புதல்வராக 1915 டிசம்பர் திங்களில் பிறந்தவர் திரு மு. மஸ்தான் அவர்கள். சிறுவயதிலேயே திரைப்படத் துறையில் ஒளிப்பதிவுப் பிரிவில் பணியாற்ற விரும்பிய இவர், தமது 23வது வயதில் (1938) நியூடோன் ஸ்டுடியோவில் தலைமை ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய ஜித்தன் பானர்ஜி அவர்களிடம் உதவியாளராகச் சேர்ந்தார் 1956 ல் தனிப்பட்ட முறையில் பணிபுரியத் தொடங்கினார். சிறிது காலம் இலங்கைக்குச் சென்று சிங்களப் படங்களில் ஒளிப்பதிவு, இயக்கம் ஆகியவற்றை மேற்கொண்ட இவர், திரைப்படத் துறையில் 50 ஆண்டு அனுபவம் பெற்றவர் ஆவார்.

திரு. எல். பழனிசாமி (பரத நாட்டிய ஆசிரியர்)

கோவை நகரில் திரு. என். லட்சுமண முதலியார், திருமதி அங்க முத்தம்மாள் ஆகியோரின் மகனாக 1924 டிசம்பர் 29-ஆம் நாளன்று பிறந்தவர் திரு. எல். பழனிசாமி.

தனது 9வது வயதில் (1937) தனது பெரிய தந்தையார் திரு. பந்த நல்லூர் வெங்கடாசல நட்டுவனாரிடம் பரதக் கலையைக் கற்றார். பின்னர் வழுவூர் ராமய்யா பிள்ளை, பதும் கௌரி அம்மாள் ஆகியோரிடமும் மற்றும் பலரிடமும் கற்றார்.

50 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். ஆயிரத்துக்கு மேற்பட்ட கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

திரு வி.பி. தனஞ்சயன் (பரதநாட்டியக் கலைஞர்)

கேரள மாநிலத்தில், கன்னனூர் மாவட்டத்தில் உள்ள பையனூரில், திரு ஏ.ராம பொதுவால், திருமதி மாதவி அம்மா ஆகியோரின் மகனாக 1939 ஏப்ரல் 17 ஆம் நாளன்று பிறந்தவர் திரு வி.பி.தனஞ்சயன் அவர்கள்.

நாட்டியக் கலையில் பேரார்வம் கொண்டு, தமது 13 ஆம் வயதில் (1953) சென்னை கலாசேத்ரா கல்வி நிலையத்தில் சேர்ந்து பயின்றார்.

கடந்த 37 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், பரதகலாஞ்சலி என்னும் நாட்டியக் கல்வி மையத்தை அமைத்துப் பயிற்சி அளித்து வருகிறார்.

திரு வி.பி. ராமதாஸ் (பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்)

தஞ்சை மாவடடதைச் சேர்ந்த வழுவூரில் திரு பி.பக்கிரிசாமி பிள்ளை — திருமதி ராஜம்மாள் ஆகியோரின் மகனாக 1936 ஜூன் 15 ஆம் நாளன்று பிறந்தவர் திரு வி.பி. ராமதாஸ் அவர்கள்.

தமது பதின்மூன்றாவது வயதில் (1949) மிருதங்க இசையைக் கற்கத் தொடங்கி, 7 ஆண்டுகள் பயின்றார்.

தமிழக அரசின் இசைக் கல்லூரியில் மிருதங்க விரிவுரையாளராக 7 ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வரும் இவர், கடந்த 34 ஆண்டுகளாகக் கலைப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

திரு ஐ.எஸ். முருகேசன் (பல இசை)

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த இடிகரையில் திரு வி. சுப்பிரமணிய முதலியார், திருமதி எஸ். பொன்னம்மாள் ஆகியோரின் மகனாக 1930 ஆகஸ்ட் 4-ஆம் நாளன்று பிறந்தார் திரு ஐ.எஸ். முருகேசன் அவர்கள்.

தனது பத்தாவது வயதில், (1940) தவில் வித்வானாக தமது தந்தையாரிடம் தவில் வாசிக்கக் கற்றுக் கொண்ட இவர், நாளடைவில் பல்வேறு இசைக் கருவிகளை இயக்குவதற்குத் திறமை பெற்றார்.

கடந்த 50 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், திரைப்பட இசைத் துறையிலும் நீண்ட காலம் பணிபுரிந்திருக்கிறார்.



திரு து.ஆ. தனபாண்டியன் (இசை ஆராய்ச்சியாளர்)

தஞ்சை நகரத்தில் திரு பெ. துரைப் பாண்டியன், திருமதி மரகதவல்லி தம்பதிக்கு 1921 அக்டோபர் 24-ஆம் நாளன்று மகனாகப் பிறந்தவர் திரு து.ஆ. தனபாண்டியன் அவர்கள்.

எட்டாவது வயது முதல் 20-வது வயது வரை தாயார் மரகதவல்லி அவர்களிடம் வாய்ப்பாட்டு இசைப்பயிற்சி பெற்றார். திரு எம்.என். நடராஜ பிள்ளையிடம் 1944-ல் புல்லாங்குழல் பயிற்சி பெற்றார்.

கலைத்துறையில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருகிறார் இவர், 1982 ஜனவரி முதல், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசைப் பேராசிரியராகப் பணி ஆற்றிவருகிறார்.

திரு வைரமுத்து (திரைப்படப் பாடல்)

மதுரை தைச் சேர்ந்த வடுகபட்டியில், திரு ராமசாமித் தேவர், திருமதி அங்கம்மாள் ஆகியோரின் மகனாக 1954 ஜனவரி 15-ஆம் நாளன்று பிறந்தவர் திரு வைரமுத்து அவர்கள். பள்ளியில் பயில்கின்ற காலத்திலேயே கவிதை எழுதுவதில் இவருக்கு மிகவும் ஆர்வம் ஏற்பட்டது. பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் ஆகிய கவிஞர்களிடம் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. பேரறிஞர் அண்ணா - கலைஞர் ஆகியோரின் எழுத்துக்கள்

திரு. ராதா ரவி (திரைப்பட நடிகர்)



திரு. கள்ளபார்ட் நடராஜன் (நாடகம்)

இவரைக் கவர்ந்துள்ளன. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்றவர் இவர்.

திரைப்படத் துறையில் பாடல் ஆசிரியராகப் பத்தாண்டுக் காலத்திற்கு மேல் ஒளி வீசித்திகழும் இவர், சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதினை 1984 ஆம் ஆண்டிலும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை 1986 ஆம் ஆண்டிலும் பெற்றுள்ளார்.

திரு. லியோ பிரபு (நாடகம்)

கோயம்புத்தூரில் திரு முத்து, திருமதி ஆரோக்கிய மேரி ஆகியோரின் மகனாக 1941 அக்டோபர் 10-ஆம் நாளன்று பிறந்தவர் திரு லியோ பிரபு அவர்கள்.

பழம் பெரும் நடிகர் திரு எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் நடத்திய பயிற்சி வகுப்பில் 4 மாதம் பயிற்சி பெற்ற இவர், பின்னர் தேவி நாடக சபாவில் ஓராண்டுக் காலம் பணியாற்றினார். பின்னர் மீண்டும் சேவா ஸ்டேஜ் குழுவின் நடிகரானார். 33 ஆண்டுகளாகக் கலைப்பணி புரிந்து வரும் இவர், லிட்டில் ஸ்டேஜ், சாந்தி நிகேதன், கோல்டன் ஸ்டேஜ், நாடகப் பிரியா ஆகிய நிறுவனங்களின் நாடகங்களில் நடித்திருக்கிறார். நடிப்பதுடன், எழுத்து, இயக்கம், தயாரிப்பு ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டு பணியாற்றி வருகிறார்.

திரு. பிரபு (திரைப்பட நடிகர்)

திரு. செந்தாமரை (திரைப்பட நடிகர்)

கள்ளபார்ட் திரு டி.ஆர். நடராஜன் (நாடகம்)

தஞ்சையில், திரு கள்ளபார ராமலிங்கம், திருமதி பரிபூரணத்தம்மா ஆகியோரின் மகனாக 1925 நவம்ப 11-ஆம் நாளன்று பிறந்தவர் திரு டி.ஆ நடராஜன் அவர்கள்.

தமது பத்தாவது (1935) வயதிலே நாடக மேடை ஏறியுள்ளார் இவர். பி... பாட்டு அப்பிராவ் அவர்களிடம் நடிப்புப் பயிற்சி பெற்று பின்னர் நவாப் திரு ராஜ மாணிக்கம் பிள்ளை அவர்களது நாடக நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் குருகுல வாசம் செய்திருக்கிறார். நாடகங்களில் கதாநாயகன் வேடம், பெண் வேடம், வில்லன் வேடம் எனப் பல்வேறு வித மான பாத்திரங்களைத் தாங்கி நடித்தவர் இவர்.

1935-ஆம் ஆண்டிலிருந்து கலைப்பணி புரிந்து வரும் இவர், திரைப்படத்துறையில் அறிமுகமாகி, பல படங்களில் நடித்துள்ளார்.

திரு செந்தாமரை (திரைப்பட நடிகர்)

செங்கை அண்ணா மாவட்டத்தின் தலைநகரான காஞ்சிபுரத்தில் திரு திருவேங்கடம், திருமதி வேதம்மாள் ஆகியோரின் மகனாக 1935 ஏப்ரல் 13-ஆம் நாளில் பிறந்தவர் திரு செந்தாமரை அவர்கள்.

காஞ்சிபுரத்தில் பிறந்ததால் இவர் சிறு

திரு. எஸ்.எஸ். சந்திரன் (நகைச்சுவை நடிகர்)

வயது முதலே அறிஞர் அண்ணா அவர்களுடன் பழக வாய்ப்புப் பெற்றிருந்தார். அதனால் அண்ணா எழுதி நடித்த சந்திர மோகன், சந்திரோதயம் நாடகங்களில் இவரும் நடித்தார். நடிக்கத் தொடங்கிய ஆண்டு 1956. பேரறிஞர் அண்ணாவின் நாடகக்குழுவில் பணியாற்றிய இவர், பின்னர் எம்.ஜி.ஆர் நாடகக்குழு, சிவாஜிகணேசன் நாடகக்குழு, உதய சூரியன் நாடகக்குழு ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

34 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றி வரும் இவர், திரைப்படத்தில் சிறந்த வில்லன் நடிகராக நடித்ததற்காகத் திரைப் பட ரசிகர் சங்கத்தால் 3 முறை தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்.

திரு. ராதா ரவி (திரைப்பட நடிகர்)

நடிகவேள் எம்.ஆர்.ராதா, திருமதி ஆர். தனலட்சுமி ஆகியோரின் மகனாக திருச்சிராப்பள்ளியில் 1953 ஜூலை 29-ஆம் நாளில் பிறந்தார் திரு ராதா ரவி அவர்கள்.

தமிழக நாடகத் துறையில் தனிப் பெரும் இடத்தைப் பெற்ற தமது தந்தையிடமே இவர் நடிப்புக் கலையைக் கற்றுக் கொண்டார். மாணவப் பருவத்திலேயே பள்ளியில் நடைபெற்ற 'ஜூலியஸ் சீஸர்' என்னும் நாடகத்தில் பங்கேற்றுப் புகழ் ஈட்டினார். 1969 முதல் நாடகங்களில் நடித்து வரும் இவர், 1974-ஆம் ஆண்டில் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

வி.கே.ஆர். நாடகக் குழு, டி.கே.எஸ்

திரு. சோமு (திரைப்பட இயக்குநர்)

சந்திரன் நாடகக் குழு, எம்.ஆர்.ஆர். வாசு நாடகக்குழு ஆகியவற்றில் நடித்துப் பக்குவப்பட்ட இவர், நடிகவேள் தியேட்டர்ஸ் என்ற பெயரில் சொந்தத்தில் ஒரு நாடகக் குழுவை அமைத்துள்ளார். கலைஞரின், 'தூக்கு மேடை' மற்றும் 'ரத்தக் கண்ணீர்' ஆகிய நாடகங்களை அவ்வப்போது நடத்தி வருகிறார்.

திரு. பிரபு (திரைப்பட நடிகர்)

சென்னை நகரில் திரு. சிவாஜி கணேசன் திருமதி கமலா ஆகியோரின் மகனாக 1956 டிசம்பர் 31 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. பிரபு அவர்கள்.

1982-இல் திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கிய இவர் இதுவரை 80 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். இவர் நடித்து பல படங்கள் 100 நாட்களைத் தாண்டி ஓடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அமைப்புகள் சிறந்த நடிகர் என்ற விருதை இவருக்கு அளித்துள்ளன. அறுவடைநாள் என்ற படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகர் என்று இவர் 1987-இல் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

திரு எஸ்.எஸ். சந்திரன் (நகைச்சுவை நடிகர்)

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கையில் திரு சேது ராமன், திருமதி சீதாலெட்சுமி தம்பதியின் மகனாக 1941 மே 21-ஆம் நாளில்



திரு. மலேசியா வாசுதேவன் (பின்னணிப் பாடகர்)

பிறந்தவர் திரு எஸ்.எஸ். சந்திரன் அவர்கள்.

சிவகங்கையில் ராஜா உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதே தமது 14வது வயதில், இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். திரு ராஜேந்திரன், திரு நாகராஜ ஐயர், திரு லெனின் ஆகியோரின் நாடகக் குழுக்களில் பணியாற்றி, சிறுவயதிலேயே நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று நடித்தார் இவர். ஏறக்குறைய 33 ஆண்டுகளாகக் கலைத்துறையில் அங்கம் பெற்றிருக்கும் இவர், சில நாடகங்களை இயக்கியும் இருக்கிறார். திரைப்படங்களில் நகைச்சுவைப் பாத்திரத்தை ஏற்று நடித்து வரும் இவர்,உதவி இயக்குநராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளார்.

முதல்வர் கலைஞர் அவர்களிடம் 'நகைச்சுவைச் செல்வர்' என்ற பட்டம் பெற்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

திரு கே. சோமு (திரைப்பட இயக்குநர்)

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த பழனியில் திரு கா. கந்தசாமி பிள்ளை, திருமதி சந்திர பூரணம் அம்மாள் ஆகியோரின் மகனாக 1917 ஜூன் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு கே.சோமு அவர்கள்.

தொடக்கத்தில் நடிப்புத்துறையில் ஈடுபட விரும்பிய இவருக்கு அந்தத் துறையில் வாய்ப்புகள் அதிகம் கிட்டவில்லை. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில்

திருமதி ராஜேஸ்வரி (பின்னணிப் பாடகி)